# ஐம்பவைகர்மசேஷபங்கள்.

JL
Y592m211,N14
N14·3.
162027

உ

ஸ்ரீமத் விராட் விஸ்வப் பிரஹ்மணே நம:

# விஶ்வகர்ம குலோபகாரி.

மலர்-3. { இராக்ஷஸஸு தைமீ 1916ஸு ஜனவரிமீ } இதழ்-1

## மெய்ஞ்ஞான தீபம்.

மெய்ப்பொ...

...லலை ...என்றார்.

### களவினிழிவு.

"பலநாள் திருடன் ஒருநாளைக் ககப்படுவன்" என்பது ஓர் உலகவசனம். பிறர் பொருளை யபகரித்து வாழ்பவன் எப்பொழுதாவது அகப்பட்டுத் தண்டனை யடைவது நிச்சயம். இம்மையில் தண்டனையடைதல் ஏதோ சிலகாரணங்களால் தவறிப்போனாலும், மறுமையில் தண்டனையடைதல் தவறாது. பரமேஸ்வரன் சர்வவியாபகனும், முற்றறிவனும் ஆதலால், அவன் இல்லாத விடமும், அறியாத விஷயமும் இல்லை. ஆகவே சர்வ சக்தியுமுடைய பரமேசுவரன் அவனை தண்டியாது விடான்.

...ப்பருள் ...

பொருளே மோட்சம்; அப்பொருளைத தேடுமுயற்சியே சரியை, கிரியை, யோகம், ஞானம்; உண்டுகளித் துறங்குவதே பரமானந்தப் பிராப்தி யென்றிருப்பவர் எண்ணிலர். இவர்கள் எவ்வாறு நற்கதியடைதல் கூடும்? பொருளைத் தேடும்போதும் துக்கமாம்; அதைக் காக்கும்போதுந் துக்கமாம்; அது கள்வர் முதலியவரா லபகரிக்கப்பட்டவிடத்தும் துக்கமாம்; படாதுபாடுபட்டு, பல பொய்யுரை மொழிந்து தேடிய பொருளை, தேடிவைத்தவர் இறந்தபிறகு அவர்கள் மக்கள் செவ்வையாகப் பாதுகாப்பரோ என்கிற பெருத்தசிந்தனை. எவ்வகையாகநோக்கினும் பொருள் துக்க சாதன மாகவே யிருத்தலின், அதனை யுலோபகுணத்தால் நற்கருமங்களி லுபயோகப் படுத்தா திருத்தல் மடமையினும் மடமையாகும்.

162027



## சென்னை சித்திரவேலை, கைத்தொழிற் காட்சியும், அதன் படிப்பினையும்.

சென்ற டிசம்பர்மீ வெளிவந்த நம் குலோபகாரியில் சென்னை பீப்பிள்ஸ் பார்க்கில் இப்பொழுது நடைபெற்று வரும் காட்சியைப்பற்றியும் அதன் முக்கியபிரிவுகளைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தோம் இக்காட்சி...

உயர்ந்த மேடைமீது நிறுத்தப்பட்டிருக்கும் ஆகிருதி வாய்ந்த ஓர் பிரதிமையும் அதன் ஒடிமான விசேஷமும் குறிப்பிடற்பாலன. அதன் எதிரே கட்டப்பட்டிருக்கும் பிரதான முகத்துவாரமும், கும்மட... ...ளும் பக்கலில் அமைந்துள்ள வழி... ...ளும் அவ்வ...

...றது. ...ட்சி ஸ்தலத்திற்குச் செல்... அவ்வழியின் இருபாரிசத்திலும் மனோரம்மியமான பாக்கு மரங்களும் அழகிய பூஞ்செடிகளும் நாட்டப்பட்டிருக்கின்றன. அவைகளின் மத்தியில் ஓர் வட்டமான மண்டபமும், சந்திர மண்டலம் போன்ற முகவிலாசமுள்ள ஓர் இந்தியப் பெண்ணின் பிரதிமையும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அம்மண்டபத்திற்கு இடபாரிசத்தில் ஓர் தடாகத்தின் குறுக்கே அமைக்கப்பட்டிருக்கும் பாலத்தின் வழியே செல்லும்போது எதிர்ப்படும் கட்டிடத்தின் வெளித் தோற்றமும், சுற்றுப்புறங்களிலுள்ள மைதானங்களின் வனப்பும், வழிகளின் அமைப்பும், சறுக்கியோடும் சுழல் மண்டபத்தின் சூட்சியும் கண்களைக் கவர்கின்றன. பாலத்தின் இறக்கத்தில் ஓர்

...ர்வ... வாறு ஓ... ...டையே பல முகடுகளும், ரூப... ...ளும் அமைக்கப்பட்டு பல அலங்கார வி... ...த்திரச் சித்தரிப்புகளையும் பெற்றிருக்கின்றன. அத்தூண்களினிடையே பலகணிச் சாரளங்களும், அச்சாரளங்களின் அடிப்புறத்தில் அழகிய கொடிப்பனைகளும், பல பூஞ்செடிகளும் வைக்கப்பட்டிருக்கும் காட்சி மனதிற்கு மிகுந்த குதூகலத்தை விளைவிக்கின்றன. தோட்டத்தினிடையே விடப்பட்டிருக்கும் பசும்புற்றரைகளிலும் அவைகளின் மீதுள்ள சார்மான நாற்காலிகளிலும், வித விதமான வஸ்திரங்களையும் பூஷணங்களையும் தரித்து உட்கார்ந்து அளவளாவும் மாதராடவர்களின் திரளா



னகூட்டங்களின் காட்சியும் இங்குளழுதத் தரமன்று.

இம்முற்றத்தின் நான்கு மூலைகளிலும் நான்கு வெளிவாயில்களிருக்கின்றன. பிரதான முகப்பின்வழியே மீண்டும் சென்று எதிரிடும் ஜனங்களுடன் தாக்கிக்கொள்ளாமல் தனியே செல்வதற்கெனவே இவ்வாயில்களமைக்கப்பட்டிருக்கின்றன. வடபாரிசத்தின் மத்தியில் ஓர் பிரசங்கமாளிகையும், அம்மாளிகையின் சுவர்ப்புறங்களில் பிரசங்கங்களுக்கு அநுகுணமாக உபயோகப்படக்கூடிய எண்ணிறந்த சித்திரப்படங்களும் நாட்டப்பட்டிருக்கின்றன. இம்மண்டபத்தில், ஒவ்வோர்நாளும் இரண்டு பிரசங்கங்கள் தக்க நிபுணர்களால் நடைபெறுகின்றன. வடமேற்கு மூலையில் ஆங்கிலேய ஆசாரத்திற்கிணங்கிய ‘ரெஸ்டிராண்டு’ என்னும் பலகார விடுதிச்சாலையொன்றும், தென்கிழக்குமூலையில் இந்திய மாதிரிக்கிணங்கிய பட்சண சாலையொன்றும், ஜனங்களுக் குபயோகமாகும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தென்மேற்குமூலையில் ஓர் தபால், தந்திஆபீஸ் அமர்த்தப்பட்டிருக்கின்றது. வடகிழக்கு மூலையில் ஆங்கிலேய மாதிரிக் கிணங்கிய ‘லாவேட்டரி’ என்னும் சாஸ்திரீயமான தக்கூஸ்கள் ஸ்திரி, புருஷர்களுக்குத் தனித்தனியே அமைக்கப்பட்டிருக்கின்றன.

உத்தம மாதிரிக் கிராமத்திற்குச் செல்வோர் கண்காட்சி ஸ்தலத்தைக் கடந்தே செல்லவேண்டும் இக்கிராமத்தில் பல குடியிருப்பு கட்டிடங்களை ஜனங்கள் பின்பற்றி தங்கள் சௌகரியத்திற்கும், கைப்பொருளினியல் பிற்கும் தக்கவாறு கூட்டியும் குறைத்தும் கட்டிக்கொள்வதற்கு அநுகுணமாகும்படிக்கும், காற்று, ஜலதாரை முதலிய சுகாதாரலசதிகளைப்பேணிப் பின்பற்றுவதற்கெனவும் நிருமிக்கப்பட்டிருக்கின்றன. இக்கிராமத்தில் கட்டப்படிருக்கும், இந்தியவீடும், மகம்மதியவீடும், குக்கிராமவீடும், பட்டிணங்களுக் கிணங்கிய குடிசைகளும், போலீஸ்வீரர்கள் வசதிகளும், மாட்டுத்தொழுவங்களும், பால், தயிர், வெண்ணை பண்டகச்சாலைகளும், கிராமத்திற்கேற்ற கிணரும், ஜலமிறைக்கும் இயந்திரமும், ஜலதாரை நீரை வடிகட்டும் முறைகளைக் காட்டுமிடமும், கிராமத் தொழிற்காட்கிஸ்தலமும், குடிஜலக்குழாய்களும் வழிநடை சிரமபரிகாரத் திண்ணைகளும், சார்மானமேடைகளும், துறவுக்கிணின்றும் தண்ணீர் இறைக்கும் கவலைகளும், முக்கியமாக இங்கு குறிப்பிடற்பாலன. இக்கட்டிங்களினிடையே திருவாங்கூர் சமஸ்தான கண்காட்சிச் சாலையும் கொச்சின் சமஸ்தானக் கண்காட்சி ஸ்தலமும் வெகு விஸ்தாரமாக அமைக்கப்பட்டு பார்ப்போரை பிரமிக்கச்செய்கின்றன. பம்பாயிலுள்ள ஓர் கம்பெனியாரும், சென்னை வில்சன்கம்பெனியாரும், தங்கள் வசமிருக்கும் நவீன கட்டிடப் பொருள்களைப் பொது ஜனங்கள் அறிந்து கொள்ளும்படிக்கு அவைகளைக்கொண்டு கட்டிய இரு உன்னதக் கட்டிடங்கள் உயர்தரவகுப்பைச் சார்ந்தவைகளாக விருக்கின்றன. இக்கிராமத்தி னோர்புறத்தில் சென்னை ஆஸ்பத்திரிக் கப்பலை போன்ற ஓர் சிறிய கப்பலொன்று செய்யப்பட்டு, உண்மைக் கப்பலில் ஏற்பட்டுள்ள பற்பல வசதிகளையெல்லாம் பொதுஜனங்கள் அறிந்துகொள்ளும்படிக்கு விஸ்தரித்து வைக்கப்பட்டிருக்கின்றது. அதற்கெதிரிலுள்ள ஓர்சிறிய தடாகமொன்றில் ஓர் நீராழி மண்டபமும், மரமடர்ந்த சோலையும் மிக மனோகரமாக யிருக்கின்றன. இச் சோலையின்கண் இந்திய மேளமாகிய நாகசுரவாத்தியம்முழங்கப்பெற்று பல ஜனங்களுக்கு ஆனந்தத்தை விளைவிக்கின்றது. இக்கட்டிடங்களுக்குப் புறம்பாயுள்ள காலி நிலங்களில் பல உத்தியோகஸ்தர்களும், கண்காட்சி ஸ்தலத்தில் தங்கள் கடமைகளைச் செலுத்திவரும் சிப்பந்திகளும் தங்குவதற்கென பல கூடாரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

எவ் வருடத்திலும் பார்த் திராதவும், கேட்டிராதவுமான இம்மஹா உன்னதக்

கண்காட்சியையும் அதற்காகச் செலவிடப்பட்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான திரவியத்தையும், ஒவ்வொரு இலாகாதலைவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசைகளையும், இவ்வுயர்தரக் கட்டிடங்களையெல்லாம் 90-நாளில் இயற்றித்தந்த சிற்பாதிகாரியினுடையவும் அவரது சிப்பந்திகளினுடைய சாமர்த்தியங்களையும் அரும் பெரும் பிரயாசைகளையும் நமது வெளியூர் வாசகர்கள் ஒருவாறு ஊகித்தறிவதற்கென்றே இக்காட்சிகளை இங்கு சற்றுவிஸ்தரித்து எழுதினோம். இக்காட்சி 1916ஞு ஜனவரிமீ 16உ வரையிலும் நடைபெறும்.

(தொடரும்)

பத்திரிகாசிரியர்.

## குலநன்மைக்கெனவே வெளிப்போந்த பத்திரிகையை குலாபிமானிகள் பேணல் வேண்டும்.

குலாபிமான மேன்மைகளைக் கருதி நாடோறுங் கல்வித்துறைகளின் உட்சென்று கிராகியஞ் செய்துவரும் நீதிநெறிகளைச் சாங்கோபாங்கமாகத் திரட்டித் தேனினுமினிய செந்தமிழ்ச் சொற்களால், தமிழ்நாட்டின்கண் பலான தேசம் நாடு, ஊர், குக்கிராமம் முதலிய இடங்கடோறும் அழைத்த நல்லவர்கட்கும் அழையா வல்லோர்கட்கும் நல் விருந்தாய் அவரவர் இல்லினிடத்துப் புகுந்து, நம்மனோர்க்கு நல்லறிவு புகட்டிவருகின்றனன். ஓர் அன்புடை நண்பன் அவன் பெயர் யாதெனில், நமது குல விளக்கத்துக் கேற்ற நாமம்பெற்ற 'விசுவகன்ம குலோபகாரி' என்ற உத்தமனே ஆகும். அன்னோன், சென்ற நாலைந்து மாதமாக நமக்குத் தெரிசனந்தராது போனதுபற்றி விவேகிகள் விசனம் அடைந்திருக்கலாம். வாராநின்ற செய்தி என்னென்று கவனிக்குங் கடமை நமது மாபிற்குரிய வொழுக்க நியாயமல்லவா? என்னவந்தாலும், என்னபோனாலும், நமக்கென்னவென்றுரைக்குஞ்சொற்கள் நமது குலத்தவரைவிட்டென்றகலுமோ அறியேன்; அறிவுள்ள குலத்தில் ஜெனித்த விசுவப்பிரம்ம வம்சத்தவராகிய நாம் செயற்பாலதாகிய கடப்பாடுகள் எவையென நினைக்குமிடத்து, குலமேன்மைஅடைதற்குரிய மேம்பட்ட வழிகள் அனந்தமிருக்கின்றன.

அவற்றில், முக்கியமாய் நம்மக்கண்மாட்டுப்படிப்பினை உதவுதல் அன்றோ மக்கட்பேறு கொண்டபயனாகும். அல்லாக்கால் மக்கட்பதடி என்ற பெயரல்லவா நம் பிள்ளைகட்கு கொடுத்ததாகும். இங்கு இதனைகவனிக்க முன்வந்த நல்லவர்காள்! குலத்தின் மடமையை அகற்றுவான் அவதரித்த இக்குலோபகாரிகாரியை நாம் வலிந்தழைத்து ஆதரிக்காவிடின், நம்குலம் எங்ஙனம் மேலோங்குவது? அன்றியும், பிரஜாதியார் எப்படி நம்மவரை ஒன்றுமையுடையாரென்றும், பரோபகார சிந்தையுடையாரென்றும் வியந்து பேசவும், மதிப்பர். இதனைக் கருதிப் பத்திரிகையை ஆதரிக்குஞ்செயலே, நமது குலத்தவர்கள் இன்றியமையாத் தன்மையில் பெற்று அருமையோடு பாராட்டி வருவார்கள் எனில், அவை, நமது இன்மழலையோடு தவழும் மக்களை, கல்வியிற் பயிற்றுவிக்குங் கடமையிற் பேர்போனவர் எனுந் தெளிவுபடும் இந்நீதி போதனையை உட்கொள்ளுவதற்கு ஆசையுற்ற அன்பர்கட்கே, அறியாச் செல்வமாகிய சிவமாந்தன்மை வெளிப்படும்.

இந்நிலையில் அங்கையின் நெல்லியங்கனியென உண்மைக்குல தருமத்தைக் கண்டறிந்து, நற்குணம்வாய்ந்த ஸ்ரீமாந் கொ. கன்னியப்ப ஆச்சாரி அவர்கள் இங்கேவந்



திருந்தபோது, நேரிற்சென்றழைத்துள்ளதில்லின்கண் உபசரித்து, அவர்களோடு பற்பலவார்த்தையாடிவரவே, அவரது மனநன்மையில் கிடப்புற்ற கொள்கையில், உலகோபகாரங்கருதி, விச்சுவப் பிரம்ம மரபுடையார்கட்குச் சுருங்கச் சொல்லில் எந்நாளுங் கல்வி வன்மையால் நனி நாகரீகம் பெறுதல் வேண்டும் என்றே அவர் கங்கணங்கட்டி முன்வந்தபுருடோத்தமன் என்று தோற்றுகின்றது. அதன் பொருட்டு தமது முயற்சியால் வரும் ஊதியத்தையுமிழந்து முன் ஈட்டியுள்ள பொருளையும் விசுவகுலோத்தாரண அச்சியந்திரசாலைக்களித்து. அதன் கண்ணுள்ள பல தொழில்களையும் நடத்தி, பலபலக் குல மேன்மைப் புத்தகங்களை அச்சியற்றியும் வராநின்றனர். இவர் பெருந்தகைமை இருந்தவாற்றென்னை; இவர் பெருந்தன்மையின உரிமையை என்னென்று கூறுவாம். இவரது பேருழைப்பு அழியாச் சீர அமைப்பன்றோ காணியாகக்கொண்டு காட்டும்.

இங்ஙனம் அவர்களைப் புகழ்வதற்குரிய கடமை மாத்திரமா? குல தருமமாகும். அவரது பெரும் முயற்சிக்குதவி புரிதலன்றோ முறையான அறம்யென எவரும் அறிவர். பத்திராதிபர் அவர்களை குலாபிவிருத்திக்கெனவே தமது பொருளை யிழந்து வருத்த மடைவதனாலல்லவா, அவரால் வளர்த்திய விசுவகன்ம குலோபகாரி என்னுங் கண்மணியை நாலைந்துமாதமாக நாங் காணாதிருந்தனம். அந்தோபரிதாபம்! பரிதாபம்!! இவற்றை இங்கு மனங்கொண்டு சற்று கவனியுங்கள். கவனித்தல் மட்டும் போதாது அக்குலோபகாரப் பத்திரிகையை நமது சரீரத்தில் ஊறும் இரத்தமாகப்பேணி, ஒவ்வொருவரும் வாங்கிப் படியுங்கள். அவரது மனோவூக்கத்திற்கு ஆக்கமளியுங்கள்.

அறிவிற்சிறந்த ஐயன்மீர்! பத்திரிகை வாங்கிப்படிக்கின்றதில் ஏற்படும் சொற்பச் செலவு நஷ்டம் என நினையாது, பேணுமின். அப்படிச்செய்தாலல்லவா, நமதுகுலத்தை மேன்மைப்படுத்துஞ் செய்கையில் முன்வந்தவர்களாவீர்கள். அல்லது குலத்தைக் கெடுத்தவர் என்று சொல்லவந்தேனல்லேம். இது வெதக்க சமயம். நல்லகாலம் வந்ததென்று விழித்துப் பாருங்கள். விசுவகுலோபகாரிப் பத்திரிகையை வாங்கிப்படியுங்கள். பத்திரிகைகளினால் அடையும்பயன் உலகநாகரீகக்கல்வியினால் அடையும் மேன்மையினும் மேதக வுடைத்து. தவிர, பல பாஷாஞான வுணர்ச்சிகளை அறியலாமென்பதுந் தேற்றம். இனி மற்றொன்று விரித்தல் எனும் இலக்கணக்குற்றம் வரும் என அதன் விசேடத்தை இங்கு விரித்துரையாது விடுத்தனம்.

நாம் விசுவப்பிராமணர் என்ற காரணப்பெயர்க்குரிய கிளர்ச்சியை முன்னரே பெற்றுள்ளோம் என்ற குறிக்கிலக்கமாக, இப்புதுவருடம் 1916-ல் ஜனவரிமுதற்கே புதுவதாக ஓர் நல்லுணர்ச்சி யொன்று நாம் அடைந்ததாகவே, விசுவகர்மகுலோபகாரியை, வாங்கிப் படித்து கல்வியால் வரும் நியாயங்களை அறிந்துய்யுமின்.

இனி, நாஞ்செய்த தவமாய் வந்து நம்முன் அறிவைப் புகட்டும், பத்திரிகை விஷயமாய் பெரும்பாடுற்று வருந்தும், ஸ்ரீமாந், கொ. கன்னியப்ப ஆச்சாரி அவர்கள் நஷ்டமடைந்து கெட்டுவிடாது, குலாபிமானிகளாகிய விசுவப்பிரம்ம குலத்தவர்களே! உடனுடன் சந்தாத்தொகையைக் கொடுத்துதவிபுரியுங்கள். 'அன்பானசினேகனை ஆபத்திலறி' என்ற நீதிக்கிணங்கப் பேணுமின். பத்திராதிபர் அவர்கள் அச்சியந்திர சாலையில் வெளிப்படுத்திய புத்தகங்களைவாங்கிப்படியுங்கள். வித்வான்களே விஷபதானஞ் செய்யுமின். படிப்பில்லார்கட்கும் இப்பத்திரிகைகளைப் படித்து நீதிகளைப்போதனை செய்யுமின். அங்ஙனஞ் செய்வீரேல், அறிவிலார்கட்கும் படிப்பினை ஊட்டிய உறுதியாகும்.

"உள்ளத்தைச்சொன்னவன் ஊருக்குப் பொல்லாதவன்" என நியாயத்தின்படி இக

றாது, உண்மையை ஆராய்ந்தறியுமின். மனுடத்தன்மையில் ஆண்மையும், யோக்கியமும் அறிந்து, பத்திராதிபர் அவர்கள், பத்திரிகைகளை அனுப்பின், அதனைப்புறக்கணியாமல் வேண்டும் அளவில் சகாயம் புரியுமின். "வலியவந்தசீதேவியைக் காலாலுதைத்துத் தள்ளலாமா" எனும், உவமைச்சொற்கிணங்க ஆராயத்தகுவதன்றோ நல்லோர் அறிவுடைமை.

அறிவிர் சிறந்த பெரியீர்! உங்கள்மக்களிடத்து, பத்திரிகை வாயிலாக புத்திபுகட்டுதற்கு முன்வந்துள கல்வியிற்றேர்ந்த பத்திராதிபர் அவர்கள் வுபகாரத்தை என்றும் மறக்கற்பால தன்று. மறந்து விடின் அதனாலுறும் அவமானம் நங்குலத்துக் கன்றோ மிகப்பெருகும். இனி, இவைபோன்று குலத்துக்கெனவேபெருமுயற்சியோடுழைக்கும் கல்வி தலத்தால் இலகாநின்ற, மற்ற பத்திரிகையையும் பெற்று அதன்கணுள்ள நன்மைகளையும் ஆராய்ந்தறியுமின். வித்தியா விநோதனம் நிரம்பிய புதுவைக்கலைமகள் பத்திரிகையை வருத்தி அறிவின்பயனை விருத்தி பண்ணுங்கள்.

மேற்சொன்ன நியாயங்களை ஈண்டெடுத்துக் காட்டியுரைத்தது, எவரும், என்வயின் உரைத்த மொழியன்று. என்னறிவிற் கெட்டிய உண்மைகளை தெரிவிக்க வேண்டுங் கடப்பாட்டிற்புகன்றதேயன்றி வேறின்று. ஆகலால் குலாபிமானச் சிறியோர்காள்! பத்திரிகையை வருந்திப்படிக்கும் விஷயத்தில் சந்தாத்தொகையுதவுதற்குப் பணப்பையில் இடுக்கையினைப் பாம்புக் கூட்டில் இடுக்கையாக நினையாது லோபத்தீக்குணத்தை இழந்து ஈயுங்கள். இதனால்வரும் செலவு, நீங்கள் தினேதினே வெற்றிலை முதலியன போட்டுமிழும்வகையில் ஏற்படுந்தொகையினுமிகச் சொற்பத்தொகையினுஞ் சிறிதென்றே நினைத்து அதன் பயன்போல் எண்ணாது, பத்திரிகையினால்வரும் நாகரீகம், மலையினுமாணப் பெரிதென எண்ணிக்கைக் கொள்ளுமின். நமது குலமேன்மையைக் கருதும், கனம் பொருந்திய பத்திராதிபராகிய, கொ. கன்னியப்ப ஆச்சாரிஅவர்கள் சந்ததிகளோடு பல்லூழிகாலம் மிக்கவாயுளோடு, வாழவேண்டும் என, எங்கும் பரிபூரண சச்சிதானந்த மயமாயிலகும், ஸ்ரீமத் செந்திற்பெருமானை, மனம்மொழி மெய்களால் இறைஞ்சுவோமாக.

ஜி. சுவாமிநாதன் ஆச்சாரி,
கோட்டாறு.

## பூமிக்கும் சூரியன் பதத்துக்கு மிடையேயுள்ள தசவாயுக்களின் றன்மை.

கலிவிருத்தம்.

தரைக்கு மேற்புவர் லோக மதுதனி
லருக்கன் சோம னெனுமிவ ராதிய
ரிருப்பர் தத்தம் பதத்தினை யெய்தியே
பரித்த நீளம் பதினைந்திலக்கமே.

என்ற சிவதருமோத்திரப்படி பூலோகத்துக்கு மேற்பதினைந்துலக்ஷம் யோஜனை தூர வுயரத்தில் சூரியன், சந்திரன் ஆகியர் தத்தம்பதங்களிற்சஞ்சரித்திருக்கப்பெற்ற "புவர்லோகம்" உண்டு பூலோகத்துக்கு மேல் "விதன்னுவான்" முதலிய ஒன்பது வாயுக்களின் பதத்தினுமடையே சித்தர்களும்; சத்தமாதர்களும், சித்தசாரணரும் காராசஞ் சங்க முதலிய ஆயுத தேவதைகளும், ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம் புட்பதந்தம் சாருவபூமம் சுப்ரதீபம் என்னும் அஷ்டகஜங்களும் பக்ஷிராஜனாகிய கருடனும் ஆகாசகங்கையும் தரும சொரூபியாயிருக்கிற இடபதேவரும் தக்ஷப்பிரஜாபதியும் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றனர்.



1. பூமிக்குமேல் 10000ம் யோஜனை தூரம் வரைசஞ்சரித்துக் கொண்டிருக்கின்ற "விதன்னுவான்" என்னும் வாயுவானது ஔஷதிகளுக்குப் பலன்களை உண்டாக்கி கழுகுமுதலிய பறவைகள் பறப்பதற்காதாரமாக விருக்கும்.

2. அதற்குமேல் 10000ம் யோஜனை தூரம்வரை சஞ்சரித்துக்கொண் டிருக்கின்ற "பிரசேதகன்" என்னும் வாயுவானது. விருக்ஷங்களையும், பயிர்களையும், அவ்வக்காலங்களுக் கீடாக வேதனையும் பண்ணி முறிக்கும்.

3. அதற்குமேல் 10000ம் யோஜனை தூரம் வரை சஞ்சரித்துக்கொண் டிருக்கின்ற "அக்கினிப்பிரசேதகன்" என்னும் வாயுவானது முற்கூறிய மரங்களையும். பயிர்களையும், உலர்த்தி வீட்டையும் சுட்டு சமுத்திரஜலத்தினால் அவைகளை க்ஷமிப்பிக்கும்படி செய்யும்.

4. அதற்குமேல் 10000ம் யோஜனை தூரம்வரை சஞ்சரித்துக்கொண் டிருக்கின்ற "செசனி"என்னும் வாயுவானது ஒவ்வொரு மேகத்தையும் முப்பதினாயிரம் கோடி மேகங்கள் சூழ்ந்து சேவித்துக் கொண் டிருக்கும்படியான [சத்தகன்] என்னும் மேகத்துடனே பொருந்தி மீன், ஆமை, தவளை முதலிய வெல்லாம் துயருறப் பொல்லா மழையைப் பொழியும்

5. அதற்குமேல் 10000ம் யோஜனை தூரம்வரை சஞ்சரித்துக்கொண் டிருக்கின்ற "அவுக்தன்" என்னும் வாயுவானது. [குரோதம்] என்னும் மேகத்துடன் பொருந்தி, விடமாகிய மழையைப் பொழிந்து அதனாலான்மாக்களை நாசம்செய்யும்.

6. அதற்குமேல் 10000ம் யோஜனை தூரம் வரை சஞ்சரித்துக்கொண் டிருக்கின்ற "வச்சிராங்கதன்" என்னும் வாயுவானது [உபலகன்] என்னும் மேகத்தைப் பொருந்தி இரத்தம் ஆலாங்கட்டிக்கற்களையும் பொழியும்.

7. அதற்குமேல் 10000ம் யோஜனை தூரம்வரை சஞ்சரித்துக்கொண் டிருக்கின்ற "வயித்தியுதன்" என்னும் வாயுவானது [வயித்தியுதன்] என்னும் மேகத்தைப் பொருந்தி மேலெசஞ்சரித்து இடிமுதலியவற்றையுண்டாக்கும்.

8. அதற்குமேல் 10000ம் யோஜனை தூரம்வரை சஞ்சரித்துக்கொண் டிருக்கின்ற "இரைவதன்" என்னும் வாயுவானது. [புட்டிவதனன்] என்னும் மேகத்தைப் பொருந்தி ஆன்மாக்களுக்குபயோகமாகிய நல்ல மழையைப் பொழியும்.

9. அதற்கு மேல் 10000ம் யோஜனை தூரம்வரை சஞ்சரித்துக்கொண் டிருக்கின்ற "சங்வர்த்தன்" என்னும் வாயுவானது [விரோதம்] என்னும் மேகத்தைப் பொருந்தி வியாதியை யுண்டாக்குகிற ஜலத்தைப் பொழியும்.

10. அதற்குமேல் 10000ம் யோஜனை தூரம் வரை சஞ்சரித்துக்கொண் டிருக்கின்ற "விசங்கவர்த்தன்" என்னும் வாயுவானது [குரோதம்]என்னும் மேகத்தைப் பொருந்தி ஆன்மாக்களுக்கு, யுத்தத்தாலும், வியாதியாலும் சலனத்தையுண்டாக்கக்கூடிய மழையைப் பொழிவதுடன், தன் பதத்திலடைவே தாத்துரு, சக்கரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், திவச்சுவான், பூடன், சவித்திரு, துவட்டன் என்ற துவாதசாதித்தியர்களும், மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், காபாலி, சௌமியன் என்ற துவாகசாதித்தியர்களும் அனலன், அணிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன், என்ற அஷ்டவசுக்களும் நாசத்தியன், தசிரன், என்ற அஸ்வினிதேவர்களிருவரும் ஆக முப்பத்து மூவருமிருக்கப்பெற்று சூரியபதத்துக்குக் கீழாகச் சஞ்சரிக்குமென முன்னூல்களிற் சொல்லப்பட் டிருக்கின்றன.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
Ex. முனிசிபல் கௌன்சிலர்.
பழனிஸ்தலம்.

663-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## வருந்தாப்பொருள் உதவியும் குலவிர்த்தியும்.

5. இப்படியே மற்ற சிருட்டித்தொழில் செய்யக்கூடியவர்களும் தங்கள் வருவாயில் நிறைந்த பொருள் கொடாவிடினும் சொற்ப பொருளாவது தவறாது கொடுத்துஉதவிபுரிந்துவரலாம்வியாபாரம் பலவிதவர்த்தகஞ் செய்யக் கூடியவர்களும் நஞ்சை புஞ்சை தோப்புடைய வர்களும் அவைகளில் கிடைக்கக்கூடிய மாசூல்களினும், லாபத்திலும் ஒரு பாகத்தைமுன் முதல் பாராவில் சொல்லியபடி செய்து மேன்மை பெறச் செய்யலாம் உத்தியோகபதவியில் பஞ்சமாயுள்ள நம் பஞ்சப்பிரம்ம வம்சத்தாரும் அவரவர்கள் வருவாயில் இவ்வளவென்று முறையே அனுப்பியும் வரலாம் மற்று நம்குலத் தொழிலாளிகளும் தம் விருப்பின்படி கூடியவரை உதவிமறவாது செய்துவரலாம் அந்தோ! நம் குலப் பெண்டீர்களும் குலாபிவிர்த்திக்குப்பொருளீயக் குன்றாச் சக்தியுடையவர்களே அதாவது நம்குலப் பெண்டீர்களில் சிலர் அரைஞாண் தங்கக்கொடி, வெள்ளிக்கொடி, பெருங்கொடிகள் சங்கிலிகள், சரடுகள் பின்னுவதிலும், முத்து, பவளம், மாலைகள் கட்டுவதிலும் தேர்ச்சிபெற்றிருக்கிறார்கள். இன்னும் சிலர் நூல், பட்டு, கம்பளி, பாசிமுதலியவற்றல் சித்திரவேலைகள், சாலாணிகள், தலை அலங்காரங்கள் செய்விப்பதிலும் வல்லவர்களாயிருக்கிறார்கள். மேல்படிதொழில் செய்யக்கூடியவர்கள் மற்ற குலத்தவர்களைக் காட்டிலும், குறைவாயிருந்தபோதிலும் மதியூகிகளே ஆகையால் பெண்டீர்களும் ஆடவர்கள் உதவியுடன்கலந்து தாங்களும் ஊக்கங்காட்டி உதவிசெய்து வரலாம் இதுவன்றி நம்குலத்தவர்கள் பற்பல தெய்வங்களுக்கு வேண்டியதறகுக்காணிக்கையிட்டு பக்தியுடன் சிலவிட்டு வருவதுபோல நம் முக்கியகாரணப் பொருளாயுள்ள (குலாபிவிர்த்தி) தெய்வத்திற்கும் மறவாது காணிக்கையிட்டுச் செலுத்தி ஏன் பயன்பெற்று சுகஜீவிகளாய் வாழக்கூடாது?

6. நம்குலாபி விஷயங்களைப்பற்றி நம் குலத்து இருபான்மாக்களும் நம்குலத்தவர்களில் கல்வியறிவில்லாதவர்களுக்குத்தங்களாலியன்றவரை போதித்து விர்த்திசெய்தல் முக்கியமாகும் நம் குலத்தில் மிக்க அரிதாயுள கல்விகற்ற பெண்டீர்களும்தங்களைச்சார்ந்த பெண்டீர்களுக்கு இயன்றவரை நாகரீக குல வொழுக்க நடையுடைபாவனைகளை முழு முயற்சியுடன் சீர்திருத்தி பயனடையும்பொருட்டு முயலவேண்டும் முக்கியமாய் சேர்க்கைவாசனை சீர்திருத்தமே பெரிது என்று நம் குலப் பெண்டீர்களறியகடவார்கள் இத்துடன் அடக்கம்,ஒடுக்கம், வசீகரம்,சுசீகாம்,அங்கசுத்தி இவைகளைச் சிறக்கச்-சொல்லி யதன்படியொழுகும்படி செய்யவேண்டியது நம்குலகற்ற பெண்டீர் கடமையாகும். பெருபான்மையும்பெண்டீர்களே போதித்தல் சிறந்ததாகும். சிற்சிலமுக்கிய விஷயங்களுக்கு ஆடவர்களே சிறந்தவர்களென்பது முக்கியமானது. நம்குலத் திலகத் தாய்மார்கள் செட்டுடன் சிலவிட்டு நாவடக்கி நடையுடைபாவனைகளில் சீர்திருத்த மடைந்துவந்திருப்பின் இவ்வளவு காலதாமதமேன் குலவிர்த்திக்கு? அவர்களே முக்கிய காரணஸ்தர்களாவார்கள். இல்லாள் என்னும் சிறந்தபெயரைத் தாங்களணிய விருப்பமில்லாதவர்களாகிவிட்டார்கள். இனியாகிலும் நம்குலச் செல்வத் தாய்மார்கள் இல்லரசி யென்னும் ஆபாணத்தைப் பூண்டு குலவிர்த்திசெய்ய முயற்சியுடன் முன்வருவார்களாக அன்னியக்குலப் பெண்டீர்கள் நடையுடைபாவனை அடக்க வொடுக்கங்களையும் அவர்கள் செட்டின் திறமையையுமறிந்து நம்குலப் பெண்டீர்களும் தங்களுடைய குற்றங்களைச் சீர்திருத்திக்கொள்ள பின் தாங்கயாட்டார்களென்றே நினைக்கிறேன். நம்குலப் பெண்டீர்சீர்திருத்தங்களே முதல் அஸ்திபாரமாகும்.

(தொடரும்) . ஞானம்பிகைபாலன் K. A. சபாபதி.



## பரோபகாரம்.

அலையெறி கடலால் சூழப்பெற்ற இவ்வவனியின் கண்ணே பிறவியிற்சிறந்த மானிடப் பிறவியை யெய்தப்பெற்ற மாதவசிரேஷ்டர்கள் செய்யவேண்டிய கருமங்கள் பலவுள. ஆயினும் பல பிணியையும் சில வாழ்நாளையும் உடைய மனிதருக்கு நித்திரையிற் பாதிநாட்களும், அறிவு உதயமாகாத பாலப்பிராயத்தே சிலகாலமும், எண்ணவும் எண்ணியபடி இயற்றவும் சாத்தியப்படாத முதுமைப் பருவத்தே சிலகாலமும் அவமே போகின்றபடியால் திடகாத்திரத்தோடுங் கூடிய யவ்வனபருவம் வெகு கொஞ்சமாகவே இருக்கின்றது. இக்கொஞ்ச காலத்திலும் பசிப்பிணி தணித்தற்பொருட்டுப் பொருள் தேடுதலினும், காலைமாலைகளில் உண்டாகும் உபாதையைக் கழித்தலில் சிலகாலமும் கழிகின்றன. இத்தியாதி காரணங்களால் கழிந்த காலங்கள் மிகுதியாய் நின்ற யவ்வன காலத்திற்கு மிகவும் அதிகமென்றே யூகமுடையார் ஒவ்வொருவருக்கும் நன்றாய் விளங்கும் விளங்கவே, மனிதருக்குள்ள சொற்ப வாழ்நாட்களிலும் அவர்கள் கைக்குடனே பரோப காரார்த்தமாகக் கருமம் புரியக் கூடிய காலம் மேலே சொல்லியபடி சொற்பத்திலும் மிக அற்பமே. இவ்வற்ப காலத்தில் செய்யத்தக்க கருமம் பலவாயிருத்தலின் அப்பலவற்றையும்ஒருவன் ஒருங்கே புரிதல் மானுஷா சாத்தியமாம். ஆயினும் அக்கருமங்களில் இயன்றவை புரியவேண்டியது ஆவசியகமே. ஏனெனில் அங்ஙனம் பரோபகாரார்த்தமாகிய கருமங்களைச் செய்யாது விடின் அம்மனுடன் பிறவியிற் சிறந்த மானிடப் பிறவியை யெடுத்தும் பட்சி மிருகாதி பிறவிகளினும் கேவலமுடையவனுவான். பட்சி மிருகாதிகள் பரோபகாரம் செய்தல் வேண்டும் என்னும் உள்ளன்போடும் பிரீதியோடும் ஒரு கருமத்தைச் செய்யாமல் தத்தம் சுயப்பிரயோசனார்த்தமாய்க் கருமங்களைச்செய்தவரினும் அக்கன்மங்களில் அனேகம் மனுஷப் பிரயோசனமாகவும் இருக்கின்றன. எறும்பு முதல் யானை யீறுயுள்ள ஜீவராசிகளும் மனிதனுக்கு உபயோகப்படுகின்றன. சுயகாரிய துரந்தரனாகிய மனிதன் செயலோ அவ்வாறுதலின்று ஆகையால் மானிடப் பிறவியடைந்தவர்கள் பரோபகாரம் செய்தலே எய்தற்கரிய பேறும். இம்மானிடர் உபகாரம் செய்தல் வேண்டுமெனின் கிணற்றில்விழுந்த தாதாவைக் கைப்பிடித்துத் தூக்கியதுபோலிருத்தல் வேண்டுமே யல்லாமல், திருடனுக்குக் கன்னக்கோல் தானஞ் செய்தது போலவும், மீன் பிடிப்போனுக்குத் தூண்டில் தானம்செய்ததுபோலவும் இருக்கலாகாது. இதைநோக்கியன்றோ நாயனாரும் "உதவிவரைத்தன்றுதவி-யுதவி செயப்பட்டார்சாய்பின்வரைத்து" என்றார் உதவிக்கு தன்மட்டில் மதிப்பும் சிறப்பும் கிடையாது. உதவியைப்பெற்றோர் சால்பு எத்துணைத்தோ அத்துணைத்தாகவேஅதின் மதிப்பும் சிறப்பும் உள்ளன. உதவி ஒருபடித்தன்று அன்னதானம் சுவர்ன தானம் கோதானம் கொடுத்தலும் உதவி தான், பிறர் சீரடையும்படி மனமுயற்சி செய்தலும் சரீர சகாயம் செய்தலும் வாக்குச் சகாயம் செய்தலும் உதவி தான் பொருளுடையோன் பொருளையும் கல்வியுடையோன், கல்வியையும், மற்றெவ்வகைச் சிறப்புடையோரும் அவ்வவ்வகைச் சிறப்பினையுமே அஃதில்லார்க்கு உதவி புரிதல் வேண்டும் பாண்டவர்களுக்குமூத்தோனாகிய கர்னன் தன் உடலினின்றும் உயிர் நீங்கும் காலத்தில், "உனக்கென்ன வரம் வேண்டும்" என்று ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி கேட்டபோது எனக்கு மோட்சம் வேண்டும் விஜயனை ஜயித்தல் வேண்டும் அரசு வேண்டும் மற்றைய போக

பாக்கியங்கள் வேண்டும் என்னுமல் "அல்லல் வெவ்வினையால் இன்னம் உற்பவம் உண்டாயினும் ஏழேழு பிறப்பும் இரப்போர்க்கு இல்லையென்று உரையாத இதயம் நீ அளித்தருள்க" என்றான் ஆகையால் மானிடப் பிறவியின் பேறு பரோபகாரமேயாம். ஈகை யாகிய புகழே மக்கட் பிறப்பின் பயனாதலால் மக்கள் உதவி புரிந்து கீர்த்தியுடன் வாழக்கடவர் என்றும் மக்களாய்ப் பிறக்கின் புகழுக்கு ஏதுவாகிய குணத்தோடுங் கூடிப் பிறத்தல் வேண்டும். அக்குணமில்லாதார் மக்களாய்ப் பிறத்தலினும் விளங்காய்ப் பிறத்தல் நன்றென்றும், பிறர்க்கும் பயன்படாத உடலை வீணே உயிர்க்குச் சுமையாகப் பொறுத்துத் திரிதலினும், அவ்வுடலை விட்டு நீங்குதலாகிய சாவே நல்லதென்று நீதி நூலாசிரியர் கூறியுள்ளார். ஆதலின் பிறவிப்பேறு ஈகையெனப் பசுமரத்தாணி போல் நாட்டப்பட்டது.

ஆ. பொன்னுசாமி ஆச்சாரி,
டர்பன் நெட்டால்.

## பெறும்பயனுறுவார் புகழ் விரும்பா ரெனல்.

கரண வியாபாரத்தைச் செவ்வையாகவுடைய ஒவ்வொருவரும் புகழை விரும்புவதும் இகழை விரும்பாதிருப்பதும் வெளிப்படையான விஷயமாம். புகழும் இகழும் இராப்பகல் போன்று மாறி மாறிவருமியல்புடையனவா மென்பது சிறி தூன்றிப் பார்த்தால் நன்கு விளங்கும். புகழேயுடைய புருஷனும் இகழேயுடைய புருஷனும் உலகந்தோன்றிய நாள்முதல் இதுகாறும் இல்லையென் றுறுதியாகச் சொல்லலாம். அவ்வாறில்லாதிருப்பது எக்காலத்துஞ் சம்பவிக்கு மென்றுஞ் சொல்லலாம். தருமபுத்திரர் துரோணாசாரியரைக் குருவென்றுங் கருதாது கொல்லும் பொருட்டுப் பொய் சொன்னாரென்றும், அரிச்சந்திரன் விசுவாமித்திரருக் குலகென்றுகூறித் தாரைவார்த்துத் தத்தஞ் செய்த நாட்டைமீண்டும் பெற்று எனதென்றாண்டு பொய்சொன்னா னென்றும், சிலர் கூறுவதை நோக்குமிடத்து இகழுதலில்லாதவ ரொருவருமிலர்; பகலுக்குப் பின் இரவும் இரவுக்குப்பின் பகலும் வருவது போன்று புகழிற்குப் பின் இகழும் இகழிற்குப்பின் புகழும் வருமென்பது ஒவ்வொருவர்க்கு மினிது புலனாம். நல்வினையின் பயன் சித்திக்கும்போது புகழும் தீவினையின் பயன் சித்திக்கும்போது இகழுமுண்டாவனவா யிருத்தலின், இவற்றின்கண் மனம் வையாது மனச்சான்றுக்கு மாறின்றி யொழுகுதலே முக்கியமான கடமையாம். மேற்கொண்ட காரியஞ் சித்திபெருகபோது "பாழுந் தெய்வத்திற்கு கண்ணில்லையே; அதன் கோயிலிடியாதா?" என்று சாதாரண ஜனங்கள் பேசுவதைக் கவனிக்குமிடத்துத் தெய்வத்திற்கும் இகழ்வென்பது விட்டபாடில்லை யென்பது செவ்விதாகத்தோன்றும். தெய்வத்திற்கே இகழ்ச்சி யுளதாயின், சிற்றறிவும், சின்னாள்வாழ்வும், சிற்றுறேட்டம் போன்று வரும் நோயும், தீராக்கவலையு முடைய நமக்கு இகழ்ச்சியில்லாமற் போவ தெங்ஙனமாம்? கேவலஞ் சத்துவகுண முடையவராயிருந்த இராமபத்திரரும் சீதா பிராட்டியைத் தசக்கிரீவ னெடுத்துச் சென்ற விடயமாக வண்ணா னொருவனால் இகழப்பட்டாரென்பதை நோக்குமிடத்து, புகழ்பெற்ற வொவ்வொருவரும் யாதேனு மோரிகழ்பெற்றே யிருப்பாரென்பது விளங்குகின்ற தல்லவா? புகழை விரும்பா திருப்பவருக்குப் பிறரிகழ்வது பற்றி நோக்கமில்லா திருப்பது பிரசித்தமா யிருத்தலின், நாம் புகழை விரும்பா திருப்போ மாயின், நமக் கிகழுண்டாகாது. புகழ் மாத்திரம் வேண்டும், இகழ்வேண்டாமென்பது பகல்



மாத்திரம் வேண்டும், இரா வேண்டா மென்பது போலவாம்.

புகழ் இகழ் என்பன உடம்பிற்கா? உயிர்க்கா? என்று தனித்தனி விசாரித்துப் பார்க்குமிடத்து, அவை உடம்பிற்கு முரியனவன்றாம், உயிர்க்கு முரியனவன்றாம். உடலுக்கெனின், உயிர் நீங்கிய வுடலைத் தனியாகப் புகழ்வாரும் இகழ்வாரு மொருவருமில ராதலின், அங்ஙனங் கூறுதலமையாது. உயிர்க்கெனின், நாமரூபங்களை முன்னிடாது உயிரைப் புகழ்வாரும் இகழ்வாரு மொருவரு மிலராதலின், அவ்வாறு கூறுதலும் பொருந்தாது, புகழுதலும் இகழுதலு மேற்பது உடம்போடு கூடிய உயிராயிருத்தலின், உடம்போடு கூடியவுயிரே புகழ்வரும்போது சுகத்தையும் இகழ்வரும்போது துக்கத்தையு மடைந்து அவற்றால் வதையுண்கின்றது. தேகத்தில் யானென்னு மபிமானமுடைய பரியந்தம் புகழ்தல் இகழ்தல்களால் வருஞ் சுகதுக்கம் நம்மைவிட் டகல்வதே யில்லையாம் சுகதுக்கங்களால் மொத்துண்ணுஞ் சித்தம் உபசாந்திபுற்றுப் பூரண பாவத்தையடைவதே யின்றாம். பௌர்ணமியன்று சந்திரன் தனது கலைகளால் பூரண பாவத்தையடைந்திருப்பதுபோல மனதும் தனது சத்துவகுணத்தால் பூரணபாவத்தையடைந்தாற்றான் தேகபாவமும் நீங்கும். தேகபாவமுற்றும் நீங்கினவர்தாம் புகழ்தல் இகழ்தல்களால் வரும் சுகதுக்கங்கட் கடிமை யாகாம லவற்றிற்கு ஆண்டவரா இருப்பர். (தொடரும்)

கோ. வடிவேலு செட்டியார்.

673-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## குலோத்தாரண உபந்நியாசப் பத்திரிகை.

மேலும் அவர்கள் தங்கள் தங்கட்குரிய தொழில்களில் மேன்மை சிடையாவென புத்திமான்களான பேர்களால் மதித்து அவரவர்கள் ஐக்கிய பத்தியத்தினாலும், ஐக்கிய மத்தியத்தினாலும் விளங்கும், சபை மூலியமாக நிதிகளைச் சேர்த்து கவர்ன்மெண்டாருடைய உதவியையும் பெற்று மூல நிதியினின்றும் கிடைக்க கூடிய வருமானத்தி லிருந்தும் அந்தந்த ஜாதியாரின் ஏழைச் சிறுவர்களை போஷித்து ராஜ பாஷையாகிற ஆங்கில கல்வியை போதித்து பட்டதாரிகளாக்கி சகலமான கவர்ன்மெண்டு ஸ்தலங்களிலும் அதிகாரம் செலுத்தும்படியாக செய்து வைத்திருக்கின்றார்கள். இந்தப்படி ஒவ்வொரு ஜாதியாரிலும் ஆயிரக்கணக்கான பட்டதாரிகளை நாம் பார்க்கின்றோம். மேலும் வித்யை யாகிற அறிவினால் மனுஷியனடையும் பலன்களாவன:—

ஜாட்யாதியோஹாதி ஸிம்சதிவாசிஸத்யம்
மானோன்நதிம்திஸதி பாபமபாகரோதி
சேதஃப்ரஸாதயதி திக்ஷுதனோதிகீர்திம்
கிம்கிம்நஸாதயாதி கல்பலதேவவித்யா.

கல்வியென்றும் சாஸ்திராதி பரிசயம்கொண்டுண்டாகிற அறிவு மனுஷ்யருக்கு புத்தியினுடைய மூடத்தனத்தை கொல்லும் (மாற்றும்) வாக்கில் சத்தியத்தையே சொல்விக்கும். மானாபிமான உத்கர்ஷத்தைக் கொடுக்கும், பாபத்தை நாசம் பண்ணும் மனசை ஆனந்திப்பிக்கும் எவ்விடத்தும் யெஸஸாகிற கீர்த்தியை பரவச்செய்யும். மேலும், வித்யாகிற சம்பத்து ஒருவனிடமிருக்குமானால் அஃதை திருடர்களால் வசப்படுத்த முடியாததாகவும், இன்ன பிரகாரமென்று சொல்லவொண்ணாத சுகத்தை எப்பொழுதும் கொடுக்கக்கூடியதாகவும். யாசித்த பேர்களுக்கு சதா கொ

டுத்துக்கொண்டிருந்தாலும் குறைவின்றி வர்த்தனையாக கூடிக்கொண்டிருக்க கூடியதாகவும் பிரளய காலம் வரினும் நாசமடையாததாகவுமிருக்கிறது.

அன்றியும் வித்யையாகிற தனமானது யாருடைய ஹ்ருதயத்தி லிருக்கிறதோ அவர்களை குறித்து அரசர்களால் அருமையயடைந்தாலும் அது நிஷ்பலமாகுமேயன்றி வித்யானது அதிக மஹாத்மியத்தோடுகூடிக்கொண்டேயிருக்கும். மேலும்

வித்யாநாம நரஸ்யரூபமதிகம்
ப்ரச்சன்ன குப்தம்தநம்
வித்யாபோககரீய ஸஸ்ஸுககரீ
வித்யாகுருணாம்குரு:
வித்யபந்து ஜனோவிதேஸகமனே
வித்யாபராதேவதா
வித்யாராஜ்யஸுபூஜ்யதே
நஹிதனம் வித்யாவிஹீந:பசு:

மனுஷ்யர்களுக்கு வித்யையானது அதிரூபமாகவும் ஒருவராலும் அபகரிக்காமல் ரக்ஷித்து வைத்துக்கொண்டிருக்கும் புதையல் தனமாகவும், போகம், யஜஸு, கீர்த்தி ஸுகம் சௌக்கிய முதலியவைகளைக் கொடுக்கக்கூடியதாகவும் ஹிதாஹிதங்களை யுபதேசிக்கும் குருவாகவும், அரசர்களால் பூஜிக்கிறதற்கு யோக்கியமுடையதாகவும், அன்னிய தேச யாத்திரையில் பந்துக்களைப்போல இஷ்டர்களாகவும், பிரதான தேவதையாகவு மிருக்கிறது. இதை தவிர வேறு தனம் கிடையாது வித்யையில்லாதவன் பசுவுக்குச் சமானனென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதலால் காமக்குரோத லோபமோக மதமாச்சர்யாதிகளினாலடையும் தீயவொழுக்கங்களை யகற்றுவதும், கீர்த்தி செல்வம், குலமேன்மை, உயர்பதவி முதலியவைகளை யடையச் செய்வதும் கல்வியே.

இக்கல்வியினால் எவ்விஷயத்தையு மெளிதிலடையலாமென தர்மசாஸ்திரங்களில் கூறியிருக்கின்றமையால் இக்கல்வியையும், குலத்தார்களுக்கு வேண்டும் அரியபெரிய காரியாதிகளையும்எளிதிலடையும்படியாகக் கொடுக்கிறேனென நிற்பது இவ்விதமான மஹாஜனங்களடங்கிய இக்கான்பிரன்ஸே முக்கிய கற்பகத்தருவா யிருக்கின்றது.

(தொடரும்) ஜோசியர்-முத்தாச்சாரியார்.

## அன்பே மாவிடசர்வரோக நிவாரணி.

அன்பு என்னுஞ் சொல்லுக்குப் பொருள் சொல்வது மிகக் கஷ்டமானகாரியம் ஏனெனில் உலக முழுமே அன்பு மயமாகவே பெருமான் சிருஷ்டித்திருக்கிறார். அதை விபரிக்கில் வெவ்வேறுவிதமாயேற்படும், அன்பும் சிவமுமொன்றெனக் கடந்த ஞானிகள் ரூபிப்பாராயின் அன்பின் விவரத்தை நாமெங்ஙன முரைக்குந் தரத்துளது. அன்பில் மூன்றுவித மென்பார், அதாவது முதலன்பு இடையன்பு கடையன்பு என்பனவைகளே. அது மெய்யேயாயினும் இந்தவிதங்களிலும் அனேகவிரி விருக்கின்றன. அவ்விரிவுகள் குணபேதமாக அவ்வப் பொருளுக்குத் தகுந்தவாறு பாராட்டப்படுகின்றன. இருபதுபேர் கூடியிருக்கும் ஓர் சபையில் ஒருவனெழுந்து அன்பு என்னுஞ் சொல்லைச் சொன்ன மாத்திரத்தில், அதிலிருக்கு மொவ்வொருவரும் தம் தமக்குப் பொருந்தி அனுசரித்தவாறு அன்பு எப்படிப்பட்ட தெனத் தன்னுள் ஊகிக்கின் அதில் ஒருவன் தன் பெற்றோரிடத்தில்வைத்த அன்பையும், அதின், அனுபவத்தையும் பற்றிச் சிந்திக்கிறான். மற்றொருவன் தன் மனைவியில்வைத்த அன்பையும், மற்றொருவன் தன் பிள்ளைமேல்வைத்த அன்பையும்மற்றொருவன் தன் சினேகிதனில்வைத்த அன்பையும், இன்னொருவன் தன் நாயில்வைத்த அன்பையும், இன்னொருவன் தன் பணத்தில்வைத்த அன்பைவும், இன்னொருவன் தருமஞ் செய்வதில் வைத்த அன்பையும், இன்னொருவன் கடவுளில் வைத்த அன்பையும், இப்படியே ஒருவன் தாசியிலும், மற்றவன் கல்வியிலும், இன்னொருவன் திருடுவதிலும், இன்னொருவன் வேட்டையாடுவதிலும், இன்னொருவன் சங்கீதத்திலும், இன்னொருவன் கோள்சொல்லுவதிலும், இன்னொருவன் மதுபானத்திலும், இவ்வாறு ஒவ்வொருவனும் எதெதில் விசேஷ அன்பு வைத்திருக்கிறானோ அதைச் சிந்தித்து அன்பு இப்படிப்பட்டதெனத் தனக்குள் ஒருவாறு தீர்மானிக்கிறான், ஆகவே ஒவ்வொருவனுடைய அன்பையும்பற்றி விவரிக்கும்படி கேட்போமேல் ஒன்றுக்கொன்று ஏற்றத்தாட்சியாகவே யிருப்பதைப் பார்க்கலாம். இது பற்றியே குணபேதமுடையதெனச் சொன்னோம் அக்குணபேதம் இவன் அன்புவைத்த பொருளுக்கும் இவனுக்கும் சம்பந்தப்பட்டதன்றி மெய்யன் புக்கல்லவென்பதும் தெரியவருகிறது. இவ்வாதாரம்பற்றியே அன்பெனப்படுவது கடவுள் ஒருவரே யென்பதுபோல் ஒன்றேதானுள்ளதெனச் சொல்லுற்றோம் அதைப் பாராட்டுவதில் மனிதன் குணபேதமாகிக் கொள்கிறானென்பது தெரியவருகிறது. மேலாகிய மெய்யன்பைக் கடவுளிடம் வைத்த ஒருவன் எவ்வித கஷ்டநஷ்ட நோய் முதலியன வந்துற்றபோதும் கொஞ்சமேனும் நிலைபிரியாது அஞ்சாநெஞ்சனாய் தன் பக்திக்கும் அன்புக்கும்பங்கம்நேராது சாதிக்கிறான், இதற் கத்தாட்சியாக நம் நாயன்மாரே சாட்சி அன்னோருக்கு நேர்ந்த இடையூறுகளும் ஆபத்துகளும் நோய்களும் ராசதண்டனைகளும் பசிநோய்களும் நாம் சரிதைமூலமாயறிகிறோம் அன்னோரை இவ்வாறு கஷ்டத்திற்குள் ஆக்கியுமென்ன அவர்தாம் வைத்த மெய்யன்பினின்று ஓர் மயிரிடைதானும் வழுவினார்களா? இல்லை அன்னோருக்குவந்த சர்வகஷ்டங்களும் நிவாரணமாயது. இதற்கு





மெய்யன்பே காரணமா யிருந்ததன்றோ? ஆனால் பொய்யன்பும் மெய்யன்பின் ஓர் பாகந்தான், அதை நாமே அப்படியாக்கிக் கொண்டோமே தவிர அக்குற்றம்அவ்வன்பைச் சார்ந்ததல்ல.

ஒருவன் மனைவியில் மெய்யன்பெனவொன்றை வைத்திருக்கிறான். அவள் தன் கற்புத் தவறிநடந்தவனேற ஓர் கோடரித் தறியல்போன்று அவ்வன்பைப் பொய்யன்பு குமகொள்கின்றது. எப்பொழுதும் திருடுவதிற் சிந்தனையுள்ள வொருவனைச் சிலர்கூடி தம்பி! நீதிருடுவதை விட்டுவிட்டால் மாத்திரம் உன்னை எங்கள் கூட்டத்திற் சேர்ப்போம் எனச் சொன்னவுடன் தான் நேசித்த திருட்டுத் தொழிலைவிட்டு இவர்கள்கூட்டத்திற் சேருகிறான். இவன் இவர்களில் வைத்த அன்பு பொய்யன்பு இப்பொய்யன்பின்சொற்பதுணைக்கொண்டு இவன் இக்கூட்டத்திற்சேர நேருமாயின், மெய்யன்பை வகுக்கு மொவ்வொருவனுக்கு மெவ்வளவு உன்னத நிலை லபிக்கவேண்டுமென்பது தெள்ளென விளங்குகின்றது. நோயாளிகளை அன்புவைத்துப் பரிகரிக்கும் வைத்தியன் அதிசீக்கிரத்திற் கீர்த்தியையும் கியாதியையும் பெறுகிறான் வைத்தியத்தளவில் அன்பில்லான் செய்ததும் இவன் செய்ததும் ஒன்றேயாயினும், இவன் வகுத்தப்ரிவு மேலாகி அன்பொன்றே. அதுவே இவனது பிரபல்ய கீர்த்திக்குக் காரணமாயிருந்தது அதுவே அந்நோயாளியின் விசேடரோக நிவாரணியுமானது. ஆனதுபற்றி நம் எவ்வித தொழிலும் நாம் கொஞ்சம் அன்புபாராட்டப் பழகிக்கொள்வோமேல், முன்னிலும் பன்மடங்கு சிரேஷ்ட முடையோராயும், காரியசித்தி யுடையோராயும், உலகப்பிரசித்தி யுடையோராயும் தெய்வானுக் கிரகத்திற்குட் பாத்தியராயும், சர்வரோகங்களையும் நீக்கும் வல்லமை யுடையோராயும் ஆவோம்.

விச்சுவகர்மன்,
யாழ்ப்பாணம்.

## போகமுனிவர்.

இவரைப் போகியென்றும் போகரென்றும் போகநாதரென்றுஞ் சொல்வதுண்டு. இவரொரு சித்தர். ஜாதியிற் சீனரென்று சிலரும். சிற்பிவம்சஸ்தவரென்றும் சிலர் கூறுகின்றனர் துறவாச் சிரமமுடையவர். இவர் சிற்பாச்சாரியா ரென்பவர் சைவசமயர்களென்று முறைப்பர் இவருடைய மாணவர்கள் கணக்கற்றவர்கள், அவர்களிற் சிறந்தவர்களாக கருவூர்த் தேவரையுந் திருமாளிகைத் தேவரையுஞ் சொல்லலாம். கருவூர்த் தேவர் திருவிசைப்பாவியற்றியவர்களில்ஒருவர்; வாமியாதலின் மதுவூனருந்துபவர். இதுகண்டிகழ்ந்தார்க்குத் தமது திறமையை விளக்கும் பொருட்டாக, அகாலத்தில் மழை பொழிவித்தல், நதிபெருகச்செய்தல் பூதங்கள் குடைபிடிக்கச்செய்தலாதியாய பல அற்புதங்களைச் செய்துகாட்டியவர், திருமாளிகைத் தேவர் "ஒளிவளர் விளக்கே" என்பது முதலாகிய திருவிசைப்பாப் பதிகங்கள் பாடியவர் பிரேதத்தை உயிர்ப்பித்த பெருஞ்சிறப்பாளர் இவர் பெருமை திருவாவடுதுறைப் புராணத்தில் நன்கு விவரிக்கப்பட்டிருக்கிறது. நிற்க,

போகர் வைத்திய சாஸ்திர நிபுணத்துவம் பொருந்தியவர் இவ்வகையில் இவர் மாணவர் புலிப்பாணி போகர் நூலென ஒருவைத்திய சாஸ்திரங் காணப்படுகிறது இவர்பால் வைத்தியங்கற்ற சீடர்கள் இவர்கூறிய முறைகளைச் செய்யுள் ரூபமாகப் பாடி அப்பெயரிட்டனர்போலும். ஆனால், காலந்தோறும் பலர் பல செய்யுட்கள் பாடி அதிற்புகுத்தி விட்டதாகத் தெரிகிறது.

அபிதான கோசத்தார் இவர் சீனரென்றும், இன்றைக்கு 1600-வருஷங்களுக்கு முன் சீனதேயத்திலிருந்து பாரதவருஷத்திற்கு வந்து பாடலிபுரம் கயா முதலிய விடங்களைத் தரிசித்துக்கொண்டு, தக்ஷிணதேசத்திலும் சோழபாண்டிய நாடுகளுக்குஞ்சென்று அங்கே நெடுங்காலம் வசித்து ஆங்காங்குமுள்ள பண்டிதர்பால் தாமரியாதவை கற்றும் அவரறியாதவைகளை அவர்களுக்குக் கற்பித்தும் மீண்டும் சீனதேசத்தை யடைந்தாரென்றுங் கூறுவர்.

போகரைப்பற்றிப் பின்னுஞ் சொல்லப்பட்டிருப்பவை வருமாறு இவர் சீனதேசத்துக்கு மீண்டு சென்றபோது சிஷ்யராகத் தமிழருஞ் சிலர்சென்றார்கள். அப்பொழுது தஞ்சாவூர்ப் பிருகதீசுரன்கோயில் விமானத்துக் கபாலக்கல் சிற்பவேலை முடிந்தும், அச்சிற்பி இறந்தமையால், நெடுங்காலமாக விமானவேலையிற் பழுதுறுவண்ணம் மேற்றுமுபாயந் தேர்ந்துகொள்ளப்படாமற் கிடந்தது அமயாத்திரமன்று நாகப்பட்ணத்துப் புதுவெள்ளிகோபுரத்துச் சக்கரத்தைத் திருத்தி, அக்கோபுரத்துள்ளே வைக்கப்பட்டு நெடுங்காலமாகக் கிடந்த பொற்குவையை யெடுக்கும் வகையுந் தெரிந்துகொள்ளப்படா திருந்தது. இவ்விஷயங்களைப் போகியோ சென்ற சீடர் வாய்க்கேட்ட சீனதேசத்துச் சிற்பிகளொருவன் "அப்பெரியகபாலத்தை யேற்றுதற்கு அவ்வூரிற் பஞ்சப்பொதியில்லையா" வென்றும், "அச்சக்கரத்தைத் தடுக்க வாழைத்தண்டில்லாதொழிந்ததா" வென்றுஞ் சொல்ல, அதனைக் கேட்டுக்கொண்டிருந்த தமிழருளொருவனான ஒரு கைக்கோளன் மற்றோரை யறியாது மீண்டு சோழநாட்டையடைந்து அரசனுக்குணர்த்த, அரசன் பஞ்சை விமானப் பிரமாணமாகக்குவித்து அக்கல்லையேற்றுவித்தானென்றும், வாழைத் தண்டையிட்டு சக்கரத்தைத் திருத்திப் பொற்குவையைக்கவர்ந்து சிரங்கத்து வழ்மதிற்றிருப்பணியை முற்றுவித்தானென்றும் ஒரு கர்ண பாரம்பரியமுளது.

**கலியுக வர்த்தமானி.**

**புதுவை.**



## சில பல உலக நீதிகள்.

### (1) வரன் வது தேடல்.

ஓர் குடும்பத்தில் பிள்ளைகளோ, பெண்களோ பிறந்தால் அதைவளர்த்து, சீர்திருத்துவது பெரும் பிரயாசை. அதனோடும் அவர்களுக்கு யுக்தவயது வந்த காலத்து, பிள்ளைகளுக்குப் பெண்கள் தேடுவதும், பெண்களுக்குப் பிள்ளைகளைத் தேடுவதும் மிகப்பிரயாசை. அப்படித்தக்க பிரயாசை எடுத்துக்கொண்டு விவாகம் செய்யாவிடில் பிறகு அநேகதுன்பங்கள் விளைகின்றன. பிள்ளைக்குப் பெண் தேடுவதென்றால், பெண்வீட்டாருடைய யோக்கிதையும், அவர்கள் பிள்ளையை எவ்வளவுகௌரவமாக நடத்துவார்களென்பதையும், மாமன், மாமி, மைத்துனன் முதலியோர்களுடைய குணாதிசயங்களைப் பற்றியும் நன்காராய்ந்து சம்பந்தம் செய்யவேண்டும். பெண்ணுக்கு வரனைத் தேடுவதென்றால், இதனினும் பெருத்த கஷ்டம். அதாவது, புருஷனுடைய யோக்கிதையைப் பற்றி ஆழ்ந்து கவனிப்பதோடும் அக்குடும்பத்தில் ஏற்படக்கூடிய மாமன், மாமி, நாத்தி முதலியோர்களுடைய குணாதிசயங்களைப் பற்றியும் பன்முறை கவனித்தும் பல இடங்களில் விசாரித்தும், திருப்தியானால் சம்பந்தம் செய்யவேண்டும். அப்படியில்லாமல் சொந்த மென்றும், மாமி, நாத்திமார்கள் அதிகமிருக்கிறார்களென்றும், அவர்களால் பெண்ணுக்கு குடும்ப சம்பந்தமான காரியங்களில் அதிகநன்மை விளையுமென்றும் கண்மூடித்தனமாக அருமையாய்வளர்த்த பெண்ணை தத்தம் செய்துவிடலாகாது. 'பணக்காரர்' என்றும் கொடுத்துவிடலாகாது. பிறந்தது முதல் எவ்வளவு அருமையாக வளர்த்தோமோ அவ்வளவு அருமையுடனாவது, அஃது இல்லாவிடத்து மிக்க ஜீவகாருண்யத்துடன் நடத்துபவர்களையாவது தேடிப்பிடிப்பது பெற்றோர்களின் கடமையாகும். "கிளியைவளர்த்து பூனைகையில் கொடுப்பதுபோல்" பெண்ணைப்பெற்றவர்கள் தமது பெண்ணை கொடிய துன்மார்க்கர்களுக்குக் கொடுத்துவிட்டு பிறகு பலவித இடுக்கண்கள் அநுபவிப்பதை நாம் கண்டும், கேட்டுமிருக்கிறோம். ஆகையால் வரன், வது விஷயத்தில் ஒவ்வொரு பெற்றோர்களும். "எண்ணித்துணிகக்கருமம்" என்னும் ஆன்றோர் வாக்கியத்தை கவனத்திருத்தவேண்டும்.

### பாத்திர மறிந்து பிச்சையிடு.

ஒருவர்க்கொருஉபகாரம் செய்வதானால் அவர்களுடைய பிறப்பின் வழி, குணம், யோக்கிதை நடை முதலியவைகளை பலகாலும் சிந்தித்தேனும், பிறருடன் கலந்து தீர்க்காலோசனை செய்தேனும் அவ்வுபகாரத்தை இயற்ற வேண்டும். அடுத்தவர்களுக் கெல்லாம் உபகாரம் செய்துவிடின் அவ்வுபகாரம் நிஷ்பிரயோஜன மாகவே முடியும். நன்றி யில்லாதவர்களுக்கு உபகாரமாகச் செலவிடும் பொருளும், அன்னமும், எடுக்கும் பிரயாசைகளும் உபகாரம் புரிவோர்களுக்கே அபகாரமாக முடியும். அவர்கள் எதிரிகளாகவும் ஏற்படுவார்கள். இது உலக அநுபவமல்லவா? ஆகையால் பந்துவாயிருந்தாலும் சிநேகனாகயிருந்தாலும் ஜாக்கிறதையாக யிருப்பது நன்று.

காய்க்கிற மரத்திற்குக்கல்லடி அதிகம். ஓர் மரத்தின் பழத்தை சாப்பிட்டு அதன் உருசியை அறிந்தவர்கள் தான் அம்மரத்தின்மீது மீண்டும், மீண்டும் கல்லெறிந்து விழும்பழங்களை உண்டுகளிப்பார்கள். அதுபோலவே ஒரு தடவை ஒருவரிடம் உபகாரம் பெற்றவர் இன்னும் பல தடவை அதனைப் பெறக்கருதி பல அபசாரங்களை இயற்றுவர் அவர்கள் நம்மை கோபிப்பார்கள். நம்மை தூஷிப்பார்கள். நமக்குள்திரிகளாகவும் வருவார்கள். (தொடரும்)

**உண்மை யுரைப்போன்.**

## நூதன கைத்தொழில் முயற்சிகள்.

### தொழிற் படிப்பிற்கு கவர்ன்மெண்டு கிராண்டு.

தொழிற் படிப்புக்காக 21000, ரூபாயை இந்தியா கவர்ன்மெண்டார் சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள், அதில் 5491-ரூபாயை இதனடியிற் கண்ட தொழிற் பாடசாலைகளுக்குப் பகிர்ந்து கொடுக்கும்படியாக தொழில் டைரெக்டர் செய்த சிபார்சியை கவர்ன்மெண்டார் ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

| | ரூபா. |
|---|---|
| 1. கரூர் வெஸ்லியன் மிஷன் தொழிற்சாலைக்கு | 3000 |
| 2. சென்னை செங்கல்வராய நாயகர் ஸ்கூலுக்கு | 550 |
| 3. புத்தூர் ஆல் ஸெயிண்ட்ஸ் ஆண்பிள்ளைகளின் ஸ்கூலுக்கு | 600 |
| 4. வேளச்சேரி A. A. M. தொழிற்சாலைக்கு | 790 |
| 5. மேல்ரோசாபுரம் U. F. C. M. விவசாய ஸ்கூலுக்கு | 150 |
| 6. செங்கல்பட்டு U. F. C. M. ஜரிகைத் தொழில் ஸ்கூலுக்கு | 132 |
| 7. கரூர் வெஸ்லியன் மிஷன் ஜரிகைத் தொழிற்சாலைக்கு | 25 |
| 8. பல்லாரி ஸெயிண்ட் ஜோஸெப்ஸ் தொழிற்சாலைக்கு | 244 |
| மொத்தம் ரூபாய் | 5491 |

### பெங்களூரில் தொழிலபிவிருத்தி.

பெங்களூர் கிருஷ்ணராஜ பேட்டையில் 20 ஆயிரம் ரூபா மூலதனத்துடனும் ஒரு ஐக்கியநாணயச் சங்கம் ஏற்பாடாயிருக்கிறது. அந்த சமஸ்தானத்தில் கரும்பாட்டுவதற்கும் நெல் குத்துவதற்கும் உபயோகமான இயந்திரங்களைத் தருவித்து ஜனங்கட்கு விற்று தொழிலபிவிருத்தி யுண்டுபண்ணுவது இதன் நோக்கம் இச்சங்கம் ரிஜிஸ்தராகி, ஒரு கரும்பாட்டும் தொழிற்சாலையும் ஸ்தாபிக்கப்பட்டு அதற்கு பதினாயிரம் ரூபா மூலதனமும் சேகரிக்கப்பட்டிருக்கிறது. யந்திரங்கள் முதலியன வாங்கி விற்பனை செய்ய அவைகட்காகப்பணமும் தொழில்வியாபார டைரெக்டருக்கு அநுப்பப்பட்டிருக்கின்றது. மைசூர் சமஸ்தானம் தொழிலபிவிருத்தியில் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறது.

### ஒரு நெசவுப் பள்ளிக்கூடம்.

கோயம்புத்தூர் ஜில்லா காங்கயத்துக்குப் பக்கத்திலுள்ள சிவன்மலை யென்னும் ஊரில் ஒரு நெசவுப் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

### கான்பூரில் ஓர் சாயத்தொழில் பள்ளிக்கூடம்.

கான்பூரில் இந்த மாஸம் முதல் டெம்பரரியாக ஓர் சாயத்தொழில் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப் போகிறார்கள். அப்பள்ளிக்கூடத்தில், முதல் முதல் 8 மாணவர்களுக்குத்தான் இடங்கொடுக்கப்படுமாம். அதிலும் சாயத்தொழிலே பிழைப்பாக வைத்துக்கொண்டிருக்கும் நெசவு ஜாதிமாணவர்களைத்தான் உடனே தெரிந்தெடுப்பார்களாம் மாணவர்கள் மேற்படி பள்ளிக்கூடத்தில் 8மாஸக்காலம் வரையில் படிக்க வேண்டும். பருத்தி, ஆட்டு ரோமம், பட்டு முதலிய பற்பல விஸ்வ ஆடைகளுக்கு சாயம் போடுதற்கான மார்க்கங்களெல்லாம் மேற்கண்ட பள்ளிக்கூடத்தில் கற்பிக்கப்படுமென்று தெரியவருகிறது.

அல்லாபாத்தில் டெக்னிகல் கெமிஸ்ட் அஸிஸ்டெண்டவர்களுடைய உத்திரவின் பேரில் 15-7-16-ல் இருந்து கான்பூரில் சாயம்போடும் பாடசாலை யொன்று சிலகாலத்திற்கு ஏற்பாடு ஆகப்போகிறது. சாயத்தொழில் செய்பவர்கள் 8-பேரை முதலில் சேர்த்து 10-மாதகாலம் பயிற்சிக்கப்படும். பஞ்சி, மயிர், பட்டு நார் முதலியவைகளுக்கு வர்ணம் ஏற்றப்படும்.



## நூதன கற்பிதங்கள்.

### ஓர் அதிசயமான இயந்திரம்.

மனிதரைப் போலவே யோசனைசெய்து சகலகாரியங்களையும் முடித்துக்கொள்ளக் கூடுமான ஓர்வகை இயந்திரம் ரஸ்ஸல் என்னும் ஓர் இன்ஜினியரால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதாம். இந்த யந்திரம் மனிதரைப்போல் தானே யோசனை செய்து காரியங்களை முடிக்கக்கூடிய ஓர் அற்புதமான சூட்சுமத்தை இதற்குள் அமைக்கப்பட்டிருக்கிறது. இதனை முற்றிலும் ஒழுங்குபடுத்தி நடத்திவைக்க மேல்குறித்த இன்ஜினியர் மெத்தப் பிரயாசைப் படுகின்றனராம்.

### சூஸ்திர மமைந்த உண்டிபெட்டி.

அமெரிக்காவில் ஆக்லாஹோமாவிலிருக்கும் ஒருவரால் நிர்மாணிக்கப்பட்ட ஒரு உண்டிபெட்டி யிருக்கிறது. அதில் 25 சதத்திற்குக் குறையாத நாணயம்போட்டால் அதுபேசாமலிருக்கிறது, அதற்குக்குறைந்த நாணயம் போட்டால் அது உடனே யொரு கீச்சிடுஞ் சப்தம்செய்து ஒருமணியடிக்கிறது. ஒரு காலி கோட்டாவை வெடிக்கும்படி சுடுகிறது. கோட்டாக் என்னுங் கருவி யவனுடைய உருவத்தைப் புகைப்படத்தி லெடுத்துவிடுகிறது.

### ஆல்பாக்காவுக்குபதில்.

கொரியா தேசத்திலுள்ள ஒரு கவர்ன்மெண்ட் சாஸ்த்ர ஆராய்ச்சிசாலையில் ஆல்பாக்கா துணியைப்போல் உள்ள ஒருபோலித்துணி கண்டுபிடித் திருக்கிறார்களாம். இந்தப் போலி ஆல்பாக்கா செய்வதற்கு, காகித நூலுக்கு டாஸ்ஸா பட்டும், தார் நூலுக்கு பருத்தி நூலும் உபயோகிக்கிறார்களாம். இந்த ஆல்பாக்கா கிட்டத்தட்ட ஸ்வயம் ஆல்பாக்காவைப்போல் ரொம்ப நேர்த்தியா யிருக்கிறதாம்.

### டெலிபோன் ஸம்பாஷணையை போனோக்ராப்பில் பிடித்தல்.

போனோக்ராப் கண்டு பிடித்த தாமஸ் அல்வா எடிஸன் என்னும் அமெரிக்கர் டெலிபோன் மூலமாக இருவர் ஸம்பாஷிப்பதை போனோக்ராப்பில் பிடிக்க ஒரு யந்த்ரம் கண்டுபிடித் திருக்கிறாராம். இந்த யந்த்ரத்துக்கு 'டெலிஸ்க்ரைப்' என்று பெயர். இந்த யந்த்ரத்தை உபயோகிக்கும் போது, டெலிபோனில் பேசுபவருக்கு பேசுவதில் யாதொருதடையுமில்லாமலும் அவர் தம்முடன் ஸம்பாஷிக்கும் மற்றவருடைய பேச்சைக் கேட்பதில் யாதொரு சிரமமுமில்லாமலும் இருப்பதோடு, இரண்டு ஸம்பாஷணையையும் 'டெலிஸ் க்ரைபில்' எடுத்து விடலாம். இன்னொரு விசேஷமென்ன வென்றால், ஸம்பாஷணையில் ஏதாவது ஒரு முக்யமான பாகத்தைமாத்ரம் 'டெலிஸ்க்ரைபில்' எடுக்கவேண்டுமென்றாலும் அதை மாத்ரம் எடுத்து விடலாமாம்.

### செயற்கைப் பால்.

ஸோயா அவரையிலிருந்து செயற்கைப் பால் செய்வது ஸாத்யமென்று ஒரு பத்திரிகை தெரிவிக்கிறது. ஸோயா அவரையை ஜலத்தில் ஊறப்போட்டுப் பிறகு அதை வேகவைத்து, வேகும்போது சர்க்கரையையும், பாஸ்பேட் அப்பொடாஷ் என்னும் சாக்கையையும் குறிப்பிட்ட அளவுகளில் கலந்தால், மூன்று பொருள்களும் ஒன்று சேர்ந்துவெண்மைநிறமுள்ள கெட்டியான திராவகமாகிறது. இது பார்வைக்கு கட்டிப்பால் (கண்டன்ஸ்ட் மில்க்) போலிருப்பதோடு கட்டிப்பாலில் என்னென்ன ஆகாரப் பொருள்கள் இருக்கின்றனவோ அவைகள் இதில் இருக்கின்றனவாம். கட்டிப் பாலுக்கு என்ன ஆகார குணங்கள் உண்டோ அத்தனையும் இந்த செயற்கைப் பாலுக்குமுண்டாம். இந்தசெயற்கைப்பாலில் கொஞ்சம் சலம்சேர்த்தால் ஸ்வயப் பசும் பாலுக்கும் அதற்கும் வித்யாஸமே தெரியாதாம்.

### புது மாதிரியான ஸிமேண்ட்.

இது வரையிலும் இவ்வளவு சுலபமான விலைக்கு விற்கப்படாததும் ஈரத்தை இழுக்கும்படியான சக்தி யுடையதுமான புது மாதிரியான ஸிமெண்டைச் செய்வதற்காக தென் மலையாளத்தில் ஒரு இஞ்சினீயரும், சோதனவேலை மாணுக்கர் ஒருவரும் சிலகாலமாக பலவிதமான களிமண்ணைக் கொண்டுவந்து பரீட்சை செய்து வருகிறார்கள். இதற்குவேண்டிய களிமண் ஏராளமாக அகப்படுகிறது. மலையாளத்தில் ஸிமெண்ட் செய்வதற்காக ஒரு கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டது. இந்தத் தொழிற்சாலையில் பாரெல் ஸிமெண்ட் 2-ரூபாய் வீதம் விற்பனை செய்ய யோசித்திருக்கிறார்கள். இந்த ஸிமெண்டுக்கு நெருப்பை யணைக்கும் சத்தி இருப்பதாகச் சொல்லப் படுகிறது.

### சர்க்கரையி லிருந்து வயிரம்.

சர்க்கரையிலிருந்து வயிரம் செய்யலாம் என்று சிலரசாயன சாஸ்திரிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆனால் இது வரை ஒருவரும் செய்ய முயலவில்லை; ஏனென்றால் நமக்கு அப்பொழுது சர்க்கரை (இப்பொழுது வைரம் அருமையா யிருப்பது போல) அருமையாய் விடும்.

### ஓர் நூதன மெத்தை.

படுத்துத் திரும்பும்போதெல்லாம் அந்தந்தப் பக்கத்துக்குக் காற்றை யெழுப்பி வீசிக்கொண்டிருக்கும் புதுவகைமெத்தையொன்று அமெரிக்காவிலே செய்யப்பட்டிருக்கிறது. அது வீசுங் காற்று விசிறியால் விசிறுவதுபோல் வருகிறதாம்.

### நிறமுள்ள பருத்தி.

பருத்தி வெண்மையா யிருப்பதால், அதன் நூலுக்கு சாயமேற்ற வேண்டியிருக்கிறது. அமெரிக்காவிலுள்ள ஒரு பருத்தித் தோட்டக்காரர் பசுமையான பருத்தி விளைவித்திருக்கிறாராம். கறுப்பு நிறமுள்ள பருத்தி விளைவிக்கவும் பரீக்ஷைகள் செய்து வருகிறாராம்.

### அச்சடித்த கடுதாசியிலிருந்து புதிய கடுதாசி செய்தல்.

ஒரு அமெரிக்கர் அச்சடித்த கடுதாசியிலிருந்து மையைப்போக்கி, அதிலிருந்து வெண்மையான மரக்கூழ்செய்ய ஒரு வழி கண்டு பிடித்திருக்கிறார். முதலில் கடுதாசிகளை ஜலத்தில் அலம்பி சிறு துண்டுகளாக நறுக்கி, ஒருவித ஸோப் கரைத்த ஜலத்தில் போட்டு, நன்றாய்க் கலக்குகிறார். இதனால் கடுதாசியிலுள்ள மையானது கடுதாசியை விட்டுப் பிரிந்து ஜலத்தில் சேர்ந்து கொள்ளுகிறது. கடுதாசியும் நார் நாராகப் பிரிந்து வெண்மையான கடுதாசிக் கூழாகிறது. பிறகு இந்தக் கூழை சுத்த ஜலத்தில் அலம்பிவிட்டால் சுத்தமான கூழ்கிடைக்கிறது. இதில் கூழ் கொஞ்சமும் சேதமாய்ப் போவதில்லையாம். இந்தக் கூழைக் கொண்டு ஸாதாரண முறையால் நல்ல கடுதாசி செய்யலாமாம்.

---

## விவசாயக் கொத்து.

---

புகையிலைச் சாகுபடி விஷயமாய் நல்ல அநுபவமுடைய ஒருவர் சொல்லும் சில குறிப்புகளை இவ்விடம் எழுதுகிறோம். இந்தக் குறிப்புகள் புகையிலையின் தன்மையை நயப் படுத்துவதில் பிரயோசன முடையனவாகும்.

1. ஒரு இடத்திலே பயிர் செய்யப்பட்டவித்திலிருந்துஉண்டாகப்பட்ட கன்றுகளை அந்த இடத்தில் கூடாது. அதாவது ஒரு இடத்தில் நடப்படும் புகையிலைக்கன்றுகள் வேரிடத்திலிருந்து சேகரிக்கப்பட்ட வித்திலிருந்து உண்டாகப் படவேண்டும். ஒரு இடத்தில் புகையிலைச் சாகுபடி செய்கிறவர்கள் வேறொரு இடத்தில் சாகுபடி பண்ணுகிறவருடன் வித்துக்களை ஒவ்வொரு முறையும் மாற்றிக்கொள்வதினால் இதை லகுவில் நடப்பிக்கலாம்.



2. புகையிலை நாற்றுப்போடும் இடங்கள் மிகவுங் கவனமாய்த் தெரிந்தெடுக்கப் படவேண்டும். மழை காலத்தில் தண்ணீர் உடனே ஓடிப்போகாமல் கட்டுப்பட்டுகிற் கும் நிலம் புகையிலை நாற்றுப் போடுவதற்கு ஒருபோதும் உதவாது.

3. புகையிலை வித்து விதைக்கப் படுவதற்கு முந்தி சாம்பலுடன் கலக்கப்பட்டு, நாற்றை மேடை முழுவதிலும் சமமாய் பரவவேண்டும், காலையில் பொழுது ஏறுவதற்கு முன்னும், மாலையில் 5-மணிக்குப் பின்னுமாய் ஒரு நாளுக்கு இரண்டுமுறை நாற்று மேடைக்குத் தண்ணீர் தெளிக்க வேண்டும்.

4. நாற்று மேடையிலுள்ள கன்றுகளை புழுக்கள், பூச்சிகள் கிட்டாதபடி, மிகவும் கவனமாய் பார்த்து வரவேண்டும். ஒரு முறை நாற்றின் குருத்தைப் புழு குத்தினால், பின்வரும் இலைகள் முறிந்து போகநேறதுவாகும்.

5. புகையிலை நாற்று 3 அல்லது 4 அங்குலம் உயரமானவுடன் எடுத்து நடவேண்டும். நடும்போது வேர்கள் மடங்கி அல்லது திருகிப்போகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

6. புகையிலை நாற்றுகளை நட்டவுடன் அவற்றிற்கு நிழல் போடுதல் அவசியமான காரியம். குறைந்தபக்ஷம் மூன்று நாளுக்காகிலும் நிழல் போடுதல் அவசியம்.

7. நாட்டப்பட்டபுகையிலைக் கன்றுகள் வாட்டம் தெளிந்து உயிர்கொண்டவுடன் ஒவ்வொரு கன்றின் அடிக்கும், பக்கத்திலிருக்கும் மண்ணைக் கூட்டி அணைக்கவேண்டும். இப்படிச் செய்வதனால் புகையிலைக்கன்று நிரைகளுக்கிடையில நீர் பாய்ச்சுவதற்கு வசதியான வாய்க்கால்கள் ஏற்படுவதோடு, கன்றுகளும் பலப்படநேறதுவாகும்.

8. ஒரு கிழமையின் பின் இரண்டாம் முறையும் கன்றுகளின் அடிக்கு மண் கூட்டி அணைத்துக் கீழேயுள்ள இலையின் மட்டம் வரைக்கும் உயர்த்திக் குவித்தல் வேண்டும் உயரமாய் மண்ணைக் குவிப்பதினால் கன்றுகள் அதிகமாய் வேர் விட்டு உயரமாயும், பலமுள்ளவைகளாயும் வளரும். இன்னும் சில நாட்களான பிறகு மூன்றும் முறையும் மண்கூட்டி அணைக்க வேண்டும்.

9. இலைகள் முற்றிய வுடன் அடியில் தொடங்கி ஒவ்வொன்றாய் நறுக்கி எடுக்க வேண்டும். இலைகள் போதிய அளவாய் முற்றிவிட்டனவோ என்பது அநுபவத்தினாலே தீர்மானிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு இலையும் கவனமாய் நறுக்கப்பட்டு மடங்காமலும், சுறுங்காமலும் விருந்தபடியே கடகங்களில் வைத்துக் கொண்டு போகவேண்டும். இலை மடங்கினால் ஒவ்வொரு மடக்கும் கறுத்து நிறம்மாறிப் பழுதாய் போய்விடும்.

10. வெட்டி எடுக்கப்பட்ட இலைகள் பந்தலின்கீழ் அல்லது வீட்டுத் தாழ்வாரத்தில், கயிற்றில் கோத்துத் தூக்கப்படவேண்டும், ஒரு இலையிம் மற்ற இலை முட்டாதபடி தொங்கவிடவேண்டும்.

11. இலைகள் உலர்ந்து காய்வதற்கு 19-நாள் முதல் 22 நாள் வரைக்கும்செல்லும் நடுநரம்பைப் பிடித்து அமர்த்திப் பார்ப்பதினால் இலை உலர்ந்தது உலராததைப்பற்றி லகுவில் தீர்மானஞ் செய்யலாம்.

12. இலைகள் உலர்ந்தபின் அவைகளைக் கட்டுகளாய்க் கட்டிப் புகைபோடுதல் வேண்டும்.

13. புகையிலைப் பயிருக்கு மிருக எருப் போட்டால் இலை நயப்படமாட்டாது. தடிப்பான இலையைவிட நயமானபுகையிலையே எந்தநாட்டிலும் செல்லக்கூடிய சரக்காகும்.

தேசாபிமானி.

## ஆயுர்வேதசாரம்.

### மூலரோகத்துக்கு சிகித்ஸை.

தாமரைப்பூவிலுள்ள தாதுக்களை யெடுத்து வெண்ணெயில் துவைத்து நாள்தோறும் காலையில் சிறிதளவு சாப்பிட்டு வந்தால் ரத்தக் கசிவையும் ஆஸனக்கடுப்பையும் நிவ்ருத்தி செய்யும். இந்தமுறை நன்றாக ஸௌக்கியந்தரக் கூடியதென்று தமது அனுபவத்தில் தெரியவருவதாக 'வைத்திய கலா நிதி'யில்ஒரு நிருபர் எழுதுகிறார், அவர் இன்னொரு முறையும் தெரிவிக்கிறார். சேனைக்கிழங்கு 24-பலம், வெங்காயம் 12-பலம், இந்துப்பு 4-பலம் இவற்றை நன்றாக நறுக்கி, ஸுமார் 48-ஆழாக்கு ஜலத்தில் சேர்த்து, ஜலம் முழுமையும் சுண்டிப்போகும் வரையில் காய்ச்சி, அப்பால் 16-பலம் நெய் சேர்த்துத் துடுப்பால் துளாவிக்கொண்டே பக்குவம் செய்யவும்; தேன்போல் அதில் நிறமுண்டானவுடனே இறக்கி, சித்திரமூலப்பொடி 8-பலம், த்ரிபலா சூர்ணம் 6-பலம், தாமரையின் தாதுக்கள் இரண்டுபலம், கற்கண்டுப்பொடி 24-பலம்இவற்றைச்சேர்த்து நன்றாகக் கிளறி, ஆறிய பிறகு 8-பலம் தேனையும் சேர்த்துக் கலக்கவும். இரண்டொரு கழற்சியெடை தினத்திற்கு மூன்று வேளை வீதம் இதை மூன்று மாஸ காலம் உபயோகித்து வந்தால் மூல முளைகள் பெரும்பாலும் அற்றுப்போகும்.

மேற்கூறிய ஔஷதமேஉள்மூலம் வெளிமூலம் இரண்டுக்கும் உபயோகப்படும்.

### நரம்புச் சிலந்திக்கு வைத்தியம்.

உயர்ந்த பாலபெருங்காயம்காலணாவுக்கு வாங்கி அதை வைப்பதற்குப்போதுமான ஒரு பிஞ்சுக் கத்திரிக்காயில் குழி செய்து அதற்குள் வைத்து மூடி கங்குநெருப்பால் நன்றாக வேகும்படி சுட்டெடுத்து ஆறினபின் தோலை உரித்துப்போட்டு காலையில் இதையே முதல் ஆகாரமாக சாப்பிடவும். அந்த வ்யாதியினால் அவஸ்தைப் படுகிறவர்கள் 7-நாள் சாப்பிடுவதில், மூன்று நாள் தொடர்ந்தும், நான்கு நாள் இரண்டு நாளைக்கு ஒரு முறையும் சாப்பிடவும். வாயு பதார்த்தம் தள்ளுபடி. வேறு பத்தியம் கிடையாது என்று ஒரு நிருபர்'சுதேசமித்திரன்' பத்ரிகைக்கு எழுதுகிறார். அதே பத்ரிகையில் வேறொரு நிருபர்நரம்புச் சிலந்திக்கு இன்னொரு வைத்யமுறை தெரிவிக்கிறார்.

நரம்புச்சிலந்தி வ்யாதி பரவிவரும் ஊர்களில் ரோகத்தால்பீடிக்கப்பட்டவர்களும் ரோகமில்லாதவர்களும் காலை மாலையில் 5 க்ரெய்ன் சுத்திசெய்த வெண்காரமும், 5 க்ரேய்ன் ஸிட்ரிக் ஆஸிடும், இரண்டு அவுன்ஸ் சுத்த ஜலத்தில் கலந்து கொஞ்சம் கருப்புச் சர்க்கரையைச் சேர்த்து சாப்பிட்டு வரவும். குடிக்கும் நீரை நன்றாய்க் காய்ச்சி ஆறவைத்து உபயோகித்து வரவும் இதனால் ரத்தத்திலுள்ள க்ருமிகளெல்லாம் செத்து ரத்தம் வ்ருத்தியாகி மேற்படி வ்யாதி பூராவாய் ஸ்வஸ்தமாகி விடும்.

### சுரத்திற்கு.

(Fever) ஆடாதோடையிலை, தூதுளை சமூலம், பற்படப்புல் சமூலம், கண்டங்கத்திரி வேர், சீந்திக்கொடி, கிரியாத்து, இஞ்சி, வகைக்கு பலம் கால், ஒருபடி ஜலத்தில் அவித்து, எட்டிலொன்றாய் குறுக்கி, தினம் இரண்டு நேரம் சேவிக்கவும்.

வேறொரு பாகம், வேப்பம்பட்டை, இஞ்சி, மல்லி வகைக்குக் கால் பலம், ஒருபடி நீரில் கஷாயமிட்டு எட்டிலொன்றாய் குறுக்கி, நிதம் இரண்டுவேளை குடிக்கவும் ஷெ கஷாயங்களில் ஒரு குன்றி நிறை குவைனைன் (Quinine) சேர்த்துக்கொள்வது உத்தமம்.



## தொழிற் குறிப்புகள்

[இந்த தலைப்பின்கீழ் மநு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞ வகுப்பினர் தொழிற்குரிய அரிய விஷயங்களையும், அவற்றின் கைபாகம் செய்பாகமென்ற முறைகளையும் கூறப்பட்டிருக்கிறது. இவற்றுள் நிகழும் சந்தேகங்களைச் சுருக்கமாக தங்கள் பெயர் விலாசத்துடன் இப்பத்திரிகைக்கு எழுதிக்கொண்டால் விடையளிக்கப்படும் இவற்றை அநுமதிபெற்றே மற்றவர் பிரசுரிக்கவேண்டும்.]

688-வது பக்கத்தின் தொடர்ச்சி.

### இரும்பின் நிறத்தை மாற்றுதல்.

நமது 13-வது சஞ்சிகையில் 441, 442 பக்கங்களில் கூறியவற்றோடு பின் வருபவைகளையும் சேர்த்துக்கொள்ளவும்.

காஸ்டிக்சோடாவைக் கொண்டு அழுக்கு, எண்ணை, பசை போகும்படி சுத்தி செய்து, மெருகுசேலை (Emery cloth) யால் தேய்க்கவும். விரல் அடையாளங்களுண்டாகாமலும்ஒரேவசமாகவும், வெண்மையாகவும்தேய்ப்பதில் கவனம்வேண்டும்.

### கபில நிறம்.

2 பாகம் பெரிகுலோரைடு, 2 பாகம் ஆன்டிமொனி குலோரைடு, 1 பாகம் காலிக் ஆசிட்டும், 4 பாகம் தண்ணீரில் கரைத்துக்கொண்டு அதில் கடல் நுரை அல்லது துணியை நனைத்து சாமான்களின்மேல் தடவி காற்றில் உலரவிடவும். நல்ல நிறம் வருகிறவரையில் முன்மாதிரியே செய்யவும். பிறகு தண்ணீரில் அலம்பி உலர்ந்ததும், காய்ச்சின ஆளிவிதை எண்ணெயை பூசவும், இவ்வாறு செய்யப்பட்ட சாமான்களின்மேல் துப்பு பிடிக்காது.

### நீல நிறம்.

முற்றிலும் சுத்திசெய்யப்பட்ட இரும்புசாமான்களின்மேல், 10 பாகம் தண்ணீரில் 1 பாகம் நைட்ரிக் ஆசிட்டு சேர்த்த திராவகத்தை, நீலநிறம் படருகிறவரையில் பூசவும். பின் வெந்நீரில் அலம்பி, உலர்ந்தது மெடுத்து அவற்றின்மேல் லின்சீட் ஆயிலை பூசவும்.

***

### எஃகுவை கடினப்படுத்தல்.

சுத்த சுண்ணாம்பை வார்னிஷில் கூட்டி, எஃகு சாமான்களின்மேல் பூசி, பழுக்கக்காய்ச்சி, யாதேனும், ஒரு ஆசிட் கலந்த தண்ணீரில் நனைத்ததும்எடுத்து மறுபடியும் நல்லெண்ணையில் நனைத்து எடுத்து முடிவில் ராக் ஆயிலிலாவது அல்லது சுண்ணாம்பு தண்ணீரிலாவது போட்டுவிடவும், இப்படி துவைச்சல் போடப்பட்ட எஃகு சாமன்கள் வேலை செய்கையில் உடையாமலிருப்பதால் அவற்றின் பலமும் அதிகரித்தனவென தெரிகிறது.

***

### செயற்கை மாட்டுக் கொம்பு.

வாட்டர் கிளாஸ் என்று சொல்லப்படும் சோடியம் சிலிகேட்டை சுத்திசெய்த தண்ணீரில் கரைத்துக்கொண்டு, போதுமான அளவு கோதுமை மாவை சேர்த்து பிசைந்து அச்சுகளில் கட்டிபடுத்தி அதை மண்டலம் உலர விட்டால் கெட்டியான மாட்டுக்கொம்பு போலாகிறது. சூட்டில் நெருக்கி அழுத்தாமல் சாமான்கள் செய்யலாம். கடைச்சல் பிடிக்கலாம், இதுவும் ஓர் நூதன தொழிற் முயற்சிக்கு ஏதுவாகிறது.

***

கிரோசின் எண்ணெயை வடிகட்டுவதால் கிடைக்கும் பாரபின் என்ற மெழுகு அநேகமாக அன்னிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மெழுகுவர்த்தி செய்ய இந்தப் பாரபின்தான் முக்கியமான சாக்கு, தொழிலாளிக்கு மிகவும் வேண்டும்.

### கிளிஸரைன்.

"சிலருக்கு உள்ளங் கால்களிலும் உள்ளங் கைகளிலும் எப்பொழுதுமே வியர்வை விசேஷமாகக் கசிவதுண்டு. சுத்தமான கிளிஸரைன் என்னும் மருந்தை அவ்விட

ங்களில் தடவி வந்தால், அருவருப்பைத் தரும் அவ்வியர்வை உண்டாகாமல் நின்று விடும். வை—தி.

### இரும்புக் கட்டில்களை சுத்தம்செய்ய.

ஒரு கின்னம்பாவில் ஒரு தேயிலைக் காண்டி டர்ப்பெண்டைன் எண்ணெயைக் கலந்து ஒரு சுத்தமான துணியில் எடுத்து இரும்புக் கட்டிலின் பாகங்களின்மேல் தடவிப்பிறகு ஒரு பிளானல் துணியால் நன்றாய்த் தேய்க்கவும்.

### உடைகளை ஈரமாகாதபடி செய்தல்.

பிரெஞ்சு ராணுவ அதிகாரிகள், தங்கள் சோல்ஜர்களுக்கு ஈரம் தாக்கக் கூடாத உடைகள் சப்ளை செய்வதைப்பற்றி சிலகாலமாக யோசனை செய்துவந்தார்கள். ஒரு பிரெஞ்சு ரஸாயன சாஸ்திரி அவ்வித உடைகள் செய்வதற்கு ஒருவழி கண்டு பிடித்திருக்கிறாராம்.

ஆட்டு ரோமத்தை சுத்தம் செய்யும் போது அதிலிருந்து ஒருவித கொழுப்பு கிடைக்கிறது. அந்தக் கொழுப்பை சில திராவகங்களுடனும் மருந்துகளுடனும் கலந்து அதில் ஆடைகளைப்போட்டு சில நிமிஷநேரம் ஊறவைத்துப் பிறகு எடுத்து காயவைத்தால் அவைகளில் ஈரம் தாக்குவதில்லையாம். இவ்விதம் தயார் செய்வதில் உடைகளின் நிறமும்; நூலின் உறுதியும் கெடுவதில்லையாம்.

### அழுக்குக் கம்பளங்களையும் பிளானல்களையும் சுத்தம்செய்ய.

அழுக்கான கம்பளங்களை நன்றாய்உதறி பிறகு அவைகளை மாசிக்காய் அறைத்து கலக்கியிருக்கும் தண்ணீரில் நனைக்கவும். உடனே அவைகளைக் கசக்கி அலசி ஆறப் போடவும். இப்படிச்செய்தால் கம்பளங்கள் சுத்தமாயும் பளபளப்பாயும் இருக்கும். பிளானல்களை சுத்தம் செய்ய, வடித்த கஞ்சியைத் தனியாக எடுத்து வைத்து, கைபொறுக்கிற சூடாயிருக்கும்போது பிளானல்களை நன்றாய் ஊறவைத்து அலைக்கவும்.

பெண்கல்வி.

## பலகுறிப்புகள்.

சென்ற டிசம்பர்மாதம் வெளிவந்த நம் குலோபகாரியில் நம்பத்திரிகையின் சந்தாதாரர்கள் தயைசெய்து தங்கள் சந்தாத் தொகைகளை ஒரு வருடத்திற்கேனும், அல்லது ஆறுமாதத்திற்கேனும் முன்பணமாக அனுப்பி ஆதரிக்க வேண்டுமென்று விநயத்துடன் கோரப்பட்டார்கள். அப்படியே பல கனவான்கள் தங்கள் சந்தாத் தொகைகளை எமக்கு அனுப்பியிருப்பதை இங்கு நன்றியறிதலுடன் எழுதலானேம். இதுகாறும் முன்பணம் அனுப்பாதவர்கட்கு பிப்ரவரிமாதப் பத்திரிகையை ஆறுமாத சந்தா ரூ. 1–8–0க்கு வி. பி. மார்க்கமாக அனுப்பப்படுமென்பதை இங்கு எச்சரிக்கலானேம். அப்படி வரும் பத்திரிகையை குலாபிமானிகள் தயைசெய்து அங்கீகரிப்பார்களாக. இந்த ஜனவரி மாதமுதல் நமது சந்தாதாரர்களின் ரிஜிஸ்டர் நம்பர்கள் மாத்தி புதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை பத்திரிகையில்ஒட்டிவரும்கடிதத்தின் மேற்புறத்தில் காணலாம். அந்த நம்பர்களை சந்தாதாரர்கள் குறித்துக்கொள்வதோடும், அவைகளைக் குறிப்பிட்டே இனி நமக் கெழுதுவார்களாக.

* * *

நமது பத்திரிகைக்கு அன்புடன் விஷயதானம் புரிந்துவரும் வித்வசிகாமணிகட்கோர் விண்ணப்பம்இங்குண்டு. அதாவது தங்கள் தங்கள் வியாசங்களை பிரதி இங்கிலீஷ்மாதம் முதற்றேதிக்குள் அனுப்பிவர வேண்டுமென்பதே. அங்ஙனம் செய்யாவிடில் வியாசங்கள் அப்போதைக்கப்போது வெளிவருவது கடினமாகிறது. விஷயதானிகட்கும் உத்ஸாகம் தணிகிறது. ஆகையால் இதனை விஷயதானிகள் தயைசெய்து குறித்துக்கொள்வார்களாக.



* * *

சென்றவருடம் கும்பகோணத்தில் விஸ்வகர்ம கான்பரன்ஸ் செவ்வனே நடந்தேறியது. இரண்டாவது கான்பரன்ஸ் எங்கு நடைபெறுமென்பதை தெரிந்துகொள்ளக் கூடவில்லை. ஜனஸமூகத்தின் செல்வாக்கைப் பெற்றவர்களடங்கிய கான்பரன்ஸ் சென்டரல் கமிட்டியார்கள் இதுகாறும் ஏதேனும் ஓர் இடத்தைக் குறிப்பிட்டு முடிவுசெய்திருப்பார்களென்று நம்ப இடந்தருகிறது. இவ்வருடம் திருச்சியிலேனும், தஞ்சையிலேனும் அக்கான்பரன்ஸை நடத்துவது நன்றென அபிப்பிராயப்படுகிறோம். ஏனெனின் அவ்விருவூர்களிலும், தக்க தனவந்தர்களும், குலாபிமானிகளுமிருக்கின்றனரென்பது யாம் கண்கூடாக்கண்டறிந்தவிஷயம்.

* * *

நங்குலோபகாரியின் பெருஞ்சிறப்பினை நண்பர்கள் பலர் வியந்தும், புகழ்ந்து நமக்கு எழுதும் நிரூபங்கள் எண்ணில. இக்கடிதங்கள் நமக்கு மேன்மேலும் ஊக்கத்தையும், உத்ஸாகத்தையும் வளர்த்து, அன்னோர்பால் நன்றியறிதலையும் விர்த்திசெய்விக்கின்றன. நம்பத்திரிகையில் கைத்தொழில் சம்பந்தமான விஷயங்கள் செறிந்திருப்பதால் அதனை கைத்தொழில் பத்திரிகை முற்றிலும் மாற்றிவிடுவது நலமென சில கைத்தொழில் நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். அப்பொழுது பொதுஞானத்தைப் புகட்டக்கூடிய விஷயங்களுக்கு அப்பத்திரிகையில் அதிக இடங் கிடைக்கமாட்டாது. அதைக்குறித்து சற்று பின்வாங்கவேண்டியிருக்கிறது. இவ்விஷயத்தைச் சீர்தூக்கி நேயர்கள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடக் கோருகிறோம். தொழில் சம்பந்தமாகஎழுதப்படும் வியாசங்களை நங்குலோபகாரி எப்பொழுதும்அங்கீகரிக்கத் தயாராயிருப்பதை பன்முறை தெரிவித்திருக்கிறோம்.

* * *

சென்ற வருடத்தில் நமது குலோபகாரியில் வெளிப்போந்த பக்தோபாக்கியானம் என்னும் விஸ்வகர்மசந்ததியில் உற்பவித்த 12.பக்தர்களுடைய சரித்திரங்களை புராணப் பிரசங்கத்திற்கென்றே தக்க வித்வசிகாமணிகளைக்கொண்டு செய்யுள் ரூபமாக எழுதப்பட்டு நமது விஸ்வகுலோத்தாரண அச்சியந்திரசாலையில் உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டு விற்பனைக்குத் தயாராகி விட்டது. செய்யுளின் மொத்தத் தொகை 529 செய்யுளோடு கூட முழுச்சரித்திரங்களை வசனரூபமாகவும் சேர்க்கப்பட்டிருக்கிறது. புத்தகத்தின் சைஸ் டிம்மி 8 பேஜ் அளவில் 178 பக்கங்கள் கொண்டு, காலிகோ பயிண்டு செய்யப்பட்டு, குலாபிமானத்தை முன்னிட்டு ரூபாய் ஒன்று விலை குறிக்கப்பட்டிருக்கிறது. விஸ்வகர்ம சந்ததியார்க்கும், இதர புராணப் பிரசங்கியார்களுக்கும் இன்றியமையாதது.

* * *

நமது இரண்டு வருடத்திய விஸ்வகர்ம குலோபகாரி பத்திரிகைகளை (ஆரம்பமுதல், சென்ற டிசம்பர் வரையில்) சேர்த்து ஒரே புத்தகமாக பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது. இதில் தொழிற்குறிப்பு, கைத்தொழில் முதலிய அநேக அரிய பெரிய விஷயங்கள் அமைந்துள்ளபடியால் எக்காலத்தும் உபயோகப் படக்கூடியது. பயிண்டிங் உட்பட இதன் விலை ரூபா ஐந்தே. போஸ்டேஜ் பிரத்தியேகம்.

* * *

இப்புதிய வருடத்திய நம் குலோபகாரி சங்கராந்திப் பண்டிகையை முன்னிட்டு வெளிவருவதால், அப்பண்டிகை தினத்து ஒருவரையொருவர் தரிசித்து அளவளாவி க்ஷேமலாபங்களை விசாரித்துவருவதுபோலவே, நாமும் நமது பத்திரிகை மூலமாய் நமது வாசகர்களின் க்ஷேம லாபங்களைக் கோருவதை தயைசெய்து அங்கீகரிக்கக் கோருகிறோம்.

* * *

விஸ்வகர்ம சந்ததியில் உற்பவித்த, (தஞ்சை பிரம்மஸ்ரீ கிருஷ்ண பாகவதரவர்க

ளின் மாணாக்கர்) தஞ்சை, சங்கீத பாத சபாரஞ்சித வித்வசிகாமணி, பிரம்மஸ்ரீ துரைசாமி பாகவதரவர்கள் சென்னைக்கு விஜயமாயிருந்து நந்தன் சரித்திரம், சீதா கல்யாணம், ஸ்ரீ த்ரௌபதாமான சம்ரக்ஷணம் என்னும் மூன்று திவ்விய, சரித்திரங்களை சென்னை பெத்துநாய்க்கன்பேட்டையில்நிவாஸமாயுள்ளசுஜாதியாரின் ஆதரணையின் கீழ் அன்னதான சமாஜ மண்டபத்தில் பிரமாநந்தவாரி ததும்பப் பிரசங்கித்தனர். இன்னும் பல காலக்ஷேபங்கள் இவரால் நடைபெறும் ஏற்பாடுகள் சென்னையின் பலபேட்டைகளிலும் நடந்தேறுகின்றன. நமது சபாமண்டபத்திலும் ஓர் காலக்ஷேபமும், பாகவதற்குதக்க பரிசளிக்கும் முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன. இதுவரையில் பகவத்கதாகாலக்ஷேபம் புரிந்துவரும் நம்மனோர்களில் இவர் முதன்பெற்றிருக்கிறாரென்பது பலர் அபிப்பிராயம்.

***

விஸ்வேஸ்வர பகவான் பேரில் கீர்த்தனைகள் இது நம் விஸ்வகர்ம சந்ததியிலுற்பவித்த வித்வசிகாமணிகளால் எழுதப்பட்டது நம்மவர்கள் அநேகமாக விஸ்வேஸ்வரர் கீர்த்தனை வேண்டுமென்று எமக்கு அடிக்கடி எழுதியிருந்தபடியால் இக்கீர்த்தனைகளை திரட்டி அச்சிடப் பட்டது. டிம்மி 8-பேஜ் அளவில் 32-பக்கம் அச்சிட்டது. இதன் விலை அணா இரண்டே.

## கடிதங்கள்.

ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள்
245-வது வருடத்திய

### குருபூஜா பத்திரிகை.

சென்னை சமரசஞான சங்கத்தின் 8-வது
வருஷோத்ஸவம்.

அலைகடல்சூழ்ந்த அவனியிலுள்ள தமிழறிந்த மக்களுள் ஸ்ரீ தாயுமான சுவாமிகளைப்பற்றியும் அவரியற்றிய நூலினருமையும் அறியாதாரெவருளர்; அப்பெருந்தகையின் சரிதமோ புராணக் கதைகள் போலன்று. அவர் 245 வருடங்களுக்கு முன் பரிபூரணதசை யடைந்தனரென்பதற்கு இன்னும் தக்க சான்றுகள் இருக்கின்றன. அவரின் பெருமையை அவர் நூலே விளங்கும் அவர் நூலில் அங்காங்கு கூறப்பட்டதையே சில மதாபிமானிகள் மேற்கோளாகக் கொண்டு அவர் தம் தம் மதச்சார்புடையரென இயம்புகின்றனர். அவ்வாறு கூறும் மதவாதிகள் மயக்கி வீழ்ந்து மதிகெடாது மெய்ப்பொருளறிந்து உலகமுய்யுமாறு, சென்னை, பழைய வண்ணாரப்பேட்டை தங்கசாலைக்கடுத்த ஸ்ரீ யோகானந்த முனீஸ்வர ராஸ்ரமத்தில் ஸமரசஞான சங்கத்தை ஸ்ரீ ஷண்முகானந்தசுவாமிகள் 1908௵த்தில் ஸ்தாபித்தனர் அச்சங்கத்தின் 8-வது வருஷோற்சவமாக நாளது ராக்ஷஸ௵ தை௴ 16௳ (29-1-16) சனிவாரமும் விசாக நக்ஷத்திரமும் கூடிய புண்ணிய தினத்தில் சென்னை, தங்கசாலைக்கடுத்த ஸ்ரீ யோகாநந்த முனீஸ்வர ராஸ்ரமத்தில் காலை 9-மணிக்கு ஸ்ரீ தாயுமான சுவாமிகள் திருவுருவத்திற்கு அலங்கார தீபாராதனை முதலிய பூஜாவைபவம், 11-மணிக்கு சாதுக்களுக்கு மகேஸ்வரபூஜை மாலை 4 மணி துடங்கி சில பெரியோர்களால் சத்விஷயமான பிரசங்கங்கள் செய்யப்படும். இவை முறையே நடக்கும்போது அன்பர்கள் யாவரும் வந்திருந்து நேத்திர சுரோத்திரானந்த புண்ணிய பலன்களைப் பெறும்படியாகத் திருவருளைச் சிந்திக்கின்றனம்.

கனம் T. சதாசிவ அய்யரவர்கள் சபாநாயகராக விருக்க அன்புடன் இசைந்திருக்கின்றனர்.

இங்ஙனம்,
சமரசஞான சங்கத்தார்.



### தொழில் வேண்டும் என்ற அவாவிற்கு கல்வியே சிறப்புடைத்து.

தொழில் வருகிறதற்கு கல்வியிருந்தால் சீக்கிரம் வந்துவிடும் தொழிற் தொழிற் என்று அதே எண்ணமாக நம்சுஜாதிகள் மதுவை உண்ணும் வண்டுகள்போல் நினைக்கிறார்கள் அந்த மதுவை அதிகமாய் உட்கொண்டால் எவ்விதம் மயக்கம் இருக்குமோ அத்தன்மைபோல நம் சுஜாதிகள் மயங்குகிறார்கள் இதற்குக்காரணம் செல்வப்பொருளைப் பார்க்கிலும் கல்விப்பொருளே சிறந்தது. நம்முன்னோர்கள் இதற்காகவே கல்வி கற்கவேண்டும் என்று சொல்லக்கேட்டு இருக்கிறோம் கற்க கற்க கசடரும் என்றபழமொழிபோல் தொழிற்களுக்கு காரணமானது கல்விப்பொருளே நூதனத் தொழிற் வேண்டுமானால் பொதுவாக ஆங்கிலேய பாஷை இருந்தால மிகச் சிறந்தது ஆங்கிலேயர்கள் மிக அற்புத வேலைகள் செய்கிறதை நாம் கண்ணால் கண்டு யிருக்கிறதாவது ரயில் மோட்டார் லசைக்கல் பலவிதமான வயிற்று கிளாஸகள் வாட்சிகள் கெடியின் தங்கம் பொன் வெள்ளி சங்கிலிகள் இன்னும் பலவிதமான இயந்திரங்களை நாம் கண்டு இருக்கிறோம். இன்னும் அநேகவிதமான இயந்திரங்களை காதால் கேட்டு இருக்கிறோம் இதற்காகவே நாம் கல்வி கற்கவேண்டியது அவசியம் இதற்கு முன்னமே கூடுதல் குறவுயிருந்தபோதிலும் இனிமேலாகிலும் நம் சுஜாதிகள் கல்விகற்று குலத்திற்கு அபிமானம் ஏற்படவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

துலாபிமானி,
கோட்டார்.

***

### பஞ்சப்பிரம்ம யாகம்.

இராக்ஷஸ௵ மாசி௴ 2௳ ஸ்ரீ காஞ்சிபுரத்தில் நிவாசமாயுள்ள சில விஸ்வகர்ம சந்ததியார்கள் சேர்ந்து பஞ்சப்பிரம்ம யாகம்செய்யப்போவதாக கேழ்விப்பட்டேன் இவ்வித யாகங்கள் செய்யவேண்டியது முக்கியமான கடமைகள்தான். இதற்குப் பொருளும் ஒற்றுமைகளும் அநேகமாக வேண்டியதிருக்கும். அவ்விதபொருளும் ஒற்றுமையும் இருந்தால்தான் ஷை யாகத்திற்கு யாககர்த்தர்களை சேகரிக்கவும், சாமகிரியைகளை சேகரஞ்செய்யவும், ஒழுங்காக நடத்தவும் கூடும். அப்படிக்கில்லாமல் நாங்களும் யாகம் செய்துவிட்டோமென்று ஆபாசமாக செய்துவிட்டால் மற்றவர்களுக்கு ஏளிதமாய்விடும். ஆகையால் ஷை யாகத்தைச் செய்யாதிருப்பதே நன்மை என்பதாக எமது கொள்கை. "செய்வன திருந்தச்செய்" என்பதாக பெரியோர்கள் கூறியிருக்கின்றபடியால் இதை கவனித்து ஷை காஞ்சிபுரம் நிவாசிகளாகிய நமது நண்பர்கள் செய்யத் துணிவார்களென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விஸ்வகர்மதுலாபிமானி.

***

நாகப்பூரில் தென்னாட்டுப் பிராமணர்கள் ஒருவருக் கொருவர் ஆங்கிலத்திலேயே யோகக்ஷேமம் விசாரித்துக்கொண் டிருப்பதை வட இந்திய ராணுவ உத்தியோகஸ்தர்களிருவர் செவியுற்று வீராவேசங் கொண்டு அவர்களைப் பார்த்து "நண்பர்களே! நீங்கள் சுயபாஷையை மறந்துவிட்டீர்களோ! அல்லது தமிழ்ப்பாஷையில் பேசினால் ஈனமென்றாயினும், தற்கால நாகரிகத்திற்குக் குறைவு என்றாயினும் கருதி அவ்வினிய பாஷையை அவமதித்துக் கைவிட்டீர்களோ நமது காருண்ணிய அரசாக்ஷியில்கூட ஆங்கிலத்திலேயே பேசவேண்டும் என்னும் நிர்பந்தமோ சற்றுமில்லையே! வட இந்தியர்களான நாங்கள் அவசிய முண்டானபோது ஆங்கிலத்தை உபயோகிப்போம். மேலும் இதரபாஷையில் நூதனக் கிரந்தங்களைக் கண்டால் அவைகளை அக்கணமே சுயபாஷையில் மொழிபெயர்த்துப் புஸ்தகமாக வெளிடுவதும் பத்திராதிபர்களுக்கும் கிரந்தாசிரியர்களுக்கு எங்களால் இயன்றளவு உதவிபுரிந்து அவர்கள் எடுத்துக்கொண்ட ஆக்கத்திற்கு ஊக்கத்தை யுண்டுபண்ணுவதும் எங்

கள் முதற்கட்டமை எனக் கருதுகின்றோம் தேசாபிமானத்தையும் பாஷாபிமானத்தையும் முன்னிட்டு நாங்கள் மெய்மறந்து பேசி, இதுவரையில் உங்கள் காலத்தையும் காரியத்தையும் தடுக்க நேர்ந்தமைக்கு மன்னிப்பீர்கள் என்று நம்புகின்றோம். என்றனர் இதுவன்றோ பாஷாபிமானம்?

கண்டது விண்டோன்.

## யுத்தசம்பந்த குறிப்புகள்.

இங்கிலாந்துடன் அநியாயமான சண்டை தொடங்கியுள்ள ஜெர்மன் சக்ரவர்த்தியார் இங்கிலீஷ் அரசராகிய ஜார்ஜி சக்ரவர்த்தியாரின் பாட்டியாரான விக்டோரியா மகாராணியாரின் ஒரு குமாரத்தியின் குமாரராவார். அதாவது ஜெர்மன் சக்ரவர்த்தியாரின் தந்தையார் ஜார்ஜி சக்ரவர்த்தியாரின் அத்தையை மணந்திருந்தார். அவ்வாறாகவே, ஜெர்மன் சக்ரவர்த்தி ஜார்ஜி சக்ரவர்த்தியின் (அத்தைபிள்ளை) மைத்துனராவார். விக்டோரியா மகாராணியார் ஜெர்மன் சக்ரவர்த்தியின் (தாயைப்பெற்ற) பாட்டியார். அவ்வாறிருந்தும் இங்கிலாந்தைத் தொலைத்துவிட வேண்டுமென்று ஜெர்மன் சக்கரவர்த்தியார் கருதுவது வேடிக்கையே. இதுபோலவே ருஷிய அரசகுடும்பத்தினர் பலர் ஜெர்மன் ராஜகுடும்பத்தில் விவாகஞ் செய்திருக்கின்றனர். அதனால் ருஷிய ராஜ குடும்பத்தினர் ஜெர்மனியரே. இப்பொழுதுள்ள ருஷிய சக்கரவர்த்திக்கும் நெருங்கிய பந்துத்வமுண்டு ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு அரசரும் பந்துக்கள்காம். ஆயினும் பந்துத்வத்தைப் பாராட்டும் குணம் ஐரோபிய அரசருக்குள் அருமையாய்விட்டது.

### ஜெர்மனியருடைய முன் ஜாக்கிரதை.

சண்டைக்குப் பின் தடுமாற்றமடையாமல் ஜெர்மனியர் செய்துவரும் புத்திசாலித்தனம் என்னவென்றால் இப்பொழுது இரும்பு, எழுகு வேலைகளையெல்லாம் முடிவுசெய்து இருப்பு கட்டி வருகிறார்கள். இதேபடி சுரங்கங்களிலிருந்து பொட்டாஷ் (மா உப்பை) யுஞ் சேகரிக்கிறார்கள். வர்ண மிடுந்தொழிற்சாலைகளும் வேலை முடித்து குவித்துக்கொண்டிருக்கின்றன. இவைகளையெல்லாஞ் சண்டை முடிந்தவுடன் கடைக்கு கொண்டுவந்து ரொக்கமாய் நோட்டு மாற்றுவதுபோல் 200,000,000 பவுன் கையில் வாங்கும்படி உறுதிகொண்டிருக்கிறார்கள். இதற்கு இவர்களுக்கு வசதியான கடை யுனைடெட்ஸ்டேட்ஸ் தான். ஏனென்றால் அமெரிக்கா கடனுக்குவாங்குவதில்லை. எல்லாம் கையில் ரொக்க பணங் கொடுத்தே வாங்குவதே வழக்கம். இதனால் உடனே ஜெர்மனியர் பஞ்சும், செம்பும், மாவிரும், நாரு முதலிய தங்களுக்குவேண்டிய யாவும் வாங்கிக் கொள்வார்கள்.

### விசித்திர ஸெப்ளின்கள்.

பிரிட்டிஷாருக்கு உபயோகமாகும்படியாயும் லண்டன் பட்டணத்திற் காபத்துறாதிருக்கும்படி காத்துக் கொள்ளவும். யுனைடெட் ஸ்டேட்ஸ், கனடா, இன்னும் இதர விடங்களிலும் நூதன விசித்திர ஸெப்ளின்கள் கட்டி முடிவாகிவருகின்றன இவைகள் 1-மணிநேரத்தில் 12,000 அடியுயர்ந்து பறக்கும். இதுவரையில் ஸெப்ளின்கள் பறந்துவரும் உயரத்துக்கு. இது 3000 அடி ஜாஸ்தி இவைகளில் சோதனை விளக்குகளும் அறிகுறிகாட்டும் எத்தனங்களுஞ் சரிவர அமைக்கப்பட்டிருப்பதால் ஜெர்மன் ஸெப்லின்கள் லண்டன் கரையை யெட்டிப்பார்ப்பதற்கு கூடசாத்தியப்படாது. இதோடு யுனைடெட் ஸ்டேட்ஸில் நூற்றுக்கணக்கான ஜட்கா நேரத்தில்



அதாவது ஒருமணி நேரத்தில் 100 மயில் ஓடும்படியான ரேக்லா சிறு ஆகாய காற்றாடி கனமாகிய கோபனு கனிலுள்ள முதலதர் கூட்டுத்தொழில் வியாபாரிகள் தீர்மானஞ் செய்து விட்டனர்.

இந்த மஹாயுத்தம் துவக்கமானதிலிருந்து நாளொன்றுக்கு 18½ லக்ஷம் ஜனங்கள் யுத்தம் புரிந்து வருகின்றனர், இவர்கள் சிலவு நாளொன்றுக்கு ஒவ்வொருத்தருக்கும் 10 ஷில்லிங் அதாவது ஏழரை ரூபாய் மொத்தத்தில் இந்த 18,5,00,000 பேர்களுக்கு 9-லக்ஷம் பவுன் அதாவது 144,000,000 ரூபாய் மாதத்திற்கு 270-லக்ஷம் பவுன் அல்லது 407,000,000 ரூபாய் ஆறுமாதத்திற்கு 1,620,000,000 பவுன் அதாவது 24,300,000,000 ரூபாயாம் இதுவல்லாமல் இந்த 18½-லக்ஷம் ஜனங்களின் சம்பளமோ ஆறுமாதத்திற்கும் 1,698,000,000 பவுன்களாம் சற்றேறக்குறைய 25,340,000,000 ரூபாயாகிறதாம்.

### வாரந்தோறும் 7லட்சத்து50ஆயிரம் பவுன்.

போர்முனைக்குச் சென்றிருக்கும் ஸோல்ஜர்களின் மனைவி மக்களுக்கும், ஜீவனத்திற்கு அந்த ஸோல்ஜர்களையே நம்பியிருக்கும், குடும்பத்தாருக்கும் ஒவ்வொரு கவர்ன்மெண்டாரும் பணவுதவி புரியவேண்டுமென்பதை நேயர்கள் அறிவர் அவ்வாறு ஸோல்ஜர்களின் குடும்பத்தாருக்காக பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் வாரந்தோறும் 7-லட்சத்து 50-ஆயிரம் பவுன, அதாவது 11-கோடியே 25-லட்சம் ரூபாய் கொடுத்து வருவதாகத் தெரிகிறது.

### சண்டையின் ஒரு மணிகாலச் செலவு.

இப்போது நடைபெறும் சண்டையில் ஒரு மணி நேரத்திற்கு 400,000 பவுண்டு செலவாகின்றதாம்.

ஜெர்மன் சக்கரவர்த்தியாகிய கெய்ஸர் தமது, தலைநகரிலிருந்து போர்முனைக்கு ஏறிச்செல்லும் ரெயில்வண்டியின் விவரமானது அமெரிக்கப் பத்திரிகைகளில் காணப்படுகின்றது. அதன் சுருக்கம் பின் வருமாறு:—கெய்ஸர் ஏறிச்செல்லும் ரெயில் வண்டித் தொடரில் ஏழுவண்டிகள் இருக்கின்றன. எதிரிகளின் விமானிகள் வெடிகுண்டெறியின் அதனால் சிறிதும்ஆபத்து நேராதபடி அவ்வண்டிகளின்மீது கவசங்கள் போடப்பட்டிருக்கின்றன. அவ்வண்டிகளில் ஒன்றானது லைப்ரேரி அல்லது புத்தகசாலை வண்டி எனப்படும். அந்த வண்டியிலே 700 படங்கள் உண்டு. ஒரு பொத்தானை அமிழ்த்தினால், அந்த 700 படங்களில் எந்தப்படம் தேவையோ அந்தப் படமானது தானாகவே ஒரு மேஜையின்மீது விரிந்துகொள்ளுகிறது. பலவகையான போர்முனையை விவகரிக்கும் படங்களும் இருக்கின்றன. தினந்தோறும் கெய்ஸர் அப்படங்களைப் பார்த்து வருகிறார். மேலும் யுத்தத்தைப்பற்றி ஜெர்மன், பிரிட்டிஷ், பிரஞ்சு பாஷைகளில் எழுதப்பட்டுள்ள நூல்கள் பலவும் அந்த வண்டியில் ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கின்றன. ராணுவ ஆபீசார் வெளியிடும் அன்றாட யுத்தச்செய்திகள் ஓர் அட்டையில் ஒட்டிவைக்கப்பட்டிருக்கும். அதில் மிகவும் முக்கியமான விஷயங்களின் கீழே சிவப்புக்கோடும், அதற்கு அடுத்தபடி முக்கியமான விஷயங்களின் கீழே நீலக்கோடும் காணப்படும். அவைகளை சக்கரவர்த்தி தினந்தோறும் வாசிப்பதுண்டு அன்றியும் அந்த ரெயில்வண்டித் தொடரிலே டெலிபோன் வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

### ஜெர்மனியில் சாஸ்திர அபிவிருத்தி.

பிரிட்டிஷ் கப்பல் படையின் ஊக்கத்தால் ஜெர்மனிக்கு அத்யாவசியமாய் வேண்டியிருக்கும் யுத்தப்பொருள்கள் அந்த நாட்டுக்கு இப்போது போசமுடிவதில்லை பீரங்கிகளும், தோட்டாக்களும், இன்னும் மற்ற யுத்தக்கருவிகளும் செய்வதற்கு தாம்ரமும் பித்தளையும் வேண்டிய தவசியம் இப்போது இந்த இரண்டு உலோகங்களும்

கிடைக்காததால், ஜெர்மானியர்கள் அவைகளில்லாமலே வெடி யுத்தக் கருவிகளைச் செய்ய முயற்சிசெய்து கொண்டிருக்கிறார்களென்று சொல்லப்படுகிறது. சாதாரண இரும்புடன் சுவல்பபாகம் செம்பையும் வேண்டிய அளவு நாகத்தையும் சேர்த்து ஒரு புதுமுறையால் ஒரு கலப்பு உலோகம் செய்து பீரங்கி முதலியவைகள் செய்கிறார்களாம்.

தங்களிடமிருக்கும் அலுமினியம் செலவழிந்து போய்விட்டால் என்ன செய்கிறதென்று பயந்து, ஜொமானியர்கள் களிமண்ணிலிருந்து அந்த லோகத்தைத்தயார்செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்களாம்.

பீரங்கிகளும் வெடி குண்டு களுக்கும் வேண்டிய வெடிமருந்து செய்வதற்கு நைட்ரிக் ஆஸிட் என்னும் அக்னி திராவகம் வேண்டியது அவசியமென்றும், நைட்ரிக் ஆஸிட் செய்வதற்கு சிலி என்னும் தேசத்திலிருந்து கிடைக்கும் நைட்ரேட்டுகள்வேண்டுமென்றும், இங்கிலீஷார் அதை ஜெர்மனிக்குப் போகாமல் தடுத்துவிட்டதால் ஜெர்மானியர்களுக்குக் கஷ்டமேற்படுமென்றும் சொல்லப்படுவதாக சென்ற வருஷம் அக்டோபர் மாசத்து 'ஜனோபிமானி'யில் எழுதியிருந்தோம். இப்போது ஜெர்மானியர்கள் ஆகாயத்திலிருந்து நைட்ரிக் ஆஸிட் தயார்செய்ய முயற்சி செய்வதாகச் சொல்லப்படுகிறது.

**ஜர்மனியரின் மோட்டர் பிளவ் என்னும்ஏர்.**

இந்த ஏரினால் ஜர்மனியர் யுத்தகளத்தின் அரண்களை வெகு லேசாகவும் சீக்கிரமாகவும் வெட்டி முடிக்கின்றனராம் ஒரு நிமிஷத்துக்குள் மூன்றடி அகலமும் மூன்றடி ஆழமும் தோண்டக்கூடியவை விசையை சரியாய் முடுக்கிவிட்டால் மணியொன்றுக்கு 100 கஜம் வெட்டுவதல்லாமல் வெட்டின மண்ணை எல்லாம் ஒரு பக்கத்தில் குவித்து விடுகின்றனவாம். இது 200 ஆட்கள்கூடி செய்யப்பட்ட வேலை யவ்வளவு செய்கின்றன. சென்ற செப்டம்பர் மாதத்திலிருந்து இவ்வித கருவிகளில் 15-வரையில் ஜர்மானியரிடத்திலிருந்து பிரான்ஞ்சுகாரர் கைப்பற்றிக் கொண்டனராம்.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**நாகப்பாம்பும் பூனையும்**-வங்காள மாகாணத்தைச் சேர்ந்த லஹேரிபாசரெய் என்னுமிடத்தில் ஒரு விசித்ரமான சம்பவம் நேர்ந்தது அவ்விடத்தில் வசித்து வரும் ஜில்லா ஸ்கூல் தலைமை உபாத்தியாயரானமிஸ்டர் ஜே வி. முஜும்தார் என்பவரது கிரஹத்தில் சில தினங்களுக்கு முன் ஓர் இரவில் அவரது குழந்தை இருந்தாபோலக் கூக்குரல் போடவே வீட்டிலுள்ளோர் குழந்தையிருந்த விடத்திற்கு ஓடினார்கள். அப்போது அவ்வீட்டு தாழ்வாரத்தைச் சேர்ந்த ஒரு சிறிய சந்தில் 5-அடி நீள முள்ள ஒரு நாகப்பாம்பு படமெடுத்து மிக்க ஆக்ரோஷத்துடன் நிலத்திலடித்துக்கொண்டிருந்தது அதற்குக் கொஞ்சதூரத்தில் ஒரு பூனை அப்பாம்பு தப்பிவித்துப் போகாவண்ணம் தனது பஞ்சாக்களினால் நிலத்தை அடித்துக் கொண்டிருந்தது ஓடிவந்த அவ்வீட்டிலுள்ளோர் பாம்பைக் கண்ணுற்று அதைக் கொன்று விட்டார்கள் அப்பாம்பு கொல்லப்படும் வரையில் பூனை சற்றேனும் அவ்விடத்தை விட்டு அசையவில்லை பூனையின் புத்திக்கூர்மையைப் பற்றி எவர் தான் புகழாமலிருக்க மாட்டார்கள்.

**ஹைதராபாத் நைஜாம் அவர்களின் உதாரத்துவம்**-லாஹூரில் "பெய்ஸர் அக்பர்" என்ற நாம தேயத்துடன் உர்டு பாஷையில் பிரசுரம் செய்யப்படும் தினப்பதிவு பத்திராதிபரான முனஷி மாஹபு பாலம் என்பவருக்கு நைஜாம் அவர்கள் ஒரு மாதத்திற்கு ரூபா 225 வீதம் உபகாரச் சம்பளம் சாங்கிஷன் செய்திருக்கிறார்.



வங்காள மாகாணத்திலுள்ள கூச்பிஹார் சமஸ்தானத்தைச் சேர்ந்த இளவரசான விக்டர் நாராயண என்பவர் தமது தேசத்தில் புகையிலை சாகுபடியை விருத்தி செய்யும் நோக்கத்துடன், மற்ற இடங்களில் எவ்வாறு சாஸ்திர முறைப்படி புகையிலை சாகுபடி செய்யப்படுகிறதென்று கண்டறிவதற்காக அமெரிக்கா, மாஸிடோனியா, ஆசியாத்துருக்கி முதலிய இடங்களைச் சுற்றிப்பார்த்து வந்திருக்கிறார். இந்த நோக்கத்துடன் வெளி நாடுகளுக்குப் போய் முதன் முதல் சற்றுப் பிரயாணம் செய்த இளவரசர் இவர்தான். இவர் "புகையிலை சாகுபடி" என்பதைப்பற்றி ஒரு சிறிய புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்.

**வில்லிபுத்தூர் வாழ்ந்தகாலம்**-தமிழ் மகாபாரதத்துக்கு ஆசிரியரான வில்லிபுத்தூரார் எந்தகாலத்தில் ஜீவித்தாரென்று தியாஸபிஸட் (Theosophist) என்ற மாதாந்தப் பத்திரிகை மிஸ்டர். வி. ரங்காச்சாரி M. A. பரிசீலனை செய்து எழுதுகிறார். அந்தப் பேர்போன பிராமணக்கவி 1350-ம் வருஷம் முதல் 1430-ம் வருஷத்திற் குள்ளாக வசித்திருக்க வேண்டுமென்றும், இரட்டையார், அருணகிரிநாதர். காளமேகப் புலவர் இவர்கள் காலத்தில் வசித்திருக்க வேண்டுமென்றும் முடிக்கிறார்.

**தாசிக்குச் சாதியில்லாமலில்லை.**

தென்தேசத்தில் ஒரு நாட்டுக்கோட்டைசெட்டி ஒரு தாசியை வைத்திருந்து அவளுக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்தது செட்டியார் சில லக்ஷங்களுக்கு அதிகாரியா யிருந்தவிறந்துபோனார் அவருடைய குடும்பசொத்தில் தனக்கும் பாகம் கொடுக்கவேணு மென்று அவருடைய மகன் பேரில் தாசிபுத்திரன் தாவா தொடுத்ததில் சப்ஜட்ஜு தந்தைவழி யேற்படவில்லையென்று கேஸைத் தள்ளிவிட்டார் ஹைகோர்ட் அப்பீலுக்கு வந்ததில் கனம் ஜஸ்டிஸ் சேஷகிரியய்யர் தாசிக்குச் சாதியாயில்லையென்றும் அவள் சட்டத்தில் சொல்லுவதுபோல் கலியாண மாகாதவளாகமாட்டா ளென்றும் அபிப்பிராயப்பட்டார். சீப் ஜஸ்டிஸ் எயிலிங் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யர் மூன்றுபேரும் தாசி பிராமணர் வீடுகளில் முதலாய் பிரவேசிக்க சுதந்தரமுடையவளா யிருப்பதால் இந்துக்களில் ஏற்பட்டிருக்கும் 4-ஜாதிகளில் கடைசியாகிய சூத்திர ஜாதியைச் சேர்ந்தவ ளென்றும் கலியாண மாகாதவ ளென்பதற்கு அர்த்தம் பிள்ளையின் தகப்பனுக்கு விவாகஞ் செய்யப்பட்டவளல்ல வென்பதுதான் என்றும் இந்த காரணத்தால் தாசி புத்திரன் சட்டப்படி குடும்பசொத்துக்குப் பாத்திய முள்ளவ னென்றுந் தீர்மானிக்கப்பட்டது.

சென்னையில் மத்தியானம் 12-மணி அடிக்கையில் மற்றதேசங்களில் என்ன மணி?

| | | ம. | நி. |
|---|---|---|---|
| ஆதென்பட்டணத்தில் | முற்பகல் | 9 | 39 |
| பெர்லீன் | முற்பகல் | 7 | 33 |
| பம்பாய் | முற்பகல் | 11 | 31 |
| கல்குத்தா | பிற்பகல் | 12 | 33 |
| கிறிஸ்தியானியா | முற்பகல் | 7 | 22 |
| கொப்பனகன் | முற்பகல் | 7 | 29 |
| எருசலேம் | முற்பகல் | 8 | 14 |
| லண்டன் | முற்பகல் | 6 | 29 |
| மெல்போான் | பிற்பகல் | 4 | 19 |
| மூனிக் | முற்பகல் | 7 | 25 |
| நியூயோர்க் | பிற்பகல் | 11 | 25 |
| பாரிஸ் | முற்பகல் | 6 | 38 |
| ரோமாபுரி | முற்பகல் | 7 | 19 |
| பீத்தர்புரி | முற்பகல் | 8 | 43 |
| சிங்கப்பூர் | முற்பகல் | 1 | 34 |

டியு ஆந்திபேக் என்ற பூசந்தியிலே காலையிலே வெண்மையாயும் மத்தியானத்திலே சிவப்பும் இரவிலே நீலமுமா யிருக்கிற ஒரு பூ பூக்கிறதாம் மத்தியானத்தில் மட்டும் அதற்குமணமுண்டு.

**செடிகளும், மருந்துத் திராவகங்களும்.**

செடிகளுக்கு மனிதனைப்போலவே தனது தசை நார்க்கூட்டம் உண்டாம், மனிதனுடைய ஹிருதயம் எந்த மருந்தினால் மாறுதல் அடைகின்றதோ அதே மருந்தினால் செடிகளின் ஹிருதயமும் மாறுதல் அடையுமென்றும், அந்த ஹிருதய ஓட்டத்தை விஷப்பிரயோகத்தால் நிறுத்தி, மாற்று மருந்தால் மறுபடியும் ஓடச்செய்யக்கூடு மென்றும் சாஸ்திர நிபுணராகிய ஜே. ஸி. போஸ் என்பவர் லண்டன்மாநகரில் காட்டினராம்.

**ஒரு அதிசயம்.**

இங்கிலாந்தில் ஒரு தொழிலாளி ஒரு நிலக்கரித்துண்டை உடைத்தார், உடனே அவற்றுள்ளிருந்து ஒரு சிறிய கருந்தவளை வெளியே ஓடிவந்தது! அதன் கண்ணைச் சுற்றியும் வாயைச் சுற்றியும் பொன்னிறமான அழகிய வர்ணங்கள் இருக்கின்றன. இது எவ்வாறு இத்தனை காலம் ஆகாரமும் காற்று மில்லாமல்

உயிரோடிருந்தது என்று ஷெ தொழிலாளி பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார். ஆனால் இது பெரிய அதிசயமல்ல. கல்லினுள் தேரையும், முட்டையில் உயிரும். மா வயிரத்துள் நாகப் பாம்பும் ஆகாரமின்றி உயிரோடு வாழ்கின்றன இனி எரிமலைக்குள்ளும் சில உயிர்கள் இருக்கின்றன! இவையெல்லாம் அதிசயங்கள்.

பார்வைக்குத் தெரியாத ஒரு ஜாதியார்- ஆப்பிரிக்காவின் மேற்கு பாகத்தில் காங்கோ என்று ஒரு ப்ரதேசமிருக்கிறது. அதன் ஒரு பாகம்பெல்ஜியத்துக்கு சொந்தமானது அதில் இட்டுரி என்று ஒரு ப்ரதேசமிருக்கிறது அந்த ப்ரதேசத்தை ஐரோப்பியர் ஒருவரும் போய்ப் பார்த்ததில்லை. சென்ற மூன்றுவருஷங்களாக காதகோப்ரதேசத்தின் நிலைமையைஆராய்ச்சி செய்யப்போயிருந்த டாக்டர் க்ரிஸ்டி என்பவர் இட்டூரி என்னும் ப்ரதேசத்தில் ஒரு பூர்வீக ஜாதியாரைக் கண்டாராம். அவர்கள் நிர்வாணிகளாம் அவர்கள் தங்கள் தேகத்தில் பற்பல சமந்தமான சிவப்பு வர்ணங்களைக் கோடுகளாக பூசிக்கொண் டிருக்கிறார்களாம் இதனால் அவர்கள் அன்யர்களுடைய கண்ணுக்குத் தென்படுவ தில்லையாம். அவர்கள் காடுகளில் மிருகங்களை வலைபோட்டுப் பிடித்து ஜீவிக்கிறார்களாம். அவர்கள் அன்யர்களைக் கண்டால் ஒடி ஒளிக்கிறார்களாம்.

மூன்று மாதங்களுக்கு முன் விஜயநகரத்தில் ஒரு சாது 2-அடி நிகளம் 2-அடி யகலம் 4-அடி ஆழத்தில் ஒரு குழிவெட்டச்செய்து அதில் தீவளர்த்தி இரவு 9-மணிக்கு அதில் அவர் குதித்தார் கழுத்துவரையில் மண்ணால் மூடப்பட்டது பிறகு பலகைகளில் மூடி காற்று பிரவேசியாமல் மண்ணால் மூடி 15-20 வண்டி விறகுகளை யதின்மேல் 12-மணி வரையில் கொளுத்தப்பட்டது. இதைவேடிக்கைபார்த்த ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவர் செத்திருப்பாரென்று நினைத்தார்கள் ஆனால் அவர் சாகாமல் தெளிவான முகத்தோடுஞ் சுத்தமான வுடையோடும் வெளியே வந்து எல்லோரையும்ஆசீர்வதித்தா ரென்று அப்துல் கபூரென்பவர் நியு இந்தியாவுக்கு எழுதியிருக்கிறார்.

**பெங்களூரில் ஒரு ஸ்திரீ மகாத்துமா.**

வட சர்க்கார் ஜில்லாக்களைச் சேர்ந்த 30-வயதுள்ள ஒரு ஹிந்து ஸ்திரீபெங்களூருக்குவந்து கண்டோன்மெண்டில் தங்கிவருகிறார். சில வியாதிகளைச் சௌக்கியப்படுத்தும் சக்தியும் இனி நடக்கப்போகும் விஷயங்களைச் சொல்லும் சக்தியும் அந்த ஸ்திரீயினிடம் இருக்கிறதினால் ஜனங்கள் அந்த அம்மாளை மதித்து வருகிறார்கள். இந்தியர்கள் அன்றி ஐரோப்பியர்களுங்கூட அந்த ஸ்திரீயினிடம் சென்று தமது குறைகளை வெளியிடுகிறார்கள். அந்த ஸ்திரீ அன்ன பானுதிகளை எடுத்துக்கொள்ளுகிற தில்லை. பிராணாயாமத்தில் சமர்த்தர். 10000 பேருக்கு போஜனம்செய்விக்கவேண்டுமென்பது அவருடைய முக்கியகருத்து. அந்த ஸ்திரீ இரண்டொரு நாட்களில்திருப்பதிக்குப் போய் மறுபடியும் பெங்களூருக்குத் திரும்பி வந்து அங்கே இரண்டு வாரம் வரையிலும் தங்கியிருப்பார்.

ஜலஸ்தம்பனம்.—மதுரையிலுள்ளமீனாக்ஷி சுந்தரேச்வரர் கோயில் பொற்றாமரைக் குளத்தில் இந்த மாசம் 20உ ஞாயிற்றுக்கிழமையன்று மாலை $4\frac{1}{2}$-மணிக்கு ஓர்ஸந்யாஸி தண்ணீரில் நடந்து சென்று நடுமத்தியில் படுத்துக்கொண்டு தேவாரம் திருவாசகம் முதலிய பாடல்களும் சில சுலோகங்களும் கேட்டோர் மனம் பரவசமாகும்படி சொல்லிவிட்டு எழுந்து முன்போல் நடந்து கரையேறி வெளியே சென்றாராம். அந்த அதிசயத்தைப் பார்க்கக் கணக்கில்லாத ஜனங்கள் வந்திருந்தார்களாம்.

**லார்டு கார்மிகேலுக்கு ஒரு இந்தியப்பட்டம்**

வங்காள கவர்னராகிய லார்ட் கார்மிகேல் சமீபத்தில் வங்காளத்திலுள்ள நவத்வீபத்துக்குச் சுற்றுப்ப்ரயாணம் போயிருந்த பொழுது அவ்வூர்ப் பண்டிதர்கள் அவருக்கு 'நீதிரஞ்சன்' என்ற பட்டத்தை யளித்தார்கள்: முதல் தடவையாக இப்போதுதான் அவர்கள் ஒரு மாகாண கவர்னருக்குப் பட்டமளித் திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பட்டங்களைப் பெறுதற்குரியவர்களா யிருப்போருக்கன்றி மற்றவர்களுக்கு கொடுப்பதில்லையாம

வைஸ்ராயின் உத்தியோககாலம்—வைஸ்ராயின் உத்தியோககாலம் நவம்பர்மாசத்தோடு முடிந்து போகிறது அரசர் அவருடைய உத்யோககாலத்தை வருகிற மார்ச்சுமாசம் வரையில் அதிகப்படுத்தி யிருக்கிறார்.



சந்திரகுப்தன்:—அடா! சேவகா!

சேவகன்:—மகராஜ்!

சந்திரகுப்தன்:—சீக்கிரமாகப்போய் நந்தன் இருக்கிறானே அவனை இந்தக்ஷணமே அழைத்துக்கொண்டுவா.

சேவகன்:—சித்தம். மகராஜ்! (சேவகன் போதல்)

இந்துமுகி:—அவனுக்கேது பணம்? அவன் தான் திரிகிறானே நாயைப்போல் ஊரெல்லாம்! நீங்கள் பணம்கொடுத்து அவன் வாங்கிக்கொடுத்தானோ என்னவோ? பேருக்கு அவன் வாங்கினதாக இருக்க அப்படிச் செய்தீர்களோ?

சந்திரகுப்தன்:—எனக்கு ஒன்றுமே தெரியாதே!

இந்துமுகி:—அதை எல்லாம் என்னத்திற்கு சொல்லுகிறது? உங்களுக்கு பட்சம் என்னவோ அவ்விடத்தில்தான்.

சந்திரகுப்தன்:—நீ என்னசொல்லுகிறாயோ சொல். நான் வாங்கிக் கொடுத்திருந்தால் தானே எனக்கு மனதில் தைக்கும். பள்ளமுள்ள இடத்தில் தண்ணீர் நிற்கிறது. எனக்கு மனசாக்ஷி விரோதமாயில்லை. அவ்வளவுதான் ஒருவன் பார்க்கக் கூடும்.

இந்துமுகி:—எல்லாருந்தான் அப்படிச் சொல்லுகிறார்கள். திருடன் திருடனென்பனா? விபசாரி விபசாரி என்பளா? அவனும் சொல்லான். இவளும் சொல்லாள். நீங்கள் சொன்ன பிரகாரம் பள்ளமுள்ளயிடத்தில் தண்ணீர் நிற்கிறது.

சந்திரகுப்தன்:— அப்படிக்கெல்லாம் நினைக்காதே. அடி! என்கண்மணி! வித்தியாசம் ஒன்றுமிராது.

இந்துமுகி:—வித்தியாசமில்லையா? எவ்வளவோ வித்தியாசந்தான். காந்தாளும், அவள் பிள்ளையும் ஒருமாதிரிதான். நானும் என் பிள்ளைகளும் ஒரு மாதிரிதான். நடவடிக்கையிலே தெரிகிறது எல்லாம்.

சந்திரகுப்தன்:—எதையாவது சொல்.

இந்துமுகி:— எதைச்சொன்னால் என்ன? நீங்கள் நடக்கிறது நடக்கிறது தான்.

சந்திரகுப்தன்:—(நந்தன்வர) அடா! நந்தா! உன் தாயாருக்கு சேலை வாங்கிக் கொடுத்தாயா?

நந்தன்:—ஆம் நீங்கள்தான் வாங்கிக் கொடுக்க வில்லையே! நானாவது வாங்கிக்கொடுக்க வேண்டாமா?

சந்திரகுப்தன்:— பணம் கொடுத்து விட்டாயோ?

நந்தன்:—ஆறுமாதகடனுக்கு வாங்கிக்கொடுத்தேன்.

சந்திரகுப்தன்:—அவனுக்கு பணம் எப்படிகொடுப்பாய்?

நந்தன்:—என்ன! அப்பா! அதுதானா பிரமாதம்? நான் வாங்கிவிட்டேன். நான் கொடுக்கிறேனென்று என்ன சாக்ஷி? அப்பா! நீர் ராஜ்ய பாரம் செய்கிறீரே! உம்முடையது தானா இராஜ்யம்? இன்னொருவர் ராஜாவாகவந்தால் உமது ராஜ்ய பாரம் என்னவாய்முடியும்? நீரும் நானும் சதமா? நானே இல்லாமல் போகலாம். அல்லது நீரே இல்லாமற்போகலாம் நானே ஒருவேளை ராஜனாக ஆகலாம். அப்போது பணத்தைக்கொடுத்துவிட மாட்டேனா? சேலை வியாபாரி இல்லாமல் போகலாம் அப்பொழுது எங்ஙனம் என்னிடத்தில் அவன் வாங்குவான். நான்தான் அவனுக்கு எப்படிகொடுக்க சாத்தியப்படும்? மறுபிறப்பென்றால் அதை யார் கண்டது? பார்த்துக்கொள்வோம். அப்பா! ஒரு காரியம். இப்போது பொக்கிஷத்தில் பணமில்லை என்றீராமே. இராஜ்யத்தை சுவல்ப காலத்திற்கு ஒப்புவியும்என்னிடத்தில். நான் ராஜ்யபாரம்செய்கிறமாதிரியைப்பாரும்

இந்துமுகி:—(அரசனைநோக்கி) எவ்வளவு இடம் கொடுக்காமல் இவ்வளவு பேச்சுவரும்? என் பிள்ளைகள் என்றால் ஒருமாதிரிதான் அவள் பிள்ளை என்றால் ஒரு மாதிரிதான்.

சந்திரகுப்தன்:—வேறு பேச்செல்லாம் ஏன் பேசுகிறாய்? நான்சேலைவாங்கிக் கொடுக்க வில்லை என்று தெரிந்துகொண்டாயோ இல்லையோ? அவ்வளவோடு விடு. (நந்தனைப்பார்த்து) போய் இராஜகாரிய மந்திராலோசனை மண்டபத்திலிரு. (சேவகனைவிளித்து) சேவகா! நமது மந்திரியை அரைமணிக்குள்ளாக இவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டுவா. பிறகு சற்று விளம்பரம் அவரிடம் பெற்று மந்திராலோசனை அங்கத்தினரை அழைப்பிக்க வேண்டும். சீக்கிரம் போய்வா.

சேவகன்:—மகராஜ் ஆக்ஞைப்படியே.

இரண்டாம் அங்கம். இரண்டாம் களம்.

முற்றிற்று.

---

இரண்டாம் அங்கம். மூன்றாம் களம்.

இடம்:—அரண்மனையில் மண்டபம் காலம்—மாலை.

நடர்.—சந்திரகுப்தன் நந்தன் மந்திரி ஆலோசனைச் சபை அங்கத்தினர்.

சந்திரகுப்தன்:—ஆலோசனை அங்கத்தின் ஐயன்மீர்! இன்று ஆலோசனைசபை கூட்டியதின் விஷயத்தைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். நமக்கோ திரேகமும் அசௌக்கியமா யிருக்கிறது. வயதும் ஆய்விட்டது. அரசர்கடமை பிரஜைகளின் நலத்தைக்கோரல். நமக்குள குமாரில் ஒருவரும் இராஜகாரியம் தாங்கற்குரியர் அல்லர். (தொடரும்)

கா. கந்தசாமி ஆச்சாரி,
ரிவினியு போர்ட் ஆபீஸ் கிளார்க்கு.

---



நம் அபிமானக் குமாரன் நந்தன் ஒருவாறு இராஜதந்திரங்கள் அறிந்தவன் போல் காணப்படுகிறான். சிறிதுகாலம் அவன்தோளின்மேல் பூபாரத்தைச் சுமத்தினால் அவன் இராஜரீகத்திற்கு யோக்கியதை யுள்ளவனென்றும் அல்லனென்றும் தெரிதல்கூடும். காரியம் எண்ணியபோது முடித்தலே தகுதி. காலம் தாழ்ந்தால் காரியம் கெடும். ஆகையால் நீங்கள் இதை ஆலோசியுங்கள்.

மந்திரி:—மகராஜ்! இச்சபை கூட்டுவதற்குரிய சட்டத்தில் சபை அங்கத்தினர் மாத்திரம்தான் இருக்கலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை தங்கள் கவனத்திற்கு கொண்டுவந்தேன். ஆக்ஞை கடந்து சொன்னதாக கருதக்கூடாது.

சந்திரகுப்தன்:—எனக்கு மிகுந்த கவலையினால் ஒன்றும் தோன்றவில்லை. விவரித்துச் சொல்லவேண்டும்.

முதல் அங்கத்தினர்:—ஓர் விஷயம் யோசிக்கும்போது அவ்விஷயத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறவர்கள் கூட ஆலோசனை சபையின் அங்கத்தினரா யில்லாவிட்டால் அச்சபையிலிருக்கக்கூடாது.

இரண்டாவது அங்கத்தினர்:—ஆம் மகராஜ்! உங்கள் குமாரர் நந்தர் கூட்டத்திலிருக்கக்கூடாது.

சந்திரகுப்தன்:— ஐயன்மீர்! அவனை இங்குவருவித்த தேதற் கெனின், நீங்கள் எல்லாரும் அவனைபார்வையில் யோக்யதையுள்ளவனாக யிருக்கிறானா என்று நிர்ணயிப்பீர்கள் என்றே.

மூன்றாவது அங்கத்தினர்:—ஆனால்சரி. சற்றுநின்று அகலட்டும் (நந்தன் சற்றுநின்று செல்ல)

சந்திரகுப்தன்:—அரசர்க்குரிய பெருமிதஇயற்கை உளதைக்கண்டீரோ?

மந்திரி:—ஆ! ஆ! கண்டேன்.

முதல் அங்கத்தினர்:—இயற்கையால் யோக்கியர்தான்.

இரண்டாவது அங்கத்தினர்:—குணத்தால் யோக்கியர் என எவ்வாறு அறிகல்?

மூன்றாவது அங்கத்தினர்:—ஒருவர் குணத்தை அவரது சிநேகர்களைக் கொண்டு நிர்ணயிக்கவேண்டும்.

நான்காவது அங்கத்தினர்.—இவர் இளம் பிராயம் முதல் நான் அறிவேன். இவர் சிநேகிதர்களெல்லாம் மிகவும் யோக்கியர்கள். தாய்தந்தையர் சொற்கடவாதவர்கள். நல்லொழுக்கமுடையவர். துர்ப்பழக்கங்களில்லாதவர். ஜீவகாருண்ய முள்ளவர்கள், தெய்வபக்தி யுள்ளவர்கள். ஆகையால் எனக்குத் தெரிந்தவரையில் நல்லொழுக்க முடையவர்தான். அதில் சந்தேகமில்லை.

ஐந்தாவது அங்கத்தினர்:—நான்காவது அங்கத்தினர் வாசாவினால் பூபாரம்தாங்க யோக்யதையுடையவர் என்றே தெரிகிறது. ஆனால் ஜனங்கள் மனோபாவத்தை அறியவேண்டும்.

ஆறாவது அங்கத்தினர்:—அதை எப்படி அறிகிறது?

ஏழாவது அங்கத்தினர்:—அந்த வேலை இப்பொழுது வேண்டாம். இப்போது நாம் சுவல்ப காலத்திற்குத்தானே இராஜ்யத்தை ஒப்புவிக்கப்போகிறோம். ஜனங்கள் அபிப்பிராயத்தை எதற்கு தெரிந்து கொள்ளவேண்டும்? ஜனங்களுக்கு எப்பொழுதும் மடமை அதிகம். புத்திகூர்மை கிடையாது. ஒருவழிப்பட்ட அபிப்பிராயத்தை தெரிவிக்கார்கள். ஏகோபித்த அபிப்பிராயத்தை அவர்களிடத்தில் கண்டால் கடினம் அபிப்பிராயத்தில் மாறுபட்டு நெல்லிக்காய் மூட்டையைப்போல் இருப்பார்கள். அவர்கள் அபிப்பிராயத்தை இப்போது கோரினால் காரிய விருத்தமே உண்டாகும் ஆகையால் இராஜாங்க உத்திரவின்மேல் நந்தர் சுவல்பகாலத்திற்கு ஆக்ஞா சக்கரத்தை உருட்டட்டும். இஃதெப்படியும் ஜனங்களுக்குத் தெரியும் அவர்களைவிழித்துக்கொண்டு இராஜாங்கவிஷயத்தை ஆலோசிப்பார்கள். தாங்களே தெரியப்படுத்துவார்கள். நாம் வேண்டுவது அவசிய மில்லை.

சந்திரகுப்தன்:—விஷயம் என்ன தேறு கடையையடைந்தது?

மந்திரி:—மகாராஜ்! இப்பொழுது அபிப்பிராய ஒற்றுமை சங்கியை எடுப்போம்.

சந்திரகுப்தன்:—சரி ஐயன்மீர்! நந்தன் சுவல்பகாலத்திற்கு ஆக்ஞா சக்கரம் உருட்டும் விஷயத்திற்கு சம்மதத்தை தெரிவிக்க கரங்களைத்தூக்குங்கள்.

மந்திரி:— அனுகூல அபிப்பிராயத்தினர் எழுவர்.

இராஜகுப்தன்:—நந்தனது சுவல்பகால இராஜரீகத்திற்கு விரோத அபிப்பிராயத்தினர் எல்லோரும் கரங்களைத் தூக்குங்கள்.

மந்திரி:—பிரதிகூல அபிப்பிராயத்தினர் மூவர்.

சந்திரகுப்தன்:—எழுவர்க்கு மூவர் விரோத அபிப்பிராயத்தினர். அக்கிராசன அபிப்பிராயம் அநுகூலமாயிருந்தாலும் பிரதிகூலமாயிருந்தாலும் அநுகூல அபிப்பிராயத்தினர் என் அதிகமாயிருக்கிறது.

மந்திரி:— ஆம். நந்தர் இராஜரீகம் வகிக்கலாம்.

சந்திரகுப்தன்:—இராஜாங்க உத்திரவைபிறப்புவியும்.

மந்திரி:—(இராஜாங்க சந்தது எழுதல்)

ஒவ்வொருவராய்ப் பாருங்கள். (காட்டல்)

அங்கத்தினர் எல்லோரும்:—சரியாயிருக்கிறது. கையொப்பமிட்டு நந்தருக்கு அனுப்புங்கள்.

மந்திரி:—(கையொப்பமிடல்) சேவகா! இதைகொண்டுபோய் சமஸ்தான குருவினிடம் கொடுத்து முறைமைப்படி நந்தரிடம் சேர்க்கச்சொல்.

சந்திரகுப்தன்:—காரியம் ஆயிற்றோ?

மந்திரி:—ஆகா! ஆயிற்று.



சந்திரகுப்தன்:— சரி. இன்று சபைகலையட்டும். எல்லோருக்கும் வந்தனம்.

இரண்டாம் அங்கம். மூன்றும் களம்.

முற்றிற்று.

---

**இரண்டாம் அங்கம். நான்காம் களம்.**

இடம்:—பாடலிபுர ஜனசமூகம் ஆலோசனை மண்டபம் காலம்—காலை.

**நடர்.—ஜனசமூகப் பிரதிநிதிகள் கூட்டம்.**

அக்கிராசனாதிபதி:—கௌரவம் பொருந்திய பிரதிநிதிகாள்! நீங்கள் இராஜாங்க தற்கால நிலைமையைப்பற்றி யோசிக்க சேர்ந்திருக்கிறீர்கள். எந்த விஷயத்தைப் பற்றி யோசிக்கக்கூடியதோ அவ்விஷயம உங்களில் அநேகருக்கு தெரிந்திருக்கலாம், சிலருக்கு தெரியாமலிருக்கலாம். தெரியாதவர்களுக்கும் தெரிந்தவர்களுக்கும் விஷயம் விவரமாய் தெரியும் பொருட்டு சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். சிறிது காலத்திற்குமுன் மந்திராலோசனை சபையை இராஜா அவர்கள் கூட்டினரோ அது உங்களுக்கெல்லாம் தெரியும் என்று எண்ணுகிறேன். எவ்விஷயத்திற் கெனில் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். நமது அரசர் திரேக அசௌக்கியமா யிருக்கிறதும் வயது ஆனதும் உங்களுக்குத் தெரியுமே?

பிரதிநிதிகள்:—தெரியும். தெரியும்.

அக்கிராசனாதிபதி:—அவருக்கு இரண்டு குமாரர்கள் இருக்கிறார்களே!

பிரதிநிதிகள்:—ஆம். ஆம்.

அக்கிராசனாதிபதி:—அவர்கள் நடவடிக்கை சரியாயில்லை யென்று தெரியுமே?

பிரதிநிதிகள்:—தெரியும். தெரியும்.

அக்கிராசனாதிபதி:—அவர்களுக்கு இராஜாங்கத்தை நடத்த போதிய சக்தியில்லை அல்லவா?

பிரதிநிதிகள்:—இல்லாதிருக்கலாம். அது எப்படி உண்மையாய்த் தெரியும்.

அக்கிராசனாதிபதி:—அவர்கள் நடக்கையினாலும் பார்வையினாலும் அநுமானிக்கலாமல்லவா.

பிரதிநிதிகள்:—அநுமானிக்கலாம். அஃது எப்படி உண்மையாகும்?

அக்கிராசனாதிபதி:—ஏறக்குறைய உண்மையறியக் கூடாதா?

பிரதிநிதிகள்:—உம். அப்புறம்.

அக்கிராசனாதிபதி:—அவசரப்படாதேயுங்கள். சாவதானமாய்க் கேளுங்கள்.

பிரதிநிதிகள்:—அவசரமில்லை. சாவதானமாய்த் தான் விஷயத்தைத் தெரிந்து கொள்ள ஆவலாகயிருக்கிறோம். முடியுங்கள்.

அக்கிராசனாதிபதி:—அவர்களுக்கு இராஜரீகம் கொடுக்கக் கூடாதாம்.

பிரதிநிதிகள்.—ஆ! ஆ! வேறே யாருக்கு கொடுக்க வேண்டுமாம்?

அக்கிராசனாதிபதி:—பூபாரம் தாங்கவல்லவனுக்கு.

பிரதிநிதிகள்:—பூபாரம் தாங்கவல்லவர் எவரானாலும் கொடுத்துவிடலாமா என்ன?

அக்கிராசனாதிபதி:—யாருக்காகிலும் கொடுத்துவிடுவார்களா? அரசனை சேர்ந்தவர்களுக்குத்தான்.

பிரதிநிதிகள்:—சேர்ந்தவர்கள் இன்னும் யார் இருக்கிறார்கள்?

அக்கிராசனாதிபதி:—உங்களுக்குத் தெரியாது. சொன்னால் தெரியும் உங்களுக்கே.

பிரதிநிதிகள்:—சொல்லுங்கள். சொல்லுங்கள். எங்களுக்கு தெரிந்தபேர்வழியா பார்ப்போம்.

அக்கிராசனாதிபதி:—தெரிந்தபேர்வழிதான்.

பிரதிநிதிகள்:—சொன்னால்தானே சீக்கிரம்!

அக்கிராசனாதிபதி:—இராசகுமாரன் நந்தன் தெரியுமா?

பிரதிநிதிகள்:—நந்தனா? யார்? யார்?

அக்கிராசனாதிபதி:—காந்தாமணி அம்மாள் தெரியுமோ?

பிரதிநிதிகள்:—காந்தாமணி அம்மாள் தெரியும். இராஜாவின் அபிமான ஸ்ரீதானே!

அக்கிராசனாதிபதி:—ஆம், அந்தம்மாள் குமாரன்தான் நந்தன்.

பிரதிநிதிகள்:—அந்த அம்மாளுக்கு ஒரு ஆண்குழந்தை யிருந்ததே அவன்தானா?

அக்கிராசனாதிபதி:—ஆம். ஆம். அவன்தான்.

பிரதிநிதிகள்:—இராஜரீக பெருமிதப்பார்வை அவனிடத்தில் இருக்கிறதோ?

அக்கிராசனாதிபதி:—மந்திராலோசனை அங்கத்தினர் நேரில் அவனை பார்த்தார்களாம். பார்வையிலும் குணத்திலும் யோக்யதை யுடையவனென்று மதித்தார்களாம்.

பிரதிநிதிகள்:—பிறகு?

அக்கிராசனாதிபதி:—பிறகு என்ன? எல்லாரும் சம்மதித்து இராஜரீகத்தை அவன் வகிக்கலாமென்று இராஜாங்க உத்தரவு எழுதி சமஸ்தான குருவின் மூலமாய் நந்தனுக்கு சேர்ப்பித்தார்களாம்.

பிரதிநிதிகள்:—அதுதானே அன்றைக்கு காந்தாமணி அம்மாள்வீட்டிற்கு சமஸ்தான குருயானைமீது, ஆரோஹணித்து சென்றனர். இராஜாங்க சந்நதைக் கொடுப்பதற்காகத்தானோ? சட்டத்தின்வழிவந்த குமாரர்கள்தானே இராஜரீகம் வகிக்கலாம் மனுநீதியின்படி? சட்டத்தின்வழிதோன்று குமாரன் இராஜரீகம் வகிக்கலாமோ? ஜனசமூகத்தின் அனுமதியையும் சம்மதத்தையும் பெறாமல்தானே இவைகளையெல்லாம் மந்திராலோசனைத் தலைவர்கள் செய்கிறார்கள்? எதற்காகவோ நாம் ஜனசமூக பிரதிநிதிகளாக இருத்தல்? அரசரும் மந்திராலோசனைத் தலைவரும் தங்கள் இஷ்டப்படி காரியங்களை நடத்தவா?

(தொடரும்)

கா. கந்தசாமி ஆசாரி,
ரிவினியு போர்ட் ஆபீஸ் கிளர்க்கு.



அக்கிராசனாதிபதி:—அப்படி அவர்கள் நந்தனை இராஜரீகம் வகிக்கும்படிச் செய்தது சுவல்ப காலத்திற்குத்தானாம். இராஜாங்கத்தை நடத்தவல்லவன்தானா என்று பரிசோதித் தறிவதற் காகவாம். அப்படியானால் ஜனசமூகத்தின் அங்கீகாரத்தை பெறவேண்டியது அவசியமில்லை யென்று சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

பிரதிநிதிகள்:—ஆனால் சரி. ஸ்திரமான ஏற்பாடு ஏதாவது செய்கிறபக்ஷத்தில் ஜனசமூகத்திற்கு தெரியப்படுத்துவோம். அக்கிரமித்து ஏதாவது ஏற்பாடு செய்கிற பக்ஷத்தில் உள்நாட்டுக் கலகந்தான் நடக்கும். இப்போது கலைவோம்.

இரண்டாம் அங்கம். நான்காம் களம்.

முற்றிற்று.

---

இரண்டாம் அங்கம். ஐந்தாம் களம்.

இடம்:—மந்திராலோசனை சபை மண்டபம் காலம—பகல்.

**நடர்:—சந்திரகுப்தன், மந்திரி, மந்திராலோசனை அங்கத்தினர், நந்தன்.**

நந்தன்:—மாட்சிமை தங்கிய மந்திராலோசனை அங்கத்தினர்காள்! உங்கள் தயவினால் இரண்டாவது முறை உங்களை இவ்வாலோசனை சபையில் சந்திக்கும் சந்தோஷத்தை யுடையவனா யிருக்கிறேன். என் தந்தையின் வேண்டுகோளுக்கிணங்கி ஜனங்களின் நன்மைகளைக்கோரி இராஜாங்க திரவிய நிலைமையைக் கருதி இளவரசாக நேமித்து சந்நது எழுதி எனக்கு அனுப்புவித்ததற்கு முன்னமே வந்தனம் அளித்தேனென்றாலும் உங்களுடைய பொதுநோக்க ஆலோசனைத் திறத்திற் காகவும் என் விஷயத்தில் காட்டிய தயவுக்காகவும் எப்பொழுதும் கடன் பட்டுள்ள படியால் இப்பொழுதும் வந்தனம் அளிக்கிறேன். உங்கள் சந்நதை வரவேற்று அதில் விளக்கியுள்ள பூபாரத்தின் உத்திரவாதத்தை மனதிற்கொண்டு ஜனங்களின் சௌக்கியத்தையும் வர்த்தக சௌகரியத்தையும் கருதி எனது சுவல்பகாலத்திற்குரிய அரசாக்ஷியில் அநேக சீர்திருத்தங்கள் செய்தேன். அவைகளை ஒருவாறு இங்கு விவரிக்கிறேன். அநேக பாலங்களையும் பாதைகளையும் மராமத்து செய்வித்தேன். சிற்சில இடங்களில் புதிதாய் செய்வித்தேன். இராக்காலங்களில் நகரங்களில் சஞ்சாரத்திற்கு சௌகரியமாக விளக்கிடச் செய்தேன். விவசாயத்தொழிலை விருத்திசெய்ய ஏரிகளை மராமத்து செய்வித்தேன். வரியை அதிகப்படுத்தவில்லை. பொக்கிஷத்தில் திரவியம் சேரும் பொருட்டு தோற்காசுகளைப் போட்டு சுற்றிவரச் செய்தேன். உங்கள் உத்திரவை ஒருவாறு திருப்தி கரமாக நிறைவேற்றினேன். என் இராஜரீகம் உங்களால் அங்கீகாரத்தை அடைய நிற்கிறது. (அகலல்)

சந்திரகுப்தன்:—ஆலோசனை சபை அங்கத்தினர்காள்! நந்தன் இராஜரீக தந்திரங்களை யுடையவனாக காணப்படுகிறானா? ஜனங்களின் நன்மையைக்கோருகிறவனாக இருக்கிறானா?

மந்திரி:—மகாராஜ்! நந்தர் சுவல்பகால இராஜ்யபாரத்திற்குள் குடிகளுக்கு எவ்வளவோ நன்மைகளை செய்தனர். குடிகளுக்கு கஷ்டமில்லாமலே அரசிறைகொண்டார். பொக்கிஷம் நிறைந்துளது. வர்த்தகம் பலத்து இருக்கிறது. அதிருப்தி என்பது ஒரு சிறிதும் காணப்படவில்லை. மநுமுறையின் இயற்றும் அரசாக்ஷியே! அதற்கோர் ஐயமில்லை. எவ்வளவு சீர்திருத்தம் தேவாலய தர்மங்களில்! எவ்வளவு தர்மம் சத்திர சாவடிகளில்! எவ்வவவு அபிவிர்த்தி கலாசாலைகளில்! எவ்வளவு ஒழுங்கு சித்திர சாலையில்! எவ்வளவு நாகரீகம் நாட்டிய சாலைகளில், எவ்வளவு சௌகரியம் பிரயாணிகளுக்கு! எவ்வளவு துரிதம் சமாசாரப் போக்கில்! நகர்மாக்களின் சந்துஷ்டிக்காக சிங்காரத் தோட்டம் என்ன சொகசு! இராஜாங்க கிஸ்தி வசூல், உப்பு, சில்லரைவசூல் நிலவரி தீர்மானித்தல், இனும், காடு, கல்வி, முனிசிபல், வைத்திய, பொதுக்கட்டிட மியற்றும் இலாக்காக்கள் எவ்வளவு நேர்த்தியாக பிரிவினை செய்யப்பட்டிருக்கிறது. விவசாய நில தஸ்தாவேஜு, நில அளவு, எல்லைப் பிரிவினை, இலாகாக்கள், பூர்வீகசாசன ஆராய்ச்சி, மிருகவைத்திய, மாமூலிகை, உலோக சுரங்க இலாக்காக்கள் எவ்வளவு நூதன ஏற்பாட்டின் கீழ் காணப்படுகிறது. விவசாயவர்த்தக, கைத்தொழில், அபிவிருத்தியின் பொருட்டுள்ள இலாக்காக்களை நடத்தும் முறை என்ன புத்திசாதுர்யம், நந்தரது அறிவானது ஒவ்வொரு இலாகாவிலேயும் ஊடுருவிச்சென்று ஜனசமூகத்திற்கு அதிக சௌக்கியத்தையும் சௌகரியத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது. ஆகையால் நந்தரது பாலனம் மெச்சத் தகுந்ததாய் அங்கீகாரத்திற் குரியதாயிருக்கிறது.

சந்திரகுப்தன்:—என்ன ஆலோசனைசபை அங்கத்தினராகும் ஐயன்மீர் நந்தன் அரசியல் அங்கீகாரத்தை பொருந்துவதற்குளதோ?

முதல் அங்கத்தினர்:—நந்தரது வாசாவினாலேயும் கனம் மந்திரிகள் வாசாவினாலேயும் அவரது பாலனம் அங்கீகாரத்திற் குரியதாகவே இருக்கிறது.

இரண்டாவது அங்கத்தினர்.—நந்தரது வாசாவினாலும் மந்திரியார் வாசாவினாலுமாத்திரம் நந்தரது இராஜரீகம் அங்கீகாரத்தை அடையத்தக்கதாகயிருக்கவில்லை. பிரத்தியக்ஷ நோக்கத்தினாலும் சம்மதத்திற்கு உரியதே. இவரே இராஜரீகத்தை ஸ்திரமாக வகிக்கலாம்.

மூன்றாவது அங்கத்தினர்:—(இரண்டாவது அங்கத்தினரைப் பார்த்து) ஜனங்கள் அங்கீகாரம் செய்வார்களா?

இரண்டாவது அங்கத்தினர்:—நந்தர்தான் ஜனங்களின் நன்மையை முக்கியமாய் கவனித் திருக்கிறாரே!

மூன்றாவது அங்கத்தினர்:—கவனித்திருக்கிறார். ஆனாலும்.

இரண்டாவது அங்கத்தினர்:—ஆனாலும் என்ன? சொல்லுங்கள் சொன்னால் தானே தெரியும்.



மூன்றாவது அங்கத்தினர்:—சடங்கின்வாரா குமரர் ஆயிற்றே!

இரண்டாவது அங்கத்தினர்:—ஆயின் என்ன? இராஜகுமாரர்கள் தான் உபயோகமற்றவர்கள் ஆயிற்றே! அரசரும் நந்தன் பக்ஷமாய்த்தானே இருக்கிறார்!

மூன்றும் அங்கத்தினர்,—இருந்தாலும் ஜனங்கள் அங்கீகாரத்தைப்பெறவேண்டாமா?

இரண்டாம் அங்கத்தினர்:—ஜனங்களுடைய நன்மைகளை ஜனங்களே அறியார்கள். ஜனங்கள் மூடர்கள். குருடர்கள். அறிவென்பது அவர்களுக்கு கிடையாது. பகுத்தறிவு, முன்யோசனை யென்பதே இல்லை. சாந்தம், நிதானம் அவர்க்கில்லது. உண்மையைக் கடைப்பிடித்தல் கடினம். தங்களுக்கு நன்மை செய்கிறவர் இன்னவர் என்று அறியாமலே தடியும் தாம்புமாய்ப் புறப்படுவார்கள். சத்காரியத்திற்கு விருத்தமே செய்வர். ஆகையால் அவர்களைக் கேட்பதில் பிரயோசன மில்லை.

சந்திரகுப்தன்:—என்ன ஆலோசனை ஆயிற்றோ?

இரண்டாம் அங்கத்தினர்:—ஆலோசனை ஒன்றுமில்லை.

நான்காவது அங்கத்தினர்:—ஆலோசனை சபையார்மாத்திரம் அங்கீகாரம் செய்து நந்தருக்கு அரசியலை ஸ்திரப்படுத்தினால் போதுமா என்பதுதான் யோசிக்கப்பட வேண்டியது.

சந்திரகுப்தன்:—இன்னும்யாருடைய அங்கீகாரம் பெறவேண்டும்?

ஐந்தாம் அங்கத்தினர்:—ஜனசமூகத்தின் அங்கீகாரத்தையும் அனுமதியையும் பெற வேண்டாமா?

சந்திரகுப்தன்:—ஜனங்களின் நன்மைக்காகத்தானே நாம் நந்தனுக்கு இராஜ்யபாரம் கொடுக்கவேண்டுவது? அதற்கு அவர்கள் அனுமதி வேண்டுவதேன்?

ஆறாவது அங்கத்தினர்:—சட்டத்திற்கு விரோதமில்லையோ?

மந்திரி:—விரோதமாயினும் தர்மசாஸ்திரத்தையும் ஜனங்களின் சௌக்கியத்தையும், பற்றியது எனின் சட்டத்திற்கு விரோதமாகாது.

சந்திரகுப்தன்.— ஆனால்சரி. ஆனால்சரி இராஜ்யத்தை நந்தன் தோள்மிசைசுமத்துவதற்கு வேண்டிய தஸ்தாவேஜுகள் ஏற்படுத்துவோம்.

மந்திரி:—(எழுதல்) (வாசித்தல்)

இதனால் ஆலோசனை சபையிலுள்ள இராஜா பிரசித்தப்படுத்துவது யாதெனில் நாம் தேக அசௌக்கியத்தினாலேயும் வயோதிகனானமையினாலேயும் பூபாரத்தைச் சுமக்க சக்தியற்றிருப்பதினாலும் நமக்குள் குமாரர்கள் இராஜ்யபரிபாலனம் செய்வதற்கு யோக்யதா பக்ஷக்குறைபாடுள்ளவர்களாய்க் காணப்படுவதினாலேயும் நம் அபிமான குமாரன் ஜனசமூகத்தின் சௌக்கியத்திற்கு அநுகூலமாய் ஆக்ஞாசக்கரத்தை உருட்டுவதில் சாமர்த்தியத்தை காட்டிய

ள்ளபடியாலும், மனுமுறைமைக்கும் சட்டத்திற்கும் விரோதமாயிருப்பினும் தர்மசாஸ்திரத்தையும் பொதுஜன நன்மையையும் பற்றியுள்ளபடியால், நமது நந்தன் இன்றுமுதல் நமது இராஜ்யத்தை பரிபாலனம் செய்யுமாறு உத்தரவு அளிக்கிறோம்.

அங்கத்தினர்காள்! இதை எல்லோரும் பார்வையிடுங்கள். குறைபாடுளதேல் தெரிவியுங்கள் .(ஒருவர் ஒருவராய் விளம்பரத்தைப் பார்த்தல்)

மந்திரி.—சரியாக இருக்கிறதோ?

அங்கத்தினர்:—சரியாக, சரியாக இருக்கிறது. மகாராஜா! கையொப்ப மிடட்டும்.

சந்திரகுப்தன்:—(கையொப்ப மிடல்)

மந்திரி:—(கையொப்பமிடல்) அங்கத்தினர்காள்! கையொப்பமிடுங்கள்.

அங்கத்தினர்.—(கையொப்பமிடல்)

மந்திரி.—மகராஜ்! காரியம்முடிந்தது.

சந்திரகுப்தன்:—சரி. நந்தனை அழையுங்கள்.

சேவகன்:—சித்தம் மகாராஜ்! (ஓடி நந்தனை அழைந்துக்கொண்டு வரல்)

சந்திரகுப்தன்.—நந்தா! என் அன்புள குமாரா! நாமும் மந்திராலோசனை அங்கத்தினரும் உனது இராஜரீக ஆற்றலை யோசித்து உனக்கு இவ்விராஜ்யத்தை ஆளும் சுதந்தரத்தை அளித்தோம். அதற்குள நமது விளம்பரத்தை பெற்றுக்கொள். என்பெயர் உலகத்தில் நிலைக்குமாறும் உனது கீர்த்தி நிலைக்குமாறும் இராஜ்ய பாலனம் செய்து வாழ்ந்துகொண் டிருப்பாயாக. கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக.

நந்தன்.—நமஸ்கரிக்கின்றேன். எந்தாய்! சபை அங்கத்தினர்களுக்கு வந்தனம்.

சந்திரகுப்தன்.—சபை அங்கத்தினர்காள்! பூபாரம், நந்தன் தோள்மேற் கொண்டான். காரியம் முடிந்தது. கலைவோம்.

இரண்டாம் அங்கம். ஐந்தாம்களம்.

முற்றிற்று.

---

மூன்றும் அங்கம். முதற் களம்.

இடம்:—பாடலிபுர ஜனசமூக ஆலோசனை சபாமண்டபம்

காலம்—பகல்.

நடர்.—ஜனசமுகம் ஜனசமூக பிரதிநிதிகள்.

அக்கிராசனாதிபதி:— ஜசமூகப் பிரதிநிதிகாள்! இராஜாங்க ஆலோசனை சபை அங்கத்தினரும் அரசரும் நந்தனை ஸ்திரமாக இராஜாவாக செய்த ஏற்பாட்டைப்பற்றி என்னயோசித்தீர்கள்.

முதல் பிரதிநிதி:—சட்டத்திற்கு முழுவதும் விரோதமானகாரியம் என்றெமதிக்தேன்.

(தொடரும்) கா. கந்தசாமி ஆச்சாரி,
ரிவினியூ போர்ட் ஆபீஸ் கிளர்க்கு.



இரண்டாவது பிரதிநிதி:—இராஜாவின் சடங்கின் வழிவந்த மைந்தர்தானே இராஜரீகம் வகிக்கலாம். அபிமான மனைவிமகனுக்கு இராஜரீக சுதந்தரம் உண்டோ?

மூன்றாவது பிரதிநிதி:—ஜனங்களுக்கு நன்மையைச்செய்யக் கூடியவர்தானே இராஜாவாதல் நல்லது இராஜகுமாரர்கள் அரசாக்ஷிசெய்யும் யோக்கியதையற்றிருக்கிறார்கள். சாமர்த்தியம் அவர்களிடத்தில் இல்லை. நந்தன் ஒருமுறை சாமர்த்தியமாய் அரசாக்ஷிசெய்து காட்டியிருக்கின்றான். ஜனங்களுக்கு எவ்வளவோ சொக்கியத்தையும் சௌகரியத்தையும் உண்டாக்கியிருக்கிறான்.

நான்காவது பிரதிநிதி:—இதுகாரணமாய் இராஜகுமாரர்கள் தங்கள் சுதந்தரத்தை இழக்கவேண்டுமோ? அவர்கள் இந்நன்மைகளை செய்யமாட்டார்களோ இராஜ்யபாரத்தை மேற்கொண்டால்?

மூன்றாவது பிரதிநிதி:— இராஜகுமாரர்கள் நல்ல நடவடிக்கையுள்ளவர்களாகக் காணப்படவில்லையே.

நான்காவது பிரதிநிதி:—ஆதிலால் சுதந்தரத்தை இழப்பார்களோ?

மூன்றாவது பிரதிநிதி:—ஜனங்களுக்கு கஷ்டம் நேரிடும்பக்ஷத்தில்.

நான்காவது பிரதிநிதி:—கஷ்டமுண்டாகுமென்று அவர்களை நிராகரிக்கலாமா?

ஜனசமூக சிறுபாலர்:— (மண்டபத்தின் கதவுகளையும் சாளரங்களையும் உடைத்தல்) பிரதிநிதிகள் கூட்டம் கலைந்து வெளியேவரல்)

நான்காவது பிரதிநிதி:—உங்களுக்கு என்னவேண்டும்.

ஜனசமூக சிறுபாலர்:—எங்களுக்கு இராஜகுமாரர் அரசர்களாக வேண்டும். நீங்கள் எங்களுக்கு தலைவராயிருங்கள். இன்னும் சிலநாட்களில் நந்தரைத்தள்ளிவிட்டு சிம்மாசனத்தில் அரசகுமாரரை ஏற்றப்போகிறோம்.

நான்காவது பிரதிநிதி:—என்னை என்ன செய்ய சொல்லுகிறீர்கள்?

ஜனசமூக சிறுபாலர்:—எங்களுக்கு சேனாதிபதியாருந்து எங்களை யுத்தகளத்திற்கு நடத்தும்.

நான்காவது பிரதிநிதி:—ஜனங்களாகிய உங்களுக்கு ஸ்திரமான புத்தி இராதே. ஒரு கட்டுப்பாடாயிருப்பீர்களாக?

ஜனசமூக சிறுபாலர்:—இருப்போம்! இருப்போம்!

நான்காவது பிரதிநிதி:—எனக்கு என்னவோ நம்பிக்கை இல்லை.

ஜனசமூக சிறுபாலர்:—நம்புங்கள் நம்புங்கள்.

நான்காவது பிரதிநிதி:—ஸ்திரந்தானா?

ஜனசமூக சிறுபாலர்:—ஸ்திரம்! ஸ்திரம்!

நான்காவது பிரதிநிதி:—நீங்கள் வேண்டுவதென்ன?

ஜனசமூக சிறுபாலர்:— அரசர் குமாரர் எங்களுக்கு அரசாகவேண்டும்.

நான்காவது பிரதிநிதி:—சரி, நான் உங்களுக்கு சேனாதிபதியாயிருந்து நடத்துகிறேன். உங்கள் பக்கம் ஜயம் வரவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தியுங்கள்.

ஜனசமூக சிறுபாலர்:—ஆ ஆ பிரார்த்திக்கிறோம்! பிரார்த்திக்கிறோம்.

நான்காவது பிரதிநிதி:—சரி. நீங்கள் எல்லாம் போங்கள். இப்போது, நான் சொல்லுகிற இடத்திற்கு குறித்தகாலத்திற்கு ஹாஜராகுங்கள். நாம் எப்படி காரியங்களை நடத்தவேண்டுமென்று யோசிப்போம்.

ஜனசமூக சிறுபாலர்:—அப்படியே! அப்படியே!

நான்காவது பிரதிநிதி:—நாம் செய்யவேண்டிய காரியங்கள் அநேகமிருக்கின்றன. இதற்குள்ளாக நான் போருக்குவேண்டிய அஸ்திர சஸ்திரங்களை தயார்செய்ய வேண்டும். நீங்கள் போய்வாருங்கள் இப்போது. பரம்பரை சுதந்தரம் ஜயமடைய கடவுளைப் பிரார்த்தியுங்கள். போய்வாருங்கள்.

ஜனசமூக சிறுபாலர்:—போய்வருகிறோம். சேத்தியமேயஜயதி. சத்யமேவஜயதி.

மூன்றும் அங்கம். முதற் களம்.

முற்றிற்று.

---

மூன்றும் அங்கம் இரண்டாம் களம்.

இடம்:—பாடலிபுரத்து மைதானம். காலம்—காலை.

நடர்.—ஜனசமூகத்தின் பெரும்பாலர் நந்தன்.

நந்தன்:—விஸ்வாசமும் பிரியமுமுள்ள ஜனங்களே! உங்களை பறையறைவித்து கூட்டவேண்டும் எண்ணத்தை நிறைவேற்றும்பொருட்டு குறித்தகாலத்தில் இங்கு குழுமி இருந்ததே உங்கள் இராஜவிஸ்வாசத்தைக் காட்டப்போதியதாகும். எக்காலத்திலும் நீங்கள் என்விஷயத்தில் அன்பு பாராட்டியதற்காக அதிக கடன்பட்டிருக்கிறேன். ஓர் இராஜனுக்கு ஏது அதிகதிருப்தியைத் தரத்தக்கதென்றால் ஜனங்கள் அவனது இராஜரீகத்தின் பலன்களை அடைந்து அவனை விஸ்வாசித்தலேயாம். அரசனுக்கு பிரஜைகள் காட்டும் விஸ்வாசமே கடல் மலை காடு, மதில் அகழ் என்றுவரையறுத்துள்ள அரண்களிலும் மேலானது. பிரஜைகளின் விஸ்வாசமே இராஜபலம். அப்படிப்பட்ட விஸ்வாசத்தை காட்டுகிற உங்களில் சிலர் என் இராஜ்யபாரம் வேண்டாமென்று எனக்கு விரோதிகளாயிருப்பதாக கேள்விப்பட்டேன். ஜனங்களாகிய உங்களிடத்தில் பேசுவதற்காகவே இங்கு உங்களை வரவழைத்தேன். நான் சொல்லுவதை சாவதானமாகவும் பொறுமையாகவும் கேட்கவேண்டும்.

ஜனங்கள்:—கேட்கிறோம்! கேட்கிறோம்!

நந்தன்:—என்தந்தை சந்திரகுப்த மகாராஜா ஜனங்களின் நன்மையை முக்கியமாய்க் கோரியவர் என்று உங்களுக்குத் தெரியுமே.

ஜனங்கள்:—தெரியும்! தெரியும்!



நந்தன்:—இப்போது அவர் விருத்தாப்பியத்தை அடைந்ததினால் மந்திராலோசனைத் தலைவர்கள் இராஜீக வல்லபத்தை அறிய எனக்கு இராஜஉத்தியோக சந்நதை பிறப்பித்தார்களே!

ஜனங்கள்:—பிறப்பித்தார்கள் பிறப்பித்தார்கள்!

நந்தன்:—எவ்வளவு காலத்திற்கு?

ஜனங்கள்:—சுவல்பகாலத்திற் கென்றுதான் கேள்வி.

நந்தன்:—அக்காலத்தில் நாம் செய்த நற்காரியங்கள் உங்களுக்குத் தெரியுமே.

ஜனங்கள்:—தெரியும்! தெரியும்! இரவில் தெருவில் விளக்கு எரிகிறதே! குருடன்கூட பார்க்கலாமே!

நந்தன்:—நமது சுவல்பகால இராஜ்யபரிபாலனம் முடிந்ததும் எனது இராஜ்ய நடவடிக்கை விருத்தாந்தை ஆலோசனை சபையில் வாசித்தது உங்களுக்குத் தெரியுமே.

ஜனங்கள்:—அவைகளெல்லாம் "பாடலிபுரவாசி" என்கிற பத்திரிகையில் பார்த்தோம்.

நந்தன்:—பத்திரிகையில் பார்த்தீர்களே! கண்காட்சியாக பார்க்கவில்லையா?

ஜனங்கள்:—பார்த்துக்கொண்டுதான் வருகிறோம்.

நந்தன்:—அவைகளெல்லாம் உங்கள் நன்மைகளுக்காகத்தானே செய்தேன்?

ஜனங்கள்:—ஆம்! ஆம்!

நந்தன்:—பின்பு இராஜா அவர்களாகிய என்தந்தை விளம்பரத்தை பார்த்தீர்களா?

ஜனங்கள்:—பார்த்தோம்! பார்த்தோம்!

நந்தன்:—அதில் இராஜாவின் நல்லெண்ணமும் நமது ஜனாபிமானமும் விளங்கிற்று?

ஜனங்கள்:—விளங்கிற்று! விளங்கிற்று. ஐயனே!

நந்தன்:—விளம்பரம் உங்கள் அங்கிகாரத்தைப் பெற்றதுதானே.

ஜனங்கள்:—பெற்றதுதான்! பெற்றதுதான்!

நந்தன்:—நான் இராஜாவாக இருத்தல் உங்களுக்கு சம்மதந்தானே.

ஜனங்கள்:—சர்வ சம்மதம்! சர்வசம்மதம்!

நந்தன்:—எனக்கு ஒன்றும் இராஜனாக ஆசையில்லை. ஜனங்களுக்கு நன்மை செய்வதற்காகத்தான் நான் ராஜரீகத்தை விரும்புகிறேன். உங்களுக்கு இராஜகுமாரர் இராஜ்யபரிபாலனம் செய்ய வேண்டுமென்றிருந்தால் சொல்லுங்கள். நான் இராஜ்யத்தை அவர்களிடத்தில் ஒப்புவிக்குறேன்.

ஜனங்கள்:—(எல்லோரும் காலால் தரையை உதைத்து) நீங்கள்தான் எங்களுக்கு அரசராகவேண்டும். நீங்கள்தான்! நீங்கள்தான்!

நந்தன்:—மனுநீதிக்கு விரோதமெனக் கருதுவீர்களோ?

ஜனங்கள்:—கருதோம்! கருதோம்! அதற்குபார்த்தால் எங்கள் நன்மைகளைகோருகிறவர்கள் இராஜாவானால் தானே எங்களுக்கு நல்லது.

நந்தன்:—ஆனால் சரி. இனி நடக்கவேண்டிய காரியம் என்ன?

ஜனங்கள்:—என்ன காரியம்?

நந்தன்:—சில ஜனங்கள் நமது ராஜரீகத்திற்கு விரோதமாக அரசர் குமாரர்களை இராஜாவாக ஏற்படுத்தப்போகிறார்களாம். அதற்காக ஜனசமூக பிரதிநிதி ஒருவரை தங்களை சண்டைக்கு நடத்தும்படி சேனைத்தலைவராக தேர்ந்தெடுத்துக் கொண்டார்களாம். அவர் அவர்களை ஓர் குறித்தயிடத்தில் வீரராக பழக்குவிக்கிறாராம். இன்னும் சிலநாள்களுக்குள் யுத்தத்திற்கு ஆரம்பிக்கப்போகிறார்களாம். இவைகளையெல்லாம் நம்ஒற்றர்கள் தெரிந்து சொன்னார்கள்.

ஜனங்கள்:—அப்படியானால் நாங்கள் உங்களுக்கு சகாயம் செய்கிறோம் நாங்களும் ஆயுதபாணிகளாகிறோம். இராஜாங்கத்தில் உள்ள சேனாதிபதிக்கு நாங்கள் உள்ளடங்கி போர்செய்கிறோம். நீங்கள் கவலைப்படவேண்டாம்.

நந்தன்:—சரி, நான் நமது சேனாதிபதியினிடத்தில் சொல்லுகிறேன். அவர் குறிப்பிக்கிற இடத்தில் வீரர்களாய்ப் பழகுங்கள். நீங்கள் எனக்கு இராஜரீகத்தைஸ்திரப்படுத்தி சந்தோஷத்தை விளைவிப்பதற்கு முன்னமே உங்கள் விஸ்வாசமே எனக்கு சந்தோஷத்தையும் உண்டாக்குகிறது. உங்களுக்கு இப்போதே கடன்பட்டிருக்கிறேன்.

ஜனங்கள்:—அப்படி ஒன்றும் நினைக்காதேயுங்கள். இராஜாவினிடத்தில் விஸ்வாசத்தைக் காட்டுவது எங்கள் கடமை. எங்கள் கடமையைத்தான் நாங்கள் செய்கிறோம். அதிகமாய் ஒன்றுமில்லை.

நந்தன்:—அவ்வளவு தான் விஸ்வாசத்தைக் காட்டி உதவிசெய்யவேண்டுமோ. அவ்வளவு தர்மத்தை யோசிக்க வேண்டுமே. தர்மத்தை யோசிக்க எவ்வளவு பொறுமை வேண்டும்.

ஜனங்கள்.—இராஜவிஸ்வாசத்தைக் காட்டாமல் எதற்காக நாங்கள் யிருத்தலோ?

நந்தன்.—உங்களுக்கு தெரிகிறது. மற்றவர்களும் அவர்கள் கடமையை அறிந்தால் தானே தேசபரிபாலனம் செவ்வனே நடக்கும்.

ஜனங்கள்.—துஷ்டர்களை தண்டித்துத்தான் சரிப்படுத்தவேண்டும். எல்லாருமே தங்கள் கடமையை அறிந்து நடந்தால், எதற்கோ அரசர்க்கு சதுர்வித உபாயம் ஏற்பட்டுளது?

நந்தன்.—ஆனால் துஷ்டர்களை தண்டித்து சரிப்படுத்துகிறது. இப்போது கலைவோம்.

மூன்றும் அங்கம். இரண்டாம் களம்.

முற்றிற்று.

---

(தொடரும்).

கா. கந்தசாமி ஆச்சாரி,
ரிவினியூ போர்ட் ஆபீஸ் கிளர்க்கு.

11 FEB 1916 MADRAS

உ

ஸ்ரீமத் விராட் விஸ்வப் பிரஹ்மணே நம:


# விஸ்வகர்ம குலோபகாரி.

மலர்-3. { இராக்ஷஸஹூ மாசிமீ 1916ஹூ பிப்ரவரிமீ } இதழ்-2.


## மெய்ஞ்ஞான தீபம்.

### பொருளும், புகழும்.

பொருளும், புகழும் புண்ணிய கருமத்தினளவாகவே வருகின்றன. நாம் இயற்றிய புண்ணிய கருமத்தினளவறிந்து பரமேசுவரன் பொருளைத் தருகின்றான். நம்முடைய முயற்சியால் பொருள் சித்திப்பதுபோல் காணப்படினும், உண்மையில் அவ்வாறன்று; நம்முடைய முயற்சி எத்தனையோ முறை பழுதாயிற்றே; பொருள் வருவதற்குக் காரணம் கேவலம் நம்முடைய முயற்சியே யாமாயின், பொருளையடைய முயற்சி செய்யாதவ ரொருவருமிலையே; அவரெல்லாம் ஏன்பொருளுடையராதலில்லை; நம்முடையமுயற்சி பொருள்வருவதற்குத் துணைக் காரணமாம்; புண்ணியகருமம் நிமித்த காரணமாம். நாம்செய்த கருமங்கட்குத் தக்கவாறுபொருளும், புகழும், பிறவும் சித்திக்கின்றன.

### இன்பானுபவ நிலை.

நாம் தனம் வேண்டும்; தானியம் வேண்டும்; மேல் வீடுவேண்டும்; நல்லுடைவேண்டும்; பலர் நட்புவேண்டும்; பிணி வருத்தாதிருத்தல் வேண்டும்; பொருள் தனி பெருகவேண்டும்; புதல்வர் பல்கவேண்டும்; புகழெங்கும் ஓங்கவேண்டும்; பூரண ஆயுளோடிருத்தல் வேண்டும்; பிறவுள மேன்மைகளனைத்தும் நம்பால் வலியவந்தடைதல் வேண்டுமென்று ஓயாமல் எண்ணமிட்டுக் கொண்டிருக்கின்றோமேயன்றி இவையெல்லாம் கிடைப்பதாற் பூரண இன்பானுபவநிலை சித்தித்து விடுமா என்பது பற்றிச் சிந்திக்கின்றோமில்லை. பூரண இன்பானுபவநிலை 'நான்'என்பதகற்றிச்சமாதி செய்பவருக்கேயன்றி யேனையோருக்குச் சித்தியாதென்பதை நாம் தவமிக்கோரிடத்து விசாரித் துணர்ந் திருந்தால், தனதான்ய முதலியனவே பூரண இன்பானுபவ சாதனமென்று கருதி, அவற்றின் மயமா அல்ல லுறுவதின் றகன்றிருப்போம்.

### நித்தியா நித்திய விளக்கம்.

நிலையில்லாத பொருள்களை நிலையுடையனவாகக் கருதுவதாற்றான், பொய் பேசுதல், திருடுதல், அநாதரவான குழந்தைகள் முதலியவர்களின் அடைக்கலப் பொருள்களை அபகரித்துண்ணல், நற்குண நற்செய்கைக ளொரு சிறிது மில்லாதாரைப் போற்றிப் புகழுடைய முயலல், மனச்சான்றுக்கு முற்றும் மாறாக நடத்தல், முத்தியை விரும்பும் முனிவர்தாள் பணியாதிருத்தல் முதலிய பிறவும் சம்பவிக் கின்றன. நீரினுட் கிடக்கும் கற்பாறை பலவாண்டு கழிந்துவிடத்தும் இளகுந் தன்மை யடையாமை போல பொருள்களின் மீதுள்ள பற்றுவிடாது பிராணிகளிடத்து அருளுடைய ராகாதிருத்தற்குக் காரணம் நித்தியப் பொருளின்னது, அநித்தியப்பொருளின்னது என்று செவ்விதாக ஆராய்ந்துணர்ந்து அவ்வழி நில்லாமையேயாம். ஆகையால், முத்திநிலையை அபேட்சிக்கும் ஒவ்வொருவரும் நித்தியா நித்திய விசாரம் அவசியம் தக்கார்வாயிலாகச் செய்தல் வேண்டும்.

OFFICE OF THE REGISTRAR OF ... 21 FEB 1916 MADRAS



## சென்னை, சித்திரவேலை, கைத்தொழில் காட்சியும், அதன் படிப்பினையும்.

4-வது பக்கத்தின் தொடர்ச்சி.

சென்ற மாதத்திய நங்குலோபகாரியில் இக் கண்காட்சி ஸ்தலத்தின் பெருஞ்சிறப்பினை ஒருவாறு விளக்கி எழுதினோம். இப்பால், கண்காட்சிஸ்தலத்தின் பலபிரிவுகளையும் அவைகளுள் வைக்கப்பட்டிருந்த காட்சிப் பொருள்களின் உன்னதங்களையும் இங்கு சற்று விவகரிப்பது அவசியமாகின்றது. காட்சி ஸ்தலத்தில் பெரும் பாகத்தை விவசாய இலாகாவும், கைத்தொழில் இலாகாவும்சுவாதந்திரியப் படுத்தியிருந்தன. மேற்புரத்தில் விவசாய சம்பந்தமான காட்சிப் பொருள்களும், கிழ்ப்புரத்தில் கைத்தொழில் சம்பந்தமான வஸ்துக்களும் வைக்கப்பட்டிருந்தன.

வடபுரத்தில்,சித்திர சிற்பவேலை சம்பந்தமான பொருள்களும், காட்டிலாகா காரர்களால் சேகரிக்கப்பட்ட அரும் பெரும் பொருள்களும் அணிவகுக்கப் பட்டிருந்தன. மற்றோர் புறத்தில் நெசவு சம்பந்தமான பொருள்களும், அப்ரேக் சாமான்களும், மஞ்சக்குப்பத்தில் சென்னை பாரி அண்டு கம்பெனியாரால் செய்யப்பட்டிருக்கிற பல அபூர்வமான 'பெப்பர்மிண்டு' வகையராக்களும் வைக்கப்பட்டிருந்தன. தென்கிழக்கு மூலையில் கவர்மெண்டு ஜலசர இலாகாவின் சேகரப் பொருள்களும் தானூரில் செய்யப்பட்டிருக்கின்ற சோப் வகையராக்களும் வைக்கப்பட்டிருக்கின்றன.

விவசாய காட்சி ஸ்தலத்தை பத்துப் பாகமாகப் பிரிக்கலாம். அவை, பால் தயிர் பண்டகசாலை, பட்டு நூல் வர்க்கம் கோழிவர்க்கம், பருத்திவர்க்கம், கரும்பு, வேர்க்கடலை வர்க்கம், புழுவெட்டுகளின் வர்க்கம் எனலாம். பால் தயிர் பண்டகசாலையின் சுவர்களிலும், தரைகளிலும் பளிங்கு தளவரிசையிடப்பட்டு அங்கு பாலினின்றும் வெண்ணெயைப் பாலைக்காய்ச்சாமலும், சேதமாகாமலும் எடுக்கும் முறைகள் ஜனங்களுக்கு விளக்கப்பட்டன. பட்டு சம்பந்தமான ஸ்தலத்தில், பூசா இன்ஸ்டிடூட்டி லிருந்து தருவிக்கப்பட்ட பட்டுப் பூச்சியின் முட்டைகளும், புழுக்களும் கூண்டுகளும் வைக்கப்பட்டிருந்தன. கொள்ளேகாலத்திலிருந்து தருவிக்கப் பட்டிருந்த சில பட்டுநூல்காரர்கள் புழுக்கூண்டுகளினின்றும் பட்டை நூலாகப் பிரித்து எடுத்துராட்டினத்தில்சுற்றிக்கொண்டிருந்தனர். புல்மோர் துரையவர்களால் வளர்ப்புக் கோழிகளின் பல பேதங்களும் காட்டப்பட்டன. குஞ்சுபொறிக்கக்கூடியமுட்டைகளைத் தெரிந்தெடுக்கும் கருவிகளையும், பெட்டைக்கோழிகள் அடை காக்காமலே குஞ்சுபொறிக்கக்கூடிய 'இன்கூபேட்டர்' என்னும் கருவியையும் உபயோகிக்கும் விதங்கள் நிதரிசனமாகக் காட்டப்பட்டன.

சென்னை ராஜதானியில் ஏராளமாகப் பயிரிடப்படும் பருத்தியின் வர்க்கபேதங்கள் ஓரிடத்தில்வைக்கப்பட்டிருந்தன. திருநெல்வேலி பருத்திக்கும், கர்நூல் பல்லாரி முதலியஇடங்களில உற்பத்தியாகும்பருத்திக்குமுள்ள உயர்வு, தாழ்வுகளும் விரிவாக எடுத்துக் காட்டப்பட்டன. கரும்பு வேர்க்கடலை ஸ்தலத்தில் இவ்விராஜதானியில் உற்பத்தியாகிற பல்வகைக் கரும்புகளும், அவைகளினின்றும்காய்ச்சப்படுகிற சர்க்கரை, வெல்லம், கற்கண்டு முதலியவைகளும் வைக்கப்பட்டிருந்தன. இங் கோர்புரத்தில் சாட்டர்டன் துரையவர்களால் நூதனமாக கண்டுபிடிக்கப்பட்ட சர்க்கரை காய்ச்சும் அடுப்பில் சர்க்கரை காய்ச்சிக்கொண்டிருந்தனர். வட இந்தியாவில் உற்பத்தியாகும் செழுமையற்ற கரும்புகளினிழிவு இங்கு உதாரண பூர்வகமாக எடுத்துக் காட்டப்பட்டது. திருநெல்வேலிக்கு தென்பாலுள்ள சில கிராமங்களில்



உற்பத்தி செய்யப்படுகிற அருமையான பனங்கற்கண்டுகளின் பலமாதிரிகள் இங்கு வைக்கப்பட்டு ஜனங்களின் ஆச்சரியத்திற்கு பாத்திரமாயின. பாக்குமரத்திற்கு சாதாரணமாக உண்டாகும் நோய்களையும், புழுவெட்டுக்களையும்,அவைகளை தடுக்கும் உபாயங்களையும் ஜனங்கள் இங்கு கண்ணாரக்கண்டு தெளிந்தார்கள். மலைகளில் விளைகிற காப்பிக்கொட்டை, தேயிலை, ரப்பர் சின்கோனா, மிளகு, ஏலக்காய் முதலியவைகளின் எண்ணிறந்த பேதங்களும் இங்கு வெகு விஸ்தாரமாகக் காட்டப்பட்டிருந்தன. நிறத்திலும், உருவத்திலும் முத்துகளைப்போன்ற ஏலக்காய்களின் தட்டுகளை பார்த்துவாய்வூறிய ஜனங்கள் பலர். சென்னை ராஜதானியில் விளைகிற எல்லா நெற்பயிர்களும் இங்கு காட்டப்பட்டு அவைகளொவ்வொன்றிற்கும் தகுதியான ரசாயன எருக்கள் இன்னின்னவைகளென்று பொதுஜனங்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் இங்கு விஸ்தரிக்கப்பட்டிருந்தன. விவசாய இலாகா பொதுஜனங்களுக்கு சிபார்சுசெய்யக்கூடிய பலமாதிரி உழவு சாமான்களும், மண்வெட்டி, கோடரி, முள் முதலிய பல மேனாட்டு சாமான்களும் இங்கு வைக்கப்பட்டிருந்தன. சென்னைராஜதானியிலுள்ள கம்மியர்களாலும், மற்றவர்களாலும் கண்டு பிடிக்கப்பட்ட உழவுக்கருவிகள் ஒன்றுமே இங்கு காட்டப்படவில்லையாதலால் அவைகளைக் கண்டுபிடிக்கும் சக்திவாய்ந்தவர்களும், சிருஷ்டிசெய்யும் மதியூகிகளுமாகிய விஸ்வகர்மாக்கள் இங்கு இல்லைபோலும்!

(தொடரும்.)

பத்திரிகாசிரியர்.

---

### ஒப்பிலாமணிப் புலவர்.

“மாங்கையிலே வாழும் மகுடத்தியாகியுனக், கேந்து தழும்போ இரண்டுண்டு—வேந்தர், முடித்தழும்புன் காலிலே முத்தமிழோர்க் கியும், படித்தழும்புன் கையிலேபார்.”

## ஆன்றோர் அமுத மொழி.

1. நற்குண நல்லொழுக்கம் எந்தெந்த நிலைமைக்கும் பெருமையை யுண்டாக்கும்; எவ்வளவு தாழ்ந்த ஸ்திதியையும் உயர்த்தும். இது பணத்தைக்காட்டிலும் அதிக செல்வாக்குள்ளது. நன்னடக்கையுடைமையே இவ்வுலகில் உயர்ந்த பேறென்று ஒவ்வொரு மனிதனும் அதை நாடுவது கடனும்.

2. ஒரு தேசத்தை உயர்த்துவதும், அதனைப் பலப்படுத்துவதும், அதற்கு ஓர் மஹத்வம் உண்டாக்குவதும், அதன் அதிகாரத்தைப் பரப்பி அதற்குச் செல்வாக்கு உண்டாகப் பிறர் அதற்கு அடங்கி அதை அபிமானிக்கும்படி செய்வதும் லக்ஷாதி லக்ஷம் பேருடைய ஹிருதயத்தை வணக்கி அதற்கு முன் இதர தேசத்தார்கள் கர்வம் அடங்கித் தலைவணங்கும்படிச் செய்வதும், கீழ்ப்படியச் செய்வதற்கு ஏற்ற கருவியும் மேன்மை பெறுவதற்கு மூலதாரமுமாயிருப்பதும், ஒரு தேசத்தாருக்கு மெய்யான ஸிம்ஹாஸனம், க்ரீடம், செங்கோல் ஆகிய இவைகளை விளைவிப்பதும் ஒருவருடைய குலப் பெருமையுமல்ல; நாகரீகப் பெருமையுமல்ல; புத்தி விசேஷங்களின் திறமைமாத்திரமுமல்ல; ஆனால் நல்லொழுக்கமாகிய யோக்கியதையின் பெருமையேயாம்; இதுவே மனிதருக்கு மெய்யான குல வித்தையாம்.

3. ஒரு தேசத்தின் பலம், தொழில் முயற்சி, நாகரீகம் ஆகிய இவை அனைத்திற்கும் ஆதாரம் அங்குள்ள மனிதர்களின் நடத்தையேயாம். தேச ரக்ஷணத்துக்கும் இதுவே மூலாதாரம்.

4. ஒரு காயமுண்டானால் அதற்குக் காரணமுண்டென்பது எப்படி நிச்சயமோ அப்படியே அவரவருடைய நடத்தையும் அதற்கேற்ற பயனை விளைவிக்கும் என்பது நிச்சயம்.

5. நன்னடக்கை யுடைமையே, இவ்வுலகில் உயர்ந்த பேறு என்று ஒவ்வொரு மனிதனும் அதை நாடுவது கடமையாம். தக்க ஸாதனங்களால் அதைப் பத்திரமாய்க் கைக்கொள்ளச் செய்யும் பிரயத்தனமே அவனுக்கு முயற்சி செய்ய முகாந்தரத்தைக் காட்டும்.

6. மேல் நோக்கமில்லாத வாலிபன் கீழ் நோக்குவான்; உயரப் பறக்காத ஜந்து தவழும் அமைப்புள்ளது போன்றது. பணிந்த நடையும் உயர்ந்த நோக்கமும் உள்ளவனாயிரு. நல்ல அப்பியாஸத்தினால் ஒருவனுடைய யோக்கியதை உறுதிப்பட்டு நிலை நிறுத்தப்படுகின்றது.

7. சாந்தகுணம் மேன்மக்களுடைய யோக்கியதைக்கு உத்தம பிரமாணம். தன்னிலும் இழிந்தோர், தன்னைச் சார்ந்தோர் தனக்கு ஒப்பானோர் ஆகிய இவர்களுடைய மனத்தை வருத்தலாகாதென்று நினைவில் இருத்திக்கொள்ளும் இயற்றைகையும், அவர்கள் மானத்தை அபிமானிக்கும் இயல்பும் யோக்கியதையின் முக்கிய லக்ஷணங்களாம்.

8. நல் ஒழுக்கத்தை உடையவராயிருத்தலே ஒருவருக்கு உயர்ந்த குலத்தில் பிறந்ததாகும்; அதில் நின்று தவறி நடப்பதே தாழ்ந்தகுலத்திற்பிறந்ததாகும். ஆதலால் ஒருவனுக்கு உயர்வும் தாழ்வும்தான் பிறந்த குலத்தினாலுண்டாவதில்லை. ஆனால் தன்னுடைய நடத்தையினாலே தான் உண்டாகும்.

9. நற்குண நல்லொழுக்கங்களை இளம் பருவத்திலிருந்தே கற்றுவரல் வேண்டும். வயது சென்றபின் அவைகளிற் பழகுவது எவராலுமுடியாதகாரியம். இளமையிற்கல்.

10. வியவகாரத்தில் நீதியுடைமையும் சொன்ன சொல் தவறாமையும், தம் கீழ்ப்பட்டோரிடம் தாக்ஷண்ய முடைமையும், சோம்பேறித்தனத்தைவெறுக்குந்தன்மையும், அபாயத்தை அவமதிக்கும் தீரமும் யோக்கியர்கள் செய்யும் தொழில்களாம்.

'ஸ்வதேச நண்பன்'

11-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## பெரும்பயனுறுவார் புகழ் விரும்பாரெனல்.

புகழை விரும்பி, அதற்குரிய காரியங்களைச் செய்பவர் யாவராயிருப்பினும் அவர் அஞ்ஞானியரே யாவர்? யாருக்குப் புகழ்? தேகபாவ முடையவருக் கன்றோ! தேகபாவ முடைமை அஞ்ஞானமுடையவருக் கன்றோ! தேகபாவ முடைமை அஞ்ஞானமுடைமைக் கறிகுறியாக விருத்தலின், புகழை விரும்பி அதற்காக அங்காத்தலையும் புல்லறிவாளரை விட்டகலுதலே புத்திமான்களது முக்கியக் கடமையாம். புகழை விரும்பாது நல்லனவற்றைச்செய்து இகழ்தற்குரியகாரியங்களை மறந்துஞ் செய்யாதிருப்பவரைத் தஞ்சமாக அடைந்தாற்றான் சச்சிதானந்தக் கடலில் மூழ்கி உலகையும் துச்ச மெனக் காணுந் துணிபுண்டாம். யான் சைவசமய ஸ்தாபனாசாரி, யான் சைவசமயக் கானனகோடரி, யான் திருக்கயிலைக்கனைக்கடல், யான் ஷட்சாஸ்திர பண்டிதன், யான் சிவராஜயோகி, யான் ஹடயோக அப்பியாசி, யான் ராமபத்திரர் நல்லடிதாசன், யான் நிர்விகற்ப சமாதியில் நிலைத்தவன், யான் ஊமையெழுத்தி லுளவறிந்தவன், யான் கீழ்ஆறுதாரநிலையும் மேலாறுதாரநிலையும் ஐயந்திரிபற வறிந்தவன் என்று காரணமின்றி யிடம்பமாகப் பேசித் தம்மைப் பிரமதித்துப் பேச விரும்புகின்றவர்களைத் தஞ்சமாக அடைதலொருபோதுங் கூடாது. புகழையே விரும்பி யுள்ளவரைத் தஞ்சமாக அடைந்தவர்க்கு "எருமைவாலைப்பிடித்து ஏரியிலிறங்காதே" என்னும் பழமொழியினை நம்பாது எருமைவாலைப் பிடித்து ஏரியிலிறங்கியவனது கதியே சித்திக்கும்.

புகழை விரும்பித் தம்மைப் புகழ் மூலமாகப் பிறர்க் கறிவிப்ப தொருபோதுங் கூடாது. மனச்சான்றுக்கு மாறின்றி நல்லனவற்றைச் செய்பவருக்குப் புகழ் வாராதிருப்பதேயில்லை. புகழ் வேண்டுமென்று விரும்பும்போது தான் இகழும் "நானும் அப்புகழின் பின்னேவர நிற்கின்றேன்" என்று கூறுகின்றது. புகழை விரும்பாதவன் உலகத்துள் யாதொன்றனையும் பெரிதும்விரும்பானாதலின், அதுவேசர்வ சங்கபரித்தியாகத்திற்கு மேதுவாம். சர்வ சங்க பரித்தியாகத்திற் கேதுவா யுள்ளனவற்றுள், புகழை விரும்பாமை தலைமையாக நிற்றலின், இதனை அத்தியாவசியமாகச் சம்பாதித்தல் வேண்டும்.



புகழும் இகழும் வாராதிருப்பனவன்று; அவை கருமசாட்சியா யிருக்கும் நமக்குண்மையாக நோக்கு மிடத்தெப்போது மில்லை; ஆகாசம் போன்று சூக்குமமாய், அசங்கமா (ஒட்டாததா) யுள்ள நம்மிடத்து தவை யெவ்வாறு சம்பவித்தல் கூடும்? தேகாகாரமாகி யானெனதென்னுஞ் செருக்குண்டாகும் போதுதான் அவை நம்மிடத்து வருகின்றனவென் றுள்ளவாறுணர்ந்து, காரணங்களெல்லாங் கடந்து நின்ற கருணாகரக்கடவுளது கருணையால் மனத்தைச் சிவாகாரமாக்கிச் சின்மயமானபோதுதான் சித்தம் உலகை நோக்கால் புகழை விரும்பாதொழியும். சித்தத்தைச் சிவாகாரமாக்க முயலாதுள்ள பரியந்தம் புகழையடைய விரும்பும் விருப்ப மொழிவதேயின்றாகலின், எவ்வாற்றாலேனு முயன்று சித்தஞ்சிதைவுற்று விஷயத்தின்கணோடாவண்ணம் அதைத் தாரசின்முள் போன்று செப்பமாக அறிவானந்த வடிவ ஆன்மாவை நோக்கி நிற்கச் செய்தலே அறிவுடையாரது கடனாம்.

உலக நிலை, உயிர் நிலை, பரநிலை யென்னு மூன்றையும் உள்ளவாறுணர்ந்து, உலகாகாரமாகாது, உணர்வாகாரமாய்ப் பிறழாது நின்ற மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தின்யிருண்ணிப்பத்தில் "வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன் மண்ணும் விண்ணும், வேண்டேன் பிறப் பிறப்புச்சிவம் வேண்டார்தமை நாளும், தீண்டேன்" என்று திருவாய் மலர்ந்தருளியிருப்பதை நோக்குமிடத்துப் புகழை விரும்புவதால் பொல்லாங்கெல்லாமுண்டாமென்ப தினிது விளங்கும். புகழை விரும்புதல் மிகப் பொல்லாங்கா மென்பது பற்றியன்றோ, அப்பெரியார் 'வேண்டேன் புகழ்'என்று புகழ் விரும்பாமையை முதற்கண் கூறினார். புகழை விரும்புதல் இகழிற் கேதுவா யிருத்தலின், அதை விட்டுத் தான் இன்ன நிலைமையுடையானென் றொருவரு மறியா வண்ணஞ் சாதனஞ் செய்பவனுக்கே அச்சுதவமல வித்தகனருளால் அறிவானந்த வடிவாய் நிற்கும் நிலை தடையின்றி யுண்டாம். புகழ் நோக்கிச்செய்யும் புண்ணிய கருமங்கள் மறுமைக்குதவியாவதில்லை யென்பது நூற்றுணிபா யிருத்தலின், புகழை விரும்பாது செய்வனவற்றைத் திருந்தச் செய்தால் பரமேசுவரனது கருணை தவறாதுண்டாம்.

கோ. வடிவேலு செட்டியார்.

## மாந்தைமாநகர்.

(முன் 595-ம் பக்கத் தொடர்ச்சி.)

"அன்பர்காள், இவ்விடத்தில் உங்களுக்கு ராஜத்துவேஷமுண்டாகும். ஆகையால் இவ்விடம் விட்டு இவ்விராச்சியத்துக் கப்பாற் சென்று உத்தமமானவோரிடத்திற்றங்கி அரண் செய்து கொள்ளுங்கள். அங்கே புதுமாதிரியானயுத்தாயுதங்களைத் தெரிந்து செய்யுங்கள். அப்போது உங்கள் சத்துருக்களைச் சுலபமாய் வென்று சுவாதீனராவீர்கள். நீங்கள் ஒற்றுமையின்றிப் பிரிந்து செல்வீர்களானால் பராதீனராவீர்கள், என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தனன். உடனே அம் முதியவர் விழித்துக்கொண்டு தான் கண்ட சொப்பனத்தை மற்றைச் சிற்பிகளுக் கறிவிக்க அவர்களெல்லாரும் ஒன்றுகூடி விசாரப்பட்டுக்கொண் டிருக்கையில், திடீரென்று கோட்டைக்கு வெளியில் பேரிகை முழக்

க்கேட்டுத் திடுக்கிட்டு அவர்களிற் பலர் பரபரப்புடனே தங்கள் தங்கள் விமானங்களிலேறிச் சீனதேசம் போய்ச் சேர்ந்தார்கள். மற்றவர்கள் தங்கள் பந்து மித்திராதியர்களுடன் பண்டசாலையி லிருந்த ஏராளமான உலோகங்களையும், இரத்தினங்களையும் ஒட்டகங்களின்மேல் ஏற்றிக்கொண்டு தெற்குநோக்கிக்கோதாவரிநதிதீரஞ் சென்றுதங்கினார்கள். அங்கேபேஷிணீபுர மென்னும் அலங்காரமான பட்டணத்தைக் கட்டி அதை ஆண்டுவந்தார்கள். தாங்கள் கைவிட்ட மாந்தைப் பட்டணத்தை அதை முற்றுகையிட்ட மானவநாட் டரசனான பர்த்துல ஹரி என்பவன் கைப்பற்றிக் கொண்டான். இதன்மேல் இச்சரித்திரத்தை ஆராய்ந்து வெளியிடுவதற்குள் மாந்தையைப் பற்றிய நண்பர்களின் அபிப்பிராயபேதங்களையும், அவைஎன்றபடும் முகாந்தரங்களையும் இங்கு எடுத்துக் காட்டுவது அத்தியாவசிய மாகையால் அவை அடியில் வருமாறு:—இலங்கையில் மாந்தையிருந்ததென்னும் மிஸ்டர் M. ரத்ன வீரர் கூற்று பொருந்தா தென்று இதன் முதல் வியாசத்திற் சொல்லப்பட்டது மன்றி பிரம்மஸ்ரீ கூந்தலூர் சுப்பிரமணி யாச்சாரியார் அவர்களாலும்விஸ்வகர்மகுலோபகாரி 514-ம்பக்கம் முதல் 517-ம் பக்கம் வரையில் எழுதப்பட்ட மாந்தைப்பட்டண விவரம் என்னும் வியாசத்தால் மறுக்கப்பட்டது. ஆனால் ஸ்ரீகூந்தலூரார் சொல்லுகிறபடி மாந்தையமா நகர் பர்மாவிலுள்ள மாண்டலே (Mandalay) யாகுமென்றாலோ அதுவுமாகாது. பர்மாதேசம் ஆரியாவர்த்தத்துக் குள்ளாகாது. ஆரியர்கள் இந்தியாவின் வடமேற்றிசையினின்று வந்தவர்களென்றும்பொருந்துமேயன்றிக்கிழக்குத்திசையினின்று வந்தவர்களென்றாற் பொருந்தாது. ஆனால் ஆரியாவர்த்தத்திலுள்ள மாந்தைநகர் பிடிபட்ட பிறகு அதினின்று தப்பியவர்களிற் பலர் பர்மா தேசம் போய் அங்கே மாந்தை யென்று ஓர் பட்டணங்கட்டி யிருந்தார்களென்றால் அது ஒருவாறு பொருந்தும். எங்ஙனமெனின். பர்மா, சீயம், கொச்சின்சீனா, கம்போதியா, மலேயா இவற்றிற்குப் பொதுவாய்க் கிழக்கிந்தியா அல்லது இந்து சீனா வென்று பெயர் இருப்பதினாலும், அத்தேசங்களில் இந்தியர்களும் சற்று நீடித்துக்குடியேறியிருப்பதினாலும், அவற்றில் சீயதேசத்திலுள்ள அயோத்தியா டில்லி என்னும் பட்டணங்கள் ஆதிநகரங்களாயில்லாமல் வட இந்தியாவிலுள்ள அயோத்தி, டில்லி என்னும் பட்டணங்களே ஆதிநகரங்களா யிருந்தலினுமென்க ஸ்ரீ கூந்தலூரார் சொல்லுகிறபடி ஒரு பிரசித்திபெற்ற பட்டணத்தின் பெயரைப் பிற்காலத்திற் புதிதாய்க் கட்டப்படுவதற்கும் இட்டு வழங்குவது வழக்கமா யிருக்கிறது. அப்படியே இத்தென்னிந்தியாவை ஒருகாலத்தில் ஆண்ட இரண்டு மகம்மதிய அரசர்களின் இராஜதானிகளாகிய, பீஜப்பூர், கோல்கொண்டாக் களுக்கும் டில்லி என்று சொல்லிக் கொள்வதுண்டு. பல்லாரிக்குச் சமீபத்திலும் டில்லி என்னும் ஓர் ஊர் இருப்பதாய்த் தெரியவருகிறது. வட இந்தியாவிலுள்ள டில்லியை மொகலாயர் பிடித்துக் கொள்ளவும் அதைக்கைவிட்ட ஆப்கானியர்கள் தக்ஷணத்தில் சுயாதீன ராச்சியம் ஸ்தாபித்தபோது தங்கள்புதிய ராஜதானிக்கும் பரியாயமாய் அப்பெயர் இட்டிருக்கலாம். விஸ்வ புராணத்தின் நூலாசிரியர் காலத்தில்இத்தென்னிந்தியா மொகலாயர் அரசாக்ஷிக் குட்படாமல் மேற்கண்ட தக்ஷணத்து ஆப்கானிய சுல்தான்களின் அரசாக்ஷிக் குட்பட்டிருந்து அவர்கள் இராஜதானியை டில்லி யென்று பாடினார் போலும். பூர்வத்தில் ஆரியர்கள் வடஇந்தியாவினின்று தென்னிந்தியாவிற் பிரவேசித்தபோது இவ்வகுப்பாரும்பாஞ்சால தேசத்தினின்று தெற்கு நோக்கி விந்தியகிரிச்சாரலையடுத்து அங்கேமாந்தை என்னோர் பட்டணங்கட்டி அதில் வாழ்ந்திருக்கலாம். அதை பர்த்துல ஹரியரசன் கைப்பற்றிக் கொள்ளவும் அதினின்று தப்பியவர்களிற் பலர் கோதாவரி தீரத்தில் வந்து பேஷிணீபுர மென்னும் பட்டணத்



தைக்கட்டி யாண்டிருக்கலாம். அப்படித் தப்பியவர்களிற் சின தேசஞ் சென்றவர்கள் போக வேறுசிலர்தொண்டை நாட்டில் வந்து அப்பெயரால் ஒரு கோட்டைகட்டியிருக்கலாம். சோழ அரசர்களின் சார்பில் தொண்டமான்கள் அழித்த மாந்தை இதுவாகும் அல்லது பர்மாவிலுள்ள தாகுமேயன்றி வடஇந்தியாவில் விந்தகிரிச்சாரலிலுள்ளதாகாது. அது மேற்கூறியபடி பர்த்துல ஹரிஅரசனாற் கைப்பற்றிக் கொள்ளப்பட்டதாகும். ஆந்திர கவிகளால் நம் பூர்விக ஸ்தலம் பேஷிணீபுர மென்றும், பெந்தோடபுர மென்றும்,பாடப்பட்டிருப்பதால் நம் ஜாதிப்பிள்ளைகள் பாடும் ஜாதி கவிகளே இதற்குப் போதிய சான்றும். பர்மாவிலுள்ள மாண்டலே வையக் கடாரமென்று தமிழ் வித்துவான்கள் உத்தேசிப்பதால் சோழன் சார்பில் தொண்டமான் கடாரங் கொண்டானென்பதும்பொருத்தமாயிருக்கிறது. மாந்தைப்பள்ளு நாடகத்தில்வரும் பள்ளிகளில் ஒருத்திக்குமாந்தை தாய் வீடும் மற்றவளுக்குக் காஞ்சிபுரம் தாய்வீடுமாய்ச் சொல்லியிருக்கிறது. இதனால் தொண்ட நாட்டில் ஒரு மாந்தை இருந்ததாய்த் தோன்றுகிறது. வேலூர் தீர்ப்பில் கண்டமாந்தை பிந்தியதில் ஒன்றாகும். அங்கங்கே கிடைக்கும் இச்சரிதையில் கால தேசவர்த்தமானம் பொருந்தாமையால் சிந்தூர் வேலூர் தீர்ப்புகளில் முரண்படக் கூறியிருக்கிறது. பழங்காப்பியங்களில் "மாந்தையரிரும்பொறை" என்றும், "மாந்தையர் பொருந" என்றும், கூறியிருப்பது மலையாளக் கரையிலுள்ள மாந்தையை இராஜதானியாய்க் கொண்ட ஓர் அரசனை இம்மாந்தையைக் குறிப்பிட்டு வஞ்சநெஞ்சனனூர் கல்விமான் மலையாளத்துத் தீண்டாக்கம் மியமைப்பற்றி இதில் விச்சுவி, கர்மி என்னும் தாய்க்கிழவியும் வேசியும் இருந்ததாயும் அவ்வேசி மக்காவினின்று வந்த மகம்மதியர்களைச் சேர்ந்து விச்சுவகர்மனைப் பெற்றதாயும் எழுதியிருக்கிறான். வசனநடையில் எழுதப்பட்ட இவ்வோலைச்சுவடி சேரநாட்டிலுள்ளது. எறுமாநாட்டு நெல்லியங் கோடனை ஓவியர் (கம்மாளர்) தலைவன் என்று சிறுபாணாற்றுப் படையில்கூறியிருக்கிறது இவ்வாசனது பிரதான பட்டணங்களான வேலூர், ஆமூர், என்பவற்றால் இவ்வட ஆர்க்காடு பிராந்தியம் எறுமா நாடென்று ஊகிக்க இடமுண்டு. இதுவரையில் கண்ட ஆராய்ச்சியால் தொண்டநாட்டில் இருந்த மாந்தை எவ்விடத்திலிருந்த தென்று நிச்சயிக்கக் கூடவில்லை. என்னை இவ்வாராய்ச்சியிற் றூண்டிய பிரம்மஸ்ரீ தி. மு. முக்கணாச்சாரியார் அவர்கள் இதைக் கண்ணுற்றுத் தம்மபிப்பிராயத்தை இப்பத்திரிகைவாயிலாய்வெயிளிடுங்காறும் இது [illegible]ர்ந்துநடைபெறுது நிற்கும்.

அந்தியாபக லிங்காச்சாரி.
கணியம்பாடி.

## வருந்தாப் பொருளுதவியும் குலாபி விருத்தியும்.

8-வது பக்கத்தின் தொடர்ச்சி.

7. கல்விதேர்ச்சி யில்லாத நம்குல ஆடவர்களையும் பாலியர்களையும் நினைக்கிலோ நம்மனம் மிகத்துயரடைகிறது. ஆனால் நம்குலப் பெண்டிரைப் பற்றி சொல்வதேன்? அத்தோமிக்க பரிதபிக்கத் தக்கதாகும். உற்று நோக்கு மிடத்து நம்குலப் பெண்டிர், ஆடவர், வாலிபர்கள் மற்றகுலத்தினரைக் காட்டிலும் மிக்க யூக புத்தியுடையவர்களே இத்தட னிவர்களுக்குக் கல்வித் தேர்ச்சியிருக்கின் எவ்வளவு சிறந்ததாயிருக்கும் அதாவது ஆங்கிலத்தில B. A. வகுப்பு ரசாயனம் கற்றறிந்த ஒருவரிடத்தில் அவர் கற்றறிந்த சில விரிய ரசாயனக்கேள்விகளுக்கு நம்குலக் கற்றறியாவிளைஞன் ஒருவன் விடைகொடுப்பான். இவ்விதமே பற்பல சாஸ்திரங்களுக்கும் நம் பஞ்சப்பிரம்ம வம்சகுல பாலியர்கள் விடைகொடுப்பார்கள். ஏனென்றால் நம் குலத்தவர்கள் தொழில்களில் கல்லா

மலே கலந்து கையாண்டு வரப்படுகிறது. ஆனால் இத்துடன் கல்வித்தேர்ச்சியுமிருப்பின் எத்தனைபயன்பயக்குமென்பது நான் சொல்லாமலே விளங்கும். இனி நம் குலச்செல்வர்கள் எவ்விதத்திலும் தங்கள் பிள்ளைகளைக் கல்விகற்க விடாமுயற்சியுடன் முன் வருவார்களென்று நிச்சயமாய் நம்புகிறேன். நம் குல யூகத்துக்குத் தக்கபடியே இறைவன் தம் சிருட்டித்தொழிலை நமக்கீந்திருக்கிறார். கல்விச்செல்வக்குறைவாலேயே இச்சிருட்டித்தொழிலையும் நம் குலத்தவர்களால் கைசோரவிடப்பட்டது. கல்வியும் பொருளுமின்மையே இத்தியாதி சம்பவங்களுக் கிடமாகிவிட்டது. அன்னிய குலவர்த்தகர்கள் நம்குலத்தவர்களை ஒருங்கே சேர்த்துப் பொருள்கொடுத்து அவர்களால் சிருட்டிக்கும் சகலவித உலக உபகாரப் பொருள்களைக்கொண்டு எவ்வளவு இலாபத்தை யடைகிறார்களென்பது நன்கு தெளிவாய்த் தெரிந்த விஷயம். நம்மவர்களைக் கொண்டும் நம்மால் சிருட்டித்த பொருளைக்கொண்டும் அன்னியர் நிறம்ப இலாபத்தையடைந்து வருகிறார்களென்பதை நித்தம் கண்ணுற்றும் ஒற்றுமையுடனும் நாணயத்துடனும் தம்செய்கைகளையும் சேர்க்கைகளையும் நீக்கி முன்வர ஏன் ஊக்கமுண்டாகவில்லை. ஊக்கத்திற்கு எதுகாரணமென்பதையும்குலவிர்த்திக்கு எதுவழியென்பதையும் பன்முறையும் பத்திரிகையோடுசிந்தித்து முன்வருவீர்களாக. எனதாருயிர் விஸ்வகுலச் செல்வர்களே! நீங்கள் ஊக்கத்துடனும் விடாமுயற்சியுடனும் ஒற்றுமையுடனும் கல்வியைப்பயின்று முறையேயொழுகி செல்வத்தை யீட்டி நம்முற்பதவியையடைந்து முதன்மையாய்க் குல விர்த்தியுடன் உலகிற்குத் திலகம்போல் பிரகாசிக்கும்பொருட்டு அந்த சர்வவல்லமைபொருந்திய யேகபராபர வஸ்துவான முதற்சிவஜோதிப் பொருளைபன்முறையும் பணிந்துகனிவுடன் பிரார்த்திக்கின்றேன்.

ஞானம்பிகை பாலன்.
K. A. சபாபதி.

## மாதாபிதாக்களின் மஹிமையும் புத்திரர்கள் கடமையும்.

**எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.**

அரிதினிற் கிடைத்த மானிடப் பிறப்பை
அடைந் தவர்நல் லொழுக்கின்றி
விரிதரு தீயகரு மங்களி யற்றின்
மெலிந்தி றந்தியம வதனையாம்
நரகிடை யழுந்தி யலக்கண் மிக்கெய்தி
நலிந்து மற்ற தன்பினர்ப்பலவாம்
இரியிழி பிறப்பை யடைந்து ழல்வார்கட்
கென்னெனயி யம்புவர் தக்கோர்.

அருமையாகக் கிடைத்த மானிடஜன்மத்தை அடைந்தவர்கள். நல்லொழுக்கமில்லாமல் விரிவாகிய பாவகருமங்களைச் செய்தால் தளர்வடைந்து. இறந்து யமயாதனையாகிய நரகத்திலழுந்தி மிகுந்த துன்பமடைந்து மெலிந்து பின்பு அஞ்சுகின்ற தாழ்ந்த ஜனனங்களையடைந்து திரிவார்கள் என்றும்.

**இதுவுமது விருத்தம்.**

மொழிதரு வருணச் சிரமங்கட் குரிய
முறைமைக டிறம்பிடா தொழுகிற்
பழிதா ஞானம் தோன்றுமற் றதனாற்
பரிவுறு மயல்செயஞ் ஞானம்
ஒழிவுறு மதன்மேற் பாசபந் தங்க
ளொடுங்குத லடைந்திடு மதன்பின்
அழிவின் மேலாய பேரின்ப முத்தி
அடைவரென் றிசைக்குமா மறையே.

பெரியோர்களா லெடுத்துச் சொல்லப்பட்ட சதுர்விதவருணச் சிரமங்களுக்குரிய விதியாகிய ஒழுக்கந்தவறாமல் நடந்தால். குற்றமற்ற உண்மைஞானம் உண்டாகும். அந்த ஞானத்தினாலே பிறவித்துன்பத்துக் கேதுவாகிய மயக்கத்தை விளைக்கின்ற அஞ்ஞானமானது நீங்கும். அது நீங்கவே பாசபந்தங்கள் அழிவடையும் அதன் பின்பு எக்காலத்தும் அழிவில்லாத மேலாகிய பேரின்பமான மோக்ஷத்தை அடைவார்கள் என்றும்.



**இதுவுமது விருத்தம்.**

பரவுறுதே வாலயங் களைக் கண்டும்
பணிந்தி டார்குருடராய்ப் பிறப்பர்
உரவுசேர் தியான மலக்ஷி யமாக
உஞற்றினோர் செவிடராய்ப் பிறப்பர்
குரவுநற் றுணைவர் தாய்பிதா வங்கக்
குறையு ளார்தம்மையா தரியார்
திரமலியுட லிற்கண் முதலி யவிந்
தியக்கு றைவுடையராய்ப் பிறப்பர்.

துதிக்கப்படுகின்ற தேவாலயங்களைக் கண்டும் வணங்காதவர்கள் கண்குருடராகப் பிறப்பார்கள் நன்மைகளைத் தருகின்ற தியானத்தை அலக்ஷியம் செய்தவர்கள். செவிடராகப் பிறப்பார்கள். குரு, சகோதரர், மாதா, பிதா, கைகால் முதலிய அங்கஈன முடையவர். இவர்களை ஆதரிக்காதவர்கள் வலிமிகுந்த சரீரத்தில். நேத்திர முதலிய இந்திரியக் குறைவுள்ளவர்களாகப் பிறப்பார்கள் என்றும்.

“மாதா பிதா குரு தெய்வம்” என்றும் “அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்” என்றும், தந்தை சொன்மிக்கொரு மந்திரமில்லை, தாயைச்சிறந் தொரு கோயிலுமில்லை என்றும், “தந்தைதாய் பேண் என்றும், “மாதாவை யொருநாளும் மறக்க வேண்டாம்”! என்று மூதுரைகளிலும்.

**கோம்மி.**

தன்விடிருக்க அசல்வீடு போகாதே
தாயார் தகப்பனை வையாதே
உன் வீட்டுக்குள்ளே யூகமிருக்கையில்
ஓடித் திரிஜெய் வாலைப் பெண்ணே

என்று, வாலைக் கொம்மியிலும்.

“அன்னை பிதா குரு ஆணைஞ் சொல்லல்” என்றும், “தந்தை தாய் மனது சலித்திடலாகா” என்றும், “பெற்றோர்க்கு தவாப்பிள்ளை மாபாவி” என்றும், பாலர் போதனைமஞ்சரியிலும்.

கூடியே வாழ்ந்தாலுங் குழந்தைமிகப் பெற்றாலும், தேடிப்பிதிர்க்களுக்குத் தெய்வத்துக் கிட்டாலும், என்று, மநுநீதிக் காதலிலும்.

**சுருதி.**

பிதாவை கார்ஹபத் யோக்நிர்
மாதாக்நிர் தக்ஷிணா ஸ்ம்ருத:,
குருராகவ நீ யஸ்து
ஸாக்நித்ரு தாகெரீயஸி,

மாதா, பிதா, குரு இவர்கள் பெரிய அக்னிகள், ஆகலால் அவர்களை அவமதிக்கக்கூடா தென்றும்.

**சுருதி.**

மாத்ரு பித்ருவசநம் ஹிதமஹிதம், வாசார்ய மெவவிசார்ய, தாய்தந்தையர்கள் செய்யத் தகாதகாரியத்தை சொன்னாலும் செய்யவேண்டு மென்றும்.

(இன்னும் வரும்)

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
Ex. முனிசிபல் கௌன்சிலர்,
பழனிஸ்தலம்.

## குலோத்தாரண உபன்னியாச பத்திரிகை.

12-வது பக்கத்தின் தொடர்ச்சி,

யஹூராமய ஸாரணும், ஸமவாயோஹி துர்ஜய:, த்ருணைராவேஷ்ட்யதே ரஜ்ஜு:, தேந நாகோபி பத்யதே,,

நிஸ்ஸாரமானதும் பகுக்களாயிருந்தால் அவைகளை ஜயிக்கமுடியாது அதெதுபோலென்றால் கேவலமாயுள்ள திருணங்களானது (புல்லானது) ஒன்றுசேர்ந்தால் மதம்பொழிந்த யானையையும் பந்திக்கலாம் (கட்டலாம்) என்றதுபோல முக்கியமாக அயிக்ய மத்தியமே பலவிதமான நன்மைகளை பயக்குமெனச் சொல்வதில் யாதுதடையிருக்கின்றது.

மேலும் நாம் யாவரும், மாத்ஸர்யம், பொறாமை, அகங்காரம் முதலியவைகளை நீக்கி ஒரேமனமாக சிநேஹத்துடன் கல்வி விஷயத்தில் சேர்ந்துழைப் போமாகில் பிறஜாதியாருக்கு பின்னடையமாட்டோமென்பதில் கிஞ்சித்தும் சம்சயமேவேண்டாம்.

நம் சிறுவர்களுக்கு கல்வியையும், ஆசாரத்தையும் நல்லொழுக்கங்களையும் அடைவதற்குவேண்டும் உபாயங்களை தேடவேண்டியது நம் அனைவரின்பேரிலுள்ள கடமையாய் (பாரமாக) யிருக்கின்றது. ஆனால் அவைகள் (என்றும்) நடக்கும்படியாகவேண்டும் நிதிகளை சேர்க்கும்படியான யேற்பாடுகளைச்செய்து அதில் கவர்ன்மெண்டாருடையசகாயமும்பெற்று நடத்திவரவேண்டும். ஓர்காரியத்தை ஆரம்பித்து அதைஊக்கத்துடன் எப்பொழுதும் நடக்கசெய்பவர்களே உத்தமர்களென தர்மசாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது.

ப்ராரப்யதே நகலுவிக் நபயே நநீசை:,
ப்ராரப்ய விக்ன நிஹதாவிரந்திம்ஸந்த:,
விக்னை: புந: புநரபிப்ரதி ஹந்யமாநா:, ப்ரா
ரப்த முத்தமகுணா: பரித்யஜந்தி,,

அதமரானவர்கள் தான் ஆரம்பித்தகாரியத்தில்யாதாமொரு விக்னம் வருமானால் உடனேதைபயங்கொண்டுநிறுத்திவிடுவார்கள்; மத்தியமரானவர்கள் தான் ஆரம்ப காரியத்தில் விக்கினம் வருமானாலதை தாங்குகிறது பிரயாசமெனப் பின்வாங்குவார்கள் உத்தமரானவர்கள் தான் ஆரம்பித்த காரியத்தில் கூடவிக்கினங்களால் பாதிக்கப்பட்டதுகளாயிருந்தாலும் ஆரம்பித்த காரியத்தை ஒருக்காலும் கைவிடாது. நடத்தி வருவார்களென்று கூறப்பட்டிருக்கிறது.

இந்தப் பிரகாரம் உத்தமர்களாலும், குலாபிமான பெருக்காலும், குடந்தை வாஸிகளினால் ஆரம்பித்த இந்த காண்பிரன்ஸை கைவிடாது பிரதிவருஷத்திலும் ஒவ்வோரிடங்களில்வைத்து நடக்கும்படியான ஏற்பாடுகளைச்செய்து இன்றுமுதலுக்கே நம்சிறுவர்களுக்குவேண்டும் வித்யாவிஷயங்களுக்கு, பொது நிதிக்கான ஏற்பாடுகளைச்செய்து அதிலிருந்தும் சமஸ்கிருதம், வேதாத்தியயனம்,முதலியவைகளை கற்றுக்கொடுப்பதோடுகூட அதில்புத்திமானாயிருக்கிறகுழந்தைகளை தெரிந்தெடுத்து ஆங்கிலம் பயிற்று 'வித்து ஆயிரக்கணக்கான குழந்தைகளை பி.ஏ.பி.எல். பட்டதாரிகளாக்கிசமஸ்தடிப்பார்டுமென்றுகளிலும்அதிகாரிகளாகச்செய்யவேண்டும். நம் பூர்வீகர்கள் அனுஷ்டித்த விசேஷ சிற்பங்களையும், வேத சாஸ்திரங்களையும், நாம் அநேக நூற்றாண்டுகளாக கைவிட்டதினாலும் தற்காலம் நாம் வைத்துகொண்டிருக்கும் தொழில்களை பல ஜாதியார்கள்செய்யத்துணிந்துவிட்டதினாலும், இத்தொழிலினால் அதிக மேன்மைபெற மார்க்கமில்லாதிருக்கிறதினால், விசேஷ தொழில்களை கற்றால்மாத்திரம் மேன்மையையும், லாபத்தையும் அடையலாம். அதற்காக ஆங்கிலம் படித்து பட்டதாரிகளான சிறுவர்களில் சிலரை, அமெரிக்கா, ஜப்பான், ஜர்மனி முதலிய பலவிடங்களுக்கனுப்பி அபூர்வ தொழில்களை கற்று வரும்படியாக செய்துவைப்பதும் நம்மேலோருடைய பாரமாயும் கடமையாயுமிருக்கின்றன.

இவ்விஷயங்களை இச்சபையில் முதலாவது காரியமாக மஹாஜனங்களனைவரும் கவனம் செலுத்தி நாம் சிறுவர்களை பட்டதாரிகளாக்கி உயர்தர உத்தியோகங்களடையச் செய்வித்தும், விசேஷ தொழில்களை செய்ய செய்வித்தும்; வேதாத்தியயன முதலியவைகளை கற்கச் செய்வித்தும் வைத்து இதரஜாதியாருக்கு பின்னடையாமல் நம்குலத்தை பூர்வஸ்திதிபோலாக, கீர்த்தி. செல்வம், ஒழுக்கம், அறிவு, மேன்மை, பகுமானம் முதலியவைகளையடையும்படியாக செய்துவைக்க வேண்டுமென மஹா ஜனங்களை பன்முறையும் பிரார்த்தித்து முதலாவது காரியத்தை இம்மட்டோடு பூரணம் செய் திருக்கிறேன்.

(தொடரும்.)

ஜோஸியர் முத்தாச்சாரியார்,
மீனாக்ஷிபுரம்.



## கைத்தொழில்களின் அபிவிருத்தி.

கொஞ்ச காலத்துக்கு முன்னால் வங்காள கவர்ன்மெண்டார் அந்த மாகாணத்துக் கைத்தொழிலபிவிருத்தியைப் பற்றி ஆராய்ச்சி செய்யும்படி மிஸ்டர் ஸ்வான் என்பவரை நியமித்திருந்தார்கள். அவர் கைத்தொழிலபிவிருத்தியைப் பற்றிப் பரிசீலனை செய்து எழுதிய ரிபோர்ட்டை அக் கவர்ன்மெண்டார் ஸமீபத்தில் பிரசுரம் செய்தார்கள். அந்த ரிபோர்ட்டில் சொல்லிய விஷயங்களில் பல நம்மது ராஜதானிக்கும் ஏற்குமாகையால் அவைகளை இங்கு சுருக்கி எழுதுகிறோம்.

ஸ்வதேசியம் பிரபலமாயிருந்த காலத்தில் வங்காளத்தில் பல ஸ்வதேசிய கைத்தொழில் கம்பெனிகள் ஸ்தாபிக்கப்பட்டன. ஆனால் அவைகளில் பெரும்பாகம் கடைத்தேறாமல் போய்விட்டன. இதற்குக் காரணங்கள் முக்யமாய் போதுமான மூலதனமில்லாமையும்,தக்க நிர்வாகமில்லாமையுமே. இந்தியர்கள் தங்கள் சொந்த மூலதனத்தைக்கொண்டு நடத்தும் கைத்தொழில் கம்பெனிகளுக்கு போதுமான மூலதனம் வேண்டியது ரொம்ப அவசியமாகும். ஏனென்றால் பாங்கிகளும், யந்திரங்கள், கைத்தொழில் பொருளாகச் செய்வதற்கு வேண்டிய சாமான்கள் ஆகிய இவைகள் சப்ளைசெய்யும்கம்பெனிகளும், இந்திய கைத்தொழில் கம்பெனி களுக்கு கடன் கொடுக்கவும் கடனாக சாமான்கள் கொடுக்கவும் இஷ்டப்படுவதில்லை.

இந்திய கைத்தொழில் கம்பெனிகள் கைத் தொழிலுக்கு வேண்டிய சாமான்களை ரொக்கம்கொடுத்துவாங்கி அவைகளினிடம் சாமான்கள் வாங்குபவர்களுக்கு சாமான்களை ரொக்கத்துக்கு விற்காமல் கடனாகக் கொடுக்கவேண்டியிருப்பதால் பாங்கி வசதிகளுள்ள தொழில் கம்பெனிகளுக்கு எவ்வளவு நடைமுதல் பணம்வேண்டியிருக்குமோ அதைவிட அதிகமாக இந்திய தொழில் கம்பெனிகளுக்கு நடைமுதல் பணம் வேண்டியிருக்கிறது. பணம் கடன் வாங்கவும்,கடனாகக் கைத்தொழில் சாமான்கள் வாங்கவும், பாங்கிவசதிகளில்லாமலிருப்பதுதான் அநேகமாய் எல்லா இந்திய கைத்தொழில் கம்பெனிகளுக்கும் பெரிய கஷ்டமாயிருக்கிறது.

இன்னும் சிலகாலம் வரையில் இந்தியர்கள் கைத்தொழில் துறைகளில் பணம் போட முன்வருவார்களென்று சொல்வதற்கில்லை, இந்தியாவில் செல்வமுள்ளவர்கள் மார்வாடிகளும், நிலஸ்வான்களும், உத்தியோகங்களில் அமர்ந்திருப்பவர்களுமே. உத்யோகங்களில் அமர்ந்திருப்பவர்களில் சிலர் தங்கள்பணத்தை நிலத்தில் போடுகிறார்கள். வேறு சிலர் வட்டிக்கு விடுகிறார்கள். சொத்தீட்டின்பேரில் கடன் கொடுத்தால்பணம்பத்திரமாயிருப்பதோடு வட்டியும் நூற்றுக்கு 6 வீதம் கிடைக்கிறது. புதுக்கைத தொழில்களில் பணம் போடுவதால் தக்க லாபம் நிச்சயமாய்க் கிடைக்குமென்று தொழிலாளிகள் நிரூபித்தாலொழிய வங்காளத்திலுள்ளவர்கள் தங்கள் பணத்தை தொழில்களில் போட முன்வருவது அரிது. மேலும் தொழில் கல்வி கற்ற சிறுவர்களுக்கு கைத்தொழில்களில் விசேஷ அறிவு இருந்தாலும் அவர்களுக்கு வியாபாரப் பயிற்சி கொஞ்சமும் இல்லை.

கைத்தொழில்கள் அபிவிருத்தி யடைவதற்கு ஜனங்களை முயற்சிப்படுத்திக் கொள்ள வேண்டு மென்றாலும் கவர்ன்மெண்டார் கைத்தொழில்கள் விஷயமாக இப்போது செய்துவரும் உதவியைவிட அதிகமாக உதவிசெய்ய வேண்டும். கைத்தொழில்களைப் பற்றிப் பல புஸ்தகங்கள் எழுதிவெளியிடுவதைவிட ஒருதொழிலைச் செய்து காட்டினால் ஜனங்களுக்குத் தொழில்களில் அதிக நம்பிக்கை உண்டாகும். ஒரு கைத்தொழில் ஸ்தாபிக்கத்தீர்மானித்திருப்பவருக்கு அந்தக் கைத்தொழிலைப் பற்றி கவர்ன்மெண்டார் பிரசுரம் செய்திருக்கும் புஸ்தகத்தை வாசிப்பதால் பல

விஷயங்கள் தெரியவரும். ஆனல்ஷெடிபுஸ்தகத்தை வாசிப்பதனலேயே எவரும் கைத்தொழிலை ஸ்தாபிக்க முன்வரமாட்டார்கள். அப்படிக்கின்றி, கவர்ன்மெண்டார் இன்ன சாமானை இன்னவிலையில் செய்யலாம், இன்ன விலைக்கு வெளியில் விற்கலாம், இன்னலாபம் கிடைக்குமென்று குறிப்பிட்ட தொழிலைச் செய்து ரூபித்தால், தொழில் செய்வதில் நோக்கமுள்ளவர்கள் தொழில் நடத்த முன் வருவார்கள்.

வங்காள கவர்ன்மெண்டார் 1910-ம் வருஷத்துக்கு முன்னல் சொந்தத்தில் தொழில்கள் ஸ்தாபித்து நடத்த ஏற்பாடு செய்தார்கள். ஆனல் அந்த வருஷத்தில் இந்தியா மந்திரி கவர்ன்மெண்டார் தொழில்கள் ஸ்தாபித்து நடத்துவது கூடாதென்றும், தொழில்கள் சம்பந்தமாக யோசனைகள் சொல்லுவதற்கு இன்பர்மேஷன் பீரோ என்னும் ஆபீஸ்கள் ஸ்தாபித்தால் போதுமென்று சொல்லிவிட்டார். ஆனல் தொழில்களைப் பற்றி ஆலோசனைகளும் விஷயங்களும் தெரிவிப்பதென்றல், உண்மையில் தொழில்களைப்பற்றி பரீக்ஷைகள் நடத்தி அவைகளை அனுசரித்தே ஆலோசனைகள் சொல்ல வேண்டும்.

வங்காளத்தில் ஒரு நெருப்புக் குச்சித் தொழில்சாலை வேலை நிறுத்தி யிருக்கிறது இன்னொரு தொழில்சாலை சீக்கிரம் வேலையை நிறுத்தி விடுமென்று தெரிகிறது. இந்த இரண்டு தொழில் சாலையும் கடைத்தேருமல் போனதற்குக் காரணம் மூலதன மில்லாமையே. இவைகளுக்கு நெருப்புக்குச்சி செய்வதற்கு ஏற்ற மரம் கிடைப்பதும் கஷ்டமா யிருக்கிறது. இதற்கு கவர்ன்மெண்டார் காட்டிலாகாதாருடன் சேர்ந்து நெருப்புக் குச்சித்தொழில் சம்பந்தமாக பரீக்ஷைகள் நடத்தினல் ரொம்ப நன்மையாக இருக்கும்.

மேலும் கவர்ன்மெண்டார் இந்ததேசத்தில் செய்த சாமான்களை இப்போது ஆதரிப்பதைவிட அதிகமாக ஆதரித்து வர வேண்டும். இந்தியாவிலுள்ள கவர்ன்மெண்டுகள் தங்களுடைய ஆபீஸ்களுக்கு வேண்டிய சாமான்களை விசேஷமாய் இங்கிலாண்டிலிருந்து தருவித்துக் கொள்ளுகின்றன. இன்ன சாமான்கள் வேண்டுமென்று இங்கிலாண்டுக்கு பட்டி அனுப்புமுன், இந்தியாவிலுள்ள கம்பெனிகளுக்கு டெண்டர் கொடுக்க வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். இந்தியக் கம்பெனிகளிடம் அதிக சமான்கள் வாங்காமல் குறைவாய் வாங்குவதால், இந்தியக் கம்பெனிகள் அதிகசாமான்கள் வாங்கினல்என்ன விலை சொல்லுமோ அதைவிட அதிகமாகவே விலை சொல்லவேண்டி யிருக்கிறது ஆகையால் இது விஷயத்திலும் கவர்ன்மெண்டார் அதிக சௌகர்யங்கள் செய்துகொடுக்க வேண்டும்.

கைத்தொழில் சம்பந்தமாக கவர்ன்மெண்டார் இன்னும் சில சௌகர்யங்கள் செய்து கொடுக்க வேண்டும். (1) சிறு தொழிலாளிகள், அதாவது பருத்தி நூல் நெசவுகாரர்கள், பட்டு நெசவுக்காரர்கள், பித்தளை வேலைக்காரர்கள் ஆகிய இவர்களுக்குள் கோவாபரேடிவ் சங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டும். இந்த சங்கங்களை மேற்பார்வை பார்க்கும் அதிகாரி தொழில்களுக்கு வேண்டிய சரக்குகளை வாங்குவதிலும், செய்யப்பட்ட சாமான்களை விற்பதிலும் தொழிலாளிகளுக்கு உதவி செய்ய வேண்டும். (2) சீர்திருத்திய முறைகளையும் கருவிகளை உபயோகிக்கும் விதத்தையும் அவைகளால்ஏற்படும் சௌகர்யத்தையும் தக்க விடங்களில் ரூபித்துக்காட்ட வேண்டும். (3) நெருப்புக்குச்சி. பேனு, பென்சில் ஆகிய இந்தத் தொழில்களுக்கு ஏற்ற மரங்கள் சௌகர்யமான நிபந்தனைகளின் மேல் சப்ளை செய்ய காட்டிலாகாதார் பிரத்தியேகமான ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

இவ்விதம் கவர்ன்மெண்டார் செய்து வந்தால் கைத்தொழில்களைக் கூடிய மட்டும் ஆதரித்ததாகும். மற்ற தொழில்விஷ



யங்களை ஜனங்களே கவனித்துக் கொள்ள வேண்டும். ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகள் தொழில்கள் நடத்துவதைவிடபணமுள்ளவர்கள் ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனியாகச் சேராமல் சொந்தத்தில் தனியாக நடத்துவது நல்லது. அவர்கள் தொழில் துறைகளில் நல்லலாபம் வருமென்று காட்டினல் பணமுள்ள மற்றவர்கள் காலக்ரமத்தில் தொழில் துறைகளில் பணம்போட முன் வருவார்கள். ஜனபிமானி.

---

## நூதன கைத்தொழில், முயற்சிகளும், அபிப்பிராயங்களும்.

---

### கைத்தொழில் நெசவு.

ஆனரெபில் மிஸ்டர் சாட்டர்டன் ஸமீபத்தில் 'ஹிந்து' பத்திரிகைக்கு எழுதியிருக்கும் ஒரு வ்யாசத்தில், கைத்தறி செலவில் திருத்தங்கள் செய்யும் விஷயமாய் இரண்டு ஆலோசனைகள் சொல்லுகிறர். முதலாவது, நெசவுக் காரர்களுக்கு தற்காலமுள்ள முக்ய கஷ்டம் பாவுநூல்கள் தயார் செய்வதில் உண்டாகிறதாகையால், இங்லண்டில் உபயோகப் படுத்தப்படும் ஒரு விதமான ட்ரெஸ்ஸிங் மெஷீனை நம் நெசவுக்காரர்களும் உபயோகப்படுத்துவார்களானல் மேற்கூறிய கஷ்டம் நீங்கும். இந்த ட்ரெஸ்ஸிங் மெஷீனல் தினத்துக்கு 1000 கஜம் முதல்தரமான பாவுநூல்கள் செய்யக்கூடும். ஆனல் அந்த மெஷீனை உபயோகப்படுத்துவதற்கு விசேஷத் திறமையும் அனுபோகமும் அவஸ்யம். செலவும் அதிகமாய்ப் பிடிக்கும். ஆகையால், அதனற்செய்யப்படும் நூல்களை உபயோகப்படுத்துகிறவர்கள் இருந்தாலன்றி அது ப்ரயோஜனப்படமாட்டாது. நூறு அல்லது இருநூறு தறிகளை ஒரு சாலையில் ஒன்று சேர்த்து, இந்த மெஷீனை உபயோகப்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட தொழிற்சாலை அல்லது பாக்டரி ஸ்தாபிப்பதற்கு அதிகப் பணம் வேண்டுமாகையால்கவர்மெண்டுடையஉதவியைப்பெற்று ஒரு தொழிற்சாலையை ஸ்தாபித்துப் பார்க்கலாமென்று அவர் செல்லுகிறர்.

அவர் சொல்லும் அன்னெர் ஆலோசனை என்னவென்றல், கறைகள் போட்டதுணிகள் செய்வதில்நெசவுக்காரர்களோடு மான்செஸ்டர் வர்த்தகர்கள் போட்டிபோடுவது சாத்யமல்ல. நமது நெசவுக்காரர்கள் வெகு நேர்த்தியானகறைகள்போட்டு துணி செய்கிறர்கள். அதைக் கையினல் செய்ய அதிகநாள் பிடிப்பதால் தகுந்த லாபம் கிடைப்பதில்லை. ஜாக்கார்டு மெஷீன் என்னும் யந்த்ரத்தால் கறைகள் வெகு எளிதாய்ப் போட்டு விடலாமென்றும், அந்த மெஷீனை இந்திய நெசவுக்காரர்கள் உபயோகப் படுத்த வேண்டு மென்றும் அவர் சொல்லுகிறர்.

### ரம்பத்தூள்.

சாதாரண ரம்பத்தூளிலிருந்து ரொம்ப உயர்ந்த அல்கஹாம் சாராயம் தயார் செய்யலாம். 290 ராத்தல் ரம்பத்தூளிலிருந்து 5பட்டணம்படிசாராயம்கிடைக்கும். மேல்நாடுகளில் பிர்ச் என்று ஒரு மரம் இருக்கிறது. அதை அறுக்கும்போது கிடைக்கும் ரம்பத்தூளில் சில ராஸாயனப் பொருள்களைக் கலந்து பக்குவம் செய்து சர்க்கரை உண்டாக்கலாம்.

இன்னும் விளையாட்டு பொம்மைகள் செய்வதில் ரம்பத்தூள்களை உபயோகிக்கிறர்களாம்.

*.*

நெருப்புக்குச்சிகளை செய்ய உதவும்படியான மரம் மைசூர் காடுகளில் எவ்வளவு கிடைக்குமென அத்தொழிலில் கைதேர்ந்தவரைநியமனஞ்செய்ததில்அவர் வருஷத்தில் 13,000 கன அடி அகப்படுமென்று தெரிவித்திருக்கிறர். இதோடு ஷைமுகவில் இதற்காக ஒரு பிரைவேட் வேலைச்சாலை. ரூ. 50,000 முதல்வைத்து தொடங்கப்போகிறர்கள்.

எட்டமண்ணூர் என்னும் கிராமத்தில் திருவாங்கூர் சமஸ் தானத்தில் அதிகமான கரும்பு சாகுபடி செய்யும் இடமாகும். அங்கு ஒரு சக்கரைத் தொழிற்சாலை ஏற்பாடாகப்போகிறது. அதற்கு உற்பத்திபெறுஞ் சக்கரை வட திருவாங்கூரிலுள்ள பல ஆலயங்கட்கென்று வாங்கிக்கொள்வதாகத் தர்பார் சம்மதித்திருக்கின்றனர். அத்துடன் ஆயிரம் ஏக்கர் நிலமும் ரிஜிஸ்தர் செய்தளித்திருக்கின்றனர். சக்கரைத் தொழிற் கற்பிக்க ஒரு பாடசாலையும் அக்கிராமத்தில் ஏற்படுமாம்.

மத்திய இந்தியாவிலுள்ள கோடாசமஸ்த்தானத்தார் அங்கு ஒரு கண்ணாடித் தொழிற்சாலை ஸ்தாபிக்கப் போகிறதாகத் தெரிகிறது.

* * *

திருவாங்கூரின் ஒரு பக்கத்தில் நல்ல அபிரேக் அகப்படக்கூடும் அதனால் சிம்னி கிண்ணம், தட்டு முதலியனவும் செய்யப்படுகிறது. மருந்துக்கும் உதவும். அது கிடைக்குமிடங்களை அறிந்து எடுக்கும் லைசென்ஸை இந்தியர் ஒருவர் கேட்டும் அவருக்குத் தராமல் ஒரு ஐரோப்பியருக்குத் திருவாங்கூர் சமஸ்தானத்தார் தந்துவிட்டனர்.

* * *

காக்கி சாயத்துக்கு அவசியம் வேண்டியிருக்கும் மஞ்சாசாயம் பிரிட்டிஷ் தீவுகளில் குறைவுபட்டுப் போனதால் ஜமாக்காவில் விளையும் ஒருவித மரத்திலிருந்து இச்சாயம் உற்பத்தியாகும் வழியைக் கண்டு பிடித்து கவர்ன்மெண்டார் தங்கள் செலவில் உள்ளூராரிடம் வாங்கிகிங்ஸ்டன் துறைமுகத்தி லேற்றுமதி செய்கின்றனர்.

* * *

கொச்சி சமஸ்தானத்தைச் சேர்ந்தஒருவர் சமஸ்தானத்து செலவில் தோல்பதஞ் செய்யுங் கைத்தொழிலில் இங்கிலாண்டில் தேறி வந்தவரைக்கொண்டு சமஸ்தானத்தாரும் உள்ளூர் வர்த்தகர்களுஞ் சேர்ந்து இத்தொழிலை நடத்த தர்பார் சேரப்பட்டது.

பாடலீபுரத்தில் மாதர்களுக் கென்று கவர்ன்மெண்டார் ஒருதொழிற்பாடசாலை ஸ்தாபித்து, தய்யாட் சரிகை,ஜிகினா வேலைகளைக் கற்பித்துத்தர ஏற்பாடு செய்துள்ளார். இந்த வேலைகள் மாதர்களால் செய்யப்பட்டு அவற்றின் விற்பனைப்பணத்தால் அத்தொழிற்கூடம் நிர் வகிக்கப்படும்.

### 55-ஆயிரம் பவுன் விலையுள்ள ஒரு நவீன பீரங்கி.

ஆஸ்டிரேலியாவில் உள்ள மெல்போர்ன் என்ற பட்டணத்தில் மிஸ்டர் கால்ட்வெல் என்பவர் ஒரு புதுப் பீரங்கியைத் தயாரித்து 55-ஆயிரம் பவுனுக்கு விற்றார். அதை வாங்கியவர்கள் அவரையே வருஷம் ஒன்றுக்கு ஆயிரம் பவுன் சம்பளத்திற்கு வைத்துக்கொண்டு புதுப் பீரங்கி செய்கிறார்கள். புதுப் பீரங்கியில் உள்ள இரண்டு குழாய்களின் மூலமாக ஒரு நிமிஷத்தில் ஆயிரம் முறை சுடலாம். ஒரு குழாயே ஒரு நிமிஷத்தில் 600முறை சுடுமாம். இப்பீரங்கியைக் கடற்படை அதிகாரிகட்கு அனுப்புவாராம். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் பல பீரங்கிகட்கும் உத்தரவு செய்யக்கூடு மென்றும் நம்பப்படுகிறது. மனுஷ்யன் தன்னை உபயோகிக்கிற விதத்திற்கு தக்கபடி எல்லாம் அவன் புது புது விதமாக வெல்லாம் தயாராகிக்கொண்டு விடுகிறான்.

### ஜெர்மனியரின் நவீன தந்தி.

ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் ஒரு புது மாதிரியான தந்தியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஒரு தூரதிருஷ்டி கண்ணாடியில் மின்சார வெளிச்சம் ஏற்படுத்தி அதன் வெளிச்சத்தால் சமாசாரத்தைத் தெரிவிக்கிறார்கள். ஆனால் இதனால் 5-மயில் தூரம் வரையில்தான் சமாசாரம்தெரிவிக்க முடியும்.

ஜெர்மனியர் பீரங்கிகளுக்கு தானாகவே குண்டுகளைப் போட்டுக் கொள்வதற்காக நவீனமாய் செய்திருக்கும் ஒரு யந்திரம் நேச அரசர்களுக்கு ஆச்சரியத்தை கொ



டுக்கத்தக்கதா யிருக்கிறதென ரொட்டர்டாம் டெயிலி மெயில் நிருபர் தெரிவிக்கிறார். பகைவர் மீண்டும் மேற்கில் யுத்தஞ் செய்ய ஆரம்பிக்கிறபோது முன்னெப்பவும் சம்பவியாத வேகத்தோடு பீரங்கி பிரயோகிக்கப்படும்.

* * *

மைசூரில் பென்சில் தொழிற்சாலை:— மைசூர் சமஸ்தானத்தில் பென்சில் செய்யும் சாலை ஏற்படுத்தினால் அது விருத்தியடையுமா என்ற விஷயத்தைச் சோதித்து ரிபோர்ட்டு செய்யும்படியாக மைசூர் கவர்ன்மெண்டார் பென்சில் தொழில்கற்ற நிபுணர் ஒருவரை கொஞ்ச காலத்திற்கு முந்தி நியமித்தார்களென்று ஏற்கெனவே மித்திரனில் சொல்லி யிருக்கிறோம். அவர் சோதனை செய்துபார்த்து ஷிமுகாக் காடுகளில் பென்சல் செய்யப்படுவதற்கு ஏற்ற மரங்கள் ஏராளமாய்க் கிடைக்கின்றனவென்றும், அத்தொழிலை மைசூரில் நடத்தினால், தாராளமாய் பென்சில்கள் விற்பனையாகு மென்றும் சொல்லியிருக்கிறார். அத்தொழிலை நடத்துவதற்கு வேறு கம்பெனிகள் வெளிவராத பட்சத்தில் 1½ லட்சம் ரூபாய் மூலதனம் வைத்து அத்தொழிலை கவர்ன்மெண்டார் நடத்தி வருவார்கள்.

### வாழை நாரெடுக்கும் யந்த்ரம்.

மைசூரில் தொழில் டிரெக்டராயிருந்து வரும் மிஸ்டர் சாட்டர்ட்டன் என்பவர் வாழைமட்டையிலிருந்து நார் எடுக்க ஒரு யந்த்ரம் கண்டு பிடித்திருப்பதாகத் தெரியவருகிறது. இதன் உதவியால் எடுக்கப்படும் நார் ரொம்ப வெண்மையாயும் உறுதியாயும் இருக்கிறதாம். யந்த்ரத்தின்விலை ஐந்தாறு ரூபாய்க்கு மேலில்லையாம். அதைக்கொண்டு கற்றாழைமுதலியவைகளிலிருந்தும் நாரெடுக்க முடியுமாம் ஸ்திரீகளுங்கூட அந்த யந்த்ரத்தை உபயோகிக்கக் கற்றுக்கொள்ளக்கூடும்

---

### நீதிவசனம்.

1. மூடர்கள் குளிர்நீங்கி யிருக்கும பொழுது உடையையும், பிற்பகலில் போஜனத்தினையும், விடியற் காலத்தில் கிரீடாரம்பத்தையும், யௌவனப் பருவத்தின் முடிவில் பெண்களுடன் விவாகத்தையும், நீர் வடிந்தபின் அணைகட்டு தலையும், விருத்தப் பருவத்தில் தீர்த்த யாத்திரையையும், பணம்போன பின் கொடையையும் செய்ய விரும்புகிறார்கள்.

2. நிறைகுடம் சப்திப்பதில்லை. குறைகுடம்தான் சப்திக்கின்றது.இது நிச்சயம் நற்குலத்தி லுதித்தவனும் வித்வானுமான புருஷன் கர்வமடைவதில்லை.குணமற்றவர்கள் தான் அதிகமாகப் பேசுவார்கள்.

3. ஐஸ்வர்யத்தை விரும்பும் புருஷனால் உறக்கம், சோம்பல், பயம், கோபம், மந்தமாயிருக்கை, யோஜிக்காமல் செய்கை இந்த ஆறுதோஷங்கள் போக்கடிக்கத் தக்கவைகள்.

4. நற்புத்தியுள்ள மனிதன் ஜோதிஷரற்ற கிராமத்தையும், வித்வானில்லாத ராஜ சபையையும், வேதமற்ற முகத்தையும், மன்னனில்லாத தேசத்தையும், கெட்ட ஆசாரமுள்ள மனைவியையும், அறிகையற்ற காவியத்தையும், சொல்லும் திறமையற்ற குருவையும், விட்டு விடுவன்.

5. நல்ல பண்டிதர்கள், மதுபானத்தில் பிரியமுள்ள வைத்தியனையும்,அத்தியயனமற்ற அந்தணனையும், கெட்ட புருஷனை வீரனையும் வேகமில்லாத குதிரையையும், மூர்க்கனான சந்நியாசியையும், கெட்ட மந்திரிகளால் சூழப்பட்ட அரசனையும், உபத்திரவத்துடன் கூடியதேசத்தையும், யௌவனப் பருவத்தால் கர்வியாய் அன்னிய புருஷனிடத்தில் ஆசையுள்ள மனைவியையும் தள்ளிவிடுவார்கள்.

6. தாம்பூல மற்ற முகத்தையும், விபூதி யற்ற முகத்தையும், வேதவசன சூந்யமான நாவையும், சிரவணத்திற் கொடுக்காத காதையும், நதியில்லாத கிராமத்தையும், அறிவாளிகளால் சூன்யமான சபையையும், நெய்யற்ற போஜனத்தையும், தங்கையற்ற படுக்கையையும், தள்ளவேண்டும்.

7. தனமற்றவன் ஒரு நூறுள்ளவன் பத்து நூறையும், பத்து நூறுள்ளவன் நூறு நூறையும் (லக்ஷத்தையும்,) லக்ஷமுள்ளவன் பூமிக்கு அரசனா யிருப்பதையும், பூமிக்கு அரசனாயிருப்பவன் சக்கிரவர்த்தியாயிருப்பதையும், சக்கிரவர்த்தியா யிருப்பவன் இந்திரபதவியையும், இந்திரன் பிரமன் பதவியையும், பிரமன் விஷ்ணுபதவியையும், விஷ்ணு சிவபதவியையும் விரும்புகிறார்கள். ஆதலின், ஆசையின் முடிவை அடைந்தவன் யார்?

8. பறவை, பசுக்கள் கட்டுப்படுகின்றன. கிளிப்பேடுகள் இனிமையாய்ப் பாடுகின்றன. எவன் கொடுக்கத் திறமையுள்ளவனோ, அவனே சூரன். அவனே பண்டிதன்.

9. தனமிருப்பின் கொடுத்தல் வேண்டும். புசிக்கவேண்டும். குறைக்குதல்கூடாது வண்டுகளால் (அலைந்து) சம்பாதிக்கப்பட்ட (தேன்ரூபமான) தனத்தை அன்னியர்கள் அபகரிக்கிறார்கள் பார்?

10. கொடையால் பிராணிகள் சுவாதீனமாகின்றார்கள். கொடையால் தேவதைகளும் நசிக்கின்றன, கொடையால் சத்துருவும் மித்திரனாகிறான். கொடைபுரிதலே நன்று, அரியவும்.

11. தனமுள்ளவர்களுக்கு இவ்வுலகில் சத்துருவும் மித்திரனாகிறான். வறுமையுடையோருக்கு தன்பந்துவும் அப்பொழுதே சத்துருவாகிறான்.

12. விரிவான அறிவுடையவனா யிருந்தாலும் (தனம்) பணக்குறைவுடைய மனிதனின் புத்தி, யுக்தி, எப்பொழுதும் நெய்: உப்பு, எண்ணெய், அரிசி, உடை, விறகு இவைகளின் சிந்தையினால் கெடுக்கப்படுகின்றன.

13. பந்து ஜனங்களின் மத்தியில் தனமில்லா ஜீவனத்தைக்காட்டிலும், புலி, யானைகளால், நிறைந்ததும், விருக்ஷங்களையே வீடாக உடையதுமான ஆரண்யமும், தழை, பழம், நீர், இவைகளைப் புசித்தலும், புல்லுப் படுக்கையும், மரையுருவி ஆடையும் சிறந்தன.

14. சபையில்கொடியோன்ஒருவனிருந்தாலும், வித்வான்களின், எல்லாப் பிரயர்சையையும் வியர்த்தமாகச் செய்துவிடுகிறான் கஷ்டம்? ஒன்றாயிருந்தாலும் ஈயானது மதுரபதார்த்தங்களால் நிறைந்த வயிற்றைக் கலக்கி வாந்தி பண்ணும்படி செய்யவில்லையா?

15. எவ்விதம் தருணிகள் நாயகனை அனுசரிக்கிறார்களோ? எவ்விதம் நதிகள் கடலை அடைகின்றனவோ? எவ்விதம் பறவைகள் விருக்ஷத்தை அடைகின்றனவோ? அவ்விதமே எல்லா குணங்களும் தனத்தை அநுசரிக்கின்றன.

16. மஹானாயிருந்தாலும், எவன் தான் தனவானை அநுசரிக்கவில்லை. பரமசிவன் குபேரன் வீட்டுச் சுவற்றின் சமீபத்தை சேவிக்கிறானன்றோ?

17. கல்வியினாலும் நற்குலத்தினாலும் கௌரவம் உண்டாவதில்லை. தனமுள்ளவர்களிடத்தில் ஜனங்களுக்கு எப்பொழுதும் ஆசை (உண்டாகிறது.) பரமசிவன் சிரசில் கங்கையை, தரிக்கப்பட்டிருந்தபோதிலும்கடலையே சீக்கிரம் அடைகின்றது.

18. மனிதப் பிறவியில் புருஷத்தன்மையும், புருஷப் பிறவியில், அந்தணத் தன்மையும், அந்தணப்பிறவியில் அதிகக் கல்வித் தன்மையும். அதிககுணத் தன்மையும், அதிகக் கல்வியுள்ள பிறவியில்பொருளறியும் சக்தியும், பொருளறியும் சக்தியுடையோனுக்குபேசுந் திறமும், பேசுந்திறமையுடையவனுக்கு உலகஞானமும், உலகஞானமுடையவனுக்கு (எல்லா சாஸ்திரங்களிலும் வித்வானுமானவனுக்கு). தர்மத்தில் புத்தியும் அரிது.



19. ஆதாவற்றவர்களின் வீட்டை எவர்கள் விசாரியாமல் அடைகிறார்களோ? அவர்களின் பிராணன்களுக்கு உடனே அவமானங்கள் உண்டாகின்றன.

20. உத்சவத்திலும் மங்கள காலத்திலும் பிதாவின் வீட்டையாவது சகோதரர்களின் வீட்டையாவது பந்துவின் வீட்டையாவது அன்னியர்கள் வீட்டையாவது கூப்பிட்டப் பிறகுதான் செல்லவேண்டும்.

21. மங்கள காரணன சிவனால் சிரசில் தரிக்கப்பட்டபோதிலும் சந்திரன் குறைவை அடைகிறான். ஆதலின் பிறரை நம்பியிருத்தல் கஷ்டம்.

22. நக்ஷத்திர மண்டலத்தைப் பரிவாரமாக உடைத்தானவனும், (சிறந்த) ஓஷதிகளுக்கெல்லாம் நாயகனும். அமிர்தமயமான சரீரமுடையவனும், (சிறந்த) சாந்தியோடு கூடியவனுமிருந்தபோதிலும், சந்திரன் கதிரவனின் மண்டலத்தை அடைந்து காந்தியற்றவனாகிறான். பிறர்வீட்டை அடையும் எவன்தான் குறைவை அடையவில்லை.

23. ஏ! பாண்டுபுத்ரா நீரற்றவிடத்தில் மழைபோலவும், பசியுள்ளவனிடம் போஜனம்போலவும், வறுமை யுள்ளவர்களிடம் கொடுக்கும் தானம் அபலமாகும்.

24. ஏ, குந்திபுத்ரா! தரித்திரர்களைப் போஷிக்கப், பணமுள்ளவனிடம் தனத்தைக் கொடுக்காதே. நோயுள்ளவனுக்குத்தான் ஔஷதம் பத்தியம். நோயற்றவனுக்கு ஔஷதங்களால் என்னபயன்?

25! பெண் பிறந்ததென்று பெருஞ்சிந்தை, கொடுத்த பிறகுதான் சுகத்தை அடைகிறாளோ? இல்லையோ? என்பது (இன்னும்) பெருஞ்சிந்தை

26. ஆதலின். பெண்ணுக்குத் தகப்பனாயிருப்பது கஷ்டமல்லவா? (ஒரு) பெண்ணுக்குத் தகப்பனாயிருப்பதே அதிகத் துயரத்திற்குக் காரணம். அநேகம்பெண்களிருப்பின் சிந்திக்கவேண்டுவதில்லை. அப்படியிருந்தும் மருமகன் துஷ்டனாயிருந்தால், அதைக்காட்டிலும் வேறுநரகவேதனையேன்?

27. தன்னால் பிரசித்தி யுள்ளவர்கள் உத்தமர்கள் தந்தையால் பிரசித்தியுள்ளவர்கள் மத்திமர்கள். மாமனால் பிரசித்தியுள்ளவர்கள் அதமர்கள். மனைவியின், தந்தையால் பிரசித்தியுள்ளவர்கள் அதமாதமர்கள். அதமர்கள் தனத்தை விரும்புகிறார்கள். மத்திமர்கள் தனம், மானம் இவைகளை விரும்புகிறார்கள் உத்தமர்கள் மானத்தை விரும்புகிறார்கள். மானமன்றோ? நல்லோர்களுக்கு தனம்.

28. அதிக ஐஸ்வர்யமுடையவனாயிருந்தாலும நீசனீசன், தான் சேவிக்கிறான். மஹான்களோ நீசனை வெகுதூரத்தில் தள்ளிவிடுகிறார்கள். மதுரமாயும் பக்குவமாயுமுள்ள பழங்களால் நிறைந்திருந்தாலும். எலவமரத்தை காக்கைக்கூட்டங்கள் சேவிக்கின்றன. ராஜ ஹம்சங்கள் சேவிப்பதில்லை.

29. ஆசிரிபரை பிரயோஜன நிமித்தம் பூஜிக்கிறார்களே யொழிய பத்தியால் பூஜிப்பதில்லை பாலைக் கொடுப்பதென்று பசு வீட்டில் போஷிக்கப் படுவதொழிய தர்மத்தினால் போஷிக்கப்படவில்லை.

30. கெட்டவிருக்ஷத்தைக் காட்டிலும் சூந்யமான கொட்டில் சிறந்தது. கெட்டகுணமுடைய குலநங்கையைக் காட்டி

லும் வேசியான மனைவிமேல். விவேக மற்றவர்களின்பட்டணவாசத்தைக்காட்டிலும், ஆரண்யவாசம் சிறந்தது. அதமர்களுடன் சேர்க்கையைக் காட்டிலும், பிராணனை விடுதல் நன்று.

31. எவன் கெட்ட காரியத்தில் ஆசை உடையவனோ, அவனே குருடன், எவன் நல்லவார்த்தைகளைக் கேட்க வில்லையோ? அவனே செவிடன். எவன் காலத்தில் பிரியங்களை சொல்லஅறியவில்லையோ? அவனே ஊமை.

32. கல்வி கற்பதிலும், நல்ல ஔஷதங்களிலும், கொடையிலும், பிரயத்தினம். செய்யத் தகுந்தது தீயோர்கள், அன்னிய மாதர்கள், பிறர்தனம் இவைகளில் உபேக்ஷை செய்யவேண்டும்.

33. எவ்விடம் வசிக்கவேண்டும்? வாரணசிபுரத்திலிப்போல் நல்லோர்கள் முன்னிலையில் கோள் சொல்லுவோரால் நிறைந்ததும் லோபியான அரசனுடையதுமான தேசம் தள்ளத் தகுந்தது. தர்மமெது? தினந்தோறும் ஆரோக்கியம்.

34. உத்சவ காலத்திலும், வியசனகாலத்திலும், துர்பிக்ஷகாலத்திலும், ராஜ்யம் நழுவிப்போன காலத்திலும் அரசன் முன்னிலையிலும், சுடுகாட்டிலும் எவன்பின் தொடருகிறானோ? அவனே பந்து.

35. நக்ஷத்திரங்களுக்கு அணி நிசாசரன். நங்கையர்களுக்கு அணி நாயகன், பூமிக்கு அணி அரசன், எல்லா வற்றிற்கும் கல்வி அணி.

36. குதிரைக்கு வேகமும், நங்கையர்க்கு நாணமும் தபஸ்விக்கு இளைப்பும், அந்தணனுக்குக் கல்வியும், பூபதிக்குப் பொறுமையும், வில்லாளிகளுக்கு பராக்கிரமும் அணி (அணி யென்றால் அலங்காரம் என்று பொருள்.)

37. ஆகாசத்திற்கு சூரியனும், தாமரைக் காட்டிற்கு வண்டும், வார்த்தைகளுக்கு சத்தியமும், ஐஸ்வரியத்திற்கு கொடையும், மனதிற்கு ஸ்நேகமும், வசந்த காலத்திற்கு மன்மதனும் சபைக்கு நல்ல வார்த்தையும்; எல்லா ஜனங்களுக்கும் வணக்கமும் அலங்காரம்.

38. அரசர்களுக்கு நீதியும், குணமுள்ளவர்களுக்கு வணக்கமும், நங்கைகளுக்கு நாணமும், தம்பதிகளுக்கு புணர்ச்சியும், வீட்டிற்குக் குழந்தைகளும், புத்திக்குக் கவனமும், வாக்குகளுக்கு பிரசாதமும், சரீரத்திற்கு அழகும், நல்ல மனதிற்கு வேதமும், அந்தணனுக்குப் பொறுமையும், சக்தி யமைந்தவனுக்கு சாந்தியும் கிருஹஸ்தர்களுக்கு தனமும், நல்லோர்களுக்கு கவலையின்றி இருப்பதும் அழகு.

39. உயர்பதவியை அடைந்திருந்தாலும் பூஜயர்களை அவமதிக்கக் கூடாது. நஹுஷன் இந்திரபதவியை அடைந்து அகஸ்திய அவமானத்தால் நழுவி விட்டான்.

பாரதி,
சென்னை.

---

### நீதி கௌமுதி.

குண வீனனானவன் குணவானை யடையில் அவன் ஒரு வாறு திருந்தி நற்குணத்தையடைகிறான் பாதிரிப்பூவின் சேர்க்கையால் துற்கந்த நீரும் சுகந்தமாகின்றன.

மனிஷ்யர்கள் ஓர் நற்குணத்தைக் கொண்டே பலதுற்குணத்தையும் பொறுத்துக் கொள்கின்றார்கள்.

தேன் அடையில் புழுக்கள் எத்தனை உள் நிறைந்திருப்பினும் அதன் (அசுசியைப் பொறுத்து) ருசியையே விரும்புகிறார்கள்.

---



### விவசாயக் கொத்து.

#### வேர்க்கடலை.

பிரிட்டிஷ் ராஜ்யத்தில் பற்பல பாகங்களில் சுமார் 70 லக்ஷம் அந்தர் நிறையாயுள்ள வேர்க்கடலை உற்பத்தி யாகிறது. இதில் பெரும்பாகம் இந்தியாவிலும், ஆப்ரிக்கா கண்டத்திலுள்ள காம்பியா நைஜீரியா என்னும் பிரதேசங்களிலும் விளைகிறது. இந்தியாவில் விளையும் வேர்க்கடலையில் பெரும்பாகம் பிரான்சிலுள்ள மார்சேல்சுக்குப்போகிறது. ஆனால் இந்தயுத்த சமயத்தில் மார்சேல்சில் அவ்வளவு வேர்க்கடலை வேண்டியிராததாலால், லண்டனிலுள்ள இம்பீரியல் இன்ஸ்டிட்யூட் என்னும் சங்கத்தார் இந்தியாவிலும் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலும் விளையும் வேர்க்கடலையை இங்கிலாண்டில் உபயோகிக்கும்படி, அதாவது, இங்கிலாண்டில் வேர்க்கடலை எண்ணெயாடுதல், பிண்ணாக்கிலிருந்து கால்நடைத்தீனி தயார் செய்தல் முதலிய தொழில்களை ஸ்தாபிக்கும்படி தூண்டி வருகிறார்கள். இங்கிலாண்டில் பிரபல எண்ணெய் வியாபார ஸ்தலமாகிய ஹல் என்னும் பண்டணத்துக்கு இந்தியாவிலிருந்து கொஞ்சம் வேர்க்கடலை ஏற்றுமதியாகி யிருக்கிறது. வேர்க்கடலைப் பிண்ணாக்கு மற்றெல்லாப் பிண்ணாக்குகளையும் விட உயர்ந்த கால்நடைத்தீனியாக இருக்கிறதாம். இந்தப் பிண்ணாக்கு லண்டனில் நன்றாய் விலைபோகிறதாம். இங்கிலாண்டில் வேர்க்கடலை யெண்ணெ யாட்டுந் தொழில் அபிவிருத்தியடையுமானால், இந்தியாவில் வேர்க்கடலை பயிரிடும் விவசாயிகளினுடைய கஷ்டம் ஒருவாறு நீங்கக் கூடும்.

#### சர்க்கரை வள்ளி.

புல் நிறைந்த தரிசு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவர பேஹார் மாகாணத்தில் விவசாயிகள் முதலில் சர்க்கரை வள்ளியைப் பயிரிடுகிறார்கள். அப்படிப் பட்ட நிலங்களை சாதாரணமாய் உழுது பயிரிட்டால் ஒரு பயிரும் நன்றாய் வளருவ தில்லையாம். புல்நிலங்களில் மண்ணிற்குள் நல்ல காற்றோட்ட மிருப்பதில்லை. மண் ரொம்ப கெட்டியாயிருக்கும். ஆனால் இப்படிப்பட்ட நிலங்களில் மற்ற பயிர்கள் வளராவிட்டாலும் சர்க்கரை வள்ளிக்கிழங்கு மாத்திரம் நன்றாய் வளருகிறது. ஏனென்றால் அதன் வேர்கள் மெதுவாகப் பருத்து கிழங்காகும்போது. அவை அடி மண்ணை உடைத்து நல்ல காற்றோட்டமிருக்கும்படி செய்கின்றன. மேலும் சர்க்கரை வள்ளி சாகுபடி செய்யும் முதலில் உழுவதாலும், கிழங்கை வெட்டும்போதும் மண்ணை நன்றாய் கிளறிவிடுவதாலும், மண்ணுக்குள் காற்றோட்டத்துக்கு இன்னும் சௌகர்யமேற்படுகிறது. புல்நிலங்களில் முதலில் ஒரு தடவை சர்க்கரை வள்ளிக்கிழங்கைப் பயிரிட்டுவிட்டால் பிறகு அந்தநிலம் சாதாரண சாகுபடிக்கு ஏற்றதாய் விடுகிறது.

#### வாழையின் உபயோகங்கள்.

தென்னமெரிக்காவில் கயானா என்னும் தேசத்திலுள்ள ஸ்தேச ஜனங்கள் வாழைப்பழத்திலிருந்து ஒருவிதசாராயம் செய்கிறார்கள். பழங்கள் நன்றாய் பழுத்தவுடன் அவைகளைச் சேகரித்து தோலை உரித்து ஒரு சற்று ஆழமான பெரிய தட்டில்போட்டு, அப்படியே சில நாள் வைத்துவிடுகிறார்கள் பழமானது புளிக்கும். அதிலிருந்து ஒருவித திராவகம்உண்டாகிறது. அந்ததிராவகத்தைத் தனியாக வடித்தெடுத்துகுப்பிகளில் போட்டுவைத்து வேணடும்போது குடிக்கிறார்கள். இதற்கு அவர்கள் 'ரம்' சாராயம் என்று பெயரிட்டிருக்கிறார்கள். இது ரொம்ப காரமாயும், போதை கொடுக்கக்கூடியதாயும் இருக்கிறது. இதை அதிகமாகக் குடித்துவிட்டால் இரண்டு மூன்று நாள் வரையில்கூட போதை போவதில்லை.

கயானா தேசத்திலும் மேல் இந்திய தீவுகளிலும் வாழைக்காய் மாவை குழந்தைகளுக்கும் வியாதிஸ்தர்களுக்கும் ஆகாரமாக உபயோகிக்கிறார்களாம்." வாழைக்காயின் மேலுள்ள தோலை உரித்து விட்டு,

உள்ளேயிருக்கும் பாகத்தை சன்னமாக நறுக்கி வெயிலில் உலர்த்தி, நன்றாய்க்காய்ந்த பிறகு, மாவாக அரைத்து சலித்துக்கொள்ளுகிறார்கள். காயை வெயிலில்காயப்போடுவதால் அதற்கு ஒரு இனியவாசனை உண்டாகிறதாம். ஆனால் காயை வெகு சீக்கிரம் காயவைக்க வேண்டுமென்றும், காலஸ்திதி சரியில்லாமல் தாமஸமாய்க் காய்ந்தால் மா அவ்வளவு நன்றாயிருப்பதில்லையென்றும் தெரியவருகிறது.

வாழைப்பழத்திலிருந்து காடி செய்ய ஒரு சுலபமான முறையிருக்கிறது. வாழைப்பழம் நன்றாய்ப் பழுத்தவுடன், அதைக்காமல் கூடைகளில்போட்டு கூடைகளை, திறந்த பீப்பாய்களில் வைக்க வேண்டும். பழங்கள் ஜலமாக மாற அது அந்தகூடைகளின் துவாரங்கள் வழியாக, பீப்பாய்க்குள் வைத்திருக்கும் பாத்திரங்களில் விழுகிறது. அந்த ஜலம் புளிப்படைந்து சீக்கிரம் காடியாக மாறுகிறது.

ஆனம், கொச்சின் சைனா, பிலிப்பைன் தீவுகள் ஆகிய இந்த இடங்களில் வாழைப்பட்டையை சர்க்கரையை சுத்தி செய்வதில் உபயோகிக்கிறார்களாம். பழுப்புச்சர்க்கரையை ஒரு அங்குல கனத்துக்குப் பரப்பி அதன்மேல் பச்சை வாழைப்பட்டையை சிறுதுண்டுகளாக நறுக்கி ஒருவரிசைபோட்டு அதன்மேல் பழுப்புச் சர்க்கரையை ஒரு அங்குலம் கனத்துக்குக்கொட்டி, இப்படிசர்க்கரையும் வாழைப் பட்டையுமாகப் பரப்புகிறார்கள். வாழைப்பட்டையிலுள்ள ஜலமானது. சர்க்கரையில் கலந்து அதிலுள்ள அழுக்கை க்ரஹித்து வடிந்து போகிறதாம். பாக்கி சர்க்கரை உயர்ந்த வெள்ளைச் சர்க்கரையாக நிற்கிறதாம்.

### மூங்கில்.

மூங்கில் கிராமவாசிகளுக்கு ரொம்ப உபயோகமுள்ள ஒரு பயிர். இது அநேக வேலைகளுக்கு உதவுகிறது. ஆனால் இது அதிகமாயுள்ள காடுகளுக்கு சமீபத்தில் உள்ள பிரதேசங்களில் தான் ஏராளமாய் உபயோகிக்கப்பட்டு வருகிறது. காடுகளில் உள்ள மூங்கில்களை தூரமான இடங்களுக்குக் கொண்டுபோக அதிக செலவு பிடிப்பதால், அவ்விடங்களில் அதிகமாக உபயோகிக்கப்படுவதில்லை. மைசூரில் 'கிரிபுதுரு' என்று பெயருள்ள ஒரு ஜாதி மூங்கில் பயிராகி வருகிறது. இது அநேகமாய் எல்லாவகை நிலங்களிலும் பயிராகக் கூடியது. சாதாரண மூங்கில்களோ நீர்த்தாங்கலான பள்ளங்களிலும், குளக்கரைகளிலும் மாத்திரம் விளையும் மைசூர் தினுசு அப்படியல்ல. விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் இதை முப்பதடிக்கு ஒரு கொத்தாக வேலியோரங்களில் பயிரிடலாம். இது 20-அடி முதல் 30-அடி உயரந்தான் வளரும். இதனால் தோட்டத்துப் பயிர்களுக்கு நிழல் கட்டாது- இதைப்பயிரிடும் போது ஆரம்பத்தில் இதன் இலைகளை ஆடுமாடுகள் தின்று அழித்திவிடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.

### புகையிலையை நாற்றுவிடுதல்.

புகையிலையை நாற்றுவிடுவதற்கு நாற்றங்கால் நல்ல செழிப்புள்ளதாயும், இருக்க வேண்டும். நாற்றங் காலை எப்படித் தயார்செய்ய வேண்டுமென்பதைப் பற்றி 'கமத்தொழில் விளக்கம்' சில குறிப்புகள் எழுதுகிறது.

தேங்காய்மட்டை அல்லது பழைய விறகுகளை நாற்றங்காலில் அடுக்கி நெருப்பு மூட்டி எரித்தால், புகையிலைச் செடிக்கு வேண்டிய பொடாஷ் என்னும் மா உணவு சத்து நிலத்தில் சேரும் மேலும் நெருப்பு மூட்டுவதால் நிலத்திலுள்ள பூச்சிகளின் முட்டைகளும் புல்பூண்டுகளின் விதைகளும் நாசமாகின்றன, மண்ணில் சாம்பல் நன்றாய்க் கலக்கும்படி நிலத்தை நன்றாய்க் கொத்திவிடவேண்டும்.

சாம்பல் நிலத்திற்கு நல்ல எருவாயிருப்பதோடு மண்ணையும் புலபுலப் பாக்குகிறது. நிலத்தைக்கொத்தி, மண்கட்டிகளை உடைத்து தூளாக்கி நிலத்தை சமனாகச் செய்யவேண்டும்.



நாற்றங் காலுக்கு நன்றாய் மட்கின பழைய எருவையே உபயோகிக்க வேண்டும். எரு அதிக காலம் மட்கியிருந்தால் அதிலிருக்கக்கூடிய புல் பூண்டுகளின் விதைகள் அழுகிப்போயிருக்கும்.

புகையிலை விதைகளில் நல்ல காத்திரமா இருப்பவற்றையே விதைக்க வேண்டும். விதைகளைக் காற்றில் தூற்றி லேசான விதைகளைப் பரித்தெடுத்து கனமான விதைகளையே உபயோகிக்கவேண்டும். 45-சதுர அடி உள்ள நிலத்திக்கு ஒரு தேயிலைக் கரண்டி விதை போதுமானது. விதைப்பதற்குமுன் விதைகளை சாம்பலோடு கலந்து தெளிப்பது நல்லது. அப்போது விதைகள் பாத்தியில் பரவலாய் விழும்,

பாத்தியின் பக்கங்களில் களைகள் இல்லாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். அவைகள் இருந்தால் பூச்சி புழுக்கள் அவைகளிடம் தங்கியிருந்து, புகையிலைமுளைத்தவுடன், பயிரை நாசம்செய்யும். இதேகாரணத்தை உத்தேசித்து பாத்தியில் நிழலுக்காக ஓலை முதலியவைகளை போட்டு வைப்பதற்கு பதிலாக அவைகளைப் பாத்தியின்மேல் பந்தலாகப் போட்டு வைத்தால் புழுப்பூச்சிகளின் உபத்திரவம் அதிகமாக ஏற்படாதென்று சொல்லலாம்.

### நெல் சாகுபடி.

நெல் சாகுபடியில் பின்வரும் சீர்திருத்தங்களால் அனுபவத்தில் நல்லபலன் உண்டாகிறதென்று தெரிய வருவதாக மைசூர் விவசாய டிரெக்டராகிய மிஸ்டர் கோல்மன் தெரிவிக்கிறார். (1) சடம்பு அல்லது காராமணியை பசுந்தாள் பயிராக ஸாகுபடிசெய்து மடக்கி உழுதல். (2) எலும்புத்தூளை உரமாக உபயோகித்தல். (3) பல நாற்றுகளைச் சேர்த்து நடுவதற்கு பதிலாக ஒற்றை நாற்றாகவாவது இரண்டு மூன்று நாற்றுகளைச் சேர்த்தாவது நடுவது. (4) உப்பை ஜலத்தில் கரைத்து அந்த ஜலத்தில் விதை நெல்லைப்போட்டு, ஜலத்தின் மேல் மிதக்கும் நெல்லைத் தள்ளிவிட்டு ஜலத்தில் அமிழ்ந்து கொள்ளும் விதைகளை மாத்திரம் உபயோகித்தல் (5) நெல் பயிரிடுவதற்கு ரொம்ப காலத்திக்கு முன் நிலத்தை உழாமலிருப்பது.

### கரும்பு.

கரும்பு முளைக்காமலிருப்பதற்குஅநேக காரணங்களுண்டு. அவையாவன.—

1. கரும்புக் கரணைகள் ஜாஸ்தி முற்றிவிட்டால் அதன் முளைகள் நன்றாய் முளைக்கா.

2. முளைகள் சற்று சேதப்பட்டிருந்தாலும், வண்டி முதலியவைகளில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டுபோகிறபோது வண்டிகளில் முளைகள் உராசி கெட்டுப் போனாலும் முளைக்கமாட்டா.

3. கரணைகளை ஆழத்தில் போட்டு அல்லது நட்டுவிட்டாலும் முளைக்கா.

4. நட்டபின் தண்ணீர் ஜாஸ்தி விட்டு விட்டாலும், அதிக மழை பெய்தாலும் முளைக்கா.—கிருஷிகன்.

### புகையிலையைப் பறித்தல்.

புகையிலையை அறுவடை செய்வதைப் பற்றி ஜாவாதீவில் சில பரீக்ஷைகள் செய்ததில் இலைகளை காலை நேரத்தில் பறிப்பதே உத்தமமென்று தெரிகிறது. செடியின் அடிபாகத்திலுள்ள இலைகளை காலை நேரத்தில் பறிப்பதே உத்தமமென்று தெரிகிறது. செடியின் அடிப்பாகத்திலுள்ள இலைகளை ஒவ்வொன்றுகப் பறிப்பது நல்லதாம். ஆனால் மழை அதிகமாக உள்ள வர்ஷங்களில் செடிகளிலுள்ள இலைகள் முழுவதையும் ஒரே காலத்தில் பறிப்பது நல்லது. மேல் பாகத்திலுள்ள இலைகள் சரியாய் முற்றியிருக்கும்போது அடியிலுள்ள இலைகள் ரொம்ப முற்றியிருக்கும். அடி இலைகள் ரொம்ப முற்றியிருப்பதால் அவைகளைப் பதப் படுத்துவது சௌகரியமாயிருக்கிறதாம்.

## ஆயுர்வேத சாரம்.

### கங்கை ஜலம்.

கங்காநதி இமயமலையில் உற்பத்தியாகி அப்பர்வதத்திலுள்ள பலவிதமான விருக்ஷமூலிகைகளின் வழியாகவும் பலவித தாதுப் பொருள்களின் வழியாகவும் வருகிறதினால், அந்த ஜலத்தில் சகலவித வியாதிகளையும் நிவாரணஞ் செய்யும் சக்தி இருக்கிறதென்றும், "ஔஷதம் ஜான்னவிதோயம் வைத்யோ நாராயணோ ஹரிஹி" என்ற ஸ்லோகம் இந்த விஷயத்தை விளக்கிக் காட்டுகிறதென்றும் ஒரு பத்ரிகை எழுதுகிறது.

அந்த ஸ்லோகத்திற்கு அர்த்தம், கங்கோதகமே ஔஷதம்; ஸ்ரீமன் நாராயணனே வைத்யர் என்பதாம். இப்பொழுதும் மருந்து சாப்பிடுகிறவர்கள் இந்த ஸ்லோகத்தைச் சொல்லுவது வழக்கம். சமீபத்தில் ஹரித்வாரத்தில் நடந்த கும்பமேளமகோத்சவ காலத்தில் காலராநோய் பரவிற்று. அந்நோயால் பீடிக்கப்பட்ட ஒருவனுக்கு கங்கை ஜலத்தில் இஞ்சிரசத்தை விட்டுக் கலந்து கொடுத்ததில் அந்நோய் பரிகாரமாயிற்றென்று ஒருவர் இந்தியப் பத்திரிகை ஒன்றுக்கு எழுதியிருக்கிறார். இதனால் கங்கையில் ஜலத்தில் காலராவைப்போன்ற வியாதிகளைப் பரிகாரஞ் செய்யும் குணம் இருக்கிறதென்று ஏற்படுகிறது.

### குள்ளவாத்துக்களும் மலேரியாக் காய்ச்சலும்.

குள்ளவாத்துக்கள் கொசுக்களுடைய ஜன்ம சத்ருக்களில் முக்கியமானவை. நீர்த்தேக்கமுள்ள இடங்களில் வாத்துக்கள் இருந்தால் அவ்விடங்களில் கொசுக்கள் விருத்தியாகா. அதனால் மலேரியாக்காய்ச்சலும் உண்டாகாமல் தடுக்கப்பட்டுப்போகும். இதைப்பற்றிப் பரிசீலனை செய்த ஒரு மேல்நாட்டு வைத்யர் சம பரப்புள்ள இரண்டு குட்டையில் ஒன்றில் வாத்துக்களை விட்டார். இன்னொன்றில் மீன்களைப் போட்டார். வாத்துக்களைவிட்ட குட்டையில் இருந்த கொசுக்களையும், அதன் முட்டை, புழுக்களையும் வாத்துக்கள் வெகு சீக்கிரத்தில் தின்றுவிட்டன. மீன்கள் போட்ட குட்டையில்கொசுக்களும் அவைகளின் முட்டையும் புழுக்களும் சாகாமல் இருந்தன. அந்தக் குட்டையிலும் சாட்டுவாத்துக்களை விட்டதில 24 மணி நேரத்துக்குள் கொசுக்களின் புழுக்கூடுகளெல்லாவற்றையும் வாத்துக்கள் தின்றுவிட்டன. இரண்டு நாளுக்குப் பிறகு அந்தக் குட்டையில் கொசுவின் புழுக்களே யில்லையாம். குள்ளவாத்துக்களுக்கு கொசுக்களின் முட்டையை தின்பதில் ரொம்ப பிரியமாம். பணக்குறைவால் வடியவைக்க முடியாத சதுப்பு நிலங்களில் வாத்துக்களை உபயோகிப்பதால், கொசுக்களின் உபத்ரவம் குறைவதோடு, அதன் மூலமாக மலேரியாக் காய்ச்சலும் குறைந்துபோகும்.

### கொசுக்களை துரத்த ஓர் மருந்து

கொசுக்களால் இரவில் உபத்திரப்படுகிறவர்களுக்கு பொத்தலேஸான விதமாக அதுகளின் கடியினின்று தப்பிக்கவும், அதுகளை விட்டிவிருந்தோடும்படி செய்வதற்கு கெரஸின் எண்ணெயில் ஒரு கந்தை துணியை தோய்த்து பகல்காலத்தில் அதுகள் பிரதானமாய் ஒளிந்திருக்கும் இடங்களாகிய கதவு சந்துகளிலும் மேஜை நாற்காலி கட்டில் பீரோ முதலியதுகளுக்கு கீழும் பக்கங்களிலும் மேற்படி எண்ணெய்த் துணியால் தேய்த்தால் எண்ணெயின் வாசனைப்பட்டதும் ஓடிப்போகுமாம் ஒரேநாளில் ஓடாமற் போனபோதிலும் இரண்டுமூன்று நாள்களுக்குள் ஒன்றேனும் இல்லாமல் ஒருமிக்க ஓடிவிடுமாம். தவிர படுக்கைக்குப் போகும் போதும் நல்ல கிரேசன் எண்ணெ கொஞ்சத்தை முகத்திலும், கை, கால்களிலும் தடவிக்கொண்டு படுத்துக் கொண்டால் கொசுக்கள் கடிக்க மாட்டாதென்று கூறப்படுகின்றன.



### சுக்கு.

உலர்ந்த இஞ்சியைக்கொண்டு வீட்டில் அவரவர்களே ஒருவித ஔஷதம் பின்வருமாறு தயார்செய்துகொள்ளலாம். சுக்கை ஒன்றிரண்டாக உடைத்து அதில் 3-பலமெடை யெடுத்து இருபது அவுன்ஸ் ப்ராந்தியில் சேர்த்து, 10-நாட்கள் வரையில் ஊறவைத்து அப்பால்த்ராவகத்தை மட்டும் வடிகட்டி ஒரு புட்டியில் போட்டு வைத்துக்கொள்ளவும். இதில் ஒரு தேக்கரண்டியளவோ அல்லது அதற்குச் சிறிது அதிகமாகவோ விரேசன ஔஷதங்களில் கலந்து கொடுக்கலாம்; இவ்வௌஷத வயிற்றில் சேர்ந்துள்ள பிளிப்பைப் போக்குவதில் சிறந்த வீர்யமுள்ளது; அஜீர்ணத்தையும் வயிற்றுப்பொருமலையும் போக்குவதற்கு இதை மட்டுமே அல்லது அவ்வித குணமுள்ளவேறு ஔஷதசரக்குகளுடன் கூட்டியே கொடுக்கலாம்.

ஒரு பலம் சுக்கை வறுத்து உடைத்து, அரைப்படி ஜலத்தில் போட்டு, பாத்திரத்தின் வாயைமூடி ஒருமணிநேரம் காய்ச்சி வடிகட்டி யெடுக்கவும். இக்கஷாயத்தை வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல், வாந்தி, குடல் முதலியவற்றிலுண்டாம் உளைத்தல் என்னும் இந்நோய்களில் ! அல்லது 2-அவுன்ஸ் அளவாக ஒரு மணிக்கு ஒரு முறை இளஞ்சூடாக உட்கொண்டுவந்தால் சீக்ரத்தில் நற்குணமுண்டாகும். உஷாக்ஷாரம் என்கிற ஸோடாவுப்பை இக்கஷாயத்தில் சிறிதளவு சேர்ப்பதால் முன்கூறிய இதன் குணங்கள் அதிகமாகி, உபயோகிப்பவருக்கு வெகு சீக்கிரத்தில் சௌக்யமேற்படும். குழந்தைகளுக்கு ஒரு தேக்கரண்டி கஷாயம் போதுமானது.

சுமார் 6-அவுன்ஸ் ஜலத்தில் ½-பலம் சுக்கை நறுக்கிப் போட்டுக் கொதிக்கவைத்து வடிகட்டி யெடுக்கவும்; இதை ஆமவாதமென்னும் ஒருவித கீல்வாயுவில் இரவில் படுக்கும்போது உஷ்ணமாகவே குடிக்கக்கொடுத்து, துப்பட்டியால் உடம்பைப் போர்த்துவிட விசேஷமாக வியர்வையுண்டாய் சீக்கிரத்தில் குணமுண்டாகும்:— வைத்திய கலாநிதி.

### மாசக்காய்.

இக்காய்கள் கசப்பும் துவர்ப்புமான சுவையுள்ளவை. மாசக்காயை சூர்ணம் செய்து, 15நெல்லெடை வீதம் ஒருதினத்திற்கு மூன்று வேளை உபயோகித்தால், நாள்பட்ட அஜீர்ணபேதியைப் போக்கும் ஒவ்வொரு வேளையும் இதனுடன் ½ நெல்லெடை அபினியைச் சேர்த்து உபயோகித்தால் கஷ்டசாத்யமான அதிஸாரமும் நின்று விடுவதுண்டு. மாசக்காயின் சூர்ணம் 30 நெல்லெடை, லவங்கப் பட்டையின் சூர்ணம் 15 நெல்லெடை, இவ்விரண்டையும் சேர்த்து, சிறிது தேன் விட்டு இழைத்து 6 மாத்ரைகளாகச் செய்து, குழந்தைக்கு மேற்கூறியவியாதியில்தினம் இரண்டு மூன்று தடவை கொடுக்கலாம். சீதபேதியில், லவங்கப்பட்டைக்குப் பதிலாக கற்பூரம் கலந்து மேற்படி சூர்ணத்தை அனைவரும் உபயோகிக்கலாம். கற்பூரம் கலந்த மாசக்காய்த்தூளை, ஸ்திரீகளுக்கு உண்டாகும்பிரதரம் என்கிற பெரும்பாடு ரோகத்தில் விசேஷமாய்க் கொடுக்கலாம், வெள்ளை விழுகிறவர்களுக்கும் மேற்கண்டபடி ஒரு வேளைக்கு 20நெல்லெடை வீதம் உபயோகிக்கலாம். ஊமத்தை, எட்டிக்கொட்டை, அபினி, நாபி இவ்வித விஷபதார்த்தங்களால் நேரிடும் கெடுதிகளைப் போக்க, மாசக்காயைக் கஷாயமிட்டுச் சாப்பிடுவது நலம். பல்லீறுகளின் வீக்கத்திலும், நாக்கு தொண்டைகளில் உண்டாகும் புண்களிலும் இக்கஷாயத்தைக் கொப்பளிக்க உபயோகிக்கலாம் வைத்தியகலாநிதி.

### மண்ணன், பொக்கன், வைசூரி.

*Meailes Chicken-pox, Small-pox* என்னும் ரோகங்களுக்கு நாயுருவி, சீலாந்திப் பழுப்பிலை, கொல்லமாந்தளிர், பசுமாட்டுத் தோல், காரைவேர் வகைக்கு கழஞ்சு இரண்டு, ஒரு படி தண்ணீரில் அவித்து எட்டிலொன்றாக்கி, தினம் இரண்டு நேரம் கொடுக்கவும். நல்ல கோரோசனை கிடைக்குமானால் கொஞ்சம் சேர்த்துக் கொள்வது நலம்.

### ஜலதோஷத்திற்கு.

(*Catarrh*) அதிமதுரம், சுக்கு, மிளகு, திற்பிலி வகைக்கு கழஞ்சு ஒன்று; அக்கரு கழஞ்சு அரை; சித்திரத்தை கழஞ்சு இரண்டு. ஒரு படி நீரில் அவித்து, எட்டிலொன்றாய்க் குறுக்கி, தினம் இரண்டுமுறை குடிக்கவும்.

வேறொரு பாகம். தூதுளை இலை இரண்டு பிடி அரிந்து, இரண்டு படி நீரில் அவித்து, நாலிலொன்றாக்கி ஓமம், சுக்கு, வெள்ளுள்ளி, வகைக்கு கழஞ்சு ஒன்று: ஷை கஷாயத்தி லரைத்துச் சேர்த்து கொதிக்க காச்சி இரண்டு நேரமாகக் குடிக்கவும். இப்படி இரண்டு நாள் நாலு நேரம் சேவிக்க தீரும்.

வேறொரு பாகம். அரைப் படி ஆவின் பாலில் இரண்டு கழஞ்சு சுக்கு சதைத்திட்டு காய்ச்சி இறுத்து தினம் இரண்டு நேரம் குடிக்கவும்.

### சீமை தக்காளி.

பல்வீறுவலித்தால் சீமைத்தக்காளிப் பழத்தில் ஒரு துண்டை இரவில் வாயில் போட்டுவைத்துக்கொண்டிருந்தால் வலி நீங்கும் சீமைத் தக்காளியின் சாற்றை இங்கிக் கறையின்மேல் தேய்த்தால் கறைவிட்டுப் போகும் துணியில் கறைபட்ட பாகத்தின் அடியில் ஒரு பிளாட்டிங் கடுதாசியை வைத்து கறைமேல் சீமை தக்காளிப் பழத்தை அதன் மேல் தேய்க்கவேண்டும். பிளாட்டிங் கடுதாசி ஈரமாய்ப் போனால் அதையெடுத்து விட்டு புதுக்கடுதாசி உபயோகிக்கவேண்டும்.

### கிரோஸின் எண்ணெய்.

தலைமயிரில் பேன் பிடித்தால் அதற்குத் தலையில் வேண்டியவளவு கிரோசின் எண்ணெயைத் தடவிவிட்டால் அப் பேன்கள் அழிந்துவிடும். இதற்கு இந்த எண்ணெயே சிறந்த ஔஷதமாகும்.

---

## பலகுறிப்புகள்.

---

சென்றமாதம் பத்திரிகையில் தெரிவித்தபடி தஞ்சை பிரம்மஸ்ரீ கிருஷ்ண பாகவதர் சிஷ்யராகிய தஞ்சை பிரம்மஸ்ரீ துரைசாமி பாகவதரவர்கள் சென்னை பல பேட்டைகளில் அனேக பகவத்கதா காலக்ஷேபம் செய்து நல்ல பெயரெடுத்தனர் நாம் தெரிவித்திருந்தபடி நமது சென்னை சிந்தாதிரிப்பேட்டை விஸ்வகர்ம குலோத்தாரண சபாமண்டபத்தில் 1916வரு ஜனவரிமீ 28உ சுக்கிரவாரம் மாலை 5-மணிக்குமேல் வத்ஸலா கலியாணம் என்னும் திவ்யசரித்திரத்தை வெகு நேர்த்தியாகவும் அழகாகவும் சங்கீதத் திறமையுடனும் பகவத்கதாகாலக்ஷேபம் செய்தனர். அச்சமயம் சுமார் 500-ஜனங்களுக் கதிகம் நமதுசபா மண்டபத்தில் வீற்றிருந்தனர். ஷை சபையார்களால் ஓர் பொற்பதக்கம் அதாவது மெடல் பரிசளிக்கத் தீர்மானித்திருந்தபடி ஷை சபையின் வைஸ்பிரசிடெண்டாகிய பிரம்மஸ்ரீ தி மு. முக்கண்ணாச்சாரியார் அவர்கள் மூலமாய்சபையில் ஷை பாகவதரவர்களுடைய திறமையை பற்றி அதி உன்னதமாக உபந்யாசித்து அம்மெடலை பரிசளித்தனர்.

அச்சமயம் அவ்விடத்தில் விஜயமாயிருந்த மேதாவிகள் பலரும் அதிக உற்சாகத்தோடு கரகோஷம் செய்து களித்தனர் இத்துடன் ஷை பாகவதரவர்களுக்கு ஷை சபையார்களால் ஓர் பட்டப்பெயரும் அளிக்கப்பட்டது அதாவது தஞ்சை பிரம்மஸ்ரீ சங்கீத பாதசபாரஞ்சித துரைசாமிபாகவதரென்று நிரந்தரபட்டம் அளிக்கப்பட்டு அச்சமயம் அங்கிருந்த மஹா ஜனங்கள் யாவரும் கரகோஷத்துடன் ஆரவாரம் செய்து அங்கீகரித்தனர்கள் இதற்கடுத்த சோமவாரதினம் நமது குலதெய்வமாகிய ஸ்ரீகாமாக்ஷி அம்மன் திருக்கோயில்கொண்டெழுந்தருளி யிருக்கும் சென்னை முத்தியாலுபேட்டை தம்புசெட்டி வீதி ஷை தேவஸ்தான மண்டபத்தில் நந்தனார் சரித்திர காலக்ஷேபம் செய்து அவ்விடத்தில் அநேக பிரமுகர்கள் எழுந்தருளிய அச்சபையில் ஷைபாகவதரவர்களுக்கும் பின்பாடகர் மிருதங்கம் வாசிப்பவர் இம்மூவர்களுக்கும் பொற்பதக்கம் (மெடல்) கொடுக்கப்பட்டது. இவர் சென்னைக்கு விஜயம் செய்து பகவத்கதா காலக்ஷேபம் செய்ததில் தெக்ஷிணத்தில் விஸ்வகர்மசந்ததியில் இப்பேர்பட்ட கதாபிரசங்கிகள் இருக்கிறார்களாவென்று மஹா ஜனங்களுக்குஓர் ஆச்சர்யத்தை உண்டுசெய்தது நல்லபெயருடன் தஞ்சைக்கு சென்றார்.



***

1916வரு பிப்ரவரிமீ 2உ புதவாரம் இரவு 8மணிக்கு நமது சபாமண்டபத்தில் மாயூரம் வித்வான் பிரம்மஸ்ரீ சிவலிங்க உபாத்தியாயர் குமாரரும் இராமாயணப் பிரசங்கியாருமாகிய பிரம்மஸ்ரீ சுந்தரேச உபாத்தியாயர் விஜயம் செய்து விஸ்வகர்ம பக்தோ பாக்யானத்தில் ஓர் சரித்திரமாகிய இராமநுஜர் என்னும் திவ்ய சரித்திரத்தை புராணப்பிரசங்கமாக உபந்நியாசம் செய்தார். இவருடைய பிரசங்கம் அதிக இனிமையாக யிருந்தது. சொன்னயமும் பொருள் நயமும் ஜனவசீகரமும் பொருந்தியிருந்தது. இவரை இந்தபக்தோ பாக்கியானத்திலுள்ள 12-சரித்திரங்களையும் பிரசங்கம் செய்யச்சொல்லி கேழ்க்கவேண்டுமென்கிற அவா அனேகர்களுக்கு ஏற்பட்டுள்ளது கூடிய சீக்கிரம் மறுபடியும் சென்னைக்கு விஜயம் செய்து வெகு ஜெனங்களுடைய அபேக்ஷையை இவ்வித்வான் பூர்த்தி செய்வாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

***

1916வரு பிப்ரவரிமீ 3உ குருவாரம் மாலை 5-மணிக்கு சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை கவிஸியப்ப நாய்க்கன்வீதியிலுள்ள அன்னதான சமாஜத்தில் கோயம்பத்தூர் பிரம்மஸ்ரீ குப்புசாமி ஆச்சாரியாரவர்களால் புல்லாங்குழல் (புளூட்டு) கச்சேரி சென்னை விஸ்வகர்ம குலாபிமானிகள் ஆதரவின் கீழ் நடைபெற்றது இவருடைய சங்கீத திறமையை மெச்சாதவர்கள் ஒருவருமில்லை இவருடையபுல்லாங்குழல் கச்சேரியை பன்முறைவைத்து களிக்கவேண்டுமென்னும் அவா அனேகர்களுக்கேற்பட்டிருக்கிறது.

***

நம்பத்திரிகைக்கு சில குலாபிமானிகள் ஏஜண்டாகயிருந்து உழைப்பதாக வாக்களித்து சந்தாதாரர்களிடம் பணத்தை வசூலித்து அவர்களுடைய சொந்த செலவுக்கு அப்பணத்தை உபயோகித்துக்கொண்டார்கள் நமக்கு பணம் வந்து சேரவில்லை. குலாபிமானிகளென்று வாய்ப்பறைசாற்றிக்கொண்டிருப்பவர்களே இப்படிச் செய்தால் மற்ற சாமான்னியர்கள் மோசம் செய்வதைச் சொல்லவும் வேண்டுமோ!

***

கும்பகோணம் பிரம்மஸ்ரீ த. கு. சுந்தராச்சாரியார் குமாரர் பிரம்மஸ்ரீ பஞ்சநதீஸ்வராச்சாரியார் ஒருவரே தம்மால் கூடுமானவரையில் சந்தாதாரர்களை சேர்த்தும் சந்தாதுகைகளை வசூலித்தும் அனுப்பியவர். இவருக்கு நம்மாலேற்பட்ட கஷ்டநஷ்டங்களுக்காக பிரதிஉபகாரம் என்ன செய்யப் போகிறோம். இவரையல்லவா உண்மையான குலாபிமானி யென்று சொல்லவேண்டும்.

***

நாகப்பட்டணம் குலாபிமானிபிரம்மஸ்ரீ காயாரோகண ஸ்தபதியார் அவர்கள் சில சந்தாப்பணங்களை வசூலித்து நெடுநாளாக வைத்துக் கொண்டு கடிதம் எழுதும்போதெல்லாம் அப்பணம் என்னிடத்திலிருக்கிறது அனுப்புகுறேன் அனுப்புகிறேனென்று எழுதியும் இதுகாறும் அனுப்ப வில்லை. தற்காலம் பதிலையும் காணோம்.

***

மஞ்சகுப்பம் குலாபிமானி பிரம்மஸ்ரீ கடவுள் சம்மதம் மாணிக்காச் சாரியார் அவர்களும் சில சந்தாப் பணங்களை வசூலித்து கொண்டு நாம் எழுதும் போதெல்லாம் அனுப்புவதாகக் கடிதம் எழுதியும் இது பரியந்தம் அனுப்ப வில்லை. இவரை நேரே கேட்டபொழுதும் மணியாடர் செய்கிறேனென்று தெரிவித்தபடி இன்னமும் அனுப்பவில்லை. இவர்களெல்லாம் இப்படிச் செய்தால் நம் பத்திரிகை எங்ஙனம்முட்டுப்படாமல் முன்னேற்றத்திற்கு வருவது?

* * *

இப்பொழுது ஏற்பட்டிருக்கும் யுத்த சம்பவத்தால் கடிதம் கிடைப்பதும் கஷ்டமாக யிருக்கிறது. அப்படி கிடைத்தாலும் ஒன்றிற்கு நான்குபங்கு அதிக விலையாயிருக்கிறது. இவ்வித கஷ்டத்தில் பத்திரிகையைக் காலக்கிரமம் போல் நடத்த ஒவ்வோர் சந்தாதாரர்களும் இந்த 1916-௵ ஜனவரிமீ முதல் 6 மாத சந்தாதுகையை யாவரும் முன்பணமாக கொடுத்துப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்வார்களாக.

* * *

1910௵ அக்டோபர்மீ 21௳ சுக்கிரவாரத்தன்று சென்னை சிந்தாதிரிப்பேட்டை வேதகிரிமேஸ்திரிவீதி, 5/10-வது எண்ணுள்ள விஸ்வகர்ம குலோத்தாரண சபா மண்டபத்தில் ஸ்தாபிக்கப் பட்டு இன்றும் அதே யிடத்தில் நடைபெற்று, பல குலோத்தாரண காரியங்களை யியற்றிவருவதை நம் குலாபி மானிகள் நன்கறிந்திருக்கிறார்கள். இப் பெயர் கொண்ட மற்றொரு சபை நவீனமாக 1913-௵ ஏப்ரல்மீ 7௳ சட்ட விரோதமாகத் தோன்றியதை நம் நேயர்கள் பல பகிரங்கப் பிரகடனங்களால் செவ்வனே அறிந்து கொண்டு உண்மை சபையாகிய நமது சபையை உள்ளன்போடு ஆதரித்து வருகிறார்கள். இஃதிங்ஙனமிருக்க அக்கூட்டத்தார் போலி உருக்கொண்ட குற்றமொருபுறமிருக்க, தங்கள்சபை 1910௵ ஸ்தாபிக்கப்பட்ட ஆதி சபை யென்றும், 1912௵ ஏப்ரல்மீ ஸ்தான பிரஷ்டம் பெற்றதென்றும் கூறி அறிவாளிக ளொழிந்த மற்ற பாமரர்களைச் சுலபமாகநம்பச் செய்ய பலவித பிரயத்தனங்களைச் செய்து வருகிறார்கள் அவைகளை, சென்னை விஸ்வகர்மன் பத்திரிகை 1915௵ அக்டோபர்மீ சஞ்சிகை 4-வது பக்கத்தில் வெளிவந்த 1914-வது வருஷத்திய ரிபோர்டின் முதல் பாராவிலும், மூன்றாவது பக்கத்தி னிறுதியில் காட்டிய 5-வது பாராவிலும் காணலாம். அறிவாளிக ளாகிய நம் குலாபி மானிகளுக்கு இவ்வித பெரும் மாறாட்டத்தை அடுத்தடுத்து நாம் எடுத்துக் காட்டவேண்டிய அவசியமே யில்லை.

## கடிதம்.

### ஸ்ரீ தாயுமான சுவாமிகள் குருபூஜா வைபவம்.

சென்னை, சமரசஞான சங்கத்தாரால் அச்சங்கத்தின் 8-வது வருடோற்சவமாக சென்னை தங்கசாலைக்கடுத்த ஸ்ரீ யோகானந்தா ஸ்ரமத்தின்கண் ஸ்ரீதாயுமான சுவாமிகளின் 254-வதுவருடத்திய குருபூஜா மகோற்சவம் 1916௵ ஜனவரிமீ 29, 30௳களில் நடைபெற்றது. முதல் நாள் சனிவாரம் காலை 11-மணிக்கு சுவாமிகள் திருவுருவத்திற்கு அலங்காராதி உபசாரமும், மகேஸ்வர பூஜையும் மாலை 4-மணி முதல் ஸ்ரீகல்யாணசுந்தர யதீந்தரரவர்கள் தலைமையின் கீழ் ஸ்ரீமான் திருநாவுக்கரசு முதலியா ரவர்களாலும் ஸ்ரீ ஆத்மாராம் சுவாமிகளாலும் முறையே "மெய்கண்டார் மகிமை" "குருமகிமை" என்பவற்றைப்பற்றி பிரசங்கங்கள் நடைபெற்றன. சங்கத்தலைமை ஸ்ரீ ஷண்முகானந்த சுவாமிகளால் தாமியற்றிய திருவருட் பிரார்த்தனை என்னும் நூலி லடங்கிய நுண்ணிய பொருட்களை விளக்கிக் கூறினர். ஸ்ரீமான் தி. மு. முக்கண்ணாச்சாரியா ரவர்கள் வந்திருந்தோருக்கு வந்தனோபசாரங்கூறினர்.



அடுத்த நாள் ஆதிவாரத்தன்று மாலை 5-மணிக்கு பிரம்மஸ்ரீ ஜஸ்டிஸ்சதாசிவய்யரவர்கள் அக்கிராசனம் வகித்தனர். அச்சமயம் ஷை அய்யரவர்கள் தர்மபத்தினியாரும் ஸ்ரீதாயுமான சுவாமிகளின் பக்தியின் மேலீட்டால் விஜயம் செய்திருந்தார்கள்பிரம்மஸ்ரீ வசிஷ்டபாரதியாரவர்களும், ஸ்ரீமான்திரு வி. கல்யாணசுந்தர முதலியாரவர்களும், ஸ்ரீமான் சதாசிவ செட்டியாரவர்களும், முறையே,

"சதுஞோபாசனை அவசியம்"

"தாயுமானர் கொள்கை," "ஆலயவழிபாட்டினருமை" என்பவைகளைப்பற்றி பிரசங்கித்தனர். சபாநாயகர் முடிவுரையாக சிறுவாக்கியங்களாற் சுருங்கக்கூறி முடித்தனர். ஸ்ரீ ஷண்முகானந்த சுவாமிகள் சமரசஞான சங்கத்தின்நோக்கத்தை எடுத்துக் கூறி சபாநாயகருக்கும் பிரசங்கித்தவர்களுக்கும் விஜயஞ் செய்திருந்தோருக்கும் வந்தனமளித்தனர் பிரசாதம் வழங்கியபின் சபையின் காரியங்கள் முடிவுபெற்றன.

கண்டுகளித்தோன்.

## யுத்தசம்பந்த குறிப்புகள்.

### நூறுயிரம் மெஷின் பீரங்கிகள்.

ஏராளமான மெஷின் பீரங்கிகளை ஜெர்மானியர் கிழக்கரங்கத்தில் கையாளுகின்றனரென்று தெரிகிறது. அந்த அரங்கத்தில் மட்டும் ஜெர்மானியரிடம் சுமார் நூறாயிரம் மெஷின் பீரங்கிகள் இருக்கின்றனவாம். மெஷின் பீரங்கிகளால் ஒரு நிமிஷத்துக்குள் பல குண்டுகளை விடாமல் பிரயோகிக்க முடியும்.

### எம்டன் பீரங்கிகள்.

ஆஸ்ட்ரேலியா தேசத்துக் கப்பல்படையைச் சேர்ந்த சிட்னி என்ற க்ரூய்சர் எம்டன் என்ற ஜெர்மன் கப்பலின்மீது பீரங்கிகளைப் பிரயோகஞ்செய்து எம்டனை மூழ்கடிக்கச் செய்தது எம்டன் கப்பல் பீரங்கிகளுடன் கடலில் மூழ்கிப்போகவே அதிலிருந்த பீரங்கிகள் சமுத்திரத்தி லிருந்து எடுக்கப்பட்டு ஆஸ்ட்ரேலியாவுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டன. அந்த பீரங்கிகளில் ஒன்று லண்டனில் வைக்கப்பட்டிருக்கிறது. எம்டன் கப்பல், சென்னையைத் தாக்கினபடியால், எம்டன் பீரங்கிகளில் ஒன்றை சென்னைக்கு அறிகுறியாக அனுப்பவேண்டுமென்று சென்னை போர்ட்டிரஸ்டாரும், சென்னை வியாபார சங்கத்தாரும், சென்னை கார்பொரேஷன் அதிகாரிகளும், தென்னிந்தியா வியாபாரச் சங்கத்தாரும், ஒன்றுசேர்ந்து, ஆஸ்ட்ரேலியாகவர்ன் மெண்டாரைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

### ஆகாய விமானங்களில் தேர்ச்சி யானவர்கள்.

1916 வருஷம் வரையில் ஆகாய விமானங்களில் தேர்ச்சியானவர்கள் 3000 பேர் இருந்தார்கள். ஆனால் இக்காலத்தில் 13,000 பேர்கள் வரையில் இந்த ஆகாய விமானங்களை செலுத்தக்கூடியவர்கள் இருக்கின்றனர் தவிர இவ்வித்தையான வித்தையில் ஒவ்வொருவாரத்திலும் நூற்றுக்கணக்கான ஆள்கள் தேர்ந்து வருகிறார்கள். இப்போது செய்யப்பட்டு வரும் ஆகாய விமானங்களில் தந்தியில்லாத பேசும்இயந்திரங்களும் சர்ச் லைட்டென்னப்பட்ட சோதனை விளக்குகளும் மற்ற யுத்த விஷயத்துக்கேற்ற கருவிகளாகிய பாம் என்னும் மற்றவெடிகளுடன் கப்பல்களில் வைக்கப் பட்டிருக்கும் டார்பிடோ வெடிகளையும் இவைகளுக்குள் வைக்கப் பட்டிருக்கின்றன தவிர ஸ்காட்டர் ஷெல் லென்னும் கடல்பிஷ் என்னும் ஓர் விதமான வெடிகளும் இந்த ஆகாயவிமானங்கள் கொண்டு செல்கின்றன இந்த வெடிகளை ஆகாயத்தி லிருந்து கீழே போட்டவுடனே அவைகள் விழுந்த விடத்திலிருந்து ஓர் விதமான புகையுண்டாகின்றது அந்த புகையானது மெத்த விஷமுள்ளதாம் அதனால்கண்களுக்கு

கெடுதலுண்டாவதுடன் அந்தப் புகையை சுவாசித்தாலும் மனிதருக்கு அபாயத்தையுண்டுபண்ணும்.

கிழக்கு ஆப்பிரிக்கா சண்டையில் ஜெர்மானியர் பிரிட்டிஷ் படைகளின்மீதும்விசேஷமாய் இந்துபடைகளின்மீதும்குளவிகலைச் சேர்த்துவிட்டு வெகு துன்பத்துக்குள்ளாகின்றனர் அநேகர் அபாயகரமான ஸ்திதியிலிருக்கின்றனர்.

ஜெர்மன் சேனையில் வீரதீரங் காட்டுவோருக்கு அயரன் க்ராஸ் என்னும் மெடல் பரிசளிக்கப்படுவதை நேயர்கள் அறிவர். இது வரையில் அம்மாதிரி 3-லட்சத்து 44-ஆயிரத்து 749-மெடல்கள் அளிக்கப்பட்டிருக்கின்றனவாம். அவைகளினுடைய மொத்த விலை ஒருலட்சத்துககு 40-ஆயிரம பவுன் என்று மதிக்கப்படுகிறது.

### ஜெர்மன் இரும்பு சிலுவைகளின் பரிசு மொத்தம்.

இதுவரையில்சண்டையில் பரிசளிக்கப்பட்டஉயர்தர இரும்பு சிலுவைகளின்மொத்தம் 4,000. இராஜகுமாரர்களுக்கு 47, ஜெனரல்களுக்கு 222, மற்ற ஆபீஸர்களுக்கு 3, 000, சோல்ஜர்களுக்கு 87 தான், கப்பற்படையைச்சேர்ந்த கப்பற்றலைவர்கள், உயர்தர உத்தியோகஸ்தர்கள், ராஜகுமாரர்களுக்குக் கொடுத்தது 98.

ஜெர்மனியில் நடக்குஞ் சண்டைக்குநூதன தளவாடக் கருவிகள் கண்டு பிடித்து நிர்மாணஞ் செய்துக் கொடுத்தல் மெச்சத்தக்க ஆச்சரியமான வெற்றிகளடைந்ததற்காக அவைகளைக் கண்டு பிடித்த மேஜர் மாக்வி மில்லன் பாக்கர் என்னுஞ் சிற்பசாஸ்திரியை கேய்சரவர்கள் இனியில்லாதும்புகழ்ந்து டெல்வின் பட்டணத்தில் சபை சேர்த்து இரும்பு சிலுவை பதக்கம் பரிசளித்தனர்.

ஜெர்மனியில் தற்கால யுத்த சம்பந்தமாக 650-வித புஸ்தகங்கள் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன.

### குண்டுகள் வெடிப்பதும் இந்திரியங்கள் கெட்டுப்போவதும்.

ஐரோப்பாவில் நடக்கும் யுத்தத்தில்சில ஸோல்ஜர்களுக்கு அருகில் குண்டுகள் வெடிப்பதால் ருசியறியும் சக்தியும், வாஸனையறியும் சக்தியும் போய்விட்டனவாம். சாதாரணமாக குண்டுகளின் சத்தத்தால் காது கேட்காமல் போவதுண்டென்று சொல்வது சகஜம்; ஆனால் இவர்களுக்கு காது நன்றாய்க் கேட்கிறதாம். அவர்களுக்கு தேகத்தில் குண்டுகளால்காயமொன்றுமேற்பட வில்லையாம். ஒரு சோல்ஜருக்கு ஒரு மூக்கில் உணர்ச்சியற்றுப்போயிருக்கிறதாம். மேலும் அவனுக்கு சர்க்கரை, க்வினைன், க்ராவகம், உப்பு இவைகளின் ருசி தெரியவே யில்லையாம்.

### ஜெர்மனியரின் நூதன யந்திரம்.

ஜெர்மனியர் குரூப் தொழிற்சாலையில் புதுமாதிரியான ஒரு யுத்த யந்திரத்தைக் கண்டுபிடிப்பதற்காக ஒரு புதிய கட்டடம் கட்டுகிறார்களென்று தெரிகின்றது. இந்த ராட்சச யந்திரம் கொதிக்கும் திரவத்தை நீண்டதூரம் வரை மழைபோல வாரி இரைக்குமாம்.

### ஜெர்மன் ஸென்டிமீடர் பீரங்கி.

ஆம்ஸ்டர்டாமிலுள்ள 'டெலிகிராப்' என்ற பத்திரிகை பின்வருமாறு ஜெர்மானியர்களின் 42 அங்குலம் ஸெண்டிமீடர் பீரங்கியைப்பற்றிசிலவிவரங்கள்தெரிவிக்கின்றது. ஒரு பீரங்கிக்கு 200-மனிதர்கள் அவசியமாம். ஒவ்வொரு பீரங்கியும் 172-பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது அதன் அடி பீடம் 37டன் நிறையுள்ளதாம் ஒரு பீரங்கியை ஒரு இடத்திலிருந்துமற்றொரு இடத்திற்குக் கொண்டுபோகபன்னிரண்டு ரயில்வே வண்டி தேவையாம், மின்சார சக்தியினால் 300-கஜ தூரத்துக் கப்பால் நின்றுகொண்டு அப்பீரங்கியைச் சுடவேண்டுமாம். அந்த பீரங்கியிலிருக்கிற ஒவ்வொரு குண்டும். 500 பவுன் நிறையுள்ளதாம் இவைகளைக் கொண்டுதான் பெல்ஜியத்திலுள்ள லீஜ் கோட்டைகளை 13 மைலுக்கப்பால் இருந்து கொண்டு சுட்டு உடைத்தார்களாம்.



## வர்த்தமானக் குறிப்புகள்.

### விவாக வழக்கங்கள்.

மதராஸ் பத்திரிகை அடியில் வருமாறு எழுதுகிறது:—

ஹிந்துக்கள் விவாககாலத்தில் ஏராளமாய்ப் பணம் செலவுசெய்கிறதை நிறுத்திவிடவேண்டுமென்று ஆசாரத் திருத்தக்காரர்கள் பலமான ப்ரயத்தனம் செய்துவரும் இக்காலத்தில் பஞ்சாப்பில் ஒரு கனவான், கட்டை, கற்கள் முதலிய அசேதன வஸ்துக்களுக்கு விவாகஞ் செய்து முடிப்பதில் 1500 ரூபாய் செலவுசெய்தார் என்று வங்காளப் பத்திரிகையில் ஒன்றில் வெளியாயிருக்கிறதை வாசிக்க வியப்பாயிருக்கிறது. மேற்சொன்ன கனவான் நாராயண விக்ரகத்திற்கும் லட்சுமி விக்ரகத்திற்கும் முதலில் விவாகத்தைச் செய்து முடித்தார். இரண்டாவதாக, மரக்கட்டையினால் செய்யப்பட்ட ஆண்பொம்மைக்கும் பெண் பொம்மைக்கும் விவாகத்தைச் செய்து முடித்தார் மூன்றாவதாக மாமரத்திற்கும் புளிய மரத்திற்கும் விவாகத்தைச் செய்து முடித்தார். இவ்விதமான மூன்று விவாகங்களை முடித்து வைக்க ஏற்றுக்கொண்ட புரோகிதருக்கு 200 ரூபாய் சம்பாவனை கொடுக்கப்பட்டது.

ஆண் பொம்மைக்கும் பெண் பொம்மைக்கும் விவாகத்தைச்செய்து முடிக்கும் வழக்கம் புதிதல்ல. பூமிசெழித்து நல்ல வெள்ளாமையைக் கொடுக்கும் என்ற நம்பிக்கையின் பேரில் இவ்வித விவாகம் பூர்வத்தில் நடத்தப்பட்டு வந்ததாம்.

விருக்ஷங்களுக்கு விவாகம் நடத்துவதும்இந்தியாவில் புதிய வழக்கமல்ல. அவ்வித விவாகம் சாதாரணமாய் இந்தியாவில் நடத்தப்பட்டு வருகிறது. வட இந்தியாவில் மாமரத்திற்கும் புளியமரத்திற்கும் விவாகஞ் செய்துவருகிறார்கள். தென்னிந்தியாவில் வேப்பமரத்திற்கும் அரசமரத்திற்கும் விவாகம் செய்து முடிப்பது வழக்கம்.

பரோடா, கைக்கோவார் மகாராஜாவும் மைசூர மகாராஜாவும் காட்டிய நல்வழியைப்பின்பற்றி இந்தூர் மகாராஜா அவர்களும்பிரதமகல்வி போதனையைக் கட்டாயப்படுத்தி தருமார்த்தமாய் கல்வி கற்பிக்கப் போதுமான திரவியம் நன்கொடையாக ஏற்பாடு செய்தனர்.

### வாலுள்ள குழந்தை.

இலங்கை வட்டு காமத்தில் ஒருசிங்களமாது ஐந்துபிள்ளைகளை ஒன்றின்பின் ஒன்றாக ஒரே முறையில் பிரசவித்தனள். ஒருபிள்ளை பத்தங்குல நீளமுள்ள ஒரு வாலுடன்பிறந்தது. அக்குழந்தை இரண்டுமணிநேரத்தில் இறந்துவிட மற்றப்பிள்ளைகள் உயிரோடிருக்கின்றனவாம்.

### மனிதத் தலையோடு ஒரு ஆட்டுதட்டி.

சென்ற நவம்பர்மீ 7உ சைதாப்பேட்டை கடைத்தெருவில் ஒரு ஸ்திரீ அவ்வூர் கசாப்புக் கடையிலிருந்து ஆட்டின் குடலை வாங்கிவந்தாள். வீடிற்கு வந்து அரிந்து பார்த்தபொழுது அதற்குள் முகம் மாத்திரம் மனித முகத்தோடு கூடியதாய் ஒரு ஆட்டுக்குட்டி இருக்கக் கண்டாள். மற்ற அவயங்கள்யாவும் ஆட்டின் உருவந்தான். இரண்டொரு நிமிஷம் மாத்திரம் அது உயிருடன் இருந்ததாம். பிறகு அதை மதரூஸ் மியூசியத்திற்கு அனுப்பி விட்டதாகத் தெரிகிறது.

### இரட்டைப் பெண்கள்.

ஜோட்ப்பூர் சமஸ்தானத்திலுள்ள பாலோ ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் ஒரு ஊரில் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்த இரண்டுபெண்குழந்தைகள் இருக்கின்றன. அவைகள் பிறந்து சுமார் ஆறுமாசமாகிறது. அவைகள் இரண்டு தொப்புளுக்குப் பக்கத்திலும் அதற்குப் பக்கமாயுள்ள அடிவயிற்றிலும் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டிருக்கின்றன. அவைகளுடைய மற்ற அவயங்கள் ஒன்றோடொன்று சேராமல் தனியாயிருக்கின்றன. அவைகளில் யாதொரு ஹீனமும் கிடையாதாம். அந்தப்பெண்களின் தாயார் ஒரு மகம்மதியஸ்த்ரீயாம். ப்ரசவமானபோது தாய்ரொம்பவும் வேதனைபட்டாளாம். முதலில் ஒரு குழந்தையின் தலையும், பிறகு இன்னொரு குழந்தையின் தலையும், பிறகு குழந்தைகளின் மற்ற அங்கங்களும் வெளிவந்தனவாம் அவைகளின் பெற்றோர்கள்இந்த விநோதப் பிறவியை ஜனங்களுக்குக்காட்டிப் பணம் சம்பாதித்து வருகிறார்களாம்.

சீனாவிலே பிச்சைக்காரர் வரி கொடுக்கவேண்டுமாம். அன்றி சில விடங்களில் மாத்திரம் அவர்கள் பிச்சை எடுக்கலாம்.

### போஸ்ட்கார்டு.

காலணாத் தபாற்கார்டு 1869ம் வருஷத்தில் முதன்முதல் ஆஸ்ரியாவால் உபயோகிக்கப்பட்டது.

### ஒரு கப்பலும் மீனும்.

டும்ரா என்னும் கப்பலானது கராச்சி நகரிலிருந்து சில தினத்திற்கு முன் பம்பாய்வந்து சேர்ந்தது. துறைமுகத்தை அணுகியவுடனே, அக்கப்பலின் வேகமானது திடீரென்று கம்மிப்பட்டது. உடனே அதன் காரணம் யாதென்று பார்க்கப்பட்டவளவில் கப்பலின் அடிப்பாகத்திலே பெரிய மீனொன்று மாட்டிக்கொண்டிருந்தது. துறைமுகக்கரைக்கு அம்மீனை எடுத்தனர் அது 14 அடி நீளமுள்ளதாய் இருந்ததுவாயோ இரண்டடி அகலமுள்ளதாக காணப்பட்டது. அதன் தலை கூர்மையாகவும், கண்கள் தலைக்கு நேர் மேலாகவும் இருந்தன. கரையில் எடுத்துப் போட்டதும்பலர் அம்மீனை ஆச்சரியத்துடன் நோக்கினர்.

### கிணற்றில் ஊறிக்கொண்டிருக்கும் ஒருவகை மதுபானம்.

வட இந்தியாவைச் சேர்ந்த கெண்டுவா என்ற ஊரில் பீர்கன்ஞால்சகார் என்ற ஒருபகுதியுண்டு. அதின் சமீபமாகவுள்ள ஒரு கிணற்றில் தண்ணீர் ஊறுவதற்குப் பதிலாக வெண்மை நிறமுள்ள ஒருவகை மதுபானம் தோன்றியிருக்கிறதாம். ஜனங்களெல்லாம் இம்மதுபானத்தை கிணற்றிலிருந்தெடுத்துச் சுயமான பாலாக விருக்குலாமாவென அதைப் பரிசீலனை செய்தார்கள். அப்பானமானது பார்வைக்கு வெண்மையான பால் நிறமாகத் தோற்றப்பட்டாலும், அது பாலுடன் சம்பந்தப்பட்டதல்லவெனப் பரிசீலனையால் தெரிந்துகொள்ளப்பட்டது.

பர்மாவில் இன்சேன் டிஸ்டிரிக்டில் டிட்விட் கிராமத்தின் வெளியிலிருக்கிற கெல்வயல்கவில் மூன்று புலிகள் ஜனவரிமீ 1உ காலையில் தோன்றின. இவ்விஷயத்தை மூன்று பர்மியர்கள் கூடி ரங்கூன் ஜெனரல் ஆஸ்பத்திரி அதிகாரிகளுக்குத் தெரிவித்தார்கள். ஆஸ்பத்திரி அதிகாரிகளும் இன்னும் 5 பேரும் ஈட்டிகளுடன் அதன் பின்சென்றிருக்கிறார்கள். இரண்டுதரம் குத்துப்பட்ட புலிகள் தம்மைத் தொடர்ந்தவர்களெல்லாரையும் காயப்படுத்தி வேகத்தில் குத்தின ஈட்டியுடன் மலைக்காட்டில் ஓடிவிட்டன. மூன்றுபேருக்குப் பலத்தகாயம் பட்டது மற்றும் 5 பர்மியர்கள் சிகிச்சைக்காக ரங்கூன் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகப்பட்டிருக்கிறார்கள்.

இமயமலையின் சிகரத்தைக்கண்டு வருவதற்காக சினிமடோகிராப் கருவி சகிதம் டாக்டர் குக் என்பவர் செல்லப் பிரயத்தனம் செய்து வருகிறார். இவர் உத்தரதுருவத்தை எற்கெனவே சென்று காணமுயன்றவர்.

மன்னார்குடி ஆரூர்தெருவில் ஓர் வெள்ளாடு குட்டி ஈன்றதில் ஒரு தலை, எட்டுக்கால், இரண்டு உடல், இரண்டு வாலுடன் அமர்ந்திருந்தது இதைத் தகுந்த பந்தோபஸ்து செய்து ஸ்தல அதிகாரி ஒருவர் சென்னை மியூசியத்துக்கு அனுப்பப்போவதாக அறிகிறோம்.

### டெலிபோனில் பேசினால் நாய்களுக்கு தெரியுமாம்.

ஒரு ஊரில் ஒரு துரையிடம் ஒருநாய் இருந்ததாம் அது தினந்தோறும் தன் எஜமான் வீட்டுக்குச் சென்று தன் எஜமானுடன் வீட்டுக்கு வருகிறவழக்கமாம். ஒரு நாள் அந்த துரை அவ்வீட்டுக்குப் போகாது நேரே தன் வீட்டுக்கு வந்துவிட்ட சங்கதி இந்த நாய்க்கு தெரியாதபடியால் வழக்கம்போல் தன் எஜமானைத் தேடிக்கொண்டு அந்த வீட்டுக்குப்போய் காத்துக்கொண்டிருந்ததாம். துரை நாயை வீட்டில் காணாதபடியால் தன்னைத்தேடிக்கொண்டு அந்த வீட்டுக்குப்போயிருக்குமென்று நினைத்து இவர் வீட்டிலிருந்து அந்த வீட்டுக்கு வைத்திருக்கும் டெலிபோனில் நாய் அங்கு இருக்கின்றதோவென கேட்டபோது அந்த வீட்டின் துரை ஆம் என்றனராம். அப்படியானால் டெலிபோன் கேழ்க்கும் குழாயை நாயின் காதில் வைக்கும்படி சொல்லவே அப்படியே அந்நாயின் காதில் வைத்த மாத்திரத்தில் தன் எஜமான் இந்த நாயின் பேரைச் சொல்லி உடனே வீட்டுக்கு வாவென்ற சத்தத்தை கேட்டதும் நாய் நேரே வீட்டுக்கு ஓடிவந்துவிட்டதாம்.

இரங்கூன் துறைமுக வேலைகளுக்காகப் பிடித்த செலவு ஒரு கோடியே 38-லக்ஷம் ரூபாய் அதற்காக சாங்கிஷனான தொகை ரூபாய் ஒன்றரைக் கோடி 1900-ம் வருஷத்தில் கட்டிட வேலைகள் ஆரம்பமாகி 6 வருஷ காலத்திற்குள் முடிந்திருக்கின்றன.

உ

ஸ்ரீமத் விராட் விஸ்வப் பிரஹ்மணே நம:

# விஸ்வகர்ம குலோபகாரி.

OF THE REGISTRAR OF REGISTERED R 1915 MADRAS.

மலர்-3. { இராக்ஷஸஸு பங்குனிமீ 1916ஸு மார்ச்சுமீ } இதழ்-3.

## மெய்ஞ்ஞான தீபம்.

### மனோ நிலையின் மாட்சி.

வாயுவானது உஷ்ணமிகுந்தபோது மேலெழும்பிச் செல்வதும், சீதமிகுந்தபோது கீழ்நோக்கிச் செல்வதுமாயிருத்தல்போல, மனமானது விரும்பிய பொருள் கிடைக்காதபோது கலக்கத்தையடைவதும், அது கிடைத்தபோது சாந்தியையடைவதுமாயிருக்கின்றது. கலக்கம் சிறிது நீடித்துக்காணப்படினும்; சாந்தியானது க்ஷண நேரத்திற்குமேல் நிலைப்பதில்லை. சிறுவர் நுகத்தடி விளையாட்டைப் போல் மனம் கலக்கத்தையும், சாந்தியையும்மாறிமாறி அடைந்தே வருதலால், நமக்கு ஒருபோதும் பூரணத்திருப்தியுண்டாகாதிருக்கின்றது. பூரணத்திருப்தியெப்போதுபெறப்படுகின்றதோ அப்போது தான்மனக்கலக்கமும், சாந்தியும் ஒழியும். எப்போது மனது விஷயவாசனை நீங்கிய தியானத்தைப் பூரணமாகப் பெறுகின்றதோ, அப்போது தான் பூரணத் திருப்தி தடையின்றி சித்திக்கும்.

***

### முத்திநெறி நித்தநினை.

'இருப்பது பொய் போவது மெய்' என்று பெரியார் கூறியிருத்தலை ஊன்றிப் பார்க்கின், நாமும் தவறாது மரணமடைவோமென்பது செவ்வனே விளங்கும். தம்முடைய மரணத்தைக் குறித்து ஒவ்வொருநாளும் சிந்திப்பவர்க்கன்றி ஏனையோருக்கு உலகத்தினிலையாமை விளங்கமாட்டாது. உலகத்தினிலையாமையைச் சந்தேகவிபரீதமற அறிந்தவர் யாதொரு பிராணிக்கும் மனவாக்குக் காயங்களால் தீங்கு செய்வதேயின்றாம். ஆகையின் நன்னிலையை நாடுபவர் முத்திநெறியை நித்தலும் நினைத்தல் வேண்டும்.

***

### மோச பாசத்தால் வரும் நாசம்.

பிறர் பொருளை வஞ்சித்துக்கொள்வது, உலோபகுணத்தால் உண்ணாது, உடுக்காது, வறியோர்க்கீயாது பொன் காத்த பூதம்போல்பொருளை சேமித்துவைப்பது, பொய்சாட்சிக்கூறிப் பொருளைப்பறிப்பது, நயவஞ்சகத்தால் நம்பினோரை நட்டாற்றில் விடுவது, சுயநலத்தால் சுற்றந்தழுவாதிருப்பது, அற்ப வாழ்வைக் கருதி அன்னமிட்டார் வீட்டில் கன்னமிடுவது, விளக்கேற்றிவைத்தவர் பால் இளக்கமில்லாதிருப்பது முதலிய தீச்செயல்கள் நினையாத நேரத்தில் மரணம் வருமென்பதைக் கருதாதவர்களிடத்தே நிகழ்வனவாம். நினையாதநேரத்தில் மரணம் வரும் என்பதை யுள்ளவாறறிந்திருந்தால் அவர்கள் மேற்கூறிய மோசபாசங்கள் பாற்படுவதேயின்றாம்.

***

## சென்னை, சித்திரவேலை, கைத்தொழில் காட்சியும், அதன் படிப்பினையும்.

(33-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

கடந்தமாதத்திய நங்குலோபகாரியின் தலையங்கத்தில் விவசாயக்காட்சி ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருந்த காட்சிப்பொருள்களை விளக்கினோம். அதற்குப் பின் கைத்தொழில் இலாகா நமது கவனத்திற்குரியதாகின்றது. கைத்தொழில் இலாகாவில் வைக்கப்பட்டிருந்த காட்சிப்பொருள்கள் ஆறு பிரிவினைகளையுடையனவாயிருந்தன. அவைகள், கலாசாலை உற்பத்திசாமான்கள், இவ்விராஜதானியின் தாதுப்பொருள்கள், இவ்விராஜதானியில்செய்யப்பட்ட இயந்திரங்கள், கைத்தொழில் இலாகாவின்தொழின்முயற்சிகள், இவ்விராஜதானியின் மற்ற தொழின் முயற்சிகள், குறிப்பிட்ட சில கைத்தொழில்களை செய்துகாட்டல் என்பனவைகளாகும்.

முதலாவதாகக் கூறப்பட்ட கலாசாலை உற்பத்தி சாமான்கள், கவர்ன் மெண்டு கைத்தொழில் இலாகா டைரக்டரின் மேற்பார்வையிலிருந்து வரும் தொழிற் கல்வி பாடசாலைச் சிறுவர்களால் செய்யப்பட்டவைகளாகும். சில பெண்பாடசாலைகளில் செய்யப்பட்ட வஸ்துக்களும்இங்கிருந்தன. இப்பிரிவினையில் வைக்கப்பட்டிருந்தசாமான்கள் பலவகைப்பட்டவைகளாயிருந்தாலும், அவைகள், பெரும்பாலும் யாந்திரீக சம்பந்தமான சாமான்களாகவும் மரவேலைசம்பந்தமான சாமான்களாகவுமே யிருந்தன. கோயமுத்தூர் செயின்ட் ஜோசப் கைத்தொழில் பாடசாலை, காட்பாடி தொழிற் பாடசாலை, திண்டிவனம் தொழிற் கலாசாலை, நாசரேத் தொழிற் கல்விச்சாலை, சென்னை மகம்மதிய அஞ்சுமான் பாடசாலை, புத்தூர் கைத்தொழிற் கலாசாலை, கரூர் வெஸ்லியன் மிஷன் கைத்தொழில் வித்யாசாலை, சென்னை செங்கல்வராய நாயகர் தொழிற்கல்விபோதனசாலை, பர்ஹாம்பூர் பாப்டிஸ்டு மிஷன் பாடசாலை, மசூலிபட்டணம் ஆந்திர ஜாதீய கலாசாலை, தஞ்சாவூர் சேவியர் பாடசாலை, வேளச்சேரி கைத்தொழிற் பாடசாலை, பாளையங்கோட்டை, குருட்டுச் சிறுவர் கைத்தொழிற் கல்விச்சாலை, மதுரை கவர்ன்மெண்டு தொழிற்கலாசாலை,முதலிய பலபாடசாலைகளில் போதனைமுறை சம்பந்தமாக அப்பாடசாலைகளின் சிறுவர்களால் வெகு நேர்த்தியாகச்செய்யப்பட்டமரசாமான்களும், இரும்பு பித்தளைச் சாமான்களும், இன்னும் பல வார்ப்பிடச் சாமான்களும் வைக்கப்பட்டிருந்தன. அச்சாமான்களெல்லாம் விலை குறிப்பிடப்பட்டு, விற்பனைக்கு தயாராயிருந்தன. நாசரேத் பாடசாலையில் செய்யப்பட்ட பித்தளை வீரர் பூட்டுகளும், சென்னை செங்கல்வராய நாயகர் பாடசாலையில் செய்யப்பட்ட சரஸ்வதி, கஜலட்சுமி முதலிய வார்ப்பிட விக்கிரகங்களும் இங்கு குறிப்பிடக்கூடியன. பூட்டுகளின் விலை ரூபாய் ஆறு என்றும், சரஸ்வதி, லட்சுமி விக்கிரகங்களின் விலை முறையே ரூபாய் 200, 250 என்றும் விலைச் சீட்டுகள் ஒட்டப்பட்டிருந்தன. இவ்விக்கிரகங்கள் சிற்பசாஸ்திர ரீதியாகச் செய்யப்படாவிட்டாலும், ஜாதிக்கலைப்பாடுள்ளவைகளாயிருந்தபடியால் அநேகர் கவனத்தைக் கவர்ந்தனவென்றே சொல்லவேண்டும்.

மேலே குறித்த கலாப் பாடசாலைகளுள், மரவேலை சம்பந்தமாக மேஜை, நாற்காலிகள், டப்பாய்கள், புஸ்தக அலமாரிகள் சிற்றுளி செதுக்கு மேஜைகள், செதுக்குப்படச் சட்டங்கள் முதலிய காட்சிப்பொருள்களை நிரப்பி வைத்திருந்தன. கரூர்பாடசாலையில் செய்யப்பட்ட ஐரோப்பிய மாதிரிக்கிணங்கிய போஜனச்சாலைச் சாமான்களும், அவ்வறையில் விரிக்கப்பட்டிருந்த அஞ்சுமான் பாடசாலை இரத்தினக்கம்பளமும் வெகு நேர்த்தியான வேலைப்பாடுள்ளவைகளாக விருந்தன. மைலாப்பூர் செவிட்டூமையர் பாடசாலைச் சிறுவர்களும், பாளையங்கோட்டைக் குருட்டுப் பாடசாலைச் சிறுவர்களும் செய்துகாட்டிய 'லேஸ்' என்னும் நூல் பின்னல்வேலைகள் வியக்கத் தக்கவைகளாயிருந்தன. ஊமைச் சிறுவர்களைப் பேசவும், கடினபதங்களை உச்சரிக்கவும் பழக்கி காட்டியது அதிக ஆச்சரியத்தை உண்டுசெய்தது. நெசவு சம்பந்தமான பல காட்சிப் பொருள்களையும், வஸ்திரங்கள், குட்டைகள், போர்வைகள், மேஜைத்துணிகள் முதலிய பல விசித்திரமான நெசவுப் பொருள்களையும், இப் பல பாடசாலைகளும் அனுப்பியிருந்தன.

இவ்விராஜதானியில் உற்பத்தியாகும் தாதுப் பொருள்கள் அணிவகுக்கப்பட்டிருந்த ஸ்தலத்தில், ஜலவூலியால் விளையும், மின்சார சக்தியைக்கொண்டு செய்யக்கூடிய பல தொழில்களையும், சித்திரப்படங்களால் விளக்கப் பட்டிருந்ததோடும், நிலக்கரி, மாங்கனீஸ், கிராபைட், ஆஸ்பெஸ்டாஸ், ஈயசத்து, அபிரேகம், ஸ்படிகக்கல்லுகள், கரிகள், காவிகள், பூநீர்சத்துக்கள், பலவித களிமண்கள் முதலிய தாதுப்பொருள்களின் பேதங்களும் காட்டப்பட்டன. இராஜதானியில்செய்யப்பட்ட இயந்திரங்களில், சென்னை மாசி கம்பெனியாரால்செய்யப்பட்ட நெல்லு குத்தும் மெஷீன்கள், தண்ணீர் இறைக்கும் பம்புகள், கலப்பைகள், உழுபடைகள், கரும்பாலைகள்,காப்பிக்கொட்டைவறுக்கும் சுழல் சட்டிகளும், கொச்சி, பிரண்டன் கம்பெனியாரால் செய்யப்பட்ட 10 குதிரை போட்டமுள்ள ஆயில் இஞ்சின்களும் முக்கியமாய் குறிப்பிடக் கூடியவைகளாகும். யுத்தகாரணமாக வெளி தேசத்திலிருந்து ஆயில் இஞ்சின்களின் வரவு தடைப்படுவதால், மேற்குறித்த கொச்சிகம்பெனியார் அவ்வேலையை லாபகரமாக நடத்தலாமென்ற துணிவுகொண்டு அவ்வேலையை ஆரம்பித்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

கவர்ன்மெண்டு கைத்தொழில்இலாகா காட்சிப்பொருள் ஸ்தலத்தில்,1898 வருடத்தில் மிஸ்டர் சாட்டர்டன் துரையால் துவக்கப்பட்ட அலுமினிய உற்பத்திச் சாமான்களும், 1903 வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட குரோம் பதனிட்ட தோல்களால் செய்யப்பட்ட பற்பல சாமான்களும் வைக்கப்பட்டிருந்தன. மற்றோர்புறத்தில் பென்சில்கள் செய்யும் இயந்திரம் வைக்கப்பட்டு அவ்விடத்திலேயே கண்ணிமைப்பதற்குள் பல பென்சில்களைச் செய்து காட்டிக்கொண்டிருந்தனர். சென்னைகண்ணாடிவேலைச்சாலையில் உற்பத்திசெய்யப்பட்ட கண்ணாடித் தட்டுமுட்டுச் சாமான்களும் அங்கு வைக்கப்பட்டிருந்தன. பொப்பூர் ஸ்ரீ பார்த்தசாரதி நாயுடுவினால் திருவாங்கூர் காகிதச் சாலையில் செய்யப்பட்ட காகிதங்களும், காகிதம் செய்யும் கூழ்களின் பேதங்களும் காட்டப்பட்டிருந்தன. எண்ணை இறக்கும் ஆலைகள் நாட்டப்படவில்லை யென்றாலும், அவ்வாலைகளிலிருந்து இறக்கப்பட்ட பனிநீர்போன்ற தெளிந்த வேர்க்கடலைஎண்ணைகளின் பேதங்கள் புட்டிகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்தன. டாக்டர் மார்ஸ்டன் என்னும்கவர்ன்மெண்டுசாயத்தொழில்நிபுணரால் ஆராய்ச்சி செய்யப்பட்ட பல நூதனசாயங்களும், சாயங்கள் எடுக்கக்கூடிய மரம், இலை, வேர் முதலிய சாகப்பொருள்களும், காட்டப்பட்டன. சென்னை கவர்ன்மெண்டு தோல் வியாபாரப் பாடசாலை மாணவர்களால் ரசாயனமுறையில் பதனிடப்பட்ட பல மிருகங்களின் தோல்கள் கண்களைக் கவர்ந்தன. நெசவு சம்பந்தமாக கரைகளில் போடும் யானை, குதிரை, முதலியவைகளையும், ருத்திராட்ச பேட்டுகளையும் சுலபமாகப் போடுவதற்குரிய 'ஜாக்குவார்டு' - தறிகளையும், கைத்தறிகளையும், அவைகளில் செய்யக்கூடிய வேலைகளையும் நிதரிசனமாகச் செய்து காட்டப்பட்டது.

இவ்விராஜதானியில் ஆங்காங்கு செய்யப்படுகிற தொழில்களை விளக்கிக் காட்டுமிடத்தில் கள்ளிக்கோட்டை கூரை ஓடுகளும், சென்னையில் செய்யப்படும்சிமிட்டிச் சுண்ணாம்புகளும், அப்ரேகத்தில் செய்த விளக்குச்சிம்னிகள், லாந்தர்கள் முதலிய

வைகளும், தென் இந்தியா மெழுகுவத்திச் சாலையில் செய்யப்பட்ட மெழுகுவத்திகளின் பல தினுசுகளும், லலிதாசோப் சாலையில் செய்யப்படும் பலவித சோப்புகளும், வெங்கடாசலம் கம்பெனியரால் செய்யப்படுகிற மசாலை வர்க்கங்களும், ஊறுகாய் தினுசுகளும், மேற்குக் கரையோரத்தில் உற்பத்தியாகிற தேங்காயெண்ணைகளின் பல மாதிரிகளும், கயர்களும், சென்னையில் செய்யப்படுகிற புருஷ்களும் வெகு விஸ்தாரமாக வைக்கப்பட்டிருந்தன.

குறிப்பிட்ட சில கைத்தொழில்களைச் செய்துகாட்டுமிடத்தில், தந்தப்பொத்தான்களும், சுருட்டுகளும் செய்விக்கப்பட்டன. கைத்தறி வேலையைப்பற்றியும், பென்சில் வேலையைப்பற்றியும் மேலே சொல்லியிருக்கிறோம். சென்னை வண்ணாரப்பேட்டையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இரண்டு பொத்தான் தொழிற்சாலைகளில், போஸ் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட தொழிற்சாலையின் ஆலைகள் மட்டுமே அக்கண்காட்சிஸ்தலத்தில் நாட்டும்படியான உரிமைபெற்றன. அவ்வாலைகளைக் கொண்டு ஷர்டு, கோட் முதலியவைகளுக்கு உபயோகமாகும்படியான பலமாதிரி தந்தப்பொத்தான்கள் செய்து காட்டப்பட்டன. பெங்களூர் முதலிய ஊர்களிலிருந்து தருவிக்கப்படும் சுத்திசெய்யப்பட்ட எலும்புகளே இப்பொத்தான் வேலைக்கு தந்தத்திற்குப் பதிலாக உபயோகப்படுத்தப்படுகின்றன. இவ்வேலைக்கு உபயோகப்படுத்தப்பட்ட ஆலைகள் சிறு கடைச்சல் பட்டரைகளேயாகும். அவைகளின் விலை சுமார் 20 ரூபாயாகலாம். அவைகளில் வேலை செய்பவர்கள் 7-8-வயதுள்ள சிறு பால்யர்களே. அவர்கள் மாதக்கூலி ரூபா இரண்டு முதல் ஆறுக்கு மேற்படுவதில்லையாம். இப்பொழுது நடைபெறும் யுத்தக்காரணத்தால் ஜர்மன், ஆஸ்திரியப்பொத்தான்களின் வரவு நின்றுவிட்டமையால் இத்தொழில் மிகுந்தலாபத்தைத் தரக்கூடியதாக விருக்கிறது. இத்தொழிலை பின்பற்ற அபேட்சிக்கும்விஸ்வகர்மாக்களுண்டானால் அவர்கட்கு வேண்டிய உதவிசெய்ய தயாராக விருக்கின்றோம். மற்றொரு பொத்தான் சாலையாகிய முசும்தார் தொழிற் சாலையில் செய்யப்பட்ட பல அபூர்வமாதிரிப் பொத்தான்களும் வைக்கப்பட்டிருந்தன. பின்னால் சொல்லிய கம்பெனியார் சென்னை நாஷனல் பண்டு சங்கத்தாரால் வேலையின் அருமைப்பாட்டிற்காக ஓர் மெடல் அளிக்கப்பட்டனர். ஆகையின், வெகு லாபகரமான இந்த வேலையின் விபரங்களைத் தெரிந்துகொள்ள நம்மனோர்கள் பரபரப்பும், சுறுசுறுப்பும் காட்டுவார்களென்றே நம்புகிறோம். (தொடரும்)

பத்திராசிரியர்.

***

## கல்வியும் நமது கடமையும்.

உலகிலுள்ள பொருட்களில் சிறந்து விளங்குவது கல்விப்பொருளென்று யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதாம். அப்படிப்பட்ட கல்விப் பொருளின்மேல் நம்மவர்கள் கவனம் வையாமல் செல்வப்பொருளின் மேலேயே சிந்தனைவைத்து உழல்கின்றனர். கல்விப் பொருளை-நாமெவ்வளவு அதிகம் சம்பாதிக்கின்றோமோ அவ்வளவு செல்வப்பொருள் தானகவேவரும். கல்விப்பொருள் குறைவாகவிருந்தால், செல்வப்பொருளும் குறைந்தே வரும். கல்வியைக் கற்று அதனாலடையும் செல்வப்பொருளில்லாது வருந்தும் நம்மவரிற் சிலர் தங்கள் புத்திர சிரோரத்தினங்களையும் தங்கள்போலவே ஆக்கிவைக்கின்றனர். இது அறிவில்லாத் தன்மையென்றெண்ணவேண்டிவருகின்றது. தாம் கல்வியில்லாது படுந்துன்பத்தை தங்கள் புத்திரர்களுக்கு அடிக்கடி சொல்லி அவர்களை அறிவாளிகளாக்கவிரும்புவதன்றோ தந்தைமார்களுக்கு அழகு. அதைவிட்டுப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாமலும், உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் கொடாமலும், வீட்டிலேயே வைத்துக்



கொண்டு கடை வீதிகளுக்கு அனுப்பிக்கொண்டும் இருப்பதினால் அப்பிள்ளைகட்குப் படிக்கத் தெரியாமலும், கையெழுத்திட முடியாமலும் கெடுவதன்றி அவர்களைத் தொழிலுக் கனுப்பினாலும் கல்வியில்லாக்குறையால் சிற்பசாஸ்திரப்படி அளவு தெரிந்து வேலை செய்யத் தெரியாமலும் புத்திமழுங்கி அவமானப்பட்டுப் போவதோடும் கூட அன்னியர்களால் இகழப்படுகின்றனர். நமது சுஜாதிப் பிள்ளைகளையும் மற்ற அன்னியஜாதிப் பிள்ளைகளையும் பல விஷயங்களில் ஒப்பிட்டுப் பார்ப்போமானால் அன்னியஜாதிப் பிள்ளைகளே எவ்விஷயங்களிலும் மேலாகக் காணப்படுகிறார்கள். அவர்களைப்போல் நமது பிள்ளைகளும் மனிதர்கள்தானே. அப்பிள்ளைகளைப்படைத்த விஸ்வேஸ்வரர் தாமே நமது பிள்ளைகளையும் சிருஷ்டித்தார். இவைகளையெல்லாம் யோசிக்குமளவில் தந்தையர்களாலேயே பிள்ளைகளுக்குச்சுகமும் தந்தையர்களாலேயே கேடும் உண்டாகின்றன. மற்றஜாதியார் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கனுப்பிக் கல்வி கற்பித்துக் கொடுப்பதினாற்றான் அப்பிள்ளைகளும், அவர்கள் குடும்பமும், அவர்களும் முன்னுக்கு வருகிறார்கள். இதையறிந்தாகிலும் நம்மவர்கள் நடக்கக் கூடாதா?

குலாபிமானிகளே! உங்கள் பிள்ளைகளுக்குப் பாடசாலைச் சம்பளம் கொடுக்கச்சக்தியற்றிருந்தால் தற்போது தருமத்திற்காக ஏற்பட்டுள்ள நமது சுஜாதிப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பலாகாதா? அல்லது நமது சுஜாதிக் கனவான்களில் அநேகர் இலவசமாய் இரவில் கல்விகற்பிக்க முன்வந்திருக்கிறார்களே, அவர்களிடம் உங்கள் பிள்ளைகளை அனுப்பிவைக்கக் கூடாதா? இவைகள் அவமானத்தை உண்டாக்குமென்று எண்ணங்கொண்டிருந்தால் இப்பொழுது கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட எலிமெண்டெரி பாடசாலைகளுக்கு சுலபசம்பளம்கொடுத்து படிக்கவைக்க கூடாதா? அல்லது குலாபிமானிகளாயுள்ளவர்கள் ஒன்றுகூடி சுலப மூலதனம் வைத்து இராப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி தங்கள் பிள்ளைகளுக்குக் கல்விஞானத்தை ஊட்டலாகாதா? நமது சுஜாதிப் பத்திரிகைகளை வாங்கி அதிலுள்ள விஷயங்களை எடுத்து நமது பிள்ளைகளுக் குணர்த்தலாகாதா? நமது பெண்களையும் பெண்குழந்தைகளையும் படிக்கவைக்கலாகாதா? அதனாலவர்கள் சமுசாரப் பாங்கும், சன்மார்க்க நடையும், கற்பிலக்கணமும் கற்றுக்கொள்ளார்களா? கும்பிக்கிரைதேடி குலத்திற்கும் குடும்பத்திற்கும் குறைவைக்கலாமா?. அந்தோ! பரிதாபம்!! பரிதாபம்!!!

விஸ்வகர்மாக்களென்று நமக்குப் பெரிய பெயர் வந்ததே போதுமென்று சும்மாவிருந்தால், அதற்குரிய நடையொழுக்கங்கள் உண்டாவதற்குக் கல்வி வேண்டாமா? காலம் கலிகாலமல்லவா? கலியை வெல்வதற்குக்கல்வி ஆவசியகமல்லவா? விளக்கைப்பிடித்துக்கொண்டு கிணற்றில் விழுவார்களுண்டா? அந்தோ பரிதாபம்! இனியாவது மேற்கூறிய விஷயங்களைக் கவனித்து நடப்பதே நம்மனோர்க்கழகாம். இவைகளைப் படித்து வீணேயிருக்கின் இப்பொழுதுள்ள நிலைமையும் குன்றி விடுமென்பதற்கு யாதொரு ஆக்ஷேபனையுமில்லை. ஆதலால் மேற்கூறிய விஷயங்களை கவனித்து நடப்பதே நம்மனோர்க்கு அழகாகும்.

மணிமங்கலம். ராஜரத்தினாச்சாரி.

***

## பண்டைக்காலத் திராவிடரும், தற்காலக் கம்மியரும்.

பண்டைக்காலத்து திராவிடர்கள், ஆரியரினும் மிக்கக் கல்விப்பேறும், செல்வப்பேறும், நாகரீக முதிர்ச்சியும் அடைந்து விளங்கினரென சில பழஞ்சரிதை வல்லோர்கள் புகல்வர். வேறுசிலர், இத்தமிழ்நாடு ஆரியர் வந்தடையுமுன்னர் நீண்டு அடர்ந்த ஆரண்யமாயிருந்ததென்றும், கலை

கள், மதம், தொழின் முறைகள், சிற்பம், சங்கீதம் முதலிய பிறவும் ஆரியர் வந்த பின்னரே அவர்கள் பால் திராவிடர் கற்றுணர்ந்தனரென்றும் மொழிவர். இவ்விரு கூற்றின் உண்மையை நன்காராய்வது ஒவ்வொரு தமிழ் மக்களின் கடமையாகும். இத்தகைய விஷயங்களை விசாரிக்கப் புகுமுன், விஷயத்திலுள்ள அபிமானத்தைச் சற்று நீக்கி, பின்னர் பட்சபாதமின்றி ஆராய்வதே முறையாகும். எனவே, மேற்குறித்த விஷயத்தை உசாவப் புகுமுன், ஆரியர் வந்தடையுமுன்னர் தமிழ் நாடிருந்த நிலைமையைக் குறித்துச் சற்று பரிசீலனை செய்வது அவசியமாகிறது.

ஆரியர் சிந்து நதிக்கரையே வந்து குடியேறிய காலத்தில் உள்நாட்டில் இருந்த தமிழர் எழுவகை அரண்மனைகளையும், தொண்ணூற்றாறு கோட்டைகளையும் உடையராய் வாழ்ந்துகொண்டிருக்கக் கண்டனரென்பது பூர்வசரித்திரங்களா லறிந்த உண்மையாகும். இற்றைக்குச் சுமார் நாலாயிரம் வருடங்களுக்கு முன்னமே திராவிடர் அழகின்மிக்க ஆலயங்களையும், எழுநிலை மாடங்களையும், உன்னத கற்கோட்டைகளையும் கட்டுவித்து, அன்னியர் தம்மை வந்தடுத்து வாழுமியல்புடையவராயிருந்தன ரென்றால், அத்தகைய அரிய பெரிய கட்டிடங்களை கட்டி முடித்தற்கு இன்றியமையாத சாதனங்களையும், பரிமாணம், ஆகிருதி, உன்னதம் முதலிய வைகளின் ஒழுங்குபாடுகளை அறியுமுணர்ச்சியும், அவைகளை விளக்கும் சாஸ்திர நுட்பங்களின் தேர்ச்சியும் பெரிதும் பெற்றிருந்தன ரென்றும், இவைகளல்லாது, முக்கியமாய் செல்வப் பேற்றை நிரம்பவும் அடைந்திருந்தனரென்றும் பெறப்படுகின்றன. அன்றியும் அவர்கட்கோர் வழிபடு கடவுளர் உண்டென்றும், வந்தனை வழிபாடுகளால் அவரைத் தொழுதேற்றுவதற்கு ஓர் பொதுத்தலமும், அத்தலத்திற்கோர் தேற்றமும் கற்பித்திருந்தனரென்றும் தொன்னூல் முகத்தா லறிகின்றோம்.

ஆகையின், ஆரியர் இத் தமிழ் நாட்டை வந்தடையுமுன்னரே திராவிடர் பல்வேறு விஷயங்களிலும் நாகரீக முதிர்ச்சி பெற்றிருந்தனரென்பது நன்கு விளங்கும்.

ஒவ்வொரு தேசங்களின் பூர்வீக நாகரீகங்களை, செவ்வனே யறிந்துகொள்ள அத்தேசச் சரிதைகள் வரன்முறையாகத் தொகுக்கப்படாத விடத்து, அத் தேசத்திற்குரிய சிற்பம், சாஸ்திரம், பாஷை, கர்ண பாரம்பரையாக வந்த சரித்திரங்கள், கட்டுரைகள், சிலாவணி நாணயங்கள் முதலியவற்றால் பெரிதும் ஊகித்துணர்ந்து ஒழுங்குப்படுத்தப் படுகின்றன. ஈஜிப்து, கிரீஸ் முதலிய புதையுண்ட தேசங்களின் அருமை பெருமைகளும், மறையுண் டிருந்த அவர்கள் பூர்வகாலச் சரிதைகளும் அவர்கள் நாட்டியிருந்த சிற்பத்தினா லன்றோ ஒழுங்குப் படுத்தப்பட்டன. நிற்க, நூல்கள், பாஷை, பழஞ்சரிதை முதலியவற்றால் பண்டையர் உயர்வு, தாழ்வை யூராயும் மற்றொரு வழியையும் பின்பற்றின், இற்றைக்கு நாலாயிரம் வருடங்களுக்கு முன்னரியற்றப்பட்டுள்ள, தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலொன்றே திராவிடரின் நாகரீக முதிர்ச்சியை நிலைநாட்டப் போதிய சான்றாகும். இலக்கியத்திற்கு பின்னரே இலக்கணம் என்னுமிடத்தி தமிழர் இலக்கியங்கள் அந் நாலாயிர வருடங்களுக்கு முன்னரே உன்னத நிலைபெற்றிருந்தமை இனிது நாட்டப்படும். பாஷை வழியே நோக்குழி, தமிழ் பாஷையிலுள்ள சப்தக் குறைபாடுகளாலும், இன்னும் சில முக்கிய முரண்படு அம்சங்களாலும், தமிழ் பாஷைக்கு 'தென்மொழி' என்னும் தனிப் பெயருள்ள வாற்றாலும், ஆரிய பாஷையாகிய சமஸ்கிருதபாஷைக்கும் தமிழ் பாஷைக்குமெவ்வித சம்பந்தமுமில்லையென நாட்டப்பெற்றமையால், திராவிடரின் பாஷாஞானமும், இலக்கிய இலக்கணத்தேர்ச்சியும் தெள்ளிதின் விளக்கப்பட்டது. எனவே எவ்வழியும் நோக்குங்கால், தமிழர் ஒரு சிறிதும் ஆரியரினும் தாழ்ந்தவரா கார்.



இனி இத்தகைய சிறப்புகள் வாய்ந்த திராவிட தேசத்தின்கண், அவர்கள் நாகரீகமுதிர்ச்சிக்குக் காரண பூதரான சிற்பிகளும், சிற்பநூல் வல்லோர்களும் இருந்தனரென்பதுதானே அமையும். அப்பண்டைய சிற்பிகளையும், தற்காலக்கம்மியர்களையும் ஒப்பிட்டு, பாகுபாடு விளங்க உணர்தல் தொன்னூலாய் வோர்க்கின்றியமையாத கடனாம். உண்மைதெரிந்து அவர்களிருவரையும் வேற்றுமைப் படுத்தியாவது ஒற்றுமைப்படுத்தியாவது கூறி முடிபுரைத்தல் தொன்னூல், பின்னூல் கருத்துக்களையும், முக்கியமாய் உலக வழக்கையும் பொறுத்து நிற்கும். இது நிற்க. பாரோடு, நீரும், படர்தருகாற்றும் இரவி, மதியோனையும், வழிபடாகின்ற ஆரியர், பல கற்பித தேவரை வணங்காது, சிவமாம் பரம்பொருளொன்றினையே வழிபட்டிலன்றி, சீவகாருண்யச் செயல்களை தமக்கேயுரிமையாய்க்கொண்டு விளங்கிய திராவிட புங்கவர்கட்கு ஆலயங்களையும், வணங்குதற்குரிய விக்கிரகங்களையும், அமைத்தனரென்பதும், நாடோடிகளாம், பசுந்தழைப் புலன்களில் தங்கி வேள்விக்குரிய பசுக்களை மேய்வித்து, இந்திரன், வாயு, அக்கினி, வருணன் முதலிய பூத பௌதிகக் கடவுளர்க்கு அவைகளை இறையிட் டருந்தி, சோமரசபானம் முதலிய மதுக்களை உண்டு மதிமயக்கமுற்று, சீவகாருண்யச் செயல்களைத் துறந்து திரிந்த ஆரியர்பால் அவைகளை ஐயந்திரிபற கற்றுணர்ந்தனரெனக் கூறல் மிக்க நகையாடற் பாலது. எனவே, திராவிட தேசப்பூர்வ சிற்பிகளாயினோர் ஆரியரே யென மொழிதல் ஒரு சிறிதும் பொருந்தாது.

தொடரும்.

M. மறைமாமணிமுடி.

***

## விஸ்வகர்ம வம்சத்தார் முன்னேற்ற மடைவ தெப்படி?

நமது ஜாதியர்களைச் சீர்திருத்த ஆங்காங்கு போதுமான சபைகளில்லை. அப்படி ஏற்பட்டுள்ள சபைகள், பெயர் மாத்திரமாக விளங்கி வருகிறதே யொழிய உபயோகமான வேலைகள் ஒன்றும் செய்யக் காணோம். ஓர் ஊரில் ஏதேனும் சபை ஏற்பட்டால் அந்தசபை நமது ஜாதியர்களை சீர்திருத்தவும், நமக்குஏற்பட்டுள்ள பூர்வ ஆசாரங்களை விளக்கிக்காட்டி புஸ்தகரூபமாகவேனும், கைத்துண்டு பத்திரிகைகளாகவேனும், அச்சிட்டு வெளிப்படுத்தவும், ஆங்காங்குள்ள கட்சிப்பிரதி கட்சிகளை நாசப்படுத்தி ஒற்றுமை யுண்டாக்கவும் வேண்டும். பிரதமத்தில் ஒற்றுமை யுண்டாக்காவிட்டால அவர்களின் எவ்விதப் பிரயத்தினங்களும் ஓங்காது. ஒருமுயற்சியும் பலியாது. ஒரு கையை தட்டினால் ஓசை யுண்டாகமாட்டாது. ஒருவிரலினால் ஆகாரத்தை உட்கொள்ளமுடியாது. ஒற்றுமை யில்லாவிட்டால் கட்டுப்பாடில்லை. கட்டுப்பாடு இல்லாவிட்டால் ஒன்றுமேயில்லை. கல்வி யில்லை; தனமில்லை; சிறப்பில்லை செல்வமில்லை. பிறகு துக்கத்திற்கோ எல்லையில்லை. இரண்டாவது; அச் சபைகள் சுஜாதிச் சிறுவர்கள் லௌகிகக் கல்வியோ அல்லது வைதிகக் கல்வியோ கற்கும்படியான வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும், மூன்றாவது; நமது குலப்பணிகளை கௌரவத்துடனும், நியாயவழியாக லாபத்துடனும் நடத்தும்படியான மார்க்கங்களைப் போதிக்கவேண்டும். நாலாவது நமது வம்சத்திற்கு ஆதாரமான புஸ்தகங்களைத் தேடிப்பிடித்து அச்சியற்றி சுலபவிலைக்கு விற்கவேண்டும். ஐந்தாவது; அடிக்கடி சுஜாதி, விஜாதி வித்யா ரத்தினங்களைக் கொண்டு பிரசங்கங்கள் நடத்தவேண்டும். ஆறாவது; சபைக் கட்டிடத்தில் குறிப்பிட்ட தினங்களில் சமாராதனை, பந்திபோஜனம் முதலியவைகள் நடைபெறச் செய்

யவேண்டும். ஏழாவது; குலத்தினரத்தாழ்ந்தி அன்னியரால் எழுதப்படும் புஸ்தகங்களுக்கும், மற்ற வியாசங்களுக்கும்உடனுக்குடன் நியாயவாயிலாக கண்டனம், சமாதானம் முதலிய வைகளை எழுதி வெளிப்படுத்தல் வேண்டும். எட்டாவது; காங்பரன்ஸ்முதலிய மஹா நாடுகளும், பொருட்காட்சிகளும நடைபெறும் முயற்சிகளில் நாட்டம் வேண்டும்.

'ஒற்றுமை வேண்டும்,' 'ஒற்றுமைவேண்டும்' என்று வாயினுல் சொல்லிக் கொண்டு செய்கையில் வேற்றுமையோடிருந்தால் ஒற்றுமை உண்டாகிவிடுமோ? ஓர் ஜாதியை சீர்திருத்துவதற்கு ஓர் சபை ஏற்பட்டால் அச்சபைக்கு அடக்கமாக படித்தவர்கள் இருப்பார்கள்; பாமரரும் இருப்பார்கள்; பிறவிச் செல்வம் உள்ளவர்களும் இருப்பார்கள்! தரித்திரத்தோடு உடன் பிறந்தவர்களும் இருப்பார்கள்; உத்தியோகபதவியி லுள்ளவர்களும் இருப்பார்கள்; கைத்தொழில் ஜீவனமுள்ளவர்களும் இருப்பார்கள்; சன்மார்க்கரும் இருப்பார்கள்; அதற்கு மாருக வுள்வர்களும் இருப்பார்கள். இத்தனை மாறுபாடுகளை யுடையவர்களையெல்லாம் திருத்தி ஒற்றுமை யுண்டாக்குவதென்றுல் அச்சபைக்கு கடினமான வேலைதான். ஒவ்வொருவர்க்கும் இதமாக நடப்பதென்றுல் அச்சபையின் உத்தியோகஸ்தர்களுக்கும் கஷ்டம்தான். நிஷ்டூரப் பிராப்திதான் அவர்கள் கஷ்டத்திற்குப் பிரதிப் பிரயோஜனம். என்ன செய்வது! மானிடராகப் பிறந்தவர்கள் சுக துக்கங்களை சமநோக்காக யிருந்து அநுபவிக்க வேண்டும் என்பதை அடிக்கடி நாம் நமது ஞாபகத்திற்குக் கொண்டு வந்தால் சஞ்சலம், மனக்குழப்பம், வெறுப்பு, ஊக்கத்தளர்ச்சி முதலிய அலைகள் நம்மைத் தாக்குவது இல்லை. மனச் சாட்சிக்கு மாருக நடவாமலும், குலத்திற்கு நன்மை பயக்கத்தக்க காரியங்களை புகழ் இகழ்முதலிய வைகளை கவனியாமலும் நடத்திவந்தால் நமது கஷ்டங்கள் ஒரு நாளும் நஷ்டமடைவதில்லை. இந்த குணங்களை உடையவர்கள் தான் ஓர் சபையை நன்ருய் நடத்துவதற்குரிய யோக்கியதை யுடையவர்களாவார்கள். ஆகையால், ஓர் சபையின் உத்தியோகஸ்தர்களை நியமிப்பதென்றாலும் உத்தியோகத்தை அங்கீகரிப்பதென்றாலும் ஒவ்வொருவரும் அதிக கவனம் செலுத்தவேண்டிய காரியங்களாக விருக்கின்றன. இயற்கையில் அநுதாபக் குணமுடையவர்களைத்தான் சபைத் தலைவர்களாகவும், காரியாதிகாரிகளாகவும் தெரிந்தெடுக்கவேண்டும். கல்வி, செல்வம், உத்தியோக அந்தஸ்து, குடும்ப யோக்யதை, சரீர ஆகிருதி முதலிய பல யோக்யதைகளிலிருந்தும், உண்மையான அநுதாபமும் இன்சொல்லும், சத்தியவசனமும், இல்லாவிட்டால் அவர்களைக் கூப்பிட்டு துலைவில் வைக்கவேண்டும். மேற்சொல்லிய எல்லாம் ஒருவரிடம் இருந்தாலும், தம்மினும் எளியாருடன் பழகி அவர்களைத் திருத்தித் தம்முடன் சமநிலைக்குக் கொண்டுவருவதற்கு அருவையும், லஜ்ஜையும் கொள்ளும் குணமுள்ள வர்களானுல் அவர்களால், குலத்திற்கு ஒரு நாளும் நன்மை யுண்டாகவேமாட்டாது. அவர்களைத் தேடிப்பிடித்து அவர்கள் தலையில் உத்தியோகப் பொறுப்பைச் சுமத்துவது மௌட்டீகமே. அவர்கள் அவ்வித உத்தியோகங்களை மகிழ்ந்து ஏற்றுக்கொள்வது மௌட்டீகத்திலும் மௌட்டீகமே. ஒற்றுமை யுண்டாவதற்கு மேலே குறிப்பிட்டவைகளெல்லாம் வெகு முக்கியமானவைகள். கவனிக்கத்தகுந்தவைகள்.

வெகுகாலமாக கல்வியில் கவனமிழந்த ஓர் ஜாதிக்கு ஒரேகாலில கல்வியையூட்ட முடியாது. சிறுகச் சிறுகத்தான் ஆகவேண்டும். முதலில் சுஜாதிப் பத்திரிகைகளையோ, துண்டுப்பத்திரிகைகளையோ வாசித்து அவைகளின் கருத்துக்களைப் பெரியோர் சிறியோர் அனைவரும் தெரிந்து கொள்ளக்கூடிய சக்தியை யுண்டாக்கவேண்டும். பிறகு நமது சபையில் பணமும்,



ஜாதியில் படிக்குங் குணமும் உள்ள சிறுவர்களிருந்தால் உயர்தரப்படிப்பைஅடையச்செய்யலாம். தமிழ் பத்திரிகைகளைக் கூடப் படிக்கத்தெரியாதவர்களுக்கு பத்திரிகையின் பிரயோசனம் என்னவாகும்? வாசித்த புண்ணியவான்களுக்கு பத்திரிகையாலடையும் புத்திமதிகள் அவசியமேயில்லை. வாசிப்பில்லா நிரட்சர குக்ஷிகளைத் தான் திருத்தவேண்டும். அவர்கள் தொகை நாளுக்கு நாள் குறையும் படியான பிரயத்தினங்கள் செய்யவேண்டும். இவர்களைத் திருத்துவதற்கு உபந்நியாசங்கள் தான் தகுந்தவழி. கல்விக்கு அடுத்தது கேள்வி. கல்வியில்லாமலே கேள்வியால் எத்தனையோ மனிதர்கள் சுத்த பிரமஞானிகளாகவும், சித்தபுருஷர்களாகவும் மாறியிருக்கிறுர்களே! ஜாதிவரம்பிலும், கட்டுப்பாட்டிலும் இருப்பதுதானு கஷ்டம். கேட்கக் கேட்கக் கல்லும் கரையுமே. நம் ஜாதியார் மனம் என்ன கல்லா? எல்லோரும் பல்லக்கில் ஏறி சவாரிசெய்யவேண்டுமென்றுல் பல்லக்கு சுமப்பதுயார்? நமது ஜாதியில் பிறந்த ஒவ்வொருவரும் உத்தியோகம் செய்யவேண்டுமென்றுல், நமது பூர்வீகத் தொழில்கள் நசித்து விடவேண்டுமென்பதுதான் தாத்பரியம். கைத்தொழில் ஞானம் நமக்கு உடன் பிறப்பு; இரத்தத்தில் ஊறியது. உத்தியோக பதவிகளுக்குஆபத்து வந்தகாலத்திலும் நமக்கு ஊன்று கோலாகஉள்ளது. கைத்தொழிலே நம்மை பிரம சந்ததியாகச் செய்தது. அதுவே அதில்அன்பும்நாட்டமும் வைத்த அன்னியர் பெட்டியைப் பொன்னுல் நிரப்புவது! அதுவே அதனிடத்தில் அன்பில்லா நம்வாயில் மண் அறைவது! கைத்தொழிலே ஐம்பது வருஷத்திற்கு முன் உலக நாகரீகத்தில் மின் மினிப் பூச்சியை போன்றிருந்த ஜப்பான் தேசத்தை சூரியனைப்போலப் பிரகாசிக்கச் செய்தது. அதுவே அமெரிக்கா தேசத்தை அதிஉன்னத ஸ்திதியில் அமர்த்தியது. அதுவே இங்கிலாந்துதேசத்தை வெற்றிச்சிங்கமாக வெளியாக்கப் படுத்தியது. ஆகையால் நமது குலதர்மமான பணிகளைகௌரவமாக நடத்திவருவதால் நமக்கு ஒருநாளும் தாழ்வேயில்லை. ஏன் நாம் பல பல விதமாகப் பேசவேண்டும். உத்தியோகத்தையே நம்பி தங்கள் பாட்டன், பூட்டன் கையாடிவந்த தொழிலை லஜ்ஜையால் கைவிட்ட ஒரு ஜாதியர்களுக்கு நாளையே உத்தியோகமில்லாவிட்டாலும், கொடுக்கப்படமாட்டாது என்று உத்திரவு பிறந்தாலும்அவர்கள்கதி என்னவாகும்? சீர்தூக்கிப் பாருங்கள், நமது கைத்தொழிலின் சிறப்பை!

நமது குலத்தைப்பற்றிய உயர்வுதாழ்வுகளை நாமே வாய்கொண்ட மட்டும் பேசிக்கொள்கிறேம். ஏமாந்தவர்கள் அகப்பட்டால் இன்னும் எகிறி எகிறிப்பேசுகிறேம் ஏனென்றுல், அவர்கள் நாம் பேசுவதற்கெல்லாம் சாஸ்திர ஆதாரங்கள் கேட்கமாட்டார்கள்என்னுந்தைரியந்தான். விழித்தவர்கள் கேட்டுவிட்டாலோ மிரள மிரள விழிக்கவேண்டியதுதான். இல்லாவிட்டால் சித்தூர் ஜில்லா தீர்ப்பு, சேலந்தீர்ப்பு முதலிய புஸ்தகங்களின் நாமதேயங்களைச் சொல்லவேண்டுவதுதான். வட தேசத்திலிருக்கிற எங்கள்வம்ச சிரேஷ்டர்களின் படிப்பையும், ஆசார விவகாரங்களைப்பார்த்தாலல்லவோ தெரியும் என்று பெருமை பாராட்டவேண்டியதுதான். இப்படியெல்லாம் வாய்ப்பந்தல் போட்டு விட்டால் போதுமா? எத்தனைநாளைக்கு இந்த வீரம் செல்லும்; ஜம்பம் சாயும்? ஐயோ! நமது முன்னேர்பெருமைகளையும், நமக்குஆதாரமாயுள்ள குல நூல்களையும் நாம் சந்தேகமறத் தெரிந்து கொள்ளவேண்டியதில்லையா? சர்க்கரை ருசிக்கும் என்று பிறர்சொல்லக் கேட்ட மாத்திரத்திலேயே நமது வாய் ருசிக்குமா? கொஞ்சம்சர்க்கரையை வாயில் போட்டு அதன் ருசியை சுவாநுபவமாகத் தெரிந்துகொண்டாலல்லவோ தைரியமாய் சர்க்கரையின் குணத்தைப்பற்றி மற்றவர்களிடம் பேசலாம். நாம்மேன்மையடையவேண்டுமானுல் நமது குல நலங்களை போதிக்கும்படியான புஸ்தகங்களை வாங்கிப்

படிக்கவேண்டும். மற்றவர்களையும் படிக்கும்படியாகச் செய்யவேண்டும். படிக்கத் தெரியாதவர்களுக்கு எடுத்து போதிக்கவேண்டும். பூர்வகிரந்தங்கள், ஏட்டுப் பிரதிகளிருந்தால் அவைகளை ரகசியமாகவைத்துக்கொண்டுதமக்குமொருஉபயோகமில்லாமலும், பிறர் உபயோகப்படுத்திக்கொள்வதற்கு தடையாகவும் இருக்கலாகாது. அப்பேர்ப்பட்ட கிரந்தங்களை அச்சியற்றி வெளிப்படுத்த முயற்சிசெய்வதே நம்மனோர்களின் கடமையாகும்.

நமது ஜாதியரைப்பற்றி மற்றவர் தூஷித்துபேசினாலும், எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தினாலும் அவைகளுக்காக வேண்டிய நிவர்த்திகளை அப்போதைக்கப்போது நியாய வழியில் தேடவேண்டும். அதுதான் ஒவ்வொரு உண்மையான விஸ்வர்மாவின் கடமையாகும். நமது கவனக்குறைவால் இதுவரையில் எத்தனையோ புஸ்தகங்கள் நமக்கு இழிவைக் கற்பித்துக்கொண்டு, இன்னும் பூரண ஆயுளோடிருந்துகொண்டிருக்கின்றன. அவைகளை அநுசரித்தே புதிய நூல்களும் நாளுக்கு நாள் வெளிவந்து கொண்டே யிருக்கின்றன. இவைக ளெல்லா வற்றையும் அநுசரித்தே சென்ஸஸ் ரிபோர்டுகளும், டிஸ்டிரிக்ட் மானியுவல்களும்; மற்ற சர்க்கார் ரிகார்டுகள் மாறுபாடடைந்து கொண்டு வருகின்றன. நமது பூர்வோத்திர பாத்தியங்களை தற்கால நாகரீகத்தை யநுசரித்து, சரித்திரவாயிலாக ஆராய்ச்சிசெய்தாலல்லவோ நமது குறைகள் நீரும்; அன்னியர் வாய்கள் அடைப்படும்; அவர்கள் கைகளும் ஓயும். அன்னியர் தூஷணைகளை நியாயவரம்பில் நின்று அவசியம் கண்டிக்கவேண்டும். 'நெல்லறுக்க வோர் காலம், மரமறுக்க ஓர் காலம், நீண்டிருக்கும் புல்லறுக்க வோர் காலம், பூக்கொய்ய ஓர் காலம்' என்று ஒவ்வொன்றிற்கும் காலவரை ஏற்பட்டிருந்தாலும், அவ்வித காலவரையேற்படாது கூற்றுவன் கையிலெக்காலத்திலும் அறுபடக்கூடிய இந்த மானிட சரீரத்திற்கு பிணியேதேனும் வந்தால் உடனே சிகிச்சை செய்வது போலவே நமது குலத்திற்கும், குலதர்மத்திற்கும் விரோதமான கிரந்தங்களை தோன்றியவுடன் கண்டிப்பதற்கு அதே சிந்தையாக இரவுபகலிருந்து இடையறு முயற்சிகள் செய்யவேண்டும். ஆகையால் இவ்விதமுயற்சிகளைச் செய்வதுதான் சுஜாதிச் சபைகளின் நோக்கம். அவைகளை அமுலுக்கு கொண்டுவரப் பிரயத்தனப் படுவதுதான் அச்சபைகளின் வேலை. அப்பிரயத்தனங்களுக்கு முற்றும் உடன்பாடாக விருப்பதுதான் நம்மனோர்களின் கடமையும், பொருந்தகைமையுமாகும்.

(தொடரும்)

சனுதன, சிவலிங்காசாரி.

***

## குலத்திற் கேற்ற ஆசாரம்.

சென்னை டிராம் வண்டிகள் மணிக்கு ஒரு மைல் வீதம் வெகு வேகமாகச் சென்றாலும், மூட்டைப் பூச்சிகளின் உபத்திரவம் அதிகமிருந்தாலும், எம்போலியர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்வதென்றால் அதில் ஏறிச்செல்லத் தான் வேண்டியிருக்கிறது. சுமார் ஒரு வாரத்திற்கு முன் ஒருநாள் சாயங்காலம் புரசைவாக்கத்திலிருந்து, பச்சையப்பன் பாடசாலை வரையில் முக்காலணா பயணசீட்டு பெற்றுக்கொண்டு உட்கார்ந்து வந்தேன். டிராம்வண்டி ஓடி ஓரிடத்திலெதிர்நோக்கிவரும் மற்றொருவண்டிக்காகச் சற்று நின்றது. அப்பொழுது மூட்டைப்பூச்சி உபத்திரவம்போதாதென்று பல பிச்சைக்காரர் உபத்திரவமும் சேர்ந்து கொண்டது. அதில் ஒரு பிச்சைக்காரன் பிறவியில் மகா கோரரூபமுள்ளவனாயிருந்தான் பார்ப்பதற்கு மனம் சகிக்கவில்லை. கண்கள் கூசின. இவ்விதஉணர்ச்சி வண்டியிலிருந்த ஒவ்வொரு வருக்குமே யுண்டாயிற்று. ஒருவர்முகத்தைச்சுளித்தார்.



இன்னொருவர் மடிமீது மூடிவைத்திருந்த தன் புஸ்தகத்தை யெடுத்து படிப்பவர்போல் பாசாங்கு காட்டினார். இதையெல்லாம் கண்ணிமையாது பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் 'ஏன் ஐயா முகத்தைச் சுளிக்க வேண்டும். நமது ஐந்து விரல்களும் ஒன்றாய் இருக்கிறதா' என்றார். இதற்குள் பக்கத்திலிருந்த ஓர் கிருஸ்தவர் 'நாம் எல்லோரும் ஆதாம் ஏவாள் புத்திரர்கள் தான்; என்ன வித்தியாசமிருக்கிறது' என்றார். இதைக்கேட்ட என் இடப்பக்கத்திலிருந்த ஒரு வேதாந்தி 'எல்லாம் பிரமசிருஷ்டி; பிரமத்தின் பிரதிபிம்பங்கள்; இது ஒரு ஆச்சரியமா' என்றார். நானும் ஏதேனும் ஒன்று சொல்லவேண்டுமென்று தோன்றிற்று. சொல்வது பொருத்தமாகவிருக்க வேண்டுமே என்று எனக்கு அப்பொழுது தோன்றவில்லை. விஸ்வகர்ம வம்சத்திலுற்பவித்த எனது அத்தியந்த நண்பர் அடிக்கடி சொல்லிக்கொள்ளும் ஒரு சம்ஸ்கிருத சுலோகம் என் ஞாபகத்திற்கு வந்தது. உடனே நான் தலையை அசைத்துக் கொண்டு 'ஆமாம், ஸர்வம் விஸ்வமயம் ஜெகத்' என்றேன், சொல்லிவாய் மூடநேரமில்லை. என் வலப்பக்கத்திலிருந்த ஓர் சாஸ்திரி என் பக்கமாகத் திரும்பி என்னை ஏற இறங்கப்பார்த்தார். பேசுவதற்கு பிரியப்பட்டவர்போல குறிப்புக் காட்டினார். முகத்தில் புன்னகையும் தோன்றிற்று. நான் சுபாவத்தில் பேசுவதில் சளைத்தவனல்ல. வலியப் பேச்சுவரும் போதுவிடுவேனா? 'தங்களை எங்கேயோ தரிசித்திருப்பது போல் தோன்றுகிறது; ஆனால் இடமும், காலமும் ஞாபகத்திற்கு வரவில்லை' என்று தலையை சொரிந்து கொண்டே சொன்னேன், அதற்கு அவர் பதிலாக தான் 20 வருஷம் வடதேசயாத்திரையி லிருந்ததாகவும் முன்னாள்தான் சென்னைக்கு வந்ததாகவும் சொன்னார். 'அப்படியா' என்று தலையசைத்துக் கொண்டேன். 'இப்பொழுது தாங்கள் சொன்ன சுலோகத்திலிருந்து தங்களை ஒரு விஸ்வகர்ம வம்ஸத்தரென்று மதிக்கின்றேன்' என்றார். 'சுவாமி நான் விஸ்வகர்ம சந்ததியானல்ல; தொழுவ வேளாளர்' என்றேன். 'தாங்கள் சொல்லிய சுலோகத்தின் தாத்பரியம் தங்களுக்குத் தெரியுமா?' என்றுகேட்டார். என் சிநேகர் இந்த சுலோகத்தைச் சொல்லும்போது ஒருதடவை இதே கேள்வியை நான் கேட்டு சந்தேகம் தெளிந்திருந்தபடியால் சற்று நிதானித்து ஞாபகத்திற்கு வந்ததை பின்வருமாறு சொன்னேன். "பிரபஞ்சமும், அதனிடத்து தோன்றும் சராசரப் பொருள்களும் விராட்புருஷனாகிய விஸ்வபிரமத்தின் படைப்பு; அப்பிரமத்தின் அம்ஸம்; அப்பிரமத்தின் திரிபடைந்த தோற்றங்கள்; அப் பிரமத்தின் காப்பு. இவ்வண்டமும், இவ்வண்டத்திலுள்ள பொருள்களும் அந்த விஸ்வபிரமத்தின் அருளால் ஆளப்படுகின்றன; இயக்கப்படுகின்றன; அவனன்றி ஓரணுவும் அசையாது. அப்பிரமம் சகளீகரித்தது. அண்டத்திற்கு ஒத்தது பிண்டமென்பார்கள். அண்டசிருஷ்டியைப் போலவே பூலோகத்தில் பலவித சிருஷ்டியை செய்ய வேண்டியிருந்தது. பிதா வேலையை புத்திரன் செய்யும் பாத்திய மடைவதுபோல அப்பிரமத்தின் சிருஷ்டித்தொழிலின் ஓர் அற்பபாகத்தை சகளீகரித்த அப்பிரம சந்ததியார் அடைந்தார்கள். அவர்கள்தான் விஸ்வபிரம வம்சத்தார், அண்டமும், அண்டத்திலுள்ள சர்வ ஜீவராசிகளும் எப்படி அந்தபிரமத்தின் வேலையாக யிருக்கிறதோ அப்படியே பிண்டத்திலுள்ள சிருஷ்டித் தொழில்கள் யாவும் அப்பிரம சந்ததியாரின் கைவேலையாக விருக்கிறது."

"இன்னும் பல விசேஷார்த்தங்களும் அவர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவைகளெல்லாம் ஞாபகத்திற்கு வரவில்லை எனக்கும் சாஸ்திரப் பிரஞ்ஞையில்லை; நான் சொல்லியவற்றில் தவறுகளிருந்தால் என்குற்றமேயன்றி என் சிநேகர் குற்றமன்று. ஏனென்றால், அவர் நல்லபடிப்பாளி; சம்ஸ்கிருத பாஷா வல்லவர்" என்றேன். அதற்கு அவர் விசனக்குறியுடன் தன்மு

கத்தை மேலுங் கீழுமாக அசைத்துக் கொண்டு சிறிதுநேரம் யோசனையி லிருந்து பிறகு பின்வருமாறு சொல்லுற்றார். "ஐயா; தாங்கள் சொல்லிய தாத்பரியம் மொத்தமாகக் கவனித்தால் சரிதான். அதன் விசேஷார்த்தங்கள் எவ்வளவோ விரிவுடையனவாக விருக்கின்றன. நான்மஹான்களையடுத்து வேதங்கள், உபநிஷத்துகள் முதலியவைகளை நன்றாய்க் கேட்டிருக்கிறேன். அவைகளின் தாத்பரியங்களை நன்றாக அறிந்திருக்கிறேன். ஒருவன் சத்தியமாயறிந்ததை மறைத்துசொல்வது மஹாபாதகம். நான் சாஸ்திர ஆராய்ச்சி செய்ததனவில் விஸ்வகர்மாக்கள் பிரம வித்துக்களே. அதில் ஒரு சந்தேகமும் இல்லை. வேண்டுமானால், மேற்கோள்கள் உபநிஷத்துகளிலிருந்து இப்பொழுது எடுத்துக் கொட்டிவிடலாம். அவர்கள் ஒரு காலத்தில் அதி உன்னத நிலையிலிருந்தது வாஸ்தவந்தான். எவ்வழியில் உன்னதம் பெற்றிருந்தார்களென்றால், லௌகிகத்திலும் வைதிகத்திலுமே. தற்காலத்தில் அவர்கள் ஸ்திதியைப் பார்த்தீர்களா? அவர்கள் பூர்வீக உன்னத நிலையிலிருந்து பிறழ்ந்திருக்கிறார்கள். மாசுபடிந்த மாணிக்கமாக விருக்கிறார்கள். நீர்பூத்த நெருப்பாக யிருக்கிறார்கள்; வெண்ணையைத் தின்று சாம்பலைப் பூசிக்கொண்டவர்களைப்போல் இருக்கிறார்கள். எல்லாம் அசட்டையால் அடைந்த அநியாயம்; கவனக் குறைவால் நேர்ந்த கனக்குறைவு; தம்மினையால் சேர்ந்த வில்லங்கம். ஒரு ஜாதியார் எதைக் கைவிட்டாலும் தங்கள் குலாச்சார தர்மங்களை கைவிடலாகாது. பிராமணர்களைப் பாருங்கள்; அவர்கள் ஸ்நாநம், சந்தியாவந்தனம், ஜெபம், சிரார்த்தம் முதலியவைகளைக் கைவிட்டார்களா? விஸ்வகர்ம சந்ததியாரைப் பாருங்கள். அவர்கள் தங்கள் சிருஷ்டித் தொழிலொன்றைத் தவிர மற்றவைகளை கைவிட்டார்களே! வடதிசைப் பார்ப்பான் தென்திசைக்கேகில்நடையதுகோணிப்புலயனவான் என்று கேட்டதில்லையா? நடைகோணினால் நாலுங்கோணும்; உடைகோணினால் உள்ளதுகோணும்; படைகோணினால் பயிரும்கோணும் என்றுகேட்டிருப்பீர்களே. பிராதக்காலத்தில்ஸ்நானம்செய்து, ஸந்தியாவந்தனங்களை முடித்துக்கொண்டு தங்கள்குலவேலையைச்செய்கிறதம்மாளரைப்பார்த்திருக்கிறீர்களா? பல்தேய்க்கப் பன்னிரண்டு மணியாகும்; குளிப்பதற்கு ஒரு குண்டான் ஜலம் போதும்; வஸ்திரங்களை நனைப்பதற்கு வாரமாகவேண்டும். இவைகளே இப்படியிருந்தால் மற்றவைகளைப் பற்றிக் கேட்பானேன். ஒவ்வொருவரும் எவ்விஷயத்திலும் இயன்றவரையில் உள்ளும் புறமும் ஒத்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் தோன்றன் மாத்திரத்திலாவது அப்படியிருக்கவேண்டும். அதற்குத்தான் 'நடிப்பு' என்றுபெயர். உலகம் ஒரு பெரிய நடனசாலை; அதில் ஒவ்வொரு ஜாதியார்களும் ஒவ்வோர் வேஷந்தரித்த நடர்கள். ஆசார விஷயத்தில் நடிப்பதினால்தோஷமேயில்லை. பாஷாண்டி ஒருவன் விபூதி, ருத்திராட்சம் அணிந்திருக்க அவனை ஸாது என்று எண்ணி பலஜனங்கள் பாதம்பணிய பிறகு அவன் உண்மையான ஸாதுவாகி விட்ட கதையைக் கேட்டிருப்பீர்களே. நடிப்பிருந்தால் காலக் கிரமத்தில் உண்மை நடைவந்துவிடும். அஃதிருக்கட்டும், அவர்கள் ஸ்திரிகளைப் பார்த்திருக்கிறீர்களா? அழகைப்பற்றிப்பேசவரவில்லை; அவர்கள் நடையுடைகளை கவனித்திருப்பீர்களே. அவர்கள் பலஜாதி ஸ்திரிகளினிடையிலிருந்தாலும் அரைக்கணத்தில் அவர்களை தெரிந்து கொள்ளலாம். இது என் அநுபவம் மட்டும் அல்ல; சிறுகுழந்தைகளுக்குக் கூடத்தெரியும். அவர்கள் முகத்தின் தேஜஸும், மஞ்சள் பூச்சும், நெற்றியைச் சுற்றி நீண்டு வளைந்த குங்குமப் பொட்டும், வண்டி உருளை போன்ற நத்தும், அவர்கள் சுற்றும் புடவையும், தரிக்கும் பாடகமும் போதுமே அவர்கள் ஜாதியை குறிப்பாய்க் காட்டுவதற்கு! முதலில் புருஷர்கள் திருந்தியல்லவோ ஸ்திரிகள் திருத்தவேண்டும். குலத்திற் கேற்ற ஆசாரம் இல்லாவிட்டால் குலம் எவ்வளவு



உக்கிருஷ்டமா யிருந்தாலும் என்ன பிரயோசனம்? சங்கர ஜாதியில் உற்பவித்த நந்தன் முதலியவர்களுக்கு எப்படி உக்கிருஷ்டம் ஏற்பட்டது? எல்லாம் நடத்தையினால்தான்; ஆசாரத்தினால்தான். ஆகையால் விஸ்வகர்மாக்கள் தங்கள் குலாச்சாரங்களைக் கைக்கொள்ளும் வரையில் மத்தளத்தைப்போல் இருபுறமும் இடிபடவேண்டும். எங்களூரில் முத்துசுவாமி பாரதி யென்று விஸ்வகர்ம வம்சத்தினர் ஒருவரிருந்தார். அவர் நல்ல படிப்பாளி, அந்த ஜாதியருக்காக விஸ்வகர்ம புராணமொன்று செய்திருக்கிறார். அதில் சொல்லியபடி ஏறக்குறைய நடந்தால் அந்த ஜாதிகளையே மேம்பாடு அடைந்துவிடும்" என்று சொல்லி முடித்தார். இதற்குள் டிராம் பச்சையப்பன் பாடசாலைக்கெதிரில் வந்து நின்றுவிட்டது. நாங்கள் கீழே இறங்கினோம். சாஸ்திரியாரிடம் உத்திரவு பெற்றுக்கொண்டேன். கும்பிட்ட இருகரங்களையும் பிடித்துகொண்டு "நான் இவ்வளவு சொன்னதெல்லாம் துவேஷகுணத்தினாலல்ல; சிரேஷ்டமான ஜாதி தாழ்ந்துவிடுகிறதே யென்கிற அநுதாபத்தால் என்று நீங்கள் நினைக்க வேண்டும். நான் சொல்லிய விஷயங்களை நினைவில் வைத்து தங்கள் சிநேகிதர்க்கு சொல்வீர்களென்று நம்புகிறேன்" என்றார். "அப்படியே ஆகட்டும்; அவருக்குமட்டுமா சொல்வேன்; அவர்கள் ஜாதிப்பத்திரிகை யொன்றிருக்கிறது; அதில் பகிரங்கப் படுத்துகிறேன்" என்று அப்பெரியாருக்கு வாக்களித்ததை இப்பத்திரிகைக் கெழுதுவதால் பூர்த்தி செய்கிறேன்.

மு. திரியம்பகன்பிள்ளை,

சென்னை.

* * *

குறிப்பு:—விஸ்வபிரமபுராண வசனம், நமது அச்சாபீசில் கிடைக்கும். விலை அணா எட்டு.

ப—ர்.

## குலோத்தாரண உபந்நியாசப் பத்திரிகை.

40-வது பக்கத்தின் தொடர்ச்சி.

### இரண்டாவது விஷயம்.

நாம் அனுஷ்டிக்கும் சந்தியாவந்தனம் முதலான ஒவ்வொரு கர்மங்களையும் அவரவர் சாகாசூத்திரங்களுக்கு தக்கவாறு அனுஷ்டிக்கவேண்டும்.

நாம் அனுஷ்டிக்கவேண்டும் வேதங்கள் ருக், யஜுஸ், ஸாம, அதர்வண, பிரணவ மென்ற ஐந்து வேதமென்றும், சூத்திரங்கள்:- ஆசுவலாயன, ஆபஸ்தம்பபோதயன, காத்தியாயன, ரௌப்பியாயன மென்ற ஐந்து சூத்திரமென்றும் சொல்லிக்கொள்கின்றோம். இதுபோலவே கோத்திரம் 125-ம் அதின் பிரவரங்களையும் சொல்கின்றோம்.

இத்தப்பிரகாரம் சொல்லிக்கொள்ளும் கோத்திர, சூத்திர, சாகை, பிரவரைகளின் பிரயோசனத்தைத் தெரியவேண்டியது முக்கியவிஷயமாகும். மேலும் ஒருவர் அவர் செய்யும் சந்தியாவந்தன அபிவாதையில் கூறும் கோத்திர, சூத்திர, சாகை, பிரவரை முதலியவைகளைத் தெரிந்து தான் அவரின் சந்தியாவந்தனம், அத்தியயனம், நித்திய நைமித்திக முதலான கர்மங்கள் ஆகிய இவைகளை நடத்தவேண்டுமென ஸ்மிருதிகளில் கூறப்பட்டிருக்கின்றது. அதாவது கோத்திரம், அவர் சம்சத்தின் மூலரிஷியையும், சூத்திரம் அவரின் சுபாசுபக்கிரியைகளை எந்தப்பிரகாரம் நடப்பிக்கவேண்டுமோ அந்தப் பிரகாரம் நடத்துவதற்கு மந்திரதந்திரங்களை கற்பசூத்திரங்களாகவும், கிருஹ்ய சூத்திரங்களாகவும் எழுதினவர்கள் யாரோ அந்த ரிஷியின் பெயரையும், சாகை அவரின் சுபாசுபகர்மங்களி லுபயோகிக்கவேண்டிய மந்திரங்கள் எந்த வேதத்தி லிருக்கின்றதோ அல்லது சொல்லப்பட்டிருக்கின்

றதோ அந்த வேதத்தையே அவரின் சாகையாகவும், அந்த வேதத்தையே அவர் அத்தியயனம் செய்ய வேண்டியவராகவும் பிரவரம் அவர் வம்சத்தின் மூலரிஷியினின்றும் ஒவ்வொரு கிளைகளானபின் சந்ததிகளை தெரியும் பொருட்டு பஞ்சாரிஷேயம், திரியாரிஷேயமகாவும், கோத்திர சூத்திர சாகை பிரவரைகளின் பிரயோஜனத்தை குறிப்பிக்கின்றது.

இவ்விதம் பிரயோஜனத்துடன், கோத்திர, சூத்திர சாகா பிரவரங்களிருக்கசிலர்கள், தாங்கள் சந்தியாவந்தன அபிவாதையில் சொல்லும் சாகா சூத்திரங்களுக்கும், அவர்கள் அனுஷ்டானம் செய்யும் கர்மங்களின் மந்திர சந்திரங்களுக்கும் பரஸ்பரம் வித்தியாசங்களாகக் காணப்படுகின்றன.

அதாவது ஒருவர் பிரணவசாகை யென்றும், ரௌப்பியாயன சூத்திர மென்றும் சொல்பவர் அவர் அனுஷ்டிக்கும் சந்தியாவந்தனம், பிரணவவேத மந்திரமாயும், அவர் அத்தியயனம் செய்யும் வேதம் பிரணவவேதமாயும், அவர் செய்யவேண்டும் உபாகர்மத்தின் காலம் பிரணவவேதிகளுக்காக பிரதக்காக யேற்பட்டு அதை ஸ்மிருதிகளில் சொல்லப்படிருக்கிற முக்கிய கௌணகாலமாயும், அவர் செய்யும் சுபாசுபங்களின் மந்திரங்கள் பிரணவ வேதத்தில் சொல்லப்பட்டனாயும், தந்திரங்கள் கௌப்பியாயன ரென்ற ஓர் மஹாரிஷியினால் சூத்திரமாயும் கிருஹ்யமாயும் கற்பசூத்திரமாயும் செய்யப்பட்டதாகவும் இருக்கவேண்டியது ஆவசியமல்லவா.

இவைபோலாகவே ருக் யஜுர் ஸாம அதர்வணசாகையும், ஆசுவலாயன ஆபஸ்தம்ப போதாயன காத்தியாயன சூத்திரமுடையவர்களுக்கு சந்தியா வந்தனமும், வேதாத்தியயனமும், உபகர்ம முக்கியகால கௌணகாலமும், சுபாசுபகர்மங்களில் இவ்விதமான கிரியைகளும் இன்ன மந்திரங்களும் வேண்டுமென அதற்கான கிருஹ்ய சூத்திரங்களும், கற்பசூத்திரங்களும் வேண்டியது ஆவசியமாயிருக்கின்றது.

மேலும் தர்மசாஸ்திர தக்ஷஸ்மிருதியில்:—

“ஸ்வகர்மஸூத்ரம் பரித்யஜ்ய தந்யக்குரு
தே த்விஜ ..........................”

ஒருவனுக் கேற்பட்டிருக்கும் சூத்திரங்களின்படி அவனது கர்மதானுதிகிரியைகளை செய்யாது பிறருடைய சூத்திரங்களின்படி கர்மங்களை தெரிந்தோ தெரியாமலோ செய்கின்றவன் பதிதனாகின்றானெனச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப் பிரகாரம் ஒரு சூத்திரமுடையவன் வேறு ஒரு சூத்திரப்பிரகாரம் கர்மங்களை செய்யக்கூடாதென ஸ்மிருதிகளில் கூறியிருக்கும்போது நம்மவர்களில் பஞ்ச வேதிகளாயும் பஞ்ச சூத்திரமுடையவர்களாயுமிருக்கின்ற யாவரும் ஓரே விதமான சந்தியா வந்தனத்தையும், ஓரேவிதமான வேதாத்தியயனத்தையும், ஓரேவிதமான உபாகர்ம முக்கியகால கௌணகாலத்தையும், ஓரேவிதமாக சுபாசுபகர்மங்களில், மந்திர தந்திரங்களையும் ஆசரித்து நடத்திக்கொண்டு வருகிறார்கள்.

இதினால் நாம்பல சாகைகளையும், பல சூத்திரங்களையும் சொல்லிக் கொள்வதில் யாது பிரயோசனம். இதினால். பதிதத்வத்தையு மடைகின்றோம். அன்றியும் தாக்கால் ருக் யஜுர் சாம வேதங்கள் காணப்படுகிறதுபோல, அதர்வண வேதமும், பிரணவ வேதமும் காணப்பட வேண்டாமா? தவிரவும் அதர்வண பிரணவ வேதங்கள் அத்தியயனத்திலு மிருக்கவேண்டாமா.

மேலும் ருக் யஜுர் சாமவேதங்களுக்கு உபாகர்ம முக்கியகௌணகாலங்கள் ஸ்மிருதிகளில் சொல்லப்பட் டிருப்பதுபோல அதர்வண பிரணவ வேதங்களுக்கு உபாகர்ம கௌணகாலங்கள் ஸ்மிருதியில் கூற வேண்டாமா. (தொடரும்.)

ஜோஸியர் முத்தாச்சாரியார்,
மீனகஷிபுரம்.

* * *



## கைத்தொழில் முன்னேற்ற அபிப்பிராயங்கள்.

கைத்தொழில், கைத்தொழிலென்று பல பத்திரிகைகளில் கூக்குரலிட்டு எழுதி வருகிறார்களே யொழிய அதைச்செய்து காட்டத்தக்க யோசனைகளை இதுவரையில் ஒருவரும் எடுத்துக்காட்டக்காணோம். அதாவது, கைத்தொழி லென்னும் பஞ்சகிருத்தியங்களுக் குரிய விஸ்வகர்ம சந்ததியார்களைக்கொண்டே அத்தொழில்களை அபிவிர்த்தி செய்து நம் நாட்டிலேயே எவ்வித தொழில்களையும் முடிக்கவேண்டு மென்று துணிந்து சொல்ல ஒருவரும் முன்வரவில்லை. இந்தியாவில் கைத்தொழில்கள் முன்னுக்கு வரவேண்டுமென்று சொல்லப்பட்ட தொழிலபிமானிகள்சகாயம் புரிந்து விஸ்வகர்ம சந்ததியார்களை ஆதரிக்கும்பட்சத்தில் நம்நாட்டுக் கைத்தொழில்களை வெளியூர்களிலிருந்துவரவழைத்து நாம்அடையவேண்டிய லாபத்தை அன்னியநாட்டார்கள் அடையும்படி யேற்படமாட்டாது. அது எப்படியென்றால், தாமரை புஷ்பத்திற் கருகாமையி லிருக்கும் தவளையானது அதிலுள்ள மதுவை உண்ணாமல், காட்டினிடமிருக்கும் வண்டுகள் எவ்விதம் வந்து உண்ணுகின்றனவோ அதுபோல நமது நாட்டுப் பொருள்களை நாம் அநுபவிக்க உபாயந் தேடிக்கொள்ளாமல், அயல் நாட்டார்களிடம் ஒப்புவித்து விடுகிறோம்.

விஸ்வகர்ம சந்ததியார்களுள் மனு, மய துவஷ்ட, சில்பி, விஸ்வஞ்ய வென்று ஐந்து பிரிவினைக ளிருக்கின்றன. அதாவது, கருமார், தச்சர், கன்னார், கல்தச்சர்; தட்டாரெனப்படுவார்கள். அவர்கள் தொழில் இரும்புவேலை, மரவேலை, உலோகவேலை கல்வேலை, பொன்வேலை எனப்படும். இவ்வைந்து தொழில்களைத்தான் பஞ்சகிருத்தியங்களென்று சொல்வார்கள். இந்த ஐந்து தொழில்களிலேயே உலகத்தில் உள்ளமற்ற யாவத் தொழில்களும் அடங்கியிருக்கின்றன. இவைகளை இந்த ஜாதியர்கள்தான் முன்னுக்கு கொண்டுவர முடியும், அந்த ஜாதியரைவிட்டு மற்றவர்களை ஆதரிப்பதினால் முழுப் பிரயோஜனத்தையும் அடையமுடியாது. ஒரு பொருளைக் கைதவறிப் போட்டால் போட்ட இடத்தில் தேடினால்தான் நமக்கு அப்பொருள் கிடைக்கும். அப்படிக்கின்றி, சென்னையில் போட்ட பொருளை தூத்துக்குடியில்போய்தேடினால் எப்படி அப்பொருள் கிடைக்கமாட்டாதோ அதுபோல, தொழிலுக் குடையவர்களை இங்கு விட்டு விட்டு தொழிலுக் குரியல்லாதவர்களை வேறு வேறு இடங்களில்தேடிப் பிடித்து ஆதரிக்கப் பார்ப்பதால் அடைந்த லாபமென்ன? ஆனால் இதுவரையில் அந்த மாதிரி செய்ததில் கொஞ்சமேனும் தொழில்கள் முன்னுக்கு வரவில்லையா என்னும் கேள்வி உண்டாகலாம் மேலே காட்டிய உதாரணத்தையே எடுத்துக் கொள்வோம். ஓர் இடத்தில் ஒரு பொருளைப்போட்டுவிட்டு மற்றோரிடத்தில் தேடிய ஒருவனுக்கு அவ்விடத்தில் மற்றொருவன் போட்டுவிட்டு வேறோரிடத்தில் தேடப்போனவன் பொருள் தற்செயலாக அகப்படுவதுபோல, நமக்கு சிற்சில கைத்தொழில் நன்மைகள் உண்டாயிருக்கின்றனவென்றே சொல்லவேண்டும். அவைகள் புத்தி பூர்வமாக எண்ணி செய்த நன்மைகளாகமாட்டாது.

பஞ்ச கிருத்தியங்களின் முக்கியத்தை உத்தேசித்து அவைகளை நெல்லுக்கு ஒப்பிடலாம். மற்றக் கிளைத் தொழில்களெல்லாம் அந்நெல்லினுள்ளிருக்கும் பதர்களாகும். அறிவாளிகளெல்லாம் நெல்லை விரும்புவார்கள். நெற்பயிரைப் போற்றுவார்கள். விவசாயிகள் நெல்லினால் லாபமடைவது போல பஞ்சகிருத்தியத்தினாலாகும் தொழில்களால் தான் அன்னியநாட்டார் அதிக லாபமடைகிறார்கள். இரும்புத் தொழிலால் அன்னியநாட்டார் அடையும் லாபத்தை கவனியுங்கள். ஊசிமுதல் இஞ்சின்கள் வரையில் செய்யும் தொழிலால் அவர்களுக்கு கிடைக்கும் லாபத்தை மதிப்பிடு

ங்கள். இதைப்போலவே மற்ற ஐந்துதொழிலையும் கவனியுங்கள். இந்த ஐந்து தொழிலிற்கு மேற்பட்ட தொழில் ஏதாவதிருக்கிறதா வென்று யோசித்துப் பாருங்கள். அத்தொழில்களை விர்த்திசெய்யாததினால் நாமும் நம்நாட்டாரும் அடைகிற கஷ்டத்தைக் கொஞ்சம் கணக்கிட்டுப் பாருங்கள். அம்மம்ம! எவ்வளவு பெருந்ததுகை இந்தியாவை விட்டு அன்னிய தேசங்களுக்குப்போய் விடுகின்றது. ஆகையால் இந்த பிரதான தொழில்கள் ஐந்தும் தலையெடுப்பதற்கு கைத்தொழி லபிமானிகளின் வாக்கு, பொருள் முதலிய சகாயம் வேண்டும். இந்தியாவின் பணம் இந்தியாவிலேயே தங்கவேண்டுமென்றால் அவர்கள் இவ்விஷயத்தை கவனிக்கவேண்டும். இப்பொழுது யுத்தத்தால் அன்னிய நாட்டு சாமான்கள் வரவில்லையே. அவைகள் நமது நாட்டிலேயே செய்யப்பட்டால் நமக்கு கஷ்டம் வருமா? வராது. நம்மை விட்டு அன்னியதேசம் போனபடியால் நாம் துக்கத்தை அநுபவிக்கிறோம். கைத்தொழிலை கவனித்தவர்கள் சுக மனுபவிக்கிறார்கள். உதாரணமாக ஜப்பானியரைப் பாருங்கள். நமது கடைகளில் அவர்தேசத்து உற்பத்திசாமான்களல்லவோ நிரம்பி யிருக்கின்றன. அதனால் அவர்கள் அடையும் லாபத்தை கொஞ்சம் கணக்கெடுத்துப் பார்த்தால் நாம் இப்படி தூங்குவோமா?

இதுவரையில் போனது போகட்டும். இனியாகிலும் விஸ்வகர்ம சந்ததியார்களை ஆதரித்து, அவர்களால் செய்யப்படும் கைத்தொழி லென்னும் அடிமரத்தைப் பற்றுங்கள். கிளைகளைப் பற்றாதீர்கள். அடிமரங்கிடைத்தால் அதைக்கொண்டு பெரிய வேலைகளையும், சிறிய வேலைகளையும் செய்யலாம், சிறிய கிளைகளைப் பற்றினால் பூமியில் விழுவதோடும், அவைகள் சரியான வேலைக்கு உபயோகப்படாமல் அடுப்புக்குத்தான் உபயோகப் படக்கூடும். இது அநுபோகத்தில் ஒவ்வொருவரும் அறிந்தது. பெரியமரம் வீட்டிற்கு உத்திரம் முதலிய பெரிய வேலைகளுக்கு உபயோகப்படும். அதில் கழிந்த மிச்சங்களை சிறிய காரியங்களுக்கும் உபயோகப்படும். பாருங்கள் அடிமரத்திற்கும் கிளைக்கு முள்ள உபயோக பேதங்களை!

முன்காலத்தில் விஸ்வகர்ம சந்ததியார்கள் சேரசோழ பாண்டியர் முதலிய இராஜர் களால் ஆதரிக்கப்பட்டபடியாலன்றோ இந்த நாட்டில் மகத்தாகிய தேவாலயங்களையும், கட்டிடங்களையும், பல விசித்திரமான கைத்தொழில் அருமைகளையும் இப்பொழுது காண்கிறோம். இவைகளைவிட வேறு திருஷ்டாந்தங்களும் வேண்டுமா? விஸ்வகர்ம சந்ததியார்களை விட்டு விட்டு மற்றவர்களை ஏன் கைத்தொழில்களை அப்பியசிக்க ஆதரிக்கப்படாதென்றாலோ, உலகில் புநுகுப்பூனை ஜவ்வாதுப் பூனைகளிட மட்டுமே முறையே புநுகையும், ஜவ்வாதையும் அடைவார்களே யொழிய காட்டுப்பூனைகளையும், வீட்டுப்பூனைகளையும் கூண்டில்விட்டு அந்த வாசனைத் திரவியங்களை எடுக்கிற வழக்கமில்லை. அப்படி முயற்சிசெய்தாலும், அவைகள் தருவது அந்தப்பொருள்களாகமாட்டாது. பிள்ளைப்பூச்சியும், தேளும் உருவத்தில் சற்றேறக்குறைய ஒன்றாயிருந்தாலும் தேள் விஷம் பிள்ளைப்பூச்சிக்கு வரமாட்டாது. பிள்ளைப்பூச்சியின்குணம் தேளுக்குவரமாட்டாது. அதுபோல் நாடகத்தில் இராஜவேடந்தரித்து நடித்தாலும் அவர் வேஷதாரியே யொழிய அவர்கள் இயற்கையில் இராஜசுபாவ முடையவராயிருப்பார்களா? வேறு சந்ததியார் என்னதான் அருமையாக வேலைகளைச் செய்தாலும் ஜீவனார்த்தமாக செய்கிறார்களென்று எண்ணவேண்டுமே யொழிய சுபாவகுணத்தையொட்டி செய்வதாக நினைக்கக்கூடாது. ஆகையால் பிறப்பினால் எந்த ஜாதியர்க்கு கைத்தொழில் ஞானம் தொன்றுதொட்டு வந்திருக்கின்றதோ அவர்களைக் கொண்டே அந்தந்த ஜாதியர்களின் கைத்தொழிலை அபிவிர்த்தி செய்யவேண்டு மென்பது எமதபிப்பிராயம்.

(தொடரும்.)

கைத்தொழில் பித்தன்.



## குலாபிமான மஞ்சரி.

### குலநலச் சிரேட்டர்கள்.

உண்மையான யோக்கிதை யிருந்தாலன்றி அன்னியர் மதிப்பு கிட்டாதென்பதை நம்மவர்கள் நாளுக்குநாள் அதிகமாயுணர்ந்து வருகிறார்களென்பதற்கும், இவ்வுணர்ச்சியைத் தம் சகோதரர்களுக்குஇதமாக ஊட்டமுயற்சிகள் செய்து வருகிறார்களென்பதற்கும்சாட்சியாக, மீனாட்சிபுரம் ஜோஸியர் பிரம்மஸ்ரீ முத்தாச்சாரியாரவர்களைப் பற்றி ஓர் நண்பர் பின்வருமாறு எழுதுகிறார். "பிரம்மஸ்ரீ ஜோஸியர் அவர்கள் விஸ்வகர்ம வம்ஸத்தினர்களுடைய உக்கிருஷ்ட, நிக்கிருஷ்டங்களை சாஸ்திர வாயிலாக அறிய வேண்டுமென்று பலவருஷங்களாக முயற்சிசெய்து வரும் சுஜாதியர்களில் முதல் ஸ்தானத்தை பெற்றிருக்கிறார். நம்மவர்கள் ஜாதிவிஷயமாய் யதார்த்தமான சுருதி, ஸ்மிருதி, சிற்பம், புராணம், இதிகாசம் முதலிய வைகளையெல்லாம் இன்றும் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார். அவர் நித்தியகர்மாநுஷ்டான சீலராகவும், படிப்புக்குத்தகுந்தநடக்கை யுடையவராகவும், ஸ்ரீ இராஜராஜேஸ்வரியை உபாசித்தவராகவும் இருந்துவருகிறார். சாஸ்திரவிசாரணை செய்வதில் அவருக்கு எவ்வளவு அபிலாசை உண்டோ அவ்வளவும் அவர் சகோதரர்க்கும் உண்டு. காலையில் நித்திய கர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு இருவருமே சாஸ்திர விசாரணையி லிருந்து வருகிறார்கள். ஒருவர் சாஸ்திரங்களை படிக்க மற்றொருவர் வியாக்கியானம் செய்கிறார். வியாக்கியானத்தின் முக்கிய அம்ஸங்களை மற்றொருவர் எழுதிக் கொள்கிறார். இதற்கிடையில் சாஸ்திர விஷயங்களிலும், ஜோதிட விஷயங்களிலும், சந்தேகமுடையவர்கள் பலர் வந்து சந்தேக நிவர்த்தியடைந்து செல்லுகிறார்கள். பலஆருஷேயச் சிறுவர்களுக்கும், பௌருஷேயச் சிறுவர்களுக்கும், சாஸ்திராப்பியாசமும், ஜோதிடமும் சொல்லிவைக்கிறார். எத்தனையோ ஜனங்கள் நித்திய நைமித்திய காரியங்களுக்கு நல்ல முகூர்த்தம் இவரிடம் வைத்துக்கொண்டு போகிறார்கள். இந்தப்படியே நாள்முழுவதும் ஜோஸியர் அவர்கள் சத்காலக்ஷேபமாயிருந்து வருகிறார்களே தவிர வீண்பொழுது போக்குவதைக்காணோம். இவர்கள் மட்டுமல்ல, இவர்கள் முன்னோர்களும் பிரபல வித்தியாரத்தினங்களாக இருந்ததாகவே தெரிகிறது. இரும்புக்கும், காந்தத்திற்கும் உள்ள சுபாவகுணம் போலவே இவருக்கும், கோயமுத்தூர் குலாபிமானி பிரம்மஸ்ரீ C. R. சுப்பராய ஆச்சாரியாருக்கும் நேசமதிகம். ஸ்ரீசுப்பராய ஆச்சாரியாரைப்பற்றி எல்லோருமேஅறிவார்கள். ஜாதிவிஷயங்களை தற்கால நாகரீகத்தை யொட்டி சாஸ்திரோக்தமாகவும், சரித்திர வாயிலாகவும், சிலா, தாம்ப்ர சாஸனங்கள் வழியாகவும் முதல் முதல் ஆராய்ச்சி செய்யப் புகுந்தவர் அவரே. குலசம்பந்தமான விஷயங்களில் சுமார் கால் நூற்றாண்டு கழித்திருக்கிறார். எவ்வளவோ சாஸ்திர ஆதாரங்களை இவர் கைவசமாக வைத்துக்கொண்டிருக்கிறார். சென்னையிலும் இன்னும் மற்ற ஊர்களிலும் ஏற்பட்டிருக்கும் சுஜாதிசபைகளுக்கு இவர் முக்கிய காரணமாயிருப்பவர். கான்பரன்ஸ்முதலிய முன்னேற்ற விஷயங்களுக்கு தூண்டுகோல் போன்றவர். அதிகமாகச் சொல்வானேன்? இவர் ஓர் பழுத்த குலாபிமானி. இவருக்கும், ஜோஸியருக்கும் கடிதப்போக்கு வரத்து அதிக முண்டு. கடிதங்களென்றால் க்ஷேமலாபங்களை விசாரித்தெழுதும் கார்டுகளல்ல. ஐம்பது அல்லது அறுபது பக்கங்கள்கொண்ட நீண்ட கடிதங்களாக விருக்கும். ஒவ்வொரு சமயம் அக்கடிதங்களுக்கு 5 அல்லது 6 அணா தபால் தலைச்சீட்டு ஒட்டியதாகவு மிருக்கும். வெறுங்கடிதங்க ளல்லவென்றால், இவைகள் என்ன கடிதங்கள்? கடிதங்களின் சிறிய பாகங்கள்தவிர மற்றவைகளெல்லாம் குலசம்பந்தமான விஷயங்களும், சாஸ்திர ஆராய்ச்சி

சம்பந்தமான விஷயங்களுமாகவே யிருக்கும். ஒருசமயம் ஸ்ரீ சுப்பராய ஆச்சாரியார் வேண்டுகோளின்படி ஜோஸியரவர்கள் நமது ஆதாரங்களைத் திரட்டி டிம்மி 65 பக்கங்கொண்ட கடிதம் எழுதிவிடுத்ததாகத் தெரிகிறது. இக்கடிதம் ஸ்ரீ சுப்பராய ஆச்சாரியார் வசமிருக்கிறதாம். இதுபோலவே இன்னும் எத்தனையோ பேர்களுடைய அபிப்பிராயங்களையும் வாங்கிவைத்திருக்கிறார். இதன் தாத்பரியங்கள் எப்பொழுது சூரிய வெளிச்சத்தைக் காணுமோ தெரியவில்லை! இவர்களிருவர்களின் கடிதங்களை விஸ்வகர்ம குலோபகாரி போன்ற பத்திரிகைகளில் பிரசுரித்தால் வெகு நன்மையுண்டாகலாம். பலர்களுக்கும் ஆராய்ச்சி செய்யும் வழிகளை அவைகள் போதிக்கும். 1901வருடத்திய சென்சஸ்காலத்தில் ஜோஸியரவர்கள் நம்மனோர் பெருமைகளை சாஸ்திர ஆதாரங்களுடன் திரட்டி 95 பக்கங்கள் கொண்ட புஸ்தகரூபமாகச் செய்து, 'விஸ்வபிராம்மணவம்சபிரகாசிகா' என்று நாமதேயஞ் சூட்டி சென்ஸஸ் சூபரின்டெண்டு துரையவர்களுக்கு அரும்பிரயாசைப்பட்டு அனுப்பியிருக்கிறார். இத்துடன் திருவனந்தபுரம் சென்ஸஸ் கமிஷனரைநேரில்கண்டுமேலே சொன்ன புஸ்தகத்தின் பிரதியைக் கொடுத்து வாதாடியுமிருக்கிறார்கள். இன்னும், குடந்தையில் நடந்த முதல் விஸ்வகர்ம மஹாஜன கான்பரஸ் முன்னிலையில் வாசிக்க வேண்டி 64 பக்கங் கொண்டதோர் வியாசமெழுதி யிருக்கிறார். இவ்வியாசம் இவருடைய மற்ற பிரயத்தினங்களைப்போல் அமிழ்ந்து விடாது, நமது குலோபகாரிப் பத்திரிகையில் தொடர்ந்து வெளிவருவதைக்கண்டு சந்தோஷமடைய வேண்டியிருக்கிறது. உலக விஷயங்களிலும், வைதிக விஷயங்களிலும் நமது குல ஜனங்கள் சரியான ஞானமற்றவர்களாயிருக்கிறார்களென்றும், அவர்களை பழிப்புக்கிடமின்றி திருத்துவது குலாபிமானிகளின் கடமையென்றும் அவர் அடிக்கடி சொல்வதும், எழுதுவது முண்டு. ஸ்ரீஜோஸியரைப் போலவும் ஸ்ரீ சுப்பராயாச்சாரியாரைப் போலவும் ஜாதிநூல்களை ஆராய்ச்சி செய்வதற்கும் ஞானத்தைப் போதிப்பதற்கும்நமது குலத்தில் இன்னும் பல புண்ணிய புருஷர்கள் முன்வரவேண்டும்."

***

## மாதாபிதாக்களின் மஹிமையும் புத்திரர்கள் கடமையும்.

39-வது பக்கத்தின் தொடர்ச்சி.

ஸ்ருதி.

ஸர்வே தஸ்யா த்ருதாதர்ம
'யஸ்யை தெத்ருதய ஆத்ருதா,
அநாத்ருதாஸ் தயஸ்யைதே
ஸர்வாஸ்தஸ்ய பலாக்ரயா,

மாதா, பிதா, குரு, என்னும் இம்மூவருக்கும் பூசைசெய்தவன் எவனோ அவன் எல்லாவித தர்மங்களையும் செய்தவனாகிறான் இம்மூவரையும் ஆதரியாதவன் எவனோ அவன் செய்யுங்கிரியைகள் அனைத்தும் பயனற்றவையாகு மென்றும்.

ஸ்ருதி.

"மாத்ருதேவோபவ பித்ருதேவோபவ
ஆச்சார்யதேவோபவ அதிதிதே வோபவ
தாந்ய நவத்யாநி கர்மாணி தாநிஸேவிதவ்
யாநி"

மாதா, பிதா, குரு, தெய்வம், என்னும் நான்குபேர்களில் "மாதாவே" முதலிற் கண்ட தெய்வமாகும். இரண்டாவது பிதாவாகும். மூன்றாவது ஞானமார்க்கத்தைப் போதித்த குருவாகு மென்றும் மூந்நூல்களினாலும், வேதவசனங்களினாலும் வரையறுத்துச்சொல்லப்பட்டதுடன், ஒவ்வொரு கிரகங்களிலும் நடக்கும் சுபசோபனக் கிரியைகளில் "மாத்ருப்யாம் நம: பித்ருப்யாம்நம: குருப்யோநம: ஆசார்யோப்யாம் நம:" என்றும், வழக்கமாக மந்திரங்கள் சொல்லப்பட்டு வருகின்றன.



இவ்வித தர்மங்களை யெல்லாம் உணர்ந்த "தசரதச் சக்கரவர்த்தி" யின் பிரதம புத்திரரான. "ஸ்ரீராமபிரான்" பிதாவின் கட்டளையால் இராஜ்ஜியத்தைத் துறந்து ஜானகி இலக்ஷ்மணருடன் சித்திர கூட பருவதத்தையும் அதைச் சார்ந்தவனத்தையும் அடைந்து ஜானகியைச் சிறையெடுத்துச் சென்ற இராவணாதியர்களை "வானரப்படை" களுடன் சென்று ஜெயமடைந்திருப்பதும்.

வஸிஷ்டர், விஸ்வாமித்திரர் அநேகம் ப்ரம்ஹரிஷிகள் ராஜரிஷிகள் நிறைந்துள்ள இராஜஸபையிலவந்த ஸ்ரீராமபிரான் மஹாதபஸியான விஸ்வாமித்திரரையும் ஞானாச்சாரியான வஸிஷ்டரையும் வணங்காமல் முன்பு தந்தையை வணங்கி, பிதாவின் மேன்மையை சபையோருக்குத் தெரிவித்திருப்பதும்.

வேடர்ஜாதியிற் பிறந்த "வால்மீகர்", என்பவர். ஓர்வனத்தின்கண் பதுங்கியிருந்து, வழிப்போக்கர்களாகிய ஜனங்களை அடித்துக்கொன்று அவர்களிடமிருக்கும் பொருள்களை எடுத்துக்கொண்டு போய். மாதா பிதாக்களை சம்ரக்ஷணை செய்து கொண்டு வந்தும் கடைசியாக பூருவபுண்ணிய வசத்தால் "நாரதமுனி" வரதுனாலுபதேசத்தால் நற்கதியடைந்திருப்பதும்.

ஸ்லோகம்.

காமக்ரோதஸ்யா லோபஸ்ய
தேஹேதிஷ்டதி தஸ்கரஹ
க்ஞாநரத்ந பஹாரேண
தஸ்மாத்ஜாக்ருத ஜாக்ரதஹ!.

பிறன்மனை யாளை விரும்புவது பாவம் என்றெண்ணாமல் சீதேவியை யிச்சித்தராவணன் தானிறந்தும் அபகீர்த்திக்காளாயினான் என்பதும்.

பிரகஸ்பதி பகவானுடைய பத்தினி தாரை யென்பவள் சந்திரனை யிச்சித்தபோதிலும் அவன் குருபத்தினி யென்றெண்ணாமல் அவளை அனுபவித்தபாவம் அவனை விட்டு நீங்காதிருப்பதும்

ரிஷிபத்தினியாகிய அகலிகையை இச்சித்த இந்திரனுக்கு நேர்ந்தபழி யின்னும் விலகாதிருப்பதும்.

வாலிதன் தம்பி சுக்ரீவனுடைய மனைவியைக்கூடி அனுபவித்து உயிரிழந்திருப்பதும்.

அனசூயையைக் கற்பழிக்க நிர்வாணப் பிச்சைகேட்ட திருமூர்த்திகளையும் அவள் குழந்தைகளாகச் சபிக்கப்பட்டிருக்கிறானென்பதும்.

பிருகுரிஷி பெண்ஜாதி நாகவல்லியைக் கற்பழிக்க எத்தனித்த திருமூர்த்திகளையும், குழந்தைகளாகச் சபித்து உருட்டிப்பிரட்டி ஓர் மூலையில் தள்ளிவிட்டனளென்பதும்.

தாருகாவனத்து ரிஷிபத்தினிகளைக் கற்பழிக்க சிவன் புருடரூபமும் விஷ்ணு ஸ்திரீரூபமுமாகச்சென்று ரிஷிகளின் தபசைக் கெடுத்து ரிஷிபத்தினிகளின்கற்பையழித்ததில் ரிஷிகள் கொடுத்த சாபத்தால் சிவனுடைய சிசினமற்றுப்போயிருப்பதும் உள்ளபடி தெரிந்துகொண்டிருந்தும்மாதா வாக்கியத்தை மறுக்க முடியாமல், வியாசன் தன்சகோதரர்களான சித்திராங்கதன் விச்சித்திர வீரியன் பாரியைகளாகிய அம்பிகை அம்பாலிகை என்னும் முண்டைச்சிகளைப் புணர்ந்து பாண்டுவம்ஸம் உற்பவிக்கப்பட்டிருப்பதென்பதும், மாதாவிட்ட கட்டளையின்படி பாண்டு புத்திரர்களாகிய உதிட்டிரனென்னும் தருமநந்தன்பீமன் அர்ஜுனன். நகுலன் சகாதேவன் என்னும் இவ்வைந்து பேர்களும்,

ஸ்லோகம்.

"அஹல்யாத், ரௌபதா, ஸீதா, தாரா,
மண்டோதரி, ஸ்ம்ருதா, பஞ்சகந்யாஸ்
மரே நித்யம் மஹாபாதக நாசநம்."

இப்படிப்பட்ட பஞ்ச கன்னிகைகளில் ஒருத்தியான திரௌபதியைக்கூடி வாழ்ந்தனரென்பதும் லோகப்பிரசித்தம்.

(இன்னும் வரும்)

V. மௌனகுருநத்தமூர்த்தி ஆச்சாரியார்,
EX. முனிசிபல் கௌன்சிலர்,
பழனிஸ்தலம்.

## சங்கத்தினால் அடையும் நலப்பாடுகள்.

சபை, அவை, சங்கம் என்பன ஒரு பொருட் சொற்கள். அறிவின் பயனை அடைய விரும்பும் மனிதர்கட்கு, இன்றியமையாச் செல்வம் கல்வியென்பது எவரும் ஒப்புவர். அதனைப் பெற்றவர்கட்கே புருடார்த்தம் நான்கும் கிட்டுமெனில், அவற்றால் வேறுள்ள பெருமைகளைப் பேசல் வேண்டுமோ? கல்வியில்லாதவொருவனுக்கு, அளவற்ற செல்வப்பொருளாலுள்ள மேன்மைகளோடு, அழகு முதலிய நலங்கள் ஒருங்கே இருந்தபோதினும், அவனது சரீரம், வெண்சுண்ணச் சாந்தினால் செய்து செப்பமமைந்த வேர்பாவைக் கொப்பெனவே செப்பல் வேண்டும். மேற்கதிக்குரிய கல்விப் பொருளில்லா மனிதனை, உலகில் வாழும் நடைபிணத்தினுருவமென்றே கூறற்பாலது. படிப்பினால் பெறப்படும் மேன்மைகளும், நன்மைகளும், பயன்களும் மிகவெளிதின் வேண்டுவான் விரும்புமின், கேள்வியாலன்றி உண்டாகா. கேள்வியைப் பெறுவதற்குப் போதகாசிரியனை அடுத்து முயன்று நற்சாத்திரங் கேட்டுண்மையறிவதோடு, உலகவழக்குச் செய்யுள்வழக்கு முதலிய நற்றுறைகளிற் சென்றுள பெரியோர் கூடிய சபைகளிற்சென்று, அங்கவர்களிடத்துண்டாகும், வித்தியா வுணர்ச்சிகளை கேட்டறிவதே செவிச் செல்வத்தின் பயனாகும். படிப்பிலாத பாமரனும் அடிக்கடி நல்லோர் சபையிற் சென்று வருவானேல் சிறிதளவேனுங் கல்வியிற் பயிலவேண்டும் என்று ஆசைப்படுகின்றான். அப்படி யொருவன் முயல, அவனுடைய சிறு படிப்பில் சித்தியுற்ற சந்தேக விபரீத வஞ்ஞானங்களகன்று கசடறக் கற்பதற்குச் சங்கமே தகுதிகொண்ட நல்லாசிரியன் என்றறிக. கேள்விச்செல்வம் இன்றிவாழுஞ் சீவியம் அவம் என்றுரைப்பார் மேலோர்.

"கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற், றோட்கப் படாத செவி" என்றார் செந்நாப்போதார். இதன்பொருள் சாத்திர வாராய்ச்சிக் கேள்வியால் தொளைக்கப்படாத காதுகள் தமக்குரிய (ஓசையைப்) பெறுமாயினும், ஓசையின் மாத்திரத்தால் நூற்பொருள் நுழைதற்கிடமில்லை யாதலால் அவைகள் செவிடாந்தன்மையனவாம். தவிர, கல்வியறிவொழுக்கங்கள் சிறிதுமில்லாத மாந்தரும் பலநாளும் இடைவிடாது வித்தியா சபைகளிடத்துப் போந்தாங்கு கூடியிருக்கும் அறிவாளர் சொல்லிவரும் புலமைக்குரிய விஷயங்களைச் செவிசாய்த்து வருவரேல், அங்கு தாமுஞ் சிற்சில கல்விச்சொற்களைப் பேசல்வேண்டுமெனக் காமுறவே, பலவொழுக்க வழக்கங்களையுமடையவர். தமக்குரிய செவிடாந் தன்மையை நீக்கிக் கொள்ளுவர். அவற்றோடு மடமை நீக்கி நல்லறிவுச் சுடர்கொளுத்தி ஒள்ளியராவார் என்பதையுமின்றித் தெள்ளிதிற் கொள்ளற் பாலது.

ஆகவே, சங்கத்திற் சேர்ந்த படிப்புடையார், பலநாளும்வருந்தித் தாங்கற்றவரிய நூற்களின் நுட்பங்களை வெளிப்படுத்துகின்றனர். அவைகளை கேட்போர்கட்குண்டாகும் உணர்ச்சியினால், பல்விதங் கற்றுக் கொள்ளும் வருத்தமன்றோநீங்கும் என்ப. மனிதன் பிறந்த நாட்டொட்டே மரணபரியந்தம், தமதுவாணாட்களில் தன்பிறிலக்குற்ற வுடலோடு, அளவற்ற முயற்சிகளைச் செய்வதோடு, இளந்தைதொட்டே கல்வியைக் கற்பான் முயலுகின்றான். பல முயற்சிகளில் ஊழின் வன்மையால் நினைத்தபடி முடியாது பல தடைகள் வந்து சேருகின்றன. இதனிடையிற் கல்வியைக்கற்றுவர, அதற்குள், கணக்கற்ற இடையூறுகள் சம்பவிக்கின்றன. பின்னர், காளைப் பருவம்வந்தெய்த. பெண்டு, பிள்ளை, பதார்த்தங்களை அடைவான், ஊக்கங்கொண்டவொருவன் படும்பாடு பகீரதப் பிரயத்தனமேயாகும், வயோதிகப்பருவத்தில் பிணி முதலிய இடுக்கண்களால் சாலவருந்துவான் மனிதன் என்பது நமது கண்கூடன்றோ. இங்ஙனமாயவற்றால், நினைத்தபடி முயற்சி



யளவில் கல்வியைச் செவ்வனே பெறுவது எங்ஙனம்.

எச்செல்வத்திலும் மேலான செவிச் செல்வத்தை அடைந்தவன் மேற்சொன்ன பகுதிகளில் வந்துறுகும் இன்னல்கள் நீங்கி மனோவுணர்ச்சியால் மேலான கல்வியைப்பெறுவான் என்பது மெய்யே. மனுஷன் வயோதிகப் பருவத்திலும் தளர்ச்சியில், ஊன்றுக் கோலாய்க் கொள்வது, பெரியோர்வாய்க்கேட்கும் ஒழுக்கச்சொல்லே என்ப. எளிதிற் பலநூற்களின் உண்மைகளை அறிவே பெறல் வேண்டுமானால், சங்கத்தை நாடிச்சென்று செவிச் செல்வத்தை அடைதல் வேண்டும். அவ்விதம் பெற்றுக்கொள்ளின், ஒருவன் ஒருங்கே கல்வியாற் பெறவேண்டுவன வனைத்தும், என்றும் அடைதல் திண்ணம்.

ஜீ. சுவாமிநாதன் ஆச்சாரி,
கோட்டார்.

***

## சுஜாதிக் கான்பரன்ஸைப் பற்றிய அபிப்பிராயக் கோர்வை.

### இதுவல்லவோ குலாபிமானம்.

ஏப்பிரல் மாதம் நெருங்கவே எனக்கு கான்பரன்ஸைப்பற்றிய சிந்தைவந்து விட்டது. குடந்தை கான்பரன்ஸ் சென்டரல் கமிட்டியாரைப் போய்ப் பார்த்து இந்த வருஷம் கான்பரன்ஸை எங்கே நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்களென்று தெரிந்துகொண்டு வரவேண்டுமென்று தோன்றி, குடந்தைக்கு பிரயாணமானேன். அங்கு சென்னையிலிருந்து பிரம்மஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியாரவர்களும் அங்கு முன்னாடியே இவ்விஷயத்தை உத்தேசித்து வந்திருந்தார்கள். அவர்களை தரிசித்த மாத்திரத்தில் இந்தவருஷம் இரண்டாவது கான்பரன்ஸ் நடந்து விடுமென்கிற தைரியம் எனக்கு உண்டாகிவிட்டது. ஆச்சாரியாரவர்களுக்கு வயது சுமார் எழுபது இருக்கலாம். விர்த்தாப்பியதசையென்று தான் சொல்லவேண்டும். குலசீர்திருத்த சம்பந்தமான விஷயங்களைப்பற்றி அவர் கவனித்து ஊடாடும்போது திடீரென்று அவர் பால்ய தசையை அடைந்துவிடுகிறார்களென்று எண்ணவேண்டியிருக்கிறது. அவர்கள் ஜாதீய விஷயங்களை நளினமாகவும், வற்புறுத்தியும் பேசி மற்றவர்களை தமது கருத்திற்கு இணங்கிவரும்படிச் செய்யும் அபாரசக்தி இவருடைய பிறவிக்குணமாக யிருக்கிறது. சீறுகிற நாகம் மாந்திரீகன் விபூதிக்குக் கட்டுப்படுவது போல, எவ்வளவு குதர்க்க முள்ள நம்மவர்களும் இவர் வார்த்தைக்கு எப்படியோ கட்டுப்பட்டு விடுகிறார்கள். இந்த அதிசயம் நான் இப்பொழுது கண்டதல்ல. சுமார் 30 அல்லது 35 வருஷங்களுக்கு முன்னே தெரிந்துகொண்டிருக்கிறேன். நிற்க, இக்கனவானும், இன்னும் இரண்டொரு கமிட்டி மெம்பர்களும் தஞ்சைக்குச் சென்றிருந்து அவ்விடம் இரண்டுபட்டிருந்த நம்மனோர்களை சமரசப்படுத்தி 16—2—1916 தேதியன்று ஒரு மீட்டிங் கூட்டி கான்பரன்ஸ் நடத்தவேண்டியதைப் பற்றி பிரசங்கங்கள் புரிந்தும் சில முக்கியஸ்தர்களை தனிமையில் கண்டு பேசியும் இவ்வருடம் கான்பரன்சை தஞ்சையில் நடத்திமுடிக்கும் ஏற்பாடுகளைச் செய்துவந்ததாகவும், 26உ யன்று கூடப்போகும் ஜெனரல் மீட்டிங்கில் உபசரணைக் கமிட்டியும், செகரேட்டரிகள் சேர்மன் முதலிய நியமனங்கள் செய்யப்படுமென்றும் அவர்கள் முன்னிலையில் தெரியவே நான் மெய்மறந்து ஆனந்தபரவசமானேன். எனக்கு வேறொன்றும் செய்யத் தோன்றவில்லை. அப்பெரியோருக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, "தங்கள் குலாபிமானத்திற்கு நாங்கள் என்ன பிரதிப் பிரயோஜனம் செய்யப்போகிறோம்! தாங்கள் இதுவரையில் குலத்திற்காக பட்ட பாட்டிற்கு தங்களைப்போல் ஒரு உருவச்சிலை செய்துவைத்தாலும் போதாது, கோயிலில் வைத்து கும்பிடவேண்டும்" என்று சொல்லி வாயாரவாழ்த்தி ஊர் சேர்ந்தேன்.

கான்பரன்ஸ் நடத்த வேண்டும் என்று பேப்பர்களில் எழுதி வெள்ளை காகிதத்தை கருப்பாக்கிவிட்டு இறுமாந்து புஜந்தட்டிக் கொள்கிறவர்களுக்கும், ஆரவாரமில்லாமலும், புகழைவிரும்பாமலும் குலாபிவிர்த்தியைநாடி, உண்மையாய் ஜனங்களின் வீக்கதூக்கமறிந்து அவர்களுடன் ஒத்துழைக்கும் இக்குலாபிமானச் செல்வருக்குமுள்ள வித்தியாசத்தை இங்கு அவசியம் குறிப்பிடத்தான் வேண்டிவருகிறது. இக்கனவானுக்கு நீண்ட ஆயுளை விஸ்வேசனருள்வாராக.

து. வே. கோவிந்தாச்சாரி.

***

## அவசர புத்தியால் வரும் அநர்த்தங்கள்.

கட்டின வீட்டுக்கு குற்றம் சொல்வோர் கணக்கில்லை யென்பதுபோல, கான்பரன்ஸைப்பற்றி ஒரு சுஜாதி நண்பர் சில நாட்குமுன் என்னிடம் அவசரமாக சிலவார்த்தைகள் பேசி விட்டார். அவைகளை யெல்லாம் நானும் திருப்பிச் சொல்வதும், எழுதுவதும் அழகல்ல. ஆனால் அவர் சொன்ன சில வசனத்தைமட்டும் கொள்ளவார்த்தைகளால் கோர்த்துச் சொல்லுகிறேன் "கும்பகோணத்தில் நடந்தகான்பரன்ஸால் என்ன சாதித்து விட்டீர்கள்? நன்மை தலைக்கு மேல்வந்து விட்டதா? எல்லாம் தட்டைப் பிடித்தக்கேடு; வேலையற்றவன் விளையாட்டு; கூலி பிணக்கடு" என்று படபடத்து, மீசை துடிக்கச் சொன்னார். இவர் ஒரு வகுப்பிற்கு நாட்டாண்மைக்காரர். இவர் வார்த்தைக்கும் நூறுபேர், கட்டுப்படக்கூடியவர்கள். ஆகையால் இவர் கோணல்புத்தியை கொஞ்ச நிமிர்க்கவேண்டு மென்று தோன்றி, கொஞ்சம் அவர் அதிகார தோரணைக்குப் பயந்தவன்போல அபிநயித்துப் பின்வருமாறு சொன்னேன். "தாங்கள் சொல்வது சரியே; ஆனால், அரசுப் பிரதட்சணம் செய்தால் புத்திரோற்பத்தி யென்று கேள்விப்பட்டு அவ்வாறு செய்யத்துணிந்த ஓர் மலடி முதல் பிரதட்சணம் வந்தவுடன் அடிவயிற்றை தடவிப்பார்த்துக் கொண்ட கதைபோலிருக்கிறது தாங்கள்சொல்வது. ஒரு கான்பரன்ஸ் நடந்து விட்டால் எல்லாநன்மையும் வந்து விடுமா? ஓராயிரம் கான்பரன்ஸ் நடந்தாலும் ஓர் குலத்திற்கு வேண்டிய எல்லா நன்மைகளும் விளைந்து விடாதே. இந்தியாவை முன்னுக்கு கொண்டு வரவேண்டு மென்று 30-வருஷமாக நாஷனல் காங்கிரஸ்என்கிறமஹாசபையை நடத்தி வருகிறார்கள். பலதீர்மானங்களைச் செய்து கவர்ன்மெண்டாருக்கு முப்பது வருஷங்களாக அனுப்பியும் வருகிறார்கள். கேட்டதெல்லாம் கொடுத்துவிட வில்லை யென்று அவர்முயற்சி சோர்ந்து விட்டதா? அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும் என்பதைக் கடைப்பிடித்து, கொடாததை மீண்டும், மீண்டும் கேட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். கேட்பதற்கு அவர்கள் லஜ்ஜைகொள்ளவேயில்லை. வாயை மூடிக்கொண்டு மௌனமாயிருந்தால்நமது குறையை பிறர் ஞானதிருஷ்டியால் அறிந்துகொள்வார்களா? அழுதபிள்ளை தான்பால் குடிக்கும். பால்கொடாதவரையில் கதறிக் கதறி, சிறிச்சிறி, உதைத்து உதைத்து அழவேண்டும். அப்படியிருக்க நாம் ஏதோ ஒரு கான்பரன்ஸை நடத்தி தீர்மானங்களை கவர்மெண்டாருக்கு அனுப்பிவிட்டு ஒரு நன்மையும் கிடைக்க வில்லையே என்று கான்பரன்ஸை நிராகரித்து விடலாமா? தாங்கள் கொஞ்சம் நிதானித்துப் பாருங்கள். தங்களுக்குத் தெரியாததை பாலனாகிய நான் என்ன அதிகம் சொல்லப்போகிறேன். ஆனால் ஒரு பிரார்த்தனை மட்டும் தங்களிடம் கேட்டுக் கொள்கிறேன். அதாவது, கான்பரன்ஸ் விஷயமாக தங்களிடம் யாராவது பேசினால் அதைக் குறித்து இனி ஏளனமாகவும், அதனால் வரும் நன்மைகளைப்பற்றி குறைவாகவும் பேசாதிருக்க வேண்டுமென்பதே." அப்படியே அவர் இருப்பதாக வாக்களித்தது மன்றி கான்பரன்ஸ் விஷயத்தில் ஒத்துழைப்பதாகவும் உறுதிசொன்னார்.

மஞ்சள் கொல்லை. சரவணை ஆச்சாரி.

***



## கொல்லத்தெருவில் ஊசிவிற்றல்.

சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை யென்பது சாதாரணமாக வழங்கிவரும் ஓர் உலக வசனம். ஒருவர் சொன்னதையே திருப்பி அப்படியே சொல்வது பகுத்தறிவற்ற கிளிப்பிள்ளைகளுக்குத் தான் வழக்கம். ஆனால் கிளிப்பிள்ளைகளுக்குமட்டும் ஏதோ சுயஞானத்துடன் பேசுவதாகவே எண்ணம். இதனால் விசேஷணப் பகுத்தறிவுடை மனிதவர்க்கத்தார் ஒரு சமயம் ஒருவர் சொன்னதையே அர்த்தஞானமின்றி திருப்பிச் சொன்னாலும், பிறர் அவர்களைப் பற்றி படாடோபமாக நினைத்துக்கொள்ளட்டும் என்று எண்ணிச் சொன்னாலும், அவர்களை பகுத்தறிவற்ற கிளிப்பிள்ளைகளென்றே சொல்லப்படுகிறார்கள். இரண்டாவது விஸ்வகர்ம மஹாஜனகான்பரன்ஸ் கூடும் நாள் நெருங்கவே நமது வம்சத்தில் சிலக் கிளிப்பிள்ளைகள் தோன்றியிருக்கின்றன. முதல் கான்பரன்ஸ்பிரசிடெண்டு அவர்களின் ஆரம்பப் பிரசங்கத்தில் காட்டியிருந்த அபிப்பிராயங்களையும், அதையொட்டி கான்பரன்ஸில் நடைபெற்றதீர்மானங்களின் கருத்துகளையும் அம்மானிடக்கிளிகள் தங்கள் சுயகருத்துகளைப்போலவும், அபிப் பிராயங்களைப் போலவும் பிறர் நம்பும்படி பேசியும் எழுதியும் வருகின்றன. காகதாளிய நியாயமாக அவர்கள் சொல்வதில் ஏதேனும் ஒன்று பலித்துவிட்டால் அக்காரியம் தங்களால்தான் நிறைவேறிற்றென்று வீம்பு பேசுவதற்கும், எழுதுவதற்கும், அளவேயில்லை. கான்பரன்ஸ் சம்பந்தமாக 'கிராம சபை', 'தாலூக்கா சபை', ஜில்லா சபை' ஏற்படவேண்டிய அவசியம் 1915௵ ஏப்ரல்மாதமே தோன்றி அதற்குவேண்டிய ஏற்பாடுகளையும் கான்பரன்ஸில் தேடியிருக்க, அதைப்பற்றிசில 1916 வருடத்தில் அதே அபிப்பிராயத்தைத் திருப்பிக்கூறி திருப்தியடையப் பார்க்கிறார்கள். அதற்கு மேற்பட்ட விஷயம் அக்கமிட்டியார் என்ன செய்திருக்கிறார்களென்பதை தெரிந்துகொள்வதல்லவோ பகுத்தறிவின் இலட்சணம். இது கொல்லத் தெருவில் ஊசிவிற்ற கதையைப்போலிருக்கிறது.

ஒரு கான்பரன்ஸ் அபிமானி.

***

## பூனைகளுக்கு புத்தியிருந்தால், குரங்கு தகஷி நிறைவதெப்படி?

அடியேனுக்கு ஓர் அபிப்பிராயம் தோன்றிற்று. அதை சென்னைவாசியாகிய என் நண்பர் ஸ்ரீ......................ஆச்சாரியாருக்கு எழுதி அவர் அபிப்பிராயத்தைக் கேட்டேன். அவர் எழுதியபதிலின் ஓர் பாகத்தை அடியில் சுருக்கி எழுதியிருக்கிறேன். "கான்பரன்ஸ் சம்பந்தமான விஷயங்களைக்கண்காணிப்பதற்கு ஓர் மாகாண சபை சென்னையி லிருக்கவேண்டியது அவசியமேயாகும். அதனால் பல காரியானுகூலங்கள் ஏற்படலாம். ஆனால்இச்சென்னையில், தாங்கள் எழுதிய பெயருள்ள (விஸ்வகர்ம குலோத்தாரண) சபைகள் இரண்டிருக்கின்றன. ஒன்று சிந்தாதிரிப்பேட்டையிலும், மற்றொன்று தங்கசாலைத் தெருவிலும் இருக்கிறது. ஒரு ஊரில் இரண்டு வைத்தியக்காரர் என்கிற விவகாரமாகயிருக்கிறது. இந்த இரண்டு கட்சிக்காரர்களும் இதுவரையில் பல பகிரங்க நோட்டீஸ்களிலும், பத்திரிகைகளிலும் போராடிக் கொண்டிருக்கின்றனர். அப்பத்தை திருடிய பூனைகளைப்போல இவர்களில் யாரேனும் ஒருவர் கூடிய சீக்கிரத்தில் கோர்ட்டுவரையில் போவார்கள்போல் தோன்றுகிறது. இந்த ஸ்திதியில் இவர்கள் சபையை கான்பரன்ஸ் மாகாண சபையாக அங்கீகரிப்பதால் பல கஷ்ட நஷ்டங்கள் உண்டாகலாமென்பது இங்குபலர் கருத்து. கிணற்றில் குதிப்பதற்கு முன் கிணற்றின் நிலைமையைக் குறித்து முன் பின் யோசித்து செய்யவேண்டும். இது விஷயத்தை தாங்களும், செண்ட்ரல் கமிட்டியாரும் நன்றாய் கவனத்தில் வைக்கவேண்டுகிறேன். இந்த இரண்டு சபையும் திருந்தி ஒன்று சேர்ந்தால் பிறகு அந்த விஷயத்தைப் பற்றி யோசிப்பது நலம். நான்பொது மனுஷன்.

எனக்கு ஒரு சபையைப்பற்றி உயர்த்தியும், மற்றொன்றைப்பற்றி தாழ்த்தியும், பேசுவதற்குத் துணியவில்லை. பாபம்! தாங்கள் என்னசெய்வீர்கள்; துரதிருஷ்டிக்கு எல்லாம் தோப்பாகவே தங்கள் பார்வைக் குமட்டுமேயல்ல, வெளியூரார் ஒவ்வொருவருக்கும் தோன்றுகிறது." இந்த அபிப்பிராயத்தை இப்பத்திரிகையில் அவசியம் வெளியிடுவது என் கடமையென எண்ணிச் செய்தேன்.

ரு. சுவாமிநாத ஆச்சாரி.

***

### நமது கான்பரன்ஸின் இருகண்கள்.

சென்ற வருஷம் குடந்தையில் நடந்த முதல் விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸை யொட்டி பண்டிதகான்பரன்ஸ் நடக்கவில்லையே யென்று பலர் கவலை கொண்டார்கள். அவர்களுள் பிரம்மஸ்ரீ கோயமுத்தூர் C. R. சுப்பராயஆச்சாரியாரும் அத்தியாபக லிங்காச்சாரியாரும் முற்பட்டவர்களாவார்கள். இன்னும் பலர் சிற்ப, சித்திர, கைத்தொழில் காட்சி யொன்று ஏற்படவில்லையே யென்று அப்பொழுது ஏக்கம் கொண்டார்கள். இவ்விரண்டு முக்கிய விஷயங்களையும் இந்த இரண்டாவது கான்பரன்ஸில் நிறைவேற்றிக் காட்டினால்தான் பலர்கள் சித்தம்சமாதானம்பெறும். சொல்வது எவர்க்கும் எளிது, செய்வது கடினமே யென்றாலும், நமது முயற்சிகள் வருஷாவருஷம் படிப்படியாக உயர்ந்து கொண்டுவரவேண்டியது அவசியமல்லவா? முதல் கான்பரன்ஸ்காரியங்களை ஒழுங்குப்பாடாகச் செய்து முடித்தால், இரண்டாவது கான்பரன்ஸ் அதற்குமேல் ஒன்று அல்லது இரண்டு படித்தரங்களைக் கடந்து செல்லவேண்டாமா? இரண்டாவது கான்பரன்ஸ் ஈஸ்டர்விடுமுறையில் நடைபெறப்போகிறபடியால், இரண்டுநாள் மஹாஜன கான்பரன்ஸும், ஒருநாள் பண்டித கான்பரன்ஸுமாக மூன்றுநாள் கான்பரன்ஸை நடத்தி முடிக்கலாம். அல்லது முதல் இரண்டு நாள் இரவுகளில் பண்டித கான்பரன்ஸை வைத்துக்கொள்ளலாம். தஞ்சாவூராருக்கு பொருட்காட்சிக்கு வேண்டிய பொருள்களைச் சேகரிப்பது கடினமல்ல. உள்ளூர் வெள்ளி, தாம்பாள வேலைகளை அடுக்கி வைத்தாலே அற்புதமான கண்காட்சியாகி விடும். கான்பரன்ஸ் சென்டரல் கமிட்டியார் இவ்விருமுக்கிய விஷயங்களில் இவ்வருஷம் கவனம் செலுத்துவார்களென்று எதிர்பார்க்கப் படுகிறது.

S. K. ஆச்சாரி.

***

## சிற்ப சித்திரப் பகுதி.

### நகரநிர்மாணப் பிரசங்கம்.

ஒரு நகரம் எப்படி உருவாகின்றது என்பதைப்பற்றி நகர் நிர்மாண நிபுணராகிய மிஸ்டர் எச். வி. லான்செஸ்டர் சென்னையில் ஒரு அற்புத பிரசங்கம் செய்தார். அவர் பின்வருமாறு கூறினார் "ஒரு பட்டணத்தைப் பற்றிச் சோதிப்ப தென்றால், அதன் சரித்திர வரலாற்றைச் சுருக்கமாகச் சொல்லுவதே யாகும். நாகரீகத்தின் ஆதி நிலைமையில், சிறிய சமூகத்தார் அவர்களுடைய ஜீவனோபாயத்திற்கு ஒத்துழைப்பே ஆகாரம் என்று அறிந்தார்கள். இந்த சமூகத்தார் பலவிதமாய் அவர்களுடைய மனோசக்தியை உபயோகப் படுத்தினார்கள் அதன் பலனாக வியாபாரம் ஏற்பட்டது. வியாபாரம் ஏற்படவே சிலருக்குப் பணம் சேர்ந்தது. அதன்பேரில் பணம் சம்பாதிப்பதற்காக போட்டிகள் ஏற்பட்டன. அதனால் பலர் பணக்காரர்களானார்கள். அதிகாரம் செலுத்த வேண்டுமென்ற எண்ணம் உதித்தது. அதன் பலனாக கலகம்ஏற்பட்டது. அதை அடக்குவதற்கு மத்தியஸ்தர்கள் ஏற்பட்டார்கள். பிறகு படைகள் ஏற்பட்டன. இப்படியே நாளாவட்டத்தில் பல வழிகளில் அபிவிருத்தி அடைந்து வந்தார்கள். வியாபாரம் அதிகமாகவே தொழில்கள் செய்யத் தலைப்பட்டார்கள். ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் பண்டங்கள் விற்பனைக்குக் கொண்டுபோகப்பட்டன. இவ்விதமாக ஒரு சிறிய ஊர் பெரிய வியாபாரமும் தொழிலும் செய்யப்படும் நகரமாகவும் ஆயிற்று. பூர்வீக பட்டணங்கள் எல்லாம் அன்னிய தேசத்தார்களின் படையெடுப்புகளில் மாட்டிக்கொண்டு தரை மட்டமாக அழிக்கப்பட்டன. வேறு சில அழகான நகரங்களும் பட்டணங்களும் அழிந்து பாழாய்க் கிடக்கின்றன. அவைகளில் வௌவால்களும், கால் நடைகளும் குடிகொண்டிருக்கின்றன. ஐரோப்பிய நகரங்கள் அழிக்கப்பட்டபோதிலும் அவைகளை மறுபடியும் அப்படியே கட்டிவிடுகிறார்கள் இந்திய நகரங்கள் ஒரு தடவை அழிந்துபோனால் அவைகள் ஜீர்ணோத்தாரணம் செய்யப்படுகிறதில்லை."

***

### மிஸ்டர் ஹாவல் துரையின் அபிப்பிராயம்.

சென்னை சித்திர கலாசாலையின் பிரின்ஸிபாலாக இருந்த மிஸ்டர் ஹாவல் என்ற ஆங்கிலேயர் லண்டனில் ஈஸ்ட் இந்தியன் அசோஸியேஷனில் இந்தியச் சிறுவர்கள் மேல்நாடுசென்று பயின்று வருவதைக் கண்டித்துப் பேசினர். அவர் பிரசங்கத்தின் சாரம் இது:—"ஒரு தேசத்தாரின் பொருளாதார வாழ்க்கையானது அதனுடைய சரித்திரம், பூகோளநிலை, ஜனசுபாவம், அவர்களுடைய நோக்கங்கள், சக்திகள் இவைகளை பொறுத்திருக்கிறது. அப்படியிருக்க இந்தியச் சிறுவர்கள் லண்டனுக்கு வந்து ஐரோப்பிய போதகர்களால் சொல்லிவைக்கப்படும் பொருளாதார தத்துவங்களை வாசிக்கும்படி சொல்வதில் யாதொரு பயனுமில்லை. அவர்கள் லண்டனுக்கு வந்து ஐரோப்பிய போதகர்கள் சொல்லிவைக்கும் பொருளாதார தத்துவங்களைப் படிப்பதற்கு முன்னே தங்கள் சொந்தேசத்துப் பொருளாதார நிலைமைகளையும், பொருளாதாரச் சரித்திரத்தையும் வாசித்துக்கொண்டிருக்கவேண்டும்" அவர் இந்தியாவின் அபிமானியே. அவர் சொல்வது ஒரு வழியில் உண்மைதான். ஆனாலும் அதற்கு இந்தியாவில் சாதகமின்மையால் அதைத் தெரிந்து கொள்வதற்கான வழிவகைகளின் விவரங்களை அறிந்து கொள்வதற்காகவும், அந்த விவரங்களை எடுத்துக்காட்ட வழிகாட்டிகளாய் இருந்து வருகிற தேசங்கட்கு இந்தியர்கள் சென்று அவ்விவரங்களை யுணர்ந்து ஞானமடைந்து தொழிற் கல்வியும் பயிலவேண்டியவர்களா யிருக்கிறார்கள். ஆகையால், இங்கிலாந்துக்குச் சென்று வருதல் வீணாகாது.

***

### இந்திய சித்திரக்காட்சி. சென்னை,

சென்னை அரண்மனைக் காரத்தெருவில் தற்கால சித்திரங்களின் காட்சி ஒன்று புதிதாக இந்திய வாலிபர் சங்க கட்டிடத்தில் திறந்து வைக்கப்பட்டது. தற்போதைய இந்திய சித்திரக்காரர்களால் தயாரான படங்கள் அங்கு சேர்த்து வைக்கப்பட்டன. இக்காலத்திலும் இத்தேசத் தவர்களுக்கு சித்திரவேலையிலுள்ள திறமையை ஜனங்களுக்குள் பரவச்செய்வதும், அதை விருத்தி செய்வதுமே இச் சித்திரக்காட்சியின் நோக்கம். 137 சித்திரங்கள் காட்சியில் வைக்கப்பட்டன. ஸ்ரீகிருஷ்ண சைதன்யரின் சரித்திர வைபவ முழுதும் 16 படங்களில் எழுதப்பட்டு ஒரு புறம் வைக்கப்பட்டிருந்தன. அவைகள் இரண்டு வங்காளத்துப் பெண்மணிகளால் வரையப்பட்டன. இவ்விதமே பல இயற்கை நிகழ்ச்சிகளைப் பிரத்தியக்ஷக்காக்ஷியாக விளக்கும் பல அபூர்வ சித்திரங்கள் கண்ணையும் மனத்தையும் கவர்ந்தன இந்த 137 படங்களில் எதைச் சிலாகிக்கிறதென்று தெரியவில்லை. ஸ்திரீகளுக்குள்ள வசிய குணமானது நாணத்தினாலேயே உண்டாகிறதாக இப்படங்களை எழுதியவர்கள் தங்களின் அருமைச் சித்திரங்களிலே காண்பித்திருக்கின்றனர். கடைவீதிகளில் காணக்கிடக்கிற மேனாட்டுப் படங்களோ இந்த நாணத்தோற்றம் இன்றி வெறுமையாக நிற்கின்றன. இவ்விருவகையையும் உற்று நோக்கு

பவருக்கு நாணத்தின் இனிமையும் மேன்மையும், நான்கு வகைக் குணங்களில் அதையும் ஒன்றாக அமைத்த இந்தியப்பெரியோர்களின் கருத்தும் நன்கு விளங்கும். இக்காட்சி சென்னை கவர்னரவர்களால்திறந்துவைக்கப்பட்டது. அச்சமயம் பல ஸ்திரீகளும் கனவான்களும் வந்திருந்தார்கள். கவர்னரை, மிஸ்ஸஸ் அனி பெஸண்ட் அம்மாளும், மிஸ்டர் சி. பி. ராமஸ்வாமி அய்யரும் வரவேற்றார்கள். சித்திரப் படங்களை கவர்னர் பார்த்து நிரம்பச் சந்தோஷப்பட்டதுமன்றி, இப்பொருட் காட்சியில் நூதன மனோகற்பித சக்தி இந்தியர்களுக்கு இருப்பதைப் பற்றியும், ஜப்பானியர்களின் சித்திரவேலைத் தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆவல் இந்தியச் சித்திர வேலைக்காரர்களுக்கு உண்டாயிருக்கிறதைப் பிரத்தியக்ஷத்தில் கண்டதைப்பற்றியும், வெளிதேசங்களில் செய்யப்படும் சிறந்த தொழில்களைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆசை உதித்திருக்கிறதானது, இந்தியர்களின் முன்னேற்றத்திற்கு அடையாளம் என்பதைப் பற்றியும், சென்னை நகர் இவ்வித காரியத்தில் தலையிட்டு ஒழுங்காகச் செய்து முடித்திருக்கிறது நல்ல காலத்தின் அறிகுறி என்பதைப் பற்றியும் கவர்னர் சொன்னார்.

கொஞ்சம் நாட்களுக்கு முந்தி கன்னிமாரா ஹோட்டலில் பலவித சிறந்த படங்களை பொருட்காட்சியில் வைத்துக் காண்பித்த மிஸ்டர் வில்லியம் ஸ்காட் துரையும் அன்று இப்பொருட் காட்சியைப் பார்க்க வந்திருந்தார். சில பொருள்கள், சிரேஷ்டமாயும் மனதைக் கவரக்கூடியனவாயும்இருந்தனவென்று அவர்சொன்னார்.

---

## நம் சகோதரர்களின் மாட்சி.

---

### ஆர்ய ஸகோதரத்வ கான்பரென்ஸ்.

பம்பாயில் ஆர்ய ஸகோதரத்வ ஸங்கமென்ற ஒரு ஸங்கம் 1910-ம் ௵த்தில் ஸர் நாராயண சந்தாவர்க்கர், ஸர் ராமகிருஷ்ண பந்தார்க்கர் முதலிய பிரமுகர்களால் ஸ்தாபிக்கப் பட்டது. அந்த ஸங்கத்தின் கான்பரென்ஸ் ஸமீபத்தில் பம்பாயில் கூடிற்று. விஶ்வகர்மாக்களின் ஸகோதர உணர்ச்சியை இங்குசொல்லத் தேவையில்லை.

***

### குஜராத்தி ஹிந்து ஸ்த்ரீ மண்டலம்.

இப்பெயர்கொண்ட ஸ்த்ரீகளுக்கான ஸபையொன்று 1903-ம் ௵த்தில் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது. அதில் முதலில் 50 - மெம்பர்கள்தானிருந்தார்கள். தற்போது 550-மெம்பர்களிருக்கிறார்கள். இது ரொம்ப அபிவிருத்தி யடைந்துவருகிறதென்று தெரிகிறது. இந்த ஸங்கத்தின் நோக்கமென்ன வென்றால், குஜராத்திய ஹிந்து ஸ்த்ரீகளுக்குதேகபயிர்ச்சியும், கல்வியும் கற்றுக்கொடுப்பதும், அவர்களுடைய நிலைமையை உயர்த்துவதுமாகும்.

சென்ற இரண்டு வருஷங்களாக அந்த ஸபையார் தங்கள் ஸபையைச் சேர்ந்த ஸ்திரீகளுக்கும், மற்றவர்களுக்கும், யாதொரு சம்பளமுமில்லாமல் ஸம்ஸ்கிருதம் குஜராத்திபாஷை, இங்லீஷ்பாஷை, ஸங்கீதம், தையல்வேலை, பூப்போடுதல் முதலியவைகளைக் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்கிறார்கள். குலாபிமானிகளே! நமது ஸ்திரீகளின் நிலைமையைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். தலைகுனிய வேண்டி வருகிறதே!

***

### கும்பகோணம்
### சௌராஷ்டிர தர்மபரிபாலன கமிட்டி.

மேற்கண்ட கமிட்டியானது சென்ற 1912௵ ஆகஸ்டுமீ முதல்தேதி முதல் தஞ்சை டிஸ்ரிக்ட் கோர்ட்டாரவர்களால் தயாரித்துக்கொடுக்கப்பட்ட ஸ்கீமை அநுசரித்துக் குடந்தை சௌராஷ்டிர வகுப்பினர்களுக்கு சொந்தமாயுள்ள ஸ்ரீவரதராஜ பெருமாளின் தர்ம பரிபாலனங்கள் நடை



பெற்று வருகிறது. ஷை கமிட்டிக்கு சுமார் லட்ச ரூபாய்க்கு மேல் ஐவேஜி யிருக்கிறதாகத் தெரிகிறது. ஷை கமிட்டியில் 25 மெம்பர்களுண்டு. அதில் Mr. அரமனை ரங்கசாமி அய்யரவர்கள் பிரஸிடெண்டாகவும், Mr. அண்டி. ச. ராமய்யரவர்கள் சிகர்டேரியாகவும் இருக்கிறார்கள்.

நமது தேவஸ்தானங்களின் நிலைமை என்ன? சென்னை சுஜாதி தேவாலயத்தின் ஸ்கீம் புதுப்பிக்கப்பட்டு விட்டதா? ஏன் வீண் தீர்மானங்கள் செய்ய வேண்டும்?

***

### முதலியார் வகுப்புப் பையன்களின் கல்வி.

முதலியார் வகுப்புப் பையன்களின் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன், மைஸூர் சீப்கோர்ட்டில் ரெஜிஸ்டராக இருந்து காலஞ்சென்ற டி. எ. ராஜரத்ன முதலியாரின் மனைவி10,000ரூபாய் நன்கொடை யளித்திருக்கிறார். கல்வி விஷயமாய் ஒரு தென்னிந்திய ஹிந்துமாது இவ்வளவு அதிகமான தொகையை உபகாரம் செய்திருப்பது ரொம்ப சிலாகிக்கத்தக்கது. நம் சிறுவர்கள் கல்வியபிவிர்த்திக்காக 10-ரூ நன்கொடையளிக்கும் சுஜாதி நண்பரைக்காணோம்!

***

### விவசாயிகளுக்கு பாங்கி.

தஞ்சாவூர் ஜில்லாவில் குடவாசலுக்கு சமீபத்தில் செங்காலிபுரம், வேம்பனூர். முதலிய சில கிராமங்களிருக்கின்றன. அவ்வூர்களின் மிராசுதாரர்களிற் பலர்சேர்ந்து "நில அடமான பாங்கி" ஒன்றை வைத்துக் கொள்ளுகிறதாகவும், ஐக்கிய நாணய ரெஜிஸ்டிராரைக் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. நமது கைத்தொழில் முன்னேற்றத்தைக் குறித்து நமது பாங்கிகள் எத்தனையிருக்கின்றன? இல்லையென்றால் அவைகளை ஸ்தாபிக்கும் முயற்சிகள் எங்கேனும் உண்டா?

***

### வேளாளச் சிறுவர்களுக்கு ஹோஸ்டல்.

தொண்டைமண்டல வேளாளர் சென்னையில் வாசிக்கும் தங்கள் வகுப்பு மாணவர்கட்கு ஒரு ஹோஸ்டல் ஏற்படுத்தவும், தென்னிந்தியாவில் புதுச்சேரி, காரைக்கால் உட்பட மொத்தத்துக்குத் தமிழ் ஜில்லாக்களில் வேளாளர்கள் எத்தனைபேர் இருக்கின்றனரென்று ஒரு ஜனசங்கியை எடுக்கவேண்டுமென்றும், தங்கள் சங்கத்துக்கு சம்பளம் பெறும் ஜெனரல் செக்ரடரி ஒருவர் ஏற்பாடாகவேண்டுமென்றும் தீர்மானித்தனர்.

விஶ்வகர்மாக்களின் சரியான ஜனசங்கியையும், அவ்வகுப்பில் கல்விகற்கும் சிறுவர்களின் கணக்கும் எடுத்துச் சொல்வார்களுண்டா? ஐயோ!

***

### தஞ்சாவூர் வருணாச்சிரம தர்ம சபை.

தஞ்சாவூரில் வருணாச்சிரம தர்ம ஸபையென்று ஒரு ஸபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதன் நோக்கம் வருணாச்சிரம தர்மங்களையும், ஜனஸமூக தர்மங்களையும் ஹிந்து மதத்தையும் கெட்டுப்போகாமல் காப்பாற்றுவதே. இது வட இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவரும் பாரததர்ம மகா மண்டல் என்னும் ஸபையைப்போல் வேலை நடத்திவரும். இந்த ஸபைக்கு, கும்பகோணம் சங்கராச்சாரியார் ஒரு பிரதிநிதியை அனுப்பப்போகிறாராம். நாம் நமது வருணாச்சிரம தர்மங்களைநன்கறிந்து இத்தகைய ஸபையை ஸ்தாபிப்ப தென்னாளோ!

***

### காஞ்சிபுரம் நெசவுச் சங்கம்.

காஞ்சிபுரத்தில் 'வீவர்ஸ்யூநியன்' என்ற நெசவுக்காரர்களின் சங்கமொன்று இருக்கிறது. இதில் 300-மெம்பர்கள் இருக்கின்றனர். 25-நெசவுத்தறிகள் வேலைசெய்கின்றன. அச்சங்கத்தார் மொத்தமாய் நூல்களை வாங்கி சில்லரையாக மெம்பர்களுக்கு சகாய விலைக்கு விற்கின்றனர். மெம்பர்கள்

தங்களின் வீடுகளில் நெய்யும் துணிகளை இச்சங்கத்தின் வசம்தந்து அச்சங்கத்தின் மூலமாக விற்பனை செய்து தங்கள் கிரயத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். ஹே விஸ்வகர்மச் சிரேஷ்டர்களே! ஒன்று பட்டால் ஆகாதது உண்டா?

***

## நம் சிற்பிகளின் அற்புத சிருஷ்டிகள்.

---

### புதையுண்டிருந்த அரண்மனை.

பாடலிபுரத்தில் பூமியை வெட்டி பூர்வ கால ஸ்தல ஆராய்ச்சி செய்து வரும் இடத்தை நம் இராஜப்பிரதிநிதி யவர்கள் கண்ணுற்றனர். பூமியின் கீழ் புதையுண்டிருந்த அரண்மனையையும், சிம்ஹாஸனம் இருக்கு மிடத்தையும் அநேக மண் மலைகளையும் பிறவற்றையும் பார்வையிட்டனர்.

***

### கருங்கல் ஆலயங்கள்.

வங்காள மாகாணத்திலுள்ள வாரம் என்னும் கிராமத்தில் ஜாகிர்தாரொருவர் பூமியைத் தோண்டிக்கொண் டிருந்தபோது, கருங்கல்லால்கட்டப்பட்டுள்ள ஆலயங்களும், விக்கிரகங்களும் காணப்பட்டதோடும், 7-பெரிய சிவலிங்கங்களும், 8-லிங்கங்களும், கறுப்பு சலவைக் கல்லால்செய்யப்பட்ட பல விக்கிரகங்களும், 10-கைகளுள்ள ஈஸ்வரியின் சிலை யொன்றும் அகப்பட்டன. நம்நாட்டு சிற்பிகளின் சிறப்பே சிறப்பு.

***

### கௌதம புத்தரின் எலும்புகள்.

தட்சசீலம் என்னும் டாக்ஸில்லா மலைச் சிகரங்களில் பூர்வீகத்தில் பூஜிதைக்கு உரியவைகளா யிருந்த கௌதம புத்தரின் நாகரீகச் சின்னங்கள் அகப்படுகின்றன. உயர்ந்த கற்களால் செய்யப்பட்ட பாத்திரங்களில் அடக்கஞ்செய்யப்பட்ட புத்தர் எலும்புகள் அங்கு அகப்படுகின்றன. அவற்றினுள் வெள்ளி, பொன், வயிரக்கற்கள், நாணயங்கள், நகைகள் இவை போல்வனகாணப்படுகின்றன. சுமார் 1900 ஆண்டுகட்கு முன்னர் அவை அங்கு புதைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. அந்தச் சின்னங்களில் ஒன்று கௌதம புத்தராலேயே ஆசிர்வதிக்கப்பட்டு அங்கு வைக்கப்பட்டதாம். மற்றவை அவரது சிஷர்களுடையதாம். அவர்களின் தேகங்கள் அங்கு இவ்வளவு அருமையுடனும் சேமிக்கப்பட்ட பாத்திரங்கள் வெகு வேலைப்பாடுள்ளவைகளாகவும், விலை யேறப்பெற்றதாகவும் இருக்கின்றனவாம்.

***

### ஒரு தங்கப் பல்லக்கு.

தென்கன்னடத்தில் உடுப்பி என்ற வைணவ க்ஷேத்திரம் 800-வருஷங்களுக்கு முந்தி மத்வமத ஸ்தாபனாச்சாரியரான ஸ்ரீமத் மத்வாச்சாரியரால், ஸ்ரீ கிருஷ்ண சிலா பிரதிமையுடன் அந்த உடுப்பியில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அந்த ஆலயத்திற்கு வருஷத்திற்குப் பல்லாயிரம் ரூபாய் வரும்படி வரும் பலபூமிகள் இருக்கின்றன. அந்த க்ஷேத்திரத்தைச் சுற்றியுள்ள 8-கிராமங்களில் 8-மடங்களுண்டு. ஒவ்வொன்றிலும் ஒரு ஸன்யாஸி இருக்கிறார். அவர்களில் ஒவ்வொருவரும் முறையே இரண்டு வருஷகாலம் உடுப்பி சுவாமிக்கு பூஜைசெய்து வரவேண்டுமென்றும் 2-வருஷம் கழிந்த பிறகு மற்றொருமடாதிபதியின் வசம் அந்த பூஜை காரியங்களை ஒப்புவித்துவிட வேண்டுமென்றும் செய்திருக்கும் ஏற்பாடு சென்ற 800-வருஷகாலமாக நடந்துவருகிறது. அம் மடங்களில் கிருஷ்ணாபுரம் மடம் என்ற ஒரு மடமுண்டு. அந்த மடத்தைச் சேர்ந்த மடாதிபதி உடுப்பியிலிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணருக்கு 50,000 ரூபாய் மதிப்புள்ள ஒரு தங்கப் பல்லக்கை செய்து வைப்பதற்காக, இந்தியாவின் பலபாகங்களிலுள்ள உதாரகுணமுள்ள பிராமணர்களிடமிருந்து பணம் வசூலித்து பல்லக்கு வேலையை ஆரம்பித்து விட்டனர்.

***



### தாஜ்மஹால்.

தாஜ்மஹாலைப் போலவே சுத்தமான தங்கத்தினாலும் வெள்ளியினாலும் மிக்க அழகாக ஒருதாஜ்மஹாலை ஆக்ராவிலுள்ள உஸ்தகர் மீரான்பக்ஷி என்பவர் செய்து முடித்திருக்கின்றார். அது 5-அடி உயரமும் 4-அடி அகலமும் கொண்டது. அதைச் செய்வதற்கு 1500-ரூபா செலவாயிற்றாம். இரவும் பகலுமாய்க் கடந்த மூன்று வருஷங்களாக அதைச் செய்தும் இப்போதுதான் அதுமுடிவாயிற்றாம்; சித்திரவேலைகளுக்கே ஒருமாதிரிபோல விளங்கும்படி அவ்வளவு நேர்த்தியாக இருக்கிறதாம். இந்த சித்திர வேலைக்காரர் இதேமாதிரி ஒரு தாஜ்மஹாலைச் சில வருஷங்கட்கு முன்பு செய்து 8000-ரூபாய்க்கு நிஜாம் அரசருக்கு விற்பனைசெய்தாராம். இப்போது தயாரான இது ஆப்கானிஸ்தான் அமீருக்காகச் செய்யப்பட் டிருக்கிறதாம்.

சிற்பம், சித்திரம், கைத்தொழில் இம்மூன்றும் எவ்வளவு நெருங்கிய சம்பந்த முடையவைகளா யிருக்கின்றன வென்பது இவ்வுதாரணத்தால் நன்கு விளங்கும்.

***

### ஒரு சிலாசாஸனம்.

ஹைதராபாத்தில்ரேச்சூருக்கும்ஹட்டி சுரங்கங்களுக்கு மிடையுள்ள ஓரிடத்தில் ஒரு சிலாசாஸனம் கிடைத்திருக்கிறது. அது 23-நூற்றாண்டுகளுக்கு முன் இந்தியா முழுவதையும் அரசாண்ட அசோக சக்ரவர்த்தியின் காலத்திலேற்பட்ட சிலாசாஸன மென்று தெரிகிறது. இதற்கு முன்பு சோழதேசத்தில் டாலி, ஜங்காடா என்னுமிடங்களிலும், மைஸூரில் சித்தபுரத்திலும் அசோகசக்ரவர்த்தி காலத்திலேற்பட்ட மூன்று கல்வெட்டுக்கள் அகப்பட்டன.

***

### சில ஐயவினாக்கள்.

தங்கள் விஸ்வகர்ம குலோபகாரி பத்திரிகை தொழிற் குறிப்பில் வந்த சில வேலைகளைச் செய்து பார்த்ததில் அவைகள் வெகுவாக கைகூடி வருகின்றன. ஆனால் இந்த ஊரில் அதற்கு வேண்டிய இங்கிலீஷ் மருந்துகள் அகப்படவில்லை. எனக்கு பித்தளைப்பூட்டுகளைப் பல நிறம் செய்வதற்கு வேண்டிய மருந்துகள் வேண்டும். அவைகள் சகாயமாக அகப்படும் இடங்களைத் தெரிவித்தால் நான் நேரில் எழுதி தருவித்துக்கொள்கிறேன். இவ்விடம் மருந்து ஷாப்பில் மருந்துகள் கிராக்கி. சில மருந்துகள் பெயர்கூட தெரியவில்லை. சிரமத்திற்கு மன்னிக்கவேண்டும். அவசியம் விலாசம் தெரியப்படுத்தவேண்டும்.

கா. வேலாயுத ஆச்சாரி,
அனுப்பர்பாளையம்.

விடை:—

[யுத்தத்தால் மருந்துகளின் விலை யெங்கும் அதிகமே. வேண்டியவைகளுக்கு சென்னை மவுண் ரோட் W. E. ஸ்மித் கம்பெனியாருக்கும் சைனாபஜார் ரோட் N. R. பக்டி கம்பெனியாருக்கும், பம்பாய், பைகுலா டிரச்சர் கம்பெனியாருக்கும் எழுதிப்பெற்றுக்கொள்ளலாம். ப-ர்]

***

2.

தங்கள் பத்திரிகையில் பல கைத்தொழில் விஷயங்களை எழுதி வருகிறீர்கள். அவைகள் ரொம்ப சிலாக்கியமாக இருக்கின்றன. எனக்கு ரப்பர் ஸ்டாம்புகள் செய்யப் பிரியமாயிருக்கிறது. அந்த வேலையைப்பற்றி விபரம் எனக்கு நேரில் எழுதினால் நல்லது. தங்களுக்கு அநேக வந்தனம்.

S. வைத்தியநாத அய்யர்,
அதிராம் பட்டணம்.

[ரப்பர்ஸ்டாம்பு வேலை வெகு சுலபமானது. அதைப்பற்றிய விவரம் கூடியசீக்கிரத்தில் நம் பத்திரிகையில் வெளியிடப்படும். ப—ர்]

***

3.

தேக்க மரத்தில் செய்த நாற்காலி, பீரோவ் முதலியவைகளுக்கு நூக்கமா வார்னீஷ் செய்யும் படியான வேலையை சொல்லிக் கொடுத்தால் தங்கள்பேர் சொல்லிக்கொண்டிருப்பேன். லாம்பிளாக்கு பூசி வார்னீஷ் போட்டுப்பார்த்ததில் வர்ணம் உதிர்ந்து போகிறது. மறுதபாலில் விபரம் எழுதவும், மன்னிக்கவும்.

ம. ஏழுமலை ஆச்சாரி,
பாலக்கரை, திருச்சி.

[நமது விஸ்வகர்ம குலோபகாரியில் பல வார்னீஷ் முறைகளைத் தெரிவித்திருக்கிறோம். ப—ர்]

***

4.

தங்கள் வேதாத்தியயன பாடசாலையில் நமது பிள்ளைகள் எத்தனைபேர் படிக்கிறார்கள்? அவர்களுக்கு சம்பளம் எவ்வளவு? எங்கள் ஊரிலிருந்து பிள்ளைகளை அனுப்பினால் அவர்களுக்கு சாப்பாடு ஜாகை தாங்கள் ஏற்பாடு செய்யமுடியுமா? விபரம் தெரிவிக்கவும்.

சி. விஸ்வநாத ஆச்சாரி,
சேலம்.

[நமது அத்தியயன பாடசாலையில் படிக்கும் நமது ஜாதிச் சிறுவர்களின் தொகை 40; சம்பளமில்லை. படிப்புமட்டும் இலவசமே. வெளியூர் பிள்ளைகளுக்கு போஜன வசதி ஏற்பாடு செய்யக்கூடும். ப—ர்]

***

குறிப்பு:—கடிதங்கள் சுருக்கி வெளியிடப்பட்டிருக்கின்றன.

## இரண்டாவது விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் தஞ்சாவூர்.

நம் பத்திரிகையின் மற்றோர் பக்கத்தில் இக்கான்பரன்ஸ் சம்பந்தமாக வெளிவந்திருக்கும் விளம்பரத்தை கண்ணுறும் நமது குல நலப் பிரியர்கள் கனிமகிழ்வார்களென்றே நம்புகிறோம். 'வருந்தினால் வாராததொன்றில்லை' என்னும் ஆன்றமைந்த சான்றோர் வாக்கியத்தை மனதிருத்திமனமொழி மெய்களால் ஒத்துழைத்தவோர் சபையோ, சங்கமோ, அல்லது ஓர் ஜனசமூகமோ தங்கள் தங்கள் குறைகள் நிவர்த்தியாகி,கோரிக்கைகளெல்லாம்நாளடைவில் ஈடேறப் பெற்றிருக்கிறார்களென்பது நாமனைவரும் கண்கூடாக் கண்ட உண்மை. எனவே, நமது சந்ததியார்களும் தமது குறைகளை உள்ளவாறுணர்ந்து மனங்கசிந்து, இனியேனும் சற்கருமங்களில் மனம் நாடி, ஊக்கந்தளராது ஒத்துழைப்பாராயின் அன்னோர் பல்வழியினும் உன்னதம் பெறுவரென்பது திண்ணம். தோன்றன் மாத்திரத்தில் இடையூறுகளாக யிருப்பனவற்றையும், அன்னியர்பகைமை, எளனம் முதலிய பயனற்றவைகளையும் பொருட்படுத்தி ஊக்கந்தளர்ந்து,விடாமுயற்சியைக் கைவிட்டோர்யாவரேயாயினும் அத்தகையோர் ஓர் நாளும் உலக அரங்கில் உன்னதம் பெறுவதே யில்லையென்பது உண்மை வசனம். ஆகையின் நமது சந்ததியாரின் பல குற்றங்களும், குறைபாடுகளும் எத்துணை அதிகமாகப் பிறரால் எடுத்துக் காட்டப்பட்டாலும், அத்துணையும் நாம் முன்னுக்கு வரவேண்டு மென்னும் நன்னோக்கங்கருதியே வெளிவந்தவைகளாகவும், அவைகள் நாம் மேன்மேலும் அயர்ந்து நித்திரை புரிவதற்கேற்ற தாலாட்டுப் பாட்டுகளல்லவென்றும், நம்மை நமது பல சதவருஷ அயர்ந்த நித்திரையினின்றும் தட்டி எழுப்பும் கெட்டிமொழிகளென்றும் கொண்டு அவற்றின்உதவியால் நமது



குற்றங்களை முற்றிலும் களைய முயலல்வேண்டும். இதனைவிட்டு வீண்பகைமை பாராட்டுவதால் விளைவதொன்றுமே யில்லை.

நிற்க, சென்ற வாண்டு பிப்ரவரிமாதம் வெளிப்போந்த நங்குலோபகாரியின் தலையங்கத்தில் குடந்தையில் நடைபெற்ற முதல் கான்பரன்ஸ் சம்பந்தமாக சில அபிப்பிராயங்களையும், அக்கான்பரன்ஸில் கவனிக்கப்படவேண்டிய சில முக்கிய காரியங்களையும், தீர்மானத்திற்குரிய சில பல விஷயங்களையும் விளக்கி யெழுதி யிருப்பதை நம் நேயர்கள் இத்துடன் சற்று இணக்கிப்பார்க்க விரும்புகிறோம். அதனால் நாம் ஆண்டு வெளியிட்ட அபிப்பிராயங்களும், குறிப்பிட்ட தீர்மானங்களில் பெரும்பாகம் நமது சமூகத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பெற்று, கான்பரன்ஸ் முன்னிலையில் அங்கீகாரம் பெற்றனவென்றும் நம் நேயர்கள் நன்குணர்வார்கள். அங்ஙனம் ஒப்பப்பெற்ற தீர்மானங்களையொட்டி இப்போதைய தீர்மானங்களிருக்கவேண்டுமென்கிற நியதம் பற்றியும், அவைகளை நாமே தொடர்ந்து மீண்டும் எடுத்துக் காட்டவேண்டிய கடமையை மேற்கொண்டும் இக்கான்பரன்ஸில் கவனிக்கப்பட வேண்டிய விஷயங்களை இங்கு சிறிது விவகரிப்போம். ஆகையின், நமது சமூகத்தாரும், கான்பரன்ஸ் கமிட்டியார்களும் அவற்றைப் பற்றிய நம் கருத்தை உள்ளவாறுணர்ந்து குணமுள்ள வற்றை கைக்கொள்வார்களென்றே நம்புகிறோம்.

பிரதமத்தில் இவ்வித பெருமுயற்சிகளில் கவனிப்பதொன்றுண்டு. அதென்னவெனின், நம்முயற்சிகளைப் பற்றி நமது சகோதர ஜாதியர்களின் அபிப்பிராயங்களின்னதென்றும், தேசப்பொது க்ஷேமத்தைக் கோரிய பொறுப்புள்ள பத்திரிகைகளென்ன பேசுகின்றன வென்பதையும் சீர்தூக்கிப் பார்த்தலேயாம். நமது முதல் விஸ்வகர்ம கான்பரன்ஸ் கூடிய முகத்தால் நம்மை பல சமூகத்தாரும் உத்ஸாகப்படுத்தி வருகிறார்களென்பது நமது அநுபவசித்தம். என்றாலும், பல சிற்றூர்களிலும், குக்கிராமங்களிலும் காணப்படுகிற குற்றங்களும், குறைகளும் நிவர்த்தியாகவில்லையென்று அந்நிய சமூகத்தாரின் முறையீடுகள் இன்னும் சுமந்து கொண்டே வருகின்றன. நமது ஜாதியர் கைவிட்ட கல்வியையும், நாகரீகத்தையும் கைக்கொண்டவக்கணத்தே அவைகள் தலை காட்டாது ஒழிந்து விடுமென்னும் நமது உறுதிமொழியே அவற்றிற்கு ஒருவாறு சமாதானமாகலாம். நமது முதல் கான்பரன்ஸைப் பற்றி விவகரித்த பத்திரிகைள் பல விருந்தாலும் சுதேசமித்திரன், திராவிடாபிமானி, என்னுமிரண்டு தமிழ்ப் பத்திரிகைகளும், சென்னை டைம்ஸ் என்னும் இங்கிலீஷ் பத்திரிகையும் இங்கு குறிப்பிடத் தகுந்தன. சுதேசமித்திரன் பத்திரிகையும் சென்னை டைம்ஸ் பத்திரிகையும் நமது கான்பரன்ஸின் நோக்கங்களை, முறையே கண்டித் தெழுதுவதிலும், ஆதரித்துப் பேசுவதிலும் தமது பத்திரிகையின் தலங்களை, சிலவிட்டதற்கு நாம் நன்றி பாராட்டுவோம்.

'கும்பகோணம் விஸ்வகர்ம மகாஜன சபை' என மகுடஞ்சூட்டி 1915ளு ஏப்ரல் மாதம் 14-ம்தேதி வெளிவந்த சுதேசமித்திரன் தலையங்கத்தின் துவக்கத்தில் நமது கான்பரன்ஸில்அக்கிராசனம்வகித்த பிரம்மஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியாரவர்களின் யோக்கியதைகளை விஸ்தரிக்குமிடத்து அவர் விஸ்வகர்ம சமூகத்தில பேர்போன தலைவர் என்றும், அந்த சமூகத்தின் நன்மையில் அவர் எப்போதும் அக்கரைவகிப்பவரென்றும் கூறி, விஸ்வகர்ம சமூகத்தார் பழையநாளைத் தொழில்களை பழைய மாதிரியாய்ச் செய்து வருகிறவர்களேயன்றி, கல்வியும், பயிற்சியும் பெற்றுதொழில் பெறுகிறவர்களல்லவென்றும், அப்படியிருந்தும் 500 பேர் பிரதிநிதிகள் அக்கான்பரன்ஸுக்கு வந்திருந்தார்களானால் அந்த கான்பரன்ஸை கூட்டினவர்களுடைய செல்வாக்கும், சுறுசுறுப்பும் வெ

ளிப்படுகின்றன வென்றும் வியந்துபேசும் வாக்கியங்கள் காணப்படுகின்றன. அவைகளனைத்தையும் நாம்ஆமோதிப்போம். ஸ்ரீ ஆச்சாரியாரவர்கள் நமது குல முன்னேற்றத்திற்கு உண்மையாகப் பாடுபடுகிற உத்தமர்களில் பிரதம ஸ்தானம்பெற்றவரென்பதை எவருமே மறுக்கமுடியாத விஷயம். புராதனத் தொழிலைப் பண்டை வழியில் நாம் செய்து வருகிறோ மென்பதும் மற்றொரு மறுக்கக்கூடாத உண்மை. எனவே, மறக்கக் கூடாதவைகளை விட்டு மறுத்துரைக்க வேண்டியவைகளைப் பற்றி மட்டுமே இனிப்பேசுவோம்.

விஷயங்களின் நுட்பத்தையும், அவற்றால் விளையும் நன்மைகளையும் சீர்தூக்கிப் பார்த்து, அபிமானங்கொண்டோர் விஷயத்தை கால்தேசப் பாகுபடுணராது அவசர குணத்தால் மாந்தர்கள் கண்டித்துப்பேசுவது இயற்கை. இவ்வித குற்றத்தினின்றும் உயர்தரப் பத்திரிகைகளும் விலக்கானவைகளல்ல. என்றாலும், தேசப்பொது க்ஷேமத்திலும், இந்தியகைத்தொழி லபிவிர்த்தியிலும் ஊக்கங்கொண் டுழைத்து வரும் சுதேசமித்திரனில் வெளிவந்தகண்டனைகள் நமக்கு மிக்க ஆச்சரியத்தையும் விசனத்தையும் விளைவிக்கின்றன. அப்பத்திரிகையின் கண்டனையின் சாராம்சமென்னவெனின், கவர்ன்மெண்டாரை சகாயம் செய்ய வேண்டுமென்று பலசமூகத்தாரும் கேட்டுக் கொள்கிறார்களென்றும், அவர்கள் ஒவ்வொருவருக்குமே கவர்ன்மெண்டு சகாயம் செய்வது சாத்தியமல்லவென்றும், உயர்தரக்கல்வியில்லாமல் விஶ்வகர்மச் சிறுவர்களை எப்படி அந்நிய தேசங்களுக்கு கவர்ன்மெண்டார் அனுப்பக்கூடுமென்றும், ஒவ்வொரு பெரிய பட்டணத்திலும் தொழிற் கல்விச்சாலை ஸ்தாபிக்க முடியாதென்றும், அச்சிறுவர்களுக்கு அரைச் சம்பளத்தில் படிப்பு சொல்லிவைக்க முடியாதென்றும், அங்ஙனம் செய்விப்பதற்குகவர்ன்மெண்டார்தாராளமாய்ப் பணச்செலவு செய்தாலல்லாமல், சாத்தியமாகாவென்றும், கவர்ன்மெண்டார் செலவு செய்யும் பணம் ஜனங்கள் அனைவரும் கொடுக்கும் பணம் என்பதை மறக்கக்கூடாதென்றும், ஒரு சமூகத்திற்குவிசேஷநன்மை செய்தால் மற்ற சமூகங்களுக்கு அவசியம் வேண்டிய நன்மையைச் செய்தல் குறையுமென்றும் சொல்லி சாத்தியமானவைகளையே கவர்ன்மெண்டாரைக் கேட்கவேண்டுமென்னும் சற்போதனையைமுடிவில் புகட்டுவதேயாம். மற்றஜாதியர்களையும் விஶ்வகர்மசமூகத்தையும் அப்பத்திரிகை ஒப்பிடுமிடத்து, மகம்மதியர்கள் விசேஷ செல்வாக் குடையவர்களாயிருப்பதால் மகம்மதிய ஸ்கூல்களில் கவர்ன்மெண்டு விசேஷ நன்மையை செய்கிறார்களென்றும், விஶ்வகர்ம ஜாதியிடத்தில் கவர்ன்மெண்டுக்கு அப்படிப்பட்ட எண்ணமில்லையென்றும், அவர்களுக்கு கவர்ன்மெண்டார் விசேஷ நன்மை செய்தால் மற்ற சமூகங்களுக்கும் செய்யும்படி நேரிடுமென்றும், பஞ்சமர் முதலான மகாஏழைகளுக்கு தனி ஸ்கூல்கள் ஸ்தாபித்து அவர்கள் நிலைமையை உயர்த்த வேண்டியதாயிருக்க அதையே கவர்ன்மெண்டார் செய்யாமலிருக்கிறார்களென்று முறையிடுதலுடன் தனது அரிய வியாசத்தை பூர்த்தி செய்கின்றது. அதே பத்திரிகை மற்றொரு சமயத்தில் மகம்மதிய வகுப்பார்மீது கவர்ன்மெண்டார் தங்கள் அபிமானத்தை அனாவசியமாக சுமத்திவருவதைக்கண்டித் தெழுதுங்கால், பரம ஏழைகளாய் துர்பாக்கிய நிலைமையிலிருக்கும் பஞ்சமவகுப்பாருக்குப் பலவழிகளில் கவர்ன்மெண்ட்டார் உதவி செய்யக் கடமைப்பட்டவர்களென்றும், பஞ்சமர்களைப் போல் நெசவுக்காரர்களையும் கவர்ன்மெண்ட் ஒத்தாசை செய்து அவர்கள் சங்கங்கள் ஸ்தாபித்துக் கொள்ளும்படி போதித்து அவர்கள் செய்யும் தொழிலையும் ஆதரித்து எத்தனையோ வழிகளில் அவர்களுக்கு ஒத்தாசை செய்யலாமென்றும், இவ்வகுப்பாருக்கும் பஞ்சமர்களுக்கும்கவர்ன்மெண்டார் கூடியவரையில் சாத்தியமான



வழிகளி லெல்லாம் ஒத்தாசை செய்து படிப்புச் சொல்லிவைக்க ஏற்பாடுகள்செய்யவேண்டுமென்றும், இவ்வகுப்பாருக்கல்லவோ கவர்ன்மெண்டும், லோகல்போர்டுகளும் தனியான ஸ்கூல்கள் ஸ்தாபித்து அந்தப்பிள்ளைகளிடம் அரைச்சம்பளமோ கால் சம்பளமோ வாங்கி, அவர்களுக்கு ஸ்காலர்ஷிப்புகளும் கொடுத்து புஸ்தகம், சிலேட் முதலியவைகளை இனமாயும் கொடுத்து அவர்களிடத்தில் விசேஷ அபிமானங் காட்டிப் பணத்தை தாராளமாய்ச் செலவு செய்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், அந்தவகுப்பார் விஷயத்தில் பணச்செலவுசெய்வது கவர்ன்மெண்டுக்கு வீண்செலவாகாதென்றும், பஞ்சமர்களும், நெசவுக்காரர்களும் தேசத்துப் பொருள் நிலைமைக்கு அடிப்படையாவார்களென்றும், அவர்கள் நல்ல நிலைமையிலிருந்து கல்வி கற்றவர்களாயிருந்தால் விவசாயம் செழிக்குமென்றும், ஜனங்களுக்கு அவசியமான துணிகளும் மலிவாயும் நல்லவைகளாயும் கிடைக்குமென்றும் எழுதி சமயாநுகுணமாகப் பேசி வாதித்திருக்கின்றது.

மற்றோர் பத்திரிகையாகிய திராவிடாபிமானி, 'விஶ்வகர்ம வகுப்பினரின் முன்னேற்றம்' என்னும் தலைப்பின் கீழ் எழுதுமிடத்து, விஶ்வகர்ம வகுப்பார் தாங்கள் முன்னேற வேண்டுமானால் தங்கள் தலைவர்களாக இப்போது தோன்றி தங்கள் ஸமூக மேன்பாட்டிற் கென்று பாடுபடுகிறவர்களின் கஷ்டத்தில் கால்பாகமாவது ஒவ்வொருவரும் பங்கு பெற்றுக்கொண்டால் நல்லநிலைமைக்கு வரலாமென்றும், ஆதிமுதற்கொண்டு உலகமே ஆவற்படுகிற ஒரு சிறந்த கைத்தொழிலை இவ்வகுப்பார் பெருஞ் செல்வமாகப் பெற்றிருக்கிறார்களென்றும், அத்துடன் சிறந்த கல்வியும், சுஜாதியபிமானமும் கூடி விட்டால் வேறொன்றும் இவ்வகுப்பினரதுஉயர்வுக்கு உபகரணங்களாக வேண்டியதில்லையென்றும், இவ்வளவு சுலபத்தில் மேல் நோக்கிச் செல்லத்தக்க சாதகமிருந்தும், ஐக்கியம், தலைவர்களை மதித்தல் சுஜாதிப் பத்திரிகைகளை யாதரித்தல் முதலிய ஸமூக நலத்தில் சிறந்த இக்குணங்கள் குறைவாயிருப்பதால் வேறுமனே வாய்ஞானத்தில் காலம் கழிக்கின்றதென்றும் இதோபதேசமாக வரைந்திருக்கின்றது. இப்பத்திரிகை மற்றோர் சமயத்தில் நமது வகுப்பினர்கள் நாணயவரிசையில் சீர்திருத்தமடைய வேண்டுமென்று இப்பத்திரிகை குறிப்பிட் டெழுதுங்கால், விஶ்வகர்மப் பிராமண சிலர்கள் தங்களிடம் நகை செய்யும்படி மற்றவர்களால் கொடுக்கப்படும் பொன், வெள்ளி, கல்லுகள் முதலியனவற்றை அந்தப்படியே கெடுத்தவறாமல் கொடுப்பதிலும், வீணாக அலையவைக்காமலும் எதார்த்தமாய் நடந்து கொள்ளும்படி தம்வகுப்பினர் சிலருக்கு வற்புறுத்த வேண்டுமென்றும், நமது ஜனமூகத்திலுள்ள இவ்வாறான சாதாரணத் தவறுதல்களைக்கூட நாம் விடாமல் எடுத்துக் காட்டித் திருத்தம் போதிப்பித்து அவ்வாறே நடக்கச் செய்வோமாயின், இது பெரிய தவறுதல்களைச் சுலபமாகப் பிற்காலத்தில் சீர்திருத்துவதற்கான வழியாயிருக்குமென்றும் எழுதி தம் நேசச்சார்பைக் காட்டியிருக்கின்றது. இன்னுமொரு சமயத்தில் இப்பத்திரிகை நமது தீர்மானங்களை கவர்ன்மெண்டார் மீது சுமத்திவிடுவது மட்டும் போதியதல்லவென்றும், விஶ்வகர்ம சமூகத்தார்களே தங்கள் முன்னேற்றத்திற்குரிய கல்வி, கைத்தொழில் முதலிய பிரயத்தனங்களை கூடியவரையில் செய்யவேண்டுமென்றும் எடுத்துக் காட்டிற்று.

சென்னை டைம்ஸ் என்னும் ஆங்கிலேய பத்திரிகை சென்றவருடம் ஜூன்மீ 12௳ தமது தலையங்கத்தில் 'ஓர் மனோஹரமான படம்' என்னும் தலைச்சாத்திட்டு எழுதுங்கால், நமது முன்னோர் பெருமைகளையும் அவர்களுடைய சிறப்புத்தொழிலின் தேர்ச்சியையும், அவர்கள் இயற்றியுள்ள மகத்தான ஆலய நிர்மாணங்களையும் எடுத்துக்

காட்டி அவர்கள் சந்ததியார் தற்காலம் மைல் கல்களும், சர்வே எல்லைக் கல்களும் அடித்துக் கொண்டு காலங்கழிக்கிறார்கள் என்று அநுதாபங்காட்டி எழுதியது. பூர்வத்தில் பல விநோதமான உலோகவேலைகளைச் செய்தவர்களின் சந்ததியார்கள் தற்காலம் பித்தளை, செம்புக்காப்புகள்செய்து மூலாமிட்டு ஜீவனம் செய்கிறார்களென்றும், இரண்டொரு அணா தினக்கூலிக்காக வேலைகொடுப்பவர்கள் வீட்டுவெளித் தாழ்வாரத்தில் நாள் முழுதும் வேலை செய்து ஜீவித்து வருகிறார்களென்றும், இவ்விதமாக பூர்வீகத் தொழில்கள் நலிவடைந்திருந்தாலும், அத்தொழில்களுக்குரியவர்கள் தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிட்டாலும், அவர்களுடையவேலைஞானம் இன்னும் பூராவாக நாஸ்தியடைந்து விடவில்லை யென்றும், தொழில் ஞானமும், தொழிலை யியற்றும் ஆற்றலும் தற்காலம் அவர்களிடம் அந்தர்கதமாகயிருந்தாலும் அவைகள் கைத்தொழில் முயற்சியற்றிருக்கும் இக்காலத்தில் நாளுக்குநாள் நிச்சயமாகவே க்ஷீணித்துப் போய்கொண்டிருக்கின்றன வென்றும் விரிவஞ்சாது எடுத்து காட்டிற்று. கான்பரன்ஸ் கூடியதாலும். தங்கள் குறைகளை யெல்லாம் எடுத்துக்காட்டி சென்னைகவர்ன்மெண்டாருக்கு மனுச்செய்துகொண்டிருப்பதாலும் கம்மியர்கள் தாங்களே தங்கள் சீர்கேட்டைசெவ்வனேயுணர்ந்து கண்விழித்துக்கொண்டார்களென்றும் சந்தோஷப்படுகிறது. நமது முதல் கான்பரன்ஸைப் பற்றி சுட்டிப்பேசுங்கால், நமது கான்பரன்ஸ் நம் ராஜதானியின் பல பாகத்திலும் சென்ற இருபது வருடங்களாக நடைபெற்றுவரும் 'கைத்தொழில் கான்பரன்ஸ்கள்' அல்லவென்றும், கும்பகோணத்தில் கூடிய கான்பரன்ஸ் 'தொழிலாளிகளின் கான்பரன்ஸ்' என்றும், இவ்விருவகை கான்பரன்ஸ்களின் தாரதம்மியம் அவ்விரு பெயர்களிலிருந்தே வெளியாகிறதென்றும், கைத்தொழில் கான்பரன்ஸ்களில் கைத் தொழிலைப் பற்றி ஓங்கிப்பேசுகிறவர்கள் தொழில் ஞானமற்றவர்களாதலால், தொழிலின் நீச்சு நிலை தெரியாது திட்டமற்ற தீர்மானங்களைச் செய்துவருகிறார்களென்றும், ஆனால் இந்த தொழிலாளிகளின் கான்பரன்ஸ் திட்டமான தீர்மானங்களைச் செய்து அதை யநுசரித்த நன்மைகளை கவர்ன்மெண்டார் செய்து தரவேண்டு மென்று கேட்டுக்கொண்டிருக்கிறதென்றும் வெகு சாதுர்யமாக விவரித்திருக்கின்றது. நமது கான்பரன்ஸினின்றும் கவர்ன்மெண்டாருக்குச்செய்துகொண்டிருக்கும் விண்ணப்பம் மிக்கமேலானதென்றும், அதில் செறிந்துள்ள வேண்டுகோள்களைக் கவனிப்பதில்கவர்ன்மெண்டார் மிக்க அநுதாபங் காட்டுவார்களென்பதில் சந்தேகமில்லை யென்றும் அப்பத்திரிகை சாதித்தது. இன்னுமொரு முக்கிய விஷயத்தையும் இப்பத்திரிகை எடுத்துக்காட்ட மறக்கவில்லை. தச்சர், கருமார் முதலியவர்களுக்கு பட்டணவாசங்களில் ஒருசமயம் அதிகக்கூலி கிடைத்தாலும் விஸ்வகர்ம ஜாதியரில் பெரும்பாலோர் சந்தேகமின்றி ஏழைகளாகவே யிருக்கிறார்களென்றும், அவர்கள் சீர்கெடுவதற்கு சொற்ப கடனுதவும் முதலாளிகள் ஒருவகையில் காரணமானாலும், கள்ளுக்கடைக்காரர்களும்சேர்ந்து அவர்களை பரம ஏழைகளாகச் செய்துவிடாமலிருந்தால் ஒவ்வொருவர் அநுதாபத்திற்குமே அவர்கள் பாத்திரவான்களாயிருக்கிறார்களென்றும், சுட்டாமற் சுட்டி எழுதிய அப்பத்திரிகாசிரியரின் உள்ளக்கருத்தை உணர்ந்து நம் மனோர் கண்களில் நீர்ததும்ப வேண்டுமென்றே நாமும் விடாது எடுத்தெழுதினோம்.

இனி சுதேசமித்திரன் சூட்சம திருஷ்டிக்குத் தோன்றிய அபிப்பிராயத்தை சீர்தூக்கிப் பார்ப்பது அவசியமாகிறது. பூர்வகாலந் தொடங்கி இந்தியா விவசாய தேசமாக யிருந்து வருகிறதென்றும், அப்படியிருப்பதால் இந்தியர்கள் ஒருவாறு சுகமாக காலக்ஷேபம் செய்து வரினும் உலக நாகரீகத்திலும், செல்வப் பெருக்கி



லும் மற்ற தேசங்களினும் மிக்க தாழ்ச்சி பெற்றிருக்கின்றதென்றும், அவ்வித தாழ்ச்சியினின்றும் விடுபட்டு உன்னதமடைய வேண்டுமானால் இந்தியா தேசம் இயன்றவரையில் கைத்தொழில் தேசமாகவும் நாளடைவில்ஆகவேண்டுமென்பது பலதேசாபிமானிகளின் அபிப்பிராயம். இவ்வபிப்பிராயத்திற்கு சுதேசமித்திரன் இணங்கியதேயன்றி வேறல்ல. அங்ஙனமிருந்தும் விவசாயத்தில் வேரூன்றிக் கிடக்குமிப் பல்லாயிர வருஷங்களாக இந்தியா இருக்கும் நிலைமையையும், சாகுபடிசெய்ய உள்ளங்கையளவு நிலமில்லாத ஜப்பான், அமெரிக்கா முதலிய தேசங்கள் கைத்தொழிலை அவலம்பித்தபின் அடைந்த மகாஉன்னத நிலையையும் இதுமறந்ததென்னே? இந்தியாவின் விவசாயப் பொருள்கள் நமதுபசிநோயைத் தணிக்கவும், அன்னியநாட்டு கைத்தொழில்களுக்குதவி அவர்கள் பொக்கிஷங்களை நிரப்புவதற்குமட்டுமே உதவி வருகின்றன. கைத்தொழில் முயற்சியுள்ள மற்ற தேசங்கள் நமது தேசத்து உற்பத்திச்சாமான்களை சொற்பவிலைக்குப்பெற்று பின் தமது தொழில் வல்லமையால் பலவித வியாபார வஸ்துக்களாக அவைகளை மாற்றி நம்மிடமே விற்று நம்மை இருவழியிலும் நஷ்டமடைய செய்து வருகின்றன வென்பதை அறியாதார் யாரே! நமது தேசத்து உற்பத்திச் சாமான்களை நமது தேசத்திலேயே வியாபாரச் சாமான்களாக மாற்றி உள்நாட்டுக்கு உதவி அன்னிய நாடுகளுக்கு மனுப்பி நாம் செல்வ வந்தர்களாய் வாழவேண்டுமென்பது நமது கோரிக்கையல்லவா? நமது விளை நிலங்களின் பூச்சாரம் நாளுக்குநாள் க்ஷீணித்து வருவதாலும், விவாசாயக் கருவிகளாகிய கலப்பை, கவலை, கொழு, உழுபடை, முள் முதலியவைகள் இன்னும் பூர்வீக மாதிரிகளாகவேயிருந்து வருவதாலும் நமது பிரயாசைக்கும், பணச் சிலவிற்கும் தக்க பிரதிப் பிரயோசனமாக மாசூல்கள் கிடைக்கவில்லை யென்னும் குறைகள் உண்மையல்லவா? 'மீசைக்கும்ஆசைகூழுக்கும்ஆசை' என்பதுபோல இந்தியா விவசாய அபிவிர்த்தியிலும், கைத்தொழி லபிவிர்த்தியிலும் ஆசைப்பட்டுக்கொண்டு அதனை நிறைவேற்று மார்க்கங்களைத் தெரியாமலும், தப்பு வழிகளில் பிரயத்தனப்பட்டு சிலபல வருஷங்களாக அல்லல் படுகின்றதென்பதும் உண்மையல்லவா? சுருங்கச் சொல்லில், நமது நாட்டில் நாமே நல்ல சாகுபடி செய்து நெல் அறுக்கவும், நமது இயந்திரங்களைக்கொண்டு அந்நெல்லைக் குத்தவும், தவிடுபோக்கவும், மா அரைக்கவும்; நல்ல பருத்திகளை விளைவித்து, பஞ்செடுத்து, அப்பஞ்சை பற்பல தாவாரியான நூற்களாக உற்பத்திசெய்து வஸ்திரங்கள் நெய்யவேண்டு மென்றும்; அவைகளுக்கான இயந்திரங்களை நாமே செய்து கொள்ள வேண்டுமென்றும்; நமது தேங்காய் கொப்பரைகளை துண்டிட்டு, இயந்திரத்திலிட்டு சேதப்படாமல் ஆட்டி எண்ணை யிறக்கி அவ்வெண்ணையை நாமும் உபயோகித்து அயல்நாட்டுக்கு [illegible]யாகவும், மெழுகுவர்த்தி, சோப்பு முதலிய வஸ்துக்களாகவும் மாற்றி அனுப்ப வேண்டுமென்றும், அவைகளுக்கான இயந்திரங்களை நாமே செய்து கொள்ளவேண்டுமென்றும், இன்னுமிவைபோன்ற பலவற்றையும் செய்து லாபம் பெறவேண்டுமென்கிற பேராவா நமது நாட்டாரைப்பற்றி பிடிக்கின்றதன்றோ? இவைகளனைத்தையும் சுதேச மித்திரன் மறுக்கக் கூடுமோ?

இந்தியப் பிரஜைகள் ஒரே சமூகத்தாராக விளங்கி ராஜ்ய சுதந்திரங்கள் பெறவேண்டு மென்கிற பெருத்த நோக்கங்கொண்ட சுதேச-மித்திரன், பொதுவாக விவசாயத்தைப் பற்றியும் நெசவுத்தொழிலைப் பற்றியுமே பேசாது, அவைகளுக்குரியராக அதன் புத்திக்குப் புலப்படுகிற பஞ்சம ஜாதியரையும், நெசவுக்காரர்களையும் குறிப்பிட்டு அநுதாபங்காட்டி எழுதியதும் ஆச்சரியமே. ஒரு சமூகத்தாருக்கு கவர்ன்மெண்டார் விசேஷ நன்மை செய்தால் மற்ற சமூகங்களுக்கு அவசியம்

வேண்டிய நன்மையைச் செய்தல் குறையும் என்று விஸ்வகர்ம கான்பரன்ஸின் நோக்கத்தைக் கண்டித்துப் பேசியது மேலே குறித்த இருஜாதியருக்கும் பொருந்தாது போனதேதோ? கவர்ன்மெண்டு செலவு செய்யும் பணம் ஜனங்கள் அனைவரும் கொடுக்கும் பணம் என்று வற்புறுத்தவந்த இப்பத்திரிகை அவ்விஷயத்தை இவர்கள் பால் மறந்ததென்னே? பஞ்சமர்களும், நெசவுக் காரர்களும் தேசத்துப் பொருள் நிலைமைக்கு அடிப்படையாவார்களானால், இவ்விருஜாதியர்களின் தொழிலுக்கும், தொழில் விர்த்திக்கும் பொதுவாக இந்தியாவின் கைத்தொழிலபிவிர்த்திக்கும் விஸ்வகர்மவம்ஸத்தினர் ஆதிஅடிப்படை யானவரென்று மேலே காட்டிய பல முகாந்திரங்களால் சுதேசமித்திரன் இனிமேலும் அறியவேண்டுகிறோம். 'ஓதுவாரெல்லாம் உழுவார் தலைக் கடையில், உழுவா ரெல்லாம் கருமார் உலைக்கடையில்' என்றும் சாதாரண உலக வசனத்தை மட்டும் சுதேசமித்திரன் கவனித்தால் உண்மை நன்றாய்விளங்குமே. இதனால் இரும்பு வேலை அபிவிர்த்தி யாகாதவரையில் ஒரு வேலையும் உலகில் நடைபெறுதென்பது பெறப்படுகின்றதல்லவா? இது நமது சுவானுபவமல்லவா? அவ்வேலையை முதலில் சீர்திருத்தவேண்டி அதற்கான ஒத்தாசைகளைக் கவர்ன்மெண்டாரை செய்து கொடுக்கச் சொல்லி இந்தியாவிலேயே பற்பல இயந்திரங்களைச் செய்து பலவித தொழில்களையும், விவசாயத்தையும் செவ்வனே நடத்தவேண்டுமென்கிற பெருத்தநோக்கம் கொண்டுழைக்க முன்வந்த விஸ்வகர்ம வம்சத்தினரின் முயற்சியைத் தாழ்த்திப்பேசி ஊக்கந்தளர்விக்க சுதேசமித்திரன் முற்பட்டது நியாமாகுமா? இதனை சுதேசமித்திரனே சற்று சாவதானமாகவும், பட்சபாதமின்றியும், புத்தி விசாலத்துடனும் சிந்திக்கட்டும். நமது கூற்று உண்மையானால் நமது பிரயத்தினங்களுடனிணங்கி தேசப் பொதுக்ஷேமத்திற்குஒத்துழைக்க வேண்டுகிறோம். நாம் அப்பத்திரிகையனிடத்து வைத்துள்ள பெருமதிப்பையும், நேசபான்மையும் கருதியே இவ்வளவும் எழுதினோமென அப்பத்திரிகை உணர விரும்புகிறோம். சுஜாதிப் பத்திரிகைகளை ஆதரியாதிருத்தல், தலைவர்களை நிராகரித்தல் முதலிய பல துர்க்குணங்கள் திராவிடாபிமானியில் எடுத்துக் காட்டியபடியே நமது வம்ஸத்தினரிடமிருப்பதால் அவைகளை நாம் நிர்ட்சங்கமாய் ஒப்புக்கொள்ளவே வேண்டும். அவைகளை ஒரேநாளில் ஒழிக்க முடியா விட்டாலும் நாளடைவில் ஒழிக்க முயல்வது நன்று. அப்பத்திரிகை எடுத்துக்காட்டிய நாணயவரிசையை சீர்படுத்துவதும், டைம்ஸ் பத்திரிகை எச்சரிப்பதுபோல் இருந்து வருவதும் நம்மனோரின் இன்றியமையாத கடனாம்.

இது இம்மட்டோடு நிற்க, இனி நமது இரண்டாவது கான்பரன்ஸைப் பற்றிய விஷயங்களைப் பிரஸ்தாபிப்போம். ஓர் கான்பரன்ஸ் கூடிய முகத்தால் நம்மைப் பற்றிய பலர் அபிப் பிராயங்களையும், நமது பிரயத்தினங்களின் வற்றத் தாழ்வையும் நாம் பல வழியிலும் தெரிந்துகொண்டது ஒரு பெருத்த சாதகமல்லவா? இஃதிப்படியிருக்க கான்பரன்ஸால் நன்மைகள் விளைவதில்லையென்று சொல்வது அறிஞர் வாய்ச்சொல்லாகுமா? குலாபிமானிகளே! சற்று கவனியுங்கள். நமது குலம் முன்னேற்றமடைந்து உலக நாகரீகம் என்னும் போர்முனையின் முன்னணியில் நிற்கவேண்டுமானால் எத்தனையோ இடையூறுகளை ஜெயிக்க வேண்டுமென்றும், எவ்வளவுகாலம் விடாமுயற்சியுடன் ஒற்றுமைத்து, எண்ணிறந்த கான்பரஸ்களைக் கூட்டவேண்டுமென்றும் மேற்குறித்த பத்திரிகைகளின் அபிப்பிராயங்களால் விசிதமாகிறதல்லவா? காலதேசப் போக்கையும், நாம் இனி வாழ்நாட்கழிக்கும் மார்க்கங்களையும், நமது ஆவசியகங்களின் வின்னவைகளொன்றும், உணர்ந்து அவ்வழிப்பற்றி குலத்திற்கு சாசுவதமான நன்மைகளைப் பயக்கக்கூடிய முயற்



சிகளை மேற்கொண்டு இவ்விதகான்பரன்ஸ்கள் கூடிப்பேசி, தீர்மானித்து, அதன்படி நடந்து கொள்ளாவிடில் நம்மனோர் பிற்காலத்தில் எத்தனை கோடி இடுக்கண்களை அநுபவிக்க வேண்டுமென்பதைநம்மனோர் சற்று ஊன்றிப்பார்க்க விரும்புகிறோம்.

ஆகையினால் இக்கான்பரன்ஸில் பேசப்படும் விஷயங்களும், செய்யப்படும் தீர்மானங்களும் காலதேசப் போக்கை அநுசரித்தும், சென்ற வருடத்திய கான்பரன்ஸில் செய்த தீர்மானங்களை யொட்டியும் இருக்கவேண்டுமென்பதே நமது தீர்க்க அபிப்பிராயம். இவ்வபிப்பிராயத்திற் கிணங்க நமது அறிவிற்கெட்டியசிலமுக்கியவிஷயங்களை தீர்மான ரூபமாகத் திரட்டி வரிசைக் கிரமப்படுத்தி கீழே வரைந்திருக்கிறோம். கான்பரன்ஸ் சென்டரல் கமிட்டியார் மற்றவர் அபிப்பிராயங்களையும் ஒத்திட்டுப் பார்த்து, இரண்டுநாட்களில் முடியக்கூடிய விஷயங்களை மட்டுமே யெடுத்துக்கொண்டு தீர்மானங்களை புத்தி கூர்மையுடனும், விசேஷ வாக்கு வல்லமையுடனும் உபந்நியசிக்கக்கூடிய புத்திமான்களை தேர்ந்தெடுத்து, அவர்கள் அபிப்பிராயங்களை முன்னாடியே பெற்று நமது இரண்டாவது கான்பரன்ஸை இனிது நிறைவேற்று வார்களென்றே நம்புகிறோம்.

தீர்மானங்களாவன:—

**1. இராஜவிஸ்வாசம்.**

விஸ்வகர்ம சந்ததியார் பிரிடிஷ் ராஜயாதிபத்தியத்திலுள்ள தங்கள் ஆழ்ந்த பக்தியையும், குன்றா விஸ்வாசத்தையும் இக்கான்பரன்ஸ் மூலமாய் தெரிவித்து, மாட்சிமை பொருந்திய நம் காருண்ய சக்ரவர்த்தியாரவர்கள் தொடுத்திருக்கும் யுத்தம் சீக்கிரம் முற்றுப்பெற்று ஜெயப்பிரதாபம் அடையவேண்டுமென்று பிரார்த்தித்தல்.

**2.**

இந்தியாவின் நன்மையைக்கோரி தமது சொந்த கஷ்ட நஷ்டங்களைப் பொருட்படுத்தாது, கீர்த்திப் பிரதாபத்துடனும், அநுதாபத்துடனும் தமது இந்தியப் பிரஜைகளை ஆண்டு வந்த நமது ராஜப் பிரதிநிதியாகிய லார்டு ஹார்டிஞ் பிரபு தமது உத்தியோகத்தினின்றும் நீங்குவதை முன்னிட்டு, விஸ்வகர்ம சந்ததியார் தங்கள் நன்றியறிதலையும், பேரபிமானத்தையும் தெரிவித்து அவர் சுகமே தமது ஜென்ம தேசமடைந்து, பூரண ஆயுளோடும், திடகாத்திரராய் இருக்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்தல்.

**3.**

லார்டு ஹார்டிஞ் பிரபுவிற்கு பதிலாக இந்திய ராஜப் பிரதிநிதியாகவந்திருக்கும் பிரடரிக் ஜான் நேபியர் திலீகர் பாரன் செம்ஸ்போர்ட் G. C. M. G. அவர்கட்கு இக்கான்பரன்ஸ் நல்வரவுகூறி, கைத்தொழிலுக்கு ஆதாரமான விஸ்வகர்ம சந்ததியாரின் முன்னேற்றத்தில் அபிமானம் வைக்க வேண்டுதல்.

**4,**

சென்ற வருடத்தில் நடந்தேறிய கான்பரன்ஸின் தீர்மானங்களையும், சில முக்கிய வேண்டுகோள்களடங்கிய ஓர் மனுவையும் சென்ற ஜூன் மாதம் சென்னை கவர்ன்மெண்டாருக்கு அனுப்பியதற்கு, நாளதுவரையில் கவர்ன்மெண்டார்யாதொரு பதிலும் அளிக்காததைக் குறித்து இக்கான்பரன்ஸ் வணக்கமாய் முறையிடுதல்.

**5. கல்வி.**

பல காரணங்களால் தங்கள் தொழில்கள் சீர்கெட்டு பல வருஷங்களாக வருந்தும் விஸ்வகர்ம சந்ததியார், தற்காலம் நடந்துவரும் யுத்தகாரணத்தாலும், பிற்காலம் அதனால் ஏற்படக்கூடிய பிரதிபந்தங்களாலும் தங்கள் தொழில்களை சரிவர செய்யக்கூடிய நிலைமையி லிரானமையால், அவர்கள் சிறுவர்களுக்கு சகெண்டெரி பாடசாலைகளிலும், உயர்தரப் பாடசாலைகளிலும் (சம்பளமின்றி சேர்த்துக்கொள்ளாவிட்டாலும்) அரைச்சம்பளம்பெற்றுக்

கொண்டு சேர்த்துக்கொள்ளும்படி கவர்மெண்டார் உத்திரவு விடுக்கவேண்டுமாய் இக்கான்பரன்ஸ் மன்ருடுதல்.

6.

1884 வருடத்திய சென்னைடிஸ்டிரிக்ட் முனிஸிபல் ஆக்ட் 118, 124 செக்ஷன்களில் காட்டியபடி, ஒவ்வொரு முனிசிபல் சங்கத்தாரும் தங்கள் நகரில் தொழிற் கல்வி சம்பந்தமாகவும், கைத்தொழில் சம்பந்தமாகவும் பாடசாலைகள் ஏற்படுத்த கூடுமாகையால், இயன்ற வரையில் ஒவ்வொரு முனிசிபல் சங்கத்தாரும் அந்நகரிலுள்ள விஸ்வகர்ம சந்ததியார்களின் கல்விநிலைமையை விசாரித்தறிந்து, அவர்களுக்கான சாதகங்களைத் தேட உத்திரவு அளிக்கவேண்டுமாய் இக்கான்பரன்ஸ் கவர்ன்மெண்டாரைப் பிரார்த்தித்தல்.

7.

ஒவ்வொரு முனிசிபல் நகரிலுள்ள விஸ்வகர்ம சந்ததியார்கள் தங்கள் வம்சச்சிறுவர்களுக்கு கல்வி, தொழிற் கல்வி, கைத்தொழில் முதலியவைகளைப் போதிக்கும் வசதிகளைச் செய்து தரவேண்டி முனிசிபல் சங்கத்தாருக்கு விண்ணப்பங்களனுப்பவேண்டுமாய் இக்கான்பரன்ஸ் தீர்மானித்தல்.

8.

எலிமெண்டிரி பாடசாலைகளில் நமது சிறுவர்களையும் சிறுமிகளையும் கட்டாயமாய் பெற்றோர்கள் வாசிக்கச் செய்யவேண்டுமென்றும் அப்படிச் செய்யாத பெற்றோர்களை கமிட்டியார் ரிபோர்டை அநுசரித்து ஜாதிக்கட்டுப்பாடுகளினின்றும் ஒதுக்கி வைக்க, ஒவ்வொரு சுஜாதிச் சபையாரும், நாட்டாண்மைக்காரர்களும் நியாயவழியாக முயலவேண்டுமென்றும் இக்கான்பரன்ஸ் தீர்மானித்தல்.

9. கைத்தொழில்.

தென்னிந்தியாவில், விஸ்வகர்ம வம்ஸத்தினர் மிகுதியாக வசிக்கும் முக்கியபட்டணங்களில் க்ஷீணித்துவரும் சுஜாதிக் கைத்தொழில்களை மேல்நாட்டுமுறைகளை அநுசரித்து நமது சிறுவர்களுக்கு தொழிற்படிப்பை போதிக்கும் பாடசாலைகளை ஸ்தாபிக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டாரைப் பிரார்த்தித்தல்.

10.

அன்னிய நாடுகளுக்குச் சென்று தொழிற் கல்வி கற்றுவரக் கொடுக்கிற கவர்ன்மெண்டு உபகாரச் சம்பளங்களை, சகெண்டரிபடிப்புள்ள நமது ஜாதிச் சிறுவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்றும், இந்த ஜாதியர் விஷயத்தில் உயர்தரக் கல்வி நிர்பந்தத்தைக் காட்டலாகாதென்றும், கவர்ன்மெண்டாரை இக்கான்பரன்ஸ் மீண்டும் வேண்டுதல்.

11.

நமது சுஜாதியர் ஆங்காங்கு தங்கள் கைத்தொழில்களை விர்த்திசெய்வதற்கும், நூதன தொழில்களை முயற்சிப்பதற்கும் சாதகமாக ஐக்கிய சங்கங்கள் ஸ்தாபிக்க வேண்டிய முயற்சிகளைச் செய்யவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் தீர்மானித்தல்.

12.

நமது ஜாதீய கைத்தொழில்களுக்கு இழிவையும், குறைவையும் விளைவிக்கக்கூடிய அன்னிய ஜாதியர்களுக்கு நமது தொழில்களை நம் ஜாதியர் போதிக்கக்கூடாதென்று இக்கான்பரன்ஸ் தீர்மானித்தல்.

13. ஆசாரசீர்திருத்தம்.

மதசம்பந்தமான விஷயத்தில் கவர்ன்மெண்டார் பிரவேசித்து விஸ்வகர்ம சந்ததியாருக்கு பிறப்பினாலும், இருத்திய காரணத்தாலும், தொன்றுதொட்டுவழங்கிவந்த 'ஆச்சாரி,' என்னுப்பட்டப்பெயரை அர்த்த ஹீனமும், சப்தஹீனமும், உரிமையுமற்ற 'ஆஸாரி' என மாற்றிய கவர்ன்மெண்டு உத்திரவை இனிகாலதாமத மன்னியில் ரத்துசெய்யும்படி சென்னை மாகாணக் கவர்ன்மெண்டாரையும் இந்தியா கவர்ன்மெண்டாரையும் இக்கான்பரன்ஸ் பிரார்த்தித்தல்.



14.

கவர்ன்மெண்டு முதலிய பல உத்தியோகத் துறைகளிலிருந்து வரும் சுஜாதியர்கள், தங்கள் சரியான பட்டப்பெயரை உபயோகிக்காமலும், திரிபடைந்த அபாசப்பட்டப் பெயர்களுக்கு சம்மதித்திருந்தாலும் இனி அவர்கள் தங்கள் தங்களிலாகா மேலதிகாரிகளுக்கு அதைக்குறித்து 3மாதத்திற்குள் விண்ணப்பஞ்செய்துகொள்ள வேண்டுமென்றும், அங்ஙனம் செய்யாவிடில், அடுத்துவரும் கான்பரன்ஸில் தீர்மானிக்கப்படும் ஜாதீயகண்டனைக்குட்படவேண்டி வருமென்றும் இக்கான்பரன்ஸ் தீர்மானித்தல்.

15.

நமது ஜாதிக்குரியபட்டப் பெயர்களை விட்டு அன்னிய பட்டங்களை வகித்துவருபவர்களை இனி அப்பட்டப்பெயர்களை காலதாமதமின்றி மாற்றி உரிமையான பட்டப்பெயரை வைத்துக் கொள்ள வேண்டுமென்று இக்கான்பரன்ஸ்தீர்மானித்தல்.

16.

நமது வம்சச் சிறுவர்களின் கல்வியபிவிர்த்தி, உபநயனம், விவாஹம் முதலியவைகளை காலத்தில் செய்விக்க வேண்டிய ஆவசியகம் பற்றி ஒவ்வோர் ஜில்லாக்களிலும் ஒருசுஜாதி பாங்கி(பண்டுபீஸ்) ஏற்படுத்தி ஏழை சுஜாதியர்களுக்கு உதவி புரியவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் தீர்மானித்தல்.

17.

நமதுவிவாகச் சடங்குகளில் வீண்செலவுகளை மட்டுப்படுத்த மேற்படி சடங்குகளை இரண்டு மூன்று நாட்களில் சுருக்கி முடிக்கவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் தீர்மானித்தல்.

18.

நமது வம்ஸத்தினர் சுபாசுபகருமங்களை இயன்றவரையில் சுஜாதிப் பௌரோகிதர்களைக்கொண்டு செய்துகொள்ள வேண்டுமென்று இக்கான்பரன்ஸ் தீர்மானித்தல்.

19.

நமதுவம்ஸதேவாலயங்களில்நமதுசுஜாதிப் பூஜகர்களை நியமித்து, பூஜா நைவேத்தியங்களை அவர்களைக்கொண்டு இனிநிறைவேற்றவேண்டுமென இக்கான்பரன்ஸ் தீர்மானித்தல்.

20.

நமது குலத்தில் அவதரித்து குல முன்னேற்றத்திற்கு பாடுபட்டுழைத்த புண்ணியசீலர்களின் ஞாபகார்த்தமாக கொண்டாட்ட தினங்களை நியமிக்க வேண்டுமென இக்கான்பரன்ஸ் தீர்மானித்தல்.

குறிப்பு:—இத்தீர்மானங்களின் நகலை முன்னாடியே கான்பரன்ஸ் சென்ட்ரல் கமிட்டியாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

பத்திரிகாசிரியர்.

***

இரண்டாவது விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் தஞ்சாவூர்,

## விளம்பரம்.

1916ஆு பிப்ரவரி 26வ விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் சென்ட்ரல் கமிட்டி பிரசிடெண்டு பிரம்மஸ்ரீ தி. மு. முக்கண்ணுச்சாரியாரவர்கள், வைஸ்பிரசிடெண்டு பிரம்மஸ்ரீ த. கு. சுந்தரமாச்சாரியாரவர்கள், ஜெனரல் சிகரட்டரி பிரம்மஸ்ரீ ஜி. கிருஷ்ண சுவாமி ஆச்சாரியாரவர்கள், கமிட்டி மெம்பர்கள் பிரம்மஸ்ரீ தே. மா. சொக்கலிங்காச்சாரியாரவர்கள் ஆ. கோவிந்தாச்சாரியாரவர்கள் தஞ்சைக்குச் சென்றிருந்து ஆங்கு ஒரு ஜெனரல் மீட்டிங் கூட்டி, அடியில்கண்ட உத்தியோக நியமனங்களையும், தீர்மானங்களையும் நிறைவேற்றினர்.

### உத்தியோகஸ்தர்கள்.

(1) தஞ்சை அரண்மனை எஸ்டேட் ஹெட் கிளர்க், பிரம்மஸ்ரீ T. V. இராஜலிங்காச்சாரியாரவர்கள் உபசாரணைக் கமிட்டி சேர்மன்.

(2) பிரம்மஸ்ரீ P. S. இராமஸ்வாமிப் பத்தரவர்களும், T. V. பழனியாண்டி ஆச்சாரியாரவர்களும் காரியதரிசிகள்.

(3) பிரம்மஸ்ரீ P. கோபாலசுவாமி பத்தரவர்கள், பொக்கிஷதார்.

(4) பிரம்மஸ்ரீ T. K. இராமஸ்வாமி ஆச்சாரியாரவர்கள், வாலண்டியர் காப்டன்.

### தீர்மானங்கள்.

(5) கான்பரன்ஸ் பிரசிடெண்டு ஸ்தானத்திற்கு குறிப்பிட்ட சில கனவான்களை எழுதிக்கேட்டு அபிப்பிராயம் தெரிந்து பின்பு பிரசுரப்படுத்துவதென தீர்மானிக்கலாயிற்று.

(6) இரண்டாவது விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் 1916ளு ஏப்ரல்மீ 22, 23உகளில் நடைபெறுவதென தீர்மானிக்கலாயிற்று.

(7) உபசாரணைக் கமிட்டி மெம்பர்களுக்கும், டெலிகேட்டுகளுக்கும் கட்டணம் முறையே ரூபாய் 3, 2 என ஏற்படுத்தப்பட்டது.

(8) வெளியூர் குலாபிமானிகள் விரைவில் டெலிகேட்டுகளைத் தெரிந்தெடுத்தனுப்ப வேண்டுமாய்க் கேட்டுக்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

(9) செண்ட்ரல் கமிட்டியார் தயாரித்தனுப்பும் கான்பரன்ஸ் தீர்மானங்களை குறிப்பிட்ட சுஜாதிகனவான்களுக்கனுப்பி அபிப்பிராயம் பெறுவதென தீர்மானிக்கப்பட்டது.

(10) உபந்நியசிக்க விரும்பும் சுஜாதிக் கனவான்கள் தாங்கள் பேசவிரும்பும் விஷயத்தை முன்னாடியே தெரிவிக்க வேண்டுமென தீர்மானிக்கலாயிற்று.

இரண்டாவது கான்பரன்ஸ் சம்பந்தமான (தீர்மானங்களை நிரணயித்தல் நீங்கலாக) மற்றவைகளுக்கு தஞ்சாவூர், காரியதரிசிகளுக்கு எழுதல் வேண்டும். கான்பரன்ஸ் ஆபீஸ் தஞ்சாவூர் தெற்குராஜ வீதி 2635 நெ. கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

ஜி. கிருஷ்ணஸ்வாமி ஆச்சாரி,
ஜெனரல் சேகட்ரி.

கான்பரன்ஸ் செண்ட்ரல் கமிட்டி ஆபீஸ்,
32, செக்கடித் தெரு, கும்பகோணம்.

## தஞ்சை விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் வாழ்த்துகவி.

இரட்டை யாசிரிய விருத்தம்.

சுந்தர வகண்ட பரிபூரண சதானந்த ஜோதிப்ர காசஞான
தங்கவ களங்க விஸ்வப்ரம்ம தேசிகன் தூய்யதிரு வடிபணிகுவாஞ்
சிந்தைமகிழ் கூர்ந்துகான் பரன்ஸினைப் பாலனஞ் செய்வதற் குரிமைபூண்ட
செண்ட்ரல் கமிட்டி நிருவாக சபையின் பிரசிடெண்டெனப் புகழ் படைத்த
கந்தமிகு புயசயில திடமுக்க ணாச்சார்ய காவலன் முயற்சியதனாற்
காசினியி லுபயகான் பரன்ஸினை நடாத்திடக் கரதலக் கங்கணமுடன்
சந்ததம் விளங்குமுப சாரணைக் கமிட்டியொடு சபையை நிலைநாட்டி வைத்த
தஞ்சைநகர் வளர்விஸ்வ கர்மகுலர் யாவருந் தகைமையுடன் வாழ்ந்தோங்கவே.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
Ex. முனிசிபல் கௌன்சிலர்.
விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் செண்ட்ரல் கமிட்டி
டிவிஷன் காரியதரிசியும்,
சாஸ்திர ஆராய்ச்சி சங்கத்தின் மெம்பர்,
பழனிஸ்தலம்.



## நூதன கற்பிதங்கள்.

### கொட்டைபாக்கு வெட்டும் யந்திரம்.

வங்காளத்திலுள்ள ஒரு இங்கிலீஷ்காரரும், மிஸ்டர் ஜோதீந்த்ர நாத் போஸ் என்ற வங்காளி கனவானும் ஒரு புதுப் பாக்கு வெட்டும் யந்திரம் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த யந்திரத்தைக்கொண்டு வெகு சீக்ரமாய் பாக்கை நறுக்கி விடலாமாம் நறுக்கின துண்டுகள் ரொம்ப சன்னமாகவும், ஒரே சீராகவும் இருக்குமாம். இந்த யந்திரத்தின் விலை ரூ. 10-இதை ஒரு மேஜையிலாவது நாற்காலியிலாவது வைத்து, மேஜை நாற்காலிகளில் அசையாமல் பிடித்துக்கொள்ளும்படி செய்யலாமாம். இது வார்ப்பு இரும்பால் செய்யப்பட்டிருக்கிறதாம். ரொம்ப உறுதியானதாம். எளிதில் கெடாதாம். இதன் நிறை 6¼-ராத்தல் இந்த யந்திரங்களை ஏராளமாகச் செய்வதற்காக இங்கிலண்டிலுள்ள பர்மிங்ஹாம் என்னும் பட்டணத்தில் ஒரு தொழில்சாலை கட்டப்பட்டு வருகிறதாம். கும்பகோணத்தில் ஸ்ரீ அய்யாக்கண்ணு பத்தரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் கொட்டை பாக்கு வெட்டும் யந்திரத்தை விர்த்தி செய்தால் மிகவும் லாபம் உண்டாகும்.

### டயிப் ரயிட்டர்கள் சில விலையாம்.

டயிப்ரயிட்டர் என்னும் அச்சுஎழுதும் வேலைக்காரருக்கும் வேலை அகப்படுவது கஷ்டமாய் போய்விடுமாம் நிக்கலோ டெஸ்லோ என்னும் ஓர் சாஸ்திரியார் ஓர்விதமான இயந்திரம் செய்திருக்கின்றனராம் அதினருகில் நின்று வேண்டியசங்கதிகளை டெலிபோனில் பேசுவதைப் போல்சொன்னால் அதற்குள் அமைக்கப்பட்டிருக்கும் ஞஸ்திரத்தினால் எழுதி விடுகின்றதாம்.

### கைத்தொழிலைச் சார்ந்தவை.

இந்தியாவில் மால்வான் என்ற ஸ்தலத்தில் மிஸ்டர் சிவராம தாதாபாய் என்பவர் தச்சுவேலையில் நிபுணராதலின் ஒரு சிறிய சுதேசி கடியாரத் தொழிற்சாலையை ஸ்தாபித்து 15 முதல் 20 ரூபாவரையில் மதிப்புள்ள கெடியாரங்களைச் செய்து வருகிறார் அவை நிரம்பத் திறமை பெற்றதாயிருக்கின்றவாம். ஆனால் கடியாரத்தின் ஸ்பிரிங்குகளை மட்டும் அவர் மேனாட்டில் பயிற்சி பெற்றவருமல்ல. கடல் கடந்து சென்றவருமல்ல. அவர் தொழில் விர்த்தியடைந்து வருகிறது. டாக்டர் மஹேந்திர சந்திர நந்தி என்ற மற்றொருகனவான் கோமில்லா ஜில்லாவைச்சேர்ந்த கலிக்கச்சு என்ற இடத்தில் தீக்குச்சிகளைச் செய்வதற்கான ஒரு புது யந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். ரெவிவனியூ போர்ட் மெம்பரொருவரும் அதைப் பார்வையிட்டுத் திருப்தியடைந்து அந்த யந்திரத்தை வேறெவரும் செய்யாதவாறு ரிஜிஸ்தர் செய்யும்படி வற்புறுத்தினார் சாஸ்திரஞானம் மட்டும் நம்மவர்க்கு உண்டாகுமாயின் எதையும் செய்ய சக்தி பெற்றவர்களாக ஆகிவிடக்கூடும்.

ஜப்பானில் நெசவுத்தொழிலை அப்பியசித்து வரும் ஸ்ரீ T. A. ராமஸ்வாமி ஆச்சாரியார் இன்னும் இரண்டொரு வருஷம் அங்கு தங்கி கடிகாரம் செய்யும் தொழிலைக் கற்றுவந்தால் விசேஷநன்மை யுண்டாகுமென்று நாம் நம்புகிறோம்.

தஞ்சாவூர் ஜில்லா போர்டார் ஒரு கைத்தொழிற்சாலையை அந்த ஜில்லாவில் ஏற்படுத்த விரும்பி, அதற்குக் கைத்தொழில் இலாக்கா டைரெக்டர், அப்படி ஏற்படுத்தும், பாடசாலையை யொட்டி ஒரு ஒர்க்ஷாப் Work Shop பும் இருந்தால்தான் கைத்தொழில் மாணவர்களுக்கு தொழிற்கல்வியை அநுபவ ரீதியாகக் கற்பிக்க முடியுமென்று தெரிவித்திருக்கிறார். நமது சுஜாதிச் சிறுவர்களுக்கு இது நல்ல சமயம்.



162027

சென்னை கவர்னர் சமீபத்தில் மதனபள்ளிக்குப் போயிருந்தபோது, அவ்விடத்து ஜனங்கள் ஒரு உபசரிப்புப் பத்திரம் வாசித்துக்கொடுத்தார்கள். அதில் அவர்கள், ஜனங்களில் பெரும்பாலார் விவசாயிகளாயிருக்கிறார்களென்றும், காலத்தில் மழை பெய்யாததால் ஜனங்கள் ரொம்ப கஷ்டப்பட வேண்டியிருக்கிறதென்றும், கிராமங்களில் சிறுவர்களுக்கு தச்சுவேலை நெசவு, கொல்லுவேலை முதலிய தொழில்களைக் கற்றுக்கொடுக்க தொழில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தால் விவசாயிகள் அந்தத் தொழில்களால் சௌக்கியமாய் ஜீவனம் செய்ய முடியுமென்றும் கவர்ன்மெண்டார் இந்தமனுவை அனுதாபத்தோடு கவனிக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்கள்.

அதற்கு கவர்னர், கைத்தொழில் கல்வியானது ரொம்ப அபிவிருத்தியடையவில்லையென்றும், இன்னும் கொஞ்சம் காலம் வரையில் பெரிய பட்டணங்களில் மாத்திரம் கைத்தொழில் கல்வி அபிவிருத்தி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் அதனால் தற்போது கிராமங்களில் கைத்தொழில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பது முடியாதென்றும், ஆனால் பொது ஸ்தாபனங்களில் எவையாவது கிராமங்களில் கைத்தொழில் பள்ளிக் கூடங்கள் ஸ்தாபிக்க முன்வந்தால், கவர்ன்மெண்டார் அவைகளுக்கும் பண உதவி செய்வதைப் பற்றி கவனிப்பார்களென்றும் சொன்னார். இந்த சம்பந்தத்தில் நமது முதல் விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸின் தீர்மானங்களை ஒத்திட்டுப் பார்க்க விரும்புகிறோம். விவசாயிகளே தங்கள் கைத்தொழில் பாடசாலைகளின் அவசியத்தை உணர்ந்து நிவர்த்தி தேடுவதானது நமது வம்சத்தினர்களின் முன்னேற்றத்திற்கு ஓர் சிறந்த அறிகுறியாகவிருக்கிறது. கைத்தொழிலபிவிர்த்தியைப் பற்றி இவ்வளவு அநுதாபங்காட்டிய கவர்னரவர்கள் விஸ்வகர்ம கான்பரன்ஸில் நிறைவேற்றிய தீர்மானங்களை கவனியாதிருந்ததேனோ?

***

# ஆயுர்வேத சாரம்.

### நெருப்புப் புண்களுக்கு சிகிச்சை.

தேகத்தின் எதாவது பாகத்தில் நெருப்புப்பட்டு, புண்ணானால், உடனே ஸோப்பைக்கொண்டு சுத்தம் செய்தால் வலிதீர்ந்து விடும். பிறகு புண்ணின்மேல் லின்ஸீட் எண்ணெயைத் தடவி அதன்மேல் கோதுமை மாவைத்தூவவும். லின்ஸீட் எண்ணெயும் மாவும் சேர்ந்து கெட்டியாகி உலர்ந்தவுடன் மறுபடியும் எண்ணெயும் மாவுமாகப் போட்டுவரவும். தோல் நன்றாய் மூடிப்போகும் வரையில் இப்படிப் போடவேண்டும். பிறகு அந்தமாவு தானே சுக்காய்ந்து கீழேவிழுகிற வரையில் அதை ஒன்றும் செய்யக்கூடாது. இப்படிச் செய்தால் புண் ஆறி புதுத்தோல் உண்டாகும்போது புண்ணின் தழும்பு ஒன்றுமிருக்காது.

### கழிச்சலுக்கு.

வயிற்றுக் கடுப்புக்கு புளியங்கொட்டையின் மேல் தோலை எடுத்து அரைத்து 2-கொட்டைப் பாக்களவு எடுத்து சமன் எடை வெண்ணெயில் கலந்து தினந்துக்கு மூன்று வேளையாக மூன்று நாள் சாப்பிடவும்.

(*Diarrhoea*) ஒரு கழஞ்சு வசம்பைத் தோல்கரியச் சுட்டு தண்ணீரில் அரைத்துக் கலக்கி மூன்று நேரம் கொடுக்கத் தீரும்.

வேறொரு பாகம். இரண்டு கழஞ்சு சுக்கு இளவறுப்பாய் வறுத்து, சரி இடை பழைய வெல்லஞ் சேர்த்து மைப்போலரைத்து, மூன்று நேரம் கொடுக்க தீரும்.

### இரத்தம் வருவதை நிறுத்த.

தேகத்தில் பெரிய இரத்தக்குழாய்கள் காயமடையாமல் ஸாமான்யமான இரத்தக்குழாய்களில் காயமேற்பட்டு இரத்தம் வந்தால், அதை நிறுத்துவதற்கு ஒரு தேயிலைக் கரண்டியளவு படிக்காரத்தூளை ஒரு



கோப்பை ஜலத்தில் கரைத்து காயத்தின் மேல் தடவவும். மூக்கில் இரத்தம் வந்தாலும் அந்தஜலத்தை உறிஞ்சினால்இரத்தம் வருவது நின்று போகும்.

காட்டாமணக்குச் செடியின் பால் எப்படிப்பட்ட காயங்களையும் ஆற்றும். அறுபட்டும், கிழிந்தும்போன இடங்களில், பாலைவிட்டு நன்றாகக் கட்டிவிட்டால் சேர்ந்துபோம். சீழ்பிடிக்காது, சீக்கிரம் ஆறிவிடும். கட்டை அவிழ்க்காமலே அதன் மேல் பாலை விட்டுவரவும்.

குறிவெட்டிப் பூண்டு என்னும் பிரமதண்டின் பாலும் இரணங்களை சீக்கிரம் ஆற்றும்.

### கொசுக்களை ஓட்ட.

கிணறுகளிலும் நீர்த்தொட்டிகளிலும் பெண் கொசுக்கள் முட்டையிடுவதுண்டு. நாப்தலீன் மருந்தை ஒரு பையில் போட்டுக்கட்டி கிணறு அல்லது தொட்டியில் ஜலத்துக்குமேல் தொங்கவிட்டால் பெண் கொசுக்கள் முட்டையிடவராவாம். அவைகளிலுள்ள ஜலம் நாற்றமெடுப்பதில்லையாம். ருசியும் கெடுவதில்லையாம்.

### கண் கட்டி.

குழந்தைகளுக்குக் கண்களில் கட்டி வெடிப்பதுண்டு. இதற்கு அடியில் கண்ட சிகிச்சை செய்யவேண்டும். போரிக் ஆஸிட் ஒரு தேயிலைக் கரண்டியளவு எடுத்து அரை பைண்ட் ஜலத்தில் கரைத்து வைத்துக்கொள்ள வேண்டும். சுத்தமாயும் மிருதுவாயுமுள்ள துணியை இந்த ஜலத்தில் நனைத்து கட்டியை அலம்பவேண்டும் தினந்தோறும் புதிய துணியை எடுத்துக் கொண்டு 3-தட்வை அலம்பவேண்டும். ஒவ்வொரு தட்வையும் கால் மணி ஸாவகாசம் அலம்பவேண்டும். இப்படிச் செய்தால் கட்டி சீக்கிரம் குணமடையும்.

### எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வதில் உபயோகம்.

தேகத்தின் தோலின்மீது எண்ணெய் படுவதால் தேகம் திடமாயும் நல்லதேஜஸுடையதாயு மாகின்றது. வாயு சமனமடைகிறது. தேகப்பயிற்சி செய்வதாலுண்டாகும் சிரமம் நீங்கும். எண்ணெய் தேய்ப்பதை பிரதிதினமும் அப்பியஸிக்க வேண்டும். தினம் எண்ணெய் தேய்த்துக் கொள்பவனுடைய தேகத்துக்குவியாதி காடாது அவன் மிகுந்த பலம், அழகியதோல், அழகிய அங்கம், அற்ப கிழத்தனம் இவைகளை யடைவான். பாதத்தில் எண்ணெய் தேய்த்துக்கொள்வது மிகவும் நலம். கண் பிரகாசப் பார்வையை யடையும். கால்களில் வெடிப்பு, கடிமுதலிய வியாதிகள் அணுகா. நலங்குமா முதலிய உடம்பு பொடிகளைத் தேய்த்துக் கொள்வதனால் தேஹநாற்றம், அழுக்கு வியர்வை முதலியவைகள் போகும். நலங்குமா கடைகளில் விற்கப்படும் ஸோப்பைக் காட்டிலும் மிகவும் குணம் வாய்ந்தது, விலையும் மலிவு.

இரவில் கண்விழித்தால் மயக்கமாயிருந்தால் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம்செய்து தலையை நன்றாக நனையுமாறு அதிக ஜலம் விட்டுக் கொண்டால் குணத்தைக் கொடுக்கும்.

***

# தொழிற் குறிப்புகள்

[இந்த தலைப்பின்கீழ் மநு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞ வகுப்பினர் தொழிற்குரிய அரிய விஷயங்களையும், அவற்றின் கைபாகம் செய்பாகமென்ற முறைகளையும் கூறப்பட்டிருக்கிறது. இவற்றுள் நிகழும் சந்தேகங்களைச் சுருக்கமாக தங்கள் பெயர் விலாசத்துடன் இப்பத்திரிகைக்கு எழுதிக்கொண்டால் விடையளிக்கப்படும் இவற்றை அநுமதிபெற்றே மற்றவர் பிரசுரிக்கவேண்டும்.]

### பொத்தான்செய்ய சேர்மானம்.

செம்பு 20 பாகம், நாகம் 12 பாகம், வெள்ளீயம் 40 பாகம், நிமிளை 128பாகம் முறையாய் சேர்த்து உருக்கி உபயோகிக்கவும்.

⁂

### வெள்ளிசாமான் சுத்திசெய்ய.

வெள்ளிசாமான்கள் நிறம் மழுங்கி கருத்துவிடின் அவற்றை ஒரு அலுமினிய பாத்திரத்தில் போட்டு, அவை நனையும் வரை தண்ணீர் வார்த்து, கொதிக்கவைத்து எடுத்தால் சுத்தமாக வெளுத்துவிடும். ஆனால் அலுமினிய பாத்திரம் கொஞ்சம் நிறம் மாறிவிடுமாகையால் அதனையும் சோப்புகொண்டு சுத்திசெய்யவும்.

⁂

### இரும்பை கல்லில் பதிக்க.

இரும்பின் கனத்திற்குதக்கபடி, கல்லில் வேண்டிய அளவு குழிபோட்டுக்கொண்டு அதில் இரும்புத் துண்டை நிறுத்தி, பின் 1 பாகம் நாகம், 2 பாகம் காரீயம் சேர்த்துருக்கி, பக்கத்தில் வார்க்கவும். ஆறினதும் பார்த்தால் கல்லில் இரும்பு கெட்டியாக பிடிக்கொள்ளும்.

⁂

### காகித தட்டுமுட்டுகள்.

கிழித்தெரியப்படும் காகித துண்டுகளை வென்னீரில் ஊரவைத்து வெந்தயம் சேர்த்து அரைத்து கூழாக்கிக்கொண்டு ஸீங்க குளோரைடு சேர்த்தால் பசைபோலாகும். அதனோடும் கொஞ்சம் உப்புசேர்க்கவும். பிறகு ஸ்பிரிட் விட்டு கழுவி வேண்டிய மாதிரி சாமான்களை செய்யவும். உலர்ந்ததும் அரக்கு வார்னிஷ் பூசிவிடின் தண்ணீரிலும் புழங்கலாம்.

⁂

### சோடா பவுடர்.

தாகசாந்திக்கு சாப்பிடும் சோடாவை நமது வீட்டிலேயே அப்போதைக்கப்போது புதிதாக செய்துக்கொள்ள வேண்டுமானால் 30 அல்லது 32 கெல்லெடை பை கார்பனேட் சோடாவை நீலகாகிதத்திலும், 25 அல்லது 26 கெல்லெடை டார்டாரிக்ஆசிட்டை வெள்ளைகாகிதத்திலும் மடித்து வைத்துக்கொள்ளவும். வேண்டும்போது அரை டம்ளர் தண்ணீரில் இரண்டு பொட்டணத்தையும் ஒன்றின்பின்னொன்றாகப் போட, உடனே பொங்கும். பிறகு சாப்பிடவும்.

⁂

### வர்ணத்தின் நாற்றத்தை மாற்ற.

வர்ணம் பூசிய வீடு அல்லது அறையில் ஒரு தொட்டி தண்ணீரில் ஒரு கைப்பிடி வைக்கோலை போட்டு வைத்துவிட்டால் வர்ண நாற்றம் மாறிவிடும்.

⁂

### தேங்கா எண்ணை வாசனை மாற.

எண்ணையை கொதிக்கவிட்டு புதிதாய் எரியவிட்ட கரியை 24 மணிநேரம் போட்டுவைக்கவும். பிறகு கொஞ்சம்சூடேற்றி 4 அல்லது 5 தடவை கம்பிளி துணியிலாவது, வடிகட்டும் காகிதத்திலாவது வடிகட்டிக்கொள்ளவும்.

⁂

### மண் எண்ணை துர்கெந்தம் போக்க.

பிளீச்சிங் பௌடரை எண்ணையில்போட்டு குலுக்கி, கொஞ்சம் ஹைட்ரோ குலோரிக் ஆசிட்சேர்த்து, சுண்ணாம்புத் தூளுள்ள மற்றொரு பாத்திரத்தில் ஊற்றி மறுபடியும் குலுக்கவும். குலோரைன் ஆவி எல்லாம் நீங்கியவுடன் தெளிந்த எண்ணையை வடித்துக்கொள்ளவும்.

⁂

### தேக்கு முதலிய மரச்சாமான்களை நூக்கமரம்போல் செய்ய.

செம்மரத்தூளை அரைத்து விழுதாகச் செய்துகொண்டு ஒரு செப்புப் பாத்திரத்தில் வென்னீரில் கரைத்து அடுப்பேற்றி நன்றாய் கொதிக்கும்போது கொஞ்சம் மயில்துத்தம் சேர்க்கவும். பிறகு இந்த கியாஷயத்தை சூடு ஆறுவதற்குமுந்தியே மரசாமான்களின்மேல் 3 அல்லது 4 தடவை நிழல் காய்ச்சலில் பூசுவது நன்று. பிறகு கீழ்சொல்லுவதைப்பூசினால்தான் நூக்கமர நிறம்வரும். அப்படி நிறம் மாறி வருகிறவரையில் 2 அல்லது 3 பூச்சுகள் பூசவேண்டும். கொஞ்சம் காடியில் கொல்லன் பட்டரையில் விழும் இரும்பு சிதள்களையாவது, அரப்பொடியையாவது புட்டியில் போட்டு இரண்டொருநாள் வெயில்பாடமாக எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். இந்த பூச்சு உலர்ந்தபின்பு வழக்கம்போல வார்னீஷ் போட்டுக்கொள்ளலாம். இது ஒரு சிறந்தமுறை.

⁂



## பலகுறிப்புகள்.

தஞ்சையில் நடைபெறும் இரண்டாவது விஸ்வகர்ம கான்பரன்ஸைப் பற்றி இச்சஞ்சிகையில் எழுதப்பட்டிருக்கும் நீண்டதோர் வியாசத்தை நமது வாசகர்கள் பன்முறையும் வாசித்துப் பலனடைவார்களென நம்புகிறோம்.

⁂

இக்கான்பரன்ஸை யொட்டி ஓர் கைத்தொழில் காட்சியும் ஏற்படக்கூடுமாகையால், கைத்தொழில் நிபுணர்களாகிய விஸ்வகர்ம வம்சத்தினரும்,மற்றவர்களும் தங்கள் காட்சிப் பொருள்களை சேகரித்து தயாராக வைத்திருப்பது நலமாகும்.

⁂

இரண்டாவது விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸை அநுசரித்து பண்டித கான்பரன்ஸ் ஒன்றும் வெகுவாக நடைபெறுமென நம்ப இடந்தருகிறது. இவ்விஷயம் பரமபண்டித சிகாமணிகளாகிய பிரம்மஸ்ரீ ஜோசியர் முத்தாரியர், C. R. சுப்பராய ஆச்சாரியார், அத்தியாபக லிங்காச்சாரியர் பா. சுப்பிரமணிய சாஸ்திரிகள் முதலியோர்களுக்கு மிக்க குதூகலத்தை விளைவிக்குமென நம்புகிறோம். இவ்விற்பன்னர்கள் தவராது இக்கான்பரன்ஸுக்கு விஜயமாயிருந்து தங்கள் குலாபிமான பெருந்தகைமையை நிலைநாட்டுவார்களென்பது நம் தேற்றம்.

⁂

நாம் காட்டிய 12-வது தீர்மானத்தை சற்று சுருக்கி விளக்குவோம். இங்கு அன்னிய ஜாதியர் என்பது, கைத்தொழிலுக்குப் பொருத்த மற்றவர்களென்று ஒருவாறு குறிப்பிட்டாலும், அது குலத்திலேயே உற்பத்தியாகும் குண்டகோளகர்களையும் குறிப்பிக்கும். இதனை அதிகம் விரித்துச் சொல்ல மனமில்லை. ஊகித்தறியா விட்டால் குணமில்லை.

⁂

இக்கான்பரன்ஸின் கவனத்திற்குளடுத்துக் காட்டியிருக்கும் 19-வது தீர்மானத்தின் அவசியத்தையும் சற்று விளக்குவது நம் பொறுப்பாகிறது. நமது சுஜாதிப் பூஜகர்கள் நியமிக்கப்பட்டால் அவ்வாலயங்களை விஸ்வகர்மஜாதியார் பூஜிப்பரோ என்னும் ஆசங்கை பலருக்கும் உண்டாகலாம். ஆருஷேயப் பௌரோகிதர்களைக்கொண்டு நடத்திவந்த சுபாசுப கருமங்களை பௌருஷேயர்களை கொண்டு தற்காலம் நடத்திவருவதில் நமக்குயாதொரு கஷ்டமும் நேரவில்லை யென்பது நமது அநுபவ சித்தம். ஆருஷேயர்கள் அவ்விதபிரயோஜனங்களில் காத்திருந்து தட்சணைகளைத் திருப்தியுடன் வாங்கிச் செல்வது தற்காலப் போக்கு. அல்லாமலும் குயவர், பூசாரி, பறையர், வள்ளுவர் முதலியவர்களைப் பூஜகர்களாய்க்கொண்ட எத்தனையே ஆலயங்களில் பல ஜாதியர் வணங்கிச் சென்று வரக் கண்டிருந்தும், ஆலய வழிபாட்டை நிலைநிறுத்திய பௌருஷேய பூஜகர்களை அன்னியர் நிராகரிப்பார்களென நம்புவதற்கில்லை. உத்ஸவாதிக்கட்டளைகளில் சில சுஜாதி ஆலயங்களுக்கு இது காரணமாக சிறிது கஷ்டம் வரினும் விஷயத்தினால்

வினையும் பெருத்ததோர் நன்மையை உத்தேசித்து அவைகளைப் பொருட் படுத்தல் அநுசிதமாகத் தோன்றுகின்றது.

***

இக்கான்பரன்ஸின் கவனத்திற்கு மற்றொரு முக்கிய விஷயத்தையும் எடுத்துக் காட்டுவோம். இங்கிலாந்தில் தொழிற்கல்விப் பாடசாலைகளில் செய்யப்படும் நாற்காலி முதலிய பொருள்கள் அப்போதைக்கப்போது விற்கப்படாமல் வருஷத்திற்கொருதடவை ஏலம் போடப்பட்டு வருவதால் வியாபாரநோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதொழிற்சாலைகளுடன் அவைகள் வியாபாரப்போட்டியாக வருவதில்லை. இந்தியாவிலோ கைத்தொழில் பாடசாலைச் சாமான்களும், ஜெயில் உற்பத்தி சாமான்களும் கடைக்கு அப்போதைக்கப்போது வந்துவிடுவதாலும், கவர்ன்மெண்டு, ரயில்வே முதலிய பல பிரபல குத்தகைக் காரர்களைச் சென்றடைவதாலும், நமது கைத்தொழிலாளர்களும், தொழிற் சாலைகளும் உறக்கங் கொள்ள வேண்டி வருகிறது. இதனைக் குறைக்கும் மார்க்கங்களை தேடுவது அவசியமல்லவா?

***

வித்தியாவிஷயமாகப் பரிசீலனை செய்வதற்கு கவர்ன்மெண்டாரால் இம்மாதம் 10உ கூட்டப்பட்ட கான்பரன்ஸின் கவனத்திற்குப் பல விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. கல்வியில் முன்னேற்றமடையாத வகுப்பார்களின் ஜாபிதாவைப் பற்றியும், பொதுஜன ஆதரவில் நடத்தப்பட்டுவரும் எலிமெண்டரி பாடசாலைகளிலும், சகெண்டரிபாடசாலைகளிலும் படிக்கச்சேரும் இவ்வகுப்பார்களுடைய பிள்ளைகளின் சம்பளத்தொகையைக் குறைப்பதைப் பற்றியும், சம்பளம், இல்லாமல் சேர்த்துக்கொள்ளும் விஷயமாக ஏற்பட்டிருக்கும் விதிகளைப்பற்றியும் கவனிப்பதும் அவைகளில் ஒன்றாகும். நமது வகுப்பினர் விஷயமாக இக்கான்பரன்ஸ் கவனம் செலுத்தி அநுகூலமான ஓர் தீர்மானத்தைக் கவர்ன்மெண்டாருக்குச் சிபார்சு செய்வார்களென நாம் நம்புவது வீணாகாது.

***

இனி நம் பத்திரிகையைப்பற்றி இரண்டொரு சங்கதிகளை தெரிவிக்க வேண்டுகிறோம். நம் பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாக விருக்கும் குலாபிமானிகளில் சிலருக்கு நம் சந்தாபாக்கியைக் கேளாமல் எத்தனைகாலம் பத்திரிகைகளை அனுப்பி வந்தாலும் அவைகளை சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார்கள். சந்தாபாக்கியை வசூலிக்க எண்ணி வி. பி. போஸ்டுவழியாக அனுப்பி விட்டாலோ அவைகளை காலதாமதமன்னியில் திருப்பி விடுகிறார்கள். நமது ஜாதியர்களுக்கு சுஜாதிபத்திரிகாபிமானம் இல்லை யென்று திராவிடாபிமானிப் பத்திரிகாசிரியர் சொல்லியது நம் அநுபவத்தால் உண்மை யென்று ஏற்படவில்லையா? சுஜாதிப் பத்திரிகைகளை ஆதரியாதவரையில் நமது குலோத்தாரணப் பிரயத்தினங்களும், குல முன்னேற்றமும் கீழ்நோக்கிச் செல்லு மென்பது சத்திய வசனம். குலாபிமானிகளே! நமக்கு உண்மையான குலாபிமானம் உண்டாவதெப்போது? ஐயோ!

***

பத்திரிகையைப் படிக்க ஒழிவில்லை என்னும் போக்குக்காட்டி சில புண்ணிய புருஷர்கள் பத்திரிகைகளைத் திருப்பி விடுகிறார்கள். பத்திரிகைபடிக்க நேரமற்றவர்கள் தொழிலில் மிக்க ஆர்வமுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. காலமே பணமென்னும் அத்தகையோர் குபேர சம்பத்துடையவர்களாயிருக்க வேண்டு மல்லவா? இப்படி சாக்குப்போக்குகளை காட்டி பத்திரிகையைத் திருப்பிய நம் அருமைக் குலாபிமானிகளின் ஜாப்தாவைப் பார்த்தால் அவர்கள் வறுமை வாய்ப்பட்டவர்களாகவே யிருக்கிறார்கள் அந்தோ! இதென்ன விபரீதம்.

***



இங்கு நமது நேசர்களைப் பற்றி சிறிது பிரஸ்தாபிக்க வேண்டியிருக்கிறது. நெட்டாலில் பாரிஸ்டராக இருந்துவரும் நம் குலாபிமானச் செல்வர் மிஸ்டர், ஓரத்தினப் பத்தரை அவர்களைச் சமீபத்தில் சில துஷ்டர்கள் இரவில்தாக்கி ஸ்மரணையற்றுப் போகச் செய்தனரென அறிந்து மிக்க விசனிக்கலானோம். இது காறும் அவர் பூரண சௌக்கியம் பெற்றிருப்பரென நம்புகிறோம். இக்கனவான் நமது அநுதாபத்தையும் தயைசெய்து ஏற்றுக்கொள்வாராக.

***

பிரஜாநுகூலன், திராவிடாபிமானி என்னுமிரு உயர்தரப் பத்திரிகைகளின் ஆசிரியராகிய ஸ்ரீமான், இராமாநுஜலு நாயுடவர்களின் பல இலக்கிய முயற்சிகளுக்குப் பேருதவியாயிருந்த அவரது ஒரே அருமை தமைக்கையார் தேகவியோகமானது தெரிந்து மிக்கவிசன முறுகின்றோம். நமது பரிதாபத்தையும், அநுதாபத்தையும் பெற்று நாயுடவர்கள் இப்பிரிவாற்றாமையைச் சகித்து மனம் சலிப்படையாதிருக்க இறைவனருள்வாராக.

***

நம் பத்திரிகை, பாடசாலை, சபை, அச்சுக்கூடம் முதலிய எவ்வித பிரயத்தினங்களுக்கும் ஊன்றுகோலாக நின்றவரும், எமதுமற்ற லௌகிக முயற்சிகளுக்குற்றதுணையாயிருந்துதவியவரும் தமிழ்மாதின் புத்ரனாயுற்றவரும், பல வித்வான் களுக்கும் ஆசிரியராயவரும், சாஸ்திர ஆராய்ச்சி வல்லவரும், சைவம், வைணவத்தில் சமதிருஷ்டியுள்ளவரும், தம்மை வந்தடுத்தவர்களை கையெடுத்து விட்டவரும், எமது அத்தியந்த நண்பருமாகிய, வித்வான். ஸ்ரீமான் ஆ. மே. சென்னகேசவலு நாயுடவர்கள் சென்ற 4-ந்தேதியன்று பரமபதமேயினரென்பதை மிக்க துயரத்துடன் வெளியிடுகின்றோம். இனி இவரைப்போலுற்ற துணையை பெறலெந்நாளோ!

***

நம் பத்திரிகையின் மதிப்புரையை விரும்பி நமது பார்வைக்கு அநேக பத்திரிகைகளையும், புத்தகங்களையும் அனுப்பிவரும் ஆசிரியர்கள் பால் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அவைகளை உடனுக்குடன் பரிசீலனை செய்து நமது மதிப்புரையை இனி வெளிப் படுத்த வேண்டி மூன்று வித்தியாரத்தினங்களடங்கிய ஓர் பரிசீலனைக் கழகத்தை நம் பத்திரிகையைச் சார்ந்து ஏற்படுத்தியிருக்கின்றோம். அவர்கள் ஏகோபித்த அபிப்பிராயங்கள் நம்பத்திரிகையில் அடுத்த சஞ்சிகைமுதல் வெளிவரும். இதனை ஆசிரியர்கள் தயை செய்து குறித்துக்கொள்வாராக.

***

'சில ஐய வினாக்கள்' என்னும் தலைப்பின்கீழ் பிரசுரித்திருப்பனவற்றால் நம்பத்திரிகை எம்மட்டிலும் நம் குலத்தினர்க்கு உதவி புரிந்து வருகின்றதென்பது தெற்றென வெளிப்படும். சுஜாதியரேயன்றி விஜாதியரும் நமது பத்திரிகையில் நாட்டம் வைத்திருப்பது நன்றிபாராட்டற் குரியதேயாம்.

***

1916௵ ஏப்ரல்௴ 22, 23உகளில் தஞ்சையில் நடைபெறப்போகும் விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் சமயத்தில் நமது விஸ்வகர்ம புத்தகசாலையை அவ்விடத்தில் கொண்டுவந்து வைத்தால் நம்மவர்களுக்குவேண்டிய புத்தகங்களை வி. பி. ஸ்டாம்பு செலவுகளில்லாமல் சகாயமாகப் பெற்றுக்கொள்வார்களென்பதாக உத்தேசம். இக்கான்பரன்ஸ் சமயத்தில் விஸ்வகர்ம சந்ததியார்களுக்கு வேண்டிய புத்தகங்களை அவ்விடத்திலேயே பெற்றுக்கொள்ளலாம்.

***

நெட்டால் டர்பன் முதலிய இடங்களில் வாசமாயிருக்கும் நமது விஸ்வகர்ம சந்ததியார்கள் நம் விஸ்வகர்ம குலோபகாரியை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்கிற ஊக்கத்துடன் தற்சமயம் சிலர்கள் சந்தாநேயர்களாகச் சேர்ந்து பத்திரிகையை வாங்கி வாசித்து வருகிறார்கள் இது விஷயத்தில் காரியதரிசி எஸ். கெ. பத்தரவர்கள் முயற்சித்து அதிக சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பதில் கவனம் செலுத்துவார்களென்று நம்புகிறேன்.

## கடிதம்.

### மகாபிரகடனம்.

இதனால் எல்லா குலாபிமானிகளுக்கும் தெரிவிப்பது யாதெனில், நம்குலத்தைச் சீர்திருத்த வேண்டுமானால் பத்திரிகையொன்றே போதுமென்றெண்ணுவது முழுத் தீர்ப்பாகாது. அதைப்பற்றிய சிலவற்றில் இதுவும் ஒன்றாகும். இன்றொரு முக்கியமான விஷயம் என்னவென்றால்:—

இத்தமிழ் தேசமானது பண்டைகாலந் தொடங்கிப் பிரிந்து வழங்கப்பட்டு வரும் மண்டலங்கள் நான்கிற்கும் நான்கு குருஸ்தானங்கள் வரையறுக்கப் படுவதாகும். இப்படிச்செய்வதால் பிரதி மண்டலமும் அடிக்கடி குலவிசாரணைக் கிரமமாய்ச் செய்யப்பட்டு நாமெல்லாங்கூடிச் சபைகள் சேர்ந்து வெகு பிரயாசைப்பட்டு முடிக்குங் காரியாதிகளும் வெகுசுலபமாய் முடிவுபெறும் கால் நின்றுபோன ஸ்தானங்களுக்கு அவற்றின் பந்து வர்க்கத்திலேயே புனஸ்வீகாரஞ் செய்வது ஞாயமும், சர்வோத்கிருஷ்டமும் நிராட்சேபகரமுமானதாகும். இவ்வபிப்பிராயத்திற்கு பிரம்மஸ்ரீ மீனாக்ஷிபுரம் ஜோசியம் முத்தாச்சாரியாரவர்களும் ஒத்தவராயிருக்கிறார். ஆகையால் குலாபிமானிகள் இதை யோசித்து தங்கள் அபிப்பிராயங்களை இப்பத்திரிகை வாயிலாய் வெளியிடுவார்களென்று பிரார்த்திக்கிறேன்.

அத்தியாபக லிங்காச்சாரி,
கணியம்பாடி.

## வர்த்தமானக் குறிப்புகள்.

### வ்பசாரத்தால் கொலை.

திண்டிவனத்தில் ஒரு பண்டாரம் ஒரு உயர்குல ஸ்திரீயை உபநாயகியாக வைத்துக்கொண்டிருந்தானாம். அது பலருக்கும் சகிக்காமல் அவனைக்கொன்று அவனது உடலை ஒருபக்கம் தலையை மற்றோரிடத்தில் எறிந்து விட்டார்களாம். இது செய்தவர்களென்று சிலர் பிடிபட்டிருப்பதில் அதில் மூவர் பிராமணர்களாம்.

### மலைப்பாம்பு.

மலேயா நாட்டிலுள்ள ஒரு ரப்பர்த் தோட்டத்திலுள்ள கானில் சிலவாரங்களுக்குமுன் 13-அடி நீளமும் $\frac{3}{4}$-அடி சுற்றளவுமுள்ள ஒருமலைப்பாம்பு வீழ்ந்துகிடந்தது அதனையொருவன் கொன்று வெளியே கொண்டுபோக ஒரு சீனன் அதனை கறிசமைத்து சாப்பிடவிரும்பி $1\frac{1}{2}$ வெள்ளிக்கு வாங்கிக்கொண்டானாம். சீனர் பொதுவாக நாற்கால் பிராணிகளுள் கட்டிலும் பறக்கும் வஸ்துக்களில் பட்டமும் நீங்கலாக மற்றெவற்றையும் புசிக்கப் பின்னிடார் என்று இச் சமாச்சாரத்தை சேலம் திராவிடாபிமானிக்கு எழுதிய நிருபர் கூறுகிறார்.

### பனிக்கட்டி விபத்து

ஆஸ்ட்ரியாவைச் சேர்ந்த டைரல் மாகாணத்திலுள்ள மலைகளிலிருந்து சரிந்து விழுந்த ஒரு பிரம்மாண்டமான பனிக்கட்டியால் ஜனங்கள் நிறைந்த ஒரு கூடாரம் அழிந்து போயிற்று. அதனால் 50 பேர் இறந்தனர். 10 பேர் காயமடைந்தனர், 30 பேர் காணாமற் போயினர்.

### யானை.

சில தினங்களுக்குமுன் திருமங்கலம் தாலூகா சாப்டூர் ஜமீனுக்குச் சமீபத்தில் சுமார் 40-யானைகளும், 10 குட்டிகளும் வந்தன. அவ்விஷயத்தை ஜில்லாக் கலெக்டருக்குத் தெரிவிக்க அவர் காட்டிலாகா அதிகாரிக்குத் தெரிவிக்க உத்தரவு செய்தார். குடிஜனங்களும் பேரையூர் துரையவர்களும் வேட்டுகள் போட்டு யானைகளைச் சுமார் 5 மயிலுக்கு அப்பால் துறத்தினார்கள். அந்தயானை ஊரிலுள்ள தென்னை பனை முதலியவற்றைப் பிளந்து அவற்றின்சத்தைத் தின்றன. டை யானைகளைக் கண்டு பயந்து சுமார் 5, 6, பேர்கள் மரணமடைந்திருக்கிறார்கள். இனி எப்படியோ தெரியவில்லையென்று நமது சிவகாசி நண்பர் ஒருவர் எழுதுகின்றார். அவர் கூறுவதில் யானைகளைக் கண்டு பயந்து சுமார் 5, 6, பேர்கள் மரணமான விஷயம் நமக்கு விளங்கவில்லை.

உ

ஸ்ரீமத் விராட் விஸ்வப் பிரஹ்மணே நம:

# விஸ்வகர்ம குலோபகாரி.

மலர்-3. இராக்ஷஸ௵ சித்திரை௴ 1916௵ ஏப்ரல்௴ இதழ்-4.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
23 APR 1916
MADRAS.

## மெய்ஞ்ஞான தீபம்.

### மானிடப் பேறு.

'எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதானியாதினுமரிது காண்' என்று தாயுமானப் பெருந்தகையாரருளியிருத்தலைச் சிரமேற்கொண்டுவிரைந்து சென்று தம்மாலியன்றளவு ஜீவர்கட் குதவி, பசிப்பிணியாற்றி, சற்கருமங்களியற்றி, சூது, பொய், வாதனை விடுத்து தக்ககுருபரன் தாளையடுத்து விசாரஞ்செய்து சித்த ஐயம் பெற்றுச் சிவன்முத்தியை யடைய முயன்று நிற்பவரே மானிடப்பிறப்பின் பயனைபெற்றவராவரென்பது ஒருதலையாம்.

***

### குருக்களினியல்பு.

'குருமார்க்க மில்லாத குருடருடன் கூடிக், கருமார்க்கத் துள்ளே கருத்தழிந்து கெட்டேனே' என்று பட்டினத்தடிகள் பகர்ந்ததையுன்னி, இடம்பாசாரமுடைய குருமார்களை யொழித்துப், பொன்னைப் பொருளைப் புகழை விரும்பாது தன்னையளிக்கும் சதாசாரியனை யடுத்து ஏற்கத்தக்கவாறு இதமாய்த் தொண்டு புரிந்து கருமபந்த மொழிவதொன்றையே கருதிவிருப்போர்க்கே சிவசொரூபமாந் தேசிகமூர்த்தியால் சும்மாவிருக்கும் சுகநிலையுள்ளபடி யுபதேசிக்கப்படுமாதலின், நெறிப்பட்ட சற்குருவாயிலாக நேர்வழியைப் பெற்றுய்தல் வேண்டும். மற்றோரை சென்றடைதல் வாணாளை வீணாக்குதலேயாம்.

***

### மனமடங்கு முபாயம்.

'மக்களின் பந்தமோட்சங்களுக்கு மனமே காரணமாம். மனம் விஷயத்தைப் பற்றுவதே பந்தமாம்; அதினின்றும் நீங்குவதே முத்தியாம்' என்று அமிர்த பிந்தோபநிஷத் கூறுவதை ஊன்றி கவனித்தால், நஞ்சினை நஞ்சாலும், இரும்பினை இரும்பாலும், அம்பினை அம்பாலும் கெடுப்பது போலவே அடிக்கடி உலகாகாரப்பட்டு வெளிமுகப்பட்டோடும் மனத்தை வைராக்கியத்தினாலும், தியானத்தினாலுங் கெடுக்கவேண்டும். மனம் உலகாகாரப் படுவதற்குக் காரணம் விஷயவாசனையேயாம். இவ்விஷயவாசனை தீவிரதரவைராக்கியத்தோடு செய்யும் தியானத்தினாற்றான் சிறிது சிறிதாகக் குறையும். எவ்வளவிற் கெவ்வளவு அசுத்த சங்கற்பங் குறைகின்றதோ அவ்வளவிற் கவ்வளவு சுத்த சங்கற்பமிகும். சுத்த சங்கற்பமாவது மனம் எப்போதும் தியானஞ் செய்வதிலேயே ஊன்றியிருத்தலாம். இச்சுத்த சங்கற்ப முடையவாது சித்தந்தான் அடங்கி உபசாந்தியினைப் பெற்றுப் பூரணபாவத்தைப் பெறும்.

***

## சென்னை சித்திரவேலை, கைத் தொழில் காட்சியும், அதன் படிப்பினையும்.

(64-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

குலநலங்கனிந்த நங்குலோபகாரியின் சென்ற மாதச்சஞ்சிகையின் தலைபங்கத்தில் கைத்தொழில் இலாகாவில் வைக்கப்பட்டிருந்த காட்சிப் பொருள்களையும், இயந்திரங்களையும், அங்ஙனே செய்து காட்டப்பட்ட சில குறிப்பிட்ட தொழின் முறைகளையும் விரிவாக எடுத்துக் காட்டினோம். இனி, சென்னை 'ஸ்கூல் ஆப்ஆர்ட்ஸ்' எனப்படும் சென்னைகவர்ன்மெண்டு சித்திரவித்தியாசாலைக் காட்சி ஸ்தலத்தையும், 'விக்டோரியா இன்ஸ்டிடேட்' என்னும் கைத்தொழிலபி விர்த்தி சங்கத்தாரின் காட்சிப் பொருள்களைப்பற்றியும்பிரஸ்தாபிப்போம். இப்பெரும் பொருட் காட்சியில் இவ்விரண்டு ஸ்தாபனங்களின் காட்சிப்பொருள்கள் ஒரே பகுதியில் வைக்கப்பட்டிருந்தபோதிலும், அவைகள் அணிவகுத்திருந்த காட்சிப் பொருள்களின் உற்பத்தி முறையும், விளம்பரப்படுத்து முறையும், அவைகளின் விசாரணை முறையும் வியாபார இலட்சணமும் வெகு வித்தியாசமுள்ளவைகளாக விருக்கின்றன.

சென்னை சித்திர வித்தியாசாலை கவர்ன்மெண்டாருக்குச் சொந்தமானது. வித்தியா இலாகா தலைவராகிய டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்டிரக்ஷன் துரை அவர்களின் பொது விசாரணைக்குட்பட்டுள்ளது. இப்பாடசாலையைக் கண்காணிப்பதற்கு ஒரு ஐரோப்பிய சூபரின்டெண்டும், அவருக்கு உதவியாக ஓர் இந்திய கனவானும் இருந்து வருகிறார்கள். சித்திர வித்தையை போதிப்பதற்கும், காசாதனங்களை யமைத்து பல தொழில்களைக் கற்றுக்கொடுப்பதற்கும் அநேக உபாத்தியாயர்களும் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். இப்பாடசாலையில் சுமார் 250 மாணவர் சித்திரம் வரையவும், வர்ணங்கள் தீட்டவும், இரத்தினக் கம்பளங்கள் செய்யவும், தச்சுவேலை சிற்றுளி செதுக்குவேலைகளில் சீர்படவும், பொன் பூஷணவேலையைப் போற்றி நடத்தவும், வாட்டு நகாசுவேலைகளை வழியறிந்து செய்யவும், பிடிப்புகர் வேலையைப் பிரபல்யமாக நடத்தவும் போதிக்கப்பட்டு வருகின்றனர். இவ்வண்ணம் இம்மாணவர் கைத்தொழில் அப்பியாசம் பெற்றுவருவதோடும், அவைகளுக்கு அநுகுணமாக, அத்தொழில்களுக்குஇன்றியமையாத நுட்பங்களைவும், தொழில் இரகசியங்களையும் சித்திரப்படங்கள் வரைதல் வர்ணம் தீட்டுதல்முதலிய வற்றாலும், புத்தகங்கள், உபந்நியாசங்கள் மூலமாகவும் போதிக்கப்படுகின்றனர். ஒவ்வோர் வித்தையிலும் கைதேர்ந்த நிபுணர்களை மட்டுமே தேர்ந்தெடுத்து இப்பாடசாலையில் போதகர்களாய் நியமிக்கப்பட்டிருப்பதாலும், அப்போதைக்கப்போது நியமிக்கப்படுவதாலும் மாணவர்கட்கு இப்பாடசாலையில் கற்றுக்கொடுக்கப்படுவனவைகளியாவும் வெகு உன்னத வேலைகளேயாகும். அல்லாமலும், எத்தொழிலைப் போதித்தாலும், அத்தொழிலைக் கீர்த்தியுடனும், பூரணத் தொழில் ஞானத்துடனும், கைவல்லமையுடனும் பிற்காலத்தில் நடத்தக் கூடியவர்களை உற்பத்தி செய்யவேண்டுமென்னும் பெருந்த நோக்கங்கொண் டுழைக்கும் இப்பாடசாலையின் நன்முயற்சியால் மாணவர்கள் தாங்கள் அப்பியசிக்க விரும்புந்தொழில்களின் ஞானத்தை முற்றிலும் அடைவரென்பது திண்ணம். நம் காட்சிஸ்தலத்தில் இப்பகுதியில் வைக்கப்பட்டிருந்த பொருள்கள் யாவும் இப்பாடசாலை மாணவர்களால் செய்யப்பட்டவைகளாகும். மரவேலை சம்பந்தமாக வைக்கப்பட்டிருந்த நாற்காலி, மேஜை முதலிய தட்டுமுட்டுச்சாமான்கள் தற்கால ஐரோப்பிய நாகரீகத்திற்கு இணக்கமாகச் செய்யப்பட்டிருந்தாலும், அவைகளின் பொது இலட்சணங்களும், சித்திரிப்புக்களின் பேதங்களும் இந்திய பூர்வீக மாதிரிகளை யநுசரித்திருந்தன. இதனால்,

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 APR 1916
MADRAS.



பூர்வீகமாதிரிகளை நவீனதொழின் முறைகளுடன் பிறழாது கலந்து செய்யும் மார்க்கத்தையும், அதனால்பெறப்படும் அழகும், லாபமும் இங்கு நிதரிசனப் படுத்தப்பட்டது. சொற்ப அணு விலையுள்ள மரத்துண்டுகளை தொழிலுன்னதத்தாலும், வேலையின் அருமைப்பாட்டாலும், பலரூபாய் விலையுள்ள சாமான்களாக செய்யும் மார்க்கங்கள் இங்கு தெள்ளிதின் விளக்கப்பட்டது. மரசாமான்களுக்கு, முக்கியமாய் சிற்றுளி செதுக்கு வேலை சாமான்களுக்கு வார்னிஷ் பூசுவதால் விளையும் தோஷங்களும், மெழுகு, எண்ணை மெருகுகளால் அடையும் நன்மைகளும் ஊன்றிப் பார்த்தவர்கட்கு இங்கு நன்கு விளங்கின. தாம்பாளம் பெட்டிகள் முதலிய பொருள்களில் செய்யப்பட்டிருந்த நகாசு வேலைகள் வெகு அருமையானவைகளாவும், அத்தொழிலை நகைப்பிற்கிடமாகவே நடத்தி வருபவர்கட்கு தக்கபடிப் பிணையாகவும் இருந்தன. நவீன மாதிரி கொடி, செடி, காய், கனி, முதலியவைகளைக் கிஞ்சித்தேனும் கலவாமல், பூர்வீக மாதிரிகளான இலை கொடிகளையும், கற்பித பறவைகளையும், மிருகங்களையும் இகழாமல் இவ்வேலை உபயோகித்திருந்த அருமை இங்கு குறிப்பிடத் தக்கும். இப்பாடசாலைச் சிறுவர்களால் செய்யப்பட்ட பொன்வெள்ளி நகைகளின் உன்னதமும் குறிப்பிடற் பாலதேயாம். இப்பாடசாலை உற்பத்தி சாமான்கள் யாவும் விலை குறிக்கப்பட்டு விற்பனைக்குத் தயாராகவே யிருந்தன.

'விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிடேட்' என்பது ஓர் கைத்தொழில் சங்கமேயன்றி அப்பெயரின் இலக்கணத்திற்கேற்றதோர் கைத்தொழில் பாடசாலையன்று. எனவே அச்சங்கத்தின சரித்திரத்தை இங்கு சிறிதுவிளக்குவாம். 1887-வருடத்தில் நமது மாட்சிமைதங்கிய விக்டோரியா மகாராணியாரின் 50-வருட ஆட்சியைக் குறித்து ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்துவதற்காக இவ்விராஜதானியில்ஏராளமான தொகை பொதுஜனங்களிடமிருந்து வசூலிக்கப்பட்டது. வசூலிக்கப்பட்டத்தொகை அதிக மிருந்தாலும், அதனைக் கொண்டு அச்சங்கத்தார் தொழிற்கல்வி சம்பந்தமாயுள்ள தங்களிஷ்டங்களை பூர்த்திசெய்துக் கொள்வதற்கு இயலாமலே இருந்தனர்.

1901ஞூ-ல் திடீரென அம்மகாராணியாருக்குக் காலகதிசேரவே, அத்துக்க சம்பவத்தைக் குறித்து இவ்விராஜதானியின் பிரஜைகள் தங்களநுதாபத்தை வெளிப்படையாகக் காட்டும்பொருட்டுப் பல ஞாபகச் சின்னங்களை நிலை நாட்டுவதற்கு முயற்சித்து அவைகளுக்கான ஓர் பொது நிதியும் சேகரிக்கலாயினர். முன் நிதியினும் பின்நிதியின் தொகை அதிகமாய்ப் பல்கவே இவ்விரண்டையும்ஒன்றுசேர்த்து அம்மகாராணியாரின் ஞாபகச் சின்னத்தையும், சங்கத்தாரின் மனோபீஷ்டமாகிய இந்தியகைத்தொழில் அபிவிர்த்தியையும் தேடுவதென தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானம் முற்றுப்பெறுவதற்கு கவர்ன்மெண்டார் பணஉதவியும் இன்றியமையாதிருந்தது. 1905ஞூ சென்னை கவர்ன்மெண்டார் நூதனகட்டிடமியற்ற இச் சங்கத்தாருக்கு ரூபாய் 75,000 நன்கொடையளித்ததுடன் அதற்கான கீழ் நிலத்தையும் தந்துதவினர். கீர்த்திவாய்ந்த அம்மகாராணியாரின் ஞாபகார்த்தமாக சிறியதோர் கட்டிடம் கட்டுவதென்றும், அம்மண்டபத்தில் இவ்விராஜதானியின் கைத்தொழில் சிறப்பை விளக்கிக்காட்டும் நிரந்தர பொருட்காட்சியை ஏற்படுத்துவதென்றும் நிர்ணயிக்கப்பட்டு, 1906-வருடம் நமது மாட்சிமைதங்கிய ஜார்ஜ் சக்கிரவர்த்தியார், இளவரசராக இங்கு சுற்றுப்பிரயாணம் வந்தபோது இக்கட்டிடத்தின் அஸ்திவாரக்கல் அவரால் நாட்டப்பெற்று மூன்று வருடங்களுக்குப்பின் நம்மாகாண கவர்னராயிருந்த சர்ஆர்தர்லாலி அவர்களால் மகாமண்டபப்பிரவேச மகோற்சவம் வேறப்பெற்றது.

தென்னிந்திய கைத்தொழிலை விர்த்தி செய்யும் வழிகளைத் தேடுவதும் உயர்ந்த

தொழில்கள் நசித்துவிடாமல் காப்பாற்றுவதும், கைதேர்ந்த வேலைக்காரர்களையும், அவர்கள் கைத்தொழிலின் உன்னதத்தையும் பொது ஜனங்களுக்கு விளம்பரப்படுத்துவதும், அங்ஙனம் செய்வதால் அத்தொழில்கள் தலையெடுத்து, பூர்வீக மாதிரிகள் மதிக்கப்பெறுவதால் அத்தொழில் வல்லோர்களின் வறுமையை ஒருவாறு அகற்றுவதும் இச்சங்கத்தாரின் நோக்கமாகுமென முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். இவ்வுத்தேசங்களை பூர்த்திசெய்து கொள்வதற்கும் மண்டபத்தில் நிரந்தரக் காட்சிப்பொருள் ஸ்தலமொன்று ஏற்பாடாயிருப்பதையும் இயம்பினோம். இந்நிரந்தர பொருட்காட்சியினின்றும் பல சாமான்கள் பிரஸ்தாபக் கண்காட்சி ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருந்தபடியால் நிரந்தரக் காட்சிப் பொருட்சாலையை இங்கு விஸ்தரிப்பது போதுமென எண்ணுகிறோம். தென்னிந்தியாவின் பல பாகங்களிலுமிருந்து கைத்தொழில் சம்பந்தமான பல அபூர்வ வேலைகளை தெரிந்துகொண்டு அவைகளைச் செய்வோருக்கு முன்பணமுதவி அச்சரக்குகளை இச்சங்கத்தார் தங்கள் மண்டபத்திலேயே விற்றுவருகிறார்கள்; அவைகள் விற்கப்படவே, அத்தொழிலாளிகள் மறுபடியும் அதேமாதிரி சாமான்களை அனுப்பிவைக்கின்றனர். ஆகவே நல்ல வேலைகளுக்கும், நாணயமான வேலைக்காரர்களுக்கும், இச்சங்கத்தாரால் தக்க வருமானமுண்டு. தென் பிராந்தியத்திலுள்ள நல்ல வேலைஞானமுள்ள தொழிலாளிகளின் பெயரும், விலாசமும் அடங்கிய ஜாப்தா இச்சங்கத்தாரால் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. ஏதாவது ஒரு தொழிலை சிறப்பாகவும், நாணயமாகவும் நடத்துபவர்களின் விலாசம் தெரியவேண்டுமென பொதுஜனங்கள் அபேட்சித்தால் இச் சங்கத்தார் அது விஷயமாக இயன்றவரை உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இதுவல்லாமல், தங்கள் கைத்தொழில் சாமான்களை பொது ஜனங்களுக்கு விளம்பரப்படுத்தும் நோக்கமாய் அவைகளை அவ்வேலைக்காரர்கள் வலிய அனுப்பினால், தகுதியுள்ளவைகளை ஏற்றுக்கொண்டு அவைகளை விற்பனைப்படுத்தி, கொஞ்சம் கமிஷன் எடுத்துக்கொண்டு மீதியைச் சொந்தக்காரர்களுக்கு அனுப்பிவிடுவதும் இச்சங்கத்தார் செய்து வரும் மற்றொரு சகாயமாகும். நல்ல வேலைக்காரர்களையும், தொழில் உன்னதத்தையும், தெரிந்து கொள்வதற்கு இச்சங்கத்தின் குறிப்பிட்ட சில அங்கத்தினர்கள் அப்போதைக்கப்போது சுற்றுப்பிரயாணம்செய்து வருகின்றனர். அற்புதமிக்க சாமான்களையும், மனோகற்பனைமிக்க தொழில் வினைஞர்களையும் நேரில் கண்டு, அவர்கள் நிலைமையறிந்து சங்கத்தின் உதவிக்குப் பாத்திரவான்களின் திருநாமங்களை குறித்துக் கொள்வதோடும் தங்களுக்கு வேண்டிய சாமான்களை தயாரிக்கும்படி அவர்களுக்கு உத்தரவும், முன்பணமும் கொடுத்து வருகிறார்கள். எனவே, இச்சங்கத்தாரின் நோக்கத்தை யறிந்தவர்களும், இவர் ஒத்தாசையைத் தொடர்ந்துபெற்ற சுஜாதியரும் எத்தனைபேர் இருப்பரென்பதை நாம் அறிந்துகொள்ளக்கூட வில்லை.

நிற்க. இக்காட்சிஸ்தலத்தில், சைதாப்பேட்டை பொன்னேரி, மசூலிப் பட்டணம், கும்பகோணம், கருப்பூர், சிக்கநாய்க்கன்பேட்டை, காளஹஸ்தி முதலிய ஊர்களில் செய்யப்படுகிற அச்சடித் துணிகளும், மதுரை, கும்பகோணம், காஞ்சிபுரம் முதலிய ஊர்களில் நெசவாகிற பட்டு வஸ்திரங்களும், புடவைகளும், சென்னை சித்திர வித்தியாசாலையில் செய்யப்படுகிற சிற்றுளி செதுக்கு மரவேலைகளும், மைசூர் மரச்சாமான்களும், வைக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சாவூர், கும்பகோணம், பாலக்காடு, திருவாங்கூர், கொச்சின் முதலிய ஊர்களில் செய்யப்படுகிற பித்தளை வெள்ளி செம்பு சாமான்களும், பதிப்புசாமான்களும் இங்கு ஏராளமாக இருக்கின்றன. மதுரையில் செய்யப்பட்ட பல்லி, பூச்சி, முதலிய வார்ப்பிட பொம்மை சாமான்களும், கஞ்சத்திலிருந்து வந்திருக்கும்வளையக்கூடிய பித்தளை மீன்களின் வேலைப்பாடும் இங்கு குறிப்பிடக்கூடியவைகளாகும். பொன் வெள்ளி நகைகள் சென்னையிலும், மங்களூரிலும், கும்பகோணத்திலும் செய்தவைகளாகும். தந்தவேலைகள் திருவாங்கூரினின்றும், வீணைகள் தஞ்சையினின்றும், சந்தனமர செதுக்குவேலைகள் மைசூர், விசாகப் பட்டணம் முதலிய ஊர்களினின்றும், கொட்டங்கச்சி வேலைகள் சென்னையினின்றும்வந்தவைகளாகும்.

காட்சிஸ்தலத்திற்குச் செல்வோர் காட்சிப்பொருள்கள் உற்பத்தியான இடங்களைமட்டும் தெரிந்து கொள்ளுகிறார்கள் ஆனால் அப்பொருள்களைச் செய்கின்ற தொழிலாளிகளின் பெயரையும், விலாசத்தையும், அச் சங்கத்தின் சிப்பந்திகளை வினவாமலே தெரிந்துகொள்ளக்கூடிய வசதிகளை இச்சங்கத்தார் செய்யாதிருப்பது ஒரு பெருத்த குறையென்றே எண்ணுகிறோம். சாமான்கள் விலைச்சீட்டுகளுடன் விலாசச்சீட்டும்ஒட்டப்பட்டிருந்தால் பொதுஜனங்களுக்கு மிக்க பிரயோசனத்தை உண்டுசெய்யுமென்பதும், சங்கத்தாரின் நோக்கங்கள் விரைவிற்கைகூடுமென்பதும் திண்ணம். இப்பொருட்காட்சியிலும், இன்னும் இந்தியாவின்பல பாகத்திலும் நடந்தேறிவரும் மற்ற பொருட்காட்சிகளிலும் நாம் கவனித்துவரும் மற்றொரு பெருத்த குறையையும் இங்கு குறிப்பிடவேண்டிவருகிறது. அதாவது, தொழிலபிவிர்த்தியை நாடி ஏற்படும் இக்காட்சிகளில் கைத்தொழில் வல்லோர்களின் நாமதேயங்களை தெரிவித்து விளம்பரப் படுத்தவேண்டியிருக்க, தொழிலாளிகளிடமிருந்து சாமான்களை விலைக்கோ, இரவலாகவோ, வாங்கி பொருட்காட்சிகளுக்கு அனுப்புகிற வியாபாரிகளுக்கும். மற்றவர்களும் மெடல், சர்டிபிகேட், முதலிய பரிசுகளை அர்த்தஞானமின்றியளிப்பதேயாம். வியாபாரிகளின் நாமதேயங்களுடன், தொழிலாளிகளின் பெயர்களும் வெளிப்படாதவரையில் கைத்தொழில்கள் சீர்படமாட்டாதென்பது நம் தேற்றம். இதனை நம்மனோர் நன்குணர்ந்து இனி தாங்கள் அனுப்பும் காட்சிப் பொருள்களுடன் தங்கள் பெயரும் விலாசமும் வெளிப்படுத்தப்பட வேண்டுமென வற்புறுத்துவதுநன்று.

பத்திராசிரியர்.

***

## குலோத்தாரணசபையின் உதவியும் அதற்கு உறுதியும்.

திருமகளும் கலைமகளும் நிலவப்பெற்ற, திவ்ய பூமியாகிய விப்பாதக் கண்டத்தின் கண் வசிக்கும் விஸ்வப்பிராம்மண மகா ஜனங்களியாவர்க்கும் வந்தனம் செய்தறிவிக்கும் விண்ணப்பமாவது யாதெனில்:—

'சுடர்விளக் காயினும் நன்றாய் வெறிந்திடத் தூண்டுகோ லொன்று வேண்டும்' என்ற பழமொழிப்படி குலமாகிய தீபத்தைப் பிரகாசிக்கச் செய்வதற்கு நல்லறிவினராகிய சர்ஜனத் தூண்டுகோலொன்று அவசியம்வேண்டும். ஏனெனில்,

'குடிபென்னுங் குன்றாவிளக்க மடியென்னும் மாசூரமாய்ந்து கெடும்' அதாவது பிரகாசம் பொருந்திய குலமாகிய தீபமானது சோம்பலென்கிற அழுக்குச்சேர அத்தீபம் ஒளிமழுங்கிக்கெடும் என்றார் திருவள்ளுவர். ஆகையால் இனி நாளுக்குநாள் நங்குலமாகிய தீபம் மங்காவண்ணம் பொங்கமாய்ப் பிரகாசிப்பிக்கச் சென்னை, கிருஷ்ண, குண்டூர், வேலூர், திருச்சி, கும்பகோணம், மதுரை முதலிய சில இடங்களில் நங்குலாபிமானசிகாமணிகள் நம்மவர்கட்கென்றே குலோத்தாரணசபைகளை ஏற்படுத்தி சட்டதிட்டங்களும் சன்மார்க்கானுஷ்டான விதிகளும் ஜீவனோபாய வழிகளும் பத்திரிகை மூலமாய் தெரியப்படுத்தி முயற்சியுடன் தூண்டுதல்செய்து வருவதானது நம்முன்னோர்கள் இருமையாய் செய்துள்ள தருமத்தின் பயனேயாகும்.

அங்ஙனம் திகழும் சர்வோபகாரமாகிய ஷ சபையையென்றும் அழிவின்றி நிலை

நிற்கச் செய்வது நம்மவர்களின் முக்கிய கடமையாகும். அஃதெங்ஙனமெனில் தமக்கு கற்புத்தியைப் புகட்டி நல்வழியில்நடப்பித்த தாய் தந்தையர்களை காப்பாற்றுவது புத்திரனுக்கு எப்படி கடமையோ அப்படியே நமது சபையினின்றும் உற்பத்தியாகி பூர்வநவீன சாஸ்திரங்களின் மூலமாய் தர்மார்த்த காம்ய மோக்ஷத்திற்கேதுவான சன்மார்க்கம், குலாபிவிர்த்தியின் மார்க்கம், உள்நாட்டு வெளிநாட்டாரின் தொழில் மார்க்கம் வர்த்தமான முதலியதும் செவ்வனே தெரிவித்து அறிவை விசாலப்படுத்தும் நமதுஞானமாதாவாகிய விஸ்வ கர்ம குலோபகாரியைப் போஷிப்பது நம்மவர்களின் முக்கிய கடமையாகும்.

அங்ஙனம் நம் குலோபகாரியாகியமெஞ்ஞான தீபமானது மென்றும் நீடித்து நின்று பிரகாசிப்பதற்கு சபாமண்டபமென்னும் தகழியும், வேத சாஸ்திர புராண இதிகாசங்களென்னுந் தயிலமும், ஸாத்விகளாகிய அக்ராசனாதிபதி காரியதர்விகள் முதலிய திரியும் ஒருங்கே பொருந்தி நிலவச்செய்வோமாயின் ஷை தீபமானது நமது குலத்தோரின் அஞ்ஞானமென்னும் அந்தகாரத்தை நீக்கி சுக்ஞானமென்னும் பிரகாசத்தைச் செய்யு மென்பதிற் சற்றும் சந்தேகமில்லை.

ஆகையால் மேற்கண்ட சபையை எப்படிப்பலப்படுத்துவதென்றால், நம்மவர் பல்லோர்களின் உதவியைக்கொண்டு அடியில் கண்டவண்ணம் பலப்படுத்த வேண்டும் 1-வது பலமான சபா கட்டடமும், 2-வது குலாபிமானம், பொறுமை, நடுவுநிலைமை முதலிய வாய்க்கப்பெற்றஅக்ராசனாதிபதி, காரியதரிசிகள் முதலிய ஏஜண்டுகளும், 3-வது ருக்கு யஜுர் ஸாமம் அதர்வணம் பிரணவம் என்னும் ஐந்து வேதங்களையும் சேகரிக்கவேண்டும். அல்லது தற்காலத்திற்கிடைப்ப தருமையாகிய அதர்வணம் பிரணவம் நீங்க மற்ற மூன்று வேதங்கள் ஏட்டுப் பிரதியிலுள்ளது அல்லது அச்சுப்பிரதியிலுள்ளது இவைகளையும் மற்றும் 6 – சாஸ்திரங்கள், 108 - உபநிஷத்துகள், 28 - ஆகமம், 32 - சிற்பம், 18 – புராணமும் மற்றும் இதிகாசம் நிகண்டு அகராதி காவியம் நாடகம் இலக்கண இலக்கியம் ஜோதிஷம் வைத்தியம் மற்றும் தர்மசாத்திரம், சாதிநூல், சாக்ஷிநூல் தீர்ப்புநூல் முதலியவைகள் யாவும் விடாமல் வடமொழியென்கிற கிரந்தத்திலுள்ளதும் தென்மொழியென்கிற தமிழிலுள்ளதும் ஆந்திரம் என்கிற தெலுங்கிலுள்ளதுமாகிய புத்தகங்களை சேகரித்து லைப்ரரியாக்கவேண்டும்.

கூந்தலூர். து. சுப்ரமணிய ஆச்சாரி,
மங்கலம்பேட்டை.

***

## சங்கத்தினால் அடையும் நலப்பாடுகள்.

81-வது பக்கத்தின் தொடர்ச்சி.

இது நிற்க, இனி, சபையினிடத் துற்றவொருவன் கல்விப் பொருளை அடைவதோடு, நல்லொழுக்கத்தைப் பெற்று, மற்றையோர்கட்கும் அதனைக் கற்பிக்கின்ற குருவாகின்றான். இனி, சபையோர் கூறும் வார்த்தைகளில் உண்டாகும், சொன்னயம், பொருணய முதலிய பன்னலங்களையுங் கேட்டபோழ்தே பேருவகையிற் பூத்துமுகமலர்ச்சியும் உறுகின்றான். அன்றி, அவைத்தலைமை கொண்ட நல்லோர் அவையை நடாத்தும் ஒழுங்கின் செவ்வைப் பாட்டால் பல நியாயங்களையும் அறியலாமன்றோ? அத்தலைவர்க்குட்பட்ட காரியதரிசி முதலியோர்கட்கு அமைந்த ஒழுங்குகளாலும், முறைகளாலும் அவையை நடத்துஞ் செயல் இவையாமெனத் தெற்றெனப் புலப்படும். ஆகவே, சபையிற் பேசுதற்கவாக் கொண்டவர் வீண்வார்த்தைகளை ஒழித்து, நெறிப்பாடுள்ள இனிய சொற்களைக் கைக்கொள்ளுவர். அவற்றோடு சொல்வன்மையின் ஆக்கத்தைப் பூண்டு, இணையற்ற குணத்துணையில் உபசாந்த நிலையையும் பெறுவர். பொறை, அடக்கம், வாய்மை, மெய்யுணர்ச்சி முதலிய வற்றிற் பழகி மேலான சத்சங்க விசேடத்தால், ஜீவன் முக்தனெனும் பதவியும் வந்தெய்தும். சொல்வன்மையோடு பேசுமொருவர் தமதுபேச்சால் வேறொருவர் தன்னை வெல்லுவதற்கியலாத விதத்தில் கல்வியமைந்த சொற்களால் வென்றியுறுகின்றனர். சபையில் ஈடுபட்டுப்பேசுங் கல்வி வன்மை கொண்டவரை எவராலும் வெல்வதரிது. அன்னோர் கல்வி நலம் பொன்மலர் நாற்ற முடைத்து. உழுவலன்பிற் பிரியா நட்புடையார் கேண்மையில் பிரியாப் பெருமையுடையார் என, எவராலும் புகழ்வதற்குரிய வெற்றிக் கொடியை பெறலாகும். இத்துணையளவில்சங்கத்தைச் சேர்ந்த புலவர் கூட்டத்திற் கலந்துறவாடிய நன்மைகளால், ஒருவர்க் கொருவர் பிரியும்போது, இனி என்று கூடியின்புறுவோம் என நினைந்து பிரிவர். இன்னோரன்ன நியாயங்கட்கு ஆன்றோர் மொழிகளின் சான்றுகள் பலவுள. அவை கால நாகரீகத்தில்; சுருதிப் பொருளை வசனமாகப் பிரித்து வரைதல் பாமரபண்டித ரஞ்சிதம் என சுருதிமொழியை இங்கு விடுத்தனம்.



சங்கங்கள் மேல்நாட்டுப் பாஷைக் கல்வியால், அமைந்த நவீன நாகரீகத்தில் பலவாய் வெளிப்போந்ததெனப்புகலுவர் ஆங்கிலங்கற்ற சில்லோர். அவைதவறேயாம். இந்தியாதேசத்தில் எத்திறமுடைய படிப்புடையார் கொள்கைகளினும், சங்கள் தொன்றுதொட்டே இருந்தன வென்பது தமிழ் நாட்டார்கொள்கை என்றுணரற்பாலது. இனி, நமது தனித்தமிழ்முச் சங்கங்களும் அதற்குரிய போதியசான்றென்க. அங்ஙனமாய், சங்கத்தில் உண்மை யறிவானந்த ஸ்ரீமத் சோமசுந்தரக் கடவுளும், ஒரு அங்கத்தவரா யிருந்தனர் என்றால் வேறு கூறவேண்டுவ தென்னை? திருவருட் பெருஞ் செல்வர்களாகிய சமய குரவர்கள் நால்வர்களும் சங்கங்களால் தமது சைவசமயத்தை, தமிழ் நாட்டின்கண், ஆங்காங்கே எவரும் போற்றும்படி தாபித்தனர் என்பது நமது சைவாமங்களால் அறிவேம். அல்லமோ அக்காலவருள் ஸ்ரீ சுந்தரமூர்த்திகளை தமதாளடிமையோலையால் போவையிற் காட்டி அம்மகானைத் தமதடியராக, ஆட்கொண்டனர் சிவபெருமான். இவை போன்ற திட்டாந்தங்கள் பலவுள.

ஆகலால், விஸ்வப்பிரம குலோத்தமர்காள்? பிராமணன் முதல் பஞ்சமன் ஈறுகவுள்ள எல்லா ஜாதியார்களும் சங்கங்களை நடத்தி மேன்மை அடைகின்றனர். ஆங்கில மொழிப்பயற்சிக் குரியார் சபைகள் எண்ணில. பல்லிடங்கடோறும் பலபாஷைக்குரிய வளர்ச்சியில், மேலும் சங்கங்களை ஏற்படுத்தி, ஒற்றுமையைநாடி தமது ஜாதிச் செல்வர்களை கல்வியிற்பயிற்றுவிக்கும்படி பல தருமங்களை ஏற்படுத்தி வருகின்றனர். இன்னோரன்ன உதவிகளால், தமது ஜாதியார்களில் அநேகர் ஆங்கிலப் படிப்பில் பட்டதாரிகளாக முன் வந்து, தங்கள் ஜாதியார்கட்கு உயர்வையுங் கீர்த்தியையும் செல்வத்தையும் அளிக்கின்றனர். இவைகளை நமது குலத்துதித்த நல்லோர்கள் எட்டுணை அளவிலேனும் எண்ணுவாரில்லையே! பூமிக்குப் பாரமாயிருந்து வாழ்வதில் என்னபயனுடைத்து நமது ஜாதியார்கட்கு கல்வியில்லாத குறைவினாலன்றோ எவராலும் நன்கு மதிக்கப்படாது வாழாநின்றோம். கனவான்களே! இனியேனும் மற்றையோர்களைகுறை கூறாமல்; நமது குலமேன்மையைக் கருதிச் சங்கங்களை அங்கங்கே ஸ்தாபித்து, ஆங்கிலப் படிப்பை நமது, அருமை மக்கண் மாட்டளிக்க, தக்கதருமங் கட்குரிய பொருட்களைத் திணையள வாகவேனு முண்டாக்குவீராக. அங்ஙனம் சங்கத்தை ஒற்றுமையுடன் உழைத்துவருவீரேல் மிகவெளிதில் நமது குலச் சிறுவர்களை ஆங்கிலப்படிப்பில் B. A. M. A. முதலிய உயர்ந்தபட்டதாரிகளாகக் காண்பதரிதாமோ? குலாபிமானிகளே! இது விஷயத்திற்கு ஒற்

றமை உண்டெனில் பொருள் பெரிதன்று முன்வந்து முயன்று குலதருமப் புண்ணியங்களை அடைந்து மேலோங்குவீராக! உறங்கவேண்டாம். இதுநல்லகாலம் என்று முயலுங்கள். போற்றலும் பேறிவுடைய பெருமானை நினைந்து நல்லெண்ணத்துடன் உழைப்பீர்களாக!

ஜி. சுவாமிநாதன் ஆச்சாரி,
கோட்டாறு.

***

## ஜாதி.

இந்தியாவில் பல பிரிவினையான ஜாதிகளைக் கவனிக்கும்போது ஆதியில் பிரம்ம க்ஷத்திரிய மென்னப்பட்ட இரு ஜாதிகளாகி அவைகளினின்று வைசிய சூத்திரரென்னும் இருஜாதிகள் பிரிந்து ஆக 4, ஜாதிகளாக விளங்கி தற்காலம் எண்ணிறந்த ஜாதிகளாக மேற்படி நான்கு ஜாதிகளின் விகற்பக்கலப்புகளால் உண்டாயின வென்று அநேக நூல்கள் கூறுகின்றன.

அஃதெவ்வித மாயினுமாகுக. நம் விஸ்வப்பிராமணகுலத்தியல்புகளை பதினெண் புராண மிதிகாச முதலியவைகளிற் பார்க்கும்போது தொழிலுயர்வேயன்றி ஜாதியுயர்வு தோன்றவில்லை. விஸ்வகர்மா ஒருவர் உண்டென்றும் அவர் பஞ்சகிர்த்தியாதி நிருபத்தோடு ஜனசமூகத்தின் முதற்பிதாக்களான மரீசியாதி நவப்பிரமாக்களுக் கொப்பாயிருந்தாரென்றும் கூறப்பட்டிருக்கிறதே யொழிய நாம் இருக்காதி மறைகளிலிருந்து எடுத்துக் காட்டுகிறபடி கர்த்தத்துவ முடையோராக விருந்தாரென்று கூறப்படவில்லை. இவ் விகற்பத்தால் புராணிகர்கள் வேதவியாசர் முதலாகிய விப்பிரர்களால் தம்குலவுயர்வுக்கும், ஜீவனோபாயத்துக்கும் ஆதாரமாக கட்டுக்கதைகளாய் உண்டாக்கப் பட்டன வென்றும், அவைகளின் நியதியின்படி ஒன்றையும் நிலைபிடக்கூடாதென்றும், பண்டித மார்க்கசகாய ஆச்சாரியார் முதலிய கல்விமான்கள் காட்டியிருக்கின்றனர். ஆனால் பொதுவாகக் கவனிக்கும்போது இந்தியாவின் பூர்வீகத்தைத் துலக்குவதற்கும் ஒருவாறு தெய்வபக்தி நீதி முதலியவைகளை ஜனங்கள் அநுசரிப்பதற்கும் அப்புராணங்கள் ஏற்ற சாதனங்களாயிருக்கின்றன. பழனி முனிசிபல் கௌன்சிலர் பிரம்மஸ்ரீ மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியாரவர்கள் நம் பத்திரிகையில் எழுதி வருகிற ஜாதிப் பூர்வோத்தர வியாசங்களின் சாரமெல்லாம் அப்புராண விதிகாசங்களிலிருந்து எடுத்துக் காட்டப்பட்டனவே யன்றி வேறில்லை. அக் கொள்கைகளைக் கவனிக்கும்போது இந்தியாவின் பூர்வீககுடிகளென்றெண்ணப்படுகிற சுராசுரர்முதலாகிய 18 கணத்தோரிடமும் விஸ்வகர்மாவின் சந்ததியார் சேர்ந்து அவரவர்களின் உயர்வுதாழ்வுக்கேற்ற நடைகளிலிருந்து அவர்களிடம் கொள்வன கொடுப்பன செய்துவந்ததாகத் தெரிகிறது. இதன் குறிப்புகளை ஸ்காந்தம், இராமாயணம் முதலிய பெருங்காப்பியங்களிற் காணலாம். இன்னும் மேற்படியார் வியாசங்கள் அதிர்ப்தியை விளைவிக்கின்றதே யொழிய திர்ப்தியை விளைவிக்கவில்லை. ஏனெனில் சித்தூர்ஜில்லா திர்ப்பில் மார்க்கசகாய ஆச்சாரியார் புராணங்களில் அகஸ்தியர் வந்த மடக்கியகதை பொய்யென்பதற்கு ஆங்கில வித்துவான்கள் கொள்கைப்படி அடியிற் காட்டப்படும் வாக்கியங்கள் கூறியிருக்கிறார். அதாவது பூமியைவிட 13-லட்ச மடங்கு பெரிதாகவும் பூமியிலிருந்து 9-கோடியே 50-லட்ச மைல் தூரத்திலுமுள்ள சூரியனை ஓர் அசரவஸ்துவாகிய விந்தமலை எவ்விதமாய்த் தடுத்தது. பூமிஉருளும்போது அம்மலையும்கூட உருளுமேயன்றி யவ்விதஞ் செய்யமாட்டாதே யென்றும் இன்னும் பல சரித்திர கண்டனமும் சொல்லியிருக்கிறார். 17-வது பிரசுரம் 244-வது பக்கத்திலுள்ளபடி. சூரியனை விஸ்வகர்மா சாணைக்கல்லில் தேய்த்தானென்னுங்கதையை நாம் எவ்வா றொப்புக்கொள்வது? மேற்காட்டிய கேள்விகள் இதற்கும்வரும் நரமாம்சபக்ஷணர்களாகிய அரக்கர் சுரா



OFFICE OF THE REGISTRAR OF JOCKS 23 APR 1916 MADRAS

தியோருக்கு விஸ்வப் பிராமணர் மாதர்களைக் கொடுத்தவிர்த்தாந்தங்களை யெடுத்துக் கூறுவதில் நம் குலத்துக்கோர் மேன்மையைத்தராது. சூரிய சந்திர குலமென்னப்பட்ட க்ஷத்திரிய குலத்துக்கும் குபேரன் மரபென்னப்பட்ட வைசிய குலத்துக்கும் மற்றுண்டாகிய குலங்களுக்கும் விஸ்வகர்மாவே மூலபுருஷரா யிருந்தபோதிலும் அக்குலங்களென்று நம்குலத்தைக் கூற ஏதுவில்லை. கூறில் உயர்ந்தபதவியை விரும்பி தாழ்ந்தபதவியை அடைந்தது போலாம். விசுவபிரம புராணம் கோத்திராதிகளுரைத்த அத்தியாயத்திற் கூறப்படுகிற 125 கோத்திரப் பிரிவாகிய நம் விஸ்வப்பிராமணகுலம் முன்னேற்றமடைவதற்குரிய கல்வி செல்வங்களை யபிவிர்த்திக்குக் கொண்டுவருகிறதே சிறந்த வழியென எண்ணுகிறேன்.

மு. வேலாச்சாரி,
பெருநாழி.

***

## தொன்னூல் பின்னூல் பெருமை.

முற்காலத்தில் தீர்க்கதரிசிகளான முனிவர்கள், பூபதிகள், மேதாவிகள் முதலியோர் தர்மா தர்மம், ஜோதிடம், மந்திரம், வைத்தியம், சங்கீதம், சிருஷ்டித்வம், வர்ணாச்சிரமம், தைவமகாத்மியம், அத்வைதம், லோகானுஷ்டானம் முதலியவைகளைப் பற்றி தம் மகாத்மியத்தாலோ, உபதேசத்தாலோ, மதிநுட்பத்தாலோ அறிந்தவற்றை உலகோர்க்கு வெளியிட்டனர். அவைகளே வேதங்களாகவும் இதிகாசங்களாகவும் வெளிவந்தன. பிறக்கும் சிசுக்களெல்லாம் வயது ஆக ஆக பிரபஞ்சானுஷ்டானங்களை போதனானுபவத்தால்தெளிவாய் அறிகின்றன. அந்த போதனானுபவம் மாதாபிதாபெரியோர்களின் போதனாசக்தியினாலும் கல்விகேள்வியினாலும் உண்டாகும். வயது செல்லச் செல்ல அவ்வநுபவம் முதிர்ச்சியாகிறது. ஒருவர் நீண்டகாலமாய் உலகத்தோடு பழகிவாழ்ந்து அடையக்கூடிய அனுபவக்கியானம் சிறிது காலத்தில் நூன்முறையால் அடையலாம். பின்னும் அரும் பெரும் விஷயங்களை உணர்ந்த மேதாவிகள் தங்கள் சரீரம் நிலையல்லாததை உணர்ந்து தாமறிந்தவைகளை நூல் முகமாக்கினர். இதனால் நூல்பெருமை அதிகவிசேஷமான தென்று அறியத் தக்கது.

இப்பால் நூற்பெருமையைப் பற்றி வரைந்த காரணத்தை விவரிப்போம் மாந்தர் பாலியத்தில் மாதா பிதா சுற்றத்தை எவ்வளவு முக்கியமாக அனுசரிக்கிறார்களோ அவ்வளவு முக்கியமாக தெளிந்த காலத்தில் களத்திர புத்திர மித்திரர்களை அனுசரிக்கின்றனர். களத்திராதிகளை எவ்வளவு முக்கியமாய்ப் பற்றுகிறார்களோ அவ்வளவே கிரகபூமியாதிகளைக் காப்பாற்றுகிறார்கள். அதுபோல் தர்மார்த்த காம மோக்ஷங்களைக் கருதும் யாவரும் நூற்களைக் காப்பாற்ற கடமைப்பட்டவர்களாவார்கள். பொருளை ஆசிக்கும் எவரும் ரத்நங்களையும் சுவர்ணங்களையும் எவ்வளவு கவனமாய்க் காப்பார்களோ, அதைவிட சிரேஷ்டமாய் மேதாவிகளின் நூற்களைக் காத்தல் அவசியமாகும் ஆகையால் சுகஜீவியத்தையும், மோக்ஷத்தையும் அபேக்ஷிக்கும் சாது ஜனங்கள் கிடைத்த நூற்களையும் சஞ்சிகைகளையும், உற்றபொருள்களாய்க்காக்க விரும்புவார்கள். இனி அவ்விதம் காப்பதில் பிரதமத்தில் கவனிக்க வேண்டிய ஓர் முக்கிய விஷயத்தைக் கூறுவாம்.

முற்காலத்தில் நூல்கள் ஏட்டுப்பிரதிகளாயிருந்தன. இக்காலத்தில் அச்சுப்பிரதிகளாய் ஏற்பட்டதனால் அச்சுப்பிரதிகள் ஆங்கில நாகரீகங் கொள்ளாத இந்துக்களால் காத்தல் ஏட்டுப்பிரதிகளைப் போலின்றி மெலிவுற்றிருக்கிறது. ஏனெனில் ஆங்காங்கு அரிதாயுள்ள நூல் தற்காலத்தில் ஒன்றுக்கு நூறு ஆயிரமாகப் பிரவிர்த்தியான தனாலாகியது. சிற்க, தற்கால நாக

ரீகத்தின்படி அச்சுப்பிரதிகளாகவே எந்த
நூற்களும் விளங்கி வருகின்றமையால்,
அச்சுப் பிரதிகளைக் கெடாவண்ணம்
காத்தல் அவசியமானது. மனிதர்கையில்
அடிக்கடி தங்கும் புஸ்தகம் சீக்கிரத்தில்
கெடுகிறது. அதிலும் தைப்புக் கோர்வை
யுடைய அடிபாகம் முதலில் ஜீரணிக்கி
றது. அதன்பின் தேகத்திற்குச் சர்மம்
போலும் மரத்திற்குப் பட்டைபோலும்,
புஸ்தகத்திற்கு ஆதாரவாயுள்ள அட்டைத்
தாழ்கள் விடுபடுகின்றன. எப்பொழுது
அடிவாரம் கெட்டு மேல்கவர்ச்சியும் விடு
பட்டதோ அப்பொழுது புஸ்தகத்திற்கு
ஜீரணகாலம் சமீபிக்கிறது. ஆனால் ஏட்டுப்
பிரதிகள் இவ்வாறு கெடுவதில்லை. அவை
மனுஷர்கைப்படப்பட ஆயுஸ்தீர்க்கமாகவே
இருந்தன. (தொடரும்.)

ஸ்ரீ சாலிவாடி புராதீனம்,
தர்மபதி.

***

## மாதாபிதாக்களின் மஹிமையும் புத்திரர்கள் கடமையும்.

79-வது பக்கத்தின் தொடர்ச்சி

விருத்தம்.

தேவர்கள் பிதிர்க்கண்மிக்கச் சீர்முனி
வர் பூதங்கள், மேவதி திகளின்னோர்கள்
விழைவொடு திருத்திசெய்தப், பாவமத
கலநன்கு பஞ்சமாவெச்சஞ் செய்தால்,
தாவறு மில்லறத் தோர்தங்கடனென்பர்
மேலோர்.

தேவர்கள் தென்புலத்தார் மிகுந்த
சிறப்பினை யுடைய முனிவர்கள், பூதங்கள்
விரும்பத்தக்க அதிதிகள். ஆகிய இவர்கள்
விருப்பத்துடனே திருப்தி யடையவும்
தான்செய்த பாவங்கணீங்கவும் தருமசாஸ்
திரவிதிப்படி பஞ்சமஹா யக்ஞத்தைப்
பிரதிதினமும் செய்யவேண்டியது கிரகஸ்
தாச்சிரமத்தில் இருப்பவர்கட்குரியமுறை
யென்னும்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பொருந்துமுபர் தாய்தந்தை சற்குரு
நன் மனையவளைப் புதல்வன் றன்னை, விருந்
தினைநற் பகலிரவும் வழிபடுவோன் றன்னை
மறை விளம்பு மின்பந், தருமந்தனை யதி
திகளைச் சாற்றுமிவ் வொன்பதின்மர்
தமையு நாளும், அருந்திருவோ டிவ்வா
ழ்வு பூண்டுளோ னகமகிழ்வின் அளித்தல்
வேண்டும்.

அருமையான பல செல்வங்களுடனே
கிரகஸ்தாச் சிரமத்திலிருப்பவர்கள் உயர்வு
பொருந்திய தாயும் தந்தையும் ஆசாரிய
ரும் மனைவியும் புத்திரனும் விருந்தினரும்
இரவும் பகலும் இடைவிடாது வழிபடு
வோனும் இன்பத்தைக் கொடுக்கின்ற
வேதவிதிப்படி அமைந்துள்ள அக்னியும்
அதிதிகளும் என்று சொல்லப்பட்ட இவ்
வொன்பதின் மரையும் பிரதிதினமும் மகி
ழ்ச்சியுடனே பாதுகாத்தல் வேண்டுமென்
றும்.

கலி

தேவர்குரவர் பெரியர்பசு திகழந்தண
ரைப் பூசைசெயல், தேவர்முனிவர், கற்
புடையாள் சீர்மன்னவரை யிகழாமை,
தேவர்பெரிய ரொளிமறையோர் செறியும்
நிழலைக் கடவாமை, தேவர் துறவர் பிதிர்க்
களித்த சேடமருந்த லினவுமன்றே.

தேவர்கள் ஆசிரியர் பெரியோர்கள்
பசுக்கள், பிராமணர்கள், இவர்களைப் பூசித்
தலும், தேவர்கள், முனிவர்கள், கற்பினை
யுடைய மாதர்கள், சிறந்த அரசர்கள்
இவர்களை யிகழாதிருத்தலும். தேவர்கள்
பெரியோர்கள், பிரம்ஹதேஜஸையுடைய
பிராமணர்கள் இவர்களுடைய நெருங்கிய
நிழலைக்கடந்து போகாமலும். தேவர்கள்
துறவிகள் பிதிர்க்கள், அளித்தசேட முண்
ணுதலுமாகிய இவைகளெல்லா மிகுந்த
நன்மையாகு மென்றும்.

கலி.

முனிவ ரோடுயர் பிதிர்க்களைற் றேவர்
கள் மொழிதரு பூதங்கள், கனிசிறந் திடு
மதி திகளிவ ரெலாம் நவிறரு கிருகத்தில்
இனிதிருப்பவர்பால் மிகுதி ருத்தியை
யெய்திட விழைவார்கள், புனிதமா மறை
புக னெறிய வர்க்கிதம் புரிவது கடனே.



முனிவர்களும் பிதிர்க்களும் தேவர்க
ளும் பூதங்களும் அதிதிகளும் ஆகிய
இவர்களெல்லாம் கிரகஸ்தாச் சிரமத்தை
இன்பத்துடனே பொருந்தி யிருப்பவர்க
ளிடத்தி னின்றும் மிகுந்த திருப்தியை
யடைய விரும்புவார்கள். ஆதலால் பரிசுத்
தமாகிய பெருமை பொருந்திய வேதங்க
ளிற் கூறியபடி அவர்களுக் கிதமாகச்
செய்வது கடமையாகு மென்றும் சொல்
லுகிறபடி நடத்தப்பட வேண்டியது புத்
திரர்களின் கடமையாகும்.

இவ்விதஞ் செய்யக் கடமைப் பட்ட
புத்திரர்கள் தங்களுடைய பிதாக்களின்
தேகவியோகத்திற்குப் பின்னர் செய்ய
வேண்டிய கிரிகைகளாவன.

கலி.

புரியுமச் சிரார்த்தந் தன்னிற் பொரு
வரு தேவர் கட்கும், பரிவுறு, பிதிர்க்
களுக்கும் பண்புட னிரட்டை யாங், அரி
யமா மறைவல்லோரை யன்பொடு முறை
வரித்து, வரிசையி னனிபூ சித்து மகிழ்
வினுண் பித்தல் வேண்டும்.

செய்யப்படுகின்ற சிரார்த்தத்தில் தே
வர்களுக்கும் பிதிர்க்களுக்கும் வேதநூ
லாராய்ந்தறிந்த பிராமணர்களை இரட்டை
யாகவே முறைப்படிவரித்து அவர்களை
பிரதக்ஷணவரிசையாக மிகவும் பூஜித்து
மகிழ்ச்சியுடனே புசிப்பித்தல் வேண்டு
மென்றும்.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தந்தை தாயர்களின் சபிண்டர்கள் வய
ங்கு தருசமா னோசுக ருடனே, முந்துறு
மேன்மை பெறுசகாத்தியாயி முதலினோர்
பூருவக்கிரியை, சிந்தை யன்போடு செய்
திட லுரித்தாமேற் செப்பிடு முத்திரக்
கிரியை, நந்துறுப் புதல்வ ருதியர் தம்மா
னன்கினி தாற்றுதன் முறையே.

இன்னும் வரும்,

V. மௌனதரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
Ex. முனிஸிபல் கௌன்சிலர்,
பழநிஸ்தலம்,

## குலோத்தாரண உபந்நியாசப் பத்திரிகை.

(74-வது பக்கத் தொடர்ச்சி.)

தவிரவும் ருக், யஜுஸ், சாம வேதங்களு
க்கு அநேக மஹரிஷிகளால் பூர்வாபரத்
தின் பொருட்டு கிருஹ்ய சூத்திரங்கள்,
கற்பசூத்திரங்கள் செய் திருப்பதுபோல
அதர்வண, பிரணவ வேதிகளுக்கு பூர்வா
பரமுதலியவைகள் செய்து வைப்பதற்கு
கிருஹ்யசூத்திரம் கற்ப சூத்திர முதலிய
வைகள் மஹாரிஷிகளால் செய்திருக்கவே
ண்டாமா.

இவைகளனைத்தையும் கவனிக்கவேண்
டியது நம் கடமையல்லவா? இவைக ளிங்
ஙனமிருக்க நம்மவர்க ளொவ்வொருவரும்
ஒவ்வொருவிதமெழுதி அச்சிட்டிருக்கும்
புஸ்தகங்களிருக்கிற சாகை சூத்திரங்கள்
வித்தியாசப்பட்டு ஒன்றிகொன்றுமுரணாக
காணப்படுகின்றன.

சூத்திர வித்தியாசங்கள்.

ருக்சாகைக்கு:— சானக, மன்யுபத,
சமனத, வஜ்ர, சத்யக, ஆசுவலாயனமாகிய
சூத்திரங்களையும்.

யஜுஸ்சாகைக்கு:—சனுதன, மானுஷ,
வர்த்தக, விசுவதொமுக், வைவத, ஆபஸ்
தம்பமாகிய சூத்திரங்களையும்.

சாமகைக்கு:—அபூன, சம்வர்த்த, லோ
கேச, போதாயன, பிரபோன்னத ஹிராத்
தியாயன, திராஹியாயன, தாக்ஷாயன,
காத்தியாயன, ரௌப்பியாயனமாகிய சூத்
திரங்களையும்.

அதர்வணசாகைக்கு:—பிரத்னச, பிர
ஹர்ஹன, வாஸ்துக, விஸ்வபத்ர, சக்வர,
ரௌப்பியாயன, காத்தியாயன, போதா
யனமாகிய சூத்திரங்களையும்.

பிரணவசாகைக்கு:—சுபர்ணச, மணிப
த்திர, ஆதித்தியஸேந, மைத்திரேய, போ
தக, காத்தியாயன, ரௌப்பியாயன, போ
தாயன மாகிய சூத்திரங்களையும், வருவி

த்து ஒவ்வொரு வர்களின் மனோபீஷ்டம் போல எழுதி அச்சடித்திருக்கிறார்கள்.

இவைகளை 1870ம், 1884ம் வருஷத்திலும் 1902ஷு பிரம்மஸ்ரீ வராஹ நரசிம்மாசாரியாலும் விசாகப்பட்டணத்தில் அச்சடித்த கோத்திரகாண்டம், விசுவகர்மாந்வய பிறதிபிகை கிரந்தங்களிலும், மைசூர் விசுவகர்ம சபாத்தியக்ஷ பிரம்மஸ்ரீ பார்த்தசாரதி ஆசாரியவர்களால் அச்சடிக்கப்பட்ட பத்திரிகைகளிலும், குண்டூர் விசுவபிராம்மண மஹாஜன சபா அத்யக்ஷ பிரம்மஸ்ரீ சேஷாசலாவதானிகள், வெங்கடசுப்பிரமணியசாஸ்திரிகள்; யாலவர்த்தி ஆஞ்சநேய சாஸ்திரிகள்; வட்டேபாடி நிரஞ்சனசாஸ்திரிகள் முதலானவர்களால் அச்சிடப்பட்ட கோத்திரகாண்டம் பத்திரிகைகள் முதலியவைகளிலும், பூஜ பிரம்மஸ்ரீ பால சாஸ்திரி ராவுஜி சாஸ்திரி க்ஷீரசாகராவர்களால் அச்சடிக்கப்பட்ட விசுவப்பிரம்ம குலோத்ஸாக கிரந்தத்திலும், 1880ஷு சென்னையில் அச்சடித்த சித்தூர் தீர்ப்பு புத்தகத்திலும், 1894ஷு சென்னையிலச்சடித்ததும் பிரம்மஸ்ரீ முத்துசுவாமி பாரதியவர்களால் தமிழிலியற்றிய விசுப்பிரம்ம புராணத்திலும் பார்க்கலாம்.

சூத்திர வித்தியாசங்களி லிருக்கிறது போல சாகை வித்தியாசங்களி லிருக்கிறது. அதாவது.

மனுவுக்கு:—சாமசாகையென்றும், ருக்சாகையென்றும்.

மயனுக்கு:—யஜுர்சாகையென்றும்.

துவஷ்டாவுக்கு:—ருக்சாகை யென்றும், அதர்வணசாகை யென்றும், சாமசாகையென்றும்.

சில்பிக்கு;—பிரணவ சாகையென்றும், சாமசாகை யென்றும், அதர்வண சாகை யென்றும்.

விசுவக்ஞனுக்கு:—அதர்வண சாகையென்றும், ருக்சாகை யென்றும், பிரணவ சாகையென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப் பிரகாரம், 1892ஷு சென்னையில் தெலுங்கிலச்சடித்த மூலஸ்தம்ப கிரந்தத்திலும், 1880ஷு அச்சடித்த தெலுங்கு ரதகாராதி காணத்திலும், 1890ஷு சென்னையிலச்சடித்த தெலுங்கு விசுவகர்ம புராணத்திலும், பிரம்மஸ்ரீ முத்துசுவாமி பாரதியவர்களா லியற்றப்பட்ட தமிழ் விசுவப் பிரம்ம புராணத்திலும் காணப்படுகிறது.

இவைகள் போலவே கோத்திரம், பிரவரம், குண்டம், தண்டம், யக்ஞோபவீத முதலியவைகளிலும் அநேக வித்தியாசங்களிருக்கின்றன.

சாகாவித்தியாசங்க ளிந்தப்படி ஏற்படில் சூத்திரங்களும் வித்தியா சத்தையடையுமல்லவா. இந்தப் பிரகாரம் சாகா சூத்திரங்களை ஒவ்வொருவரும் வித்தியாசங்களாக எழுதி அச்சிடப்பட்டிருந்தால் நம்மவர்களின் அனுஷ்டானங்களும், வித்தியாசமாகத்தானே யிருக்கும். மேலும் ஒவ்வொருவ ரெழுதின சாகைகளிலும், சூத்திரங்களிலு மிருக்கிற வித்தியாசங்களுக்கு சரியான அத்தாட்டிகளைக் காண்பிக்கவேண்டியது அவர்களின் பேரிலுள்ள பாரமல்லவா.

தவிரவும் லோகத்தில் வழங்குகின்றது மூன்று வேதங்களாகவும், அதர்வணவேதிகளாயுள்ளவர்களை காண்பதரிதாகவும். பிரணவவேதமென்பதை காணாமலுமிருக்கின்றது.

இந்தப்பிரகாரம் காணுகிறதற்கு அரிதாகவும் காணாமலுமிருக்கிற வேதங்களிருந்தாலல்லவா அதில் சொல்லப்படும் மந்திரங்களை யுபயோகப்படுத்தி சூத்திரங்கள் செய்திருப்பார்கள், நம்மவர்கள் அதர்வண வேதத்திற்கும், பிரணவவேதத்திற்கும் பலசூத்திரங்க ளுண்டெனக் கூறியிருக்கின்றதினால், அதர்வண வேதமும் பிரணவவேதமும் முக்கியமாக யிருக்கவேண்டியதும் அவைகளை அத்தியயனஞ் செய்யவேண்டியதும் நம்முக்கிய கடமை யல்லவா.



நம்மவர்க ளெழுதியிருப்பதை நான்பார்த்தமட்டில் ருக்சாகைக்கு ஆசுவலாயன சூத்திரமும், யஜுர்சாகைக்கு ஆபஸ்தம்ப சூத்திரமும் சரியாகவிருக்கின்றன. சாமசாகைக்கு போதாயன சூத்திரமென்றும், காத்தியாயனசூத்திரமென்றும்எழுதினது சரியாக காணவில்லை யென்று தோணுகிறது. அதாவது சாமசாகைக்கு திராஹியாயனமும், ஜைமினியும், சாட்டியாயனரும், கிருஹ்ய சூத்திரங்கள் செய்யாதிருக்கிறார்களேயன்றி போதாயனரும், காத்தியாயனரும் செய்யவில்லை. அதாவது போதாயனர் கிருஷ்ண யஜுர்வேதத்திற்கும், காத்தியாயனர் சுக்கிலயஜுர்வேதத்திற்கும் கிருஹ்ய சூத்திரங்கள் செய்திருக்கின்றார்கள். (தொடரும்.)

ஜோசியர். முத்தாச்சாரியர்,
மீனாக்ஷிபுரம்.

## புதுவருட வாழ்த்துகவி.

**பதினாடி யாசிரிய விருத்தம்.**

மாமருவு சூரிய குமாரன்வை வச்சுவத மநுவந்த ரத்தில்மேன்மை
வாய்ந்தவிரு பத்தியெ ட்டாஞ்சதுர் யுகத்திறுதி வளர்கின்றகலியுகத்தில்
வாசவை யாயிரத் தேழினிற் புகழும்நள வருடந் தனிற்சைத்ர
மதிதனிற் றஞ்சைநகர் வாழ்விஸ்வ கர்மகுலர் வாய்மையுட னிக்ஷயித்த
சேமமிகு கான்பரன் ஸ்கிலமெண் டிசையுஞ் செழித்தோங்கி நிதமும்வாழ்க
ஸ்ரீமது விராட்டுவிஸ் வப்பிரம்ம குருபரன் திருவரு ளிலங்கிவாழ்கத்
திகழ்பஞ்ச வேதவா கமகலை க்ஞானமிக் தேசமிசை நீடும்வாழ்கத்
திவ்யவிஸ் வப்ரம்ம வம்மிஸ நவப்ரம்ம தேவதைக ளினிதுவாழ்கப்
பாமருவு ஜநகாதி யோகியர்க ளுல்வரும் படிமீதியங்கி வாழ்கப்
பரமஸா நகாதி ரிஷிகள்மது முதலாய பஞ்சப்ர மாக்கள்வாழ்கப்
பதிதபா வனதித்யகா யத்திரிஸா வித்திரி பதுமசரஸ்வதியும் வாழ்கப்
பரசிவன் பரமேட்டி கதிரவன் போகிதன் பதிமுதற்றேவர் வாழ்கத்
தாமமிகு தேவகுருவிஸ் வகர்மா த்வஷ்ட சங்கராச்சார்யர் வாழ்கச்
சத்ய மிகும்விஸ் வசம யாசார்ய தேசிகர்கள் சந்ததிசெழித்து வாழ்கத்
தஞ்சைநகர் மேவும்விஸ் வப்ரம்மகுல மஹா ஜனசுகம் பரவிவாழ்கத்
தகுபழநி நகர்மௌனகுரு ருத்ரமூர்த்தியாச் சாரிகனிவுடன் வாழ்கவே.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
Ex. முனிசிபல் கௌன்சிலர்
விஸ்வகர்ம மஹாஜன நிரந்தர சென்டரல் கமிட்டி
டிவிஷன் காரியதரிசி அண்டு
சாஸ்திர ஆராய்ச்சி சங்கத்தின் மெம்பர்
பழநிஸ்தலம்.

## ஓர் சம்பாஷணை.

இராமன்—என்ன உமக்கு சென்னையிலிருந்து விஸ்வகர்மகுலோபகாரி பிரசுரம் வருகிறதாமே?

சோமன்—ஆமாம். நமது சபையாரால் வெளிவரும் பிரசுரத்தை வரவழைத்துப் பார்க்கிறேன்.

இரா.—அதிலென்ன விஷயத்தைப் பிரஸ்தாபிக்கிறார்கள்? அதை விபரமாகத் தெரிவிக்கக் கோருகிறேன்.

சோ.—அதில் நமது வம்சத்தினர்கள் முன்னுள்ள வளமையும், தற்கால நிலைமையும், இனியிருக்கவேண்டிய உரிமையும் எடுத்துக்காட்டி, நமதுகுலத்தினர் சீர்திருத்தமடையும்படி சாஸ்திரமூலமாக நமது குலசிகாமணிகளெழுதி வருகிறார்கள்.

இரா.—நம்மவர்களுக்கு கல்வியேஇன்னவிதமென்று கனவிலும் கண்டறியாக்கபடிகள். இவர்கள்தானா இப்பிரசுரத்தைக் கவனித்து முன்னுள்ள நிலைமையைக் கடைப்பிடித்து அதன் வழியில் நடப்பார்கள்! அவ்விதம் நடப்பார்களென்பது கஷ்டமாகும். ஆனால் இப்பிரசுரம் வெளிவந்ததற்குக் காரணம் நமது அதிர்ஷ்டந்தான்.

சோ.—அவ்வளவுமோசமா! இல்லை. இப்பொழுது இப்பிரசுரத்தைக் கண்ணுற்ற நிமிஷமே நம்மவர்களுக்கு முன்னுள்ள நிலைமையையடையக் ஞாபகம் முண்டாகி வருகிறது. ஆகையால் தேங்காய்க்கு நீர் சேருகிறதுபோல் நம்மவர்கள் கொஞ்சங் கொஞ்சமாக கல்வியில் வல்லவராகி ஒழுக்கத்தி விழுக்கமற்று தருக்காகவே வந்து விடுவார்கள்.

இரா.—ஆமாம். இவர்களுக்கு முக்கியம் ஒற்றுமையே யில்லை. இவர்கள் என்னமாய் முன்னுள்ள நிலைமையை யடையப்போகிறார்கள்? ஆனால், இவர்கள் இப்படி யிருப்பதற்குக் காரணமென்ன?

சோ.—"காமமே குலத்தினையும் நலத்தினையும் கெடுக்கவந்த களங்கம்
காமமே தரித்திரங்க ளனைத்தையும் புகட்டிவைக்கும் கடாரம்
காமமே பாத்திக்குச் செல்லாமல் வழியடைக்கும் கபாடம்
காமமே யனைவரையும் பகையாக்கிக் கழுத்தறியும் கத்திதானே."என்று கூறிய

ஆன்றோர்களின் வாக்கியப்பிரகாரம் நம்மவர்களில் சிலதுர்ச்சனர்கள் பலவகுப்பின் பெண்களைச் சேர்த்துக்கொண்டு அவர்களிடத்தி லுற்பவிக்கும் குழந்தைகளுக்கு தன் குலத்தொழிலை கற்பித்து அவர்களுக்கு ஆச்சாரிபட்டம் அமைத்துவிடுகிறார்கள். இப்படி ஜாதியைக் கெடுத்த சண்டாளர்கள் தன்குலத்தை கெடுத்த தன்னியில் தாங்களும் அல்லலுற்று, தாமடையவேண்டிய மோக்ஷவீட்டையு மிழந்து, அநேககதிக் காளாகிவிடுகிறார்கள். சிலர் மது முதலான லாகிரி வஸ்துக்களை உபயோகப்படுத்தி, தம்மறிவை அழித்து ஆசாரத்தைக் குறைத்து அபத்த மொழியை தம்குலத்திற்கு விளைத்து விடுகிறார்கள். சிலர் தம்மைப்போல் தட்டைப்பற்களை வாய்ந்த ஆடு, மாடு, குதிரை, ஒட்டகம், கழுதை, குரங்கு, யானை முதலான பிராணிகளெல்லாம் கொல்லாவிரதம் கொண்டிருப்பதைக் கண்டும் அவ்வழியிலில்லாமல் மீண்டும் கொலைபாதகத்திற்



கேதுவாகிய மாமிசத்தைத் தின்று மகிழ்கிறார்கள். தாயுமானவர், "கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற் றல்லாதார் யாரோ வறியேன்."—என்றபடி, ஜீவகாருண்யமில்லாது கொலைபாதகத்துக்கேதுவாகிய மாமிசத்தை யருந்துவோர் மானிடரென்று மதிப்பதற் கிடமில்லை. ஏனெனில், நம் சரீரத்தை தகிப்பதற்கு சுடுகாட்டை ஏற்படுத்தி யிருப்பதுபோல மற்ற பிராணிகளின் சரீரத்தை தகிக்க மாமிசம் தின்பவர் வயிறே சுடுகாட்டை யொக்குமாதலால் அவர்கள் மனிதரல்ல. அவர்களால் ஆசாரங்கெட்டு வருணம் வசையுற்று தாழ்ந்துவிடும். தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனார் திருக்குறளில், "ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க, மிழிந்த பிறப்பாய் விடும்." என்றபடி தன் வருணத்திற்கேற்ற ஆசாரத்துட னிருப்பது அக்குலத்திற் குரியதாகும். அவ்வாசாரத்தினின்று தவறுதலானது தாழ்ந்த வருணமாய்விடும். இப்படி யிழிவுற்றவர்களுடன் ஆசாரமுற்ற வறிவுடையோர்கள் அணுகியிருப்ப தெங்ஙனம்? ஆனதினால்தான் ஒற்றுமைக்கு ஏதுவில்லாமல் போய்விட்டது.

இரா.—ஆமாம் நீர் சொல்லிவந்தவர்களில் மாமிசங்களைமட்டும் நீக்கினவரில் சிலர் ஆற்றில் பிரதிதினமும் ஸ்நானஞ்செய்து வலிப்புமாட்டுக்கு சூடுபோட்டதுபோல் விபூதியை பறக்கப்பறக்க பூசிக்கொண்டு பகல்வேஷம் போட்டுக்கொள்ளுகிறார்களே தவிர, காயத்திரியை கனவிலும்நினைக்காமலிருப்பவர்களை எப்படி விஸ்வ பிராமணரென விளம்புவது?

சோ.—(ஸ்லோகம்) "தூஷகஸ்ச க்ரியாஹீனஸ்யோ நிக்ருஷ்டோ தீர்க்கோபகஃ சத்வாரக்கர்மசண்டாள ஜாதிசண்டாள உத்தமஃ" என்றபடி பிறரை தூஷிப்பவன் நித்ய கர்மானுஷ்டானத்தைவிட்டவன், அதிலோப முள்ளவன் மிகுந்த கோப முள்ளவனுகிய இந்த நால்வர்களும் கர்ம சண்டாளர். இவர்களைப்பார்க்கிலும் ஜாதிசண்டாளன் மேன்மையுள்ளவன். ஆனதினால் முக்கியம் நித்திய கர்மானுஷ்டானம் தெரிந்தவன்தான் விஸ்வ பிராமணனென சொல்லப்படுவன்.

இரா.—ஸ்ரீமத் பராத்பர பரசிவ விராட்விஸ்வபிரம்மமே பரத்துவமான பதியாயிருக்க, அதைவிட்டு பஞ்சமர்கள் வணங்கக்கூடிய காத்தான், கருப்பன், வீரன், இருளன், முனியன், நொண்டி, சப்பாணி, பிச்சன், மாரி, காத்தி, பேச்சி, கூளி, முட்டி முதலான அசேதனமுடைய துர்தேவதைகளை நம்மவரில் சிலர் வணங்கிக்கொண்டு நான்விஸ்வபிராமணனென வீரமாய்பேசி வெட்கமின்றி வெளியில் வந்துவிடுகிறார்களே! இவர்களை எவ்விதம் விஸ்வபிராமணரென விளம்புவது?

சோ.—நீர் சொல்லிய வாக்கிய மிகவும் யோக்கியம். இவர்களை யானையைக்கண்ட குருடரானவர்களுடன் சேர்ப்பதே மிகவும் சிலாக்கியம். இவர்களைக்குறித்து நான் ஒரு கதைசொல்வேன். அதாவது, கிருஷி யென்னும் பட்டணத்தில் கிருபரென்னும் பிறவிக்குருடரானவரிருந்தார்கள். அவர்கள் யானை யின்னவிதமென்றறியார்கள். அவர்கள் இருக்கும் வழியாக யானை கங்கைக்குப்போவது வழக்கம். அப்பொழுது அந்நகரத்திலுள்ள ஜனங்கள்யாவரும் யானைவருகிறதென்று சொல்வது பழக்கம். அதையுணர்ந்த இப்பிறவிக்குருடரானவரும் யானையைப் பார்க்க ஆசையுற்றிருக்கும்பொழுது யானையும் இவர்கள் சமீபமாக வந்துவிட்டது. அப்பொழுது குருடரானவரும் யானைக்காரனைப் பார்த்து சொல்லுகிறார்கள்.

(தொடரும்.)

குலமகன்.

## சுஜாதி ஒற்றுமை.

நம்மவர்களுக்குள் ஒற்றுமை வேண்டுமென்பதைப்பற்றி இரண்டொரு மாதத்திற்குமுன் இப்பத்திரிகையில் எழுதியிருந்தது. அங்ஙனம் எழுதியிருந்தும் அவ்வொற்றுமை விஷயத்தை நம்மவர்களுக்கு அடிக்கடி எடுத்துக்காட்டி கவனமூட்டுவது நமது கடமையாதல்பற்றி இப்பொழுதும் சிறிது கூறலுற்றனம்.

பூவினுள் மணமும், கரும்பினுள் சுவையும், எள்ளினுள் எண்ணெயும் எங்ஙனம் பிரிவற்றிருக்கின்றனவோ அங்ஙனம் மனுஷ்யரிடத்தில் பிரிவற்றிருக்க வேண்டியது ஒற்றுமையேயாம். ஒற்றுமை யென்பது ஒருமித்திருத்தலெனப் பொருள்படும்.

உலகத்திலே ஒருஜீவனை சம்பந்தப்பட்ட மற்றொருஜீவன் விசுவாசிக்கிறதும், ஒற்றுமைபாராட்டுவதும், அநுகூலஞ் செய்துகொள்வதும் இயற்கையாம். ககனத்திற் பறக்கின்ற பக்ஷிகளும், வனத்திற் சஞ்சரிக்கின்ற மிருகங்களும், ஜலத்தில் வசிக்கின்ற மச்சங்களும், ஒரே கூட்டமாகக் கூடி வாழ்கின்றன. தேனீ, எறும்பு முதலிய ஜீவராசிகளும் அவ்விதமே சஞ்சரிக்கின்றன. உணவாதிகளையும் ஒன்று கூடியே சேகரிக்கின்றன. பகுத்தறிவும், நாகரீகமும், விவேகமுள்ள மனிதவர்க்கத்துள் விஸ்வகர்ம குலத்தினரான நாம் ஒன்று கூடி ஒரு கருமத்தைச் செய்யின் நம்மிடத்தில மற்றஜாதியர்களுக்கு நன்மதிப்பும் அச்சமும் உண்டாகா? மிருகாதிகளில் யானைகளைப் பிடிக்கும் பாகர்களாகிய தந்திரசாலிகள் அவற்றைப் பிடிக்கும் பொருட்டு ஒரு படுகுழியைத்தோண்டி அதன்மீது சில கழிகளையும், செத்தைகளையுமிட்டு வைப்பார்கள். யானைகள் ஒரு கூட்டமாக அணியணியாகப் போகும்போது தங்கள் கூட்டத்திற்கு ஆபத்துண்டாவண்ணம் அக்கூட்டத்தில் தலைமைபெற்ற ஒரு பெரியயானையானது தனது துதிக்கையினால் ஒருகழியைப் பிடித்துக்கொண்டு பூமியின்மீது ஊன்றி, பூமிசப்தத்தையறிந்து கவனத்தோடு போவது வழக்கம். அங்ஙனம் செல்கிறபோது பூமியில்சப்தம் வேறுபடுமாயின் இங்கு படுகுழியிருக்கிறதென வஞ்சி நின்றுவிடும். அதைக்கண்ட மற்ற யானைகளும் அப்படியே நின்றுவிடும். இதனால் என்னஏற்படுகிறதெனில், தனித்தனி வேறுசெல்லாமல் ஒற்றுமையோடு அம்மிருகங்கள் வசிப்பதனால் தங்களுக்கு ஆபத்து நேருகிற தில்லையெனத் தெரிகிறது. மிருகாதிகளுக்கு இவ்வளவு ஒற்றுமை உண்டாயிருக்கிறபோது நாம் ஏன் ஒற்றுமையோடிருக்கலாகாது? ஒற்றுமையோடிருப்போமாயின் ஒருகாலும் நமக்கு ஆபத்து விளையவேமாட்டாது. இன்னொரு திருஷ்டாந்தம் கூறக்கேண்மின். நமது கைகளில் ஐந்து விரல்களிருக்கின்றன. அவற்றில் தனித்தனி ஒவ்வொன்றும்தொழில்களைச் செய்யவும், ஒருவனை அடிக்கவும் ஒருகாலும் சாத்தியப்படாது. ஐந்து விரல்களும் ஒன்றுகச்சேரின் பல முண்டாகி ஒருவனையடிக்கவும் பல தொழில்களை நடத்தவும் சாத்தியமாகும். அவ்விரல்களைப்போல் ஒன்றுகூடி (ஒற்றுமையோயோடிருந்து) ஒருதொழிலைச் செய்வோமாயின் அத்தொழில்கள் முற்றுப்பெருவதற்குச் சந்தேகமேயில்லை. மற்றொரு திருஷ்டாந்தம். ஒரு வண்டியில் இரண்டு எருதுகளைப் பூட்டி வண்டியை நடத்தும்போது ஒன்று ஒரு பக்கத்தில் இழுத்தும், மற்றொன்று இன்னொரு பக்கத்தி லிழுத்தும் சென்றால் அவ்வண்டி குறித்தவிடம் செல்வது அசாத்தியமாய் முடியுமன்றோ? அதுபோலவும் மூங்கில்கட்டையோ, அல்லது, விறகுக்கட்டையோ ஒருவன் கைகளிலேயோ அல்லது, கால்களினாலேயோ முறித்து விடுவதாயிருந்தால் சாத்தியமாகுமா? அக்கட்டை அவிழ்த்து தனித் தனியாக்கின் ஒவ்வொன்றையும் அதி சுலபமாய் முறித்து விடச் சாத்தியமாகும். ஒரு தேரை எல்லோரும் ஒரேமூச்சாய் இழுக்காவிடில் அது நடக்கவேமாட்டாது. ஒரு சப்பரத்தை எல்லோரும் தூக்காவிட்டால்



அதை எழுப்பமுடியாது. நாம் தனித்தனியிருப்போமாயின் பிறர் நம்மை வெல்லவும் வருந்தவுங் கூடும்.

நாம் பல நீதி சாஸ்திர முதலியவைகளைக்கற்றும், ஒற்றுமையைப்பற்றி உபந்நியசிக்கும் பிரசங்கங்களைக்கேட்டும் சிந்தித்தும் வருகிறோம். தந்தம் ஒற்றுமையைக் கவனிப்பதேயில்லை. இவ்வொற்றுமை ஒவ்வொரு குடும்பங்களில் புருடனும் மனைவியும், அண்ணனுந் தம்பியும், மாமனும் மைத்துனனும் பரஸ்பரம் கூடி வாழ்ந்தாலன்றி சுஜாதியொற்றுமைவராதென்பது தெற்றெனப் புலப்படுகின்றது. ஆகலின் குடும்ப ஒற்றுமையை ஒவ்வொருவரும் முன்னதாகச் சீர்படுத்திவந்து சுஜாதியொற்றுமையை நாட்டவேண்டும். அஃதின்றி சுஜாதியொற்றுமை கைகூடுவது அசாத்தியமாகும். ஆதலின் இனியேனும் பகுத்தறிவற்ற மிருகங்களும் பக்ஷிகளும் ஒற்றுமையோடிருப்பதை பார்த்தாகிலும் அவ்வழிநிற்க முயலுவோமாக.

மணிமங்கலம்-இராஜரத்தினச்சாரி.

## 2 வது விஸ்வகர்ம
## மஹாஜன கான்பிரன்ஸ் முன்னிலையில் வாசிக்கப்பெறும்
# ஓர் உபந்நியாசப் பத்திரிகை.

நம்முடைய குலத்தவர்கள் ஒற்றுமைப்பட்டு சீர்திருத்தமடையவேண்டுமென்கிற அபிமானத்துடன் சரீரப்பிரயாசை பொருட்செலவு முதலியவைகளைப் பாராமல் இச்சமயம் இவ்விடத்தில் கூடியிருக்கும் குலாபிமானமுள்ள நம்முடைய சகோதரர்கள் அனைவருக்கும் அநேக நமஸ்காரம்.

சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய அடியேன் ருக்கு, யசுர், சாமம், அதர்வணம், பிரணவ மென்னும் ஐந்து வேதங்களும் மற்ற சாஸ்திரங்கள் யாவும் சந்தேக விபரீதமறக் கற்றுணர்ந்தவித்வான்கள் நிறைந்திருக்கும் இச்சபையின்கண்ணே குலாபிமானமானது என் பிடரியைப்பற்றி தள்ளி உங்கள் சந்நிதானத்தில் நிறுத்தியபடியால் யான் சிலவிஷயங்களைப் பற்றி சொல்லப் புகுந்தேன். அவற்றில் சொற்பிழை, வாக்கியப்பிழை, இலக்கணப்பிழை முதலியவைகளாயிருப்பவைகளை விட்டு சத்விஷயமாயிருக்கப்பட்டவைகளைக் கிரகித்து அடியேனையும் இன்னும் என்னைப்போன்ற மற்ற சிறுவர்களையும் சீர்திருத்தும்படியான முக்கிய ஏற்பாடுகளைச் செய்யும்படியாய் உங்கள் திருவடித் தாமரைகளுக்கு மறுபடியும் நமஸ்காரம் செய்கிறேன்.

நம்மவர்களில் சிலபுத்திமான்கள் கூடி நம்முடைய குலச்சீர்திருத்தமான ஓர் காரியத்தை செய்யஆரம்பித்தால் அதற்கு நம்மவர்களிலேயே வேறுசிலர் எத்தனையோ ஆட்சேபனைகள் சொல்லுகிறார்கள். அதாவது அவர்கள் தங்களுடைய அபிப்பிராய பேதத்தினால் தொழிலைக்குறித்தும் கல்வியைக் குறித்தும் நம்முடைய ஜாதிக்குரிய பட்டப்பெயரைக் குறித்தும் போராடுகிறார்கள். இன்னுஞ்சிலர் வைதிகவிஷயத்திலும் ஆசாரசீர்திருத்தங்களைக்குறித்தும் பல பலவிதமான அபிப்பிராய முடையவர்களாய் வாதிக்கிறார்கள்.

காட்டில் எரித்த நிலவுபோல் வீண்போகாம லிருக்கும்படியாய்த்தான் நம்மவர்களெல்லாம் ஒருங்குகூடி இப்பொழுது விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் என்று நடத்த முன்வந்திருக்கிறார்களென்பது யாவருக்குந்தெரிந்தவிஷயமே. இப்பேர்ப்பட்ட நன்னோக்க முடைய மகாசபை இரண்டு வருஷங்களாக நடந்து வருகிறபடியால்

இது இன்னும் இளமைப்பருவத்திலேயே இருக்கிறது. இதற்கு ஓர் விக்கினமுமில்லாமல் சரிவர நடத்திவருவதற்கு தக்க ஏற்பாடுகள் ஒன்றையும் காணேம். இப்படியிருக்கும் பொழுதே மேற்கூறிய அபிப்பிராய பேதமுடையவர்கள் தங்கள் தங்கள் கட்சியை பூர்த்தி செய்வதற்காக பாடுபடுகிறார்கள். இதனால் கட்சிப் பிரதிகட்சிகள் ஏற்படுமென்று நினைக்கிறேன். ஏனென்றால் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை காலதேச வர்த்தமானங்களை முன்னிட்டு மாற்றிக் கொள்ளாமல் தங்கள் பிடிவாதத்தையே எப்படியாவது சாதிக்கவேண்டுமென்றால் நம்முடைய நன்னோக்கமானது நிறைவேறாமல் அநேக கட்சிப்பிரிவினைகள் யேற்படுமென்பதிற் சந்தேகமில்லை.

அடியேனுடைய அபிப்பிராயமென்னவெனில் நாமும் நம்முடைய குலத்தினுதித்த சிறுவர்களும்சிறுமிகளும் மற்ற வைசிய சூத்திர ஜாதியாரைக் காட்டிலும் மிகவும் தாழ்ந்த நிலைமையிலிருக்கிறோம். நாம் மேல் நிலைமைக்குவருவதற்கு கல்வியிலும் மற்ற லௌகீக விஷயங்களிலும் ஆசாரம், நல்லொழுக்கம், வேதபாராயணம்முதலிய வைதிக வியவகாரங்களிலும் விருத்தியடைய வேண்டியது அவசியமாயிருக்கிறது. இப்படியிருக்க அனாவசியமான சில அற்பமான விஷயங்களைக் குறித்து வாதித்துக்கொண்டுநம்முடைய வாணாளைவீணாக்குவதிற் பிரயோசனமில்லை. ஆகையால் நாம் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயமென்னவென்றால் நம்முடைய குலத்தினுதித்திருக்கும் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் கல்வி போதிக்கவேண்டும் நம்மவர்களுடைய கைத்தொழில்களை அன்னிய ஜாதியாரும் அன்னிய மதத்தவர்களும் கற்றுக்கொண்டு கூலிகளைக் குறைத்து வேலைகள் செய்து வருவதால் நம்மவர்களுக்கு பிழைப்புகுறைந்து தக்கவரும்படியில்லாமல் மிகுந்த ஏழைகளாயிருக்கிறார்களென்பது யாவருக்குந் தெரிந்த விஷயமே. அப்படியிருப்பதினால்பள்ளியில் வாசிக்கும் பிள்ளைகளுக்கு சம்பளமும், புஸ்தகங்களும், உடைகளும் வாங்கிக்கொடுக்க அசக்தர்களாயிருக்கிறார்கள். ஐந்தாறு வயதான வுடனே நம்முடைய குலச்சிறுவர்களை சொற்ப ஊதியத்துக்கு ஆசைப்பட்டு துருத்தி ஊதுதல், சம்மட்டி அடித்தல் முதலிய வேலைகளில் விட்டுவிடுகிறார்கள். கல்வியில்லாக் குறையாலும் பெற்றோர்களுடைய கவனத் தாழ்வினாலும் மற்ற ஜாதிச் சிறுவர்களோடு சேர்ந்து, பீடி, சிகாட்டு, சுருட்டு, மூக்குத்தூள் முதலிய கெட்டவஸ்துக்களை வாங்கி உபயோகிக்கக் கற்றுக் கொண்டு பெற்றோர்களுடையபேச்சு கேளாமல் நடந்து கொண்டே காலாந்தரத்தில் கெட்டுப்போகிறார்கள். ஆகையால் "கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை" யென்னும் ஆன்றோர் வாக்கியத்தை முக்கியமாய் கவனித்து நம்முடைய குலச்சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் கல்வியை அவசியமாய் கற்பிக்கவேண்டியதாயிருக்கிறது. இதற்கு தர்ம பள்ளிக்கூடங்கள் பல தேசங்களிலும் பல ஊர்களிலும் ஏற்பாடு செய்யவேண்டியதாயிருக்கிறது. பகலில் வேலை செய்யும் சிறுவர்களுக்கு இரவில் கல்வி கற்பிப்பதற்கு தர்ம இராப்பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த வேண்டிய தவசியமாயிருக்கிறது. இப்பேர்ப்பட்ட ஏற்பாடுகள் செய்வதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொருபட்டணத்திலும் விஸ்வகர்ம குலாபிமான சங்கங்கள் ஏற்படுத்தவேண்டும். இவைகளெல்லாம் ஏற்பட்டு சீர்திருத்தங்கள் நடப்பதற்கு சற்றேறக்குறைய ஒரு வருஷமாகும். மூலதனமும் வேண்டும். ஆகையால் நம்மவர்கள் யாவரும் ஒருங்கு சேர்ந்து ஓரே மனதாய் தங்கள் தங்கள் சக்தியாநுசாரம் சந்தாவாகவாவது முன் பணமாகவாவது கொடுத்து ஒவ்வொரு ஊரிலும் சற்றேறக் குறைய இரண்டாயிரம் ரூபாய் மூலஸ்திதி வைத்து அந்தத்தொகையை ஒரு வருஷத்திய செலவுக்கு வைத்துக் கொண்டு காரியங்களை நடத்திக்கொண்டு



வந்தால் அதற்கு மேற்பட்டு பொருள் தானாகவே வந்துசேரும். மற்ற சீர்திருத்தங்களெல்லாம் யாதொரு குறைவுமின்றி சரியாய் நடந்து கொண்டேவரும்.

சென்னப் பட்டணத்தில் சில ஏற்பாடுகள் நடந்துகொண்டு வருகிறது. அதை மேன்மேலும் விருத்திசெய்வதற்கு அபிமானிகளாயுள்ள புண்ணியசீலர்கள் யாவரும் ஒரேமொத்தமாக பணம் கொடுக்க முடியாவிட்டாலும் நமது "விஸ்வகர்மகுலோபகாரி" பத்திரிகைக்கு ஆயிரம் சந்தாதாரர்களைச் சேகரித்துத் தந்து ஒரு வருஷ சந்தாபணத்தை முன்பணமாக கொடுத்துவிட்டால் மூவாயிரம் ரூபாயாகிறது. அதனாலேயே பத்திரிகையும் தவக்கமில்லாமல் நடைபெறும். மேற்கூறிய சீர்திருத்தங்களும் சரியாய் நடந்து வருதற்கு சாத்தியமாகும். வேறுமாறான அபிப்பிராயமும், பிடிவாதமும், சுயநலப் பிரியமும், தற்புகழ்ச்சி விருப்பமுடைய பல அங்கத்தினர் சேர்ந்த ஒரு சபையாவது கமிட்டியாவது வேண்டியதில்லை. இப்பேர்ப்பட்டவர்களுடையயோசனைகூடவே கூடாது. ஒருகால் இம்மாதிரியான துர்க்குணமுள்ளவர்களைச் சேர்த்துக்கொண்டு இவ்விதபொது நன்மையைக்குறித்த காரியங்களைச்செய்ய ஆரம்பித்தால் இவர்கள் அக்காரியங்களைச் சரியாய் நடத்திவரும்படி விடமாட்டார்கள். தாங்களும் முன்வந்து நடத்தமாட்டார்கள்ஏனென்றால்இக்காரியங்களெல்லாம் சரியாய் நடந்து வரும்பட்சத்தில் இதனால் ஏற்படும் கீர்த்திப் பிரதாபங்களெல்லாம் தங்களுக்கு வாராதென்றும் முதலில் தூண்டுகோல்போ லிருந்தவருக்கே உண்டாகுமென்கிற பொறாமைகொள்வார்கள். இவைகளெல்லாம் அடியேனுடைய சொந்த அநுபவமாக பலவருஷங்களாகக்கண்டும் அநுபவித்து மிருக்கிறேன்.

இவ்வித காரியங்களெல்லாம் செய்வதற்குயாவரும் முன்வரமாட்டார்கள் "படைக்கொருவன் கொடைக்கொருவன்" என்கிற பழமொழிப்படி ஏகதேசமாக யாரேனும் ஒருவர் இருவர்தான் கடவுளுக்குப் பிரீதியாகவும் உண்மையுடனும் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமலும் சுயநலத்தைக் கோராமலும் மெய்வருத்தம்பாராமலும் தற்புகழ்ச்சி முதலியவைகளைவிரும்பாமலும் மனச்சலிப்பில்லாமலும் அதிக ஊக்கத்துடன் தாம் மேற்கொண்ட காரியங்களை சரியாய் நடத்தக் கூடியவர்களாயிருப்பார்கள். இவ்விதமான புண்ணிய புருஷர்களை பலவிதத்திலும் மேற்படி பொதுக்காரியங்களைச் செய்ய வொட்டாமல் தடுப்பதற்கு அநேகவீணர்கள் புறப்படுவார்கள்,

பத்திரிகைகள் நடத்துதல், பகற்பள்ளிக்கூடங்கள், இராப்பள்ளிக்கூடங்கள் முதலியவைகள் ஏற்படுத்தி நம்முடையசகோதரர் சகோதரிகளுக்கும்புத்திரர் புத்திரிகளுக்கும் பந்துமித்திரஜனங்களுக்கும்கல்வி கற்பிப்பதோடுகூட கல்வி கேள்விகளிலும் அநுபவத்திலும் முதிர்ந்த சில பெரியோர்களை உபந்நியாசகர்களாக நியமித்து அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு பதினைந்து ரூபாய்க்குக் குறையாமல் சம்பளம் ஏற்படுத்தி பல கிராமங்களுக்கும் பட்டணங்களுக்கும் ஊர்களுக்கும் அனுப்பி காலை மாலைகளில் நம்குலத்தவர்கள் பலபேர்களை ஒன்று சேர்த்து அவர்களுக்கு கல்வி ஆசாரம்ஜாதியபிமானம் ஒற்றுமை ஈஸ்வரபக்தி முதலான விஷயங்களைக்குறித்து பல அரியபெரிய உபந்நியாசங்கள் செய்யும்படியாக ஏற்பாடுசெய்யவேண்டும். தக்க சமயமும் வசதியான இடமும் கிடைக்கும் பட்சத்தில் பெரியசபைகள் சேர்த்து பல பெரியோர்களைக் கொண்டு உபந்நியாசங்கள் நடத்தவேண்டும். இதற்கு பத்து உபந்நியாசகர்களை நியமித்தால் மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் விழுக்காடு வருஷத்திற்கு 1800 ரூபாய் செலவுபோக 200 ரூபாய் மிச்சமிருப்பதை நோட்டீசுகள், புஸ்தகங்கள் முதலானவைகள் அச்சிட்டு இலவசமாக கொடுப்பதற்கு செலவாகும். இப்பேர்ப்பட்ட காரியங்களெல்லாம் சரி

யாய் நடந்து வருகின்றனவா வென்று மேல்பார்வை பார்ப்பதற்கு தக்க கல்வி கேள்விகளில் விற்பன்னரும் சாவகாசமுடையவருமான ஒரு புண்ணிய சீலரை நியமிக்கவேண்டும். இவருக்கும் ரயிற்செலவு சாப்பாட்டுசெலவு முதலிய வைகளுக்குப்போதுமான பணம் கொடுக்கவேண்டும். ஊர் ஊராய் பிரயாணஞ்செய்யும் உபந்நியாசகர்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு உண்டியிருக்கவேண்டும். அவ்வுண்டிகளில் சேரும்பொருளை ஆங்காங்குள்ள சபையார்களுக்குச் சேர்த்துவிடல் வேண்டும். இவற்றைக்கொண்டொருபண்டு சேர்த்து வந்தால் பின்னிட்டு நடக்கவேண்டிய காரியங்களுக்கு மூலஸ்திதியாகயிருக்கும். இப்பேர்க்கொத்த நற்காரியங்களுக்கு விக்கினங்களை உண்டுபண்ணாமல் தங்களாற் கூடியமட்டும் வாக்காலும், காயத்தாலும், திரவியத்தாலும் சகாயஞ்செய்பவர்களை விஸ்வகர்ம குலாபிமானிகளென்று சொல்லத் தகுந்தவர்கள். இவ்வி...த்தில் கூடியிருக்கும் புண்ணியாத்மாக்கள் யாவரும் இவ்விஷயங்களை நன்றாய் கவனித்துதக்க ஏற்பாடுகள் செய்யவேண்டியது முக்கிய கடமையாகும்.

சகல நற்குண நற்செய்கைக ளுடையவர்களும் குலாபிவிர்த்திக்காக ஊக்கத்துடனும் உண்மையான அபிமானத்துடன் உழைப்பவர்களும் சகல வேத சாஸ்திரங்களில் போதுமான தேர்ச்சி யுடையவர்களுமாயுள்ள புண்ணிய புருஷர் யாரேனுமொருவர் முன்வரும் பட்சத்தில் அவரிடத்தில் நம்முடைய குலாபி விர்த்திக்காக மூலஸ்திதியாக சேர்க்கப்பட்டிருக்கும் பொருளை ஒப்பிவித்து அவரிஷ்டப்படி நம்முடைய குலாபிவிர்த்திக்கான சகலகாரியங்களும் நடத்தும்படி ஏற்பாடு செய்துவிட்டால் எடுத்த காரியம் முட்டுப் படாமல் நடந்துவரும். அப்படியில்லாமல் முன்வருபவரை நம்பாமலும் இவ்வித ஏற்பாடுகள் செய்வதினாலுண்டாகும் பேரும் கீர்த்தியும் அவருக்குச் சேர்ந்து விடுகிறதே நமக்கு வராதேயென்று துரெண்ணங் கொண்டால் எந்தகாலமும் நாம் சீர்பட மாட்டோம். சாதி சீர்திருத்தத்திற்காக உழைக்கிறேனென்று சொல்லிக் கொண்டு அநேகர்கள் தங்கள் பெருமைக்காகவும் வயிறுவளர்ப்பதற்கு பொருள் சேகரிப்பதற்காகவும் பாடுபடுகிறார்களேயொழிய உண்மையில் உழைப்பவர்களைக் காணோம். நம்முடைய குலாபிவிர்த்திக்காக உழைப்பதாகச் சொல்லுகிறீர்களே உங்களுடைய குடும்ப சிலவுக்குப் போதுமான மட்டும் செலவுக்குக் கொடுக்கிறேன் நம்முடைய ஜாதி சீர்திருத்தம் முதலிய பொது நன்மைக்காக உழையுங்களென்றால் உடனே பின்வாங்குகிறார்கள். இதனாலேயே இவர்கள் சொல்வதெல்லாம் வெளிவேஷமென்று நன்றாய்த் தெரிகிறது. இதுபோல் குலாபிமானிகளென்று முன்வரப்பட்டவர்களுடைய எண்ணங்களெல்லாம் எனக்குத்தெரியும். இப்பேர்பட்ட போலி அபிமானிகளிருந்தால் நம்முடைய ஜாதி எப்படி சீர்திருத்தமடைவது? மேலும் மேலும் நல்ல அந்தஸ்துக்கு வரும் இந்த விஸ்வகர்ம மஹாஜன கானபிரன்ஸில் கூடியிருக்கும் புண்ணியாத்மாக்களாகிய நீங்கள் யாவரும் அடியேனால் எடுத்துக் காண்பிக்கப்பட்ட விஷயங்கள்யாவையும் நன்றாயோசித்து நம்முடைய குலாபி விருத்திக்குத் தக்க ஏற்பாடுகள் செய்யும்படியாய் கோருகிறேன். ஆனால் அடியேனுடைய சொந்த அபிப்பிராயமென்னவென்றால் ஒவ்வொரு பட்டணத்திலும் ஒவ்வொரு கிராமத்திலும் நற்குண நற்செய்கையும் தக்கயோக்கியதையுமுடைய ஒவ்வொருவரை ஏற்பாடு செய்துவிட்டால் அவர்கள் தங்களுக்கு உதவிக்காக நல்லவர்களாக தெரிந்து சேர்த்துக்கொண்டு நம்முடைய குலாபிவிருத்தியைக் குறித்து பாடுபடுவார்கள்.

கொ. கன்னியப்பாச்சாரி,

சென்னை.

***



## நம் சகோதரர்களின் மாட்சி.

### தான் பிறந்த சாதிக்குக் கௌரவமுண்டாக்கினார்:

மதுரையிலுள்ள சௌராஷ்டிய ஜாதியாரில் முதல் முதலாக கல்வி விர்த்தியடைந்த Mr. M. C. சித்தாரமன் என்பவர் கவர்ன்மெண்டு ஸ்காலர்ஷிப்பெற்று வித்தியாவிலக்கணம் பயில மான்செஸ்டர் நகரத்துக்குப் போய் அவ்விடத்திய கலாசாலையில் 1911-ம் வருஷமுதல் பயின்று பின்னச் சாலையில் பரீட்சையில் தேறினார். அவ்விடம் பயிலும் பொழுது இங்கிலாண்டு ஜெர்மனி பிரான்ஸு முதலிய தேசங்களுக்கும் போய் அவ்விடத்திய யந்திரசாலைகளில் நெசவு சம்மந்தமானது மட்டுமல்ல சாயம் போடுதல் அச்சடித்தல் காயிதம் செய்தல் முதலிய கைத்தொழில் மர்மங்களையுங் கவனித்து அவைகளில் அனுபோகப்பட்டு தமது ஜனன தேசத்திற்கு இரண்டு வாரங்களுக்குமுன் திரும்பி வந்திருக்கிறார். இப்படிப்பட்டவர்களால் தான் நம்மிந்தியா முன்னுக்கு வரவேண்டும்.

***

### புலையர் சபை.

திருவனந்தபுரத்திலிருக்கும் புலையர்களெல்லாஞ் சேர்ந்து ஒரு சபை நடத்தினர் டவுன் ஹாலில் 100 புலையர் வரையில் சேர்ந்திருந்தார்கள். திவான் சபாநாயகராக வீற்றிருந்தார். புலையரில் ஆண் பெண்ணிருபாலருங் கலந்திருந்தனர் டிஸ்டிரிக்டு ஜட்ஜி ராமன் தம்பியும் ஹைகோர்ட் வக்கீல் மாலூர் மிஸ்டர் கோவிந்த பிள்ளையும உபநியாஸஞ் செய்தனர் திவானவர்கள் செய்த உபநியாஸம் புலையர்கள் விஷயத்தில் மிக்க அனுதாபமுள்ளதாயும் அவர்களுக்குத் தென்பைத் தரும்படியானதுமாயிருந்தது சுதேச பாடசாலையில் 5-வது வகுப்பில் வாசிக்கும் பெண்ணுக்கு ஸ்காலர்ஷிப்பு உபகாரச் சம்பளம் அளிப்பதாய் வாக்குதத்தஞ் செய்தனர்.

***

### தஞ்சைஜில்லா கூட்டுறவு கான்பரென்சு.

இக்கான்பரென்சின் ஐந்தாம் வருஷ மகா நாடு இந்த ஏப்ரல் மாதம் 9-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை தினம் தியாகராஜப் பெருமானும் கமலவல்லித் தாயாரும் ஒருங்கே அமையப்பெற்ற திவ்ய க்ஷேத்திரமான திரு ஆரூரின்கண்ணுள்ள போர்டு ஐஸ்கூலில் கொண்டாடப்பட்டது. மதிராஸ் கார்பொரேஷன் ரிவினியூ ஆபீஸரான ராவ்பகதூர் டி. விஜயராகவாசாரியார் மேற்படி கான்பரென்சுக்கு அக்ராசனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தார். பரஸ்பரோபகாரச் சிந்தையும் கூட்டுறவின் ஆர்வமும் அபிமானமும் கொண்டிருக்கும் கோ-ஆபரேடர்கள் அனைவரும் இம்மகா நாட்டிற்கு விஜயம்செய்தார்கள். "உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர் பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்னும் முதுமொழியின் பிரகாரம் இத்தகைய மகா நாடுகளால் தேசத்தின் பொருளாதாரத்திற்கு இன்றியமையாதனவாயிருக்கும். கைத்தொழிலும் விவசாயமும் சிரத்தியாகக் கூடுமாதலின் மகா ஜனங்கள் அதில் உபேக்ஷிக்காமல் அபேக்ஷை வைத்து மகாநாட்டைமென்மேலும் நிறைவேறச் செய்வார்களாக.

***

### ஸ்திரீ யூநிவர்ஸிட்டி.

இந்திய மாதர்களின் யூநிவர்ஸிட்டி சம்பந்தமாய் புரோபஸர் கார்வே செய்துவரும் முயற்சி குறிப்பிடத்தக்கது. கல்கத்தாவில் அவரைப் பலரும் ஆதரித்தனர். அங்குள்ளோர் இந்திய ஸ்திரீகட்கு ஒரு யூநிவர்ஸிட்டி அவசியந்தானென்பதை அங்கீகரித்துக்கொண்டனர். இந்த யூநிவர்ஸிட்டியின் நிமித்தம் போரார், மத்திய மாகாணங்களில் மிஸ்டர் ஜோஷியும், தென் மஹாராஷ்மரத்தில் மிஸ்டர் அத்தேனும் வேலை செய்துவருகின்றனர்.

***

### வரதக்ஷிணை வழக்கத்தைத் தடுத்தல்.

வரதக்ஷிணை ஏற்பாட்டால் ஜனங்களுக்குப் பலவிதங்களில் ஸங்கடங்கள் ஏற்படுவதை உத்தேசித்து, பரோடா கவர்ன்மெண்டார் அந்த ஸமஸ்தானத்து சட்டஸபையில், வரதக்ஷிணை வாங்குவதும் கொடுப்பதும் கூடாதென்று ஒரு மசோதா கொண்டுவந்திருக்கிறார்களாம்.

***

## விவசாயக் கொத்து.

### வெள்ளைப்பூண்டு சாகுபடி.

எந்த நிலத்தில் பூண்டு பயிர் செய்ய உத்தேசிக்கப்படுகிறதோ அதில் செவ்வையாய்க் கிடைகட்டி நாலுஉழவுக்குக் குறையாமல் உழுது கட்டிகளை உடைத்து நிலத்தைச் சமப்படுத்திப் பாத்தி பாத்தியாய்க் கட்டப்படுகிறது. ஒருமா நிலத்திற்கு நாலுதுலாம் அல்லது 100-சேர் விரை பூண்டு உடைத்து பல் பல்களாக்கி பாத்திகளில் தெளிக்கப்படுகிறது. பிறகு களைக்கொட்டால் விதைகள் மண்ணில் புதையும்படி சிறு கொத்தாய்க் கொத்தி நிலத்தை நிரவி ஜலம் பாய்ச்சப்படுகிறது. மறுபடியும் 3-அல்லது 4-ம் நாள் பாத்திகளைச் சுற்றிப் பார்த்துப் புதைபடாமல் மேல்கிடக்கும் விதைகளை விரல்களால் அழுத்திப் புதைக்கிறார்கள். 3-அல்லது 4-நாளைக்கு ஒருதரம் ஜலம் பாய்ச்சுகிறார்கள். விதைகள் முளைக்க 4, 5 தினம் முதல் 20 தினம் வரையில் செல்லுகிறது. எல்லா விதைகளும் முளைப்பதற்கு 6, 7 நாளைக்கு ஒருதரம் ஜலம்பாய்ச்சுகிறார்கள். களைக்கொட்டால் கொத்தமுடியாதாகையால் களைகளைகையால் பிடுங்குவதோடு அரிவாள் மூக்காலும் கொத்தி எடுத்து விடுகிறார்கள். விதை பூமியில் விழுந்த 100-ம் நாள்வாக்கில் பூண்டுகளைக் கையால் பிடுங்கிவிடுகிறார்கள். களைக்கொட்டையும் உபயோகப்படுத்தலாம். அப்படிப் பிடுங்கிவிடுகிறதற்குச் சில தினங்களுக்கு முந்தி ஜலம் பாய்ச்சுகிறபடியால் பூமி பக்குவமாயிருக்கிறது. பிடுங்கின பூண்டுத் தாள்களை கத்தைகத்தையாய்க் கட்டிப்பக்கத்தில் மூட்டையாய்ப் போட்டு வைக்கிறார்கள் நிழல்காத்தும் அதற்கு வேண்டும். மேல் மூட்டம் ஆகாது. நாலைந்து நாளைக்குப் பிறகு அவைகளை எடுத்து வீட்டிற்கு கொண்டுவந்து தாளோடு தாள் சேர்த்து இரண்டிரண்டு பூண்டாய்க் கட்டி கயிறுகளில் அடுக்காய்த் தொங்கவிடுகிறார்கள். பூண்டுகள் செவ்வையாய்காய்விட்டு அவைகளை எடுத்து தாள்களை ஆய்ந்து பூண்டுகளைப் பானையிலாவது காற்றோட்டமுள்ள தொம்பைகளிலாவது கொட்டிவைத்தால் கெடுகிறதில்லை.

(இது கும்பகோணம் விவசாய சங்கத்திலிருந்தெடுத்தெழுதியது.)

***

### பயிரில்விழும் பூச்சிகளையழிக்கு முறை.

½ ராத்தல் விஸ்கியிலைத் தூளையும், ½ ராத்தல் கந்தகத் தூளையும் ½-ராத்தல் சுண்ணாம்புத் தூளையும், ஒருகாலன் ஜலத்தில் கரைத்து, அந்த ஜலத்தைப் பூச்சிகள் விழுந்த பயிர்கள் மீது தெளித்தால், அப்பூச்சிகள் அழிந்துபோகுமாம்.

***

### வாழைக்கு எரு.

மிஸ்டர் பார்ட்லெட் என்பவர் ஸிலோனைச்சேர்ந்த வாழைக்கு எருவிடும் விஷயமாக ஆராய்ச்சிகள் செய்து வந்ததில் வாழையின் எருவில் முக்யமானபாகம் பொட்டாஷ் என்று தெரியவருகிறதாம். ஆகையால் பொட்டாஷ் இல்லாத எரு ப்ரயோஜனமில்லை யென்று அவர் சொல்லுகிறார். ஒவ்வொரு வாழைக்கும் 1-ராத்தல் உலர்ந்த ரத்தம், 2-ராத்தல் ஸல்பேட் அப் பொட்டாஷ், 2½-ராத்தல் ஸுபர் பாஸ்பேட் வீதம் எருவிட்டால் ரொம்பலாபம் கிடைக்கும் என்று சொல்லுகிறார்.

பி—மி.

***

### வாழை மரம்.

வாழைமரங்கள் காய்க்காததற்கு அநேக காரணங்களுண்டு. சிலவேளைகளில் ஜாஸ்தி நிழல் அடைந்திருப்பதினால் காய்ப்பு தாமஸமாகிறது. சில ஸமயங்களில் குலை போடாத வாழைமரங்களுக்கு பக்கத்திலுண்டாயிருக்கும் கன்றுகளை எடுத்து பயிராக்கினால் இந்த மாதிரி சம்பவிக்கும். வாழைத்தார்போட்ட மரங்களின் பக்கத்திலிருக்கும் கன்றுகளை வைத்து உண்டாக்கி பலனடைவதுதான் உபாயம்.

***



## நூதன கற்பிதங்கள்.

### செயற்கை வெண்ணைப் பொடி.

ஜெர்மானியர்கள் இயற்கைப் பொருள்களுக்கு பதிலாக செயற்கைப் பொருள்கள் கண்டுபிடிப்பதில் பேர்போனவர்கள். தற்காலம் யுத்தத்தில் உணவுப் பொருள்களின் விலை ரொம்ப உயர்ந்து விட்டதினால், அந்த உணவுப்பொருள்களைப் போல் செயற்கை உணவுப்பொருள்கள் செய்வதைப் பற்றி அவர்கள் ரொம்பகவனம் செலுத்தி வருகிறார்கள். அவர்கள் தற்போது ஸ்வபவெண்ணைக்கு பதிலாக ஒரு நூதன பொடி கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்தப் பொடியில் 4 அணா விலையுள்ளதை அரைப்படி ஜலத்தில் சேர்த்துக் கரைத்தால் ஒரு ராத்தல் வெண்ணை கிடைக்கிறதாம். இந்த வெண்ணை ரொம்ப நேர்த்தியாயிருப்பதால் யாவரும் உபயோகிக்கலாமாம். செயற்கை வெண்ணையுடன் ஸ்வயவெண்ணையை சரிக்கு சரிகலந்து கொள்வது நல்லது. ஆனால் இப்படிச் செய்ய வேண்டுமென்பது அவசியமானதல்ல.

***

### தந்திக்கம்பி மூலமாய்ப் பார்த்தல்.

மின்சாரத் தந்தி யேற்பாடு வரவர அபிவிருத்தியடைந்து வருகிறது. தற்போது தந்தி, டெலிபோன், கம்பியில்லாத் தந்தி, கம்பியில்லா டெலிபோன் முதலிய சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு உபயோகத்திலிருந்து வருகின்றன. கொஞ்சகாலத்துக்கு முன்னால் படங்களைத் தந்தி மூலமாக அனுப்ப ஒரு சாதனம் கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது ஒரு மேல்நாட்டு வித்வான் தந்தி மூலமாய் தூரமான இடங்களிலுள்ளவைகளைப் பார்ப்பதற்கு ஒரு சாதனம் கண்டுபிடித்திருக்கிறார். இந்த சாதனத்தை எல்லாரும் பயன்படும்படி சீர்திருத்த இன்னும் ஒரு வருஷம் பிடிக்குமாம். 100-மைல் தூரத்துக்கு தந்திக் கம்பிகள் போட்டு, தூரத்திலுள்ளவைகளைப் பார்ப்பதற்கு வேண்டிய மற்ற யந்திரங்களை அமைக்க கிட்டத்தட்ட 2-கோடி ரூபாய் பிடிக்குமாம்.

***

### இருபார்வைக் கண்ணாடி.

பாரிஸ் நகரத்தில் ஓர் போலீஸ் உத்தியோகஸ்தர், தம் கீழ் உத்தியோகஸ்தர்களின் உபயோகத்திற்காக ஒரு மூக்குக்கண்ணாடி கண்டுபிடித்திருக்கிறாராம். அதை போட்டுக்கொண்டால் அதன் மூலமாய் எதிரிலிருப்பவைகளோடுகூட அதே சமயத்தில் தன் பின்னாலிருப்பவைகள்கூட நன்றாய்த் தெரிகின்றனவாம். இக்கண்ணாடியின் வெளிபுறத்து மூலைகளில் உட்குவிந்த பாவனையாய் உருவம் காட்டும் கண்ணாடியொன்று சேர்க்கப்பட்டிருக்கின்றமையால் பின்புறத்தில் நடக்கும் சங்கதிகளையும் திரும்பாமலே பார்த்துக்கொள்ள கூடியவையாம். அந்த உருவம் காட்டும் கண்ணாடி சேர்க்கப்பட்டிருப்பதால் முன்பார்வைக்கும் யாதொனும் இடைஞ்சலில்லை என கூறப்படுகின்றன.

***

### கண்ணுக்குத் தெரியாத ஏரோப்ளேன்.

ஜெர்மானியர்கள் கண்ணுக்குத் தெரியாத சிறகுகளுள்ள ஒரு ஏரோப்ளேன் (ஆகாயக்கப்பல்) கண்டுபிடித்திருக்கிறார்கள் அதன் சிறகுகள் கண்ணாடியைப்போல் வெளிச்சம் ஊடுருவிச் செல்லக்கூடியவை. அதனால் ஏரோப்ளேன் ஆகாயத்தில் பறந்துகொண்டிருக்கும்போது கீழிருப்பவர்களுக்கு அதன் சிறகுகள் கண்ணுக்குத் தெரிவதில்லையாம். சாதாரண ஏரோப்ளேன் பறந்துகொண்டிருக்கும்போது

எதிரியின் ஆகாயக்கப்பல் அதைத் தாக்க வந்தால், ஏரோபிளேனின் சிறகுகள், அதை ஓட்டுபவருக்கு எதிரிக் கப்பல் தெரியாதபடி மறைத்துக்கொள்ளும். அதனால் எதிரி ஆகாயக் கப்பல்கள் அதைத் தாக்குவது ஸுலபமாகும்.

புது மாதிரி ஏரோபிளேனிலோ சிறகுகள் கண்ணாடிபோலிருப்பதால், அதில் உட்கார்ந்திருப்பவர் சிறகுகளின்வழியாக எதிரி ஏரோபிளேன்கள் வருவதை அறிந்துகொள்ளலாம். அது உயரப் பறந்துகொண்டிருக்கும்போது ஏரோபிளேனை ஓட்டும் யந்திரமும் ஓட்டுபவனும் மாத்திரம் கண்ணுக்குத் தெரிவதாலும், அவர்கள் ரொம்ப சிறிதாகத் தெரிவார்களாதலாலும் அவர்களை நோக்கிச் சுடுவது கஷ்டம். குண்டுகள் சிறகுகளைத் தாக்கினாலும், அதிககெடுதல் ஏற்படுவதில்லை.

***

### நூதனமான கண்ணாடிக்குழாய்.

துருப்புகள் பூமியில் அகழ் தோண்டி அதில் மறைந்துகொண்டிருந்தால், சத்துருக்கள் சண்டை செய்வதற்காக வெளியே வரும்போது சத்துருக்களின் நடமாட்டத்தை எவ்வாறு அறிந்துகொள்வது? அதற்காக நூதனமான கண்ணாடிக்குழாய் உபயோகிக்கப்படுகிறது. அது ஜலத்தில் முழுகிச் செல்லும்(சப்மரின்) கப்பல்களில் வைக்கப்பட்டிருக்கிற கண்ணாடிக் குழாயைப் போன்றது. சப்மரின் கப்பல் ஜலத்தடியில் முழுகிச் செல்லும் போது, அக்கப்பலுள்ளேயிருப்பவர்கள் கடலின் மீது நடமாடக்கூடிய கப்பல்களைப் பற்றி அறிந்துகொள்ளுவதற்காக அந்தக் குழாய் அமைக்கப்பட்டிருக்கின்றது. இப்போது அரண்களில் மறைந்துகொண்டிருப்பவர்கள் அந்தக்குழாயை அரண்களுக்கு மேல் சற்று உயரத்தூக்கிப் பிடித்துக்கொள்ளுகிறார்கள், அந்தக் குழாயின் இரண்டு முனைகளிலும் ஓர்வகைக் கண்ணாடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன, அரண்களுக்குமேலே சற்றுத்தூக்கப்பட்டிருக்கின்ற முனையில் தரைமட்டத்திலுள்ள தோற்றமனைத்தும் விழுகிறது. அந்த குழாய்க்குள்ளிருக்கிற சில கண்ணாடிகளின் வழியாய் அந்தத் தோற்றம் பிரதிபலிக்கப்பட்டு, அந்தக் குழாயின் அடிப்புறத்திலுள்ள கண்ணாடியில் தெரியவருகிறது.

***

## நூதன கைத்தொழிற் முயற்சிகள்.

### சிறுதொழில்களுக்கு உதவிசெய்தல்

ஐக்கிய மாகாண கவர்ன்மெண்டார் அந்த மாகாணங்களில் சிறு கைத்தொழில்களில் அமர்ந்துள்ளவர்களுக்கு உதவியாக சில ஏற்பாடு செய்யத் தீர்மானிக்கிறார்கள். சிறு தொழிலாளிகளுக்கு தங்களுடைய சாமான்களை விற்க வேண்டிய சௌகர்யங்களில்லாமையால், அந்த பிரதேசத்து சாமான்களை அந்தந்த பிரதேசத்திலேயே விற்கவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு போதுமான மூலதனமில்லாமையால் அவர்கள் தங்கள் சாமான்களை ஐரோப்பா அமெரிக்கா ஆகிய அன்யதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யவாவது, இந்தியாவிலே நன்றாய் விலைப்போகக்கூடிய வேறு இடங்களுக்கு அனுப்பி அதிகலாபத்திற்கு விற்கவாவது முடிவதில்லை. இன்னின்ன சாமான்கள் செய்யப்படுகின்றன என்று பொது ஜனங்களுக்குத் தெரியப்படுத்தினால் அவைகளுக்கு நல்ல கிராக்கி ஏற்படக்கூடும். இப்போது ஐக்கிய மாகாண கவர்ன்மெண்டார் ஒவ்வொரு ஜில்லாவிலும் கௌரவ வியாபார நிருபர்கள் என்று சிலகனவான்களை நியமிக்கப்போகிறார்கள். இந்த கனவான்கள் அந்தந்த ஜில்லாக்களில் உள்ள கைத்தொழில் அபிவிருத்தி செய்யும் விஷயமாய் என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளைப்பற்றி கைத்தொழில் டைரக்டருக்குத் தெரிவிப்பார்கள்.

தொழிலாளிகளுக்கு உபயோகப்படக்கூடிய பலவிஷயங்களை இந்த நிருபர்கள் மூலமாக தொழிலாளிகளுக்குத் தெரிவிக்க ஏற்பாடுகள் செய்யப்படும். வியாபாரச்சரக்குகளை எந்தவிடங்களில் கொண்டுபோய் விற்றால் அதிகலாபம் கிடைக்கும் என்பதைப் பற்றி ஆராய்ச்சிகள் செய்து அப்படியே வேறிடங்களில் விற்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்ய முயற்சி செய்வார்கள்.



***

### பட்டுத்தொழில்.

பட்டுநூற் காரர்களென்கிற ஒரு பிரத்தியேக வகுப்பார் நமது நாட்டில் இருப்பதே,—முன்னாளில் பட்டுவர்த்தகம் எவ்வளவு தூரம் செழித்து வந்ததென்பதை வெகுநன்றாக எடுத்துக்காட்டும். 45-வருஷங்களுக்குமுன்னர் 155-லக்ஷம் ரூபாய் பெருமான பட்டும் துணியும் வெளிதேசங்களுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டதன்றி இவ்விடத்திற்குப் போதுமானதாயிருந்தது. இப்போதோ அத்தொழில் வெகு க்ஷீணதிசைக்கு வந்துவிட்டது. சென்ற வருஷ ஏற்றுமதியெல்லாம் கூடி $15\frac{1}{2}$-லக்ஷம் ரூபாய் பெறுமான வைகள் தாம். மேலும் மற்ற தேசங்கட்கு நம்மவர் ஏற்றுமதி செய்ததுபோய் நம் நாட்டிற்கே 1914ம் வருஷத்தில் 436 லக்ஷம் ரூபாய் பெறுமானமுள்ள பட்டுச் சாக்குகள்வெளித்தேசங்களிலிருந்து இறக்குமதியாகும்படி நேர்ந்துவிட்டிருக்கிறது. இந்தியா பட்டு உற்பத்திக்குப் பேர்போன சாக்கிருந்தும் அந்தவியாபாரம் க்ஷீணித்திருப்பதற்குக் காரணம் அந்நிய தேசத்தாரது போட்டியை எதிர்க்க முடியாமையால்தான். பட்டு உற்பத்தியில் மைசூர் கவர்ன்மெண்டின் ஊக்கம் பாராட்டதற்குரியது.

***

### சென்னையில் குற்றச்செயல்களைச்செய்யும் வகுப்பார்களின் பிள்ளைகட்கு ஒரு தொழிற்சாலை.

இந்த வகுப்புப் பிள்ளைகளுக்கு தொழிற்சாலையொன்றை சென்னையில் ஸ்தாபிக்க வேண்டுமென்று கவர்ன் மெண்டார் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். கொஞ்சம்காலத்திற்கு முந்தி கவர்ன்மெண்டார் கர்னாடிக் மில்லுக்கருகில் ஒரு பெரிய கட்டடத்தை வாங்கினார்கள். அதில் இந்தவகுப்புப் பிள்ளைகளுக்கு ஒரு ஸ்கூல் ஏற்பட்டு நடந்து வருகிறது. அந்தஸ்கூல் ஸால்வேஷன் ஆர்மியைச் சேர்ந்தவர்களின் மேற்பார்வையில் இருந்து வருகிறது. அங்குதான் தொழிற்சாலையும் ஏற்படும்.

***

### சணல் தொழிற்சாலை.

கல்கட்டாவிலே 9-லட்ச ரூபாய் மூலதனத்தோடு மெஸ்ஸரஸ் ஆண்டிரு யூல் அண்டு கம்பெனியார் புதிய சணல் தொழிற்சாலையொன்று ஸ்தாபிக்கப் போகிறார்கள். அந்த கம்பெனி ரிஜிஸ்தர் செய்யப்பட்டுப்போய்விட்டது. சில வருஷங்களுக்குமுன்னே தீப்பற்றி எரிந்துபோன எம்பரஸ் ஆப் இந்தியா பருத்தி தொழிற்சாலைக் கட்டிடமிருந்த விடத்தில் பிரஸ்தாப புதிய தொழிற் சாலை கட்டப்பட்டு வருகிறது.

***

## ஆயுர்வேதசாரம்.

### பாம்பு கடிக்கு மருந்து

வாழைமரத்தின் ரஸம் பாம்பு கடிக்குத் தகுந்த மருந்தென்று சமீபத்தில் கொழும்பில் பரீட்சை பார்த்துத் தீர்மானஞ் செய்தார்கள். ஒரு நாயை பாம்புகடிக்கும்படிச் செய்தார்கள் விஷமேறி அதனால் அவஸ்தைப்படும் அந்த நாய்க்கு வாழை மரத்தின் ரஸத்தை குடிக்கக் கொடுத்தார்கள். அது உடனே சவுக்கியமடைந்தது. வாழைமரத்தின் ரஸத்தை பாம்பு கடிக்குக் கொடுத்து பரீட்சை பார்க்கப்படும் என்று கொழும்பிலிருக்கும் வைத்தியர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

***

### மலேரியாவைத்தடுக்க.

சென்னை மைலாப்பூரிலும் தண்டையார் பேட்டையிலும் மலேரியா குறைந்துவரு

கிறது. கிணறுகளில் மீன்களை விட்டு விர்த்தி செய்வதால் அந்த மீன்கள் மலேரியா ஜ்வரத்தை யுண்டாக்கும் கொசுக்களையும் அவற்றின் முட்டைகளையும் தின்று அடியோடு நாசம் செய்துவிடுகிற தென்று மலேரியா போர்டார் கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்து இம்முறை சிலாக்கியமாயிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

***

### க்ஷயரோகத்துக்கு எலுமிச்சம்பழம்.

க்ஷயரோகத்தால் கஷ்டப்படுகிறவர்கள் எலுமிச்சம்பழ ரஸத்தை சாப்பிடுவதால் குணமடைவார்களென்று ஒரு டாக்டர் தெரிவிக்கிறார். அதைத் தயார்செய்து சாப்பிடும் முறை பின் வருமாறு. 12-எலுமிச்சம்பழங்களை அறுக்காமல் முழுசாக குளிர்ந்த ஜலத்தில்போட்டு, கொதிக்கவைத்து சுமாராய் வெந்து மிருதுவாய்ப் போனவுடன், பழங்களை எடுத்து நசுக்கி சாறு முழுவதையும் பிழிந்தெடுத்து, அதில், குடிக்கக் ருசியாயிருப்பதற்கு வேண்டிய அளவு சர்க்கரையைக் கலந்துகுடித்துவிட வேண்டும். தினந்தோறும் 12-பழத்துக்குக் குறையாமல் உபயோகிக்கவேண்டும். அதனால் தேகத்தில் வலியாவது, அதிக மலப்ரவிருத்தியாவது உண்டானால், பழங்களைக்குறைவாய் உபயோகிக்கலாம். மேற்சொன்ன கோளாறுகள் நீங்கும்வரையில் தினந்தோறும் ஐந்தாறுபழங்கள் சாப்பிடலாம். 60-அல்லது 70-பழங்கள் உபயோகித்தவுடன் நோயாளிகளுக்கு தேகபலம் அதிகரிப்பதோடு, பசிதீபனமும் உண்டாகும். வரவர க்ஷயரோகம் குறைவடையும் ஸ்வஸ்தமாக ஆக பழங்களின் தொகையைக் குறைத்துக்கொண்டுவரலாம். வியாதி முற்றின இரண்டு க்ஷயரோகிகளை ஸாதாரண வைத்யம் பார்த்துவந்ததில் வைத்யர்கள் கைவிட்டு விட்டார்கள். அவர்கள் மேற்சொன்ன முறைப்படி செய்துவந்ததில் சீக்ரம் சௌஸ்த மடைந்தார்களாம்.

***

### தேயிலை.

வழக்கமாய், விடாமல் தேயிலைப் பானம் பருகுவதால் பசியின்மை, வயிற்றுப் பொருமல், அஜீர்ணரோகம், அவற்றிற்கு சம்பந்தப்பட்ட வேறு குறிகளான வயிற்று வலி, இரைப்பை எரித்தல், தேஹத்திற்கு அமைதியின்மை, சரீரம் நடுங்கக்கூடிய நரம்புத் தளர்ச்சி, சில இந்திரியக் கோளாறுகள், தூக்கமின்மை, தசைநார்களின் நடுக்கம், இருதயத் துடிப்பு, புத்திமாருட்டம், மற்றும் அநேகவிதமான விகாரக் குறிகளும் பிணிகளும் ஸம்பவிப்பதற்கு ஏதுவாகிறது. வாத பிரகிருதியான மனிதர்கள் மற்றவர்களைவிட தேயிலைப் பானத்தை யுபயோகிப்பதால் விசேஷமான தீங்குகளுக்கு உள்ளாகிறார்கள்; ஆகவே அவ்வித சுபாவமுள்ளவர்கள் முற்றிலும் அதை யுப்யோகிக்காம லிருப்பது நலம்.

***

### மாங்கொட்டை.

மாங்கொட்டையின் பருப்பை உலர்த்தித் தூள்செய்து 20-முதல் 30-கெல்லெடை வரையும் தேனில் அல்லது வெல்லத்தில் கலந்துகொடுத்தால், வயிற்றில் சேர்ந்திருக்கும் கிருமிகள் வெளியாகும். மூலத்திலிருந்து ரத்தம் அதிகமாய் வடிவதையும், மாதவிடாயில் சோணிதம் மிதமிஞ்சிப் பெருகுவதையும் மாங்கொட்டைத்தூள் நிவிர்த்தி செய்யும். சீதபேதியிலும், ரத்தக்கடுப்பிலும் இதைக் குழம்பாக்கி அன்னத்துடன் கலந்து உபயோகிப்பது நாட்டு வழக்கம். இதனால் சீதபேதி முதலியவற்றில் நற்குணம் உண்டானதாக அனுபவத்தில் தெரியவந்திருக்கிறது.

***

### பசலைக்கீரை அழகைக் கொடுக்கும்.

மனோஹரமான முகநிறத்தை விரும்பும் ஸ்திரீகள் பசலைக்கீரையை சத்தியமான வரையில் அதிக அளவில் புசித்துவரலாம் என்று சில ஆராய்ச்சிக்காரர்கள் கூறினர்கள். அவ்விதமே அதைஇப்பொழுது உப



யோகித்துப் பார்த்ததில், அக்கீரை நரம்புகளுக்கு பலம் கொடுக்கக்கூடியதென்றும் முகத்தில் தேஜஸ்ஸை உண்டாக்கக் கூடியதென்றும் தெரியவருகிறது. விலையில் மலிவாக இருக்கும் சாகவர்க்கத்தை நமது வீடுகளில் அலக்ஷியமாக சமையலுக்கு உபயோகிப்பதில்லை. சாஸ்த்ர நிபுணர்கள் இக்கீரையை உணவுப்பொருட்களில்முதல் தரமான தென்றும், ஜனங்கள் இதை அதிகமாக உபயோகிப்பது நலமென்றும் என்னுகிறார்களென ஒரு பத்ரிகைகூறுவதாக 'வைத்திய கலாநிதி' எழுதுகிறது.

## தொழிற் குறிப்புகள்

[இந்த தலைப்பின்கீழ் மநு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞ வகுப்பினர் தொழிற்குரிய அறிய விஷயங்களையும், அவற்றின் கைபாகம் செய்பாகமென்ற முறைகளையும் கூறப்பட்டிருக்கிறது. இவற்றுள் நிகழும் சந்தேகங்களைச் சுருக்கமாக தங்கள் பெயர் விலாசத்துடன் இப்பத்திரிகைக்கு எழுதிக்கொண்டால் விடையளிக்கப்படும். இவற்றை அநுமதி பெற்றே மற்றவர் பிரசுரிக்கவேண்டும்.]

### பித்தளையின்மேல் வெள்ளிமுலாம்.

கிரீம் ஆப்டார்டார் 23 பாகம், டார்டார் இமிட்டிக் 2 பாகம், 500 பாகம் வெந்நீரில் கரைத்து 25 பாகம் முராட்டிக் ஆஸிட் சேர்க்கவும். 62½ பாகம் வெள்ளீயம், 15 பாகம் நிமிளை, இவ்விரண்டின் அரப்பொடிகளையும் மேலே கூட்டியுள்ள திராவகத்தில் சேர்த்து கொதிக்கவிடவும். பிறகு சுத்திசெய்யப்பட்ட பித்தளை சாமான்களை இதில் அரைமணிநேரம் கொதிக்கவிட் டெடுத்தால் கெட்டியான வெள்ளிபோன்ற முலாம் பிடித்துக் கொள்ளும் பின்னர் முறையாய் மெருகிடவும்.

***

### பித்தளை கைப்பிடி முதலியவற்றை சுத்திசெய்ய.

செங்கல் பொடித்தூளை மண்ணெண்ணெய் விட்டு பிசைந்து ஓர் கம்பளித்துண்டில் வைத்து நன்றாய் தேய்க்கவும். பழய பித்தளை சாமான்களானால் நவச்சார திராவகத்தை கொண்டு சுத்திசெய்யவும்.

***

### பித்தளை நகை முதலியவற்றிற்கு சுலப மெருகிடுதல்.

1. வேண்டியளவு படிக்காரத்தை தண்ணீரில் கரைத்துக்கொண்டு அதில் பித்தளை சாமான்களை நனைத்து தேய்த்து கழுவி உலர்ந்ததும் ரோஜ நாய்த்தோலால் துடைக்கவும்.

2. சீமை சுண்ணாம்பையும் கெந்தகத்தையும் சமனாக சேர்த்து புளித்தகாடி விட்டு அரைத்து பசைபோல் எடுத்து பித்தளை சாமான்களின் மேல் பூசி உலர்ந்ததும் நாய்த்தோலால் துடைக்கவும் பித்தளை நகைகளாகின் ஷெடி பசையைதடவி உலர்ந்ததும் புருசுகொண்டு அடிக்கவும்.

***

### நகைகள் துடைக்கும் நாய்த்தோலை சுத்திசெய்ய.

அழுக்காயும் நலுங்கியும்போன பழய நாய்த்தோலை சோப்கொண்டு துவைத்து பிறகு அலம்பும்போது கொஞ்சம் நவச்சார திராவகத்தை ஜலத்தில் சேர்த்து, ஜலம் வடியும்படி எடுத்து விரித்து உலரவிடவும். காய்ந்ததும் மெதுவாயும், மிருதுவாயு மிருக்கும்.

***

### சுவற்று விளக்கு நாடாக்கள்.

கிழிந்துப்போன அல்லது பழய (Felt) பெல்ட் தொப்பிகளை வேண்டிய அகலத்திற்கு கத்தரித்து புளித்த காடியில் (Vinegar) இரண்டு மணிநேரம் ஊறவை

த்து உலர்த்தி சிம்னியில் போட்டு எரிய விடவும்.

***

### லெமனேடு பௌடர்.

முன் சஞ்சிகையில் சோடாவாட்டர் வேண்டும்போது வீட்டில் செய்துக் கொள்ளும் முறையைச் சொன்னோம். பை கார்பனேட் சோடாவை நீலகாகிதத்தில் மடிப்பதற்கு முன்னதாக சிலதுளி எலிமிச்சம் பழரசத்தை சேர்த்து கொள்ளவும் டம்ளர் ஜலத்தில் போதுமான சீனிசர்க்கரையை கரைத்துக்கொண்டு, மேலேகூறிய பொட்டணத்தையும், டார்டாரிக் ஆசிட் பொட்டணத்தையும் போட, உடனே பொங்கும். பிறகு சாப்பிடவும். எவ்விதமான கலர் வாட்டரையும் அந்தந்த பழசத்தில் சிலதுளிகள் சேர்த்து செய்துக் கொள்ளவேண்டும்.

***

### வைரவத்தைப் பரிசோதித்தல்.

வைரம் சுவயமானதா அல்லது போலியா என்று கண்டுபிடிக்கப் பின்வருமாறு செய்யவும். (1) அரத்தால் வைரத்தின் மேல் இழுத்தால் போலிவைரமானால், அதில் அரத்தை இழுத்த அடையாளம் தெரியும். சுவய வைரவமானால் அதை அரம் ஒன்றும் செய்யாது. அரத்தை இழுத்த அடையாளமே தெரியாது. (2) ரொம்ப பிரகாசமுள்ள சுவய வைரத்தின் மேல் ஒரு துளி ஜலத்தை விட்டு, அந்தத் துளியை ஒரு பென்ஸிலின் கூர்மையான நுனியால் தொட்டு அழுத்தினால், ஜலம் நாலா பக்கமும் ஓடாமல் வட்டமான உருவத்துடன் அப்படியே இருக்கும். வைரத்தை சாய்த்தால் ஜலம் அதில் ஒட்டாமல் வெளியே ஓடிவிடும். போலிவைரத்திலோ அப்படியல்ல. அதில் ஜலம் நன்றாய் ஒட்டிக்கொண்டு, நாலாபக்கங்களிலும் பரவும். (3) சுவய வைரத்தை ஜலத்தில் போட்டால் அது இருப்பது நன்றாய்த் தெரியும். ஆனால் போலி வைரத்தை ஜலத்தில் வைத்தால் அது நன்றாய்த் தெரியாது. (4) ஒருதுண்டுக்கடுதாசியில் ஒரு கறுப்புப் புள்ளியிட்டு அதை வைரத்தின் மூலமாகப் பார்த்தால் ஒரே புள்ளிதான் தெரியும். ஆனால் அதே புள்ளியை போலிவைரத்தின் வழியாகப் பார்த்தால் அநேக புள்ளிகளாவது, ஒரு பெரிய படர்ந்த கருப்புக்கறையாவது தெரியும். அல்லது ஒரு கடுதாசி அட்டையிலே ஊசியினால் ஒரு சிறுதுவாரத்தைச்செய்து வைரம் என்று சொல்லப்படுகிற கல்லின் வழியாய் அந்த துவாரத்தைப் பார்த்தால், சுவயவைரமானால் ஒரே துவாரமும், போலி வைரமானால் இரண்டு துவாரங்களும் கண்ணிற்குப் புலப்படும். (5) வைரத்தின் வழியாய் விரலைப் பார்த்தால் அது எப்பொழுதும்போலிருந்தால் வைரம்சுத்தமானது, அது பெருத்துப் பிரிந்து தோன்றினால் போலிவைரமாகும். [போலிவைரங்கள் புஷ்பராகம், ஸ்படிகக்கல், கண்ணாடி முதலியவைகளால் செய்யப்படுகின்றன.]

***

### கடுதாசி நிலக்கரி.

(1) ஜெர்மனியில் நிலக்கரி குறைந்து போனதால் அங்குள்ள ஏழைகள் கடுதாசியை அடுப்பெரிக்கிறார்களாம். கடுதாசியைப் பின்வருமாறு தயார் செய்ய வேண்டுமாம். அதை 36-மணிநேரம் ஜலத்தில் ஊறவைத்து பிறகு எடுத்து பந்தைப்போலிருக்கும்படி கெட்டியாக உருட்டிப் பிறகு அப்படியே காயவிடவேண்டும். நன்றாய்க் காய்ந்த பிறகு அந்த கடுதாசி உருண்டை மரத்தைப்போல் கெட்டியாகி விடுகிறது. அதை எரியவிட்டால் கொழுந்துவிட்டு எரிவதில்லையாம். ஆனால் நிலக்கரியைப்போல் சிகப்பு நிறமான தணலுடன் மெதுவாய் எரிகிறது. அது ரொம்ப உஷ்ணங் கொடுக்கக் கூடியதாம். (2) நிலக்கரித்தூளை எண்ணெயுடன் கலந்து செங்கல்லைப் போன்ற உருவமுள்ள துண்டுகளாககெட்டியாக்கி வைத்து, அதை மேற் கூறிய கடுதாசி உருண்டையுடன் உபயோகிக்கலாமாம். மூன்று கடுதாசி உருண்டையும் ஒரு நிலக்கரித்தூள் சேர்த்துச்செய்ததுண்டும் ஒரு பவுண்டு மாம்சத்தை பக்குவம் செய்யப்போதுமான விரகாகுமாம்.

ஐ—ஸி.



## பல குறிப்புகள்.

தஞ்சையில் நடைபெறும் இரண்டாவது விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸுக்கு நம்மனோர் பலபாகத்திலுமிருந்து வர உத்தேசங்கொண்டிருப்பதாக நமக்குப் பல கடிதங்கள் வந்துகொண்டிருப்பதைப் பார்க்க நனி மகிழ்கின்றோம். குலாபிமானத்தை உள்ளபடியே கருத்தில் கொண்டவர்களை ஒருங்கே தரிசிக்கும் ஸ்தலமும் முகமறியா நண்பர்களுடன் அளவளாவுமிடமும், வித்வசிகாமணிகளுடன் விபரமாய் சம்பாஷிக்குமிடமும், இக்கான்பரன்ஸாகையால், குலாபிமானிகள் ஒவ்வொருவரும் தவறாது விஜயமாயிருந்து கான்பரன்ஸை இனிது நிறைவேற்றுவார்களென நம்புகிறோம்.

***

சென்னை பிரம்மஸ்ரீ N. துரைவேலாச்சாரியாரவர்கள் B. A. இக்கான்பரன்ஸ் பிரஸிடெண்டு ஸ்தானத்தை அங்கீகரித்தது பெருமகிழ்ச்சியை விளைவிக்கின்றது. இவரது அபாரயோக்கிதைகளை இங்கு விவரிப்பது அவசியமில்லையென்றாலும், யாம் அவருடன் சம்பாஷித்த அளவில் எமக்குத்தோன்றிய, அவரது சுஜாதிப்பற்றையும், நடுநிலைமையையும், மனோ விசாலத்தையும், இங்கு குறிப்பிடுகின்றோம். நமது வீட்டை நாமே சீர்படுத்திக் கொள்ளவேண்டுமென்றும், அங்ஙனம் செய்துகொள்வதிலும், விசேஷித்த ராஜபக்தியை ஒரு சமூகத்தாருக்கு உண்டுசெய்யும் இவ்வித ற்சிகளில் கவர்ன்மெண்டாருக்கு யாதொரு ஆட்சேபமுமில்லையென்பதற்கும் அத்தாட்சியாக இக்கனவான் பிரஸிடெண்டு ஸ்தானத்தை அங்கீகரித்தானது கான்பரன்ஸ் முயற்சிகளை மேற்கொண்டு பல கஷ்டங்களைப் பாராட்டாது உழைத்து வருபவர்களுக்கு மிக்கஊக்கத்தை உண்டுசெய்யுமென்பது நம் நம்பிக்கை. உண்மையான யோக்கிதை யிருந்தால் உன்னத பதவிகள் வலியச் சென்றடைவதும் அவைகளை அவர்கள் மகிழ்ந்து ஏற்றுக்கொள்ளுதலும் சகஜமன்றோ?

***

இம்மஹாஜன கான்பரன்ஸை யொட்டி ஓர் பண்டித கான்பரன்ஸ் நடைபெறுமென்று அறிந்து மகிழ்கின்றோம். விளம்பரப் படுத்தவும், பிரஸிடெண்டு நியமிக்கவும் போதிய அவகாசமில்லையாதலால், அதற்கான வித்தியாரத்தினங்களை மஹாஜனகான்பரன்ஸுக்கு விஜயமாவோர்களிருந்து தெரிந்து எடுத்துக்கொள்வது நலமெனத் தோன்றுகிறது. இவ்விஷயத்தில் கான்பரன்ஸ் கமிட்டியார் கவனம் செலுத்த வேண்டுகிறோம்.

***

கான்பரன்ஸ் கமிட்டியார் மெம்பர்களுக்குமட்டும் விடுத்த ஓர் அந்தரங்கப் பிரசுரத்திற்குப்பிரதியாக "ஜார்முக்கிய நிரூபம்" எனத் தலைச்சாத்திட்ட 16பக்கங்கொண்ட ஓர்புஸ்தகம் நமது குலாபிமானக் குரிசிலாகிய ஈரோடு பிரம்மஸ்ரீ அர்த்தநாரி ஆச்சாரியாரவர்களால் எழுதிவிடுக்கப்பட்டிருப்பதை நாமும் பெற்றோம். ஸ்ரீ ஆச்சாரியாரவர்கள் உண்மையான குலாபிமானியாதலால், இவர்கள் இது விஷயமாக எடுத்துக்கொண்ட சிரமம் மெச்சத் தகுந்ததே. கான்பரன்ஸ் விஷயங்களை ஆரம்பமுதல் கவனித்தோர்க்கன்றி பொது ஜனங்கள் கவனத்திற்கு உபயோகமாகும் வண்ணம் இப்புஸ்தகம் தயாரிக்கப் படாமையால், தோன்றன் மாத்திரத்தில் பாமரர்களுக்கு இவர் கான்பரன்ஸ் நோக்கங்களை கண்டித்தெழுதி யிருப்பதாகத் தோன்றும். உண்மையில் அவ்வித நோக்கங்கொண்டு எழுதப்பட்ட புஸ்தகமுமல்ல அங்ஙனம் எழுதக்கூடிய குலாபிமானியும் இவரல்ல. இப்புஸ்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கிற இவரது திருவுருவத்தை தரிசித்தால் நாம் சொல்வது உண்மை யென யாவருக்கும் தோன்றும்.

***

இக்கனவான் அனுப்பிய வேண்டுகோளில் 'பண்டிதகான்பரன்ஸ்' இம்மஹாஜன கான்பரன்ஸை யொட்டி நடத்த வேண்டுமென்பதுதான் முக்கிய வேண்டுகோளாக விருக்கிறது. நமது குலப்பண்டிதர்களிருப்பிடங்களையும் அவர்களது யோக்கிதா பட்சங்களையும், சர்வசாஸ்திர பாண்டித்யத்தையும் நன்குணர்ந்தவர் இக்கனவானைவிட வேறொருவ ரில்லை யென்பது சத்தியம். ஆகவே இக் கனவான் தம்மால் இயன்றளவு முயற்சித்து குலநல வித்தியா ரத்தினங்களை இக்கான்பரன்ஸ் முன்னிலையில் அணிவகுத்துக் காட்டும் முழுபிரயாசையையும் தாமேதயைசெய்து இத்தடவை மேற்கொள்வாராயின் இனி அடுத்துவரும் கான்பரஸ்ன்களிலும், இந்த கான்பரன்ஸிலும். பண்டித கான்பரன்ஸ்கள் நிறைவேறுவதுஒருவாறு சாத்யமாகலாமென நம்புகிறோம். இக்கனவான்,இது விஷயமாக அதிக சிரமமெடுத்து தமது வாக்கு வல்லமையாலும், செல்வாக்கினுதவியாலும் பல பண்டிதர்களைக் கூட்டிக் காட்டுவாரென, கான்பரன்ஸ் சென்டரல் கமிட்டியார் நம்பியிருப்பதுபோலவே நாமும் நம்பியிருக்கின்றோம்.

***

தஞ்சைக் கான்பரன்ஸுக்கு இதுவரையில் சுமார் 25 வாலண்டியர்கள் சேர்ந்திருக்கிறார்களாம். இன்னும் அவர்கள் தொகை அதிகமாகலாமெனத் தெரிந்து சந்தோஷிக்கிறோம். எவ்வளவிற் கெவ்வளவு வாலண்டியர் தொகை அதிக மாகிறதோ அவ்வளவிற் கவ்வளவு பிரதிநிதிகளின் சௌகர்யங்கள் அதிகப்படும்.

***

நமது அதிர்ஷ்டவசத்தால் இம்முறை கான்பரன்ஸ் கூடுமிடம் அதிக சௌகர்யம் வாய்ந்துள்ளதாக விருக்கிறது. ரயில்வே ஸ்டேஷனுக்கு மிக்க சமீபத்திலிருக்கின்றது. காற்றோட்டம், ஜலசௌக்கியம், குளிர்ந்தநிழல் முதலிய பல சௌகர்யங்களையும் உடைத்தாயிருக்கின்றது.

***

நமது சபையின்றும் இக்கான்பரன்ஸுக்கு தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிற சுஜாதிப்பிரதி நிதிகள் தவராது இக் கான்பரன்ஸுக்கு விஜயமாயிருந்து நமது சபையை கௌரவிப்பார்களென நம்புகிறோம்.

***

இக்கான்பரன்ஸ் மண்டபத்தில் நமது விஸ்வ தலோத்தாரண அச்சுக்கூடத்தில் இதுவரையில் அச்சிடப்பட்டப் புஸ்தகங்களனைத்தும் விற்பனைக்கு வைக்க அநுமதி பெற்றிருக்கிறோம். போஸ்டேஜ் செலவுக ளில்லாமலே புஸ்தகங்களை பெற்றுக்கொள்வதற்கு இது தக்க சமயமாகுமென்பதைக் குலாபிமானிகள் தயவு செய்து குறித்துக் கொள்வாராக,

***

## கடிதம்.

### ஓர் பௌரோகிதரின் அகால மரணம்.

நெட்டால் டர்பனில் 22வருடகாலமாய் நமது வம்சத்திற்கு பௌரோகிதமாய் இருந்த தில்லையாடி ஸ்ரீ கந்தசாமி பத்தர் மகன் கெங்காதரபத்தர், பிப்ரவரிமீ 26வ காலை 10-மணிக்கு ஓர் பெருத்த மோட்டார்வண்டியினால் தாக்கப்பட்டு, பெரும் காயமடைந்தார். அவ்வண்டியில் இருந்தவர் ஓர் பெரிய டாக்டரானபடியால், அவர் இவரை தம் வீட்டுக்குக் கொண்டுபோய் பலவிதமான சிகிச்சைகளை செய்தும் பலனின்றி நாளதுமீ 12வ இரவு 9½-மணிக்கு மரணமடைந்தார். இவருக்கு ஐந்து குழந்தைகள். எல்லாம் பன்னிரெண்டு வயதுக்குள்பட்டவர்களே. இவரைப்போல் அவ்வளவு சிரத்தையோடும் உண்மையோடும் வைதிகக் கிரியைகளை செய்பவர் கிடைப்பதரிது. மிகவும் சாந்தகுணமுள்ளவர். வயது 39-க்கு மேலில்லை.

***



## வர்த்தமானக் குறிப்புகள்.

---

சென்னை மாகாணத்துள்பிரசுரமான புத்தக பத்திரிகைகளைப்பற்றி ஒரு கணக்கு வெளியாயிருக்கிறது. 1905-ம் வருஷத்தில் பத்திரிகைகள் இங்கிலீஷில் 66, தமிழில் 84, தெலுங்கில் 30, மலையாளத்தில் 59, கன்னடத்தில் 21-மாக இருந்தனவாம். அவை 1914-ம்வருஷத்தில் இங்கிலீஷில் 63, தமிழில் 58, தெலுங்கில் 38, மலையாளத்தில் 19, கன்னடத்தில் 14-ம் ஆக மாறுவதாயினவாம். பத்திரிகைகளின் தொகை சுருக்கமானாலும் புத்தகங்கள் 1914-ம் வருஷத்தில் சமஸ்கிருதத்தில் 143-ம், இங்கிலீஷில் 1119-ம், தேச பாஷைகளில் 2817-ஆகவும் உயர்ந்துவிட்டிருக்கிறது. தமிழில்தான் புத்தகங்கள் அதிகம்.

***

இறந்துபோனவர்களுடன் ஸம்பாஷணை.—இப்போது உலகத்தில் பிரசித்திபெற்ற பௌதிக சாஸ்த்ர வித்வான்களுக்குள் சிறந்தவர் என்று கொண்டாடப்படும் ஸர்ஆலிவர் லாட்ஜ் என்பவர் ஸமீபத்தில் இங்கிலாந்தில் செய்த ஒரு பிரசங்கத்தில் இறந்துபோனவர்களை ஸூக்ஷ்ம திருஷ்டியால் ஸந்தித்து, சம்பாஷிப்பது ஸாத்யம் என்றும், தம்முடையஇறந்துபோன சில சிநேகிதர்களுடன் தாம் அவ்விதமாக சம்பாஷித்ததாகவும் தெரிவித்தாராம்.

***

காங்கிரசுக்கு ஸ்திரீ டெலிகேட்டுகள்:—பர்ஹாம் புரத்திலிருந்து ஓர் நிருபர்எழுதுவது—கஞ்சம் டிஸ்டிரிக்ட் அஸோஸியேஷன் (ஜில்லா சங்கம்) மெம்பர்கள் கடந்த 16-ந்தேதி கூடினதோர் மீட்டிங்கில் இவ்வருஷ காங்கிரசுக்காக அடியிற்கண்ட ஸ்திரீ டெலிகேட்டுகள் தெரிந்தெடுக்கப் பட்டனர் மிஸஸ். வி. வி. ஜோகையா, மிஸஸ். பங்காரய்யா, மிஸஸ். சீதாராமஸ்வாமி, ஸ்ரீமதி வுப்பல சுந்தரம்மாள் ஸ்ரீமதி ப்ரமராம்பாள், ஸ்ரீமதி கொண்டவிஜயலக்ஷ்மி, மிஸஸ். விஸ்வநாதம், ஸ்ரீமதி மணிகியாம்பாள், மிஸஸ். W. V. ராமலிங்கம், மிஸஸ். எ. வி. சுப்பாராவ் இஜ்ஜில்லாமாதிரி நம் ராஜதானியிலுள்ள இதர ஜில்லா சங்கத்தாரும், ஸ்திரீ டெலிகேட்டுகள் தெரிந்தெடுத்து அனுப்புவாரென நம்பப்படுகிறது.

***

இந்தியாவின் விசேஷ க்ஷேமங்களையும் பாபங்களையும் உத்தேசித்து இந்தியாவில் ஆட்சி செய்த ராஜப்பிரதிநிதி லார்ட் ஹார்டிஞ்சு அவர்களுக்கு எல். எல். டி. பட்டம் கொடுக்குமாறு அடுத்த யூனிவர்ஸிட்டி ஸெனட் மீட்டிங்கில் ஸர் நாராயண சந்திரவாக்கர் ஒரு தீர்மானம் கொண்டுவருவார்.

***

ஸிம்லா என்பது இந்தியா கவர்ன்மெண்டின் கோடை வாசஸ்தானம். அது இமயமலையின் சிகரங்களில் ஒன்று. அதைச்சுற்றியுள்ள மலைகளி விருப்பவர்கட்கென்று ஒரு வைத்தியசாலை ஏற்படுத்த காலஞ்சென்ற ஸர் ஹென்றி மூர் என்பவர் 6500 ரூபாய் தருமாறு உயிலில் எழுதியுள்ளார்.

***

இரங்கூன் மெனியூர் கேசவன் என்ற இந்திய மாணவனொருவன், லண்டனிலுள்ள கிரிஸ்டல் அரண்மனையில் பிராக்டிகல்எஞ்சினீரிங் கிளாயில் படித்துக்கொண்டிருக்கிறான். அவன் அப்படிப்பில் மெற்ற கியாதியை யுத்தேசித்து அவனுக்கு அங்கு ஒரு பதக்கம் கொடுத்திருக்கிறார்கள். இந்திய மாணக்கன் இம்மாதிரி பதக்கம் பெற்றது இதுதான் முதல்தடவை.

***

நாளது ஏப்பிரல் 19-ல் பஞ்சாப் சட்டசபையில் சிறுவர்கள் சிகரெட், சுருட்டு, ஹுக்கா, பீடி முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகிக்கக்கூடாதென்று பலவந்தப்படுத்துவதற்கான மசோதாவொன்றை ஆனரபிள் கஜ்ஜான்சிங் என்ற மெம்பர் ஆலோசனைக் கொண்டுவரப்போகிறார்.

***

மலபார் ஜில்லாவிலுள்ள தானூரிலிருக்கும் சோப்புத்தொழிற்சாலையை விருத்தி செய்வதற்காக 75 ஆயிரம் ரூபாய் செலவு செய்யும்படி சென்னை கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருப்பதாகவும் அச்சாலையில் பலவிதமான ஸோப்புகள் தயார்செய்யப்படுமென்பதாகவும், ஸோப்புநிபுணரான மிஸ்டர் எ. கே. மேனனை அங்கேயே வேலை பார்க்கவேண்டுமென்று திட்டப்படுத்தியிருப்பதாகவும் தெரியவருகிறது.

***

மதுரை கால்நடைக்காட்சி நாளது ஏப்ரல்மீ 18, 19, 20-ம் தேதிகளில் நடைபெறும்.

***

காந்தட்டாங்குடி பெண்கள் டிரேனிங் ஸ்கூல் கோட்டை அரண்மனை கட்டடத்திற்காவது அல்லது முகாசா ஆபீசு கட்டடத்துக்காவது கொண்டுபோகும் விஷயமாய் மேல்வீதி, வடக்குவீதி, தெற்குவீதி, முதலான இடங்களில் பப்ளிக் மீட்டிங்கு டிவிஷனல் ஆபீசரால் கூட்டப்பட்டு ஜனங்களுடைய அபிப்பிராயம் தெரிந்து கொள்ளப்படுகிறது. இது வரையில் அரண்மனை கட்டடமே தகுந்ததென்று ஜனங்கள் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள்.

***

### குருடு நீங்கிய விந்தை.

மான்செஸ்டர் என்றவிடத்தில் மிஸ்டர் காத்தலீஸ் வெல்ஸ் என்பவருக்கு இடையில்ஒரு வருஷகாலம்வரையில் கண் தெரியாமல் போய்விட்டதாம். ஆனால் அதாவது பாட்டியொருவள் இறந்துபோகையில் அவளது துக்கம் பொருக்கமாட்டாமல் கதரியழுது கண்ணைத் துடைத்தும் கண்பார்வை நன்றாகப் போய்விட்டதாம். மற்றொருவருக்கு முப்பது வருஷம் வரையில் கண்தெரியாமலே யிருந்ததாம். ஒரு சமயம் அவரதுகண்களில் தூசிவிழ அதை யெடுக்கும் பொருட்டு கண்ணை நன்றாகத் துடைத்தபோது கண்பார்வையும் செவ்வையாகத் தெரிந்ததாம் இன்னொருவருக்குக் கண் திறக்காதபடி கண் மூடிக்கொண்டே யிருந்ததாம். ஒரு சமயம் அவருக்கு பல்வலியால் ஒரு பல்லைப் பிடுங்க நேரிட்டபோது மூடியிருந்த கண்ணும் திறந்து கொண்டதாம்.

***

(வரப்போகிற புது ஜாதியார்) coming race) என்னும்விஷயத்தைப்பற்றி பெஸந்த பாய் அம்மணி சித்தூரில் ஓர் உபந்யாஸம் செய்தார். உலகத்திற்கு ஞானத்தைக்கொடுப்பதற்காக ஆர்ய ஜாதி தலையெடுத்தது போல புது ஜாதி ஒன்று தோன்றப்போகிறதாம். அந்த ஜாதியார் அமெரிக்காவிலிருந்து உற்பத்தியாகப்போகிறார்கள். அவர்களை நடத்துபவர் வைவஸ்வதமநு. இக்கருத்து நம்முடைய புராணங்களிலுமுள்ளதாம். அந்த ஜாதி பலுகுவதற்காகத் தற்காலம் நடைபெறும் யுத்தத்தில் மாள்கிறார்களாம்.

***

இந்தியா கைத்தொழில் விசாரணை.—இந்தியா கைத்தொழில்களைப்பற்றிய விசாரணை கமிட்டியில் மெம்பராயிருக்கும்படி பெயர்பெற்ற ஸர் டோராப்ஜீ டாடா அவர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டிருப்பதாகவும், அவரும் அதை அங்கீகரித்துக் கொண்டதாகவும் சமாசாரமெட்டுகிறது.

கும்பகோணம் மகாமகக் குளத்துக்கு

***

அருகில், ஒரு ஆர்டிஷியன் குழாய் ஒன்று தோண்டி பட்டணத்துக்கு ஜல சப்ளை குழாய்களின் மூலமாகச்செய்ய கும்பகோணம் முனிசிபாலிடியாருக்கு 11250-ரூபா கவர்மெண்டார் கடனாகக் கொடுத்துள்ளார் வட்டியும் முதலுமாக 7-வருஷங்களில் வருஷம் 1875-ரூபா வீதம் கவர்ன்மெண்டுக்குத் திருப்பக் கொடுக்கப்படவேண்டும்.

***

மஹாராஷ்டிர ஏழைப்பிள்ளைகளுடைய கல்வி அபிவிர்த்திக்காக மூலதனம் சேகரிக்கப்பட்டு வருகிறது. ஸ்காலர் ஷிப் முதலியன அளிக்கப்படும் விபரம் தெரியவேண்டுமானால் சென்னை ராமாநுஜய்யர்தெரு 8-நெ. வீடு மஹாராஷ்டிர கல்விபண்டு செக்ரடேரிக்கு எழுதிக்கொள்ளவும்.

---

உ

ஸ்ரீமத் விராட் விஸ்வப் பிரஹ்மணே நம:

OFFICE OF THE REGISTRAR OF ... 7-AUG 1916 MADRAS.

# விஸ்வகர்ம குலோபகாரி.

மலர்-3. { நள௵ வைகாசிமீ ஆனிமீ 1916௵ மேமீ ஜுன்மீ } இதழ்-5. 6

## மெய்ஞ்ஞான தீபம்.

### இன்பமெய்தும் உபாயம்.

பெருந்துன்பமுற்ற ஒருவன் தன் துன்பத்தினை யொழித்து இன்பத்தினை யடையுமாறு, பேருற்றலும், பெருங்கருணையுமுடையவனை ஆதாரமாகவடைந்து அவனது திருவடியில் விழுந்து பிரார்த்திப்பது போல, பிறப்பென்னும் பெருந்துன்பமுடைய நாம் அத்துன்பத்தினை யொழித்து முத்தியென்னு மின்பத்தினை யடையுமாறு முடிவிலாற்றலும், பேரருளுமுடைய விஸ்வேசனைத் தஞ்சமாக வடைந்து, அம்மூர்த்தியின் இன்பமணங்கமழும் பொற்பாத கமலங்களில்விழுந்து பிரார்த்தித்தலே இம்மையிலும்,மறுமையிலும்இன்பம்பயக்கும்.

***

### குற்றங்கடிதல்.

தம்முடைய குற்றங்களைப் பிறர் பலரறியச் சொல்லும்போது தமக்குப் பெருந்துன்ப முண்டாவதை யூகித்துணர்பவர் பிறருடைய குற்றங்களை மறந்தும் பலரறியச் சொல்லாரென்பது நீதி நூற்றுணிபாயிருத்தலின், பிறருடைய குற்றங்களைப் பலரறியச் சொல்லாதிருத்தலை அப்பியசித்து வருதல் வேண்டும். பிறருடைய குற்றங்களைச் சொல்லும்படி நேரிட்டால், அவர்க்கு இதமான சொற்களால் தனித்த இடத்தில் மனதில் வருத்தம் தோன்றாதபடி சொல்லி அவரை நல்வழியிலொழுகுமாறு செய்தல் வேண்டும். அவ்வாறுசொல்பவரும், அவற்றிற்கு இணங்கி நடப்பவரும் மேன்மக்களாவர்.

***

### ஆசையையடக்குதல்.

ஒவ்வொருவருக்கும் துன்பத்திற்குக் காரணமாயிருப்பது ஆசையாம். ஆசையினால், ஆசைப்பட்டபொருள் சித்திப்பதற்கு தடையாயிருப்பவர்மீது கோபமுண்டாகின்றது. கோபத்தினால் தடைசெய்தவர்களைத் தாம் வருத்துதல், தம்மை அவர் வருத்துதல் முதலிய தீமைகளுண்டாகின்றன. ஆசையை யொழித்தவர்க்குக் கோபமில்லாமையால்,அவர்க்கு யாதொரு கெடுதியும் மற்றவர் வாயிலாக வுண்டாவதில்லை. ஆசை கோபத்தின் வாயிலாகத் துன்பத்தைச்செய்வதால் அதனையொழித்தவர்கே மனோசாந்தியுண்டாகும். ஆசையானது ஆபத்திற்கெல்லாம் மூலமாயிருப்பதாலன்றோ. 'ஆசைவிடவிட ஆநந்தமாமே' என்று திருமந்திரம் கூறுகின்றது.

***

## இரண்டாவது

## விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் தஞ்சாவூர்.

## 1916.

குலோத்தாரண மேநோக்கம் கொண்டுழைக்கும் நமது விஸ்வகர்மகுலோபகாரியின் 4-வது சஞ்சிகையில்தெரிவித்திருந்த வண்ணம் தஞ்சைமா நகரில் சென்ற ஏப்ரில் மாதம் 22, 23 தேதிகளில் இரண்டாவது விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் வெகு விமரிசையாக நடந்தேறிய தென்பதை நேயர்கள் அறிந்து அகமகிழ்வார்களென நம்புகிறோம். ஆங்கு நிகழ்ந்தவைகளை அறிந்துகொள்ள நமது வாசகர்கள் ஆசிப்பது சகஜமென்றெண்ணி அவ்வைபவத்தை ஈண்டுசுருக்கி எழுதுவோம்.

சில முக்கிய அம்ஸங்களில் இவ்விரண்டாவது கான்பரன்ஸ் முதல்கான்பரன்ஸை விட சிலாக்கியம் பெற்றிருந்தது. தஞ்சை நகர்வாசிகளான உள்ளூர் சுஜாதியர் உபபலம் அதிகம் இல்லாவிட்டாலும், கான்பரன்ஸ் மண்டபத்தில் அவர்களின் பெருக்கம் காணப்படாவிட்டாலும், வெளியூர் வாசிகளான, பிரதிநிதிகளும், விசிட்டர்களும், சென்ற வருடத்திலும் இவ்வருடம் அதிகமாக விஜயமாயிருந்தது கான்பரன்ஸின் முன்னேற்றத்திற்கும், ஆதிக்கத்திற்கும் தக்கவோர் அறிகுறியாயிற்று. தஞ்சை நகருள்கோட்டை வாசிகளான சுஜாதிப் பிரமுகர்கள் மட்டுமே இக்கான்பரன்ஸ் விஷயமாய் அதிகஊக்கமும் உற்சாகமும் கொண்டு உழைத்தனரென்பதும், கரந்தை முதலிய அக்கம் பக்கத்தார் அதிக நாட்டம் செலுத்த வில்லையென்பதும் நாம் கண்கூடாக் கண்ட உண்மையாகும். எனவே, இக்கான்பரன்ஸ் கூடும் விஷயமாக தஞ்சை வாசிகள் பொதுவாக அதிகம் உற்சாகம் பெற்றிருந்தனரென்பதற்கில்லை. என்றாலும், கான்பரன்ஸ்சம்பந்தமாகஏற்பட்ட சில இன்றியமையாத அலங்காரங்களையும், பவனி முதலிய ஆடம்பரங்களையும், உபந்நியாசங்களின் பெருமைகளையும், சுஜாதியர்க்கேற்பட்டிருந்த வசதிச் சௌகர்யங்களையும் கேள்வியுற்ற சுஜாதித்திரள்கள் இரண்டாம் நாள் கான்பரன்ஸ் மண்டபத்திற்கு விஜயமாயிருந்து அம்மகா சபையை அலங்கரிக்கச் செய்தனர். இவ்விராஜதானியின் பல பாகத்திலுமிருந்து சுஜாதிக்கனவான்கள் சென்ற வருடத்திலும் இவ்வருடம் அதிகமாகக் குழுமியிருந்தனர். சுஜாதியர்களே யன்றி விஜாதிப் பிரமுகர்களும், நமது கான்பரன்ஸை அபிமானித்து ஆங்கு விஜயமாயிருந்ததும், உபந்நியாசங்கள் புரிந்ததும் நம்மனோர்க்கு மிக்கமனக்கிளர்ச்சியையும், குதூகலத்தையும் விளைவித்தன.

கான்பரன்ஸுக்கு பிரசிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்ட பிரம்மஸ்ரீ N. துரைவேலாச்சாரியார் அவர்கள் B. A. ஏப்பிரல் மாதம் 20-தேதி சாயுங்காலம் சென்னையினின்றும் தஞ்சைக்குப் பிரயாணமாயினர். சென்டரல் கமிட்டியாரின் வேண்டுகோளுக் கிசைந்து, பிரம்மஸ்ரீ T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியாரவர்களும், பிரம்மஸ்ரீ கொ. கன்னியப்பாச்சாரியாரவர்களும், பிரசிடெண்டு அவர்களுடன் சகபாடிகளாகப் பிரயாணித்தனர். பிரசிடென்டவர்கள் சென்னை பொதுஜன ஆதரவையும், நேசபான்மையையும் மிகுதியாகப் பெற்றவரானதுபற்றி அக்கனவானை வழிவிடுவதற்கென பல விஜாதிப்பிரமுகர்களும் சென்னையில்வேஸ்டேஷனில் கூடியிருந்த காட்சி மிக்க சந்தோஷத்தை விளைவித்தது. 21-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை தஞ்சை ரயில்வேஸ்டேஷன் மேடையும், அம்மேடைமீது வீற்றிருந்தசுஜாதிப் பிரமுகர்களின்தோற்றமும் ஸ்டேஷனின் நாற்புறங்களிலும் பரபரப்புடன் ஆரவாரித்து நின்ற வாலண்டியர்களின் பெருக்கமும், மிக்க இன்பத்தை



விளைவித்ததோடும், இயற்கை வனப்பை மிகுதியாகப்பெற்ற அந்நகரின் தோற்றத்திற்கும், ஸ்டேஷனின் விஸ்தாரமான அமைப்பிற்கும் மிக்கஏற்றத்தை கற்பித்தன வென்றே சொல்லவேண்டும். பிரசிடெண்டை வரவேற்பதற்கென, குழுமியிருந்த உபசரணைக்கமிட்டிமெம்பர்களும், உபசாரணைக் கமிட்டிச் சேர்மனும், சென்டரல் கமிட்டியின் பிரசிடெண்டும், வைஸ் பிரசிடெண்டும், ஜெனரல் சிகரட்டரியும், ஜில்லாகமிட்டி சிகரட்டரியும் மற்றுமிருந்த சுஜாதி, விஜாதிப் பிரமுகர்களும், பிரசிடெண்டவர்களை அழைத்துச் சென்று ஸ்டேஷனிலுள்ள 'வெயிட்டிங் ரூமில்' அமைத்திருந்த ஆசனத்திருத்தி சிறிது நேரம் அளவளாவி யிருந்தனர். பின்னர் நமது குலகலச் சிங்கமும், சென்டரல் கமிட்டியின் பிரசிடெண்டுமாகியபிரம்மஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியாரவர்கள், தமக்கு இயற்கையாயுள்ள சுஜாதி அநுதாபத்தைப் பெருக்கிக் காட்டியதோர் அரிய பிரசங்கத்தால் பிரசிடெண்டவர்களுக்கு நல்வரவு கூறி பூமாலை சூட்டினர். பிரசிடெண்டவர்களும் தம்மை வரவேற்று முகமனுரைத்துபசரித்ததிற்காக வந்தனமளித்தனர். இக்காரியங்களினிடையிலும் மரியாதைகளினிடையிலும் எழுந்த கரகோஷங்களும், ஆரவாரங்களும், ஸ்டேஷன் கட்டிடத்தை பல நிமிஷங்கள் வரையில் எதிர் ஒலியால் நிரம்பச்செய்து, ஸ்டேஷனின் பலபாகத்திலும் தங்கியிருந்த எண்ணிறந்த பிரயாணிகளையும், உத்தியோகஸ்தர்களையும் அவ்விடத்தில்ஒருங்குசேர்த்துவிட்டன. சுஜாதி வாலண்டியச் சிறுவர்கள் தங்கள் அழகிய உடைகளையும், பாகைகளையும், தரித்து வழிவிலக்கிநிற்க பிரசிடெண்டு அவர்களை அழைத்துச் சென்று, உன்னதமான இரண்டு வெள்ளிய அஸ்வங்கள் பூட்டிய இரதத்தில் ஆரோகணிக்கச்செய்து இன்னும் பல கோச்சுகளும், வண்டிகளும் புடைசூழ நகர் வலமாக அழைத்துச்சென்று, குலாபிமானக் குணப் பெருந்தகையான பிரம்மஸ்ரீ பச்சண்ணா. சுவாமிநாதப் பத்தரவர்கள் ஜாகையில் அன்று அன்னோரால் விருந்தோம்பி உபசரிக்கப்பட்டனர். அன்று சாயுங்காலம், வாலண்டியர்களும், சுஜாதியர்களும் புடைசூழ பிரசிடெண்டு அவர்கள் சிவகங்கை குளம், கோயில், அரண்மனை முதலியவைகளைப் பார்வையிட்டுக்கொண்டு இராஜா புதுச்சத்திரத்தில் அன்றிரவுமுதல் ஜாகை வைத்துக்கொண்டனர். அநேக சுஜாதிப் பிரமுகர்களுக்கும், டெலிகேட்டுகளுக்கும் அச்சத்திரத்திலேயே கான்பரன்ஸ் முடியும்வரையில் தங்கியிருப்பதற்கு ஏற்பாடுகள் திருப்திகரமாகச் செய்யப்பட்டிருந்தன. கான்பரன்ஸ் கூடிய 'சுதர்சனசபா' மண்டபமும், டெலிகேட்டுகளும், விசிட்டர்களும் தங்குவதற்காக ஏற்பட்டிருந்த தெங்குண்டார் சத்திரமும், இராஜா புதுசத்திரமும், கான்பரன்ஸ் ஆபீஸும், வாலண்டியர்களின் வசதிஸ்தலமும், ஒன்றிற்கொன்று மிக்க அருகாமையாயிருந்தமையாலும், போஜன வசதி, ஸ்நாந, பானாதி சௌகர்யங்கள் நிரம்பப் பெற்றிருந்தமையாலும், ரயில்வே ஸ்டேஷனுக்கு அதிசமீபமாகயிருந்தமையாலும், கான்பரன்ஸ் காரியங்கள் இனிது நிறைவேறுவதற்கு மிக்க அநுகுணமாக இருந்தன. இடையே கான்பரன்ஸுக்கு ஒத்தாசை புரிய முன்வந்த வாலண்டியச் சிறுவர்கள், ரயில்வேஸ்டேஷனுக்கு அப்போதைக் கப்போது சென்றிருந்து வெளியூர்களிலிருந்து வந்துகொண்டிருந்தபிரதிநிதிகளையும் விசிட்டர்களையும், அழைத்துவந்து அவர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருந்த விடுதிச் சாலைகளில் அவர்களைச்சேர்த்த வண்ணமாகவேயிருந்தனர். அவர்களுக்குவேண்டிய பல சௌகர்யங்களை குலாபிமான இளைஞர்களாகிய இவ்வாலண்டியச் சிறுவர்கள் உள்ளன்போடு இயற்றிக்கொடுத்த நன்றி என்றும் மறக்கத்தக்கதன்றும். இங்கு மற்றொரு விஷயமும் முக்கியமாய்க்குறிப்பிடற்பாலது. அதாவது, சென்ற வருடம் குடந்தைக்கான்

பரன்ஸில் வாலண்டியர்களாயிருந்தவர்கள், இக்கான்பரன்ஸில் வாலண்டியர்களாகயிருந்து உழைத்ததேயாம்.

வெயிலின் கொடுமையை உத்தேசித்து மறுநாள் சனிக்கிழமை காலை 8-மணிக்குக் கான்பரன்ஸ் கூடுவதென முன்னாடியே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதனை அநுசரித்து, பிரசிடெண்டு அவர்களை உபசாரணைக்கமிட்டிச் சேர்மன் அவர்களும், மெம்பர்களும், ஆடம்பரத்துடன் கான்பரன்ஸ் மண்டபத்திற்கு அழைத்துச் செல்ல பலமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பிரசிடெண்டு அவர்களுக்கு இவ்வித இடம்ப காரியங்களில் ஒரு சிறிதும் மனமில்லையென்றாலும், சுஜாதியரின் அபரிமிதமான விஸ்வாசப் பெருக்கிற்கு ஒருவாறு கட்டுப்பட்டிருக்க நேர்ந்தது. அன்று குறித்தகாலத்தில், பல கோச்சுகளும், வண்டிகளும் பிரசிடெண்டு அவர்களின் ஜாகையின் முன் நின்றன. பெயர் போன தஞ்சாவூர் பாண்டுவாத்தியமும், கிளார்நட் வாத்தியமும், ஓர் புறத்தில் முழங்கின. மற்றோர் புறத்தில், வேத வித்துக்களான சுஜாதியரின் மந்திரபடனசப்தம் ஒலித்துநின்றது. வாலண்டியப் படைகள் வரிசையாய்நின்று தங்கள் தலைவர்களால் இடப்பட்ட வேலைகளைச் செய்துகொண்டிருந்தன. வாலண்டியர் காப்டனும், அஸிஸ்டெண்டு காப்டனும், தங்கள் அழகிய உடுப்புகளுக்கேற்ப, தங்கள் கடமைகளை வெகு நேர்த்தியாகவும், யாவரும் மெச்சத்தக்க விதமாகவும் செய்துகொண்டு பார்ப்போர்கண்களைக் கவர்ந்தனர். பிரதிநிதிகளும், விசிட்டர்களும், கான்பரன்ஸ் மண்டபத்தை எப்பொழுது சேர்வோமென ஆதுரப்பட்டுக்கொண்டிருந்தனர். இதற்குள் பிரசிடெண்டு அவர்களும், உபசாரணைக் கமிட்டிச் சேர்மன் பிரம்மஸ்ரீ T. A. சுப்பிரமண்யாச்சாரியாரவர்களும், தங்களுக்கென்று ஏற்பட்டிருந்த இரதத்தில் ஆரோகணித்தனர். சென்டரல் கமிட்டி பிரசிடெண்டு அவர்களும், மற்றுமுள்ள முக்கியமெம்பர்களும், காரியதரிசிகளும் அவரவர்களுக்கு ஏற்பட்டிருந்த கோச்சுவண்டிகளில் அமர்ந்தனர். ஒவ்வோர் வண்டிகளிலும், வாலண்டியர்கள் தங்களுக்கென்று குறித்த யிடத்திலிருந்தனர். இரண்டுவாலண்டியர் காப்டன்கள் பிரசிடெண்டு வண்டியின் இருபாரிசத்திலும் தங்கள் சைக்கிள்மீதுவந்துகொண்டிருந்தனர். பிரசிடெண்டு வண்டிக்குமுன்புறத்தில் வாத்தியம் முழங்கிற்று. வாத்தியத்திற் கப்பால், திரளான சுஜாதி டெலிகேட்டுகள் குலாபிமானப் பெருமித உணர்ச்சிகொண்டு பாதசாரிகளாகச்சென்றுகொண்டிருந்தனர். அதற்கு அப்புறம், வாலண்டியர் படைகள் கூட்டங்களை விலக்கிச் சென்றுகொண்டிருந்தன. அதற்கு முன்புறம், பல கொடிகளும், ராஜ விஸ்வாசத்தைக் குறிக்கும் பல பிருதுக்களும் வரிசையாகச் சென்றுகொண்டிருந்தன. இவ்வித நகர்வல வைபவத்தில்ஒவ்வொருவரும் அபரிமிதமானசந்தோஷத்தில்மெய்மறந்தவர்களாகவே காணப்பட்டார்கள். அச் சமயத்தில், ஊர்வியவகாரங்களையும், குடும்ப மனஸ்தாபங்களையும், மறந்தவர்களாய்ப்பல சுஜாதியர் நெடுநாள் வைரமுற்றிய தங்கள் பகைமையை ஒழித்து சிநேகபாவம் பூண்டார்களென்றால், இக்கான்பரன்ஸின் சூட்சும சக்தி இருந்தவாறென்னே!

கான்பரன்ஸ் மண்டப முகப்பில் அமைக்கப்பட்டிருந்த அழகிய பந்தலில் பிரசிடெண்டு அவர்களின் வண்டிவந்து நிற்கவே, 'பிரசிடெண்டவர்கள் நீடூழிவாழி' யென்றும், 'கான்பரன்ஸ் தழைத்தோங்குக' என்றும், 'ஜார்ஜ் மன்னர் என்றும் வாழி' என்றும், பல வாழ்த்துகள் ஆகாயமளாவக்கிளம்பின. பிரசிடெண்டு அவர்களை ஜெனரல் சிகரட்டரி பிரம்மஸ்ரீ ஜி. கிருஷ்ணஸ்வாமி ஆச்சாரியார் வரவேற்று அவர்கட்கென அமைத்திருந்த ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்தனர். இதற்குள், பிரதிநிதிகளும், விசிட்டர்களும் தங்களி



டங்களில் வெகு அமரிக்கையுடன் அமர்ந்திருந்தனர். அச்சபாமண்டபத்தின் உன்னத மேடையின்மீது, குறிப்பிட்ட சில சுஜாதிப் பிரமுகர்களும் உபந்நியாசகர்களும், ஆங்கிலேய, தமிழ்பத்திரிகை ரிபோர்ட்டர்களும், அமர்ந்திருந்தனர்.

கடவுள் வணக்கமாக மங்களவாத்தியம் ஒலித்தது. வேதாதிகாச விற்பன்னரும், பரமபண்டித சிகாமணியும், வைதிக ஆச்சார்ய சீலரும், சென்னை விஸ்வகர்ம வேதாத்தியயன பாடசாலை உபாத்தியாயருமாகிய பிரம்மஸ்ரீ பா. சுப்பிரமண்ய சாஸ்திரிகள் கான்பரன்ஸ் இனிது நிறைவேறுமாறு விஸ்வேஸ்வரப் பிரார்த்தனை கீதம் சமஸ்கிருத சுலோகத்தால் பாடினர். இணையிலாக் குலாபிமானியும், இயற்றமிழ் வல்லுநருமான யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ நபசிவாயம் சிவக்கொழுந்தாச்சாரியார் அவர்களும், பழனி-மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார் அவர்களும், இயற்றியனுப்பியிருந்த கான்பரன்ஸ், வாழ்த்துக்கவிகளை சென்னை பிரம்மஸ்ரீ முத்தமிழ் ரத்நாகரம், கந்தசுவாமி ஆச்சாரியாரவர்களால்பிரார்த்தனைரூபமாக வாசித்துக் காண்பிக்கப்பட்டன. அக்காலத்தில் அம்மண்டபத்திலிருந்தவரனைவரும் எழுந்துநின்று கரங்கூப்பிய வண்ணமாயிருந்தனர். பின்னர் கான்பரன்ஸின் வேலைகளாரம்பமாயின. உபசாரணைக் கமிட்டிச் சேர்மன் பிரம்மஸ்ரீ T. A. சுப்பிரமண்யாச்சாரியார் முன்னாடியே அச்சிடப்பட்டிருந்த தமது அழகிய வரவேற்புப் பிரசங்கத்தை, செவிக்கினிமையாகவும், கருத்திலழுந்தும்படியாகவும் பிரசங்கித்து முடிவில், பிரம்மஸ்ரீ N. துரைவேலாச்சாரியார் B.A., அவர்களை கான்பரன்ஸுக்குப் பிரசிடெண்டாகத் தெரிந்தெடுக்கப் பட்டிருப்பதை மஹாஜனங்கள் அங்கீகரிக்க வேண்டுமெனப்பிரரேபித்தனர். இப்பிரேரபணையை பிரம்மஸ்ரீ E. K. அரங்காத ஆச்சாரியாரவர்கள்ஆமோதிக்க, மஹாஜனங்கள் தங்கள் கரகோஷ மிகுதியால் அங்கீகரித்தனர். மங்கள வாத்தியம் முழங்கிற்று.

இவ்வித குதூகல முழக்கத்தினிடையில் பிரசிடெண்டு அவர்கள் தம்மீது சுமத்திய பொருப்புள்ள உத்தியோகத்தை அங்கீகரித்துக்கொண்டு தமது ஆரம்பப் பிரசங்கத்தை வெகு வாக்கு வல்லமையுடனும், பொருள் நயந்தோன்றவும் புரிந்தனர். அப்பிரசங்கத்தில் அவர் முக்கியமாய்க் குறிப்பிடப்பட்டிருந்த விஷயங்களுள், ஒற்றுமை, சிக்கனம், யோக்கியதை முதலிய விஷயங்கள் நம்மனோர் ஆழ்ந்து கவனிக்கவேண்டியவைகளாகும். உண்மையான யோக்கியதையை அநுசரித்து, நமது குலப்பணிகள் இயற்றப்படாவிடில் நமது மரபினர் பலவிதத்திலும் இடுக்கண்கள் அநுபவிக்கவேண்டிவருமென்றும், அம்முக்கியகுறைக்கு வேண்டிய நிவர்த்தி தேடிக்கொள்ளாமல் எத்தனைக் கான்பரன்ஸ்கள் கூடினாலும், அவைகளினால் பயனொன்றும் விளையமாட்டாதென்னும் தமது அபிப்பிராயங்களை வெகு தெளிவாகவும், நளினமாகவும் எடுத்துக் காட்டினார். கல்விக் குறைவைக் குறித்து அவர் பேசும்போது நம்மனோர் கவனக் குறைவைக் கடிந்துபேசினார். வித்தியாசங்கங்கள் ஏற்படவேண்டுமென வற்புறுத்தினார். நம்மனோர் ஜீவனோபாயமாக ஏற்பட்டுள்ள கைத்தொழில்கள் பிரகாசிக்க வேண்டுமானால் தொழிற்கல்வியை நமதுசிறுவர்கள் நூதன வழிகளில் பெறவேண்டுமென்று எடுத்துக் காட்டினார். மற்ற வகுப்பினரோடு குலவி வாழவேண்டுவது அவசியமென்று போதித்தனர்.

பிரசிடெண்டு அவர்களின் ஆரம்பப் பிரசங்கத்திற்கு முன்னதாகவே, கான்பரன்ஸ் அபிமானிகள் அனுப்பிய தந்திகளும், கடிதங்களும் சிகரட்டரி பிரம்மஸ்ரீ P. S. இராமஸ்வாமி ஆச்சாரியாரவர்களால் கான்பரன்ஸ் முன்னிலையில் வாசிக்கப்பட்டன. சென்னை, சிற்பகலாசாலை, அஸிஸ்டெண்டு சூபரின்டெண்டு, பிரம்மஸ்ரீ M. வேலாயுத ஆச்சாரியாரவர்கள் கான்பரன்ஸ் விஷயமாக எழுதியிருந்த கடிதத்தின் தாத்பரியங்கள் வாசிக்கப்படவே, அப்பொழுது

மஹாஜனங்கள் காட்டிய சந்தோஷத்திற்கு அளவேயில்லை. பின்னர் நிர்வாகக்கமிட்டியின் ஜெனரல் செக்ரடரியவர்கள் கான்பரன்ஸ் வருஷாந்திர ரிப்போர்ட்வாசித்தனர். கான்பரன்ஸின் தற்போதைய மூலதனக் குறைவையும், இனி அம்மூலதனம் விர்த்தியாகவேண்டிய அவசியத்தைப் பற்றியும் அந்த ரிப்போர்ட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கான்பரன்ஸில் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயங்களைப் பரிசீலனை செய்வதற்கெனவிஷயாலோசனைக் கமிட்டி (சப்ஜெக்ட்கமிட்டி) யொன்று திருச்சி, பிரம்மஸ்ரீ T.A. முத்துகிருஷ்ணாச்சாரியாரவர்களால் பிரரேபிக்கப்பட்டு, பிரம்மஸ்ரீ P. S. இராமஸ்வாமி ஆச்சாரியாரவர்களால் ஆமோதிக்கப்பட்டது. 12 கனவான்களடங்கிய கமிட்டியொன்று அங்ஙனே ஏற்பட்டது. அக்கமிட்டிக்கு சென்னை, பிரம்மஸ்ரீ கா. கந்தஸ்வாமி ஆச்சாரியாரவர்கள் சேர்மனாக நியமனம்பெற்றனர். அக்கமிட்டியார்களின் அபிப்பிராயத்தைத் தழுவிமுதல் ஐந்து தீர்மானங்களும், அவைகளை யொட்டிய வினைத் தீர்மானங்களும் அப்பகல் நிறைவேறின. பிரசிடெண்டவர்கள் இராஜவிசுவாஸ தீர்மானத்தை இங்கிலீஷில் பிரரேபித்தனர். அப்பிரசங்கம் வெகு கம்பீரமும், வாக்குவல்லமையும், உன்னததொனியையும் பெற்றிருந்தது. பிரசிடெண்டவர்களுடைய பாஷா தேர்ச்சியையும், பிரசங்க தோரணையையும், அப்பிரசங்கம் விளக்கிக் காட்டிற்று. அப்பிரசங்கத்திற்கு இணையாகவே அதனையொட்டி விஸ்தாரமாக பிரம்மஸ்ரீ T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியாரவர்கள் யாவரும் வியக்கப் பேசினர். இராஜப்பிரதிநிதிகளைக்குறித்த இருதீர்மானங்களை சென்னை பிரம்மஸ்ரீ E. K. அரங்கநாத ஆச்சாரியாரவர்கள் விசேஷ உருக்கத்துடனும், வல்லமையுடனும் பிரரேபித்தனர். தென்னிந்திய தேசாபிமானக்குரிசில், பிரம்மஸ்ரீ ஜி. சுப்பிரமணிய அய்யரவர்களின் மரண சம்பவத்தைக்குறித்ததீர்மானம்பிரம்மஸ்ரீ தி.மு.முத்துக்கண்ணாச்சாரியாரவர்களால்மிக்க அநுதாபத்துடன்பிரரேபிக்கப்படபிரம்மஸ்ரீ T. A. சுப்பிரமண்யாச்சாரியாரவர்கள் ஆமோதிக்கவும், பிரம்மஸ்ரீ M. P. துரைசாமி அய்யரவர்களால் ஆதரிக்கவும் பட்டது. ஐந்தாவது தீர்மானமும் அதன்உட்பிரிவினைகளும், பிரம்மஸ்ரீ ஜி. கிருஷ்ணஸ்வாமி ஆச்சாரியாரவர்களால் வெகு விமரிசையாக உபந்நியசிக்கப்பட்டு பிரரேபிக்கப்பட்டன. ஆச்சாரியப்பட்டத் திரியைச் சார்ந்த தீர்மானம், நமது குலாபிமானச் சிரேட்டராகிய பிரம்மஸ்ரீ T. A. முத்துகிருஷ்ணாச்சாரியாரவர்களால் பிரரேபிக்கப்பட்டு, பரமவைதிக ஆச்சார்ய புருஷர்களான, பிரம்மஸ்ரீ பா. சுப்பிரமண்ய சாஸ்திரிகளால் ஆமோதிக்கப்பட்டு, பிரம்மஸ்ரீ வைத்தியலிங் காங்காச்சாரியாரவர்களால் ஆதரிக்கப்பட்டது.

பிற்பகல் மூன்றுமணிக்குமீண்டும் கான்பரன்ஸ் கூடிற்று. முனிசிபல் ஆக்ட் சம்பந்தமாக ஏற்பட்டிருந்த தீர்மானத்தை, பிரம்மஸ்ரீ T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியாரவர்கள்நீண்டதோர்பிரசங்கத்தினிறுதியில் பிரரேபிக்க அதனை பிரம்மஸ்ரீ T. S. பஞ்சநதீஸ்வர ஆச்சாரியாரவர்களும், பிரம்மஸ்ரீ T. தங்கவேலாச்சாரியாரவர்களும், முறையே ஆமோதித்தும், ஆதரித்தும் பேசினர். சுஜாதிச்சிறுவர் சிறுமிகளின் கட்டாய ஆரம்பக்கல்வியைப்பற்றிய தீர்மானத்தை பிரம்மஸ்ரீ T. A. சுப்பிரமண்யாச்சாரியாரவர்கள் சபையோர் சிரக்கம்பம் செய்யும் வண்ணம் பேசிப் பிரரேபிக்க, பிரம்மஸ்ரீ T. M. சொக்கலிங்காச்சாரியாரவர்கள் ஆமோதித்தனர்.

இரண்டாம் நாள் ஆதிவாரம் காலை 8-மணிக்கு மறுபடியும் கான்பரன்ஸ் ஆரம்பமாயிற்று. பிரதமத்தில் கடவுள் வணக்கம் செய்யப்பட்டது. நமது வம்சத்தினர்கள் ஆசரிக்கவேண்டிய வைதிக கருமங்களைப் பற்றிய தீர்மானத்தை பிரம்மஸ்ரீ



பா. சுப்பிரமண்ய சாஸ்திரிகள் வேதசம்மதமாகவும், வாக்குத் தாஷ்டிகத்துடனும் பேசிப் பிரரேபிக்க, அப்பிரரேபனையை, பிரம்மஸ்ரீ P. S. இராமஸ்வாமி ஆச்சாரியாரவர்கள், வெகு புத்திசாதுர்யத்துடன் ஆமோதித்துப்பேச, பிரம்மஸ்ரீ வித்வான் உலகநாத ஆச்சாரியாரவர்களாலும், பிரம்மஸ்ரீ T. தங்கவேலாச்சாரியாரவர்களாலும் ஆதரிக்கப்பட்டு மஹாஜனங்களால் அங்கீகரிக்கப்பட்டது. இதனிடையில் பல விஜாதிப்பிரமுகர்களும், கான்பரன்ஸ் அபிமானிகளுமான, ஸ்ரீமான் கோபாலஸ்வாமி ரெகுநாத ராஜாளியாரவர்களும், ஸ்ரீ O. N. அப்பாசாமி அய்யாவர்களும், ஸ்ரீ T. V. சீனிவாசய்யாவர்களும், விஜயமாகவே, அவர்களை ஸ்ரீ T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார் கமிட்டியாரின் ஆக்ஞையை மேற்கொண்டு ஓர் அழகிய பிரசங்கத்தால் அவர்களுக்குநல்வரவுகூறி, முதலில்கூறிய, பூமானை இக்கான்பரன்ஸின் காப்பாளராக (Patron) இருக்கவேண்டினர். அக்கனவான், அங்ஙனமேயிருக்க இசைந்ததோடும், நம்மவரின் முற்காலநற்காலநிலைமையைப்பற்றி ஓர் அருமையான பிரசங்கத்தையும் செய்து நம்மவருக்கு உற்சாகமூட்டினர். மற்ற இருகனவான்களும் கல்வி; கைத்தொழில், தொழிற் கல்வி விஷயமாகச் செய்த இருபிரசங்கங்களும், மெச்சத்தக்கவைகளாகவும், நமது முக்கிய கவனத்திற் குரியவைகளாகவுமிருந்தன. இவர்கள் எடுத்துக்கொண்ட அரும் பிரயாசைக்கும், நமது முன்னேற்றத்தைக் கருதிய பேரபிமானத்திற்கும் பிரதியாக மஹாசபையார் தங்கள் வந்தனங்களை கரகோஷமிகுதியால் வெளிப்படுத்தினர்.

பிற்பகல் 3-மணிக்கு மீண்டும் கான்பரன்ஸ் கூடிற்று. சென்டரல் கமிட்டியரால் தயாரிக்கப்பட்ட ரூல்ஸ்கள் அங்கீகாரம் பெறவேண்டி ஜெனரல் செகரடரி பிரம்மஸ்ரீ ஜி. கிருஷ்ணஸ்வாமி ஆச்சாரியாரவர்களால் வாசிக்கப்பட்டு, பிரரேபிக்கப்பட்டன. அதனை அநுசரித்து, சில முக்கிய அம்சங்கள் பிரம்மஸ்ரீ T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியாரவர்களால் விளக்கிக்காட்டப்பட்டன. இரண்டாவது பேசிய கனவானுடைய அபிப்பிராயத்தைத் தழுவி பிரம்மஸ்ரீ T. A. சுப்பிரமண்யாச்சாரியாரவர்களும்பேசினர். இவ்வபிப்பிராயங்களையும், சென்டரல் கமிட்டியின் பிரசிடெண்டு, பிரம்மஸ்ரீ தி. மு. முத்துக்கண்ணாச்சாரியாரவர்களால் திருத்துப்பாடுசெய்யப்பட்ட (நிர்வாகக்கமிட்டியின் ஸ்தாபனஸ்தான விபரம்) சட்டத்தையும் கான்பரன்ஸ்மஹாசபையார் ஏகமனதுடன் அங்கீகரித்தனர். இத்திருத்துப்பாடு பெறும் வரையில் நிகழ்ந்த ஒழுங்குப்பாடான விவாதங்களும், அவைகளை யொட்டிப்பேசப்பட்ட வாசாமகோசரமான, பிரசங்கங்களும், காங்கிரஸ், பார்லிமெண்டு முதலியமஹா சபைகளை ஞாபகத்திற்குக் கொண்டுவந்தன. இவ்விவாதங்கள் (Debate) நியாயவாதத்திலும், சபையமைதியிலும் நிறைவேறிய பெருமை பிரசிடெண்டவர்களை பொருத்திருந்தது. இவ்விவாதத்தால் மஹாஜனங்கள் கான்பரன்ஸ் சென்டரல் கமிட்டியார் ஓர் சார்பைப்பற்றியவர் அன்றென்றும், நடுநிலைமையுள்ளவர்களென்றும் கண்கூடாகக் கண்டறிந்தார்கள். மூலதனசேகர சம்பந்தமான தீர்மானம் பிரம்மஸ்ரீ தி. மு. முத்துக்கண்ணாச்சாரியாரவர்களால் கொண்டுவரப்பட்டு, பிரம்மஸ்ரீ கொ. கன்னியப்பாச்சாரியாரவர்களால் ஆமோதிக்கப்பட்டது. இங்கு பிரம்மஸ்ரீ கன்னியப்பாச்சாரியார், தமது கஷ்ட நஷ்டங்களையும், ஓர் [illegible] சம்பந்தமான தமது அபாரப் பணத்தையும் விளக்கிக்காட்டி, மஹாஜனங்கள் சத்தியமாயிருந்து இச்சபைக்கு உழைக்கவேண்டுமென்றும், உயர்ந்ததும், தன்னுடைய, குலோத்தாரண விஷயங்களில் முன்னின்று உழைக்க கங்கணங்கட்டிக் கொள்ள மற்றவர்களை அழைத்ததும், சபையோரால் பெரிதும் நன்கு மதிக்கப்பட்டன.

பின்னர் நமது குல முன்னேற்றத்

தைக்கருதி பல குலாபிமானிகள் எழுதிய வியாசங்கள் படிக்கப்பட்டு அவர்களுக்கு ஓர் தீர்மான் பூர்வகமாக வந்தனம் செலுத்தப்பட்டது. ஜப்பான் தேசத்திற்கு தொழில் கல்விகற்கச் சென்றிருக்கும், பிரம்மஸ்ரீ T. A. ராமஸ்வாமி ஆச்சாரியார் பூரண சௌக்கியமே தமது ஜென்ம தேசம் திரும்பிவந்து தமது ஜாதியருக்கு வேண்டிய சகாயங்களிபற்ற கிருபை புரியுமாறு இறைவனருள வேண்டுமென்ற தீர்மானம் பிரம்மஸ்ரீ T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியாரவர்களால்விஸ்தாரமாகப் பேசி பிரேரபிக்கப்பட்டுபிரம்மஸ்ரீ P. கோபாலஸ்வாமி ஆச்சாரியாரவர்களால் ஆமோதிக்கப்பட்டு சபையோரால் கரகோஷத்துடன் அங்கீகரிக்கப்பட்டது. பிறகு வழக்கம்போல் மாலை மரியாதைகளும் வந்தனோபசாரங்களும் நடந்தேறின. பிரசிடெண்டவர்கள், நமது குலஞ்செய்தவமாயுதித்த பிரம்மஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியாரவர்கள், புகழைவிரும்பாது தமது தளர்ந்தவயதில் எடுத்துக்கொண்டிருக்கும், அரும்பெரும் பிரயாசையை வியந்து கொண்டாடி, இவ்வித கான்பரன்ஸ்கள் தழைத்தோங்குவதற்கு, அக்கனவானுக்கு இறைவன் அரோகதிடகாத்திர மளிக்கவேண்டுமென பிரார்த்தித்தனர். கடைசியில் பிரசிடெண்டவர்கள் நமது வந்தனங்களைச் செலுத்தும்போது முக்கியமாய்க்குறிப்பிட்ட ஓர் விஷயத்தை நம்மனோர் கவனத்திருத்தவேண்டுவது அத்தியாவசியமாகிறது. கான்பரன்ஸின் பலன்களைக் குறித்து அவசரப்படக்கூடாதென்றும், பொறுமையைமேற்கொண்டால், பெருத்த பலன்களை இக்கான்பரன்ஸ்களின் காரணமாக நம்மனோர் பெரிதும் பெறுவார்களென்றும் அவர் எடுத்துக்காட்டியதேயாகும். ஆகையால், கான்பரன்ஸாலுடனேயாதொரு நன்மையும் விளைந்துவிடவில்லையேயென நினைந்து நாம், தக்கமுயற்சிகளை மேற்கொள்ளாவிடின், குலோத்தாரணம் விரைவில் கைகூடாதென்பது நமது அபிப்பிராயமும் ஆகும். பிரம்மஸ்ரீ T. A. முத்துகிருஷ்ணாச்சாரியாரவர்களுக்குகான்பரன்ஸ் செண்டரல் கமிட்டியார் அக்கனவான் இதுவரையில் சுஜாதி சம்பந்தமான விஷயங்களில் முன்னின்று உழைத்ததைப் பாராட்டி, ஓர் வெள்ளிப் பதக்கத்தை (மெடல்) பிரசிடெண்டு மூலியமாக பரிசளித்தனர், மூன்றாவது கான்பரன்ஸ் அடுத்த வருடம் திருச்சியில் நடைபெற வேண்டுமென திருச்சி வாசிகள் விண்ணப்ப மூலமாக கேட்டுக்கொண்டதை மஹாஜனங்கள் ஒரே மனதாய் அங்கீகரித்தனர். பின்னர், பா. சுப்பிரமண்ய சாஸ்திரியவர்களால் விஸ்வகர்ம தோத்திரமும், பஞ்சாதியும் வெகு விமரிசையுடன் சொல்லப்பட்டன.

இக்காரியங்களுடன் கான்பரன்ஸ் காரியங்கள் இனிது முற்றுப் பெறவே, பிரசிடெண்டு அவர்களை மஹாஜனங்கள் புடைசூழ, அவர் ஜாகைக்கு அழைத்துச் சென்று விடைபெற்று தாங்கள் விடுதிக்குச் சென்றனர். மற்றய விபரங்களையும், உபந்நியாசங்களையும், புகைப்படங்களையும் கமிட்டியாரால் தயாரிக்கப்படும் ரிபோர்டு புஸ்தகத்தில் விபரமாகக் காணலாம்.

பத்திராசிரியர்.

## உபசரணைக் கமிட்டி சேர்மன் வரவேற்புப் பிரசங்கம்.

22—1—1916.

**குலாபிமான மிக்க நண்பர்களே!**

குலநல உணர்ச்சிகொண்டு இம்மஹாசபைக்கு எழுந்தருளியிருக்கும் தங்களனைவரையும் தரிசித்த மூகத்தால் எமது பலவித குறைபாடுகளும் குன்றி, ஜாதியபெருமித உணர்ச்சியும், உத்ஸாகமும் பெருகுகின்றது. சென்ற வருடத்திலும், இவ்வருடம் பல புதிய நண்பர்களைக்கொண்டிருக்கும் பாக்கியத்தை அடைந்த



இம்மஹாசபையை நோக்கின் நமது குலமுன்னோர்றவிஷயத்தில் எவ்வளவு அக்கறையும், அநுதாபமும், ஒற்றுமையுணர்ச்சியும் நம்மனோர் தற்கால் பெற்றிருக்கிறார்களென்பது நன்கு விளங்குகின்றது. இதனைக்கண்கூடாக் காணவே என் மனதெல்லாம் சந்தோஷத்திற்கு அளவேயில்லையென நிச்சயமாய்ச் சொல்லுவேன். இம்மஹாசபை ஜாதியபெருமுயற்சியாதலாலும், இம்முயற்சியுடன் கலந்துழைக்க இந்த குழுமியுள்ளவர்கள் எம்மிலும் மிக்க குலநலப்பிரியர்களும், யோபிமானிகளும், வயதிலும் உலகாநுபவத்திலும் மிக்கோர்களாதலாலும், அவர்கள் தங்கள் தேககஷ்டம், பொருட்செலவு முதலியவற்றைக் கவனியாது நெடுந்தூரத்தினின்றும் இங்கு வந்தடைந்த பெருந்தகைமைக்குப் பிரதியாகயான் அவர்கள் மாட்டு செலுத்தும் வந்தனங்கள் வெறும் உபசார வார்த்தைகளாகவே முடியுமென அஞ்சுகின்றேன். என்றாலும், கமிட்டியார்களின் ஆக்ஞையை சிரமேற்கொண்டெமது கடமையைச் செலுத்தவேண்டி யிருப்பதால், இந்த விஜயமாகி யிருக்கும் குலாபிமானச் சிரேட்டர்கள் ஒவ்வொருவர்கட்கும் தனித்தனியே நல்வரவு கூறுகின்றேன். பிரதிநிதிகளாகிய தங்கள் தயவினால் 'நாவிப்பவிஸ்' என்னும் இப்பெருங் குலோத்தாரண மங்கலத்தை குறுப்பம் என்னும் அலையால் தாக்கப்படாமலும், பிரயத்தின மாறுபாடென்னும் பாறையால் தட்டழியாமலும், மனப்பிளவு என்னும் சுடலின் வாய்ப்புகாமலும் இனிது நிறைவேற்றக்கூடுமென்பது எங்கள் பூரணநம்பிக்கை. ஆகையின் பல வழியிலும் எங்கட்குசகாயிகளாகவும், குல நலத்திற்கு கர்த்தாக்களாகவும் எழுந்தருளி யிருக்கும் தங்கள் யோபிமானத்திற்குப் பிரதியாக எங்கள் மனமார்ந்தவந்தனங்களை தயைசெய்து ஏற்றுக்கொள்ளுங்கள். இக்கான்பரன்ஸ் விஷயமாக தாங்கள் எங்களுடன் தங்கிகலந்துழைக்கும்வரை தங்களுடைய பல சௌகர்யங்களில் நாட்டம் வைத்து தக்கவாறு நடந்துகொள்ளச் சித்தமாயிருக்கிறோமென்பதை விநயமாய்த் தெரிவிக்கின்றேன்.

### ஸ்தலச் சிறப்பு.

நாம் ஒன்று சேர்ந்துள்ள இத்தஞ்சை நகர் தென் பிராந்தியத்திலுள்ள புராதன ஸ்தலங்களில் முதன்மையானது. பூர்வீக அரசர்களின் அரசாட்சி ஸ்தானமும் ஆகும். சிற்பசாஸ்திரரீதியாக நிர்மாணிக்கப்பட்ட நகரங்களில் இந்நகர் சிறந்து விளங்குகிறதென்பது பல நிபுணர்களின் அபிப்பிராயம். சிற்பசாஸ்திரங்களில் வரையறுக்கப்பட்டபடி தேவாலயங்களை சுற்றியிருக்கும் நகரையும், இராஜவாசமாகிய அரண்மனையைச் சூழ்ந்து விளங்கும் பட்டணத்தையும் இந்நகர் ஒருங்கே பெற்றிருந்தின்றமையால், மேற்றிசை நகர் நிர்மாண நிபுணர்களால் வரம்பின்றி மெச்சப்பெற்றிருக்கின்றது. ஆலயவேலை அருமைப்பாட்டிலும், கைத்தொழில் பிரபல்யத்திலும் இந்நகர் எந்நகரிலும் தாழ்ந்ததன்று. ஐரோப்பிய தேசாந்திரிகள் இந்நகரையும், ஆலயங்களையும் நாளும் தரிசித்துச் செல்கின்றனரென்றால், இந்நகரின் பெருமையை விரித்துச் சொல்லவும் வேண்டுமோ? நமது பூர்வீக சிற்பிகளின் கை அற்புதங்களையும், அவர்களின் திரிகாலஞானமுதிர்ச்சியையும் விளக்குவதற்கு இந்நகரிலுள்ள ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரர் ஆலயமே தக்க சான்றாக விருக்கிறது. இவ்வாலய விமானத்தின் அழகும், நந்தியின் ஆகிருதியும், பக்கலில் அமைந்துள்ள சுப்பிரமண்ய ஸ்வாமியின் திருக்கோயிலின் வேலைப்பாடும் அதி அற்புதமானவைகளாகவே கருதப்படுகின்றன. விமானத்தின் வடபுறத்திலுச்சியில் கருங்கல்லில் அடிக்கப்பட்டு அமைந்துள்ள தொப்பியிட்ட ஓர் ஐரோப்பிய தலையை இவ்வாலயத்தைப்பிரதிஷ்டை செய்த சிற்பாச்சாரியர் பல ஆயிர வருடங்களுக்குப்பின் தோன்றிய ஆங்கிலேய அரசாட்சியை குறிப்பிக்கும் வண்ணம் ஆங்கு அமைத்து வைத்தனரென்றால், நமது பூர்விகர்களான சிற்பிகளின் மகத்தான யோக்கிதைகளையும், சிற்பசாஸ்திர வல்லபத்தையும் போற்றுதார் யாரே! இவ்வாலயத்தின்கண் காணப்படுகிற சிலாசாஸன மென்னும் வெட்டெழுத்துகளிலிருந்து, நம்மனோர் பூர்வத்தில் பல்வகைச்சிறப்புடன் மான்யாதி சுகபோகங்களையும் இராஜ ஆக்ஞையால் அடைந்திருந்தனரென்றும் பெறப்படுகிறது. ஸ்ரீ இராஜ ராஜச்சோழர் அரசாட்சி காலத்திற்கு பின் தோன்றிய மகாராஷ்டிர அரசாட்சியிலும் சிற்பசாஸ்திரிகளும், லோகத்தொழில் வல்லோராகிய நம்முன்னோர்களில் பலர் சர்வ மானியங்களையும் சமான ஸ்தானங்களையும், பலவித இராஜ மரியாதைகளையும், பிருதுக்களையும், வாகனங்களையும் பெற்று அபிமானிக்கப்பட்டு வந்தனரென்பதற்கு பல அத்தாட்சிகளுண்டு. தீர்த்த விசேடத்தில் சிவகங்கை என்னும் குளம் இங்கு குறிப்பிடத்தகும். இத்தீர்த்தத்தின் மத்தியில் பொன்மணித்தட்டார் எனும் பொன்மணிபக்தரின் சமாதியொன்றிருக்கிறது. இச்சமாதியின் விசேடத்தாலும், பொன்மணி பக்தரின்

அருள்வாக்காலும் இத்தீர்த்தத்தில் தவளைகள், பூச்சிகள் முதலிய அநுஜீத ஜெந்துக்கள் சேருவதில்லை என்றுகர்ண பரம்பரையாக வழங்கிவரும் கதையின் உண்மையை பிரதரிசனமாக இன்றும் காணலாம். இத்தீர்த்தத்தின் மற்றொரு விசேடத்தையும் கூறுவதால் நமது முன்னோர்களின் அரிய சாமர்த்தியமும் நிலைநாட்டப்படும். இந்நகரிலுள்ள இராஜமாளிகையிலும், மந்திரி பிரதானியர் முதலியோர் மந்திரங்களிலுமுள்ள தடாகங்களுக்கும், கோட்டையிலுள்ள பல முக்கிய பாகங்களிலும், வீடுகளிலும் அமைத்துள்ள கிணர்களுக்கும் பூமிசுரங்க வழிகளால் இத்தீர்த்தத்தின் ஜலத்தைப் பாயசெய்யும் வசதிகள் பூர்வத்தில் செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, இந்நகர்வாசிகள் பிறந்த நாள்தொட்டு இறக்கும் நாள்வரை இந்த ஜலத்தையே பருகிவந்தனரென்ப. சங்கீத, பாத சாகித்யங்களிலும், பலவித இன்னிசைக் கருவிகளின்தேர்ச்சியிலும் இந்நகர் ஆதிகாலமுதல் பேர்போனது. சங்கீத நிபுணராக விளங்கினவர்கட்கும், தற்காலம் விளங்கி வருபவர்கட்கும் இந்நகரைத் தாயகம் என்பர்.

## பூர்வீகத் தொழில் சிறப்பு.

'இன்லெய்டு' எனப்படும் உலோக நகாசுப் பதிப்பு வேலைகளிலும், மிருதங்கம், வீணை, தம்பூர், சுரபத்து முதலிய வேலைகளிலும், தந்தவேலையிலும், சிற்றுளி செதுக்கு வேலையிலும் இந்நகர் பிரபல்ய முற்றிருந்தது. காலதேசமாறுபாட்டினால் இத்தொழில்களின் பிரபல்யம் நாளுக்குநாள் குன்றி, தொழில் வல்லோர்களின் வருமானமும் குறைந்து வருகின்றது. இந்நகர் சித்திரவேலையிலும் ஒருவாறு சிறப்புடையது. பலவர்ணங்களாலும், கெம்பு, பச்சை, ஸ்படிகம் முதலிய இரத்தினங்களை தங்கரேக்கு கொண்டு பதிப்பிக்கப்பட்ட சித்திரப் படவேலை இன்றும் நடந்தேறி வருகின்றது. மர தச்சப்பதிப்பு வேலையிலும் இந்நகர் கீர்த்திவாய்ந்துள்ளது. வல்லத்திலிருந்து வெட்டி எடுக்கப்படும் ஸ்படிகக் கல்லுகளிலிருந்து முதல்தரமான மூக்குக் கண்ணாடிகள் செய்வதில் இந்நகர் பேர்போனது. குந்தன வேலையிலும் இந்நகர் பிரசித்தி பெற்றதெனினும், அத்தொழிலைப் பிரகாசமாகச் செய்பவர்களின் தொகை தற்காலம் அதிகமில்லை.

## ஜனசங்கியையும், தற்கால தொழில் நிலைமையும்.

இந்நகர், தஞ்சை ஜில்லாவிற்குப் பிரதான நகராயிருந்தும், இந்நகரில் வசிக்கும் சுஜாதியரின் பெருக்கம் அதிகமில்லை அவர்களின் தொகையை தாராளமாக மதிப்பிட்டால், கோட்டையிலும், கரந்தை முதலிய அக்கம்பக்கங்களிலும் வசிக்கும் சுஜாதியர்கள் 1500-க்கு மேலில்லை. கைத்தொழில் பிரியர்களும், அபிமானிகளுமான பூர்வீக இராஜர்கள் இறந்துவிட்டதாலும், அவர்களை அடுத்து வாழ்ந்த பிரபல்யகுடும்பங்கள் நசித்து விட்டதாலும்நம்மனோர் இந்நகரை விட்டு ஜீவனோபாய நிமித்தம் வெளிப்போந்தனரென்றும், அதுகாரணமாக நமது ஜாதியரின் தொகை குறைந்து விட்டதென்றும் சொல்லப்படுகின்றது. மரவேலை, இரும்பு, பித்தளைவேலைகளை லாபமுடன் செய்தற்கான வழிகளைத் தெரிந்து கொள்ளாமையாலும், அவைகளை விர்த்தி செய்வதற்கான மூலதனமின்மையாலும் நம்மனோர் தங்கள் பாரம்பரியத் தொழில்களை த்தொலைத்துவிட்டு தற்காலம் தங்கள்சிறுவர்களுக்கு பொன்வேலையைப் போதித்து வருகின்றனர். இதனால் பொன்வேலை யொழிந்த மற்ற சுஜாதிவேலைகள் க்ஷீணித்து வருகின்றன. சுஜாதியர்களால் நடத்தப்படும் தொழிற்சாலைகள் இங்கு ஒன்றுமேயில்லை. இதர ஜாதியர்களால் நடத்தப்படும் தொழிற்சாலைகள் பலவுள. இவர்கள் வழியைப் பின்பற்றியும், ஐக்கியசங்கங்கள் ஏற்படுத்தியும் தற்காலம் நசித்துவரும் நமது தொழில்களை உயிர்ப்பிக்கும் அத்தியாவசியத்தை உணர்ந்தவர்களிங்கு இல்லை. பதிப்புத் தாம்பாளவேலைகளை கூடியவரையில் பிரபல்யமாகச் செய்துவரும் சுஜாதிக் கம்பெனிகள் பல விருக்கின்றன. ஆனால், அவைகளொன்றும் நவீன இயந்திரங்களின் ஒத்தாசைகொண்டும், தற்கால தொழில் முறைகளையநுசரித்தும் நடத்தப்படவில்லை இன்னிசைக்கருவிகளைச் செய்வதில் இணையற்றவேலைக்காரர்கள் இன்னும் இருந்து வருகின்றனர். வேலையின் அருமைப்பாட்டிற்கு மட்டுமே இத்தொழில் இங்கு குறிப்பிடப்பட்டதேயன்றி, அதனால் அத்தொழில் வல்லோர்களடையும் ஊதியத்திற்காகவன்று. பொன்வேலைக்குரிய பொடிவெட்டி, சாமணம், குறடு, சுத்தி முதலிய ஆயுதங்கள் இங்கு சுருங்கிய அளவிற் செய்யப்படுகின்றன. இத்தொழிலை விஸ்தாரமாச் செய்வதற்கும், தற்காலமுறைகளைத் தெரிந்து தாராளமாக உற்பத்திசெய்து நக்கலாபம் பெருவதற்கும் போதுமான மூலதனம் சுஜாதியரிடத்தில்லை. வேண்டிய மூலதனம் கொடுத்துதவ முன்வரும் அன்னியரும் இல்லை. இக்காரணங்களால் இம்முக்கிய தொழிலும் நாளுக்கு நாள் க்ஷீணித்துக்கொண்டே வருகின்றது.



சித்திர செதுக்குவேலையிலும், தேர், விமானம், வாகனவேலைகளிலும் பிரபல்யம் பெற்றிருந்த குடும்பங்கள் பல இருந்து தற்காலம் நசித்துவிட்டன. எஞ்சிய ஓர் குடும்பத்தாரும் தத்காலம் அத்தொழில்களை நாடுவாரும், ஆதரிப்பாரும் இல்லாமையால் தந்தவேலை, ரப்பர்ஸ்டாம்புவேலை, எஃகு அச்சுவேலை முதலியவைகளில் பிரவேசித்திருக்கின்றனர். மேலே சொல்லியவற்றால் இந்நகரில் சுஜாதித் தொழிலபிவிர்த்தி அதிகமில்லை யென்றும், நூதன தொழிலுணர்ச்சி கிடையாதென்றும், தொழில்களைச் சீர்திருத்து முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை யென்றும், இக்காரணங்களால் பூர்வீகத் தொழில்கள்நசித்துக்கொண்டு வருகின்றன வென்றும் விசிதமாகும்.

## சுஜாதியரின் கல்வி நிலைமை.

சுஜாதிச் சிறுவர்களுக்கென தனிமையான பாடசாலைகள் இந்நகரில் இல்லை. ஆயினும், பல ஹைஸ்கூல்களும் காலேஜ் ஒன்றும் இங்குண்டு. இவைகளின் முழுப் பிரயோசனத்தையும் பெறுவதற்கு அக்கரையையும், போதிய வரும்படியையும் உடைய சுஜாதியர்களில்லையென்பது இப்பாடசாலைகளில் வாசிக்கும நம் சிறுவர்களின் தொகையிலிருந்தே ஊகித்தறியலாம் பிரைமரி பாடசாலைகளில் வாசிக்கும் சிறுவர்களை தாராளமாக மதிப்பிட்டால் அறுபதிற்குமேலில்லை. i பாரத்தில் இருவரும், ii பாரத்தில் மூவரும், iii பாரத்தில் இருவரும், iv பாரத்தில் ஒருவரும், V பாரத்தில் ஒருவரும், vi பாரத்தில் இருவரும் ஆகமொத்தம் சகெண்டரி படிப்பைப் பெறும் சிறுவர்களின் தொகை பதினொன்றே! உயர்தரவகுப்பில்வாசிப்பவர் ஒருவருமே யில்லை! இந்நகரிலுள்ள பிரின்ஸ் ஆப் வேல்ஸ் மெடிகல் ஸ்கூலில் சப் அசிஸ்டெண்டு சர்ஜன் வகுப்பில், ஒரு சுஜாதிமாணவர் வாசித்து வருகின்றனர். சுஜாதிக்கைத்தொழில் கல்வியைப் போதிக்கும் பாடசாலைகளிங்கு இல்லை. தஞ்சை டிஸ்டிரிக்ட் போர்டாரால் ஏற்படுத்த எண்ணங்கொண்டிருக்கும் கைத்தொழில் பாடசாலையால் நமது சிறுவர்களுக்கு விரைவில் பூரண கைத்தொழில்ஞானம் ஏற்படக் கூடுமென நம்புகிறோம்.

## சுஜாதி வித்தியார்த்திகளும், சங்கங்களும்.

ஆங்கிலக்கல்வி முதிர்ச்சிபெற்று சென்னை சர்வகலாசங்கத்தாரால் பட்டமளிக்கப்பெற்ற சுஜாதியர் ஒருவருமே இந்நகரில் இல்லை! பல உத்தியோகத் துறைகளிலிருந்து வருபவர்கள் அறுவரேயாம். சுஜாதிச் சங்கங்களும், சபைகளும் இங்கு கிடையா. ஜாதீய ஒற்றுமையும், கட்டுப்பாடுகளும் இந்நகரில் அதிகமாகக் குறைந்து காட்டுகின்றது. கட்சிப்பிரதிகட்சிகள் ஒழிந்தபாடில்லை. இந்த ஸ்திதியில் குலோத்தாரண பெருமுயற்சிகள் எங்ஙனம் கைவல்யமாகுமென சந்தேகம் ஒவ்வொரு வருக்கும் உண்டாவது ஆச்சரியமாகமாட்டாது. இக்கான்பரன்ஸ் கூடுமுகத்தால் சுஜாதியரிடத்து ஒற்றுமையுணர்ச்சி உண்டாகி, நவீனமுறையில் சபைகளும், சங்கங்களும் ஸ்தாபனம் பெறுமென நாம் நம்புவது வீணாகாது. இந்நகரின் பலபாகத்தில் 'நாட்டாண்மை' யென்னும் பழைய ஜாதீய அதிகாரஸ்தானங்கள் பெயர் மாத்திரமாக விளங்கிவருகின்றன.

## ஆசார வியவகாரங்கள்.

சுஜாதி வைதிக ஆசாரணையிலும், வைதிகபற்றிலும் இந்நகர் அவ்வளவு சிலாக்கியம் பெற்றதல்ல. வைதிகக் கல்வித்தேர்ச்சியும், வரன்முறைகளும் தெரிந்த சுஜாதிப் பௌரோகிதர்கள் அதிகமில்லை. சுஜாதியர்களேயன்றி விஜாதியர்களையும், பௌரோகிதர்களாகக் கொள்ளும் வழக்கம் இந்நகரில் உண்டு. தகனக்கிரியையைக் கைக்கொண்டிருக்கும் சுஜாதியர்களின் தொகையை கைவிரல் எண்ணிவிடலாம். 'ஆச்சார்ய'பட்டப்பெயரை வகிப்பவர்கள் அதிகமில்லை. சுஜாதியரில்பெரும்பான்மையோர் 'பத்தர்' என்றும், 'பக்தர்' என்றும் சொல்லிக் கொள்கின்றனர். அப்பட்டப்பெயர்களைக் கொண்டே அன்னியர்களால் அழைக்கப்படுகின்றனர். அக்கம்பக்கத்திலுள்ள கிராமவாசிகளான சுஜாதியார் 'பிள்ளை' என்றும், 'செட்டி' யென்றும் பல பலபட்டப் பெயர்களையும் வழங்கி வருகின்றனர். எக்ஞோபவீதத்தில் அவர்களுக்கு அவ்வளவுநாட்டமும், வைதிகக் கருமங்களில் அவ்வளவு பற்றும் கிடையாது. நமது ஜாதிக்குரிய சரியானபட்டப் பெயர்கள் சாஸ்த்ரோக்தமாய்த் தொகுக்கப்பட்டு இவ்விதகான்பரன்ஸ் முன்னிலையில் மஹாஜனங்களின் அங்கீகாரம் அடைந்து, அமுலுக்கு வரும் வரையில், 'ஆச்சாரி' பட்டத்தை ஊன்றிப்பேச இந்நகர் வாசிகளுக்கு போதிய தைரியமுண்டாகமாட்டாதென அஞ்சுகிறேன்.

## நம் கவனத்திற்குரியவைகள்.

நமது தேசமும், நம்மனோர்களும் வறுமையினின்றும் விடுபட வேண்டுமாயின், உண்மையான கைத்தொழிலபி விர்த்தியும், தொழில் ஞானமும் நம்மனோர் மிகுதியாகப் பெறல்வேண்டுமென்பது தற்கால ஸ்திதியிலிருந்து காம்

அறிந்த உண்மையாகும். நம்மனோர் மாட்டு கல்வியின்மையால் கைத்தொழிலைப் பிரகாசமாகச் செய்வதற்கும், அதற்குரியமார்க்கங்களைத் தெரிந்து கொள்வதற்கும், நமது தொழிற்குறைபாடுகளை மற்றநாட்டார்களின் தொழிற்றிறனத்துடன் ஒத்திட்டுப்பார்த்து சீர்திருத்துவதற்கும் கூடவில்லை. உலகமே ஆலற்பவித்த சிறந்ததோர் கைத்தொழிலை ஜீவனோபாயமாகவும், உரிமையாகவும் கைக்கொண்டு நடத்து முறையும், ஆதரிப்பாருமின்றி அல்லல்படுகின்ற நம்ஜாதியர், யாதொரு கவர்னமெண்டு வித்தியாசகாயம் நமக்கென்று தனியாக ஏற்படாத இக்காலத்து ஒரேநாளில் கல்விமுதிர்ச்சியடைந்து, கைத்தொழில் திறமைப்பெறுவது கஷ்டம். கல்வியபிவிர்த்தியைக்கோரி நம்மாலியன்ற முயற்சிகளை நாமே தேடவேண்டுமேயன்றி அன்னியர் உதவியை மலைபோல் கருதியிருப்பது சரியல்லவென்றே தோன்றுகின்றது. நமது குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்வதில் தன்தலையில் தீப்பிடித்தவன் செயலையொத்து இனிநாம் நடக்கவேண்டும். நமது குலமுன்னேற்றத்திற்கு தடைகளாக முன்னிற்பவைகளின் வின்னைவைகளென நாம் சென்ற சில வருடங்களாக நன்றாய் உணர்ந்து வருகிறோம். அத்தடைகளில் கல்விக்குறைவுதான் எல்லாவற்றினும் முற்பட்டு நிற்கின்றது. ஆகவே இவ்விஷயம் நம்மால் பிரயத்தில் கவனிக்கப்பட வேண்டியதாக விருக்கின்றது. கல்விமுதிர்ச்சியடையும் வரையில் நாம் தொழிலபிவிர்த்தியில் நாட்டம் காட்டாதிருப்போமாயின் அஃது அலையோய்ந்த பின் சமுத்திரஸ்நானம் செய்யக் காத்திருந்தவர் செயலையொக்கும். அலையும் மோதிக்கொண்டிருக்க வேண்டும்; ஸ்நானமும் செய்து முடியவேண்டும். கல்வியும் ஒருபுறத்தில் காலங்கருதி அப்பியசிக்கப்படவேண்டும்; கைத்தொழில் அபிவிர்த்தி முயற்சிகளும் ஒருபுறத்தில் நடந்தேறிக் கொண்டிருக்கவேண்டும். நம் சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் கட்டாய ஆரம்பக் கல்வி ஒவ்வோர் ஊர்களிலும் போதிக்கப்படல் வேண்டும். அதற்கான முயற்சிகளை இக்கான்பரன்ஸ் முன்னமே மேற்கொண்டிருந்தாலும், அவைகளை வெகுபரபரப்புடன் இயற்றுவதற்கு இக்குலத்துதித்த ஆண், பெண் இருபாலர்களும் தங்களால் இயன்றளவு ஒத்தாசைகள் புரியவேண்டும். இங்களில் அன்னியர்களால் ஸ்தாபிக்கப்பட்டு நடந்தேறிவரும் தொழிற்சாலைகளே நமக்கு கைத்தொழில் ஞானத்தையும் தொழிலபிவிர்த்தி செய்யும் மார்க்கங்களையும் போதிக்கபோதிய வழிகாட்டிகளாக விருக்கின்றன. மூலதனம் நீங்கலாக, இத்தொழிற்சாலைகள் எந்த ஜாதியாரின் ஒத்தாசையை மிகுதியாகப் பெறுகின்றன? அத்தொழிற் சாலைகளில் நடைபெறும் வேலைகள் எச்சாதியரால் செய்யப்படுகின்றன? இவ்விரண்டு கேள்விகளை, இந்நகர்வாஸிகளான நம்மவரே ராயினும்சரி, இதர ஜில்லாவாஸிகளாயினும்சரி, தாங்களே அடிக்கடி கேட்டுக்கொண்டு வருவார்களாயின், நமது மெய்த்திறன் இரண்டொரு வருஷத்திற்குள் நம் கைத்தொழிலையிக்க பிரபல்யமாகவும், கௌரவமாகவும் நடத்துவதில் தடையிராது. தொழில்ஞானம் நமது வம்சத்தாரின் சுபாவிகதர்மம்; தொழில்களை யியற்றுமாற்றல் நமக்குடன்பிறப்பு. இங்ஙனமிருந்தும் நமது கவனக்குறைவால் கலங்குறுகிறோம். சுஜாதித் தொழிற்சாலைகள் ஒவ்வோர் ஊர்களிலும் ஸ்திரமாய் ஏற்படுவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ளவேண்டும். நெசவுத்தொழில் சங்கங்களைப்போல், தொழில் ஐக்கியசங்கங்களை ஏற்படுத்தி தங்கள் தங்கள் தொழில்களை விஸ்தாரமாகச் செய்யும் வழிகளைத் தேடவேண்டும். கவர்ன்மெண்டாரை இதுபோன்ற விஷயங்களில் ஒத்தாசை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்வது நியாயமென்றாலும், முழுப்பொறுப்பையும் அவர்கள்மீது சுமத்திவிட்டு நாம் வாய்ஞானம் பேசுவது தர்மமாகமாட்டாது. நம்மாலியன்றதை செய்து முடித்துக்காட்டி இனி இதற்குமேல் கவர்ன்மெண்டார் ஒத்தாசையின்றி முடியாதென்று அவர்களுக்கு எடுத்துக் காட்டுவோமாகில், அவர்கள் முழுகவனத்தையும் ஆதரவையும் பெறலாம். கைத்தொழில் மலர்ச்சியுற்று மடைந்து, உன்னதம் பெற்ற நாடுகளெல்லாம் தத்தம் கவர்ன்மெண்டார் ஒத்தாசையை பெற்றிருப்பது சரித்திரபூர்வமான உண்மையாயிருந்தாலும் பிரதம முயற்சிகள் ஜனங்களாலேயே துவக்கப்பட்டன வென்பதற்கு அத்தாட்சிகள் பலவுள. ஆகையால், நாம் விரைவில், பரஸ்பரநம்பிக்கையும், ஒற்றுமையும் அடைந்து, தொழில்ஐக்கிய சங்கங்களை ஸ்தாபிக்கவேண்டும். நம் கைத்தொழில்களைச் சீர்படுத்துவதற்கென ஏற்படும் இத்தொழிற் சாலைகளைக் கண்காணிப்பதற்கென மேற்றிசை நிபுணர்கள் பிரமத்தில் அமர்த்தவேண்டிய, அவசியமில்லை. தொழில் வளர்ச்சிக்கேற்ப நமது முயற்சிகளைக் காலக்கிரமமாய் கூட்டவும், குறைக்கவும் கூடும். ஜப்பான் தேசத்திற்குச்சென்று தற்காலம் நெசவுத்தொழிலையும், அதை யொட்டிய மற்ற தொழில்களையும் அப்பியசித்து வரும், எமது சகோதரர் மிஸ்டர் T. A. இராமஸ்வாமி ஆச்சாரியாரால் நமது குலத்திற்கு பலவித நன்மைகள் விளையக்கூடுமென எமது நண்பர்கள் பலரும் கருதுகிறார்கள். அவரை இன்னும் கொஞ்சகாலம் அங்கு தாமதிக்கச்செய்து கெடியாரவேலையை அப்பியசித்துவரச் செய்யவேண்டுமென்பது எமது கோரிக்கை. இவர் நம்குல முன்னேற்ற விஷயத்திலும், கைத்தொழிலபிவிர்த்தியிலும் அதிக நாட்டமும், பற்றும் உடையவராய் இருப்பதால், இவர் சுகமே தமது ஜென்மதேசம் திரும்பியபின் நமது தொழில் முறைகளில் மிக்க கவனம் செலுத்துவா ரென்பது திண்ணம். அவர் இந்த திரும்பிவருதற்குமுன் இத்தென் இந்தியாவில் பல சுஜாதித் தொழிற்சாலைகள் ஐக்கிய சங்கங்கள் மூலமாக ஏற்பட்டு தங்கள் கைத்தொழிலை செவ்வனே நடத்தி வருவார்களாயின், அதற்குமேற்பட்ட தொழில் இரகசியங்களையும் இன்னும் ஜப்பானியரால் கையாடப்பட்டுவரும் வியாபாரத் தந்திரங்களையும் இவரால் சுலபத்தில் போதிக்கப்படுவதற்கு நம்மனோர் பாத்திரவான்களாவார்கள். "காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டும்" ஜாதிப்பித்தை அவசியம் கடந்து மேன்மேல் பெருகச்செய்து கொள்வதால் சர்வஜன சகோதரத்துவத்திற்கு பங்கமுண்டாகு மென்பது எமது அபிப்பிராயம். இதனால் நம்மனோர் அவசியம் கைக்கொள்ள வேண்டிய வைதிகக் கருமங்களைக் கைவிடவேண்டுமென்பது எமது கருத்தன்று. அளவிற்குமிஞ்சினால் அமிர்தமும் விஷமன்றோ? வைதிகபற்றும் அவ்வாறேயாம். நமது சகோதர ஜாதியார்களுடன் நாமும், நமது ஸ்திரிகளும் எவ்வளவு நட்புபாராட்டி ஊடாடிப்பழகுகிறோமோ அவ்வளவிற்கவ்வளவு நமது வழக்கவொழுக்கங்களும்; குடும்பச் செட்டும் சிக்கனமும் சீர்படுமென்பது ஒருதலை. பிறரை நாம் நேசியாவிடில், நம்மை பிறர் நேசிக்கவிரும்புவது ஞாயமாகுமா? நிற்க, நமது ஸ்திரிகளை வீட்டுவேலை செய்யும் அடிமைகளென மதித்து உள்வீட்டில் அடைத்துவைக்கும் வழக்கத்தை முற்றிலும் களையவேண்டும். ஆண்பாலராகிய ஒருசாரார் திருந்துவதினால் மட்டுமே குலோத்தாரணம் கைகூடமாட்டாது. வாழையடி வாழையெனத் தோன்றும் நம்சிறுவர்கட்கு, கல்வியும், உலகாநுபவமும் பெற்ற தாய்கள் எத்தனையோ உபகாரங்களை நமது உதவியை எதிர்பாராமலேஇயற்று மாற்றலுடையவர்களாவார்கள். நாமும் நமது தொழிற்முயற்சிகளிலும், மற்றலௌகிகங்களிலும் நமது முழுகவனத்தையும் செலுத்தக் கூடும். ஒருவருடைய சகவாசப் பழக்கத்தால் அவருடைய குணதோஷங்கள் மாறுபாடடைகின்றதென்பது உண்மையாதலால், கல்வியறிவும், உலகாநுபவமுமற்ற மனைவிகளுடன் இல்லறம் நடத்துவது எவ்வளவு அநர்த்தங்களுக்கு ஆஸ்பதமாயிருக்கின்ற தென்பதை குலாபிமானிகள் சிந்திக்க வேண்டுகிறேன். ஆகையினால், நமது குலஸ்திரிகளுக்கு நானே கல்வி பயிற்றுவிக்க முடியாவிட்டாலும், இக்கான்பிரன்ஸ் போன்ற மஹாசபைகளுக்கு அழைத்துச்செல்வதினால் குலோத்தாரணம் விரைவிற் கைகூடுமென எண்ணுகிறேன்.

## முடிபுரை.

நான் இதுகாறும் தங்கள் விலையேறப் பெற்றகாலத்தையும், கவனத்தையும் அதிகமாக எம்வசப்படுத்தியதற்கு தங்கள் மன்னிப்பைக்கோருகிறேன். நம்சுஜாதியாரின் அதிர்ஷ்டவசத்தால் இக்கான்பரன்ஸுக்கு பிரஸிடெண்டாக ஓர் சிறந்தகனவானைப் பெற்றிருக்கின்றோம். அவர் சுஜாதிப்பற்றுமட்டுமேயன்றி, சர்வஜன சகோதரத்வத்திலும் அதிக நாட்டமுடையவர். உயர்தரப்படிப்பும், உத்தியோக அந்தஸ்தும், செல்வாக்கும் ஒருங்கே உடையவர். அந்நிய ஜாதியர்களுடன் ஊடாடிப்பழகி அவர்கள் சபைகளிலும், சங்கங்களிலும் உத்தியோக பதவிகளைப் பெற்றவர். வாக்குவல்லமையுடையவர். தற்கால நாகரீகத்தையொட்டி நமது சுஜாதியர்க்கு புத்திபுகட்டக்கூடியவர். அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நடைபெறும் இக்கான்பரன்ஸின் நடவடிக்கைகள் இனிது முற்றுப் பெறும் என்பதில்சந்தேக மில்லை. ஆகையால், பிரஸிடெண்டுஸ்தானத்தை மகிழ்ந்தேற்று இங்கு விஜயமாகி யிருக்கும் பிரம்மஸ்ரீ N. துரைவேலாச்சாரியார், B A. அவர்களுக்கு எமது வந்தனங்களைச் சேர்ப்பிக்கின்றேன். அக்கனவானை இம்மஹாசபையார் பிரஸிடெண்டாக அங்கீகரித்துமேல் நடைபெறவேண்டிய கான்பரன்ஸ், காரியங்களைப் பூர்த்திசெய்துகொள்ள வேண்டுகிறேன். எமது கல்வியின் அளவு, வயது, அநுபவம் முதலியவற்றைக் கருதாமலே இவ்வுத்தியோகத்தை யளித்த கான்பரன்ஸ் கமிட்டியார் பால் பொதுப்பட நன்றிபாராட்டக் கடமைப்பட் டிருந்தாலும் நமது குலாபிமானப் பெருந்தகையரும் கான்பரன்ஸ் செண்டரல் கமிட்டியின் பிரஸிடெண்டுமாகிய பிரம்மஸ்ரீ தி. மு. முக்கண்ணுச்சாரி யாரவர்களுக்கு பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

T. A. சுப்பிரமண்யாச்சாரி,
உபசாரணைக்கமிட்டிச்சேர்மந்,
2-வது விஸ்வகர்ம மஹாஜனகான்பரன்ஸ்,
தஞ்சாவூர்.

## ஆரம்ப உபந்நியாசம்

### முன்னுரை.

**சகோதரர்களுக்கு விஞ்ஞாபனம்:—**

1. இன்று நாம் எல்லோரும் இங்கே கூடிப் பேசி நிறைவேற்ற எண்ணங்கொண்டிருக்கும் அரிய பெரிய காரியங்கள் அனைத்தும் கைகூடும் பொருட்டு நாம் அனைவரும் எல்லாம் வல்ல இறைவனை மனமொழி மெய்களால் வணங்கி வாழ்த்த வேண்டுவது நமது முதற் கடமையாகும். அவன் அருள் கொண்டே நாம் எந்தக் காரியமும் தொடங்க வேண்டும். அவனன்றி ஓரணுவும் அசையாது. ஆகையால் நாம் எல்லோரும் எழுந்து நின்று கைகூப்பி அக் கடவுளைப் பாடி நமது காரியங்களைத் தொடங்குவோமாக.

இக்கான்பெரன்ஸானது நம்மவர் பொது நோக்கங் கொண்டு இரண்டாவது முறை கூடும் கூட்டமாகும். இக் கூட்டத்தின் நோக்கங்களெல்லாம் நமது ஜாதியாரின் பொது நன்மையையும் அபிவிருத்தியையும் குறித்தவை. நம்மவர்கள் முன்னிருந்த உயர்பதவியை நினைத்து மகிழ்வுடன் இப்போது நமக்கு நேர்ந்திருக்கும் தாழ்ந்த நிலையை நினைத்து இரங்கி, இனி நாம் முன்னுக்குவந்து முன் போலவே சிறப்படைந்து வாழவேண்டும். இதற்கான முயற்சிகளெல்லாம் நாம் தனித்தனி ஆங்காங்கே செய்து கொள்வதால் மாத்திரமே நம்முடைய எண்ணங்கள் முற்றுபெறுவனவல்ல. இதுபோன்ற பெரிய கூட்டங்கள் அவ்வப்போது கூடித் தீர்மானித்து ஏற்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இப்போது அறிஞர் பலரும் இங்கு வந்து வீற்றிருக்கிறீர்கள். இந்தப் பெரிய கான்பரென்ஸின் அக்கிராசனம் வகித்து அதனைச் செவ்வனே நடத்துவதற்கு உரியவர் என்னினும் சிறந்தோர் பலர் இருக்க, எனக்கு இந்தக் கௌரவத்தைக் கொடுத்ததற்காக நான் உங்களுக்கு எனது நன்றியையும் வந்தனத்தையும் செலுத்துகிறேன். நீங்கள் எல்லோரும் ஒருமித்து அன்புகொண்டு அமைந்திருந்து கான்பரென்ஸின் காரியங்களைச் சரிவர நடத்தும்படி பிரார்த்திக்கிறேன்.

### நமது மரபு.

நண்பர்களே! நமது மரபு மிகப் பழமையானது; ஆதிகாலந் தொடங்கிக் கௌரவமும் பெருமையையும் பொருந்தியது. சிருஷ்டி காலத்திலேயே அது முதன்மை பெற்று விளங்கிற்று என்று வேதபுராணங்கள் கூறுகின்றன. இதை நினைக்கும்போது நமக்கு அளவில்லா ஆனந்தம் உண்டாகின்றது. ஆனால் நாம் அந்தச் சந்தோஷத்தோடு திருப்தியடைந்து அதையே பன்னிப் பன்னிப் பாடிக் கொண்டிருப்பதால் பயனில்லை. அவ்வித உயர்நிலையை நாம் மறுபடியும் எப்போது அடைவோம், எவ்வாறு அடைவோம் என்னும் ஆர்வத்தோடு ஒற்றுமைப்பட்டு, ஏற்ற முயற்சிகளை நாடி, தளராத ஊக்கத்தோடு உழைக்கவேண்டும்.

### ராஜ விசுவாசம்.

2. பொது நோக்கங் கொண்டு உழைக்கும் இவ்வரிய காரியத்தில் பெரிய சாதகம் ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. அந்தச் சாதகத்தை நாம் நன்றாகக் கவனிப்போமானால், நம் முயற்சிகள் எல்லாம் சித்தி பெறும் என்னும் உறுதி நமக்கு எளிதில் உண்டாகும். நமது ஜாதியார் ஆதியில் உயர்நிலை பெற்றிருந்தனரென்றும் அது இடையில் சீர்குலைந்து ஒழுக்கம் குன்றித் தாழ்மை யடைந்ததென்றும் முன்பே கூறினேன். அப்படிப்பட்ட தாழ்வுக்குக் காரணங்கள் பல உண்டு. அவற்றுள் முக்கியமான காரணம் அடிக்கடி ராஜாங்கம் மாறுதலடைந்து நாடு முழுதும்





நசித்து வந்ததென்பதை சரித்திர ஆசிரியர் நன்கு உணர்வார்கள். இப்போது அப்படிப்பட்ட பரிதாபநிலை அறவே மாறிவிட்டது. நாம் ஆங்கில அரசாட்சிக்கு உட்பட்டு ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் ஆகின்றன. இவ்வரசாட்சியின்கீழ் நமது நாடு அனேக நன்மைகளைப் பெற்று அபிவிருத்தி யடைந்திருக்கின்றது. ‘நாம்’ ‘நமது’ என்னும் சுவேச்சையான எண்ணம் மீண்டும் நம்மனத்தில் இக்காலத்தே உண்டாயின. கல்வி ஓங்கி, நல்விவேகம் நாளுக்கு நாள் எங்கும் பரவுவதாயிற்று. எங்கெங்கும் பாடசாலைகள் பரவின. படிப்பென்னும் பெருஞ் செல்வம் பலர்க்கும் சாதகமாயிற்று. மிகச் சிறிய கிராமங்களிலும் நமது சிறுவர் கண்ணெனப்படும். எண்ணும் எழுத்தும் கற்றுவருகிறார்கள். வைத்தியம் முதலிய பற்பல சாஸ்திரங்கள் நாடெங்கும் பரவி நாட்டிற்கு நன்மைபயக்கின்றன. நாடு நகரங்கள் அனைத்தும் சுத்தமடைந்து ஒளியுற்றுவிளங்குகின்றன. மிகப் பெரியகண்டம்போல் பரந்து விளங்கும் நமது இந்தியநாட்டில் ஒற்றுமைவளர்ந்து, அன்புபெருகி பற்பலஜாதியாரும்பல்வேறு மதத்தினரும் அன்புகொண்டு உறவாடுகின்றனர். ராஜ்ய பரிபாலனத்தில் நமக்கு ஆதிக்கம் உண்டாகி, நமது நன்மைக்கேற்ற பொது விஷயங்களை நாமே தீர்மானித்துக்கொள்ளும் சுவேச்சையும் நாம்பெற்றிருக்கின்றோம். இவ்வளவு அனுகூலங்களையும் நாம் சீரும் சிறப்பும் பெற்ற ஆங்கில அரசாட்சியில் அடைந்துள்ளோம் என்னும் எண்ணத்தை ஒருபோதும் மறக்கவொண்ணாது. இவ்வரசாட்சியில் மற்றொரு விசேஷமும் நமக்குண்டு. அதாவது நமது நாட்டில் எவ்வெவ் வகுப்பினர் தம் தாழ்வு நிலைமையை யுணர்ந்துமுற்பட முயல்கிறார்களோ அவ்வவ் வகுப்பினருக்கு ஏற்ற உதவியைக் களிப்புடன் நமது ராஜாங்கத்தார் செய்ய முன்வருகிறார்கள். அப்படிப்பட்ட உதவிகளைச் செய்வதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். ஆகையால் நாம் உண்மையாக ஊக்கங்கொண்டு நமது பொது நன்மைக்காக உழைக்கும் பக்ஷத்தில் அவ்வுழைப்பு முன்னுக்கு வருவதற்கான சகாயங்களை நமது ராஜாங்கத்தினிடம் நாம் உறுதியாகப் பெறலாம்

இவ்வளவு நன்மைகளையும் நமது ராஜாங்கத்தார் நமக்குச் செய்து கொண்டு வருகின்றனர். ஆனால் அவர்கள் நமது மதாபிமானம், மதக்கொள்கை ஆசாரங்கள் முதலிய விஷயங்களில் அவர்கள் சிறிதும் பிரவேசிப்பதில்லை. அவரவர்மதமும் அவரவர் மானமும் இனி தமைந்திருக்கின்றன.

நமது நாட்டிற்கோர் ரக்ஷகமாக ஏற்பட்டிருக்கும் ராஜாங்கத்தவர் இப்போது ஐரோப்பாவில் நடக்கும் பெரும் போரில் தலையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நமது மன்னர் யாதொரு சுயநலத்தையும் நாடி இப்போர்க்கு முன் வரவில்லை. யுத்தத்திற்கு முன்னாள்வரையில் இந்த யுத்தத்தில் பிரவேசிக்கவேண்டும் என்னும் எண்ணமே நமது அரசர் மனதில்உண்டாகவில்லை இந்த யுத்தம் நடவாமலிருக்கும் பொருட்டு நம்மரசர் எவ்வளவோ முயன்றார். முயன்றும் பயன்படாதொழிந்தது. சிறிய நாடாகிய பெல்ஜியம் என்னும் ராஜ்யத்திற்கு நமது அரசர் அளித்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டும், அந்நாடு அநியாயமாய்ப் பகைவர் வசப்பட்டு அழியாதிருக்கும் பொருட்டுமே இந்தயுத்தத்தில் நம்மரசரும் கைகலக்க நேர்ந்தது. சத்தியமே ஜயம் என்பதுஉண்மையாயின் இந்த யுத்தத்தில் நம்மரசர் ஜயம் பெறுவர் என்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை, இப்போது பகைவர் எவ்வளவோ பலங்கொண்டு முயன்றும் நாளுக்கு நாள் நம்மவர் பலம் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. இறைவன் நம்மரசனுக்கு வெற்றியைத் தந்து, அவரது புகழை நிலைநிறுத்துவாராக.

### நமது மரபினரின் கல்விக் குறைவு.

3. நிற்க, நம் மரபினரின் தற்கால நிலையை உன்னும்போது, கல்வியில் நம்மவர்க்கு

ஏற்பட்டிருக்கும் குறையே மிகப் பெரிதாகத் தோன்றுகின்றது. இந்த ராஜதானியில் நமது மரபில் சுமார் மூன்று லக்ஷம் ஆண்மக்கள் இருக்கிறார்கள். அவர்களில் 16-பேர்களே பரீக்ஷைப் பட்டம் பெற்றிருக்கிறார்கள். நண்பர்களே! இதைக்காட்டிலும் பெருங்குறை ஒன்று இருக்கவுங் கூடுமோ! கல்வியே கருந்தனம் என்னும் முதுரையை அறியாதார் யார்? இதுநிற்க, வித்தியாபிவிருத்தியே எவ்வித அபிவிருத்திக்கும் முதற்காரணமாகும். காலத்துக் கேற்றவாறு சீர்திருத்த மடைந்து நாம் பெருமையும் புகழும் உயர்நிலை உத்தியோகமும் அடையவேண்டுமானால், கல்விப் பெருக்கே அதற்கு முக்கியமான ஆதாரமாகும். அதுதானும் இருவகைப்படும். முதலாவது பால்ய வித்தை. நம் மரபினுதித்த சிறுவர்கள் சிறுமிகள் ஆகிய இருபாலாரும் எழுதப் படிக்கவாவது தெரிந்து கொள்வது எல்லாச் சீர்திருத்தத்துக்கும் ஆதாரமாகும். கட்டாய எலிமென்டெரிப் பாடசாலைகள் ஏற்படுத்தும் நல்லெண்ணம் கொண்டு காலஞ்சென்ற கோக்கேல் முதலிய புண்ணிய சீலர்கள் பெருமுயற்சிகொண்டனர். துரைத்தனத்தாரும் அதற்கிணங்கியே இருக்கிறார்கள். கூடிய சீக்கிரத்தில் அதற்கு வேண்டிய ஆதரவுகள் கிடைத்தவுடன் துரைத்தனத்தார் இப்பெரிய நன்கொடையை நமது நாட்டுக்கு அளிக்க உறுதிகொண்டிருக்கிறார்கள். அதற்குள் பற்பல வகுப்பாரும் அவரவர்களுக்குள் இதற்கு அனுகூலமான முயற்சிகளைத் தேடி, பால்ய வித்தியாபிவிருத்தி உண்டாக நாடவேண்டும். அதிலும் நமது வகுப்பினர் மற்ற வகுப்பினரைக் காட்டிலும் அதிக தாழ்ந்த நிலையில் இருப்பதால் இவ்விஷயத்தில் நாமே பெருமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியவர்கள் ஆகின்றோம்.

இரண்டாவது நம் சிறுவர்களுக்கு உயர்தரக் கல்வி கிடைக்கச் செய்யவேண்டும். மேற்சொல்லியபடி நம்மவரிலுள்ள ஆண்மக்கள் மூன்று லக்ஷத்தில் 16பேர்களே பரீக்ஷைப் பட்டம் பெற்றிருக்கிறார்கள் என்றால், இன்னும் என்ன சொல்ல வேண்டும்! இதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து, இதற்கு ஏற்ற பரிகாரத்தை உடனே தேடவேண்டுவது மிகவும் அவசியமாகும்.

ஆகையால் வித்தியாபிவிருத்தி விஷயமாக தகுந்த முயற்சிகளைத் தேடிக்கொள்ளும் பொருட்டு இந்த ராஜதானியிலுள்ள ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் பிரதிநிதிகள் நியமித்து அவர்களெல்லோரும் ஓரிடத்திற் சேர்ந்து 'விசுவகர்ம வித்தியாபிவிருத்தி சங்கம்' என்னும் பெயருடன் உழைக்கும்படி ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

இச் சங்கம் செய்யவேண்டிய காரியங்களாவன:—

(1) ஏற்ற மாணாக்கர்களைத் தேடி அவர்களுக்கு உயர்தரக் கல்வியும், பட்டப் பரீக்ஷைக் கல்வியும் சித்திபெறச் செய்வது.

(2) அதற்காகப் பொருளுதவி வேண்டியிருப்பதால் நம் மரபிலுள்ள செல்வர்களையும், நமது நோக்கங்களில் அன்பு கொண்டுள்ள இதர மரபுகளைச் சேர்ந்த செல்வர்களையும் அடுத்து அவர்களிடம் பொருளுதவியும் ஏனைய ஆதரவுகளும் பெறுதல்.

(3) நமது குலச் சிறுவர்களும் சிறுமிகளும் பால்ய வித்தை மாத்திரமாவது அடையும்படி நம் மரபினரைத் தூண்டுதல்.

(4) நம் குலத்து ஏழைப் பிள்ளைகள் பால்ய வித்தை பெறுவதற்கான சகாயங்களைச் செய்யும்படி துரைத்தனத் தாரைக் கேட்டுக் கொள்ளுதல்.

### தொழிற் கல்வி.

4. கல்வி விஷயமாகப் பேசும்போது அதை ஒட்டினாற்போல் நம் மனத்தில் உதிக்கும் எண்ணம் ஜீவனோபாயமாம். அதுதானும் நம் மரபினர்க்கே சிறப்பாய்த் தொன்று தொட்டு ஏற்பட்டுள்ளது. இக்



காலத்தில் எந்நாட்டிலும் சிறப்பித்துக் கூறப்படும் கைத்தொழிலே நமக்கு குலாசார தர்மமாக ஏற்பட்ட ஜீவனோபாயம். உலோகங்களில் அரிய சித்திர வேலைகள் செய்யும் ஆற்றல் நம்மவர்க்கு ஆதிமுதல் அமைந்திருக்கிறது. நம்மவர்கள் அதைக் கைவிட்டது நமக்குப் பெருங் குறையாகும். நமது கைத்தொழில் கேவலம் சீர்குலைந்து பாராட்டுவாரின்றிச் சிதைந்து கிடக்கின்றது. அதை நாம் முன்னுக்குக் கொண்டுவந்து முன்போலவே சீர்பெறச் செய்யவேண்டும். பண்டைக் காலத்தில் நம்மவர் செய்துள்ள சிறந்த வேலைகளை நாளது வரையில் கண்டுகளியாத ஜாதியார் உலகத்தில் ஒருவரும் இல்லை, இவ்விஷயத்தில் நாம் பண்டைக் காலத்திய உச்ச நிலையை அடைய முயல்வது நமது முதற் காரியம். இப்போது ஐரோப்பாவில் நடக்கும்பெரிய யுத்தத்தின் காரணமாக, நம் நாட்டு கைத்தொழில்கள் விருத்தி யடையும்பொருட்டு நமது துரைத்தனத்தார் வேண்டியவைக்கக் கொடுத்து உதவிசெய்ய முன்வருகிறார்கள் இதுவே நமது கைத்தொழில் விருத்திக்கு ஏற்ற சமயமாகும். இச் சமயத்தில் நாம் பெருமுயற்சிகள் செய்து துரைத்தனத்தாரின் ஆதரவு பெற்று நமது கைத்தொழில் வித்தைகளை நூதன வழிகளில் விருத்தி செய்துகொள்ள முயலவேண்டும்.

இதுவிஷயமாக நாம் செய்யவேண்டிய காரியங்கள் முக்கியமாக இரண்டு—முதலாவது கைத்தொழிற் பாடசாலை ஒன்று இவ்விராஜதானியில் ஏற்படுத்தி, அதில் நம் குலப் பிள்ளைகள் கற்பதற்கான அனுகூலங்களைச் செய்யும்படி நாம்துரைத்தனத்தாரை வேண்டிக்கொள்ள வேண்டும். இரண்டாவது நம் குலத்தில் படித்துத் தேறிய மாணாக்கர்களுக்குப் பொருள் உதவி செய்து அந்நிய தேசங்களுக்கு அனுப்பி உலோகக் கைத்தொழில் வேலைகளிலும் சித்திர வேலைகளிலும் தேர்ச்சி பெறச் செய்யவேண்டும்.

### நமக்குள் ஒற்றுமை.

5. நமது வகுப்பினர் சகல விஷயங்களிலும் சிறப்படைந்து விளங்க வேண்டுமானால், அதற்கு இன்றியமையாததான சிறந்த குணம் ஒன்று நம்மிடம் பொருந்தி இருக்கவேண்டும். அதாவது ஒற்றுமை அல்லது ஐக்கிய பாவமாகும். இந்தக் குணம் ஒன்று இருந்தாலன்றி எவ்விதப் பொது நன்மையும் கைகூடாது. பொது விஷயமாக எந்த முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், நம்மவர் எல்லோரும் ஒருமனப்பட்டு ஒத்துழைத்து நமது நோக்கங்களை முற்றுப்பெறச் செய்யவேண்டும். ஒற்றுமை ஒன்று மாத்திரம் நம்மிடம் ஏற்படுமாயின் எப்படிப்பட்ட இடையூறுகளையும் எளிதில் நாம் புறங்காணலாம். நம்மவரில் பற்பல வகையினர் இருக்கலாம். நடையுடை பாவனைகள் நமது தேசாசாரத்திற்கு ஏற்றபடி மாறுபடக் கூடும். பாஷையும் ஒழுக்கமும் கூட அவ்வாறே மாறுபடக் கூடும். பொது விஷயங்களில் உழைக்கும் போது நாம் இந்த வித்தியாசங்களை முற்றிலும் மறந்து, ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்போல் ஒற்றுமைகொண்டு அன்பு பாராட்ட வேண்டுவது அவசியமாகும்.

இன்றியமையாததான இவ்வரிய குணம் நம்மில் பொருந்துவதற்கு இதுபோன்ற கூட்டங்கள் மிகவும் சாதகமானவை. வருஷப் பிரதி வருஷம் நாம் இதுபோலவே வெவ்வேறு முக்கியமான ஸ்தலங்களில் கூடவேண்டும். கூடி நம்நிலைமையை ஆராயவேண்டும். ஆராய்ந்து ஏற்ற முயற்சிகளைத் தேடவேண்டும், தேடி அம்முயற்சிகளை மேற்கொண்டு ஊக்கத்தோடும் ஒற்றுமையோடும் உழைக்கவேண்டும். இது போன்ற கூட்டங்களில் நாம்செய்துகொள்ளும் சங்கல்பங்களை உறுதியாகக் கைக்கொள்ளவேண்டும். ஒற்றுமை என்னும் விஷயமாகப் பேசும்பொழுது ஒரு விஷயம் என் நினைவுக்கு வருகின்றது. அதாவது, இப்போது நம்மவரின் பொது நன்மையை நோக்கி இந்த ராஜதானியில் இர

ண்டு மாதப்பத்திரிகைகள் வெளிவருகின்றன. இப்போது நம்மவர்க்குள்ள நிலைமையில் இரண்டு பத்திரிகைகள் இருப்பது அனுவசியம் என்று தோன்றுகிறது. அப்படி இருப்பதால் அபிப்பிராய பேதங்களும் பலவகைப்பட்ட விரோதங்களும் தோன்றும். இவ்விரண்டையும் ஒன்றுசேர்த்து ஒரு கமிட்டியின் பார்வையின் கீழ் நடத்துவதே நலம். அந்தக் கமிட்டியானது கான்பரென்ஸில் நியமிக்கப்பட்டு கான்பரென்ஸுக்கு அடங்கி நடத்தப்படவேண்டுமென்பது எனது கொள்கை.

### சிக்கனமும் யோக்கியதையும்.

6. நம்மவரை நான் வேண்டிக்கொள்வது மற்றொன்றுண்டு. அதாவது: சிக்கனமாக வசித்தல். நம்மரபினர் ஒவ்வொரு குடும்பத்தவரும் வரவுக்கேற்ற செலவு செய்து கௌரவத்தோடு வாழவேண்டும். எட்டாத சுகத்தை எவரும் தேடலாகாது. விசேஷகாலங்களில் நம்மவர் ஏராளமாகப் பணச்செலவு செய்கிறார்கள். அதைக் கூடியமட்டும் குறைக்கவேண்டும். சாஸ்திரோக்தமாகச் செய்யவேண்டியதை வேண்டாமென்று நான் மறுக்கவில்லை. அதனால் மாத்திரமே அதிக பணம் செலவாகிறதில்லை. அநேக வழிகளில் அனுவசியமாகப் பணச்செலவு செய்கிறார்கள். அதையெல்லாம் குறைக்கவேண்டும். இது விஷயமாக நான் நம்மரபினரை ஒன்று கேட்டுக்கொள்ளத் துணிவு கொள்ளுகின்றேன். அதாவது நம்மவர்கள் ஐந்துநாள் கலியாணத்தை மூன்றுநாள் கலியாணமாகமுடித்துக்கொள்வது கூடுமோ என்று நீங்கள் எல்லோரும் யோசித்துப் பார்க்கவேண்டும். இதுபோலவே மற்றவற்றையும் தேர்ந்து ஆடம்பரமின்றிச் சுருக்கிக் கொள்ளவேண்டும் என்பது எனது அபிப்பிராயம்.

7. நான் சொல்ல எண்ணிய விஷயம் மற்றொன்று உண்டு. முதலாவது, எக்காரியத்திலும் யாவரிடத்திலும் நாம் சத்தியமாக நடந்துகொள்ளவேண்டும். தொழில் முறையில் பிறருடன் பழகும்போது நாம் நியாயமாகவும் உண்மையாகவும் நடந்துகொள்ளவேண்டும். பேராசைக்கும் மோசத்துக்கும் இடம் கொடுக்கலாகாது. இவ்வகையில் நம்மரபினருக்கு நேர்ந்துள்ள அபவாதத்தை நீக்கிக்கொள்ள முயலவேண்டும். அதனால் நம்மைநாமே குறைத்துக்கொள்ள வேண்டுமென்று நான்சொல்லவில்லை. நமக்கு உரியது கிடைத்தால்போதுமென்று அமைந்திருக்கவேண்டும் என்பது என் கருத்து.

### மற்ற வகுப்பினரோடு கலந்து வாழ்தல்.

8. கடைசியாக நான் உங்களுக்குச் சொல்வதொன்றுண்டு. அதாவது நாம் மற்ற ஜாதியாரோடு கலந்து அன்பாக நடந்துகொள்ளவேண்டும், ஒருவரையொருவர் வெறுத்தல் ஏற்றதன்று. 'பெருமையும் சிறுமையும், தான்தரவருமே' என்னும் முதுரையை நம் மனதில் உறுதியாகக் கொள்ளவேண்டும். 'நான் உயர்ந்தவன்' 'நீ தாழ்ந்தவன்' என்னும் விவாதம் அறவே ஒழியவேண்டும். இதனால் ஒருவன் நம்மை நிந்தித்தாலும் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் சொல்லவில்லை.

ஒருவன் நம்மை குறைகூறினால் அதை சிறிதளவும் பொறுக்கலாகாது. ஆனால் அக்குறையைத் தீர்க்கும் விஷயத்தில் நமது கௌரவத்துக்கும் நிலைமைக்கும் அறிவுக்கும் ஏற்றவாறு நடந்து கொள்ளவேண்டும்.

### முடிவுரை.

இவ்வளவே நான் இந்தச்சமயம் சொல்ல நினைத்தது. அதாவது: நாம் அனைவரும் ஒற்றுமைப்பட்டு பொது நன்மையை நாடி என்றும் தளராத ஊக்கத்துடன் உழைக்கவேண்டும். பொதுவாய் நோக்குமிடத்து நமது கான்பரென்ஸின் நோக்கங்கள் வித்தியாபிவிருத்தி, கைத்தொழில் விருத்தி என்னும் இரண்டு விஷயங்களைக் குறித்ததாக இருக்கவேண்டும். நம்மினத்தவர் எல்லாம் ஒருமித்து சகோதரபாவம் கொண்டு நடக்கவேண்டும். நமக்குள் தோன்றக்கூடிய அற்ப வித்தியாசங்களைப் பாராட்டலாகாது. பொது நன்மை கருதி எந்தக் காரியத்தையும் நடத்தவேண்டும். வீண்செலவு, ஆடம்பரம், அளவுகடந்த செலவு முதலிய குற்றங்களை அறவே ஒழிக்கவேண்டும். நம்மினத்தவரின் அபிவிருத்தியை முன்னிட்டு உழைக்க வேண்டும். அந்தக்காரணத்தால் மற்ற இனத்தாரோடும் முரண்படலாகாது. அவ்வாறு நம் நாட்டிலுள்ள பல மரபினர் ஒருவருக்கொருவர் முரண்படுவது தீமையே விளைக்கும். நம் நாட்டுப் பொது நன்மையே நமக்கு முதன்மையான நோக்கமாக இருக்கவேண்டும். அந்தந்த மரபினர் அவரவர்களுக்குள் ஒத்து உழைத்து அபிவிருத்தி அடைவாரானால் அதுவே நாட்டின் பொது நன்மைக்கும் அபிவிருத்திக்கும் ஆதாரமாகும்.

இந்த நோக்கங்களை நமது வருஷாந்த கான்பரென்சுகளின் பொது நோக்கங்களாகக்கொண்டு, அவற்றிற்கேற்ப அவ்வப்போது வேண்டிய முயற்சிகளைக் கொண்டு உழைப்போமானால், நம் மரபினர் நன்னிலை அடைந்து சீர்பெறுவார் என்பது திண்ணம். அவ்வாறு நமது முயற்சிகள் சித்திபெறவும் நம்மைக் கருணையுடன் ஆண்டு ரக்ஷிக்கும் ஆங்கில துரைத்தனம் நீடித்து ஓங்கவும் நம்மரசர் இந்நாளில் உண்டான பெரும்போரில் வெற்றிபெற்று விளங்கவும் நம் நாடு நாளுக்குநாள் செழித்து ஓங்கி உலகத்துக்கோர் திலகமெனத் துலங்கவும் எல்லாம்வல்ல கடவுள் அருள் புரிவாராக.



---

## The full text of a speech delivered by Mr. N. Duraivelachari, B. A. on "Loyalty" at the Visvakarma Mahajana Conference held at Tanjore on 22—4—1916.

I have very great pleasure in moving the first resolution on the agenda, the resolution of "Loyalty to Government." It is very appropriate that this important and simple resolution should be moved from the chair. It needs no arguments on my part to commend this resolution to your acceptance.

2. The wonderful machinery organised by sagacious statesmen for the efficient administration of the country, the various courts of law established throughout the country for dispensing impartial justice to the rich and the poor, the numerous schools and colleges founded in the country for imparting sound instruction and culture to the children of the land, the large number of hospitals and dispensaries opened all over the country for administering medical relief to the suffering humanity, are all standing monuments of the beneficent British rule, which should evoke the spontaneous loyalty of the Indian nation.

3. An opportunity was afforded to the country to display the loyalty at the out-break of the continental war. India rose superbly to

the occasion and gave her enthusiastic support to the King-Emperor not only by her handsome gifts of wealth, but also by the prompt despatch of her gallant sons to the battle-field.

4. We have read that "righteousness exalteth a nation" and the war that is now being waged by the King-Emperor and his allies in vindication of the righteous principles of international liberty and justice, can have only one end. We have every hope that as a result of this war, a new India will arise, in the industrial regeneration of which the Visvakarma community will play no insignificant part.

5. It may be that the Visvakarma community cannot boast of the wealth of other communities, it may be that this community cannot boast of the education of other communities, but on behalf of the Visvakarma community, I take this opportunity to emphatically assert that it yields to no other Indian community in its "Loyalty to the British Raj."

---

தஞ்சாவூர், இரண்டாவது விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸில்

## ஸ்ரீமாந். N. துரைவேலாச்சாரி, B. A. அவர்கள் செய்த இராஜ விஸ்வாஸ உபந்நியாசம்.

(மொழி பெயர்ப்பு.)

சூசிகைப் பத்திரத்தில் முதலாவதாக விருக்கிற இராஜ விஸ்வாஸ தீர்மானத்தை பிரேரேபணை செய்வதில் நான் மிக்க சந்துஷ்டியடைகிறேன். வெகுமுக்கியமானவும், அதிக சிரமம் கொடாததுமான இந்த தீர்மானத்தை தாங்கள் அங்கீகரிக்கவேண்டி. யான் அதைப்பற்றி விபந்துபேசி அதிகம் விவகரிக்கத் தேவையில்லை.

(2) இந்திய சமூகத்தாரின் இராஜ விஸ்வாஸத்தை இயல்பாகவே உள்ளுணரவிர்த்திசெய்வதற்கு முதறிவுள்ள இராஜதந்திர நிபுணர்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ள வல்லமை பொருந்திய இந்த இராஜரீகமாகிய விசித்திர இயந்திரமும், செல்வவந்தர் வறியோரென்னும் பேதமின்றியும் பாரபட்சமின்றியும் நியாயமளிக்கப்படும் பலவகை நீதி ஸ்தலங்களை தேசமுழுவதும் ஏற்படுத்தியிருப்பதும், நமது மக்கட்கு முதிர்ந்த கல்வி ஞானத்தையும், தேர்ச்சியையும் விளைவிப்பதற்கென எண்ணிறந்த பாடசாலைகளையும், உயர்தர கலாசாலைகளையும் தேசத்தின்கண் ஸ்தாபித்திருப்பதும், பிணிபால் வருந்தும் மன்பதைகட்கு சிறிச்சா சகாயத்தைக் கருதி விசேஷமான தர்ம வைத்தியசாலைகளையும், ஒளஷதசாலைகளையும் தேசமெங்கும் நாட்டியிருப்பதும், பேருபகாரத் தன்மை பூண்ட பிரிடிஷ் அரசாட்சியின் சாஸ்வதமான ஞாபகச் சின்னங்களாக இருக்கின்றன.

(3) இப்பெரியயுத்தம் மூண்டகாலத்து தமது ராஜ விஸ்வாசத்தை வெளிப்படையாகக் காட்டும் ஓர் அரிய சமயம் இத்தேசத்திற்கு வாய்த்தது. இந்தியாவானது அந்த மகாசமயத்திற் கேற்றவாறு கம்பீரமாக முன்வந்து மாட்சிமை பொருந்திய சக்கிரவர்த்தியவர்களுக்கு பரோபகாரமான உதவியை தமது தாராளமான திரவிய சகாயத்தால் மட்டுமேயன்றி, வீரம் பொருந்திய தம்மக்களை யுத்தகளத்திற்கு அதிதீவிரமாக அனுப்பியதாலும் மனப்பூர்வகமாகப் புரிந்தது.

(4) நேர்மையைக் கடைப்பிடித்தலால் ஓர்ஜாதியார் மகோன்னததசையை அடைகிறார்களென நாம் கற்றுணர்ந்தவாறு, இப்பொழுது நமது காருண்யசக்கரவர்த்தியவர்களாலும், நேசவல்லரசுகளாலும், தர்ம நீதியைப் பற்றியும், சர்வதேச சம்பந்தமான சுயேச்சா சுதந்திரம்பற்றியும், நியாய நியமத்தை யடுத்தும் தொடுக்கப்பட்டு நடைபெறுகிற்கும் இந்த மகாயுத்தம் சந்தோஷகரமான ஓரே முடிவைத்தான் காலக்கிரமத்தில் அளிக்கும். இந்த யுத்தத்தின் வெற்றிகாரணமாக ஒருபுதனை இந்தியா தலையெடுக்குமென்றும். அப்பொழுது அவசியம்சேரும் கைத்தொழிற் புரட்சியில் நம் விஸ்வகர்ம வம்ஸத்தினர்கள் அந்யோந்ய சம்பந்தம் பெற்று விளங்குவார்களென்றும் நிச்சயமாய் நம்புகிறோம்.

(5) விஸ்வகர்ம வம்ஸத்தினர்கள் இதர வம்ஸத்தினர்களைப் போல் ஐசுவரியவான்களெனப் பெருமைபாராட்டிப் பேசவும், மற்ற ஜாதியர்களைப்போல் அவ்வளவு படிப்பாளிகளெனச் சொல்லிக் கொள்ளவும் கூடாவிடினும், அவர்கள் இதர இந்திய ஜாதியர்களைக் காட்டிலும் இராஜ விஸ்வாஸ உணர்ச்சியில் ஒரு சிறிதும் பின்னடைந்தவர்களல்ல வெனும் உண்மையை, அச்சந்ததியாரின் பிரதிநிதியாக நின்று ஊன்றிப்பேச இந்த அரிய சந்தர்ப்பத்தை யான் தாராளமாக உபயோகிக்கின்றேன்.

---



இரண்டாவது விஸ்வகர்ம கான்பரன்ஸுக்கு வந்த

## சில குறிப்பிட்ட வியாசங்கள்.

தஞ்சை இரண்டாவது விஸ்வகர்மமகாஜன கான்பரன்ஸுக்கு மீனாக்ஷிபுரம் ஜோஸியர் பிரம்மஸ்ரீ முத்தாச்சாரியார் அவர்களால் அனுப்பப்பட்ட விக்ஞாபனப் பத்திரிகையின் சுருக்கம்.

மகா சக்கிரவர்த்தி நம் ஜார்ஜ் மன்னர் பெருமானுக்குத் தற்காலம் நடக்கும் இக்கொடிய யுத்தத்தில் ஜயமுண்டாவதாக முழுமுதற் கடவுளும் தயாநிதியுமாகிய ஸ்ரீவிஸ்வகர்மா பரமாத்மாவை நாம் யாவரும் பிரார்த்திப்போமாக.

அடியில் சொல்லப்போகிற இந்துவிஷயங்களையும் கான்பரன்ஸ் சபையார்கள் தீர்க்காலோசனை செய்து நம் விஸ்வகர்ம சந்ததியார்கள் மேற்படி விஷயங்களை அனுஷ்டானத்திற்குக்கொண்டுவரும்படி வற்புறுத்த வேண்டும்.

1. வைதீகம். சுருதி ஸ்மிருதிகளில், கூறப்பட்டுள்ள வைதிககர்மங்களை அறிந்து காலாகாலங்களில் அக்கர்மங்களை நடத்தவேண்டும். ஆதாரம்:—குண்டூர் பிரம்மஸ்ரீ சேஷாசல அவதானி அவர்களால் இயற்றப்பட்ட (1) சோடச கர்மானுகிரமணிகா, (2) ஸார்த்த ஷோடச சமஸ்கார ரத்னமாலா, (3) புராதீன இதிஹாச.

2. உபநயன அனுஷ்டானமும், துவிஜத்வமும்:—உபநயனமானது சுருதி, ஸ்மிருதி, இதிஹாஸ புராணங்களாவும், சிலா தாம்பிர ஸாஸனங்களாவும், ஆலயங்களிலுள்ள சிற்பாசாரிய பிரதிமைகளாவும் நம்விஸ்வகர்ம சந்ததியார்களுக்கு உபநயனம் உண்டு என்பதை தெளிவாகக் காட்டுகிறது. ஆகையால் விவாகங்களுடன் திருமங்கிலிய தாரணத்திற்குமுந்தி நடத்துவதாகிய பழக்கத்தைநிறுத்தி 7 அல்லது 8 - வயதில் விதிப்பிரகாரம் உபநயனம் முடிக்கவேண்டும்.

4. விவாஹாதி வைதீக அனுஷ்டானம்:—விவாகதினங்கள் அதிகமாக இருப்

பதால் பொருள் அதிகமாக செலவாகிறபடியால் நாட்களைக் குறைக்கவேண்டுமென்று சொல்வது சரியல்ல. அப்படிக்கு நாட்களைக்குறைத்தால் விவாகத்தில் வைதீக கிரியைகள் எப்படி சரிவர நடக்கும்? லௌகீகமான வீண்செலவுகளைநிறுத்தி வைதீக கர்மங்களை அதிகமான செலவில்லாமல் வேதோக்தமாக சரிவர முடிக்கலாம்.

### நம்மவர் கடமை.

5. உயர்வு அடைய வேண்டிய வழிகளை ஆலோசித்து ஜனசமுதாயங்களிலிருந்து நிதிசேர்த்து நம் வம்சத்தில் ஏழை முதலான யாவரும் உபகாரத்துடன் கல்வி பயிற்றி அறிவாளிகளாகவும்; இராஜ பரீக்ஷையில் பட்டதாரிகளாயும், விசேஷத் தொழிற்றிறமை யுள்ளவர்களாயும், கூட்டுறவு வியாபாரக் கம்பெனிகள் வைத்து நடத்தும்படிக்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். சரீரமெடுத்ததின் பிரயோஜனம் பரோபகாரம். பரோபகாரமானது அநேக விஷயங்களில் செய்வதாக இருந்தாலும் தர்மார்த்த காம மோக்ஷங்களை அடைவதற்கான வித்யா விஷயமாகச் செய்வதுதான் உத்தமமான காரியம். கல்வியை விருத்திசெய்ய நிதி வேண்டும். அதைச் சேகரம்செய்ய அங்கங்கே சங்கங்கள் ஏற்படுத்தவேண்டும். கவர்ன்மெண்டாருடைய உதவியை தற்காலம் எதிர்பார்க்கக்கூடாது. அன்னிய நாடுகளுக்கும் போய் உயர்தர கல்வி [illegible]த்துவரவும் தொழிற்கற்கவும் ஏராளமான நிதிவேண்டும். அதற்காக வேண்டிய ஏற்பாடுகள் செய்யவும், சிலரை அத்தியயன முதலானவைகள் அப்பியசித்து பௌரோகிதர்களாக்கவும், சிலரை வியாகர்ணமுதலியதில் பண்டிதர்களாக்கவும், தாலூக்கா கிராமப் பொது பண்டுகளுடன் கம்பெனிமுதலிய தொழிற்செய்யும் வியாபாரிகளாக்கவும் முயலவேண்டும். நம் விஸ்வகர்ம வம்சத்துக்குரிய தொழில்களை தான் செய்யவேண்டுமென்ற கருத்தைவிட்டு தற்காலம் லாபமும் மேன்மையும் கிடைக்கக்கூடிய தொழில்களைச் செய்ய வேண்டும். நம்முடைய தொழில் லாபமும் மேன்மையும் அடையவேண்டுமானால் சத்தியத்தையும் கருர்களையும் செலுத்தி வரும்படி. கான்பரன்ஸ் முக்கிய தீர்மானங்களைச் செய்யவேண்டும். ஒவ்வொரு தாலூக்காக்களிலும் சபை ஏற்படுத்தி முக்கியமான சிற்பசாஸ்திரங்களைச் சேகரித்து பத்திரப்படுத்தவேண்டும். சிற்ப சாஸ்திரங்கள்தான் நம்மவர்களுக்கு உபகாரமாயும், வேதமாயும், கர்த்தவ்வியமுமாக இருக்கிறது. நம்மவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சிலா தாம்பிர சாஸனங்களின் வசனங்களையும், சரித்திரங்களையும், சுருஸ்மிருதி, இதிகாசபுராணங்களையும் நம் வம்சத்தினருக்கு உபயோகமாகும்படி அச்சிட்டு ஒவ்வொரு சபையிலும் வைக்கவேண்டும். அவைகளைச் சேகரித்து அச்சிடாவிட்டால் வெகு சீக்கிரத்தில் இருந்த விடம் கூடத்தெரியாமல் போய்விடும். ஒவ்வொரு சபையிலும் லைபிரரி ஏற்படுத்தி நல்ல புஸ்தகங்களையும், பத்திரிகைகளையும் வைத்து நம் வம்சத்தினர்கள் அங்கே வந்து வாசித்துப் போகும்படி செய்யவேண்டும். இந்தவிதமான ஏற்பாடுகள் செய்தால் கூடியவரையில் நம்முடைய வம்சம் கொஞ்சம் கொஞ்சமாக மேன்மையை அடையும்.

---

### தஞ்சை உபசரணைக்கமிட்டி செகரடரி பிரம்மஸ்ரீ B.S. இராமஸ்வாமி ஆச்சாரியார் எழுதிய வியாசம்.

---

நமது ஜாதியார்கள் தொன்று தொட்டு இந்நாட்டில் தொழில் தேர்ச்சிபெற்றவர்களென்றும் அதனால் நன் மதிப்பை அடைந்திருந்த நாம் இக்காலத்தில் மேல்நாட்டுச் சாமான் வருகையினால் நமது தொழில்களெல்லாம் பாழாய்விட்டதென்றும் அதனால் நாம் தரித்திர திசைக்குள்ளாக நேர்ந்ததென்றும் நம்மில் பலரும் பேசிவருகின்றனர்.



நம்மவர்கள் அனுஷ்டித்துவரும் பொன் வெள்ளி முதலிய உயர்ந்த லோகங்களைக் கொண்டு நகை செய்யும் தொழிலும் நாற்காலி பெஞ்சு முதலிய மரத்தொழிலும் குடம், கங்காளம், தவலை, பானபாத்திரம் முதலிய தாமிர பித்தளை முதலிய தாழ்ந்த லோகங்களினால் ஆகிறதொழிலும் அன்னிய நாட்டாரின் இறக்குமதியினால் எவ்வித பாதகத்தையும் அடைந்ததாகத்தெரியவில்லை.

அன்னிய நாட்டுச் சாமான் வருகையினால் நம்தொழில் குன்றியதெனச் சொல்வது வாஸ்தவமாகும் பக்ஷத்தில் யுத்த காரணத்தால் அச்சாமான் வருவதற்கில்லையென்னும் இச்சமயத்தில் நமது தொழில்களை சுறு சுறுப்பாய் நடத்தி நற்பயனை பெற்றிருப்பதேனோ?

இக்காலத்தும் செழிப்பில்லாமையைக் கொண்டு நம் தொழில்கள் எக்காலத்தும் முயற்சியின்றி இதேகதியில்தான் இருந்து வந்தன வென்று புலப்படுகிறது.

அல்லாமலும் நமது நாட்டார் செய்ய முன்வராத பீங்கான் கண்ணாடிக் கட்டுமுட்டுச்சாமான், ஸோப், கடுதாசி, பென்ஸல், ஸ்டீல், மெழுகுவர்த்திமுதலிய அன்னியநாட்டு இறக்குமதிச்சாமான்களாலும் அவர்கள் யந்திரஸகாயத்தால் செய்தனுப்புகிற ஸ்குரு ஆணி, கீல், பாட்லாக், சங்கிலிகளாகிற சில்லறை இரும்புச்சாமான்களாலும் நம் தொழில் குன்றியதெனச் சொல்லவும் இடமில்லை.

அன்னிய நாட்டுவருந்தும் அவர்கள் புத்தி நுட்பத்தால் கண்டுபிடிக்கப்பட்டதும் அவர்கள் லாபகரத்துக்கு சம்பந்தமானதுமான இரும்பினாலாகிற துளைக்கும் இயந்திரம், கடைச்சல் இயந்திரம், தகட்டாலை, வார்ப்பட இயந்திரம்,லோகங்களை உருக்கும் இயந்திரம், டம்ளர் முதலிய பானபாத்திரங்களைப் பதித்தெடுக்கும் இயந்திரம், மரம், இரும்பு, பொன், கல் முதலிய வேலைக்குரிய ஆயுதங்களும் நம் தொழிலை சுலபமாயும் செவ்வையாயும் செய்துமுடித்து நன்மைபடைவிக்க உதவியாயுள்ளவைகளே யன்றி இடையூறாய்த் தோன்றியவைகளல்ல.

அவ்வியந்திரங்களையும் நாமே செய்யும் திறமை யுடையராயிருந்தால் நமக்கும் நமது தேசத்துக்கும் க்ஷேமமே. நம்மவர்கள் பரம்பரையாய்ச் செய்துவந்த பழைய தொழிலையே அசட்டை செய்துவரும் இக்காலத்தில் மேல்நாட்டாரைப்போல் இயந்திரங்கள் செய்யும் நவீனமுறைகளை அபேக்ஷித்தல் சமீபத்தில் கிட்டாததாகும்.

ஆயினும் அப்படிப்பட்ட பழக்கமும் நம்மவர்கட்கு ஆங்கிலத் தொழில் கல்வி நாகரீகம் நிறைந்த காலத்தில் கிடைக்கக் கூடியது.

மேலும் தற்காலத்திற்கு ஏற்றவிதமாய் குறுகியகாலத்தில் மிகுதியான சாமான் உருவாக்கி நன்மையடையும் வழிகளில் முயற்சிக்காமலும் அன்னிய நாட்டார் தொழிலை எப்படி விருத்திசெய்து வருகிறார்கள் என்பதை அறியத்தக்க படிப்பின்மையாலும் அழிவில்லாச்சாமான்களை மட்டுமே செய்து வருகின்றமையாலும் பல மணிநேரம் பரிசிரமப்பட்டும் உழைப்புக்குத் தக்கப்பலனைக்கொடாத சுலப வருமானத்தையும் அன்னியரடையும்படி தங்கள்தொழிலைக்கைவிட்டுசோம்பேறிகளாகி மேனேக்கும் பிரவிர்த்தி ஞானமின்றி, உலகை வெறுத்த ஞானிகள் போல உறக்கங்கொள்ளும் தன்மையாலும் மேல்நாட்டு நாகரீகம் பரவிய காலவேற்றுமைக்குத் தக்க நூதன சாமான்களைச் செய்யும் தொழில் வேற்றுமையை அனுஷ்டிக்காமையாலும் தொழில் தேர்ச்சிபெற்ற ஒருவரை தலைவராய்த் தெரிந்து விசுவாசித்து அவரிடம் நம்பிக்கை வைத்து அவர் சொல்லும் ஏர்ப்பாட்டின்படி நடந்துகொள்ளாமை, ஒற்றுமையின்மை குறைந்த கூலிபோட்டு தாங்கள் பிரயாசையோடு செய்யும் சாமான்களின் முழுப் பலனையும் பெறக்கூடிய வியாபார முறையை இழந்திருத்தல், முதலிய இக்

காரணங்களாலும் நாளடைவில் நமது தொழில்கள் குன்றுவதாயிருக்க நமது தொழில் சுலபமாயும் அழகாயும் செய்து கொள்ள சாதகார்த்தமானமெஷின்ஆயுதம் முதலியவைகளை அனுப்பி வரும் விதேசிகளான அன்னிய நாட்டார்மீது வீண் பழி சுமத்துதல் பொருத்தமற்றதும் நம் குலத்தினரின் சோம்பேறித்தனத்தை வெளிப்படுத்துவதுமாகும்.

மேலும் யோசிக்குமிடத்து உத்தியோகத்தொழில், வியாபாரத்தொழில், விவசாயத்தொழில், கைத்தொழில் முதலிய எத்தொழிற்காரர்களும் தத்தம் தொழில்களை முறைபிறழாது நடத்த துணைக்கருவியும் ஜீவஜந்துக்களில் மனிதராய்பிறந்தவர்க்கே சுதந்திரமாகவுமுடைய கல்வியைக் கனவிலும் கருதாதிருந்ததுமே நமது குலத்தொழில்கள் அபிவிருத்தியடையாமைக்கு முக்கிய காரணமாகிறது.

பெற்றோர்கள் சொற்பபொருட் செலவிற்கஞ்சிய போலிச் சிக்கனத்தினாலும், வறுமையினாலும் சிறுபிராய முதற்கொண்டே தங்களுக்கு உதவியாயிருக்கும்பொருட்டு தங்கள்குழந்தைகளைப்பள்ளிகூடங்களுக்கு அனுப்பாமல் பாட்டன்,பூட்டன்பழைமையாய் செய்து வந்த தொழில் ஒன்றையே பழக்கி வைத்து விடுவதுமன்றி கல்வி நலன் அறியாத நம்மவரில் சிலர் 'படிக்காவிட்டால் என்னமோசம்' என்று படிப்பை இழித்தும் சொல்லிவருகிறார்கள். ஆகையால் இவ்விடத்தில் தொழிலுக்கு கல்வி ஆவசியமென்பதை மீண்டும் சொல்ல வேண்டியிருக்கிறது.

கல்வி என்பது உலகத்திலுள்ள ஜீவஜந்துக்களில் மனிதரல்லாத மற்றவைகளுக்கு ஏற்பட்டிருக்கவில்லை என்பதை அறிந்திருந்தும் மனிதராகிய நாம் மற்ற ஜந்துக்களைப்போல் கல்வியை விரும்பாதிருத்தல் நம் குலம் செய்த பாவமேயாகும்.

எத்தொழிலையும் செய்தற்குரிய அறிவை விருத்தி செய்விப்பது கல்வியாயிருக்க நம்மவர்கள் அக்கல்வி நீங்கிய தொழில் ஒன்றைமட்டும் விரும்பும் சுபாவமுடையராயிருத்தலால், அவர்கள் செய்யும் தொழில்கள் பிரகாசிக்கிறதில்லை. அல்லாமலும் அங்கங்களுக்கெல்லாம் முகம் பிரதானமானாலும் அம்முகமும் தன்னழகை கண்ணைக்கொண்டு பெற்றிருப்பதுபோல் உலகில் தொழிலே பிரதானமாய் பற்றியதானாலும் அத்தொழிலை முறையே நடத்துதற்கு கல்வியே பிரதானமாகிறது.

ஆங்கிலேயர்முதலிய மேல்நாட்டாரும், சொற்பகாலத்திற்குமுன் நாகரீகம்பெற்ற ஜப்பானியரும் கைத்தொழில் முதலிய வெல்லாவற்றிலும் அடைந்த மேம்பாடு கல்வியினாலன்றோ ?

கல்வியினாலெய்தும் பலன் அளவிறந்ததாயினும் நம்மவர் கைத்தொழிற்கு போதியவளவாவது கல்வி கற்பது அத்தியாவசியமே.

ஆகவே தொழிலைமட்டும் விரும்பும் சுபாவமுடைய நமது சிறுவர்களுக்கு வியாதிநீங்கிசொஸ்தமடைய சர்க்கரையைக் காட்டி மருந்தூட்டுவதுபோல் அவர்கள் அபேக்ஷிக்கும் தொழிலின் துவாராவாகவே கல்வி கற்பிப்பது ஓர் உபாயமாகும்.

நம்மவரில் படித்து உத்தியோகப் பதவிக்கு வரும் மேதாவிகள் மிகச்சொற்பமேயாகையால் பெருங் கூட்டத்தாராகிய நமது ஜாதியார்களெல்லோரும் அச்சிலரால் நன்மை பெறுவது துர்லபமாகும்.

ஆனால் அவர்கள் கல்வியின் பயனாக நாம் முன்னேற வேண்டிய மார்க்கங்கள் இன்னவையென்று உணரும்படி தெரிவிக்கும் வாக்கு சகாயம் ஒன்றே அவர்களிடம் அபேக்ஷிக்கக்கூடியது.

அப்படி படித்தவர்கள் சொல்லும் வழிகளைப் பின்பற்றி நடக்கும் சுபாவம் இன்மையால் அவர்கள் படிப்பில்லாத நம்மை வெறுக்க நேருகிறது.

உயர்தர ஆங்கிலப்படிப்பு இரண்டொருவரே காலக்கிரமத்தில் பெறக்கூடியதாகை



யால் நமது வம்சத்தினரெல்லோரும் நன்மையடைய வழிவழியேவந்த தொழில் துறையிலேயே திருந்தி அபிவிருத்தியடையச் செய்யும் மார்க்கத்தையும் அதற்கனுகுணமாயுள்ள சித்திரம் (டிராயிங்கு) பழக்கத்தையும் தொழிலை முறையாய் நடத்துவதற்கு போதிய அளவு தமிழ் இங்கிலீஷ் பாஷா ஞானமும் உண்டாக்குதல் நம் குலமுழுமைக்கும் நன்மை பயக்கும் வழிகளாகும்.

நமது குழந்தைகளை பெற்றோர்கள் 8-வது பிராயத்திலேயே தொழில் கற்கும் பொருட்டு பட்டரை கூடங்களுக்கு அனுப்பி தொழிலில் சுயஞானமும் சரீரபலமும் உண்டாகாத 15-வயதிற்கிடையிலுள்ள ஏழுவருஷம் வரையில் எஜமானின் குற்றேவலில் அமர்ந்து அறிவு நாகரீகம் தொழில் தேர்ச்சி இவைகள் குன்றி வம்சத்திற்கு பொதுவாய் அன்னியர் பார்வைக்கு இழிவை உண்டுபண்ணுகிற வீணே கழிக்குங் காலத்தை கல்வியில் போக்கினால் நிரம்ப நன்மையடைய மார்க்கமுண்டு.

கல்வியின் உதவி இல்லாமையினாலன்றோ நம்மவர்கள் கற்றுச் செய்துவரும் அநுபவமானது நாணயக்குறைவு மோசம் அபவாதம் அலைக்கழிப்பு முதலிய அன்னிய ஜாதியாரின் தூற்றுதலுக்கு இடம் தருகிறது.

அல்லாமலும் தொழில் கற்கும் பிள்ளைகளை தன் எஜமானனாகக்கொண்ட ஒருவரிடத்திலேயே இருந்து அவர் பழகிய தொழிலைமட்டும் அப்பியாசித்தின் வழக்கமேயன்றி வேறொருவர் செய்துவரும் தொழிலினுட்பங்களை யறிந்து நூதனமாயும் அழகாயும் செய்யத் திறமையற்றவர்களாய்ச் செய்ததையே செய்யும் வழக்கத்திலிருந்து வருகிறார்கள்.

பிரதமத்தில் நம் குலத்தொழிலில் தற்காலம் தேர்ச்சி பெற்றிருப்பவர் என்ற எல்லோரும் ஆங்காங்குள்ள திறமை வாய்ந்த நல்ல வேலைக்காரர்களிடம்சென்று அவர்களது தொழிலின் நுட்பங்களை தெரிந்து வந்தவர்களேயாவர்.

தொழில் ஒன்றையே முக்கியமாக விரும்பும் சுபாவமுடையாராதலின் தனித்து கல்வி ஒன்றைமட்டும் பயின்று வர குழந்தைகளை பெற்றோர்கள் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பும் வழக்கமில்லை.

நம்மவர்களில் சிலர் அபூர்வமாய் தங்கள் பிள்ளைகளை கல்வியில் அபேக்ஷித்து 4 அல்லது 5-வது.பாரம் வரையில் படிக்க வைத்து அதற்குமேல் பொருள் செல்வு செய்ய சக்தியற்றவர்களாய் படிப்பை நடுவில் நிறுத்தி விடுகிறார்கள். சில பிள்ளைகளும் மேலே படிக்க ஊக்கமின்றி படிப்பை நிறுத்திவிடுகிறார்கள்.

பெற்றோர்களின் வருமையினாலோ தங்கள் ஊக்கக்குறைவாலோ படிப்பை நடுவில் நிறுத்திவிட நேர்ந்த பிள்ளைகள் தங்கள் சவாக்ஷணைக்குப் போதிய அளவு சம்பாதிப்பதற்கு செயலின்றி சொல்ப சம்பளத்திற்கே யமர்ந்து வாழ்நாள் முழுதும் கஷ்டப்பட நேருகிறது.

அல்லாமலும் வழக்கம்போல் படிப்பின்றி தொழிலையே கற்று சம்பாதித்து சற்றேறக்குறைய தங்கள் குடும்ப சவாக்ஷணையை முட்டின்றி நடத்திவருகிற தங்கள் அந்தர நிலைமையை உணர்ந்தும் நடுவில் படிப்பை நிறுத்திய பிள்ளைகள் தாங்கள் படித்துக் கெட்டோமென்றும் பெற்றோர்கள் பிள்ளையைப் படிக்கவைத்துக் கெட்டோமென்றும் ஒருவருக்கொருவர் சகாயம் பெறுவதற்கில்லாமையை நினைந்து வருந்துகிறார்கள்.

தங்கள் குழந்தைகளைமுற்றிலும் படிக்கவைக்கச் சக்தியுள்ளவர்களாவென்பதை ஆரம்பத்தில் யோசியாமல் படிக்கவைப்பதைவிட படிக்க ஆரம்பித்தகாலம் முதலே பிள்ளைகளுக்கு தொழிலையும் பழகிவர ஏற்பாடு செய்தால் படிப்பை திடீரென

நிறுத்த நேர்ந்தகாலத்தில் பழகி வந்த தொழிலின் அனுபவத்தால் பிள்ளைக்கு பெற்றோர்களும் தங்கள் தொழிலை அபிவிர்த்திசெய்து சம்பாத்யத்தில் முயன்றுவர அனுகூலமாயிருக்கும்.

ஆகவே நமது சிறுவர்களுக்கும் நடுவில் படிப்பை நிறுத்திய பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் அனுகூலமாயிருக்க குழந்தைகளுக்கு கல்வியோடு தொழிலையும் சேர்த்து கற்பிப்பதுஉபகாரமும் கடமையுமாகும்.

ஓர் பலனைவிரும்பி ஓர் விதையை பூமியில் புதைத்து, விடாமல் நீர்பாய்ச்சிவர முளைத்து கொடிதோன்றினும் அது தாவிபிடிக்க ஓர் கொம்பு ஊன்றினாலல்லது படர்ந்துமேனோக்கி அபிவிர்த்தி யடையாது.

அத்தன்மையாய் நமது குலச்சிறுவர்கள் மனதாகிற நிலத்தில் கல்வியாகிற விதையைப் புதைத்து, பெற்றோர்களின் ஊக்கமாகிற நீரைப்பாய்ச்ச அறிவாகிற கொடி தோன்றுமானாலும் அபேக்ஷித்த தொழிலின் பலனைப் பெறுவதற்கு ஓர் கொம்பாகி, கல்வி சேர்த்து போதிக்கக் கூடிய (டிரெயினிங்) தொழிற்சாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

அச்சாலையில் நமது சிறுவர்களுக்கு சிலமணி நேரம் கல்வியும் சிலமணி நேரம் தொழிற் கல்வியும் சிலமணி நேரம் அத்தொழிற்கு முக்கிய உபயோகமாகிற (டிராயிங்) சித்திரப்பழக்கமும் அவரவர்கள் கல்விக்கும் வயதிற்கும் நோக்கத்திற்கும் தக்கவிதமாய் அனுபவரீதியில் கற்றுக்கொள்ள தொழிலும் ஆகிய இன்னான்கும் ஒருங்கே சேர்க்கப்பட்டுள்ளதாய் அமைக்கப்படல் வேண்டும்.

இவ்வித தொழில் டிரெயினிங் பாடசாலை ஒவ்வொரு ஜில்லா அல்லது தலைநகரங்களில் அந்தந்த ஜில்லாக்காரர்களின் பொதுநிதியில் அமைக்கப்படல் வேண்டும்.

இவ்வித தொழிற்சாலை ஸ்தாபித்து அச்சாலையில் தொழிலில்வல்ல நிபுணர்கள் அமையப்பெற்று போதிக்கப்பட்டு வருமாயின் தொழிலை இப்பொழுது பழகிவருபவர்களும் இனிகற்கத் தொடங்கும் சிறுவர்களும் தொழிற்தேர்ச்சி பெறுவதோடு கல்விஞானம் கவுரவம் முதலிய நன்மதிப்பை யடைவார்கள்.

அப்பொழுதுதான் தொழில் அபேக்ஷித்து நம்மவர்கள் கல்வியையும் கற்க குழந்தைகளை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவார்கள்.

அச்சிறுவர்களால் செய்யப்பட்டுவரும் சாமான்களின் விற்பனை அச்சாலையின் சம்ரக்ஷணைக்கு சொல்ப உதவியாகவும் கூடும் தொழில்கள் அபிவிருத்தி யடையவே பூரண சம்ரக்ஷணையைப் பெறவும்கூடும்.

கவர்ன்மெண்டார் தற்காலம் தொழில் அபிவிருத்தி விஷயத்தில் கண்காணித்து வருவதையும் தேசப் பொது க்ஷேமத்தைக்கோரிய பல சமூகத்தாரும் நமது ஜாதீய கான்பரன்ஸ் முன்னிலையாய் தொழில் அபிவிருத்தி விஷயத்தில் நம்மை கவனம் செலுத்தும்படி உச்சாகப்படுத்தி வருவதையும் கவனிக்கத்தக்கதே.

நம்மவர்கள் இக்காலம் அவசியமே தொழில் அபிவிருத்தி விஷயத்தில் கவலையெடுத்துக் கொள்ளாதிருப்பார்களானால் கவர்ன்மெண்டார் தொழில் விஷயத்தில் கவனம் செலுத்தி வருவதைக்கொண்டு அன்னிய ஜாதியார்கள் பெரும்பாலரும் தலையெடுக்க நேர்ந்து தற்கால நிலைமையிலும் சுதர்மம் குன்றிப் போவதுமல்லாமல் அவர்களிடத்தே யதாரீதியில் கூலிவேலை செய்து கஷ்ட ஜீவனத்திற்குள்ளாகவேண்டிவரும்.

விசுவகர்ம வம்சஸ்தர்களென்னும் தொழிற்குரிய பட்டப்பெயரை மாத்திரம் பெற்றோமேயல்லது அத்தொழிலை அபிவிருத்தி செய்யும் விஷயமாய் இக்காலத்தில் அன்னிய ஜாதியார்க்கிருந்துவரும் ஊக்கத்திற் சிறிதளவும் பெற்றோமில்லை.



செய்கால் செய்யப்படாத அளர் நிலத்தைத் திருத்தி சாகுபடி செய்து பலனடைய பிறர் அபேக்ஷிக்கும் முயற்சியைவிட தொழில் சாகுபடிக்குத் தகுதியாயுள்ள நஞ்சை நிலமாகிற சுபாவீகமுள்ள நம்மவர்களை திருத்த முயன்று சீக்கிரம் பயன்பெறுவது மிக்க இலகுவாகும் என்பது தெள்ளிதில் விளங்கும்.

குலாபிமானச் செல்வர்களே! தொழிற்றேர்ச்சி பெற்றவர்களைக் கொண்டு அதன் நுட்பங்களை அனுபவரீதியாய்கற்று நாணயத்துடனும் கௌரவத்துடனும் கல்வியுடனும் அபிவிருத்தி வருவதற்கு ஆஸ்பதமாகிற டிரெய்னிங் தொழிற்சாலை ஸ்தாபிப்பதற்கு வேண்டியநிதி சேகரிக்கும் வழிகளில் முயற்சிப்பது நம்மவர்களின் குலாபிமானத்தையும் சிறப்பையும் பிரத்தியக்ஷமாய் காட்டக்கூடியதாகும்.

தக்கவர்கள் அமையப்பெற்ற நிதிசேகர கமிட்டியை கூட்டு வியாபாரக் கம்பெனி முறையிலோ தகுதியுள்ள வேறுவிதத்திலோ ஸ்தாபித்து தொழிற்றேர்ச்சியும் அனுபவமுமுள்ள ஒருவரைத் தெரிந்தெடுத்து அவரால் கூடியவரை தொழிற்சாலையை சுறுக்கமாய் நடத்த உத்தேசிக்கப்படும் மூலதனத்தை நம்பிக்கையான வழிகளில் காலத்திற்கும் சக்திக்கும் தக்கவாறு சம்மதிக்கும் இடையூறுகளுக்குப் பின்வாங்காமல் வசூலித்து நமது குலத்தாருக்கு மேற்சொன்ன டிரெய்னிங் தொழிற்சாலை ஸ்தாபிப்பது நம் குலத்தினர்களாகிய சிறுவர் முதல் பெரியோர்வரை நன்மையடையு மார்க்கமாகும்.

இப்பொதுநிதிக்கு உபகாரம் செய்ய முன்வந்தால் தான் நமது ஜாதியார் விஷயமாய் நாம் அனுதாபம் காட்டுவது வாஸ்தவமாகும்.

நமது ஜாதியாரின் சொந்த முயற்சியில் சொல்பமாகவாவது நிதிசேகரித்து டிரெய்னிங் தொழிற்சாலை ஸ்தாபித்து சிறுவர்களுக்கு கைத்தொழில் போதிக்கப்பட்டு வருகின்றதென்னும் நம்பிக்கையுண்டானபிறகே தொழில் அபிவிருத்தியின் பொருட்டு கவர்ன்மெண்டாரை பொருட்சகாயம் செய்ய அபேக்ஷித்தல்பலனுடையதாகும்.

அக்காலத்தில்தான் கவர்ன்மெண்டாரும் நமக்கு உதவிபுரிய முன்வருவார்கள்.

ஆகையால் பெருங்கூட்டத்தாருகிய நம்மவர்கள் எல்லோரும் நன்மை யடையு மார்க்கத்தை தக்ககூடிய தொழில்சாலை ஸ்தாபிக்கவும் அதற்காஸ்பதமான திரவியத்தை சேகரிக்க முயல்வதுமே நமது ஜாதிய கான்பரன்ஸின் முக்கிய கடமையாயிருத்தல் வேண்டுமென அறிவிக்கப்படுகிறது.

---

மகாகனம் பொருந்திய ம-ா-ா-ஸ்ரீ முக்கண்ணாச்சாரியார் அவர்களுக்கு நமஸ்காரம் க்ஷேமம். தங்கள் கார்டு கிடைத்தது உடனே பதிலெழுத சாத்தியமில்லாமல் சிக்காயிருந்தமையால் தவக்கப்பட்டது. இன்டஸ்டிரியல் சப்சட்டுகளைப் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்கும் மார்க்கத்தை அனுசரிக்கும் பதில் எழுத என்னால் கூடியதாகவில்லை. இன்டஸ்டிரியல் சப்சட்டுகள் பலவிதமாயிருக்கிறபடியால் கான்பரன்ஸ் தீர்மானிக்கவேண்டியது. முதலாவது என்னென்ன இன்டஸ்டிரியல் சப்சட்டுகள் நமது பிள்ளைகளுக்குத் தகுந்தவை அவைகளில் முன் ஆரம்பம் செய்யவேண்டியது எவை எவ்வளவு முதல்வேண்டும் எந்த மாதிரியாய் சொல்லிக் கொடுக்கவேண்டியது. சர்க்கரை காய்ச்சுவது காகிதம் செய்வது கண்ணாடி செய்கிறது எண்ணை ஆலை ஏற்படுத்துகிறது சாயம் உற்பத்திசெய்கிறது முதலிய அநேக வர்த்தகத் தொழில்கள் நமது பிள்ளைகளுக்கு தகுந்தவைகளாயிருக்காது. நமது சொந்த ஜாதித் தொழில்களாகிய ஐந்து விதத் தொழில்களையே நாம் ஆதாரமாகக் கொண்டு அதுகளுக்காக ஸ்கூல்கள் ஏற்

படுத்தி அதுகளை விருத்திசெய்யும் மார்க்கத்திற்குக் கொண்டுவர வேண்டியது. இந்த ஐந்து தொழில்களும் பிழைப்புக்கு ப[illegible]ம் கொடாதது என்று அபிப்பிராயப் படும்படியான தற்கால நிலைமையிலிருந்த போதிலும் உண்மையாகவே இவை ஐந்தும் எல்லா தொழில்களுக்கும் முக்கிய ஆதாரமாகயிருக்கின்றன. நம்மவர்களில் கருமாரத் தொழில் அனுசரிப்பவர்கள் அனேகமாய் கூலிக்காரர்களாகவும் ஏழை நிலைமையி லிருப்பவர்களாகவுமே யிருக்கிறார்கள். அதனால் தொழில் தாழ்ந்தது என்றதற்குக் காரணமில்லை. மற்றெல்லா தொழில்களுக்கும் முதல்காரணமாயுள்ளது கருமாரத்தொழில் அதனுடைய விருத்தியினால்தான் மற்றத் தொழில்கள் விருத்தியடையலாம். இதை ஒரு முக்கிய தொழிலாக நமது பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்கவேண்டியது. இரும்பு எஃகு தண்டவாளம் இவைகளின் வித்தியாசங்களும் இரும்பை எகுவாக்கவும் தண்டவாளம் எகுவாக்கவும் ஒன்றை மற்றொன்றாக மாற்றும் விதங்களும் இவைகளை பலவிதமாய் தற்கால நிலைமைக்கு எப்படி உபயோகப்படுத்த சிலாக்கியமாயிருக்குமோ அப்படிக்கு உபயோகப்படுத்தவும் தெரியவேண்டியது. இரண்டாவது தட்டாரத் தொழில் வெகு சிலாக்கியமானது. மற்ற தேசங்களைப்போல் பிழைப்பற்றத் தொழில் அல்ல. நகையில்லாமல் இந்தியர்களிருக்க முடியாது. மிஷினால் செய்த நகையையும் உபயோகப் படுத்த யிஷ்டப்படமாட்டார்கள். ஒவ்வொன்றும் கைத்தொழிலின் அருமையினால் உண்டு பண்ணினால்தான் ஆபரணமாக அணியப்பிரியப்படுவார்கள். இது நமது தொழிலுக்கு வெகு அனுகூலமானதா[illegible] இதுவின்னும் கெடாமலே யிருக்கின்றன. ஆனால் யின்னும் அனேக புதிய நகைகள் செய்யவும் வேண்டிய படிக்கு மாத்தவும் வேண்டிய அனுபவப் பழக்கம் இவர்களுக்குக் குறைவாகவே யிருக்கின்றன. இவைகளை விருத்திசெய்யும் மார்க்கம், பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கவேண்டியது. செம்பு பித்தளை வேலை செய்பவர்கள் சதா பாத்திர வேலையிலேயே யிருக்கிறார்கள். அதின் வருமானம் கொஞ்சம் குறைவு பட்டதாகத் தெரிந்தால் உடனே மாற்றிக்கொள்ளும் நோக்கம் யிவர்களுக்கு அதிகம் கிடையாது. மத்தகளையில் செய்துவரும் பூட்டு கீல் தாழ்பாள் கைப்பிடிகள் முதலிய அனேகவித வேலைகள் இவர்கள் அனுசரித்து வந்தால் இவர்களுக்கு வருமானக் குறைவு நேர்ந்தேயிராது. எல்லாத் தொழில்களிலும் (1) தொழில் திறமையைக் காட்டக்கூடிய ஆர்டிஸ்டிக் கைத்தொழில்களென்றும் (2) அதுகளை சகாயப்படுத்தும் பொருட்டாக ஆயிரம் கணக்காய் காபி செய்வதுமான யிரண்டு விதங்கள் உண்டு முதல் சொல்லியது நம்மவர்களால் செய்யக்கூடும் இரண்டாவதாகிய வர்த்தகத்தொழில்களுக்கு மிஷினுடைய ஆதாரமிருக்கவேண்டியது நம்முடைய தற்கால நிலைமைக்கு சாத்தியப்பட்டதல்ல. கையினால் நம்மால் எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வளவும் செய்தனுபவிக்கலாம் அப்படி செய்யும் ஒவ்வொரு வேலையையும் மிஷினால் செய்யக்கூடாத திறமைகளையும் இதில் உபயோகப்படுத்திவரலாம். தச்சத் தொழிலிலும் யிம்மாதிரியான விருத்தியை அனுசரித்து வீட்டு வேலைக்காரர்களென்றும் பர்னிசர் வேலைக்காரர்களென்றும் வண்டி வேலைக்காரர்களென்றும் பலவித உபயோகங்களுக்குத் தக்கபடி வேண்டியவைகளைச் சொல்லிவைக்கலாம். கல்தச்சு வேலை விக்கிரஹ வேலை முதலியதுகளும் வேண்டியவரையில் சொல்லிக் கொடுக்கும் மார்க்கம் தேடலாம் இந்த சம்பந்தமாக சாஸ்திரங்களையும் சொல்லி வைக்கலாம். இதுகளுக்கெல்லாம் பொருள் முதல் காரணமல்ல திறமான எண்ணம் நமக்கு முக்கியமானது. அதற்கு அடுத்தாப்போல் பொருளும் சரீர சகாயமும் கிடைக்கும் பக்ஷத்தில் நமது கவலை நீங்குவதற்கு



என்ன தடையிருக்கும். நம்மவர்கள் என்ன பிரயத்தினம் செய்தபோதிலும் பிரகாசமில்லாமலே யிருக்கின்றன. அதுகள் அவர்களுடைய திறமையோ அல்லது குலத்தின் சாபமோ தெரியவில்லை. மிஷனெரிகள் தென்னிந்தியாவில் மெத்த குறைந்த தொகையைக்கொண்டு பஞ்சமப்பிள்ளைகளை மாணாக்கர்களாக எடுத்துக்கொண்டு நஷ்டப்படாமல் படிப்படியாய் விருத்திசெய்யும் முயற்சியை நீங்கள் எல்லோரும் தெரிந்திருக்கவேண்டியது. தஞ்சாவூரில் ரெயில்வே ஸ்டேஷனுக்கு அடுத்தாப்போல் ஒரு மிஷன் ஸ்கூலிருக்கிறது. அதினுடைய பூர்வீக சரித்திரத்தையும் தற்காலநிலைமையையும் தெரிந்து கொள்ளவேண்டியது. அதற்காக கவர்ன்மெண்டார் சில இடங்களை மிஷன்காரர்களுக்கு வசப்படுத்திக் கொடுத்து அதில் கட்டடங்கட்டி ஸ்கூலை விருத்திபாக்கும்பொருட்டு கிராண்டுகள் தாராளமாய்க்கொடுத்து வருகின்றனர். கவனிக்கவும். மிஷன்காரர்களுக்கு இருக்கும் ஊக்கம் நம்மவர்களுக்கு இல்லாமல் போவானேன். நாம் பிரயாசைப்பட்டால் வெகு எளிதாய் நமக்கு எல்லாப்பலனும் கைகூடும். ஆனால் ஆரம்பம் செய்த உடனே பலனை எதிர்பார்ப்பது நியாயமல்ல நன்றாய் உழைத்து வழியாய் கஷ்டப்பட்டு முன்னுக்கு வராதவர் உலகத்தில் ஒருவருமிருக்கமாட்டார்கள். நம்மவர்கள் தொழில் வழியில் கொஞ்சம் நாகரீகமடைந்தவர்கள் என்றமட்டும் எனக்குத் தெரியும். அதிலும் அவர்கள் வழக்கமாய் செய்யும் வேலையில்தான் திறமையாயிருக்கிறார்கள். வித்தியாசத் திறமையைக் காட்ட நினைப்பதேயில்லை ஐரோப்பியர்களைப்போல் மேன்மேலும் ஆகவேண்டிய விருத்தியை நினைப்பதேயில்லை. அப்படிக்கு நோக்குங்கால் தான் புதிய எண்ணங்களும் நூதன சாமான்களின் உற்பத்தியும் விலையும் சுலபமாய்ச்சகித்திருந்து, கஷ்டப்பட்டு கண்டவர்களிடமிருந்து தெரிந்துகொள்வோமென்றாலும் நாம் பாரம்பரையாய் வேலையைக் கவனித்து வந்தும் நமக்குப்புலப்படாத விஷயங்களெல்லாம் ஐரோப்பியர்களுக்கு மாத்திரம் கடவுள் அனுக்கிரகம் செய்து வருவானேன் என்று நினைத்தால் நாம் அவர்களைப்போல் அவ்வளவு சாமர்த்தியர்கள் அல்லவென்று தீர்மானிக்கவேண்டியதாகிறது. இதை நான் ஒரு காலத்திலும் சம்மதிக்கவேமாட்டேன். நம்மவர்களுக்கு இம்மாதிரியான குறைவே கிடையாது. தொழில் சாமர்த்தியம் ஏகேஷ்டமாயிருந்தும் அதுகளை மேலுக்குக்கொண்டு வந்து பிரகாசிக்கச் செய்யும் பேராசையிவர்களுக்கு மிகக்குறைவு. வேலைக்காரன் என்றதும் பணக்காரன் என்றதும் ஒரு அளவுக்குள் வந்ததாக நம்மவர்கள் அவர்களுடைய வெளிநாட்டின் தொழில் விஷய அஞ்ஞானத்தால் நினைத்துவிடுகிறார்கள். இதுதான் பெரும்பிசகு எவ்வளவு ரூபாய் ஆஸ்தியிருந்தால் ஒருவனைப் பணக்காரனெனலாமென்றும் எவ்வளவு தொழில் ஞானம் ஒருவனுக்கிருந்தால் அவனைப் பெருந் தொழிலாளியென்றும் தீர்மானிக்க முடியும் என்றதை காண்பரன்ஸ் விளக்கிக் காட்டவேண்டியது. முற்றுமுணர்ந்தாரில்லையென்றது நமது தொழில் கல்விக்கும் தகுந்ததே. ஆகையால் முற்றுமுணரும் பேராசையும் நமக்கு உண்டாகுமேயாகில் கொஞ்சங்கொஞ்சமாய் மேலுக்கு ஏறலாம். உலக விவகாரம் செய்ய இஷ்டப்பட்டால் திருத்தமாய்ச் செய்யவேண்டும் இல்லாவிடில் புழுக்களைப்போல் வேதாந்த எண்ணத்துடன் நெளிந்துக்கொண்டு காலம் வந்தபோது அழிவதாயிருந்தால் பிரயோசனமற்ற வம்சமாய் முடியும். அதைவிட தோன்றாமலிருப்பதே நலம். எனக்குப் புரிந்தவரையில் நம்மவர்களால் வெகு சாமர்த்தியமாய் ஒன்று அல்லது பல தொழிற்சாலைகள் ஏற்படுத்திக் கொள்ளமுடியும். அவரவர்களுக்கு தக்கப் பொருளையும் அவரவர்களுக்குள்ள நோக்கத்தையும் உபயோகப்படுத்தியே பார்த்தாலொழிய பயம் விடாது துணிவு

வராது. நஷ்டப்படாமலிருப்பதற்கு நம்மில் சிலர் கூடி நேரில் யோசித்துப் பார்த்தால் இன்னவிதமாய்த்தான் நடத்தலாம் என்று பல தர்க்கங்களினால் முடிவுக்கு வரலாம் எழுத்தில் ஏற்பாடுசெய்வதும் பார்வைக்கு அழகாயும் சாமர்த்தியமாயு மிருந்தாலும் அதில் உள்ள ஆபத்துகள் விளங்காமலே அனுபவத்தில் மோசம் செய்யும் மார்க்கமாய் விளைந்தாலும் விளையலாம். கவர்ன்மெண்டார் இதுவரையிலும் செய்துவரும் தொழில்விஷயங்களில் லாபத்தை கவனிக்காதவர்களாகையால் எல்லாம் ஒருவிதமாய் நடந்தே வருகின்றன. அதை எதிர்பார்த்தவர்களாயிருந்தால் அவர்கள் ஸ்கீம்களெல்லாம் என்ன ஆபத்துக்கிடமாயிருக்குமோ ஆகையால் ஜனங்கள் செய்யும் முயற்சி லாபத்தைக் கோரியதாகையால் அவர்கள் முறைகளை அனுசரிக்கவே கூடாது. நம்முடைய சொந்த அபிப்பிராயமே சிலாக்கியம். ஒருவருடைய முறையும் நமக்கு அனுகூலப்படாது தொழிலில் நம்மைப்போல் தேர்ச்சியுடையவர்கள் தென்னிந்தியாவில் கிடையாது. நாம் பேசும் பேச்சுக்களும் தொழில்மார்க்கங்களும் இங்கிலீஷிலில்லாமையால் இங்கிலீஷ் படித்தவர்கள் மரியாதை செய்ய மார்க்கமில்லாமலிருக்கிறது. இந்த காலங்களில் இங்கிலீஷாகிய இராஜாங்க பாஷையை யாரொருவர் தேர்ச்சியாய்ப் பேசுகின்றாரோ அவர் காரியங்களெல்லாம் அனுகூலம் என்றே அறியவும். இந்தத் திறமைதான் சாடர்டன் அவரையும் விருத்திக்குக் கொண்டுவந்தது. இங்கிலீஷில் பேசுபவர்களின் வார்த்தையில் தொழில் சாமர்த்தியம் உளதா இல்லையா என்றதை ஒருவரும் கவனிப்பதே கிடையாது. கவனித்தாலும் தெரிந்து கொள்பவர்களே வெகு அபூர்வம். நம்மவர்கள் மாத்திரம் இந்த இங்கிலீஷ் இன்னது என்று தெரிந்து அவர்கள் அபிப்பிராயங்களைக்கவனிப்பார்களேயாகில் வெகு சுலபமாய் அதிலுள்ள நுட்பங்களை அறிந்து கொள்ளும் அனுபவம் இவர்களிடமிருந்தும் கண்மூடி மௌனியாயிருப்பதுபோல் உலகத்தில் தங்கள் தொழில் விஷயமாக என்ன நடக்கின்றனவென்றதை காதில்லாதவர்களைப்போல் எவ்வளவு சப்தங்களுக்கும் அசையாமலிருக்கிறார்கள் இப்படிக்கிருந்தால் நாம் எப்பொழுது மேன்மையடைவது? கான்பரன்ஸ் தொழிலின் பெருமையை எடுத்துச் சொல்லி அது எல்லாக் கல்வியிலும் விசேஷமான கல்வி என்று ஒவ்வொருவருடைய மனதில் பதியச்செய்து ரயிட்டர் வேலை இனி ஒருவரும் அபேட்சிக்கப்படாது என்றதைத் தீர்மானிக்கவேண்டியது.

எலிமெண்டேரி தொழில் விஷயமாக தீரயோசிக்கவும் எனக்குச் சாத்தியப்படவில்லை. அது இன்னதென்றும் விளங்கவில்லை. ஒருவேளை சுலபத்தொகையைக் கொண்டு நடத்தும் ஒரு ஆரம்பத் தொழிற்சாலை என்று அர்த்தம் கொண்டால் அப்படியே செய்யலாம் எவ்வளவு கொஞ்சத் தொகையிலும் செய்யலாம். என்ன செய்ய ஆரம்பிக்கிறீர்களோ அது நீண்டகாலம் புத்தியில் யாதொரு பின்னம் வராமல் நடந்துவருமா என்றதைத் தீரயோசியுங்கள். இதில் இரண்டு விதமான தொழிற்சாலைகள் உண்டு. கல்வி விருத்திக்கு அனுகூலமானதென்றும் செல்வ விருத்திக்கு அனுகூலமானதென்றும் அதாவது முதலாவது எடியுகேஷன் இரண்டாவது வர்த்தகம். இந்த இரண்டையுங் கலந்ததுபோல் நடத்துவதுதான் நமது தொழிற்சாலையாயிருக்கவேண்டும். ஆனால் மொத்தமாய் ஒரு ஸ்கூல் ஒன்று எந்த முக்கிய பட்டணத்திலாகிலும் ஏற்படுத்தவேண்டியது அவசியம். அதில் இங்கிலீஷிலும் நமது ஐந்து தொழில்களும் கற்றுக்கொடுக்க வேண்டியது. ஆகையால் ஆறு உபாத்தியாயர்களும், ஒரு தகுந்த இடமும், பிள்ளைகள் உட்காரவேண்டிய பெஞ்சி முதலியதுகளும் ஏற்பாடாய் விட்டால் உடனே ஆரம்பித்துவிடலாம். இதற்குமுதல் ஆரம்பச் செலவு இடம்



அன்னியில் சுமார் ஆயிரம் ரூபாயிருக்கலாம். மாதம் ஒன்றுக்கு வாத்தியார்கள் சம்பளம் ரூபா 15 வீதம் ரூபாய் 90 ஆகும். வேலைசெய்ய இரும்பு மரம் வெள்ளி தாமரம் பித்தளை முதலியதுகள் சுமார் 100 பிள்ளைகளுக்கு 50 ரூபாய் ஆகும். ஆயுதங்கள் முதலியதுகள் முதல் ஒரு செட்டு வைத்துக் கொண்டால் மற்றதுகள் பிள்ளைகளைக்கொண்டே செய்து கொள்ளலாம். மானேஜிமெண்டு செய்கிறவர்கள் எவ்வளவு சிக்கனமாய்க் கவனித்தாலும் அனுகூலமே. இதுகளைப் பலவிதமாய் யோசித்து சுமார் 10000 ரூபாயாகிலும் ஸ்கூலுக்காகவென்று ஏற்படுத்திக் கொண்டு அதற்கு ஒருவிடம் தகுதியாய் ஏற்படுத்திக்கொண்டு ஸ்திரமாய் செய்ய ஆரம்பிக்கவேண்டியது இந்த விஷயமாக நமமவர்களெல்லாம் தனித்தனியாய் பேசி தீர்மானத்திற்கு வரவேண்டியது. முதல் ஸ்கூல் கும்பகோணத்தில் ஏற்படுத்துவது சிலாக்கியம். ஒரு சின்ன சவரக்ஷணை கமிட்டி ஒன்று ஏற்படுத்தி அதின் மானேஜ்மெண்டில் வைத்துவிட்டால் மெத்த சிலாக்கியம். இங்கிலீஷ் படித்தவர்கள் அவசியமென்றே நினைக்கவேண்டாம். தமிழுக்கும் இங்கிலீஷுக்கும் சாரத்தில் வித்தியாசமே கிடையாது. துணிந்து நடந்து வரட்டும். இங்கிலீஷில் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் நேர்ந்தால் வேண்டியவர்கள் இங்கிலீஷ் படித்துக்கொள்ளட்டும். காலதாமதமன்னியில் இன்னம் ஒருவருஷத்திற்கு முந்தியே ஆரம்பதினம் ஏற்பட்டுவிட்டால் நமது ஆடவேதுவையே திறக்கச்செய்து அவரை அடிக்கடி ஸ்கூலின் விருத்தியைக் குறித்து எழுதச்செய்து பலன் காணும் மார்க்கம் ஒருவிதமாய் நமது காலத்திலேயே அனுபவிக்கலாம். அந்த ஆரம்பத்திற்கு அவசியம் நான் எந்த இடமாயிருந்தபோதிலும் வாப்யாசத்தினைப் படிவேன்.

எந்தவிதத்திலாவது நம்மவர்கள் நாகரீகமடையும் மார்க்கம் தேடிவிடப் பிரார்த்திக்கின்றேன். இது இவர்களிடத்தில் வெகு குறைவாகவிருக்கிறது. என்ன காரணமோ? எனக்குத் தெரிந்தவரையில் சிலர் சிலசமயம் நம்மவர்களில் சிலருடன் சிநேகம்வைத்துக்கொள்ள அருவருப்புக் கொள்கிறது இதுகளையெல்லாம் போக்கடித்து விடுங்கள் இதுமிக அவசியம். இந்த சீர்திருத்தம் வாராமல் எந்தப்பொது காரியமும் ஒற்றுமையாய் நடவாது. நாம் ஒற்றுமையாய் விட்டால் என்னகாரியம் அபேட்சித்தாலும் சாத்தியப்படும். வித்தியாச அபிப்பிராயங்களினால் வேறுபாடாகப்படாது. நியாயம் என்று ஏற்பட்டதை மற்றவர்கள் முழுமனதுடன் ஒப்புக்கொள்ளவேண்டியது.

இப்படிக்கு,

M. வேலாயுத ஆச்சாரி

அஸிஸ்டெண்டு சூபரின்டெண்டு

ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ்,

சென்னை.

* * *

பிரம்மஸ்ரீ

## கொ. கன்னியப்ப ஆச்சாரி

அவர்களுடைய

வியாசத்தின் சுருக்கம்.

நம் குலத்தவர் திருத்தமடையக் கருதி பல தொல்லைகளுக் கிடையில் ஜாதியபிமானத்தால் தூண்டப்பெற்று ஈண்டுகுழுமியுள்ள சகோதரர்கட்கு வந்தனம்.

மிகக் குறைந்தவறிவுடைய யான் ஐந்து வேதமுதலிய சாஸ்திர நிபுணர்கள் குழுமியுள்ள இச்சபையில் பேசத்துணிந்தமைக்கு எனக்குள்ள சுஜாதியபிமானமே காரணமாதலின் பெரியோர் பொறுக்க.

நம்மினத்தரில் விவேகிகளாகுஞ் சிலர் செய்ய முயற்சிக்கும் குல சீர்திருத்தங்களுக்கு அவிவேகிளாகிற பலர் இடையூறுவதும் வேறு சிலர் தொழில், கல்வி, பட்டம், ஆசாரம் முதலிய பேதங்களாலேற்

படுகிற அபிப்பிராய வித்தியாசங்களையே பாராட்டி பிடித்துப் போராடுகிறார்கள். இவ்வித தீமைகள் யாவுமொழிந்து நன்மையே விருத்தியடையுங்காலம் நேர்ந்ததுக்கு அறிகுறியாக இம்மகாஜனசபை ஏற்பட்டு ஈராண்டாகிய விளைமைப்பருவமடைந்திருக்கிறது. ஆயினும் மேற்கண்ட பேதபுத்தியுடையவர்களும் இம்மகாசபையின் வாயிலாகத் தங்கள் தங்கள் கட்சியைத்தாபிக்கப் பாடுபடாமலிருக்கவில்லை. அவ்விதமானவர்கள் ஒற்றுமை என்னும் பரமவெளிச்சத்தில் தங்கள் மனதைச் செலுத்தி சிறு சிறு பேத அபிப்பிராயங்கள் யாவையும் அறவே மாய்த்து நம் குலம் சிறப்படைய வேண்டுமேதோர் பிடிவாதங் கொள்ளுமாறு கடவுள் கிருபைகூர்வாராக. ஒற்றுமை யென்னும் பரமவெளிச்சத்தில் உலகத்துள்ள சகலரும் பரமானந்தமடைந்து வருகிற இக்காலத்தும் நம்மவர் விவேகமாகிற பார்வையைச் செலுத்தி விசாரித்து நோக்காது கண்மூடித்தனமாய் அபிப்பிராய பேதங்களை மனதில்வைத்துப் போராட்டிசைவார்களானால் பல கக்ஷிப்பிரதிகக்ஷிகளேற்பட்டு பிறவிக் குருடர்போல் இம்மகிதலத்து நம் குலம் பிரகாசங்குன்றி இழிவடைய நேருமென்பது கருதியே யான் எனதபிப்பிராயங்களுட் சில வெளியிடுகிறேன்.

நாம் இதர ஜாதியாரைக்காட்டிலும் மிகத்தாழ்வடைந்திருக்கிறோம். நாம் உயர்வடைய கல்வி, லௌகிக ஆசாரம், ஒழுக்கம், வேதபாராயணம் முதலிய வைதிக வியவகாரங்களில் பழகி விருத்தியடைவது மார்க்கமாயிருப்பதால் நாம் உடனே இம்மார்க்கத்தைக் கைப்பற்றவேண்டும். அனுவசியமான விஷயங்களைக் குறித்து வாதாடி வாணாளைவீணாக்கிக்கொண்டு உலோபகாரியாகாது மடிவதிற் பயனில்லை. உடனே நமது சிறுவர்களும் சிறுமிகளும் கல்வி போதிக்கப்படவேண்டுமென்பதும் அவசியத்திலும் அவசியம். மிகவும் அவசியம். முக்காலும் அவசியம். ஆதலால் தேசந்தோறும், கிராமந்தோறும், வீதிதோறும், வீடுதோறும் நம்மவர்களுடைய தர்மப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டும். இவை கிராமந்தோறும் ஏற்படக்கூடிய விஸ்வகர்ம குலாபிவிருத்தி சங்கங்களினாலாகவேண்டிய காரியமாகும். இப்படிச்செய்வதால் நம் சிறுவர்கள் மேற்கண்ட கல்வி ஆசார முதலியவைகளிற் பிரகாசித்துத் தங்கள் சந்ததிகளையும் சீர்திருத்துவார்கள். கல்வியைக் கைவிட்டால் நமது மக்கள் மிகச் சிறுவயதில், துருத்திஊதல், சம்மட்டிபிடித்தல், முதலிய கொடுந்தொழில்களுக்காளாய், சகவாச தோஷங்களால் சுருட்டு பொடிமுதலிய துர்ப்பழக்கங்களுக்காளாகி வயது வருங்காலத்தும் நம் கைத்தொழில்களைப் பல ஜாதியாருங் கற்றுச் சிறப்படைய நம்மவர்கள் அன்னியரிடம் வெகு குறைந்த கூலியாட்களாய் அமர்ந்து தன் சந்ததிகளையும் அவ்விதஞ் செய்ய நேரும். இன்றியமையாது கூலிவேலை செய்யுஞ் சிறுவர்களுக்கு இராப்பள்ளிக்கூடங்கள் அவசியம். இவைகட்கு நம் குலாபிமானிகளுடைய இடைவிடாமுயற்சியும் மூலதனமும் வேண்டும். இவ்விதமான முயற்சிகள் சென்னையில் நடப்பதால், இவைகட்கு பணம் உதவிசெய்ய இசையாவிட்டாலும் நமது விஸ்வகர்ம குலோபகாரிக்கு ஆயிரம் சந்தாதார் சேர்ந்து ஒரு வருடத்து சந்தா முன்பணமாகக் கொடுக்க இசைவார்களானால் சேரும் ரூபா 3000-த்தைக் கொண்டு பத்திரிகையையும் தவக்கமின்றி நடத்தவும் மற்ற காரியங்களைச் செய்யவும் மிக்க அநுகூலமாகும். இவ்விதகாரியங்களுக்கு கூடியவரையில் ஒழுக்க முதலியவையுள்ளவர்களையே தலைவர்களாய் நியமித்தல் உசிதம். வீணர்கள் பலர் இவ்வித காரியங்களுக்காளாகிக்காரியத்தைக் கெடுப்பதுவுமன்றி தாங்களுங்கெட்டு குலவீணராகின்றார்கள். இவ்விதமான மனிதர் பலர் செய்த காரியங்களால் துக்கமனுபவித்தவனாதலால் யான் இவர்களைப்பற்றிப் பேசாது



விடக்கூடவில்லை. இன்னும் பத்திரிகை நடத்தல், பள்ளிக்கூடங்களமைத்தல், உபந்நியாசகர்கள் மூலமாக அறிவைப் பரவச்செய்தல், சிறுபுத்தகங்கள், நோட்டீசுகள் அச்சிட்டு இலவசமாக விநியோகித்தல் இவையாவும் ஒழுங்காக நடைபெறுவதற்குத்தலைவராகத் தக்கஒருவரை நியமித்தல் ஆங்காங்கு உண்டிகள் வைத்து பணஞ் சேகரித்தல் முதலிய காரியங்களைச் செய்து நம் குலம் விருத்தியடையவேண்டுமே யொழிய யோக்கியதையுடையவரை நம்பாமையாலும் அவர்மேல் பொறாமை கொள்ளுவதாலும் ஒவ்வொருவரும் தாங்கள்தாங்கள் பெருமை அடையவேண்டுமென்று அற்ப எண்ணங்கொள்வதால் அநுகூலப்படாது. ஆகையினால் எல்லாம் வல்ல இறைவனருளால் ஈண்டுகுழுமியுள்ள சனதனவான்களியாவரும் அடியேனுடைய அபிப்பிராயத்தைக் கவனத்துடன் யோசித்துத் தக்க ஏற்பாடுசெய்ய வேண்டுகின்றனன்.

***

## குலோத்தாரண சபையின் உதவியும், அதற்கு உறுதியும்.

144-வது பக்கத் தொடர்ச்சி.

அவ்வாறு செய்தால்தான் நம்குலம் கூடிய சீக்கிரம் மேன்மையை யடைய ஏதுவாகும். ஏனெனில், முற்காலத்தில் வியாசன்முதலான விப்ரரிஷிகள் செய்த விபரீத சாஸ்திரங்களால் இவ்வுலகிலுள்ள இந்துக்கள் மதிமயங்கி நடுவுநிலைமையறியாது வம்சத்தாரிடம் ஓர்வித துவேஷ எண்ணத்தைக் கொண்டிருப்பதால், அதுகொண்டு ஒவ்வோரூரிலும் சாமானியரும், புராணப் பிரசங்கம் செய்வோரும், புராணங்களில் ஏதேனும் நம்மைப்பற்றி புகழ்ந்து கூறியிருந்தாலும் அந்த குணத்தை மாற்றிக் குற்றத்தையே கூறுவதாய் எடுத்துக்காட்டி தூஷணமாய்ப் பிரசங்கிக்கிறார்கள். அஃதெங்ஙனமெனில்,

“உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ், கொண்டு புகல்வதவர் குற்றமே- வண்டுமலர்ச், சேக்கை விரும்பும் செழும்பொழில்வாய் வேம்பன்றோ, காக்கை விரும்புங் கனி.” என்றநன்னெறிவாக்கியப்படி,

குணத்தை மறைத்துக் குற்றத்தைப் பொருளென்று கூறிப் பாமர ஜனங்களின் மதியை மயக்கி விடுவதால் அப்பாமரஜனங்களும் புராணிகர்கூறுவது உண்மை யென்று மதித்து நம்மவர்களைக் கேவலமாய் நினைத்து மரியாதைத் தாழ்வுசெய்து வருகிறார்கள். இவ்விஷயம் நான் பலராலும் கேள்விப்பட்டதோடு நேரிலுங் கண்டிருக்கிறேன். அவ்விதம் ஷை புராணிகர் பிரசங்கிக்கும்போது நம்மவரிற் பெரும்பாலார்க்கு வேதசாஸ்திர புராண இதிகாசங்கள் தெரியாமையாலும் தெரிந்துள்ள சிலருக்கு ஷை வேதசாஸ்திரங்கள் தயாரில்லாமலிருப்பதாலும் அவ்விடத்தில் நமது உன்னதத்தை ரூபிக்க தடைபட்டுப்போய் விடுகிறது. இதற்குத் திருஷ்டாந்தமாய் சென்ற ஆனந்த வரு மார்கழிமீ சிதம்பர க்ஷேத்திரத்தில் புராணிக ஐயங்கார் ஒருவர் ஸ்ரீ வால்மீக ராமாயணத்தை சுலோக தாத்பர்யமாகப் பிரசங்கம்செய்து வந்தார். அவ்விதம் செய்துவருகையில் இரண்டு மூன்று தடவையில் ஷை ராமாயணத்தில் விஸ்வகர்மாவைப்பற்றிக் கூறுமிடத்திலிருந்து ஆரம்பித்து கம்மாளர்கள் சூத்திரஜாதியிலும் தாழ்ந்தவர்களென்றும், அவர்களைத் தொடப்படாதென்றும், அவர்கள் வேலைசெய்யும் சத்தத்தைக் காதால் கேட்க்கப்படாதென்றும் கூறியதுடன் அதற்கு உதாரணப் பிரமாணங்கள் வேதங்களிலும், ஸ்மிருதிகளிலும் கூறுவதாயும் எடுத்துவிளக்கினாராம்.

அங்ஙனம் கூறிய புராணிகரிடம் வாதித்து நம் குல உன்னதத்தை நிலைநாட்டுவதற்குத் தகுந்த சாஸ்திர வல்லவர்களும் சாஸ்திரப் புத்தகங்களும் தயாரில்லாமையால் அவ்வூரார் என்ன செய்வதென்று ஏங்கியிருந்தும், சிலர் இதுபற்றி கும்ப

கோணம், திருச்சி முதலிய இடங்கட்கும் கடிதம் எழுதியும் ஒருவரும் கவனிக்கவில்லை. அப்போது சென்னையிலிருந்து ஆருத்ரா தெரிசனத்திற்கு வந்திருந்த நம்மவரிடம் சொல்லிக்கொண்டதற்கு அவர்கள் சொன்ன பதிலாவது யாதெனில்:— நாங்கள் அடுத்த ஞாயிற்றுக் கிழமைதினம் இவ்விடம் சில சாஸ்திரிகளோடுவந்து வாதித்து வெற்றியடைகிறோம். என்று சொல்லிவிட்டுப் போனவர்கள் மறுபடியும் திரும்பிவரவில்லை. ஷை புராணிகரும் பின்பு ஒருமாதம் இருந்து பிரசங்கம் விஸ்தாரமாய்ச் செய்து தமதூருக்குச் சென்றனராம்.

ஷை இவ்விஷயங்களைச் சிதம்பரம் செங்கழுநீர்ப் பிள்ளையார் கோவில்வீதி பொன்வேலை இரத்தினசாமி ஆச்சாரியாரவர்களால் நேரில் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

மேற்கண்ட புராணிகர் கூறியவாறு வேதசாஸ்திரங்களிலே நம்மைக் கிஞ்சித்தும் இழிவாகச் சொல்லப்படவில்லை. மிக சிலாக்யமாகவே கூறப்படுகிறது. ஆனால், அதைப்பற்றிச் சிலாக்கியமாய்க்கூறுகிற வேதாதி தனி ஸ்லோகங்களை நமது சித்தூர் தீர்ப்பு சேலம் தீர்ப்புகளில் கூறப்படுகிறது அதில் 'விஸ்வகர்மாமனசஸ்விஸ்வம்கரோதி' என்ற பனசை, ருக்வேதத்தில்கூறுகிறதாய்ச் சொல்லுகிறதே தவிர, இன்னவேதம் இத்தனையாவது அட்டம் இத்தனையாவது பன்னம். இத்தனையாவது அனுவாகம் இத்தனையாவது பனசை என்ற நிர்ணயம் கூறப்படவில்லை, ஆகையால் அந்த வேத வசனத்தையும் அதுபோல் பொதுவாய்க் கூறும் மற்ற வசனத்தையும், அத்யாயத்தோடு தெரிந்துகொள்ளும் பொருட்டும் பிறருக்கு ருஜுபிக்கும்பொருட்டும் முன்கூறிய வேதங்களையும் மற்றுமுள்ள சாஸ்திரங்களையும் சேகரிக்கவேண்டியது தவசியம். அப்படி நாம் சேகரித்து வையாதபக்ஷத்தில், நாம் நமக்கு முன்னிருந்த பாட்டன் முப்பாட்டன் நாலாவதுபாட்டன் முதலியவர்களைக்குறித்து, நமது பாட்டன்மார்கள் என்னசௌகரியந் தேடிவைத்தார்கள். வயிறு வளர்க்கும்பொருட்டு சோற்றுக்குழைத்துக் காலங்கழித்தார்களே தவிர நவாப் அரசாக்ஷியின் காலத்தில் நிலபலங்களையும் கிராம சௌகரியங்களையும் நன்றாய்த் தேடிக்கொள்ளலாமே அப்படியிருக்க அக்காலத்தில் தானியம் ரூபாய் ஒன்றுக்கு இரண்டு மூன்று கலம் மலிவாய் கிடைக்கிறதென்று வாங்கிப் புசித்து ஏப்பமிட்டு, நாளடைவில் ஆஸ்தி தேடாமல் ஏமாந்துபோய்விட்டார்களே குலத்துரோகிகள், என்றுபலவாறு நம் முன்னோர்களை நிந்திக்கிறோமல்லவா! அதுபோலவே, நமக்குப் பிற்காலம் நமது சந்ததியார்களும் நம்மைநோக்கிக்காருண்யமும் நடுவு நிலைமையுமுடைய ஆங்கில அரசாக்ஷியின் காலத்தில் அநேகசௌகரியங்களைத்தேடி வைக்கலாமே, அவ்விதம் செய்யாமல் வயிற்றுக்குழி தூர்ப்பதே பெரிய வேலையாயிருந்து காலத்தை வீணிலே கழித்து விட்டார்களே, இப்போது சவுகரியம்செய்ய இடங்கொடுக்கவில்லையே என்று நம்மையெல்லாம் நிந்திப்பார்களென்பது திண்ணமல்லவா? ஏனெனில்:

“அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னும் ஆடையும் ஆதாவாய்க், கொள்ளிக்கும் பட்ட கடனுக்குமே யென்னைக் குறித்ததல்லால், அள்ளித்திரிகின்ற காலத்திலே பெண்டுக் கடர்ப்பப், பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே.”

என்ற முன்னோர் வாக்கியப்படி நம் சந்ததியார்களைப் படிப்பிப்பதோடு சாஸ்திர சேகரமும் செய்து உதவவேண்டும் நாம் அப்படிச்செய்தால் தான் அவர்கள் குலத்தை ரக்ஷிக்கத்தகுந்த ஏதுவாகும். குலத்தை ரக்ஷிப்பது புத்திரர் கடமையாகும். ஏனெனில்,

ப்ராணாதபிகோரம்ப: குலதர்ம: சாது சங்கச்ச அதாவது (வினா) உயிரினும் பிரியமாவது யாது? (விடை) குலதர்மமும் சாதுசங்கமும் என்று சங்கராச்சாரிய சுவாமிகளும்,

'நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான் பிறந்த, இல்லாண்மை யாக்கிக் கொளல்' அதாவது ஒருவனுக்கு நல்ல ஆண்மையென்று சொல்லப்படுவது தன் குடியை உயர்த்திக் கொள்ளுதல் என்பதாய் ஸ்ரீ திருவள்ளுவ நாயனாரும் கூறியிருப்பதாலும நமது குலத்தைக் காப்பாற்றிக்கொள்ளுவது நம்மவர் கடமையாகும், மேலும்,

தொடரும்,

கூந்தலூர். து. சுப்ரஹ்மண்யாச்சாரி.
மங்கலம்பேட்டை.

*
* *

## மாதா பிதாக்களின் மஹிமையும், புத்திரர்களின் கடமையும்.

119-வது பக்கத்தின் தொடர்ச்சி.

தந்தை தாயார்களுடைய சபிண்டர்களாலேயும் சமானோதர்களாலேயும் சகாத்தியாயி முதலானவர்களினாலேயும் மனமகிழ்ச்சியுடனே பூர்வக்கிரியைகள் செய்யத்தகும், அதற்கு மேற் சொல்லுகின்ற உத்தரக்கிரியைகளைக் கெடுதலில்லாத புத்திரன் முதலானவர்களினாலேயே செவ்வையாகச் செய்யவேண்டியது முறைமையென்றும்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திகழ்ச்சிரார்த்தத்தில் வருத்திடப்பட்ட தேவரும் பிதிர்மருத் தயவால், இகலருமுலக மின்பொடு செழிக்க வினிது கோருதலினவ்வரை மகிழ்வுடனு வாகனஞ் செயப் பட்ட மறையவர்செழுங் கரந்தனிற், புகழ் பெறவோமம்புரிவ தக்கினியிற் புரிவது போலவே யாகும்.

சிரார்த்தத்தில் வரிக்கப்பட்ட தேவர்களும், பிதிர்க்களும் கிருபையினாலே உலகமானது இன்பத்துடனே செழிக்கவேண்டுமென்று நன்மையாகக் கோருகின்றவர்களாதலினால், அவர்களை மகிழ்ச்சியுடனே ஆவாகனஞ் செய்யப்பட்ட பிராமணர்கள் கையில் ஹோமஞ்செய்வது அக்கினியிற் செய்வதுபோலவே யாகுமென்றும்.

இதுவுமது விருத்தம்.

என்றவ னிருக்க வன்னைச் சிரார்த்த மின்புறச் செயிற்பிதா [illegible]ன் மேற், சான்ற பிரபிதா மகன்பிரப் பிரபி தாமகன் மற்றிவர் தம்மை, ஆன்றலோ டாவாகனஞ் செயல் வேண்டும் அல்லது சனகன் றனைத்தில், என்றவத் தனையும் பிதாமகன்பிரபிதாமக னிவர்கடானத்தில்

தகப்பனிருக்கும்போது மகிழ்ச்சியுடனே தான் தாயாருக்குச் சிரார்த்தஞ்செய்தால், பெருமைபொருந்திய பிதாமஹர், பிரபிதாமஹர், பிரப்பிர பிதாமஹர்களென்று சொல்லப்பட்ட இவர்களை அமைதியுடனே ஆவாஹனஞ் செய்ய வேண்டும். அல்லது பிதிர்ஸ்தானத்தில், ஜீவித்திருக்கிற தன் தகப்பனையும், பிதாமஹர், பிரபிதாமஹர் இவர்கள் ஸ்தானத்தில், பிராமணர்களையும் வரித்துச் சிரார்த்தஞ் செய்ய வேண்டுமென்றும்.

கலி.

பிதிர்களுக்கு நெய்பாய சந்தேன்பெருகிவைற்றில், விதியினன்பொடு மேதகப்புரி சிரார்த்தத்தால், அதிதிருத்தி யுண்டாகுமொபா தற்றசமி, திதியன் றென்றுபன்னிரண்டு மாமற்றி வைகிரந்த.

மதுரமிகுந்த பாயசம், நெய், தேன், இவைகளுடனே அவரவர்கள் சூத்திரவிதிப்படி மேம்பாடுபொருந்திய அன்பினுற் செய்கின்ற சிரார்த்தத்தினாலே, பிதிர்களுக்கு அதிக திருப்தியுண்டாகும் கிருஷ்ணபக்ஷத் தசமிதிதி, ஏகாதசிதிதி, துவாதசிதிதி, அமாவாசை இவைகள் நன்மையைத் தருவனவாகுமென்றும்.

கலிகள்.

மருவெழிற் பிதிர்பிதா மஹர்பிர பிதாமஹர்கட்கும், பெருதுமாதர் பிதாமகி பிரபிதாமகிக்கும், பொருவறத் திகழ்தந்தைசோதரிய வள்புதல்வன், கருதுமற்ற வனையகனனுமிவர்களுக்கும். 1

அன்னை சோதரனவன் மனையவள் மகனுக்கும், தன்னுமன்னை சோதரியவள்பதி யவள் சுதர்க்கும், தன்னற்சோ தரியவள் மகன்றனக்கும், பன்னிபின்பிதா வவன்மனை பகரவன் சேய்க்கும். 2

உரைசெய் யிவ்வெழுவ ருக்கத்து மவரவர்க்குரிய, வரைசெய் சூத்திரப்படி மறையவர் தமைவரித்துப், புரையுறு தங்கவா கனஞ்செய் பூஜித்து, நிறையினன் மகாளயஞ்செ யவருமறை நெறியே. 3

கிருகஸ்தாச் சிரமத்திலிருப்பவர்கள், மஹாளய சிரார்த்தத்தில், பிதா, பிதாமஹர், பிரபிதாமஹருக்கும், மாது, பிதாமஹி, பிரபிதாமஹிக்கும், அத்தை, அவள் கணவன், அவள் புதல்வனுக்கும், அம்மான், அவன்மனைவி அவன்புத்திரனுக்கும் தாயின்சகோதரி, அவள்கணவன், அவள்புத்திரனுக்கும், தன்னுடன் பிறந்த சகோதரி, அவள் கணவன், அவள் புத்திரனுக்கும், மனைவியைப்பெற்ற மாமன், அவன் மனைவி, அவன் புத்திரனுக்கும், மேற்சொல்லியபடி ஏழுவர்க்கத்துக்கும் பிராமணர்களை அவரவர்களுக் குரியதாக வகுத்துள்ள சூத்திர விதிப்படி வரித்து ஆவாகனஞ்செய்து பூஜித்து ஒருவருடனே மஹாளயஞ்செய்தல் வேதசம்மத மாகுமென்றும் முந்நூல்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. இதனல் மாதாபிதாக்கள் ஜீவந்தர்களா யிருக்கும்வரை, அவர்களது சொற்களைக் கடவாமல் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியதும் அவர்களைப் பரிபாலனம் பண்ணவேண்டியதும் அவர்கள் தேகவியோகத்திற்குப்பின் உத்தரக்கிரியைகளைச் செய்து பிதுர்தேவதைகளைத் திருப்தி செய்யவேண்டியதும் புத்திரர்களைப் பொறுத்த கடமையாம்.

இன்னும் வரும்.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்
Ex. முனிசிபல் கௌன்சிலர்
பழனிஸ்தலம்.

## தொன்னூல் பின்னூல் பெருமை.

118-வது பக்கத்தொடர்ச்சி.

எனவ்வாறு புஸ்தகங்கள் கெடுவதெனில் மூன்றுகாரணங்களாலாகிறது.

முதலாவது—மனுஷருடைய சர்மத்தில் எண்ணெய்ப்பசை யுள்ளது. அப்யங்கனம் செய்யுங்காலில் புஸ்தகத்தை எடுத்தாலோ காகிதங்கள் எண்ணெய்ப்பசையை அதிகமாய்க்கிரகிக்கிறது. இந்த எண்ணெய்ப் பசையானது எட்டுப்பிரதிகளுக்கு அனுகூலமாயிருந்தது.

இரண்டாவது வியர்வை—சிலர்களுக்கு வியர்வை பனித்துளிகள்போல் உண்டாகிறது. சிலர்களுக்கு வியர்வை காணப்படாமலிருக்கிறது. இவ்வை அழுக்கு நீர் அதோடு உப்பளமானது. இவை கைரேகைகளில் உண்டாவது சகஜம். இவ்வித நீர் புஸ்தகத்தின் அடிப்பாகத்தில் அனுவனுவாய்ச் சுவறி சீக்கிரத்தில் கெடுகிறது.

மூன்றாவது—கைபடப்படாவினமாதல் அதாவது ஒருவர்கையில் இரும்புத் திறவுகோல் எவ்வளவு அடிக்கடி பழக்கப்படுகிறதோ, அவ்வளவாக சாவியுந் தேய்வு பட்டுப்பளபளப்பாகிவிடுகிறதல்லவா! இரும்பே ஹஸ்தசர்மத்தில்பழகித்தேய்வடைகிறதானல் காகிதம் ஹஸ்தஸ்பரிசத்தினல் சுருங்குவதும் பழமை யாவதும் சகஜமாகுமல்லவா?

இந்த மூன்று காரணங்களையும் கவனித்துப் புஸ்தகத்தை உபயோகிப்பது அவசியமாகும். இதனல் ஒருவர் கையை எவ்வளவு சுத்தப் படுத்திக்கொண்டு புஸ்தகத்தை எடுக்கிறதாயிருந்தாலும், ரேகைகளில் ஸ்வாபீகமா யேற்படக்கூடிய வியர்வையாதிகளால் புஸ்தகத்திற்கு ஹானி ஏற்படலாகும். ஆனதால் புஸ்தகம் கெடாதபடி உபயோகப்படுத்திக் கொள்ளத்தக்க பரிகாரமாவது—வாசிக்கவேண்டிய காலத்தில் கைச்சட்டை அணிந்து கொண்டு புஸ்தகத்தை வாசிக்கவேண்டியது கைச்சட்டையாவது, கைபோல் பின்னியுள்ள அங்கியாகும். இது புஸ்தகம் பழுதுபடாதபடி மிகவும் கவனித்து ஏற்படுத்திக் கொண்ட நமது அனுபவ முறையாகும். கைச்சட்டை இல்லாவிடில் (ஹாண்ட் கர்சீப்) என்ற சிறு சவுக்கத்துணியை கையில்வைத்துக்கொண்டு புஸ்தகத்தை உபயோகிக்கலாம். காணிச்சோம்பல் கோடிக் கோடி என்ற பழமொழிப்படி நூற்களைக் காக்கும் விஷயத்தில் கவனம் இருக்காவிடில் நூல்களுக்குப் பழுது ஏற்படுமென்பதை யாவரும் கவனிக்க விரும்புகிறேன்.

ஸ்ரீ சாலிவாடிபுராதீனம்,
தர்மபதி.

***

## ஒற்றுமைச் செல்வம்.

செல்வத்துட் செல்வம் ஒற்றுமைச் செல்வமல்லவா? ஆம்! ஒற்றுமைச் செல்வமே சிறந்தது. அதைத்தெரிந்தும் நாம் ஏன் கைப்பற்றவில்லை. உலகின்பல வியவகாரங்களால் அதை மறந்து விட்டோம். இனியாவது அதை நன்றாக கவனிப்போம். நம்மவர்களுக்குள் ஒற்றுமையுண்டாகக் கல்விமான்கள் பலவாறு நமக்கு ஞாபகப்படுத்தி வருகிறார்கள். வந்து மென்னை? தற்காலத்தில் அவசியமாயிருக்கும் வைதீக, லௌகீகச் சீர்திருத்தங்களைக் கைப்பற்றவேண்டியதற்காக நம்மவர்கள் ஒருங்குகூடி ஒற்றுமையைக் கைப்பற்றினாலன்றி ஏனையவர்களபி விருத்தியடைந்து வருவதற்குச் சரி சமானமாகவிருக்க முடியாதே. இப்பொழுது சில ஹிந்து வர்ணத்தார்கள் தங்களுக்குரிய கல்வியையும், கைத்தொழிலையும், வியாபாரத்தையும், மற்றுமுள்ள ஜீவனத்தொழில்களையும் சுலபமாகக் கைப்பற்றப் போதுமான சகாயங்களை ஒற்றுமையுடன் பற்றிக்கொண்டு சுகஜீவிகளாய் வாழ்ந்து வருதலை நாம் பார்த்து வருகிறோம். அவ்வாறு நாமேன் நடக்கலாகாது? நமது குடும்பங்களில் சகோதரன், சகோதரி, சுற்றத்தார், மித்திரர் முதலானவர்களுடன் ஒற்றுமையைப் பரவச்செய்ய வேண்டும். அநித்திய வாழ்க்கைக்காகத் தீச்செயல்களில் மனதைப் பழக்காமல் சதா சுகுணங்களில் மனதைப் பழகச் செய்ய வேண்டியதற்குப் பெருந்துணையாக ஸரஸ்வதி என்னும் கல்வியைக்கற்று, லட்சுமி என்னும் செல்வத்தைப் பெற்று, பார்வதி என்னும் அன்பைக்கொண்டு இகபரசாதனைகளுக்குச் சித்தமாகுவோமேயாகில் ஒற்றுமையின் சிறப்புக்கிணை யாதுமேயில்லை என்பதை நம் சுயவனுபவத்தாலறியவாம். இப்படிப்பட்ட ஒற்றுமை நமக்குள் ஏற்படாதிருந்தால் நமது வாழ்நாட்கள் வீணாகக் கழிவதாகும். நமக்குள் நிகழவேண்டிய கல்வியும், கைத்தொழிலும் சரிவரவியற்றுவதற்காகப் பரிந்து பேசும் பத்திரிகையை யாதரித்தாலல்லது நமக்குரிய கவுரவம் விளங்க மாட்டாது. இதைப்பற்றியே ஏனைய வர்ணத்தார்கள் பத்திரிகைகளைப் பரவச் செய்து வருவதினால் அவர்களடைந்து வரும் உயர்பதவிகளை நாம் கண்ணுற்று வருவதுந்தவிர, நமக்கவ்வாறாய பதவிகள் கிடைக்கவில்லையேயென புன்சொற்களை உபயோகிக்கிறோம். இது தவறேயாகும். நாமேன் நமது பூர்வீகர்களது ஒற்றுமையைக் கைக்கொள்ளலாகாது, மேலும் நமது விஸ்வகர்மக் கைத்தொழில்களை விருத்திசெய்ய வாராது; நமது ஒற்றுமையையும் கைத்தொழில்களையும் கைசோர விட்டமையால் கண்டபேர்களெல்லாம் அவற்றைக் கைக்கொண்டு நம்மைத் தாழ்த்திவிட்டார்கள். பரிதாபம்:—இப்பரிதாபமான நிலைமைக்கு நாமே காரணமானோம். ஆயினும் நாமெடுத்துக்கொண்டப் பொதுநல கைங்கிரியத்திற்கு ஏனையோர்கள் உதவிபுரிய முன்வந்தேயிருக்கிறார்களென்பதை நம்மவர்களறிந்து இனியாவது நமக்குள் வளரவேண்டிய ஒற்று

மையை ஸ்திரப்படுத்துவார்களாக. நம்மவர்கள் அன்பிற்சிறந்தவர்களே ஆனால் அந்த அன்பாகிய சிவத்தை மனதின்கண் வைக்கவேண்டிய கடமையைக் கியாபக மூட்டுகின்றனன். இதை யாவரும் கவனிக்கற்பாலது.

ஆஸ்திகன்.

* * *

## இந்தியாவின் கைத்தொழில்கள்.

புகையிலை இந்தியாவில் இயற்கையாக விளைகிறது. அப்படியிருந்தும் இங்கிலாந்து முதலிய தேசங்களிலிருந்து ஒவ்வொரு வருஷமும் கோடிக்கணக்கான சிகரட்டுகளால் இந்தியா முழுவதும் ஜனங்களின் உபயோகத்திற்காக நிரப்பப்படுகிறது. சாயச்சரக்குகளும் சாயம் செய்யும் கருவிகளும் ஒரு காலத்தில் இந்தியாவில் ஏராளமாக வியாபித்து இருந்தன. இப்பொழுதோ இந்தியாவில் சாயச் சாமான்கள் அகப்படுவது துர்லபமாயிருக்கிறது அப்படி யகப்பட்டாலும் சாயம் செய்யும் தொழிலே மறைந்துபோய் விட்டது. 12 வருஷங்களுக்கு முன் இந்தியாவில் நீலித்தோட்டங்களில் உற்பத்தியான நீலச்சரக்குகள் ஜப்பான் தேசத்தில் அதிக விலைக்கு விற்கப்பட்டு வந்தன. இப்பொழுதோ நீலி அகப்படுவதே துர்லபமாய் விட்டது. பர்ஷியாவில் செய்யப்பட்ட கம்பளங்களில் உபயோகிக்கப்படும் ஒட்டகத்தின் மயிர்கள் இந்தியாவில் உற்பத்தியான சரக்குகளால் சாயம் போடப்பட்டு வந்தன. இப்பொழுதோ சிந்து முதலிய தேசங்களில் ஒட்டகங்கள் ஏராளமாக இருந்தாலும் கம்பளங்கள் அகப்படுவது அரிதாயிருக்கிறது. அநேகவித வர்ணமுள்ள மரங்கள் இந்தியாவில் ஏராளமாக அகப்பட்டபோதிலும், கடைகளிலும் அநேகமாய் ஒவ்வொரு வீட்டிலும் ஜப்பான் தேசத்தில் அரக்குச் சாயம்போட்ட மரச்சாமான்கள் எங்கு பார்த்தாலும் காணப்படுகின்றன. ஏன் ஜப்பான் தேசத்துச் சாமான்கள் கப்பல் சார்ஜ் முதலான செலவுகள் செய்தும் இந்தியாவில் செய்யப்படும் சாமான்களைவிட நயமாகக் கிடைக்கின்றன. மூங்கிலை எவ்வளவு விதங்களாகப் பிரயோஜனப் படுத்தலாம் என்பது ஜப்பானியர்களுக்குத்தான் தெரியும் இந்தியாவில்மூங்கில் விசேஷமாக அகப்பட்ட போதிலும் அவைகளை ஜப்பானியர்களைப்போல வேலை செய்யும் திறமை இந்தியர்களுக்கில்லை. ஒவ்வொரு தேசத்தோடும் வியாபாரஞ் செய்யும்படி ஏற்பட்டிருக்கும் இப்பேர்ப்பட்ட காலத்தில் எந்தத் தேசத்திற்குச் சொந்தக் கப்பல்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ அந்தத் தேசந்தான் வியாபாரத்தில் மேன்மேலும் விருத்தியடையுமென்பதில் சந்தேகமில்லை.

கப்பல்கள் மரத்தினால் செய்யப்பட்ட காலத்தில் இந்தியாவில் கப்பல்கள் விசேஷமாகச் செய்யப்பட்டன. குஜராத், தென்னிந்தியா முதலான இடங்களில் கப்பல் செய்வதில் முன்காலத்தில் கைதேர்ந்தவர்கள் இருந்ததாகத்தெரிகிறது. சென்ற 30-வருட காலங்களாக இதர தேசத்துக் கப்பல்கள் இந்தியாவுக்கு வந்து சரக்குகளை ஏற்றிக்கொண்டுபோயும், அந் தேசங்களிலிருந்துச் சரக்குகளை ஏராளமாய்க் கொண்டுவந்து இறக்குமதி செய்தும் வருவதினால், அளவிடக்கூடாத லாபத்தை அடைகின்றன என்பது பிரத்தியக்ஷமாகத் தெரிந்தபோதிலும் இந்தியாவிலேயே கப்பல்களைச் செய்ய ஒருவிதமான முயற்சியையும் ஜனங்கள் எடுத்துக்கொள்ளாமலிருப்பது விசனிக்கத் தக்கது. கோடிக் கணக்காய் ரூபாய்கள் மோசடிபாங்கிகளில் கண்ணுக்குக்காணாமல் மறைந்துபோயிருக்கின்றன. கோடிக்கணக்கான ரூபாய்கள் இதாமர்க்கமாய்ச்செலவழிக்கப்படுகின்றன. எந்தக் கப்பல்களில் ஏராளமான திரவியங்கள் கொண்டுவரப் படுகின்றனவோ அப்பேர்ப்பட்ட கப்பல்கள் இன்னும் இந்தியாவுக்குச் சொந்தமாக இவ்விடத்திலேயே செய்யப்படவில்லை. எப்பொழுது செய்யப்படுமோ அப்பொழுதுதான் இந்தியாவின் வியாபாரத்திற்கு மேன்மேலும் விருத்தியும் கௌரவமு முண்டாகும்.



இந்தியாவில் கிடைக்கும் சணல் பட்டு முதலானவைகளையே இதர தேசங்களுக்கு ஏராளமாக அனுப்பி அவ்வியாபாரத்தை விருத்திசெய்யவேண்டியது. பருத்தியின்மீது போட்டிருக்கும் வரியைக் காலதாமதமில்லாமல் உடனே எடுத்துவிடவேண்டியது. ரப்பர் சர்க்கரை தான்யம்இவைகளை உண்டாக்கக்கூடிய நிலங்களை விருத்திசெய்து அவைகளில் உற்பத்தியாகும் சரக்குகளை இந்தியாவிலேயே உபயோகப்படுத்த வேண்டியது. உலோகங்களை வெட்டியெடுக்கும் சாஸ்திரத்தை நன்றாய்த் தெரிந்துகொள்ளும் பொருட்டுப் புத்திசாலிகளான இந்தியர்களை இதர தேசங்களுக்கு அனுப்பி அவர்களுடைய மனத்தையும் அநுபோகத்தையும் அதிகமாக உபயோகப்படுத்த வேண்டியது. சர்க்கார் இந்த சாஸ்திரங்களை அப்பியசிக்கும் பொருட்டும், அதில் நூதனமான விஷயங்களைக்கண்டு பிடிக்கும்பொருட்டும் சாஸ்திரக் கலாசாலைகள் ஏற்படுத்த வேண்டும். இதே மாதிரி நமது நேடிவ் ஸ்டேட்ஸுகளிலும் ராஜாக்கள் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். ஒவ்வொரு முனிசிபாலிடியும் தங்களுக்குச் சொந்தமாக எல்லா ஜனங்களுக்கும் பணமில்லாமல் உபயோகப்படும்படி வியாபாரச் சம்பந்தமான வஸ்து தர்ஸன சாலை பல பொருட்காட்சி சாலையும் ஏற்படுத்தவேண்டியது. அவைகளில் ஜனங்கள் போய் பலசாமான்களைக் கண்ணால் பார்த்து அது விஷயமாக யாவத்து சமாசாரத்தையும் தெரிந்துகொள்வார்கள். அடுத்தடுத்து ஒவ்வொரு வருஷத்திலும் சர்க்கார் கிஸ்திபிலிருந்து பயிரிடுபவர்களுக்குப் பொறுக்கி எடுக்கப் பட்டதாமான விதைகளை வாங்கிக்கொடுக்கவேண்டியது. அநேகமாகிரியாக நிலத்தைச் செழிக்கப் பண்ணும் எருக்களை வாங்கிக் கொடுக்கவேண்டும். யுனைடெட் ஸ்டேட்ஸ் தேசமும் ஜப்பான் தேசமும் இதுவிஷயமாய்ச் சகல ஒத்தாசையும் கொடுக்கின்றன ஆனதினால்தான் அத் தேசங்களில் பயிரிடுகிறவர்கள் தனவந்தர்களாயிருக்கிறார்கள். நாம் கடைத்தேறுவதற்கு இன்றியமையாத இத்தகைய முக்கிய விஷயங்களில் நம்மவர்கள் கவனம் இன்னமும் செல்லாதிருப்பது இந்தியாவின் க்ஷேமத்திற் குற்றதல்ல. ஆகவே இப்பொழுது தொழில் நிலைமைக்கு ஏற்பட் டிருக்கும் நிலைமையிலிருந்தாகிலும் நமது மகாஜனங்களும் தலைவர்களும் விஷயங்களைக் கிரஹித்து ஒன்றுசேர்ந்து கைத்தொழில் வியாபாரம், கைத்தொழிற் சாலைகள், விவசாயம், கலாசாஸ்திரம் இவைகளை விருத்திசெய்யும் பொருட்டு ஊக்கங் கொள்ளவேண்டியது மிக்க அவசியம். தே—னி.

* * *

## நூதன தொழில், முயற்சிகள்.

### முசுக்கட்டைச் செடியிலிருந்து கடுதாசி.

ஜப்பானியர்கள் முசுக்கட்டைச்செடியிலிருந்து கடுதாசி செய்கிறார்கள். இந்தக் கடுதாசி செய்வதில் சில முறைகளையனுஸரித்து பற்பல தொழில்களில் உபயோகிக்கிறார்கள். முசுக்கட்டைச்செடியின் நார்களை குறுக்கு நெடுக்குமாய்க் கலந்திராமல் நீளப்போக்கில் அமைத்துச் செய்யப்படும் கடுதாசிதான் ரொம்ப சிலாக்யமானதாம். இப்படிச்செய்த இரண்டு தாள்களை ஒரு தாளின் நார்கள் இன்னொரு தாளின் நார்களுக்கு குறுக்காக இருக்கும்படி வைத்து ஒட்டி, பிறகு, அந்த இரட்டைத்தாளில் ஒருவித மருந்துச் சரக்கைத் தடவிக் காயவைத்தால் அத்தாளை இரண்டு பேர் சேர்ந்து இழுத்தாலும் அது கிழியாதாம். அந்த தாள் செய்வதில் உபயோகிக்கும் மருந்தால், அது ஜலத்தினால் கெடுதலடைவதில்லையாம். அதை வெகு நேரம் ஜலத்தில் அமிழ்த்திவைத்திருந்தாலும் பாதகமடைவதில்லை. இதைக்

கொண்டு ஸப்மரீன் கப்பல்களுக்கு உயிர்ப் படகுகள் செய்யப்போகிறார்கள். அந்தக் கடிதாசியைக்கொண்டு அநேக சிறிய குழாய்கள் செய்து அவைகளில் காற்றை யடைத்து படகுகள் செய்வதில் உபயோகிப்பார்கள். இந்தப் படகில் ஏதாவது மோதி, அதில் ஒரு பாகம் சேதமடைந்தாலும், பாக்கிக் குழாய்கள் சேதமடையாதிருப்பதால், படகு மூழ்கிவிடுவதில்லை.

இந்தக் கடிதாசியை ஜலந்தாக்காதபடி செய்ய முன் சொன்ன மருந்தை உபயோகிக்காமல் கொஞ்சம் தாழ்ந்த வகை மருந்துகளை உபயோகித்து குடைத்துணிகள் மழைக்குப் போட்டுக்கொள்ளும் சட்டைகள்முதலியவைகள் செய்யலாம். இந்தக் கடிதாசியை கயிறாகவும் திரிக்கலாம். ஆகாயவிமானிகள் இறங்குவதற்கு உதவும் பாரச்சூட்டுகள் என்னும் குடைகள் செய்வதற்கும் இது உதவும். இதைக்கொண்டு, ஏரோப்ளேனின் சிறகுகள், ஆகாயவிமானிகளுக்கு உடைகள், வீட்டுச்சுவர்களில் உபயோகிக்கும் கடிதாசிகள், ஜமக்காளங்கள் முதலியவைகளும் செய்யலாமாம்.

**பருத்தித்தாளிலிருந்து கடிதாசிசெய்தல்:—**

அமெரிக்காவில் ஒரு பட்டணத்தில் பருத்திச்செடியின் தண்டு, கிளைகள் ஆகிய இவைகளிலிருந்து கடிதாசிக்கூழ் செய்ய ஒரு பெரிய யந்திரசாலை ஸ்தாபிக்கப்பட்டு வருகிறது. இதில் தினந்தோறும் 50-டன் காகிதக்கூழ் தயாராகுமாம்.

அமெரிக்காவில் மொத்தத்தில் 7½கோடி டன் நிறையுள்ள பருத்தித்தாள் கிடைக்குமாம். இதைக்கொண்டு 24 கோடி டன் நிறையுள்ள கடிதாசி செய்யலாமாம். இந்த கடிதாசி டன் ஒன்றுக்கு 150 ரூபாய்க்கு மேல் விலைபோகுமாம்.

பருத்தித்தாளின் நார் கடிதாசி செய்வதற்கேற்ற சில சிலாக்கியமான குணங்களுடையதாக விருப்பதால், நிரம்ப உறுதியானதும் அதிக நிறை யில்லாததுமான உயர்ந்த கடிதாசி செய்ய அது மிகவும் ஏற்றதாக இருக்கிறது.

**திருவாங்கூரில் பட்டுப்பூச்சி வளர்க்குந் தொழில்:—**

திருவாங்கூர் சமஸ்தான நன்கொடையை ஆதாரமாகக் கொண்டு ஸால்வேஷன் ஆர்மி என்னும் ரக்ஷண்ய சேனையார் திருவனந்தபுரத்திற்கருகில் 12.மாணவர் சேர்ந்து கல்வி கற்பதற் குரித்தான ஸாதனங்களோடு பட்டுப்பூச்சி வளர்க்குந் தொழிலைப் பயிலுவிக்க ஏற்பாடு செய்துகொண்டிருப்பதாகச் சில தினங்களுக்கு முன் சொல்லப்பட்டு வந்தது. அதன் சம்பந்தமாக இப்போது வேறுசிற்சில சமாச்சாரங்கள் தெரிய வருகின்றன. திருவாங்கூர் விவசாய இலாகாதாரரது மாசற்றஉழைப்புக்காரணமாக அச்சமஸ்தானத்தில் பட்டுப்பூச்சி வளர்க்குந் தொழிலையும் பட்டு நெசவுத்தொழிலையும் ஸர்வ சாதாரணமாகச் செய்துவிட வேண்டுமென்று பரிசீலனை செய்யப்பட்டது. பெரிதும் பலனைத் தருவதாகவே தெரியவந்தது. வருஷத்தில் குறைந்த பக்ஷம் ஆறுமாதகாலம் அச்சமஸ்தானத்து பருவநிலை ரம்மியமாயிருந்து வருவதனாலே பட்டுப்பூச்சிகளை வளர்க்கவும் அவைகளுக்கான செடிகளைச் சமஸ்தானமெங்கும் பரவும்படி செய்யவும் ஸாத்தியமாகுமென்று அவ்விலாகாதார் பரிசீலனை செய்தறிந்த பிறகு அவ்வுபயோகமான தொழிலைக் கைசோரவிடலாகாதென்று மதித்து அவ்வப்போது உபந்நியாசங்கள் செய்ய ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். பட்டுப்பூச்சிச் செடிகளின்மாதிரிகளையும், பட்டுப்பூச்சிகளின் முட்டைகளையுங் குறித்த துண்டுப்பிரசுரங்கள் ஜனங்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. மேற்படி தொழில் அபிலாஷை கொள்ளுவோர் யாதொரு பணச்செலவும் சிரமமும் இல்லாமல் செடிகளின் மாதிரிகளும் பட்டுப்பூச்சி முட்டைகளும் பெறுவதான நிமித்தம் தகுதியான இடங்களில்



போதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. திருவனந்தபுரம் பண்ணையில் வளர்க்கப்பட்டப் பட்டுப்பூச்சிக் கூடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பட்டினின்று நெசவான வஸ்திர வகைகள் ராத்தல் இரண்டு ரூபா வீதம் சென்ற வருஷத்தில் விற்கப்பட்டது. இவை யனைத்தையும் கவனித்துப் பார்க்குமிடத்து திருவாங்கூர் சமஸ்தானத்தில் பட்டுவளர்க்குந் தொழில் பெருத்த லாபத்தையும் விசேஷ ப்ரபல்யத்தையும் அடையுமென்று யாம் கூறும்படியாயிருக்கிறது. இதை எவ்விதத்திலும் அச் சமஸ்தானத்தில் வேரூன்றிப் பலன் தரும்படி செய்ய அச்சமஸ்தான விவசாய இலாகா டைரெக்டரான டாக்டர் குஞ்சனபிள்ளை எடுத்திருக்கும் சிரமமும் கவனமும் போற்றிப் புகழுதற் குரியனவென்பதற்கு ஆக்ஷேபமில்லை.

**இந்தியாவில் கண்ணாடித் தொழில்.**

மிஸ்டர் வர்ஷனே என்பவர் வெளிதேசங்களில் கண்ணாடித்தொழிற் பயிற்சிபெற்று 1905-ல் திரும்பி வந்து பம்பாய்க்கருகிலுள்ள டேவி கொவுன் என்ற ஊரில் "பைஸா பண்ட் கிளாஸ் பாக்டரி" என்ற கண்ணாடித் தொழிற்சாலையை ஸ்தாபித்தார். 1914-ல் 'அப்பர் இந்தியா கிளாஸ் ஒர்க்ஸ்' என்னும் கண்ணாடித் தொழிற்சாலையின் தலைவர் ஸ்தானத்தை வகித்து அதை மேலான அபிவிருத்திக்குக் கொண்டு வந்திருக்கிறார். சாதாரணமாக இந்தியர்களால் 9-வயது முதல் 28-வயது வரையிலுள்ளவர்களைச் சுலபமாகப் பழக்குவிக்கலாமென்கிறார். தினத்துக்கு 2-அணாவாக அத்தொழிற் சாலையில் சம்பாதித்த பையன்கள் இப்போது மாதத்துக்கு 30,—40-ரூபா சம்பாதிக்கக்கூடியவர்களாய் விட்டனரென்கிறார். இதர தேசங்களிலிருந்து இந்தியாவுக்குப் பிரதி வருஷமும் 1½-கோடி ரூபாய் பெறுமான கண்ணாடிச்சாமான்கள் வருகின்றனவாம். இவருடைய கைத் தொழிற்சாலையில்மட்டும் வருஷம் 1-க்கு ஒரு லக்ஷம் ரூபாய் பெறுமான கண்ணாடிச் சாமான்கள் செய்யப்பட்டு வருகின்றனவாம். இதைப்போல இன்னும் 150-கம்பெனிகள் இருந்தால்—வெளிதேசக் கண்ணாடி சாமான்களைத் தடுத்துவிடலாமென்கிறார். இதைத் தென்னிந்தியா கவனிக்குமாக.

**வடசர்க்கார் ஜில்லாக்களுக்கு ஓர் யந்திரத் தொழிற் பாடசாலை.**

சென்னை ராஜதானியின் வடகோடியிலிருக்கும் கஞ்சம், விசாகப்பட்டணம், கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர் ஆகிய இவ்வைந்து ஜில்லாக்களுக்கும் ஒருங்கு சேர்ந்து 'வடசர்க்கார்' என்று வழங்கிவருகிறது. மேற் கண்ட ஜில்லாக்களுக்காக ஏற்படுத்தப் பட்டிருக்கும் „மெகானிகல் எஞ்சினியரிங்" என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் யந்திரத் தொழில் பாடசாலையை, காக்கிநாடா லோகல்பண்டு தொழிற் சாலையின் வேலைப்பாட்டுச் சம்பந்தமாக அவ்வூரிலேயே ஸ்தாபிக்கப்படலாமென்றும் சென்னை கவர்மெண்டார் உத்திரவு செய்திருக்கிறார்கள்.

**மைஸூரில் காகிதக் கூழ் செய்யுந் தொழில்.**

மைஸூர் ராஜ்யத்தில் காகிதக்கூழ் செய்வதைப்பற்றி ஆராய்ச்சிகள் சுறுசுறுப்பாய் நடந்து வருகின்றன. காகிதக்கூழ் செய்வதற்கு வேண்டிய மூலப்பொருள்கள் இன்னவிடத்திலிருக்கின்றன, அவைகளை எவ்விதம் உபயோகிக்கலாமென்பதைப் பரிசீலனைசெய்ய ப்ரத்யேகமான உத்யோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களாம். அந்த ராஜ்யத்திலுள்ள புல்வகைகளிலிருந்தும், மூங்கில்களிலிருந்தும் மரக்கூழ் செய்து, அதற்கு என்ன செலவு பிடிக்குமென்பதை யறிவதற்கு, கவர்ன்மெண்டார் மிஸ்டர் ரெய்ட் என்னும் ஒரு தொழில் நிபுணரை நியமித்திருக்கிறார்களாம். மூங்கிலைத் தக்கபடி பக்குவப்படுத்தி மாதிரிக்கு 20-டன் மூங்கிலை இந்தியாவிலுள்ள ஒரு தொழிற்

சாலைக்கு அனுப்பி, அங்கே மரக்கூழ் செய்து கொடுக்கும்படி அந்தத் தொழிற்சாலையோடு ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். மரக்கூழ் செய்வதற்கு வேண்டிய 'லைம்ஸ்டோன்' என்னும் சுண்ணாம்புக்கல்லைச் சேகரித்து உபயோகிப்பதைப்பற்றி மைஸூர் பூதத்வ சாஸ்திர டிபார்ட்மெண்டார் கவனம் செலுத்தி வருகிறார்கள். இவை காகிதக்கூழ் செய்வதைப்பற்றிய முயற்சிகள். மூங்கிலிலிருந்து காகிதம் செய்வதற்கும் மைஸூரில் தனியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவாம்.

### கடிதாசி ஷர்ட்டுகள்.

ஜப்பானில் கடிதாசியினால் ஷர்ட் முதலிய உட்சட்டைகள் செய்கிறார்களாம். இந்தக் கடிதாசிகளில் ஜலம் ஊறுவதில்லையாம். இந்தக் கடிதாசி செய்வதில், இரண்டு மெல்லிய கடுதாசிகளை ஒரு ரகஸ்யமான பசையினால் ஒட்டிச்சேர்த்துக் காயவைக்கிறார்கள். காய்ந்த பிறகு, அவைகளை கொதிக்கும் ஜலத்தில் போடுகிறார்கள். ஜலத்தில் போடுவதால் பசை முழுதும் கடிதாசிகளுக்குள் ஊறிக்கொள்கிறது. பிறகு கடிதாசியை எடுத்து, ஜலத்தில் அலம்பி மறுபடியும் மேற்சொன்ன ரகஸ்யப் பசையைத் தடவிக் காயவைக்கிறார்கள். இந்த கடிதாசிகள், துணிகள் போலவே 21 கஜம் நீளமும் 55 அங்குல அகலமும் உள்ள பீஸ்களாக செய்யப்படுகின்றன. இந்தக் கடிதாசிகளைக் கொண்டு, ஷர்ட், காலுக்கு உள் சட்டை முதலியவைகள் செய்யலாமாம்.

---

தஞ்சாவூர் விஸ்வகர்மமஹாஜன கான்பரன்ஸில் ஆக்கிராசனம்
வகிக்கப் பெற்ற சென்னப்பட்டணம் பிரம்மஸ்ரீ

## N. துரைவேலாச்சாரியார் B. A. அவர்கள்பேரில்

பதினறடி யாசிரிய விருத்தம்.

காந்தமதில் சூழ்ந்ததிரு மாந்தையம் பதிவிஸ்வ கர்மவம் ஸஸ்தர் முன்போற்
காசினி தனிற்ப்ராம் மணீகதரு மங்களைக் கைக்கொண்டு நீடும்வாழ்கக்
கங்கணங் கட்டியுள் சாசுவத சென்ட்ரல் கமிட்டியின் மனோ தம்போற்
கமழ்தஞ்சை நகரமிசை நடைபெற்ற சம்பிர கான்பரன் ஸால யத்திற்
பாந்தமுட ஞக்கிரா சனம்வகித் தெழில்ராஜ பக்தி விசுவாச நிலைமைப்
பத்ததி யுடன்விஸ்வ சமயப்ரபா வங்கள் பலதையு மெடுத் திங்கிலீஷ்ப்
பாடைதனில் வாசமா சோசர முடன்வித்வ பண்டிதர்கள் முன்னிலை தனிற்
பயின்றனை வருஞ்சபா சென்றுகா கோஷமது பண்ணநற் புகழ் படைத்தான்
சாந்தகுண வேதவிஸ் வப்ரம்ஹ குலதிலக தாஷ்டீக கோலாகலன்
தாமமிகு குமுதமலர் மாலிகா பரணபுய சயிலவஞ் ஜிரச ரீரன்
தகுமாங்கி லேயவிற் பன்னபண் டிதபட்ட தாரியன மதவீரன்
சலதர தாரங்கவா ரோஹணன் றமிழ்வாணர் சந்ததமதிக்கு நிபுணன்
பூந்தரும சாலைபல திகழ்சென்னை நகரில்வளர் பொற்புள்ள தனத யோகன்
புண்ணிய மஹாமந்த்ர காயத்ரி ஜெபஹோம புனிதசன் மார்க்க சீலன்
போதபா சமயகோ ளரிசாத குருபான் பொன்னடி வணங்குநேமன்
புருடஜெய சிங்கமென வந்ததுரை வேலனும் புங்கவக ளங்கமுகிலே.

V. மௌனதரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
Ex முனிசிபல் கௌன்சிலர்
நிரந்தர சென்ட்ரல் கமிட்டி டிவிஷன் காரியதரிசியுடன்,
சாஸ்திர ஆராய்ச்சி சங்கத்தில் மெம்பர்.
பழனிஸ்தலம்.



## சிற்பசாஸ்திர விடுகவிகள்.

விருத்தம்.

துய்யதே வாலயங்கள் சுருதியின் முறைமையின்றி
மையபேதகமாய்ச் செய்தால் வரும்பல தோஷங்களைச்
செய்தருள் தபதிகர்த்தன் சிறப்புள நகரமெல்லாம்
பையரவின் வாய்த்தேரைப் படிவம்போ லாகுந்தானே.

பூருவமைபந் தன்னைப் புவிமிசை நசக்கிப்பொல்லாக்
காருருமையம் வைத்துக் கட்டிடு மாலயங்கள்
சீருறுமண்ட பங்கள் சிகரகோ புரங்களெல்லாம்
பாருளே மலினமாகிப் பாழதாய்ப் போகுந்தானே.

தேவாலயங்களை நவீனமாய் உண்டுபண்ணுங் காலங்களிலேயும் இடித்து மறுபடியுங் கட்டடங்கட்ட ஆரம்பிக்குங் காலங்களிலேயும் மேற்கண்ட செய்யுட்களின் கருத்தை ஸ்தபதி ஆச்சாரியார்களும் திருப்பணி தருமத்தை நடாத்தக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கின்ற கர்த்தாக்களும் ஸ்தலவாசிகளான மகாஜனங்களும் கவனித்துச் செய்யவேண்டுமென்ப தெமது பிரார்த்தனை.

பொது நன்மைப் பிரியன்.

---

## சகோதரர்களின் மாட்சி.

### செங்குந்தர் கான்பரன்ஸ்.

செங்குந்தர் அபிவிருத்திச் சங்கத்தின் 3-வது கூட்டம் 15, 16-தேதிகளில் ஈரோட்டில் கூடிற்று. மிஸ்டர், ஏ. எம். சுந்தரம் என்பவர் அக்கிராஸனம் வகித்தார். மூன்றும் வருட ரிப்போர்ட் வாசிக்கப்பட்டபிறகு அக்கிராஸனாதிபதி தமது பிரஸங்கத்தைச் செய்தார். இவர் முக்கியமாய் எந்த ஜன சமூகமும் விருத்தியடையவேண்டுமானால் தத்தமக்கு அமைந்த கடமைகளை உள்ளபடியே நடத்திதீர வேண்டுமென்றும் கடமைகள் சுயகடமை இல்லறக் கடமை, ஜாதிக்கடமை, தேசக்கடமை ஆகியவகையில் பிரியுமென்றும், சுயகடமையில் யாவரும் தத்தம் தேகசுகத்தைக் காப்பதிலும் ஜீவகாருண்யம், ஈஸ்வர பக்தி, பரோபகார குணங்கள் மேற் கொள்வதால் செலுத்தப்பட்டதாகுமென்றும், இல்லறக் கடமையில் குடும்பவிருத்திக்கும்பொது ஜனசமூகத்திற்கும் அவசியமான வழியில் நின்று கடமையைச் செலுத்தி வரவேண்டுமென்றும், ஜாதிக்கடமையில் தம்ஜாதியார் உயர்வடைவதற்கு வேண்டிய வழியைத் தெரியாதவர்களுக்கு எடுத்துக்காட்டித் திருத்தம் செய்வதால் செலுத்தியதாகுமென்றும், தேசக்கடமை பூர்வதேசமாகிய நமது இந்தியா விருத்தியடைந்து பலவகையில் சிறந்துவிளங்க வழி செய்வதாலும் தேசாபிமானம் காட்டுவதாலும், செலுத்தப்பட்டதாகுமென்றும் சொன்னார், இரண்டாம் நாளும் கூடிய பிறகு முறைப்படி தீர்மானங்கள் செய்யப்பட்டன.

### ஸ்திரீகளுக்குத் தொழில் கல்வி.

பேஹார் ஒரிஸ்ஸா கவர்ன்மெண்டார், ஸ்திரீகளுக்குக் கைத்தொழில் கல்விகற்றுக்கொடுப்பதைப்பற்றி ஆலோசித்து வருகிறார்கள். அவர்கள் பாட்னாவில் சரிகை வேலை, சித்திரத்தையல்வேலை ஆகிய இவைகளைக் கற்றுக்கொடுக்க ஒரு பாடசாலை ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கிறார்கள்.

இது புது முயற்சியாகையாலும், இந்தப் பள்ளிக்கூடத்தில் தாழ்ந்த வகுப்பு ஸ்திரீகளை படிப்பார்களாகையாலும் அவர்கள் அதிகமாக சம்பளம் செலுத்துவதென்பது முடியாதாகையாலும், கவர்ன்மெண்டார் அந்தப் பள்ளிக்கூடத்தைச் சொந்தச் செலவில் நடத்துவதாகத் தீர்மானித்திருக்கிறார்களாம். இதற்கு அதிக செலவு பிடிக்காதென்று சொல்லப்படுகிறது. சில வருஷங்கள் சென்றால் பள்ளிக்கூடம் பிறர் உதவியின்றி நடந்துவரக்கூடுமாம். அதாவது, அங்கே செய்யப்படும் சரிகைவேலைகளையும் தையல் வேலைகளையும் விற்றுக் கிடைக்கும் பணத்தைக்கொண்டே பள்ளிக்கூடத்தை நிர்வகிக்கலாம். பள்ளிக்கூடத்தைச் சரியான முறைகளில் நடத்துவதற்காக ஒரு ஆலோசனைக்கமிட்டி ஏற்படுத்தி அதில், பேஹார் ஒரிஸ்ஸா மகாணங்களிலுள்ள பிரபல கனவான்களை மெம்பர்களாய் நியமித்து, அந்தக் கமிட்டியின் ஆலோசனைகளையும் கேட்டுக் கொள்வார்கள். பள்ளிக்கூடத்தைச் சாதாரண வித்தியாசாலையாக நடத்தாமல், ஒரு தொழிற்சாலை போல் நடத்துவதாக உத்தேசமாம். இதற்கு, மாணவர்கள் செய்தவேலைகளை விற்பதில் உதவி செய்யும்படி ஆலோசனைக் கமிட்டி மெம்பர்கள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

சென்னைக் கவர்ன்மெண்டார் இந்தமாகாணத்து லோகல் போர்டுகளுக்கு 20000-ரூபாய் கிராண்டு கொடுத்து 44 பெண் ஸ்கூல்களைப் புதிதாய் ஸ்தாபிக்க அனுமதி கொடுத்திருக்கிறார்கள். 20 ஆயிரம் ரூபாயிக்கு 44-ஸ்கூல்களென்றால் ஒரு ஸ்கூலுக்கு 3 ஆயிரம் ரூபாய் ஆகிறது.

### மைசூரில் கட்டாயப் படிப்பு.

மைசூரில் கட்டாயப்படிப்பு விஷயமாய் விசாரிக்கப் பட்டதில் சமஸ்தானத்தார் கட்டாயப் படிப்பைப்பற்றி யோசித்து வருகிறார்களென்றும் அதற்கு வேண்டிய சட்டங்கள் சீக்கிரத்தில் ஏற்படுத்தப் படுமென்றும் தெரிகிறது. சென்ற இரண்டு வருஷகாலமாக சமஸ்தானத்தார் குறிப்பிட்ட ஜில்லாக்களில் கட்டாயப்படிப்பு ஏற்படுத்தியிருக்கின்றனர். வரவர அப்படிப்பு விருத்தியாகிக் கொண்டு வருகின்றது. ஜனங்கள் தங்கள் குழந்தைகளையே சரிவரப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புகிறார்களாவென்று கவனிப்பதற்கும் கட்டாயப்படிப்பு கற்பிக்கும் விஷயத்தில் மேற்பார்வை பார்ப்பதற்கும் உள்ளூர் பிரமுகர்கள் கூடியசபை ஒன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது 7-வயது முதல் 11-வயது வரையிலுள்ள பிள்ளைகளெல்லாம் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து கல்வி கற்க வேண்டுமென்றும் அவ்வயதிற் குட்பட்ட பிள்ளைகளை ஒருவரும் வேலையில் வைத்துக் கொள்ளக்கூடாதென்றும் சட்டம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது நோயினால் பீடிக்கப்பட்ட பிள்ளைகளையும் அல்லது குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகளையும் கட்டாயப்படிப்பினின்றும் நீக்குவதற்கு சமஸ்தானத்திற்கே அதிகாரமுளது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பத்தவறினால் 2 ரூபாய் முதல் 10 ரூபாய் வரையில் அபராதம் விதிக்கப்படுமென்றும் அக்குழந்தைகளை வேலையில் அமர்த்திக் கொண்டவர்களுக்கு 20 ரூபாய் அபராதம் விதிக்கப்படுமென்றும் சட்டம் ஏற்படுத்தப்பட்டது.

### மதுரையில் நெசவுத் தொழில்.

மதுரையில் நெசவுத்தொழில் நடந்துவரும் தறிகள் 6562 உண்டு. புருஷர்களுக்கு உபயோகப்படும் பருத்திநூல் வஸ்திரங்கள் 3655-தறிகளில் செய்யப்படுகின்றன. ஸ்திரீகளுக்கு உபயோகப்படும் சாயம்போட்ட நூல் புடவைகள் 2608-தறிகளில் செய்யப்படுகின்றன. பட்டு வஸ்திரங்கள் 299-தறிகளில் செய்யப்படுகின்றன. அவைகளில் 91-தறிகளில் பல நிறமுள்ள விலையுயர்ந்த புடவைகள் செய்யப்படுகின்றன. மதுரையில் சுங்கடி புடவை என்ற ஒருவித புடவை செய்யப்படுகின்றது.



திண்டுக்கல்லில் செய்யப்படும் தலைப்பாகைகள் பிரசித்தமானவை. அவைகள், 120-வது நம்பர் நூல் முதல் 160-வது நூல் வரையிலும் உள்ள உயர்ந்த நூலால் செய்யப்படுகின்றன. அவைகளுக்கு தங்கச் சரிகைகள் கட்டிருக்கும். இக்காலத்தில் இவ்வித தலைப்பாகைகள் திண்டிக்கல்லிலல்லாமல் சென்னை ராஜதானியைச் சேர்ந்த வேறெந்த ஜில்லாக்களிலும் செய்யப்படுகிறதில்லை. இவ்வித தலைப்பாகைகளுக்கு பலவிடங்களிலிருந்து கிராக்கி வந்துகொண்டிருக்கின்றது. திண்டுக்கல்லில் நெசவுத் தொழிலை நடத்திவரும் 700-தறிகளில் 6-ரூபாய் முதல் 10-ரூபாய் வரையிலும் விலை மதிப்புள்ள தலைப்பாகைகள் 418-தறிகளில் செய்யப்படுகின்றன.

### நாயர் ஸமாஜத்தின் 10-வது கான்பரன்ஸ்

நாயர் ஸமாஜம் திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் சென்ற 10-வருஷகாலமாக இருந்துகொண்டு நல்ல வேலையைச்செய்து வந்திருக்கிறது. அதன் 10-வது கான்பரன்ஸில் சென்னை இந்தியன் பேட்ரியாட் பத்திராதிபர் திவான்பகதூர் வி. கருணாகர மேனன் அக்கிராஸனம் வகித்து கிரமபவும் நிதானத்துடனும் விமரிசையாகவும் நடத்தினர். நாயர் ஸமூகம் கண்மூடித்தனமான பழய வழக்கங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் ஸமூகமாய் இருக்கிறவரை முற்போக்கடைவது கஷ்டமென்றும் பழய வழக்கங்களை யொழித்துப் புதியதை ஏற்கவேண்டுமென்றும், ஜனங்களுடைய ஆசாரங்கள் பொதுஜன அபிப்பிராயத்தை அநுசரித்துத் திருத்தப்பட வேண்டுமேயல்லாது, ஜன அபிப்பிராயத்துக்கு விரோதமாகச் சட்டம் செய்து ஆசாரங்களைத்திருத்தமுயலுவது சரியல்லவென்றும், எல்லோரையும் கட்டுப்படுத்தக் கூடிய சட்டம் ஜனாசார விஷயத்தில் விரும்பத்தக்கதல்லவென்றும் நற்போதம் புரிந்தார். வியாபாரம், கைத்தொழில் இவற்றிலெல்லாம் சிரத்தைகொண்டு முற்படவேண்டுமென்று வற்புறுத்தினர். தற்காலம் முன்னேற்றமடைந்துவரும் வகுப்பாரில் நாயர் ஸமூகத்தாரும் ஒருவராவர்.

***

### விவசாயக்கொத்து.

தென்னிந்தியாவில் ஏறக்குறைய 794000 ஏக்கர் பூமி தென்னைச்சாகுபடி செய்யப்படுகிறது. அதில் 100-க்கு 81-பங்கு மலையாளம் ஜில்லாவும் தென்கன்னடம் ஜில்லாவும் அடங்கியுள்ள மேல்கரையிலேயே ஏராளமாகப் பயிராகின்றது. சென்னை மாகாணத் துறைமுகங்களிலிருந்து 1913-14-ம் வருஷத்தோடு முடிந்த 5-வருஷங்களில் ஏற்றுமதியாயிருக்கும் தேங்காய்களின் விலைமதிப்பு 224-3/5-லட்சம் ரூபாயாகிறது. தென்கன்னடம் ஜில்லா காஸர்கோட் தாலுகாவில் 3-தென்னை சாகுபடி சோதனை ஸ்தலங்களை ஏற்படுத்தக் கவர்ன்மெண்டார் முயன்று 4000-ரூபா அதற்காக எடுத்து வைத்திருக்கிறார்கள்.

ஹைஸிந்து என்னும் பூண்டு தடாகங்களிலும் நீரோட்டங்களிலும் வளர்ந்து கப்பல் போக்குவரத்துக்கு இடைஞ்சலையுண்டு பண்ணி வருவதனால் இப்பூண்டைத் தொலைப்பதற்கு வழிதேடிக்கொண்டிருக்கிறார்கள். இச்செடியின் வர்க்கங்களை சாஸ்திரரீதியில் பிரித்துப்பரீக்ஷைசெய்து பார்த்ததில இச்செடியில் மாஉப்பு மிகுந்திருப்பதாகக்கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வருஷத்தில் டக்கா விவசாயப்பண்ணையில் இப்பூண்டு எருவாக உபயோகப்படுத்தப்பட்டு, காரியம் கைகூடி வந்தால், பூண்டை விவசாய உலகம் எருவாக உபயோகிப்பதனால், இந்த ராக்ஷஸப்பூண்டின் வளர்ச்சி சீக்கிரம் குறைவதாகும்.

### வெல்லம் காய்ச்சுதல்.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்றபடி நம் தேசத்துக் கைத்தொழிற்காரர்களெல்லாரும் அந்நிய தேசத்து மலிவான சரக்குகளின் வருகையினால் விருத்தியடையாமலிருந்த தொழில்களை இப்பொழுதே

சரிவர நடத்தி முன்னுக்குக் கொண்டுவர வேண்டியது அவசியமாகும். ஜெர்மனி ஆஸ்டிரியா முதலிய இடங்களிலிருந்து வந்து கொண்டிருந்த சரக்குகள் நின்றுபோய் விட்டபோதிலும் அவைகளுக்குத் தேவை குறையில்லையாகையால். அவைகளை இவ்விடத்திலேயே செய்து கொள்வதற்குத் தகுந்த முயற்சி எடுத்துக்கொண்டால் மிகுந்த பிரயோஜனமுண்டு.

முக்கியமாய் சர்க்கரை வியாபாரம் அதிகவிருத்தி யடையக்கூடியதா யிருக்கிறது. ஐரோப்பிய சீனியைப்போல்மிகவும் வெள்ளையான சர்க்கரை தற்காலம் செய்ய முடியாவிட்டாலும், இப்பொழுது நடந்துவரும் வெல்லம் காய்ச்சுதல், பழுப்பு சர்க்கரை காய்ச்சுதல் இவைகளில் இருக்கும் குறைகளை நீக்கிசரிவர நடத்தினால் ஏராளமான விற்பனையும் ஆகும் ஜனங்களுக்கும் பண்டம் கிடைத்துக்கொண்டு மிருக்கும்.

மேற்சொன்ன குறைகளில்முக்கியமாய் இரண்டு உள்ளன அவை சரியான எருப்போட்டு கரும்புசாகுபடி செய்யாமையும், ஆலையாட்டும் பொழுது எருதுகளினால் இழுக்கப்படும் ஆலைகளை உபயோகப்படுத்தி மிகுந்த காலதாமதமாவதும், சேதாரமாவதுந்தான். "நேஷன்" என்னும் பத்திரிகையில் ஆல்பர்டு சாட்டர்டன் என்பவர் புதுமாதிரியான இயந்திரங்களைக் கொண்டு சாறுபிழிவதினால் செலவு குறைகிறதென்றும், அதிகலாபம் கிடைக்கிறதென்றும் எழுதுகிறார். மேலும் மற்ற தேசங்களில் 100-க்கு 90பங்கு சாற்றைப் பிழிந்து எடுத்து விடுகிறார்கள். நம் தேசத்தில் 100-க்கு 60பங்குதான் எடுக்கப்படுகிறது.

எருதுகளினால் இழுக்கப்படும் இயந்திரங்களை உபயோகப்படுத்தினால் ஒரு தினத்திற்கு ஒரு டன் எடையுள்ள கரும்புதான் பிழிய முடியுமானதினால் ஒரு ஏகராவில் விளையக்கூடிய சுமார் 20 டன் கரும்பைப் பிழிவதற்கு ஒருமாதமாகிறது. புதுமாதிரி இயந்திரங்களை உபயோகித்தால் அதிக சீக்கிரத்தில் பிழிந்துவிடுவதல்லாமல் சேதாரமும் ஆவதில்லை. இவ்வியந்திரத்தில் இரண்டு மாதிரியுண்டு, ஒன்றினால் ஒரு தினத்திற்கு அதாவது 24-மணி நேரத்தில் 8-டன் எடையுள்ள கரும்பைப் பிழியலாம். மற்றொன்றினால் ஒருமணிக்கு ஒரு டன் எடையுள்ள கரும்பைப் பிழியலாம். மேலும் முதலாவது 40ஏக்ரா சாகுபடியைப் பிழிவதற்கும், இரண்டாவது 100-முதல் 120 ஏகரா சாகுபடியைப்பிழிவதற்கும் உபயோகப்படுத்தலாம். கட்டிடச் செலவுபோக மற்ற செலவுக்கு 2500 ரூபாயில் முதல் இயந்திரம்வைத்து வேலை செய்யலாமென்றும்,இரண்டாவது 10000 ரூபாயில் வைத்து வேலை செய்யலாமென்றும் தெரிகிறது. இவைகளைப் பல விடங்களில் நம் இராஜதானியிலும் மைசூரிலும் வைத்துப் பார்த்ததில் அதிக பிரயோஜனமுள்ளதாகவே இருப்பதாகத் தெரிகிறது. இதனால் வெல்லம் காய்ச்சுதலின் செலவில்100-க்கு 60-பங்கு குறைகிறது. வெல்லமும் 100-க்கு 15 பங்கு ஜாஸ்தியாய்க் கிடைக்கிறது. விற்பனையிலும் 100-க்கு 23-பங்கு அதிகலாபம் கிடைக்கிறது. ஆகையினால் நம் தேசத்தில் கரும்பு சாகுபடிக்காரர்கள் இவ் வியந்திரங்களை வாங்கி உபயோகப்படுத்திப் பலனடைய வேண்டுமென்பது நமது கோரிக்கை.

தவிர கரும்புசாகுபடி செய்வதில் பிண்ணாக்குத்தான் சரியான எருவென்று மிஸ்டர் சாட்டர்ட்டன் என்பவர் சொல்லுகிறார். இப்பொழுது ஆமணக்கு வெளிநாடுகளுக்குப் போவதில்லையாகையால், பிண்ணாக்கும் மலிவாய்க் கிடைக்கும். மண்ணினால் செய்த அடுப்பும் கூடாதென்று சொல்லுகிறார்.

இது விஷயத்தில் கவர்ன்மெண்டார் தகுந்த உதவிசெய்து தொழிலை விருத்தி செய்ய வேண்டியது அவசியமாயிருப்பினும் ஜனங்களும் தங்களால் கூடியமட்டில் முயற்சி செய்தல் மிகுந்த நலமாயிருக்கும். இப்பொழுதைவிட நல்ல தருணம் இனிக் கிடைக்காது.

க—ன்.



# ஆயுர்வேத சாரம்.

### கஸகஸா.

கஸகஸாத்தோலைச் சிதைத்து ஜலத்தில் போட்டுக் காய்ச்சி அநேகம் காரணங்களால் உண்டாகும் வீக்கங்களுக்கும், எரிபுண்களுக்கும், சுளுக்குகளுக்கும், மற்றும் வேதனையைத் தரும் நோய்களுக்கும் ஒற்றடம் கொடுப்பது மிகவும் ஹிதமாயிருக்கும், அல்லது கலிகம்போல ஜலம்விட்டு இதை அரைத்து வதக்கி வஸ்திரத்திற் கட்டியும் மேற்கூறிய நோய்களில் ஒற்றடங் கொடுப்பதுண்டு:—வை-தி.

***

பொடி மட்டைக்குள் நார்த்தங்காய்ச் செடியின் இலையை வைத்துக்கொண்டால் சுகந்த மூக்குத்தூளைவிட அதிகமணமாயிருக்கும.

***

ஒரு ரூபா எடை அபின், ஒருபடி நல்லெண்ணெய், ஒருபடி புளியிலைச்சாறு ஒரு சிறு கரண்டி மோர், மூன்றையும் கலந்து நன்றாகக் காய்ச்சி ஈயம் அல்லது பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்க. வாரத்திற்கு இருமுறை ஸ்நானம் செய்க. அன்று புளிக்குழம்பு பகல்தூக்கம் ஆகாது. நேத்திர ரோகத்துக்கு அநுபவ சிகிச்சை.

***

தலை நோய்க்கு மருந்து அச்சமயமில்லாவிட்டால் நெய்யைத் தடவுக. விளக்கெண்ணெய்த்தான் எல்லா எரிச்சலுக்கும் கைகண்ட ராஜா!.

***

### வல்லாரை.—

கண்டரோகம், ரத்தக்குறைவினால் உண்டாகிற-கடுப்பு, மலக்கழிச்சல், உடம்பெரிவு மேகம், உள்மூலம், குஷ்டம் புண், மேகப்படைகள் இவைகளுக்கு இதன் இலையை நிழலிலுலர்த்தி 5-க்ரெய்ன் வீதம், நாள் மூன்று முறை கொடுத்துவரின் ஸுகமுண்டாம். இதில் வெளிறல்நிறமும் கைப்புங் காரப்புமுடைய தைலஸத்துண்டு. இது வெயிலில் வைத்தால் கெட்டுப்போகும். இலைச்சூரணத்தை புண்ணில் தூவினாலும் அல்லது பச்சையிலையைத் துவைத்துத் தண்ணீர்விட்டு இளக்கிவைத்து கட்டினாலும் புண்கள் மாறும். மேகப்படைகளுக்கு உள்ளுக்கும் வெளிக்கும் பிரயோகிக்கலாம். குஷ்டம் சருமநோய் இவைகளுக்குத் தக்க பூச்சுமருந்து. உள்ளுக்குக் கொடுத்துச் சில நாளின் பின் தேகமுழுதுஞ் சொறிகண்டால், மருந்தை நிறுத்திப் பேதிக்குக்கொடுத்து ஒரு கிழமை சென்றபின் மறுபடி கொடுக்கலாம்.

***

### காலரா.

ஒருவருக்குக் காலரா கண்டு, வைத்யர் வருவதற்கு நேரமாகுமானால் க்ளோரோடைன் மருந்தை முழுடோஸ் அளவில் சாப்பிடவேண்டும். கடுகை அரைத்து அடிவயிற்றில் பற்றுப் போடவேண்டும். காய்ந்த கடுகையாவது சுக்கையாவது பொடி செய்து அதைக் கொண்டு காலரா கண்டவருடைய கைகால்களில் நன்றாய்த் தேய்க்கவேண்டும். நோயாளிக்குக் குடிப்பதற்கு ஜலம்கொடுக்கக்கூடாது. ஆனால் பனிக்கட்டியை அவருடைய வாயில் வேண்டும்போது சிறிது நேரம் வைக்கலாம். காலரா கண்ட வீட்டிலுள்ள மற்றவர்கள் தடவைக்கு ஒரு வைன் க்ளாஸ் சுத்த ஜலத்தில் கந்தகத்ராவகமாவது (Sulphuric acid) ஹைட்ரோ க்ளோரிக் ஆஸிடாவது (Hydrochloric acid) பத்துத் துளிகள் வீதம் விட்டு தினம் மூன்று தடவை உள்ளுக்குச் சாப்பிடவேண்டும். இப்படி த்ராவகங்கள் சாப்பிடுவது வியாதி வராமல் தடுப்பதற்கேற்ற நல்ல முறையாகும். காலரா க்ருமிகள் புளிப்பான ஆகாரத்தில் ஜீவித்திருக்க மாட்டா ஆதலால் காலராக் காலத்தில் எலுமிச்சம்பழ ரஸம் ரொம்ப ஜாஸ்தியாக உள்ளுக்குச் சாப்பிடுவது மிகவும் நல்லது.

### காலரா வியாதியின் சிகிச்சை.

பம்பாய் கவர்மெண்டார் அடியிற்கண்ட அறிக்கையைப் பிரசுரம் செய்திருக்கிறார்கள்:—

எவ்விடத்திலேனும் காலரா வியாதியானது தலைகாட்டினவுடன் அங்குள்ள ஜலவசதிகளெல்லாம் 'பர்மாங்கனேட் ஆப் பொடாஷ்' என்ற ஒரு வகை மருந்தைக் கொண்டு சுத்தம்செய்யப்படுகின்றன. அம்மருந்தானது ஜலவசதிகளில் உலாவும் காலரா புழுக்களை அழித்து காலரா வியாதியை பரவவொட்டாமல் தடுக்கின்றன. இதைக்கண்டு சில ஆராய்ச்சிக்காரர்கள், பர்மாங்கனேட் (Permanganate of Potash), என்ற மருந்தானது தண்ணீரிலுள்ள காலராப் புழுக்களை அழித்து அவ்வியாதியைப் பரவவொட்டாமல் தடுத்து வருகையில் அவ்வியாதியால் அவஸ்தைப்படும் ஒரு பிணியாளியை ஏன் சொஸ்தப்படுத்தாது எனக் கேட்கத்தலைப்பட்டனர். கடைசியாக அம்மருந்தை சரியான மார்க்கத்தில் காலரா வியாதியஸ்தர்களுக்கு உபயோகப்படுத்தினால் அதனால் நன்மையுண்டாகுமென ரூபிக்கப்பட்டது. ஆகையினால் சுகாதார கமிஷனரானவர் மேற்படி மருந்தைக் குளிகைகளாகச் சேகரித்து வைக்கவேண்டுமெனச் சமீபத்தில் சிபார்சு செய்தார், தவிர தற்போது க்வினைன் (Quinine) எவ்வாறு பொதுஜனங்களிடத்தில் பரவச் செய்யப்பட்டிருக்கிறதோ அவ்வாறு அந்தக் குளிகைகளும் மேற்படி வியாதியுள்ள எல்லாவிடங்களிலும் பரவச் செய்யவேண்டுமென்றும் காலரா வியாதியின் குறிகளும் தோற்றங்களும் கண்ட தக்ஷணமே அக்குளிகையை வியாதியஸ்தர்களுக்குப் பிரயோகிக்க வேண்டுமெனவும் சிபார்சு செய்திருக்கிறார். கவர்ன்மெண்டார் ஷை சானிடரி இன்ஸ்பெக்டர் செய்தசிபார்சை அங்கீகரித்து பிரதி ஜில்லாக்களிலுள்ள சிவில் ஸர்ஜன்களும் டிப்டி சானிடரி கமிஷனர்களும பர்மாங்கனேட் என்ற மருந்தை வேண்டியவளவு சேகரித்து வைத்து அதை 12 குளிகைகளாகச் செய்து அவ்வுத்தியோகஸ்தர்கள் காலரா வியாதி பரவியிருக்கும் கிராமங்களில் அதை இலவசமாகக் கொடுக்கும்படி சானிடரி இன்ஸ்பெக்டர்களுக்கு சப்ளை செய்யவேண்டுமென உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

## தொழிற் குறிப்புகள்

[இந்தத் தலைப்பின்கீழ் மநு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞ வகுப்பினர் தொழிற்குரிய அரிய விஷயங்களையும், அவற்றின் கைபாகம் செய்பாகமென்ற முறைகளையும் கூறப்பட்டிருக்கிறது. இவற்றுள் நிகழும் சந்தேகங்களைச் சுருக்கமாகத் தங்கள் பெயர் விலாசத்துடன் இப்பத்திரிகைக்கு எழுதிக்கொண்டால் விடையளிக்கப்படும். இவற்றை அநுமதி பெற்றே மற்றவர் பிரசுரிக்கவேண்டும்.]

### பொத்தான் செய்யும் சேர்மானம்.

5-பாகம் செம்பு, 3-பாகம் நாகம், 10-பாகம் வெள்ளீயம், 32-பாகம் பித்தளை இவற்றை முறையே உருக்கி கட்டி விட்டு தகடாக்கி வேண்டிய அச்சுகளில் பொத்தான் செய்து கொள்ளவும்.

* * *

### தங்கமைப் பொடி.

சயனைட் கெந்தகமும், வெள்ளீய பஸ்பத்தையும் (Oxide of Tin) குகையில் வைத்து உருக்கும்போது கண்ணாடி கோலால் துழாவவும், தங்கக்கட்டி போலாகிவிடும். பிறகு கல்வத்தில் பொடித்து தண்ணீரில் கரைத்துக் கொண்டு எழுதுகோலால் எடுத்து எழுதவும்.

### மாட்டுக்கொம்பு பொத்தான்களை முத்துபோலாக்குதல்.

தண்ணீரில் போதுமான அளவு காரீய பஸ்பத்தை (Lead Accetate) கரைத்து அதில் பொத்தான்களைப்போட்டுக் கொதிக்கவிடவும். பிறகு தண்ணீர்கலந்த முராட்டிக் ஆசிட்டில் போடவும் வெண்மையானதும் எடுத்து உலர்த்தி, பிறகு சுத்த ஜலத்தில் அலம்பவும்.

* * *

### மடியாத பழயமுத்துக்களைப்புதுப்பித்தல்.

கிரீம் ஆப்டார்டார் அல்லது பைடார்டிரேட் ஆப் பொட்டாஷ், படிகாரம், தவிடு கலந்து கொதித்த சொற்பச்சூடான ஜலத்தில் ஊறவைக்கவும் தண்ணீர் குளிரும் வரையில் மெதுவாகத் தேய்க்கவும். பிறகு வெதுவெதுப்பான தண்ணீரில் அலம்பி இருட்டானவிடத்தில ஒருவெள்ளைக் காகிதத்தின் மேல் பரப்பி உலர்விடவும். ஒயிட்டிங்கை ஆலிவிதை எண்ணெய் விட்டுப் பிசைந்து பிறகு சிலதுளி சலப்பூரிக் ஆசிட் விட பசைபோலாகும். இந்தப் பசையை ஒரு மகமல் துண்டில் தடவிக்கொண்டு முத்துக்களைத் துடைத்து சுத்த ஜலத்தில் அலம்பி உலர்விடவும். இப்போது புதிய முத்துக்களைப்போல் பிரகாசிக்கும்.

* * *

### கண்ணாடி பீங்கான் ஒட்டும்பசை.

1. ஐசிங்கிளாஸ்ஸை சுத்தமான அசட்டிக் ஆசிட்டில் கரைத்துகொண்டு ஒட்டவும்.

2. வச்சிரபசையில் ஈயசெந்தூரத்தைக் கலந்து ஒட்டவும்.

* * *

### முத்து, தந்தம் ஒட்டும்பசை.

ஒருபாகம் ஐசிங்கிளாஸ் 2-பாகம் வச்சிரம், 30-பாகம் தண்ணீரில் கரைத்து 6-பாகமாக சுண்டக்காய்ச்சிக் கொண்டு, 1/30-பாகம் கம்மாஸ்டிக், ½-பாகம் ஸ்பிரிட்டு, 1-பாகம் முத்து வெள்ளை சேர்த்து வைத்துக் கொள்ளவும். பிறகு இதனை வேண்டும்போது சூடேற்றி குலுக்கி, உடைந்த பாகங்களையும் சூடேற்றிக் கொண்டு தடவ ஒட்டிக்கொள்ளும்.

* * *

### பூட்ஸ் பாலிஷ்.

உரித்த ஆரஞ்சு பழத்தோலை மேல்புரமாக எடுத்து கறுப்பு, ப்ரவுன் பூட்ஸ்மேல் அதின் ரசம்படும்படி தேய்த்து பிரஷ் அடிக்க அந்தப் பூட்ஸ் பாலிஷ் போட்டதுபோல் அழகாய்ப் பிரகாசிக்கும்.

* * *

### தாளித்தச் சுண்ணாம்பின் உஷ்ணம்.

சுண்ணாம்புக் கல்லைத்தாளிக்கும்போது மிகவும் சூடு உண்டாகிறது. மிகத் தாழ்ந்தசுண்ணாம்புக்கல்லைத் தாளிக்கும்போது ஸெண்டிக்ரேடு தெர்மாமிடர் படி 300-டிக்ரி உஷ்ணம் உண்டாகிறது. அதாவது ஜலம் கொதிக்கும்போது என்ன உஷ்ணம் ஏற்படுமோ அதைப்போல் 3-மடங்கு உஷ்ணம் ஏற்படும். உயர்ந்த சுண்ணாம்புக் கல்லைத் தாளிக்கும்போது ஸெண்டிக்ரேட் தெர்மாமிட்டர் படி 400-டிக்ரி சூடு ஏற்படும். இந்தச் சூட்டினால் மரங்கள் வெந்து கரிபாகி விடுமாதலால், சுண்ணாம்புக் கற்களை கப்பல், படகுகள் மூலமாக, மரத்தினால் செய்த பீப்பாய்களில் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு அனுப்புவது நல்லதல்லவாம். ஜ—னி.

* * *

## பலகுறிப்புகள்.

ஓர் பத்திரிகை செவ்வனே நடைபெறுவதற்கு சந்தாதாரர்களின்முழு அபிமானம் அத்தியாவசியமாக இருக்கின்றது. சந்தா விஷயமாக அடிக்கடி சந்தாதாரர்களுக்கு ஞாபகமூட்டியும் தங்கள்சந்தாபாக்கியைச் சரியான காலத்தில் செலுத்தாமையே நமது பத்திரிகை காலதாமதமாக வெளியாவதற்கு முக்கிய காரணமாயிற்று. ஒரிருவர் தங்கள் சந்தாவைக் கிரமமாகச் செலுத்தி விடுவதினால் மட்டுமே இப்பத்திரிகை போன்ற பெரிய விஷயங்கள் தடைபடாமற் போகமாட்டா. யுத்தகாரணமாக நமது பத்திரிகையின் அளவிற்கேற்ப அச்சிடும்

கடிதம் அகப்படாமையும் நம் பத்திரிகை காலதாமதமாக வெளிவருவதற்கு மற்றொரு காரணமாகும். இனி நாம் கேளாமலும், அடிக்கடி ஞாபகப்படுத்தாமலும் நம் நேயர்கள் தங்கள் சந்தாதொகையை அனுப்பிவிடுவார்களென்றும், காலதாமதமாக வெளிவரும் இச்சஞ்சிகையை அங்கீகரிப்பார்களென்றும் நம்புகிறோம்.

***

பல நேயர்களின் வேண்டுகோளின்படி இச்சஞ்சிகையில், இரண்டாவது விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸில் நடந்தேறிய முக்கிய விஷயங்களைத் தொகுத்திருக்கிறோம். அவைகள் நமது வாசகர்களுக்கு திருப்தியுண்டாக்குமென நம்புகிறோம்.

***

தஞ்சை ஜாதியகான்பரன்ஸ் முன்னிலையில் வாசிக்கப்பட்ட பல வியாசங்கள் இச்சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பிரசுரிப்பதற்கு நம்மை வேண்டிய கான்பரன்ஸ் சென்டரல் கமிட்டியாருக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்.

***

ஜாதீய கான்பரன்ஸ், நூதன கைத்தொழில் முயற்சி முதலிய குலோத்தாரண பெருமுயற்சிகள் வாய்ப்பேச்சளவில் நிறைவேறுவதேயின்றும். தகுந்தபோர் மூலதனம் விரைவில் சேர்க்கதக்கப் பிரயத்தனம் சென்ட்ரல் கமிட்டியாரால் மேற்கொள்ளப்படாவிடில், கான்பரன்ஸின் பெருந்த நோக்கங்கள் நிறைவேறமாட்டா. ஆகையின் குலாபிமானிகள் ஆங்காங்கு தாங்கள் மூலதனம் சேகரிக்க உதவுவார்களென நம்புகிறோம்.

***

திருச்சி, தஞ்சை முதலிய ஊர்களில் கான்பரன்ஸ் சென்ட்ரல் கமிட்டியின் கிளைச்சபைகளேற்பட்டிருப்பது போலவே சென்னையில் ஓர் சபை விரைவில் ஏற்படுமென்று, தெரிந்து மிக்க மகிழ்கின்றோம். தக்க கனவான்களும், உண்மையான குலாபிமானிகளும், சுபநல மறுப்பாளிகளும், தற்புகழ்ச்சி யற்றவர்களுமான கனவான்கள் இக்கமிட்டியின் பலஉத்தியோகங்களை வகிப்பார்களாதலால் இச்சபை சென்னைவாசிகளான நம் சுஜாதியாரின் பேரபிமானத்தை நிச்சயமாகப் பெறுமென்பது ஒருதலை.

***

திருச்சியில் அடுத்த வருடம் கூடும் 3-வது ஜாதீய கான்பரன்ஸை யொட்டி சிற்பசித்திர தொழிற் பொருட்காட்சி யொன்று ஏற்படுத்த சென்ட்ரல் கமிட்டியார் தீர்மானித்திருக்கிறார்களெனக் கேட்டுப் பெரிதும் சந்தோஷிக்கிறோம். கைத்தொழிலாளர்கள் முயன்றால் அப்பொருட்காட்சிமற்றவர்கள் காட்சிகளைவிடச் சிறந்து விளங்கும். அக்காட்சியில் 20-தங்கமெடல்களும், 50-வெள்ளி மெடல்களும், 75-செம்பு மெடல்களும் 100-சர்டிபிகேட்டுகளும் பரிசளிக்கப்படுமாம். இப்பரிசுகள் சம்பந்தமாகவும், பொருட்காட்சி சம்பந்தமான செலவுகளைக் குறித்தும், (தென் ஆப்ரிகா) நெட்டால், டர்பன் முதலிய ஊர்களில் வசிக்கும் குலாபிமானச் செல்வரான நம் சுஜாதியாரின் ஒத்தாசையைக் கோரிக் கொள்வதென கமிட்டியார் தீர்மானித்திருப்பதாக அறிகிறோம்.

***

நமது பத்திரிகையின் அபிவிர்த்தியைக் கோரி பத்து புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கும் புண்ணிய சீலர்களுக்குத் தக்க கமிஷன்கொடுக்க நிச்சயித்திருக்கிறோம்.

***

நமது மதிப்புரையைநாடி நமதுபார்வைக்கு அனுப்பப்பட்டுள்ள பல புத்தகங்களைப் பற்றியும், பத்திரிகைகளைப் பற்றியும் நமது அபிப்பிராயங்களை மறுமுறை வெளியிடுவோம்.

***



### ஓர் உபந்நியாசம்.

நமதுகுல சிகாமணியாகிய வித்வான் பிரம்மஸ்ரீ ஆ. நோ. செல்லக்குட்டியாச்சாரியார் அவர்கள் நமது சபைக்கு விஜயஞ்செய்திருந்து 1916ஹூ ஜூலைமீ 1உ சனிவாரம் இரவு 8-மணிக்குமேல் விஸ்வகர்ம பக்தோபாக்கியானத்தில் சாமளசர்மாவின் திவ்யசரித்திரத்தை வெகுவிமரிசையாகப் பிரசங்கஞ்செய்து முடித்தனர். விஸ்வகர்ம பக்தோபாக்யானத்தில் இவ்விதசரித்திரங்கள் பனிரெண்டு இருக்கின்றபடியால் நம்மவர்கள் அடிக்கடி அச்சரித்திரங்களை இவர்போன்ற வித்வசிகாமணிகளைக் கொண்டு பிரசங்கஞ்செய்வித்து அதைக்கேட்டு பகவத் கிருதார்த்தர்களாகும்படிக்குக் கோரப்படுகிறது.

ஷை பக்தோபாக்கியானம் அச்சிட்டு தயாராகவிருக்கிறது இதன் விலை ரூபா ஒன்று.

***

இவ்வள்ளலார் பிரசங்கத்தன்று இவ்விடம் விஜயஞ் செய்திருந்த சந்தையூர் சமஸ்தான வித்வான் பிரம்மஸ்ரீ குமாரஸ்வாமி கவிராயரவர்கள் குமாரர் மல்லயஸ்வாமி ஆச்சாரியாரவர்கள் ஷையார் பிரசங்கத்தைக் கேட்டுப் புகழ்ந்து,

இயற்றிய வெண்பா.

கனியுங் கனியுங் கற்கண்டுங் கற்கண்டு
மினியவெல்லம் வெல்ல மெனுமே—தனிவாத
தங்கச்செல் லக்குட்டிச் சுந்தரனார் சொல்லுபிர
சங்கத்தைக் கேட்டுணர்ந்தே தான்.

***

### விஸ்வகர்ம புத்தகசாலை.

நமது விஸ்வகர்ம புத்தகசாலையை விசாலித்து ஏராளமான நமது சொந்தபுத்தகங்களுடன் வேண்டிய எல்லாப் புத்தகங்களும் கமிஷனுக்கு வாங்கிவைத்திருக்கிறோம். வேண்டிய புத்தகங்களுக்கு உடனே எழுதுங்கள் வி. பி. யில் தவக்கமின்றி உடனுக்குடன் அனுப்புகிறோம். தயவு செய்து தங்களுக்கு வேண்டியவரனைவருக்கும் தெரிவித்து எமது புத்தகசாலையின் அபிவிர்த்திக்குப் பாடுபடப் பிரார்த்திக்கின்றோம். புத்தகசாலையின் வி. பி. வியாபாரத்திற்காகவும், ரொக்கவியாபாரத்திற்காகவும் சென்னைச் சிந்தாதிரிப்பேட்டை ஐயாமுதலி வீதி (மார்க்கட்டுக் கடுத்த டிராம்வேரோட்டில் ஒரு புத்தக நிலயம் (புக்ஷாப்) ஏற்படுத்தியிருக்கிறோம்.)

### புதுவை கலைமகள் கழகத்தின் 5-வது வருடோச்சவக் கொண்டாட்டம்.

மேற்கண்ட வருடோச்சவங் குறித்து கழகத்தாரன்புகூர்ந்து விடுத்ததிரு முகத்துக்கிணங்கியான் சென்றிருந்து ஸ்ரீமத் பாலைய சுவாமிகள் மடாலயத்தில் கலைமகள் நிர்த்தனங்கண்டு களிக்கப்பெற்றேன். யாவும் மிக்க விமரிசையாகவே நிறைவேறின. வரவேற்பு உபசரணைகளும் மற்றும் அலங்காரங்களும் மகிழ்ச்சி விளைத்தன. 15—6—1916 முதல் முறையே 4-தினங்களும் அக்கிராசனாதிபதியாக திருக்கோயிலூராதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியசுவாமிகள் அவர்கள் வீற்றிருந்து மிக்கவிமரிசையுடன் சபையை நடத்தினதுடன் அதற்கடுத்த 19-6-1916 சோமவாரம் மாலையில் ஸ்ரீ எறிபத்த நாயனார் சரித்திரப் பிரசங்கமும் தாமே செய்து மகிழ்வித்தனர். விழுப்புரம் வாகீச பக்தஜன சபையாரால் ஒவ்வொரு நாளும் தேவாரபடனம் இன்னிசையுடன் நடைபெற்றது. காரியதரிசி ஸ்ரீமாந் தி. திருப்புளிசாமிஐயர் அவர்கள்; அக்கிராசனாதிபதி யவர்கள்; கழகத்தின் உபஅக்கிராசனாதிபதியும் "கலைமகள்" பத்திராதிபருமான ஸ்ரீமாந் சி பங்காரு பத்தர் அவர்கள்;புலிசைஞானியார் மாணவர் கழக காரியதரிசி ஸ்ரீமாந் ம. ரா. குமாரசாமி பிள்ளையவர்கள், காரியதரிசியரான ஸ்ரீமாந் திருப்புளிசாமி ஐயர் அவர்கள், சென்னை வெஸ்லி கல்லூரி-தமிழ் பண்டிதர், ஸ்ரீமாந் திரு. வி. கலியாணசுந்தரமுதலியாரவர்கள், சென்னை பண்டிதை கிருஷ்ணவேணியம்மையார் அவர்கள், புதுவை

ஸ்ரீமாந், ஏ. வி. முத்தைய முதலியாரவர்கள், சென்னை ஸ்ரீமாந். வல்லை ஷண்முகசுந்தர முதலியார் அவர்கள், அம்மனூர். ஸ்ரீமாந் சதாசிவம்பிள்ளை அவர்கள், திருவாரூர். கமலாசினி பத்திராதிபர் ஸ்ரீமாந் சதாசிவ ஞானியார் அவர்கள், சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்தரக் கல்விச்சாலை தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமாந் மணிமங்கலம். திருநாவுக்கரசு முதலியார் அவர்கள், சென்னை பாடசாலைகளின் ரிஜிஸ்டிராபீசு கிளார்க்கு ஸ்ரீமாந் எஸ். எஸ். சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், சென்னை வெஸ்லி கல்லூரி தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமாந் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள், சென்னை பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையார் அவர்கள், துறைசை ஞானசம்பந்த முதலியாரவர் அவர்கள், பிற கல்விமான்களும், முறையே வந்தனோபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுத்தலுடன் அறிக்கைப்பத்திரம் வாசித்தல், ஆரம்ப உபந்நியாசம், தெய்வ மிகமேல், தொண்டு செடி விஷயங்களை யொட்டிய ஆராய்ச்சியைக் குறித்து, அப்பூதியடிகள், உலகு, உயிர், கடவுள், பெண்மக்கள் கடைமை. விவேகமும், வைராக்கியமும், பற்று, செல்வம், புலை, திருவள்ளுவர், சுந்தரர் சரித நுணுக்கம், தமிழ் விருந்தோம்பல் வாழ்த்துக்கூறல் முதலிய விஷயங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு சொல்வன்மையுடன் உபந்நியாசங்கள் செய்து களித்து நம்மையும் களிப்பித்தனர்கள். கழகத்தின் அங்கத்தினரும் பிறரும் தனித்தனியே தங்கம் பொறுப்பாக ஏற்றுக்கொண்ட காரியங்களைப் பாராமரித்து நடத்தினமை பிறரும் கைக்கொள்ளற் பாலதாம். உபசாலை சங்கத்தலைவராகிய ஸ்ரீமாந். கிருந்தே சிவசங்கரசெட்டியார் இவர்கள் போஜனாதி சகல சௌகரியங்களும் நடத்தி மிக்க அன்போடு உபசரித்தமை அவர் புகழை நாம் கொண்டாடற் பாலதாமென்பதே.

***

## வர்த்தமானக் குறிப்புகள்.

### பெரிய மணி.

மலைக்கோட்டையின் உச்சியில் 5000 சேர் எடையுள்ள பெரிய மணியைக் கட்ட முயற்சித்து வீட்டுக்கு வீடுசென்று உடைந்த செம்பு பித்தளை பாத்திரங்களையும் பணத்தையும் பெற்று வருகிறார்கள். 4500-சேர் வரை இதுவரை சேர்ந்துளது.

### காகித கட்டடம்.

பிரான்ஸ் தேசத்தின் தலைநகராகிய பாரிஸ் பட்டணத்தில் ஒரு பிரபு நாலாயிரம் பவுன் செலவிட்டுக் காகிதத்தினால் ஒரு கட்டடம் கட்டி யிருக்கிறார். அதில் காகிதத்தைத் தவிர வேறுவிதமான சாமான்கள் சேர்க்கப்பட வில்லையாம்.

### டில்லியின் புது மாளிகை.

இந்தியாவின் முக்கியபட்டணமாகிய டில்லியில் கட்டப்போகும் நடுநாயக சிங்கார அரண்மனையின் சித்திர உருவம் இந்திய கவர்ன்மெண்டாரால் அங்கீகாரமாய் விட்டது. கவர்ன்மெண்டு ஹவுஸுக்கும் செகிரிடெரி கட்டடங்களுக்கும் நடுவில் வைஸ்ராயவர்களுடைய தகத்து ஸ்தாபித்திருக்கிறது. இந்தக் கட்டடத்திற்கு ஜெயப்பூர் மஹாராஜா இரண்டு லக்ஷம் ரூபாய் கொடுக்க முன் வந்திருக்கிறார். இந்த பெருந் தன்மையான கௌரவ நன்கொடையை இந்தியா கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டனர். இந்தக் கட்டடத்தைச் சித்திரித்தவர் மெஸ்ஸர்ஸ் லூட்டி யென்ஸ்பெக்கர் கம்பெனியார் இந்தக்கட்டடம் வட்டமானமேடையின்மேல் அடிப்படை சிவப்புக்கற்களாலியற்றி மேற்சுவர் வெள்ளைக் கற்களால் கட்டப்படும். கட்டடத்தின் ஸ்தம்பங்கள் குழல்போல் வட்ட வடிவமாக அமையும் கட்டடத்தின் அடித்தட்டு இந்து தேச சரித்திர சின்னங்களைக் குறிக்குமாறு சித்திரிக்கப்படும். உச்சியின் முடிவு இரண்டு கரங்களா லேந்தப்பட்ட ஒரு தாமரைமலரின் மத்தியிலெழும் ஐந்து கூறுகளுள்ள ஒரு இந்து தேசத்து நக்ஷத்திரம் எழும்விதமாய் அமையும்.

### ஐரோப்பாவிலுள்ள அரண்மனைக்கெல்லாம் பெரியது.

மாட்ரிட் பட்டணத்துக் கருகாமையிலுள்ள ஸ்பேன் தேசத்தரண்மனை உலகத்திலுள்ள மற்றவைகளைவிட மெத்தப்பெரிதாம், அதிலுள்ள சகல அறைகளுள் நுழைந்து பார்க்கவேணுமானால் நாலுநாள் செல்லுமாம் அதாவது 125-மைல் தூரத்தைப்போ லிருக்குமென கூறப்படுகின்றது.



ஸ்ரீமத் விராட் விஶ்வ ப்ரஹ்மணே நம:


# விஶ்வகர்ம குலோபகாரி.

மலர் - 3. { நளஹு ஆடிமீ ஆவணிமீ / 1916ஹு ஜூலைமீ ஆகஸ்டுமீ } இதழ் - 7.


OFFICE OF THE REGISTRAR OF ... 22 AUG 1916 MADRAS.

OFFICE OF THE REGISTRAR OF ... 22 AUG 1916 MADRAS.

## மெய்ஞ்ஞான தீபம்.

### ஆசாபாசம்.

ஆசைமிகுந்தோறும் துன்பமே மிகுதலால்; துன்பத்தை யொழிக்க முயல்வோர் ஆசையை யொழிக்க முயலல்வேண்டும். ஆசைப்பட்டபொருளுக்குத் தடைநேரும்போது கோபமுண்டாகின்றது; கோபத்தினால் கொடிய செயல்களைப் புரிதல் நேரிடுகின்றது. அதனால் ஓயாத கலக்கமுண்டாகின்றது; அதனால் செய்காரியமிது; தவிர்காரியமிது வென்று விளங்காமற் புத்திதடுமாற்ற மடைகின்றது. இத்தகைய கேட்டிற் கேதுவாகிய ஆசையை யொழித்தால் குரோதந்தானே யொழியும். ஆசையுண்டாகும்போதே அதனையொழிப்பதற்கேது, ஆசைப்படும் பொருள்களெவ்வொன்றும் துன்பத்தையே தருவதன்றி யின்பத்தை, உண்மையிற் றருவதில்லை என்னும் விசாரத்தினாலதனை யடக்கியாளவேணடும்.

***

காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதமென்னும் அறுபகையுள், காமமே மற்றயவற்றிற்கு மூலமாயிருத்தலால் காமத்தை யொழித்தவர் மற்றையவற்றைமிக வெளிதி லொழிப்பவராவர். காமம் என்பது ஆசை, அஃதிங்குப் பேராசையாம். ஒருவன் தனது வாழ்க்கை நடைபெறுதற் பொருட்டெவ்வளவு பொருள் வேண்டுமோ அவ்வளவு பொருளை மாத்திரம் விரும்புவது குற்றமாகாது. அளவிற்குமிஞ்சி விரும்புதலே குற்றமாம். ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமாக வேண்டியவை உண்டி, உடை, வீடுமுதலியனவாம். இவற்றுள் பசிப்பிணி நீங்க உணவும், பனி வெயில் முதலியவற்றாலுண்டாகும் குளிர் முதலிய பிணி நீங்க உடையும், உணவு சமைக்கவும், உடையினை வைக்கவும், களை தீரவும், உறங்கவும், வீடும் பிறவும் இன்றியமையாதனவாம்.

***

'வேட்கை விடுநெறிவேதாந்தம்.' அதாவது வேட்கைவிடுதற்குரிய மார்க்கத்தைப் போதிப்பது வேதாந்தமென்பது பெறப்படுகின்றது. வேட்கையை யொழித்தல் மகா அருமையானவித்தையாம். உண்மையான வேதாந்தியின் சரண் புகுந்தவர்க்கேயன்றி வேட்கையை விடும் வகை கிட்டுவதில்லையாம்.

***

### விஶ்வகர்ம சிற்ப சித்திரத் தொழிற் பொருட் காட்சி.

திருச்சியில் அடுத்தவருடம் ஏப்ரல்மீ கூடும் 3-வது விஶ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸை யொட்டி 'எக்ஸிபிஷன்' அல்லது பொருட்காட்சி யொன்று ஏற்பாடு செய்வதெனக் கான்பரன்ஸ் சென்ட்ரல் கமிட்டியார் உத்தேசங்கொண் டிருக்கிறார்களெனச் சென்றமாதப்பத்திரிகையில் வெளியிட்டிருந்தோம். இவ் விராஜதானியிலும், இந்தியாவின் பலபாகங்களிலும் எண்ணிறந்த பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வந்தாலும், கைத்தொழிலுக்குரிய ஓர் வகுப்

பினர் தாங்களே முயன்று தங்கள்கைவேலைகளையும், சாமர்த்தியங்களையும், பொதுஜனங்களறிந்து கொள்ளும்படிக்கு ஓர் பொருட்காட்சியை ஏற்படுத்துவது இதுவே முதல் கடமையாகும். அல்லாமலும் பல வருடங்களாக உறக்கம்கொண்டிருந்து யுத்தகாரணமாக வருவாயின்றி வாடுவதற்கு நூதனகைத்தொழில் முயற்சி யின்மையே முக்கியகாரணமெனக் கண்டுகொண்டு கண்விழித்திருக்கும் விஸ்வகர்ம வம்ஸத்தினரால் தற்காலம் பொருட் காட்சியொன்று ஏற்படுத்தப்படுவதும்அப்பொருட்காட்சியின் காரணமாக, நமது இந்திய கைத்தொழில்கள் தலையெடுத்து, நமது கைத்தொழில் வல்லோர்களின் வறுமை நீங்கிச் சுபிட்ச நிலைமையடைவதும், அந்நியதேச உற்பத்திச் சாமான்களை முற்றிலும் எதிர்பாராதநிலைமையைக் காலக்கிரமத்தில் பெறுவதும் காலங்கருதி மிக்க அத்தியாவசியகமெனக் கருதுகிறோம். ஆகவே இப்பொருட்காட்சியில் மிக்கநன்மை விளையுமென்றுநாம் நம்புவதுவீணாகமாட்டாது.

சிற்பம், சித்திரம், கைத்தொழில் இம்மூன்று விஷயங்களும் ஒன்றுக்கொன்று மிக்க அந்யோந்ய சம்பந்தம் பெற்றவைகளாக விருப்பதால் மேற்குறித்த பொருட்காட்சியில் இம்மூன்றுவித காட்சிப்பொருள்களும்வைக்கப்படுமெனஎண்ணுகிறோம். பூர்வீக சிற்பசாஸ்திரங்கள் தற்காலம் சிதைவுண்டிருப்பதால், அவைகளைப் பற்றி விவரம் தெரிந்துகொள்ள மேற்றிசையாரும் மிக்க ஆவல்கொண்டிருக்கின்றனர். உண்மையான இந்திய சிற்பசாஸ்திரங்கள் உளவோ எனப் பலரும் சந்தேகிக்கின்றனர். சுமார் 50 வருடங்களுக்குமுன் இந்திய சிற்பசாஸ்திர சம்பந்தமாக ஆங்கிலத்தில் எழுத முன்வந்த ராம் ராஜு என்னும் ஓர் இந்தியர் சிற்பசாஸ்திரங்கள் அநேகமாய்ச் சிதைவுண்டனவென்றும், இலேசில் அகப்படக்கூடிய இரண்டொரு சிற்பசாஸ்திரங்களின்தாத்பர்யங்களைத்தெரிந்து அறிவிக்கக்கூடிய சிற்பிகளில்லையென்றும், சமஸ்கிருதபாஷா ஞானத்தை பூர்வீகசிற்பிகளின் பரம்பரையெனத் தற்காலம் சொல்லிக்கொள்வோர் இழந்திருக்கிறார்களென்றும், அத்தகையோர் சிற்ப சாஸ்திரங்களில் சொல்லிய அளவு, ஆயுதம் முதலிய இலேசான விஷயங்களைக்கூட தெரிந்துகொள்வதற்கும், தெரிவிப்பதற்கும் அசக்தர்களாயிருந்து வருகிறார்களென்றும், ஆனால் அவர்கள் தங்களுக்கு எல்லாச் சிற்ப சாஸ்திரங்களும் வாய்ப்பாடமாக வருமென்று தற்பெருமைபாராட்டிப் பேசுவதற்கு அளவில்லையென்றும், அக்கால வியல்பை உள்ள வாறுணர்ந்து எடுத்துரைத்திருக்கின்றனர். ஐம்பதுவருஷங்களுக்குமுன்னே சிற்பசாஸ்திரஞானம் இவ்வாறிருந்ததென்றால் தற்காலஸ்திதியைப் பற்றிக் கேட்பானேன்? ஆகையால் இந்தியாவிற்கு எல்லாப்பெருமையையும் அளிக்க ஹேதுவாயிருந்த சிற்ப சாஸ்திரங்களைப்பற்றிக் கொஞ்சம் கவலையும், சிரத்தையும் எடுத்துக்கொள்வது இப் பொருட்காட்சியின் முதற்கடமையாகுமென எண்ணுகிறோம். பழைமையான சிற்ப சாஸ்திரங்களையும், சிற்ப சாஸ்திர சம்பந்தமான பழைய படங்களையும் வர்ணம் தீட்டிய சித்திரங்களையும் இக்காட்சிக்கு அனுப்புவோர்க்குத் தக்கபரிசுகள் கொடுக்கப்படவேண்டும். சிற்பசாஸ்திர ரீதியாக வரைந்துள்ள, விமான வாகனாதிகளின் படங்களும் இப்பகுதியில் வைக்கப்படலாம். பற்பல விக்கிரஹங்களின் ஒடிமான விசேஷங்களையும், அளவுகளையும் சித்திரித்துக் காட்டிய படங்களையும் இப்பகுதியில் வைத்துக் காட்டுவது நன்று. அல்லாமலும், இந்தியர்களால் கையாளப்பட்டுவந்த பூர்வீக பூஜா பாத்திரங்களையும் அதற்கான பல தட்டுமுட்டுச் சாமான்களையும் சாஸ்திர ஆகாரத்தோடு விளக்கிக் காட்டக்கூடிய படங்களும் இங்கு காட்டப்படுவது அவசியமாகலாம்.

சித்திரப்பகுதியில், வைக்கப்படக்கூடிய சித்திரங்கள் மேலே சொல்லியவைகளோடும் பூர்வீக இரதங்கள், வண்டிகள், நாற்



காலி, பெஞ்சு, மேஜை முதலியன வற்றை சாஸ்திரோக்தமாக எழுதிய படங்களையும், சிறியமாதிரிகளையும் செய்து வைத்துக் காட்டலாம். பூர்வீக மாதிரிகளை நவீன நாகரீகத்திற்கு இணங்கும்படி செய்து காட்டக்கூடிய சித்திரப் படங்களும் இங்கு வைக்கப்படுவது அவசிய மாகும். பூர்வகாலத்தில் சிற்பிகளும், நகாசு வேலைக்காரர்களும், சித்துளி செதுக்கு வேலைக்காரர்களும், தங்களை ஆசிரியித்த சிறுவர்களுக்கு மட்டியப்பலகை முதலியவைகளில் எழுதி அப்பியசிக்கச் செய்த சித்திரங்களை வரன்முறையாகக்காட்டிய சித்திரப்படங்களும் இங்கு காட்டப்பட வேண்டும். தற்கால நாகரீகத்தை அநுசரித்த படங்களும் மேற்றிசையாரைப் பின்பற்றிச் செய்யப்படும் படங்களும் இக்காட்சியில் காட்டப்படவேண்டிய ஆவசியகமேயில்லை.

கைத்தொழில் சம்பந்தமான காட்சிப் பொருள்களோ மிக்க விரிவாக இருக்கின்றன. பொதுவாக அவைகளைச்சித்திரசம்பந்தமானகாட்சிப்பொருள்களெனவும், வியாபார சம்பந்தமான காட்சிப் பொருள்களெனவும் இருகூறாக்கலாம். இந்தியா பூர்வகாலந்தொடங்கி சித்திர சம்பந்தமான பொருள்களைச் செய்வதில் மிக்க பிரக்யாதி பெற்றிருக்கிறது வாஸ்தவமாயினும் அப்பொருள்களை ஆசிப்பாரில்லாமையால் அவைகளின் உற்பத்தி தற்காலம் மிகவும் குன்றிவருகின்றது. விஸ்வகர்ம வம்ஸத்தினருக்கு உரிமையான ஐந்தொழிலினும் சித்திரசம்பந்தமானசாமான்களைச் செய்வதற்கியலுமாதலால், அப்பொருள்களுக்கென ஒரு தனிப்பிரிவினை யேற்படல் வேண்டும். இப்பிரிவினையில் காட்டும் பொருள்கள் முக்கியமாய் மானிட உழைப்பையும் கற்பனா சாமர்த்தியத்தையும், வேலைத்திறமையையும் காட்டக்கூடியவைகளாக விருக்கும்.

வியாபாரக் காட்சிப்பொருள்கள் வைக்கப்படும் பிரிவினையில், மானிட உழைப்பினாலன்றி, இயந்திரசகாயத்தாலும்செய்யக்கூடிய சாமான்களும், வார்ப்பிடம், அச்சு, அடித்தல், நீட்டல் முதலிய வழிகளால் விரைவிலும், அதிகப்படியாகவும் செய்யக்கூடிய வஸ்துக்கள் வைக்கப்படல் வேண்டும். இன்னும் அன்னிய தேசத்திலிருந்து வரும் எல்லாவிதசாமான்களுக்கும் இயன்றவரையில்பிரதியாகச் செய்யப்பட்டசாமான்கள் பொதுஜனங்கள் ஒத்திட்டுப் பார்க்கும் வண்ணம் இது 'ஜர்மனி' சாமான் என்றும், அல்லது இது 'ஜப்பான்' சாமான்என்றும் அவைகளுக்குபக்கத்தில் வைக்கப்பட்ட இச்சாமான்கள் இந்தியசாமான்களென்றும் குறிப்பிட்டு அவைகள் எங்கு, யாரால், எத்தனை மணிநேரத்தில், எவ்வளவு செலவில் செய்யப்பட்டவைகளென்றும் எல்லா விவரங்களடங்கிய சீட்டுகளுடன் காட்டப்படுவது அத்தியாவசியகமாகும்.

இம்மூன்று பகுதிகளோடும், 'டிமான்ஸ்ட்ரேஷன்' அதாவது செய்துகாட்டும் பகுதியொன்றும் ஏற்படவேண்டுவது அவசியம். குறிப்பிட்ட நூதன அல்லது புராதன கைத்தொழிலை அங்ஙனே செய்து காட்டுவதால், தொழில்ஞானம் விரைவிலும், சுளுவிலும் விர்த்தியாகும்.

காட்சிப்பொருள்களின் விபரத்தை இம்மட்டோடு நிறுத்தி இனி, காட்சியைநடாத்தும் முறையைப்பற்றிப் பேசுவோம். இப் பொருட்காட்சியை நடத்துவதற்கு ஒரு செல்வாக்குள்ள கமிட்டியைக் கான்பரன்ஸ் சென்ட்ரல்கமிட்டியாருக்குஅடங்கியதாக ஏற்படுத்தவேண்டுமேயன்றி மஹாஜன கான்பரன்ஸ் கமிட்டியுடன் சம்பந்தப்படுத்தலாகாது. இவ்விரண்டு கமிட்டிகளும் தனித்தனியே யிருத்தல் அவசியம். கான்பரன்ஸை நிறைவேற்றுவதற்கு ஜில்லாகமிட்டியார் கடமைப் பட்டவராவர். பொருட்காட்சியை நன்கு நிறைவேற்றுவதற்கான எல்லா முயற்சிகளும், சென்ட்ரல் கமிட்டியாரால் நிர்த்தாரணம் செய்யப்படுகிற எக்ஸிபிஷன் கமிட்டியார் உத்தர

வாதமுள்ளவராவர். பொருட் காட்சியால் நன்மைவிளைய வேண்டுமாயினும் பேரதியவரும்படி வசூலாக வேண்டுமாயினும் இப் பொருட்காட்சியை, கான்பரன்ஸைப்போல் இரண்டொரு நாட்களில்முடித்து விடலாகாது. பொருட்காட்சியை, ஒருவாரத்திற்குக் குறையாமலும், பத்து நாட்களுக்கு மேற்படாமலும் திறந்துவைத்தல் மிக்க நன்மை பயக்கும். ஓர் பொருட்காட்சி ஏற்படுத்துவதென்றால்வாய்ப்பேச்சிலாகும் விஷயமன்று. பரிசுகளன்னியில் குறைந்தது சுமார் ஒரு ஆயிரம் ரூபாய்களேனும் வேண்டும். விஸ்வகர்ம வம்சத்தினரிடமிருந்து இவ்வளவு தொகையையும் வசூலிப்பது இயலாது. கைத்தொழிலபிவிர்த்தியில் ஊக்கமுடையவர்களிடத்தும், ஜனசமூகத்தில், செல்வாக்குடையவர்களிடமிருந்தும், ஜமீன்முதலிய பிரமுகர்களிடமிருந்தும் இத்தொகையைச் சுலபத்தில் வசூலிக்கமுயலவேண்டும். அவர்களைக்கொண்டே மெடல், வெகுமதி முதலியவைகளையும் கொடுப்பிக்கச்செய்யலாம். செல்வாக்குடைய ஓர் கமிட்டியும், கவர்ன்மெண்டார் செவிசாய்க்கக்கூடிய வன்மையையுடைய ஓர் சேர்மனையும் இக்கமிட்டியார் அடைவார்களாயின் கவர்ன் மெண்டார் திரவிய சகாயத்தையும் பெறலாம். ஆகையால், சேர்மனையும், கமிட்டி மெம்பர்களையும் நியமிப்பதில் சென்டரல் கமிட்டியார் அதிக கவனம் செலுத்துவது அவசியம். இப்பொருட்காட்சி சம்பந்தமாகஎழுதவேண்டிய மற்றைய விஷயங்களை அடுத்து எழுதுவோம். இதற்கிடையில் இப்பொருட்காட்சியொன்று ஏற்படப் போகிறதென்றும், அதற்கான காட்சிப்பொருள்களை ஒவ்வொருவரும் இப்பொழுது தொடங்கியே சேகரிக்க முயல வேண்டுமென்றும், பொருட்காட்சிக்கான திரவியசகாயத்தைத் தங்களால் இயன்றளவு நம்மனோர் புரியவேண்டுமென்றும் நோக்கங்கொண்டே இம்முறை இங்கெடுத்து எழுதினோம்.

## குலோத்தாரண சபையின் உதவியும், அதற்கு உறுதியும்.

175-வது பக்கத்தின் தொடர்ச்சி.

வடமொழி நீதிசாஸ்திரத்தில்,

சர்வரீதீபகஸ்ச்சந்த்ரஃ
ப்ரபாதோதீபகோரவிஃ
த்ரைலோக்யதீபகோதர்மஃ
ஸுபுத்ரஃ குலதீபகஃ

அதாவது சந்திரன் இராத்திரியைப் பிரகாசிக்கிறான்; சூரியன் பகலைப்பிரகாசிக்கச்செய்கிறான்; தர்மம் மூன்று லோகத்தையும் பிரகாசிக்கச் செய்கிறது; உத்தம குமாரன் குலத்தைப் பிரகாசிக்கச் செய்கிறான். என்ற ஆன்றோர் வாக்கியப்படி தங்குலத்தை விளக்கவேண்டிய கடமை புத்திரர்களுடையதே யாகும். ஷெ விஷயங்களுக்கெல்லாம் உதவிபுரியும் ஞானமாதாவாகிய குலோபகாரியை தங்கள் தங்கள் வீட்டுக்கழைத்துப் பணிவோடும் அவள் மூலமாய் தங்குலவிதிகளை தாங்களும் தங்கள் சந்ததியார்களும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

இன்னும் நம்மவர்கள் பத்திரிகை தருவிக்கத்தகுந்த பொருள் இருந்தும் படிப்பில்லாமையால் நமக்குத்தான் படிக்கத்தெரியாதே பத்திரிகையை வாங்கிக் கூழில் போட்டு குப்புறதா என்று அலட்சியம் செய்துவிடுகிறார்கள். அவ்விதம் நினைத்துக் காரிய நஷ்டம் செய்துகொள்ளுவது சுத்தப்பிசகு. ஏனெனில் ஷெ பத்திரிகை நம்மினத்தாரில் வேறொருவரைக் கொண்டாவது வாசிக்கச்செய்து அதன் சாராம்சங்களை யறிந்து தங்கள் பிள்ளைகளையாவது நல்வழிக்குக் கொண்டுவரலாம். இப்போதும் நம்மவரிற் சிலர் படிக்கத்தெரியாதிருந்தும் வேலை செய்வதில் படித்தவர்களைவிட நன்றாயும் அற்புதமாயும் வேலை செய்கிறார்கள். அங்ஙனம் சிரேஷ்டமான வேலை செய்தும் அவ்வோர் சமயத்தில்



இவ்வளவு வேலை நமக்குத் தெரிந்திருந்தும் படிக்கத் தெரியாமற்போய்விட்டதே என்று விசனிக்கிறார்கள். நாம் படிக்காமல் பிறரிடம் அவமானப்படுகிறோமே, இனி நம் பிள்ளைகளையாவது நன்றாய்ப் படிக்கவைப்போம் என்று சிந்திக்கின்றனர்.

இவர்களெல்லாம் பத்திரிகையிலுள்ள நன்மைகளையும் மர்மவிஷயங்களையும் நம்மவர்களில் வாசிக்கவர்களைக் கொண்டு படிக்கச் செய்து பத்திரிகையிற் கூறும் சத்விஷயங்களைத் தாமறிந்து தம் புத்திரர்களை நல்வழிக்குக் கொண்டுவரலாம். அதுவல்லாமல் நமக்குப் படிக்கத் தெரியாதிருக்கிறபோது நாம் ஒருவனை வாசித்துக் காட்டு என்று சொல்லலாமா? சொன்னால் கௌரதை குறைவல்லவா என்று வீணெண்ணங்கொள்ளுகிறார்கள். அப்படி எண்ணி காரியநஷ்டம் செய்துகொள்வது சரியல்ல. ஏனெனில்,

"தோணி யியக்குவான் றொல்லை வருணத்துக், கானிற் கடைப்பட்டா னென்றிகழார்—காணு, மவன்றுணையா வாறுபோயற்றேநூல் கற்ற, மகன்றுணையா நல்ல கொளல்" என்றார். அதாவது

பழயசாஸ்திரிகளுள் ஆற்றில் தோணியை ஓட்டுகிறவன் கீழ்ச்சாதியிற் பிறந்தவனென்று இகழார்கள், அவனையே துணையாகக் கொண்டு ஆற்றைக்கடந்து போவதுபோல நூல்களைக்கற்றவன் இழிவானவனானாலும் அவனையே துணையாகக் கொண்டு நல்ல நூற்பொருள்களை ஒருவன் கற்றுக்கொள்ளவேண்டுமென்றும் என்ற நீதி நூற்படி சாஸ்திரங்களையும் மற்றும் ஆரப்பப்படிப்பையும் யாரிடத்தேனும் கற்றுக்கொள்ளலாம்; அதுபோலவே பத்திரிகையை வருவித்து வேறொருவரைக் கொண்டு வாசிக்கச்செய்து அதின் மர்மங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

இஃதின்னமாக சாஸ்திரமுணராத நம்மவரிற் சிலரும் மற்ற இதர ஜாதியிலேனைரும் நமது வம்சத்தைச் சூத்திர வகுப்பிற் சேர்ந்ததென்றும் வேதாதிகாரம் இல்லாததென்றும் பிதற்றி இவர்கள் புதிதாய் விஸ்வகர்ம வம்சம் என்றும் விஸ்வப்பிராஹ்மணர்களென்றும் வைத்துக்கொண்டார்களென்றும் பிதற்றி அசட்டை செய்து இகழுகிறார்கள். ஆனால் இவர்கள் வேதாதிசாஸ்திரங்களை ஆராய்ந்திருப்பார்களாயின் அங்ஙனம் கூறுவதற்கு முற்படமாட்டார்கள். அப்படியானால் வேதமுதலான சாஸ்திரங்களை வாசித்தறியும் சக்தியில்லாதவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் வியக்தமாய்த் தெரிவிக்கும் பொருட்டு, ஆன்றோர் கூறிய திரிஜன்ம வர்த்தமான சோபிதமாகிய ரேகை சாத்திரத்தின் பாடலில் இரண்டொன்றை இங்கே தெளிவாய் எடுத்து ரூபிக்கிறோம். அதாவது அகஸ்தியர் அருளிச் செய்த இரேகைசாஸ்திரம் முதற்காண்டத்தில்,

* காரணியாள் நந்திதனக் குரைத்தமார்க்கம் நானறிந்து வோதுகிறேன் மச்சகேந்திரா, பூரணமாய்க் கொடிவிசிறி மட்டுக்குசங்க்ரதாமசம் பொருந்திவல கரம்தனி லேறிநின்றால், தாரணியிற் குலமதாயும் ஆசாரியர்க்கம் தான்விஸ்வ கர்மாவின் ஆதிஸ்ருஷ்டி, ஆரணத்தின் முறையதுவள் கைவிஸ்தாரம் அடிப்பதங்கத் தொழில்பணிக்கே வுயர்வாய்க்காட்டும்.

அதாவது இந்தக் கொடிவிசிறி மட்டுக்குச் சங்கதாமசம், என்ற ரேகை ஒருவன் வலதுகரத்தில் பூரணமாய் ஏறியிருக்குமேயானால் இப்பூமியின்கண் அவன் பிறக்கும் குலமானது யாதெனில் விஸ்வகர்மாவின் முதற்சிருஷ்டியாகிய ஆச்சாரி வம்சத்திற்பிறந்து வேதசாஸ்திரங்களில்கூறிய விதிகளை நன்கு கற்று உபர்வாகிய தங்கவேலையைக் கற்று ஜீவனம் செய்து வருவன். என்று கூறியுள்ளதையும், இன்னும் ஸ்ரீ சுகர் அருளிய சுகர்நாடியில் கன்யா லக்ன ஜாதகத்தில் முதல்பாட்டு சந்திரன் வருடைசார்ந்து, என்பது இரண்டாவது

பாட்டு. இன்னவக்கோள்களிவ்வாறிருந்திட் டுதயங்கன்னி, என்பது இதற்கடுத்த பாடலாகிய மூன்றாவது பாட்டில் கூறியதாவது.

* ஷடிரேகை சாஸ்திரப்பாடல் வேதாரண்யம் ரேகை ஜோதிடகம்பெனி இராமநாதம்பிள்ளை யவர்களிடம் உள்ள ஏட்டுப்பிரதி ரேகை சாஸ்திரத்திலிருந்து எடுத்து எழுதப்பட்டது.

தொடரும்.

கூந்தலூர்—த. சுப்ரஹ்மண்யாசாரி.

***

## சித்திரத் தொழில்.

இந்தியாவில் சிலா செதுக்கு வேலையிலேயும், மரச்செதுக்கு வேலையிலேயும்; பக்திமார்க்க வாயிலாகவும், அலங்கார அமைப்பின் வாயிலாகவும் சிற்பிகள் இயற்றி வைக்கும் பிராணிகளின் உருக்கள் மிகவும் சிலாகிக்கத் தகுந்தன. இவ்வுருக்களில் சில நில உலகத்தில் காணக்கிடைக்கும் பிராணிகளின் உருக்கள். சில மனோபாவ ஜந்துக்களின் உருக்கள். உருக்களை வரையும் தொழில் ஓவியத்தொழில் எனப்படும். சிலா செதுக்கு வேலை மரச்செதுக்கு வேலை ஏனைய உலோகச் செதுக்கு வேலைகளில் அப்பியசிக்க வேண்டுவோர் பிரதமத்தில் சித்திரப் பழக்கத்தைக் கைக்கொள்ளவேண்டும். உருக்களை வரையும் ஓவியத்தொழில் சிற்பியர்க்கு இன்றியமையாதது. ஆகையினாற்றான் சிற்பியர்க்கு ஓவியக்காரர் என்னும் பெயர் உலகத்தில் வழங்குவது. இவ்வித ஓவியத் தொழிலை (சித்திரத்தொழிலை) சிறிது விவரிக்கின் மிகுந்தபயன் தரத்தக்கதாகும்.

இவ்வுருக்களினால் அறியத்தக்க விஷயங்கள்:—இவ்வுருக்களைச்செய்யும்போது அலங்கார அமைப்பு வேலைக்காரர்களின் மனதிலேயும் விக்ரக நிர்மாண சிற்பியர்களின் மனதிலேயும் நிகழும் எண்ணங்களை அறிந்தாலொழிய நன்றாய் விளங்கா.

இவ்வுருக்களைப் பற்றிய சிற்பியர்களின் மனோபாவங்களை அறிந்து கொண்டால் தொழில்மார்க்கத்தில் மிகுந்த அறிவுஉண்டாகும். இந்தியர்களின் பூர்வீக எண்ணங்கள் இவையெனத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் எவையெனில்,

1. ஏன் அநேகமாய் இந்துக்களின் தேவபிம்பங்கள் முழுமையுமோ அல்லது கூறுபடுத்தியோ உள்ள மிருக உருக்களோடு கலந்து செய்யப்பட்டிருக்கின்றன.

2. ஏன் புத்தர்களுடைய காலத்தில் இலங்கையிலுள்ள ஜனங்களை அந்த விகாரமான சிரங்களையும் நகமுதலிய உறுப்புகளையுடைய மிருகங்களோடு கூடிய பிசாசுகளைப்போல் இருந்ததாக வர்ணித்திருக்கிறார்கள்?

3. ஏன் பூர்வீக குடிகளில் சிலர் மிருக சம்பந்தத்தை யுடையவர்களா யிருந்தார்கள்? என்பனவாம்.

இந்திய சிற்பத்தொழில் பக்தி மார்க்கத்தை ஆதாரமாகவுடையது. பிராமண இந்துக்கள். ஜைனியர் முதலியோருடைய மதக்கோட்பாடுகளில் மிருகங்களைப் பற்றிய அநேக விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. இந்திய சிற்பியரும் கைத்தொழிலாளிகளும் வைராக்கிய பிராமண மதக் கோட்பாட்டை யுடையவர்கள். அவர்கள் பக்திமார்க்கப் பழக்கத்தை யுடையவர்கள். அவர்கள் கடவுளர், தெய்வீகர் பிசாசுகள் முதலியோரிடத்து நம்பிக்கை யுள்ளவர்கள். மேற்குறித்த கடவுளர் தெய்வீகர்கள் பிசாசுகள் முதலாக வுள்ளவர்களின், எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட, உருக்களைக் கோயில்களிலேயும், கடைத்தெருக்களில் விற்கப்படும் சாசமான சித்திர உருக்களிலேயும் விளையாட்டுக் கருவிகளிலேயும் விளக்கி யிருக்கின்றனர்.



கோவில்களிலேயும் தெருக்களிலேயும் பக்திமார்க்க அற்புதக்காட்சி நாடகங்களிலேயும் இவ்வுருக்கள் காட்டப்படுகின்றன. இன்னும் அநேகவிதங்களில் இவ்வுருக்கள் விளக்கப்படுகின்றன. தற்காலத்தில் பஞ்சுநூல் புடவை வஸ்திரங்களை விற்கும் வியாபாரியிடத்திலும் வர்த்தக அடையாளமாக இவ்வுருக்களுள்ள காகிதவர்ணப் படங்களைச் சரக்குகளின்மேல் ஒட்டவைத்திருப்பதைக் காணலாம். இத்தேவ பிம்ப உருக்களெல்லாம் ஒற்றுமையான சங்கேத ரூபத்தை யுடையனவா யிருக்கின்றன. இவ்வுருக்கள் பூர்வீக காலந் தொடங்கி ஒரே சங்கேத மாதிரியாய்த்தான் இருக்கின்றன. இந்தியாவில் பிரதேச வித்தியாசமும் கால வித்தியாசமும் இவ்வுருக்களில் ரூப வித்தியாசத்தை உண்டாக்கவில்லை. உருக்களில் வித்தியாசம் காணப்படுகிறபோது சிற்பசாஸ்திர விதிப்படியே வித்தியாசங்கள் காணப்படுகின்றன. அப்படிப்பட்ட வேலைகள் இப்போது புதைபட்டுப்போயிருக்கின்றன. தற்காலத்தில் இந்திய சிற்பியர்கள் தங்கள் மூதாதையர்களைப்போல் சங்கேதமார்க்கத்தில் தொழில் செய்வதை விடுத்து நூதன வழிகளைக்கைப்பற்றி தொழில்செய்ய முயலுகின்றனர். பூர்வீக சங்கேதமார்க்க கைத்தொழில் அற்றுப்போகவில்லை. ஆனால் உண்மையான தொழில் ஞானத்தைச்செலுத்தி நூதனவழியில் செய்யப்படும் பொருள்களை இப்போது காணலாம். இப்போது விவரித்த விஷயங்களெல்லாம் இந்திய சித்திரக்காரர்களுடைய மிருக உருக்களைப் பொருந்தி யிருக்கின்றன. இந்தியாவின் பூர்வீக குடிகள் காண்ட்ஸ், பில்ஸ் இன்னும் இதாமான வகுப்பினர். அவர்களெல்லாம் மிருகங்களுக்குப் பயந்தார்கள். மிருகங்களுக்கு மரியாதை செய்தார்கள். அவைகளைக் கடவுளைப்போல் வணங்கினார்கள். பில்ஸ் ஜாதியார் மலையின் உச்சியில் களிமண்ணினால் போல் குதிரை செய்து வைத்தார்கள். அது எதைக் குறிப்பிக்கிறதென்றால் அந்த சமீபத்தில் இருக்கும் வானத்தில் சேர்ப்பிக்கும் தேவதைகளை குறிப்பிக்கிறது. ஆன்மாக்கள் இப்பூவுலகத்தில் வானப்பிரயாணத்தைச் சிறிது தூரம் பூர்த்தி செய்ததாகக் கருதப்படுகிறது. ஆன்மா தேகவியோகத்தின் பிறகு மிகுதியாகவுள்ள வானப்பிராயணத்தை பூர்த்திசெய்வதற்கு ஏறிச்செல்லும் குதிரையாக நிற்கிறது. இவ்வித பக்தி மார்க்க நம்பிக்கையின்மேல் பூர்வகாலத்தில் இந்துக்களுக்கு மிருகமும் மிருகதேவதைகளும் என்ன நிலைமையிலிருந்தனவென்பது தெளிவாகும். சில உருக்களின் பாகங்களில் மிருகத்தின் கூறுகள் தோன்றுவதின் அர்த்தமும், சிலமிருகங்கள் தேவர்களுக்கு வாகனமாக இருக்கவேண்டிய அவசியமும் புலப்படும். இமாசல பர்வதத்தின் வடபாரிசத்திலிருந்து ஆரியர்கள் இயற்கை சக்திகளை தேவதைகளாக வணங்கினார்கள். பிரக்ருதிதோற்ற சரித்திரத்தில் ப்ராஜாபதி என்னப்பட்ட வேதத்தில் பிரதிபலிக்கும் கடவுள் தேவதை களுக்கும் இராக்ஷகர்களுக்கும் பிதாவாக வர்ணிக்கப்படுகிறார். சிருஷ்டித் தொழிலின் நிமித்தம் அப்பிரஜாபதி ஆமையின் உருவை எடுத்துக்கொண்டதாக சொல்லப்படுகிறது. பிற்காலத்தில் அன்ன உளர்தியாகிய சிருஷ்டித் தொழிலைச் செய்யும் பிரமனே அந்தப் பிரஜாபதி எனக்கருதப்பட்டார், வேதத்தில் சொல்லப்பட்ட கடவுளர் அநேக காலம் வரைக்கும் மிருக உருக்களை ஏற்றுக்கொள்ளவில்லை யென்றே தோன்றுகிறது.

இந்திய சமபூமிகளில் வசித்த ஆரியர்கள் இயற்கை சக்திகளைக் கடவுளாக வணங்குவதைக் கைவிடுத்து அவர்களின் ஆவிர்பவித்த பொருள்களையும் ரூபங்களையும் வணங்கினார்கள். ஆகையினால் இயற்கை சக்திகளுக்குரிய மரியாதையையும் பக்தியையும் அவைகளின் அறிகுறிப் பொருள்களுக்கும் ரூபங்களுக்கும் செய்தார்கள். அப்பொருள்களில் புலியும் சர்ப்பமும் சேர்ந்து இருக்கின்றன. காலம் கழியக்

கழிய மேற்கூறிய ஆரியர்களுடைய தேவதைகள் மெல்ல மெல்ல ரூப பேதத்தை அடைந்தன. அவைகள் பிசாசுகள் அல்லது இராக்ஷதர்கள் ஆயினர்.

***

## வேதத்தின் வான்முறையும், அதிகாரியும்.

### சுருதி.

சுஸ்மாத் யக்ஞாத் ஸர்வஹுதஃ ரிசஃ ஸாமாநி ஜஜ்ஞிரே, சந்தாம்ஸி ஜஜ்ஞிரே தஸ்மாத்யஜுஸ் தஸ்மாதஜாயத.

சத்தென்பது அழிவின்மை, சித்தென்பது சிறிதும் அறியாமையற்ற நிறைந்த அறிவின்மயம். ஆனந்தமென்பது சிறிதும் துக்கமற்ற சுக ஸ்வரூபம். ஆக; யாவர்களுக்கும் சுகத்தைத் தாராநின்ற சச்சிதாநந்த ஸ்வரூபனாய், வந்தனை வழிபாடுகளுக்குரிய இஷ்ட தேவனாய், உலகிலெல்லாவற்றுள்ளும், நிறைந்த வியாபகனாய், எல்லாம் வல்ல முற்றறிவினனுமுள்ள, பரமாத்மனாகிய பர்ப்ரம்ஹத்தினாலேயே இருக்கு, யஜுர், சாம, அதர்வ வேதங்கள் உண்டாயிருக்கின்றனவென்று யஜுர் வேதம் 31-வது அத்யாயம் 7-வது மந்திரமான மேற்கண்ட சுருதி சொல்லுகிறது.

இவ்வேதங்கள் சிருஷ்டிக்குட்பட்டனவல்லவென்றும், அநாதி யென்றும், சில காலங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றனவென்றும், மற்றக்காலங்களில் மறைக்கப்பட்டிருக்கின்றன என்றும் "மீமாஞ்சை" சாஸ்திரத்தை அநுசரிக்கப்பட்டவர்களும், "கடவுள்" சிருஷ்டித்தாரென்று, நியாய சாஸ்திரம், வேதாந்த சாஸ்திரம், இன்னும் மற்ற சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த மறைவன்களும் சொல்லுகிறார்கள். ஆயினும் அந்த வேதங்களினுடைய பொருள் நித்தியத்தினின்று உண்டாயிருப்பதுடன், வேதாந்த சாஸ்திரத்தில், தவறுதலில்லாதவராயும், யாதொன்றினுங் கவனஞ் செலுத்த வேண்டியவரல்லாதவராயும், குணகுணங்களுக் குட்படாதவராயும், கள்ளமாயங்களினின்று நீங்கினவராயுமிருக்கிற கடவுளுடைய திருவாக்கிலிருந்து புறப்பட்ட தற்பூரண மொழியே வேதங்களெனச் சொல்லப்பட்டிருக்கின்றன.

அந்த வேதங்களின் முதற்காண்டம் "கர்ம காண்டம்" எனவும், இரண்டாவது காண்டம் "உபாசனா காண்டம்" எனவும், மூன்றாவது காண்டம் "ஞான காண்டம்" எனவும் விளங்குகிறது. கை கர்ம காண்டத்தில், கர்மாநுஷ்டானங்கள் செய்கிற முறையையும், அஸ்வமேத முதலிய கிரியைகள் செய்வதினாற் பாக்கியுண்டாகும் இன்பங்களையும் உபாசனா காண்டத்தில், கடவுளின் ஆராதனை செய்ய வேண்டிய பக்தி முதலிய விதங்களையும், ஞானகாண்டத்தில் "கடவுள்" முதலாவது:—சருவாக்ஞத்துவம், சருவேச்சரத்துவம், என்கிற குணங்களையுடையவராகவும் இரண்டாவது:—நித்தியாநந்தராயும், ஞானரூபிதராயுமிருக்கிறாரென்கிற ப்ரம்ம ஞானத்தை விளக்குகிற வேதாந்தங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன.

அந்த வேதங்கள் "சமஸ்கிருதத்திற் பாடல்களாகவும், மந்திரங்களென்னப்பட்ட ஜெபங்கள், துதிகளடங்கிய பகுதிகளாகவும், பகுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக் கநுசாரணையாக வாசக நடையிலெழுதப்பட்ட பிராமணங்களும், அவைகளுக்குத் துணையாக மறைபொருளான "உபநிஷதங்" களுமிருக்கின்றன.

இவ்வுலகத்திலுள்ள எல்லாப் பதார்த்தங்களும் ஆத்மகோடிகளுக்காகவே எப்படி சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றனவோ அதுபோலவே, இவ்வேதங்களும் யாவர்களுக்கும் உரிமை பூண்டு வைதிகவர்கள் வைதற்காகவே அமைக்கப்பட்டிருக்கின்றன.



வேதங்களுக்கு "நிகமம்" என்று பெயர். நிகமமென்பது பரமாத்மனை யல்லாது, வேறொன்றினிடத்தினின்றும் வராதது என்பதேயாம். ஆகையால், எப்படி உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் ஆத்மகோடிகளுக் குபயோகமாகின்றனவோ, அத்தன்மையாகவே இவ்வேதங்களும், யாவர்க்கும் உரிமைப்பட்டவைகளேயாம்.

### அதிகாரிகள்.

இவ்வாறிருக்க "ஸ்திரீசூத்ரௌ நாதீயாதாம்" அதாவது ஸ்திரீகளும் சூத்திரர்களும் வேதத்தை அறியக்கூடாது என்றும் கேளஃ "அதாஸ்ய வேதமுபஸ்ருண்வதஸ் த்ரபுஜதுப்யாம் ச்ரோத்ரப்ரதிபூரணம் உதாஹரணே ஜிஹ்வாச்சேதஃ தாரணே சரீரபேதஃ" அதாவது சூத்திரன் வேதத்தைக் கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி விடவேண்டியது என்றும், அவன் வாயாற் சொன்னால் நாக்கை அறுக்கவேண்டியது என்றும் அதைத் தொட்டால் தேகத்தை வெட்டவேண்டியது என்றும், சுருதி வாக்கியங்களிருப்பதாயும் இன்னும் இதைப்போன்ற பல வேதவிருத்த வசனங்களையும் எடுத்துக் காட்டி, சாம்பிராயிகமாய் வாதிப்பது அங்கீகரிக்கத்தக்கதன்று. ஏனெனில், முக்கியமான வேதத்துக்குள்ளாகவே யாவர்களும் வேதம் ஓதல் வேண்டுமென்றும் வேதார்த்தத்தை யறிந்தே சதாசார முடையவர்களாய்க் கதியடைய வேண்டுமென்றும் அவசியகப் படுத்தப் பட்டிருக்கும் பிரமாணங்களாவன?—

யாவர்க்கும் வேதம் அவசியகம் என்பது:—

"யதேமாம் வாசம் கல்யாணீமாவதானி ஜனேப்யஃ ப்ரஹ்ம ராஜந்யாப்யாம் சூத்ராய சார்யாய சஸ்வாய சாரணாய, ப்ரியோ தேவானாம் தக்ஷிணாயை தாதுரிஹ பூயாஸமயம்மே காமஃ ஸம்ருத்யதாமுபமாதோ நமது".

ப்ரம்ஹ ராஜந்யாப்யாம்-பிராம்மணர், க்ஷத்திரியர், ஆர்யாய-வைசிய ... சிரேஷ்டர்கள், சூத்ராய-சூத்திரர் ... ச-மேலும், ஸ்வாய-இவர்களுடைய மனைவியர், ஏவலாளர் முதலானவர்கள், ஆரணாய-நன்னிலையிரும்பும் தாழ்ந்தவர்களுக்கும், ச-இன்னும், ஜனேப்யஃ-மற்ற யாவர்களுக்கும் ஆகவே, இஹ-இந்த ஸம்ஸாரத்தில்; கல்யாணீம்-சுகத்தைக் கொடுக்கக்கூடியதாக இமாம் - வெளிப்படுத்தப்பட்டிருப்பவைகளாகிய, வாசம்-நான்கு வேத ரூபமான இம்மொழிகளை, ஆவதானி - உபதேசிக்கிறேன், யதா-நான் எப்படிப் போதிக்கின்றேனோ, ததா-அப்படிக்குள்ள இந்தக் கொடையே, தேவானாம்-வித்துவ ஜனங்களுக்கு, தக்ஷிணாயை-தக்ஷிணை, ப்ரியஃ-வேண்டும் மகிழ்ச்சி, பூயாஸம்-ஆகட்டும், மே-என்னுடைய, அயம்-இந்த, காமஃ-அபேக்ஷை, ஸம்ருத்யதாம்-நன்றாய்ப் பெருகட்டும், ததா-இவ்வண்ணமே, மா-என்னுடைய, அதஃ-பாகதியை, உபநமது-அடையுங்கள், அடைவியுங்கள் என்று யஜுர்வேதம் 26-வது அத்யாயம் 2-வது மந்திரமாகிய மேற்கண்ட சுருதியாம்.

ஸ்திரீகளுக்கு வேதம் அவசியம் என்பது:—

"ப்ரம்ஹசர்யேண கந்யாகும் யுவாநாம் விந்ததேபதிம்" அதாவது எந்தவிதமாக பாலர்கள் சம்பூர்ண ப்ரம்ஹசரியத்திலிருந்து பூரண வேதவித்தையைக் கற்றும் நல்ல சிக்ஷை அடைந்தும் பூரண யௌவனஸ்தனாய் தனக்கு சமத்துவமாயிராநின்ற யுவதிஸ்திரீயாய், தனக்கு அநுகூலமாயுள்ள பிரியத்திற் கிசைந்த ஸ்திரீயை விவாகஞ் செய்கின்றானோ அவ்விதமே, கந்யாஃ-கன்னிகையானவள், ப்ரம்ஹசர்யேண - அகண்டிதப் பிரமசரியத்திலிருந்து வேதாதி சாஸ்திரங்களைக் கற்று சம்பூர்ண வித்தையையும் உத்தம சிக்ஷையும் அடைந்து யுவதியாய் சம்பூர்ண யௌவனத்தில் தனக்கு சமத்துவமான வித்துவானாகிய யுவாநாம்-பூரண யுவாவஸ்தையோடு இரா

நின்ற, பதிம்-நாயகனே, விந்ததே-அடையட்டும். என்று அதர்வவேத ஸம்ஹிதை 11-வது, காண்டம் 24 வது பிரபாடகம் 3 வது அநுவாகம் 18 வது மந்திரமாகிய மேற்கண்ட சுருதியிலும் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆகையால் ஸ்திரீகளும் உபநயனாதி சமஸ்காரத்தோடு ப்ரம்ஹசரியத்தி லிருந்து வேத வித்தையை கிரகிக்கவேண்டியது ஆவசியகமென்பதைப்பற்றியும் திருவனந்தபுரம், வேதப்ரசாரணி ஸபையின் கௌரவ காரியதரிசி பிரம்ஹஸ்ரீ எம். ஜி. எல். ஆர். பி. கிருஷ்ணமூர்த்தி ராயர் அவர்களால் அச்சுப்பத்திரிகை மூலமாக எங்கும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

சுருதி.

ஸ்ரீ திஸ்ம்ருதிமமைவாக்ஞா
யஸ்தாமுல்லங்க்யவர்த்தெத,
ஆக்ஞாச்சேதிமமத்வெஷ்ய
ஸ்ஸமெவத்யஸ்சஜாயதெ.

அதாவது சுருதியும் ஸ்மிருதியும் வனது கட்டளை. எவன் ஒருவன் அதை மீறுகிறானோ அப்படிப்பட்டவன் எனக்கு சத்துரு. யான் அவனைக் கொல்லுவேன் என்று ஷை சுருதியிற் சொல்லியிருக்கிறபடியால் இப்படிப்பட்ட கட்டளையை மீறி நடப்பவர்கள் ஈசனது தண்டனைக்குள்ளாவர்களென்பதற்குச் சந்தேகமேயில்லை.

இவ்வித உண்மைகளை யெல்லாம் நன்குணர்ந்தே யஜுர்வேத மந்திர சம்ஹிதை 26 வது அத்யாயம் 2 வது மந்திரத்தின் பிரமாணப்படி, மக்கட்பொருட்டு உபகாரார்த்தமாகவே ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தில் "வேதப்ரஸாரணி" என்ற ஓர் சபையை ஸ்தாபிக்கப்பட்டு இந்தியச்சிறுவர் பெரும்பாலோர்க்கும் வேதங்களைப் போதிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

மேற்கண்ட சுருதிகளின் பிரமாணப்படி நான்கு வர்ணத்தார்களும் வேதமார்க்கத்தை யறிந்தே சதாசாரமுடையவர்களாய்ப் பாகதியடைய வேண்டுமென்பதும் அக்கட்டளையை மீறி நடந்தால் ஈசனது தண்டனை கிடைக்குமென்பதும்? நிச்சயமாயிருப்பதால் இவ்வரிய வேதவசனங்களை சமஸ்த கனதனவான்களும் தீர்க்காலோசனைக்குக் கொண்டுவந்து வேண்டிய சீர்திருத்தஞ் செய்வார்களென்பது எமது பிரார்த்தனை.

**V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்.**

திருச்சி விஸ்வப்ரம்ஹ மஹாஜன
சென்ட்ரல் சபை வைஸ் பிரஸிடென்ட்
அன்ட் Ex: முனிசிபல் கௌன்சிலர்
பழனிஸ்தலம்.

---

## மன்வாதி பஞ்சப்பிரம்ஹ வம்சத்தவ ருற்பவமும், அவ்வம்சத்தவர்கள் கிருத்தியத்தால் உலகத்தாரடையும பயனும் வருமாறு.

---

விருத்தம்.

மனுவெனும் பரம ஞானியாமுகத்தில் வந்திடுஞ் சானக குலத்தோன்
மனுகுல வாசர் முதலியோரெவர்க்கு மன்னுநற் கருவிக ளனைத்துந்
தனதிரு கரத்தா லமைத்தவர்க் களிக்கத் தன்மையை யடைதலா ற் புலவர்
மனுக்குலக் கருமான் றனைப்பல கவியால் வழுத்தினர் காணிது மன்னே.



சங்கரனிரண்டாந் திருமுகத் துதித்த சனகன முனிவரன் குலத்தி
லங்குறித் தமையப் பிரம சந்ததியா னலகிலர், வுலகினைப் புரக்கும்
புங்கவராதி மனிதர்களெல்லாம் போகபோக் கியங்களை யடையச்
சங்கையில் மாட மாளிகை யனைத்துந் தங்கரத் தமைத்தனன் மாதோ.

ஐம்முகக் கடவுள் கோரமா முகத்தா லளித்திடும் புவனயோ கியனுந்
தம்மை பின்கட் புலப்படாக் கடவுள் தன்னுரு பலவித மாக
நம்மவர் களுக்குச் செய்துகாட் டுதலால் நாடொரு மறிவுளோர் பார்த்து
இம்மையி லெளிதாம் பக்தி பூண்டிதனு லெய்தினர் நற்கதி தனையே.

கட்புல னில்லாக் கடவுளை யெவர்க்குங் காட்டினற் பக்திபூண் டுய்ய
நுட்பமெய் யுணர்வோ நேற்குநற் சைவ மாதியா வுருவங்க ளனைத்துந்
திட்பமாஞ் சிலையா லமைத்துநற் றேவா லயங்களிற் றுபிக்க வல்ல
வெட்புற வுணர்வா மிந்த்ர சந்ததியாம் பிரத்னச குலத்துதித் தவனே.

பாசுபா ணியின்றற் புருடவா னனத்தாட் பவித்திடு பிரதின யோகி
வாகுலத் தவனெவ் விடத்திலும் வசிக்கும் வானவர் குரியவா தனங்கள்
வாகிலந் தன்னி லமைத்திருப் பதனால் மாவதர் நால்வருங் கண்டு
வரமதைப் பெற்றுப் பின்னுளோ ருய்ய வகுத்தனர் திருமுறை தனையே.

சீர்மேவு பரமனீ சானன வனத்தில் ஜெனித்திடுஞ் சுவர்னச முனிவன்
பேர்மேவு மரபின் நிலவிய வுலகினிலுள்ள பிரிவாய வருணத்தவர்க்
கேர்மேவு பூஷணமு மவரவர்கள் மரபுதனி லெழின்மணஞ் செய்வதற்குப்
தார்மேவுந் தாலியுஞ் செய்திக லாலனைவர் சந்ததி செழிக்கின்றதே.

ஆலியுண்டாகி யகிலமுண்டாகி யனைத்து யிர்க்கு
மூலியுண்டாகிய மூவர்க்குந் தேவர்க்கு மும்பருக்கும்
வேலியுண்டாகி விழாவுமுண்டாகி விஸ்வ கர்மன்
தாலியுண்டாகி யல்லோ தங்கள்தாரந் தமக்கென்றதே.

அம்மான் மகளை யடியென்றால் சீயென்பாள்,
கம்மாளன் றாலி கழுத்தில்விழச்—சும்மா
செருப்பா லடித்தாலுஞ் சீயென் றுரைத்தாலுஞ்
சிரிப்பான் கனிவாய் திறந்து.

**உபாத்தியாயர். மதுரகவி. நடராஜாச்சாரியார்.**

---

## குடும்ப நாயகி.

---

இகபர ஸாதனங்களுக்குரிய குடும்ப நாயகியின் திறமையால் ஆடவர்க்குச் சிறப்புண்டாகின்றது. மாதர்க்குள் கற்றவராயினும் கல்லாதவராயினும் பதிவிரதா தருமத்திற்குக் குறைவுவாராமல் நடப்போர் பலருளரென்பதற் கையமில்லை. ஆனால் யாம் இங்குகூறவேண்டிய நடக்கை யாதெனில் குடும்ப ஒழுக்கத்தைப் பாதுகாக்க வேண்டிய கடமை. குடும்பநாயகியென்பதைப் பற்றி ஆராயவேண்டியதாயிற்று. இக்காலத்தில் குடும்ப லாபத்துக்குப் பெண்கல்வியே ஆதாரமாக விருப்

பதை விவேகிகளறிவார்கள். இதற்காகப் பெண் கல்விச்சாலைகள் எங்கும் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. அச்சாலைகளில் கற்றமாதர்கள் தங்களது இளமைப்பருவத்தில் கற்ற கல்வி மிக்க திறமைகளைத் தருவதாயிருக்கமாட்டாது. வாலிபப்பருவத்தில் கல்வியை யபிவிர்த்தி செய்யப் பால்ய விவாகங்களாலும், கோஷாவழக்கங்களாலும் தடைப்படுகிறது. இவற்றை மாற்ற நம்மவர்கள் இடந் தருதலருமை. ஆயினும் பெண்கல்வி நாளேற அபிவிருத்தியடையக்காலம் சீக்கிரத்தில்வரும். அதுவரையில் ஒருவாறு பெண்கல்வி கூடியவரையி லபிவிருத்தி யடைந்து வருவதே போதுமாகும். இக்கல்வியும் நம் குடும்பங்களிலுள்ள பெண்களுக்குச் சரியாகப் பரவவில்லை. இதைப்பற்றி நம்மவர்கள்கவனியாதிருப்பது சரியன்று. இதர வருணப்பெண்கள் விசேஷமாகக் கல்விகற்றுக் களைப்பட்டு வருவதை நாமறிந்தும் ஜாக்கிரதைப் படாமல் ஏமாந்து விடுகிறோம். அவர்களைக்கண்ட நம் பெண்பாலர் மனத்தாங்கலடைவதைக் கவனியாதிருப்பது நமது குற்றமேயாம்; நம் ஆண் பாலர் நாளேறக்கல்வியும், நாகரீகமும் பெற்று வருபவர்களுக்குக் கல்விகற்காதபெண்களை விவாகஞ் செய்வதினாலுண்டாகும் நஷ்டங்க ளனந்தம். இந்த நஷ்டங்களுக்கு, உத்தரவாதிக ளெவராவரோ? பிள்ளைகளுகளுக்குக் கல்விகற்பிக்கத்தவறினால் அவர்கள் இக்காலத்திய கைத்தொழில் களுக்கும், உயர்பதவியி லமர்வதற்கும் யோக்கியதையற்றவர்களாய் விடுகிறார்க ளென்பதை நாம் நன்குணர்வோம். இதையறிந்து மென்னே? பிறர்கல்வியையும் அந்தஸ்தையும் பார்த்துப்பொறாமையடைகிறோம். அவ்வாறடைந்து மென்னே? நாமெல்லோரும் ஒருங்கு சேர்ந்து உயர்கல்வி கற்கப் பிரியப்படும் பிள்ளை களுக்குப் போதுமான உதவி செய்யச் சித்தமாகவேண்டும். அன்றேல் பிறர் நம்மைக் கீழ்ப்படுத்தி விடுவார்கள். ஏனெனில் கல்வியே சிறந்தது. கல்வியால் இகபர சாதகங்கள் சரிவர கைகூடும்.

உயர்கல்வியை ஆடவர்கள் கற்றபோது அவர்களுக்குத் தகுந்த மாதர்களும் கல்வி கற்று நாயகர்களுக்குப் பெருந்துணையாக விருப்பதவஸ்யம். குடும்பத்தை நிர்வகிப்பர்கள் மாதர்களேயன்றி புருஷரல்லர். சன்மார்க்கத்திற்கும், செல்வத்திற்கும், கௌரவத்திற்கும் மூலாதாரமானது பெண்கல்வியே என்று நாம் நமது கவனத்தில் வைக்கவேண்டும். கற்றமாதர்கள் திறமையுடன் தமது நாயகர்களிடத்தும், மாமன், மாமி, முதலிய சுற்றத்தார்களிடத்தும் அவரவர்களுக்குத் தக்கவாறு நடந்து வருவார்கள். இவற்றில் குறைவு வந்தால் பிறரால் அவமதிப் படைவார்கள். இவ்வவமதிப்பைக் கற்றமாதர்கள் கருதமாட்டார்கள். கல்லாதமாதர்கள் குடும்பத்தைப் பரிபாலிக்க விதரணையற்றுக் கற்ற ஆடவர்களுக்குத் துன்பங்களை விளைவிப்பார்கள். இத்தகையோர்களை மற்ற ஸ்திரீகள் அவமதிப்பார்கள். இதனால் குடும்பநாயகனுக்குக் துக்கப்பிராப்தி சம்பவிக்கின்றது. ஓர் கல்விமான் பிரகிருத சாஸ்திரம். ரசாயனசாஸ்திரம், வேதாந்தசாஸ்திரம் முதலிய நூல்களைக் கற்று உயர் பதவியி லிருக்கும் பட்சத்தில் அவர் மனைவி கல்வியும் நாகரீகமுமில்லா மூடவியாயிருந்தால் அவர்களது குடும்பத்தில் என்ன சுகமுண்டாகும்? சுகங்கெட்ட இல்லறம் இடுகாடே. கடவுளாலமைத்த உலக நீதி சாலையின் பயனை நன்குணராதமாந்தர்களுக்கு நற்பதவி எங்ஙனங்கிடைக்கும் கல்லாத ஸ்திரீகள்கோரிய வண்ணம் துர்தேவதைகளது பூஜைக்கு ஆடு, கோழி, முதலிய பிராணிகளை பலியிட்டுத் தின்ன வேண்டுமென்றால், கல்விகற்ற ஆடவர் அங்கீகரிப்பாரா? மூடமாதரால் விழிக்க வேண்டுந்தான். இவ்வாறு பல இடையூர்கள் சித்திப்பது ஸகஜம்.

குடும்பத்தைச் சீர்படுத்தி தேவாலயமாக்கக்கருதும் குடும்பநாயகன் கற்ற கல்வித் திறமைக் கொத்த நாயகி கல்வி கற்றவளாயிருத்தல வேண்டும். அன்றேல்



(விவாகமில்லா) பிரஹ்ம சரியத்தையே கைக்கொள்ளுதல் நன்றாம். ஆகவே பெண்களைப் பெற்றோரும், மற்றோரும் தங்களது புத்திரர்களுக்குக் கல்வியை யூட்ட வேண்டும். அப்போதல்லவோ நமது குடும்பங்கள் சிறப்படையும். இச்சிறப்புக்கிசைந்த குடும்ப நாயகியின் கீர்த்தி இகபரத்திலோங்கிச் சகத்தைத் தருமென்பதற் கையமில்லை.

ஆஸ்திகன்.

***

## விஸ்வகர்ம 2-வது கான்பரன்ஸில் வாசிக்கப்பட்ட குறிப்பிட்ட வியாசங்கள்.

### பென்ஷன் தாசில்தார் பிரம்மஸ்ரீ தூப்பாக்சாரியார் அபிப்பிராயங்கள்.

விஸ்வ பிராமண வம்சத்தின் மதசமய ஆசார சீர்திருத்தங்களைப்பற்றி சில விஷயங்கள் இப்போது நடக்கும் கான்பரன்ஸின் கவனிப்புகளை இதனடியில் சுருக்கமாய் கூறுது செய்யப்பட்டிருக்கிறது. இது அவசியமென்று சபையாருக்குத் தோன்றினால் பிரசங்கத்தில்இது ஒரு சப்ஜக்டாக சேர்த்துக்கொண்டு அதின்படி நடிக்கும்படியான வம்ச கட்டுமானத்துக்கு உட்படுத்த வேண்டியது மிகவும் அவசியமென்று நினைக்கிறேன். இந்த வம்சத்தின் மற்றக் கைத்தொழில் முதலானது விருத்தி செய்வதைப் பற்றி நவீனமாய் ஆசரிக்கவேண்டிய விஷயங்களைப் பற்றியும், இன்று சீர்திருக்கவேண்டிய ஒழுக்குகளைப் பற்றியும் முன்னமே கான்பரென்ஸில் கவனிக்கப்பட்டிருப்பதாய்த்தெரியவருவதால் மறுபடியும் அவை புஷ்பரீகரிக்கவேண்டியது அனுவசியமாய்க் காணப்படுகிறது.

இந்த உலகத்தில் விஸ்வபிராமண வம்சம் ஆதி வம்சமென்றும் எல்லா வகையிலும் மேன்மையுள்ளதென்றும் இந்த வம்சஸ்தர்களாலேயே உலக வாழ்வுக்குத் தேவையான காரியங்களும் நடவடிக்கைகளும் நடந்து வருகிறதென்பது வேதசம்மதமாயும் எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகவும் இருக்கின்றது.

3. இந்த வம்சத்தாரின் உண்மையான கிருத்தியங்கள் இன்னதென்றும் அவை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரவேண்டிய வழி யின்னதென்றும் தெரிந்து கொள்ள சக்தியில்லாமல் போவதினால் தான் இந்த வம்சத்தின் உண்மையான ஸ்திதி யின்னதென்று தெரியாமல் போகவும் அதினாலிந்த வம்சம் பிரகாசத்துக்கு வராமல் ரொம்ப விசனத்தில் கலந்து போனதைப் பற்றித்தான்நாமனைவரும் பரிதாபப்படவேண்டிய விஷயமாயிருக்கிறது.

4 இப்படிப் பிரகாசிக்காமல்போவதற்கு முக்கிய காரணம் போதுமான மட்டில் கல்வியில்லாமல் போனதே யன்றி வேறில்லை.

5. கல்வியில்லாமையால் ஆச்சாரமின்னதென்றும் அதை அநுஷ்டிக்காமல் போவதினால் சம்பவிக்கும் தீங்குகள் இன்னதென்று தெரிந்துகொள்ள வகையில்லாமல் அனாச்சாரத்தில் தான்முழுகி மூடத்தனத்தையும் மூர்க்கத்தையும் வஹிக்கவேண்டியதாய் நேரிடுகிறது.

6. இவ்வித குறைவை நிவர்த்திசெய்வதற்கு மதசம்பந்தமானவித்தியாசாலைகளை ஏற்படுத்திக் கூடியவரையில்வேதத்தையும் கிரந்த பரிசீலனை செய்திருக்கப்பட்டவர்களைக்கொண்டு மதசம்பந்தமான கல்வியும் சிலமட்டில் லோக விவஹாரத்தில் ஞானமுண்டாகும்படியான கல்வியும் விருத்தி செய்விக்கவேண்டியது முக்கியமான விஷயம்.

7. இதற்காகப்பலபிரதேசங்களில்வசிக்கும் குலாபிமானமுள்ள நம். விஸ்வபிராம்ண சபையார் யாவரும் அப்போதைக்

கப்போதிரேக பிரயாசையுடன் அவசியமானமட்டில் திரவிய சகாயமும் செய்து விருத்திக்குக் கொண்டுவர வேண்டியது பிரதானகாரியம்.

8. இவ்விதமான பாடசாலைகளில் மதசம்பந்தமான இதனடியில் சுருக்கமாய்க் காட்டும் ஆச்சார விவஹாரங்களைப் பற்றி வித்தியார்த்தி கற்பிக்கத் தொடங்கினால் அதேசமயத்தில் வித்தியார்த்திகளுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் ஷேவிதிகள் கூடியவரையில் சுலபமாய்க்கற்று அவற்றை ஆச்சாரத்திற்கு கொண்டு வரவும் அநுகூலமாயிருக்கும்.

9. கல்வியினுலுண்டாகும் முக்கியமான பதவிகளுக்காக முதலில் குருவை ஏற்படுத்தை அறிந்து அவருடைய உபதேசம் பெற்று அந்தப்படி நடக்கவேண்டியதுமுக்கியம்.

10. குருவானவர் இருட்டை என்றால் அஞ்ஞானத்தைப்போக்கடிக்கபட்டவரானதால் ஸிஷியருடைய அஞ்ஞானத்தை நசிக்கச் செய்து பக்தியை பிரேபிக்க அதனால் மனதில் இருக்கும் மலினம் என்றால் கெட்டஸ்திதியை நாசப்படுத்தி விடுவார் குருக்கள் 2 விதமாய் (பிரிவுகளாய்) பாவிக்கலாம் அதானது:

1 பரிபூர்ணம்—காரணகுரு.
2 அபரிபூர்ணம்—காரியகுரு.

தெலுங்கு சுலோகம்.

யோகரதோவா, போகரதோவா, சங்கரதோவா, சங்கஹீனஹ் யஸ்ய பிரம்மணிரமதே, சித்தம், நந்தி, நந்தி, நந்ததேவா.

என்றால் யோகரதோவா, யோகமந்திரயோகம் முதலான யோகங்களில் ரதோவா ஆசக்தி அடைந்திருப்ப வன்போல் தோறையவனுகிலும் யோகரதோவா, போகஸக்கிரச்சந்தன, நிதிதியாஹ பவத்தில் ரதோவா, அபிலாஷை அடைந்தவன்போல் தோன்றப்பட்டவனுகிலும், சங்கரதோவா, சங்கபுத்திர மித்திரா திஜன கோஷ்டியில் ரதோவா அனுராகதி அடைந்தவன் போல் தோற்றப்பட்டவனுகிலும், சங்கவிஹீனோவா சங்கவர்ஜிதனு யிருப்பவன் போல் தோன்றப்பட்டவனுகிலும் எவஸ்யா எவனிட சித்தம் மனது பிரமணி அவஸ்த ரத்திரய் ராக்ஷியமாயிருக்கும், சர்வ பரிபூரணமாயிருக்கும் வஸ்துவில் ரடஇதே அயாகமாவதினால், ஆநந்த மடைகிறானோ சஹ, அந்த புருஷன் நந்ததி நந்ததி நந்ததேவா எப்பவும் ஆநந்த ஸ்வரூபமாகவே யிருந்திருக்கிறேன். என்றால், மனால் யமே மோக்ஷமென்றும் மனுவிகாரமே உலகமென்றும் பஹனியருடைய தாத்பரியம்.

இதன்படி அநுசரிக்கவேண்டிய விதானம்.

விஸ்வகர்ம வம்சத்தில் பிரதிமனிதனும் பிரதிதினம் அதிகாலை என்றால் உஷகாலத்தில் எழுந்து ஸ்நானம்செய்து பிராதக்கால சந்தியா னுஷ்டங்களையும் தேவதார்ச்சனையும் தீர்த்துக்கொண்டு தன் தன் குலவிர்த்தியாகிய பொன், வெள்ளி, இரும்பு; முதலான வேலைகளில் காலை 7-மணிக்கு பிரவேசித்து 3-அல்லது 4-மணி காலம் வேலைசெய்து நிறுத்திவிட வேண்டியது.

11. பின்மத்தியான ஸ்நான சந்தியாவந்தன முடித்து ஸ்வாமிக்கு மஹா நெய்வேத்தியம் ஆராதித்து மேல தீர்த்தம் வாங்கிப் போஜனம் செய்யவேண்டியது. இந்தப்படிக்கே ராத்திரியிலும் மடியுடன் சாயரக்ஷை சந்தியாவந்தன மாசரித்து ஸ்வாமியை தரிசித்து போஜனம் செய்யவேண்டியது. இவ்வித நிஷ்டைக்குத்தக்கபடி ஸ்திரீகளும் ஆசாரத்துடன் இருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டியது முக்கியம்.



12. இந்த ஆசார விதிப்படிக்கே நடக்கும்படி குழந்தைகளையும் பிரதிதினமும் பழக்கி வைத்தால் வளர வளர இந்த நடவடிக்கையில் பழக்கமுண்டாய் இடை விடாமல் இவ்வித ஆசாரத்தை அநுசரித்து வருவார்கள்.

13. அந்தந்தக்காலத்தில் ஸ்நான சந்தியானுஷ்டானங்களை நடத்தி நிஷ்டையுடன் காரியங்கள் நடத்திவந்தால் மனதுக்கு ரம்மியமாகவும் மோக்ஷ சாதனைக்கு காரணமாகவும் திரேக சௌகரியத்துக்கு ஹேதுவாகவும் இருக்குமென் பதில் சந்தேகமில்லை.

14. நம் வமிசத்துக்கு ஒத்த மேல்கண்ட அநுஷ்டானங்களை ஆசரித்து வந்தால் வேதத்திற்கு ஒப்பாயிருப்பது மாத்திரமே யல்லாமல் இதா மதஸ்தர்கள் நம் வம்சத்தை நீசமாய் நிந்திக்கக் காரணமாவது ஆஸ்பதமாவது இருக்க மாட்டாது.

15. விஸ்வகர்ம வம்சத்தில் வீபூரி மட்டமகாயத்திலி பிட்டாத்தியக்ஷக் குருஸ்வாமிகள் இந்த வம்சத்தார் பிரதிதினம் அநுசரிக்கவேண்டிய ஆசார கிருத்தியங்களைப்பற்றி இதனடியில் காணும் சில நிபந்தனைகள் படிக்கு புருஷர்களும் ஸ்திரீகளும் நடக்கவேண்டியது முக்கியமென்று தெரியப்படுத்தி வருவதால் கான்பரன்ஸ் நடக்கும் அச்சமயத்தில் கூடியமட்டில் இவை அநுஷ்டானத்திற்கு கொண்டு வரும்படி பிரயத்தினப்படல் அவசியமென்று நினைக்கவேண்டியதா யிருக்கிறது.

1. புருஷர்கள் அதிகாலையில் யெழுந்து சவுசவிதி தீர்த்தங்கொண்டு முகப்பிரக்ஷாளனசெய்து விபூதியாவது கோபி சந்தனமாவது தரித்து பிராதசந்தியாவந்தனம் தீர்த்து அவாளவாளுக்கு ஏற்பட்ட தொழில்களை பிரவேசித்து முடிக்க வேண்டியது பின்மத்தியானத்திற்கு கிரமப்படி ஸ்நான சந்தியாவந்தன ஜபதப பீஜாட்சரங்களை நிறைவேற்றி போஜனம் செய்யவேண்டியது.

2, பிரதிதினம் ஸ்திரீகள் காலத்தில் ஸ்நான மடியுடன் லோகபாத்திரங்களில் பாகம் செய்து ஸ்வாமிக்கு நெய்வேத்திய தீபாராதனை ஆகிப் புருஷாளுக்கு போஜனமான பின்பு தாங்கள் புசிக்க வேண்டியது.

3. அமாவாசியை, தக்ஷிணாயனம் உத்திராயணம், சங்கிராமணம், கிருத்திகை, கிரஹணம் இந்த பர்வகாலங்களின் புருஷாள் ஏக புக்தமாயிருந்து தேவருஷி, பிதுரு தர்ப்பணம் செய்ய வேண்டியது அன்று, ஸ்வய கிருஷி செய்யப் பட்டவர்கள் அதற்குச் சம்பந்தப்பட்ட சாமான்களை ஆயுதங்கள் கிரமப்படி பூஜைசெய்து தூபதீப நெய்வேத்திய தாம்பூலங்கள் சமர்ப்பித்து மடியில்தானே போஜனம் செய்ய வேண்டியது.

4. ஸ்திரீகள் மாத மாதம் பஹிஷ்டையானபோது 3 ராத்திரி வெளியில் யிருந்து 4 வது நாள் தைலாப்பியங்கின ஸ்நானம் செய்து வீட்டுக்குள் வரவேண்டும்.

5. சுவந்த வீடுகளிலாவது தாயாதி வீடுகளிலாவது மரணமாய் ஆசவுசம்நேரிட்டால் 10 நாள் வெளியில் யிருந்து 11-வது நாள் ஸ்நானம் செய்து பௌரோஹிதரை கொண்டு தங்கள் தங்கள் வீடுகளில் புண்ணியா வார்ச்சனை செய்வித்து ஸ்வாமிசந்நிதியில்தீர்த்தம்பெற்று பவித்திராளாகவேண்டும். மேற்கண்ட வகுப்பில் பிரசவித்து 'புருடு' என்றால ஆசவுசமுண்டானால் அதற்கு மேல்கண்ட விதிப்படிக்கே நடத்தவேண்டியது. தங்கள் தங்கள் மாத்துரு வர்க்கத்தில் சேர்ந்தவர்களில்மேல்கண்ட விதமான ஆசவுசங்கள் நேரிட்டால் 3 ராத்திரிகள் வெளியிலிருந்துசுத்த புண்ணியவார்ச்சனை செய்வித்துப் பவித்திராளாகவேண்டும்.

6. தெலுங்கு சுலோகம் முருதே உள்ளிபரித்யஜ்யா செண்டாலஹா கோட்டினேபசு என்கிற தர்ம சாஸ்திர ரீதியாய் மாதா பிதூர்கள் வியோக மானவர்களும் பிரதிவருஷம் மரண மடைந்த தினத்தில் மரும் திதி சிரார்த்தத்தை யெழுதி வைத்திருந்து அவாளவாளுக்கு பிரதி வருஷம் அன்ன சிரார்த்தம் பிராமண போஜனம் செய்விக்கவேண்டியது. இந்த விஷயத்திற்காக விஸ்வகர்மா வம்சத்தில் தானே ஏற்பட்டிருக்கும் பௌரோஹிதரை கொண்டு அர்ச்சனை ரீதியாய் சிரார்த்தங்கள் என்றால் திதிகள் நடத்தவேண்டியது சூத்திராள் மாதிரியாய்க் ஆமசிரார்த்த ரீதியாய் நடத்தக்கூடாது.

7. புருஷர்கள் மூடத்தனத்தால்சூத்திர ஜாதி ஸ்திரிசம்பந்தம் செய்து பின்னடைக்கு தம் சிரேஷ்டமான வம்சத்தை கெடுத்து அவ்வித அசாதுரியமான காரியங்களால் பாதிந்தனைக்கு இடம் கொடாமல் வெகு ஜாக்கிரதையாய் பார்த்து அவ்வகை அசாதுரியங்களை நிவர்த்தி செய்யவேண்டியது.

8. புருஷர் சூத்திர ஜாதிகளைபோல், முககூஷவரம் செய்து கொள்ளுவதும் மேல் காதுகளில் முருகு முதலான ஆபரணங்கள் தரிப்பதும் மாமிச பக்ஷணங்களை செய்வதும், நிஷாவஸ்துக்களை சாப்பிடுவதும் பலவித வேஷங்கள் போடுவதும் அவாளவாள் செய்யவேண்டிய ஜாதி கிருஷிகளுக்கு நேர்விரோதமான காரியங்கள் செய்வித்தும் இவ்வித அனுசாரமுள்ள கிருத்தியங்களை செய்யாமல் நம் வம்சத்தில் ஆச்சார மஹிமை தெரிந்த கனவான்கள் தடுத்து சன்மார்க்கத்திற்குக் கொண்டுவரவேண்டியது முக்கியமான அம்சமாயிருக்கிறது. அகஸ்மாத்தாய் மேல்கண்ட கெட்ட வழிகளில் பிரவேசித்தவர்களை நம் வம்சத்தில் ஏற்பட்டிருக்கும் குருஸ்வாமிகள் மூலமாய்ப் பரிசுத்தம் செய்விக்க வேண்டி புருஷராவது ஸ்திரீகளாவது நம் வம்சத்திற்கேற்ற ஆசாரங்களை விட்டு மலினமான வஸ்திரங்களைத் தரித்து ஸ்நானஜபதப நிஷ்டைகளை விட்டு சூத்திரா சாரங்களை அனுசரியாமலிருக்கும்படி அந்தந்த வகுப்பின் பெரியதனக்காரர்கள் பார்த்து அப்போதைக் கப்போது சீர்திருத்தவேண்டியது.

9. அந்தந்த குடும்பத்தில் ஆண் பிள்ளைகளுக்கு 5-வயதான உடனே வித்தியாப்யாசம் செய்வித்து ஸ்நான சந்தியானுஷ்டானங்களை ஆசரிப்பதற்கு யோக்கியமுடைவனாய் செய்து 12 அல்லது 16 வருஷங்கள் வரையில் வித்யாப்யாசம் செய்வித்து அதனால் பரிபூரண விவேகத்துக்கு இடமாக்கி மத கிரந்தங்களை ஆராய்ந்து பார்த்து சதாசாரமான கிருத்தியங்களை அனுசரிக்கவேண்டியது.

10. ஸ்திரீகள் தங்கள் தங்கள் புருஷர் வியோகமான உடனே 10-வது நாள் மாங்கல்யத்தோடு தான் தரித்திருந்த எல்லாவித ஆபரணங்களையும்எடுத்துவிட்டு (என்றால்) பரித்தியஜம் செய்து அதுகளை விபூதி தரித்து வரவேண்டியது. பரிசுத்த வஸ்திரங்களை தரித்து சதாசாரத்துடன் காலத்தைக் கழிக்கவேண்டியது.

***

## ஹென்றி போர்டு.

## HENRY FORD.

ஐரோப்பாவிலே யுத்தம் என்னும் பெயருடன் நடக்கும் அநியாயமான கொடுங் கொலையை நிறுத்திச் சமாதானம் உண்டுபண்ணும் நோக்கத்துடன் சென்ற வருஷ இறுதியில் முயற்சி செய்த ஹென்றி போர்டு என்பவரின் நாமத்தை இப்பத்திரிகைவாசிப்பவர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அரண்களில் போர்புரியும் வீரர்களை கிறிஸ்மசுக்குள் அவரவர்கள் வீடுகளுக்கு அனுப்பி விடுவேன் என்று கூறி, சென்ற வருஷ இறுதியிலே அவர் சில சிநேகிதர்களை அழைத்துக் கொண்டு ந்யூயார்க் நகரிலிருந்து ? ஆர்க் என்னும் கப்பலில் ஏறி ஐரோப்பாவுக்குப் புறப்பட்டு வந்து, ஸ்வீடன் போய்ச் சேர்ந்தவுடன், அவர், திடீரென்று சுகவீனமாய்விட, தமது பரிவாரங்களை அங்கே நிறுத்தி விட்டு அவர் மீட்டும் அமெரிக்கா போய்ச் சேர்ந்தார் என்ற சமாசாரம் வரை நமக்குத் தெரியும். அவர் சமாதானத்திற்காகச் செய்த முயற்சி அவ்வளவு தானோ வேறு ஏதேனும் செய்தாரோ அல்லது இன்னும் முயற்சி செய்து கொண்டிருக்கிறாரோ நமக்குத் தெரியவில்லை. ஆயினும் அவர்செய்தமுயற்சி தோல்வியாய் முடிந்த தென்பது முடிந்த விஷயம். ஆனால் அவரது துணிவுபுகழத்தக்கதே. யுத்தத்தில்சேரா திருக்கும் அமெரிக்க ப்ரஜாங்கத்தாரும் மற்றவர்களுமே இந்த ராக்ஷஸப்போரைநிறுத்த வழியின்றிவிழித்து நிற்கும்பொழுது யான் இந்த யுத்தத்தைநிறுத்தமுயலுவேன்என்று உறுதிகொண்டு எழுந்த தனி மனிதரான ஹென்றி போர்டின் மனத்திட்பம் பயன்படாது போயினும், புகழத் தக்கதே யன்றோ? இவரது சமாதான முயற்சியைக் கண்டு நகைத்து இவரைப்பித்தரென்று கருதியவர்களுக்கு இவரது மற்றக் காரியாதிகளை நோக்கும் பொழுது இவர் ஒரு பெரிய பரோபகாரி யென்னும் விஷயம் விளங்காமற் போகாது. அதனால் அவரது சரித்திரம் இங்கு சுருக்கமாகக் கூறப்படுகிறது.



மிகத்தாழ்ந்த நிலைமையி லிருந்து மிக உயர்ந்த நிலைமைக்கு வந்த அமெரிக்கர்களுக்கு ஹென்றி போர்டு ஒரு தக்க உதாரணமாவார். அவரது பால்யப் பருவமும் வாலிபப் பருவத்தின் முற்பகுதியும் வறுமையிலேயே கழிந்தன. ஆயினும் அவர் சிறு பிராயமுதலே முன்னுக்கு வரவேண்டுமென்ற ஆவலுடன் இருந்தார். மோட்டார் வண்டி முதலிய வற்றுக்குரிய கருவிகள் செய்வதில் அவருக்கிருந்த சிரத்தையும், உலகத்திற்கு மிக அவசியமானவதாவது ஒன்றைக் கண்டுபிடிப்பதில்அவருக்கிருந்த சலியாத முயற்சியும்அவருக்கு லட்சக் கணக்கான பணத்தையும் பேரையும் உண்டுபண்ணின. மோட்டார் வண்டி சம்பந்தமான தொழிலிலேயே தமது கவனத்தை யெல்லாம் செலவிட்டு இப்பொழுது இந்த பூலோகத்திலே வழங்கும் மோட்டார் வண்டிகளில் மூன்றில் ஒருபகுதியை அவர் எவ்வாறு செய்தார் என்னும் விஷயம் ஓர் விநோதமான கதையாயிருக்கும். 'போர்டு கார்' என்னும் பெயருடன் உலகத்தில் உள்ள மோட்டார் வண்டிகளெல்லாம் இந்த ஹென்றி போர்டு என்னும் பிரபுவின் தொழிற்சாலையில் செய்யப் பட்டவையே.. அதனால் அவருக்கு ஏராளமான பொருள் கிடைத்ததென்பதைச் சொல்வது மிகையாம். இனி, அவர் எவ்வாறு பொருள் சம்பாதித்தார் என்பதை விட அவர் தமது பொருளை ஜனங்களின் க்ஷேமத்திற்காக எவ்வாறு செலவிடுகிறார் என்னும் விஷயமே முக்கியமானது.

நமது நாட்டிலுள்ள பல தனவந்தர்களைப்போல, செல்வத்தைப் பிதுரார்ஜிதமாக அடையாமல் ஹென்றி போர்டு சிரத்தையாலும் உழைப்பாலும் பெருஞ்செல்வத்தை அடைந்தார். அதனால் அவர் தொழிலை கௌரவமாகக் கருதுபவர். (இங்கிருக்கும் ஒரு சிறுபொருளை அங்கே எடுத்து வைத்தால் அது கௌரவக்குறைவாகும் என்று கருதும் நமது நாட்டிலுள்ள பலரின் அறிவீனம் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் அநேகமாய் இல்லை. அதனாலேயே அவர்கள் சிறந்துவிளங்குகிறார்கள்.) அவர் உழைப்பை கௌரவமாகக் கருதிய போதிலும் வேலைக்குத் தக்க கூலியில்லாவிடில் அது உழைப்பாளிகளின் உள்ளத்தில் கௌரவத்தை உண்டு பண்ணாது என்று கருதுகிறார். தக்க இடத்திலும் நல்ல சம்பளத்திலும் வேலை அமைத்து, எஜமானனும் வேலையாட்கள்மீது சகோதரர்கள் போல அன்பும் ஆதரவும் உடையவராயிருந்தால் எத்தகைய குணக்கேடர்களும், குற்றவாளிகளும்கூடத் திருந்தமடைவார்கள் என்று

அவர் கருதுகிறார். குடும்பபந்தமும் குழந்தைகளின் பந்தமும் ஒருவன் கிரமமான வாழ்க்கை நடத்தும்படி நல்வழியில் செலுத்துவதில் துணை செய்கின்றன என்பது அவரது அபிப்பிராயம். முன்னிலை அடையவேண்டுமென்ற ஆவலுள்ளவர்களுக்கே உதவிசெய்ய முடியும் என்பது உண்மையே; ஆயினும், முன்னிலை அடையவேண்டுமென்று முயற்சி செய்வோருக்குத் தங்களால் இயன்றமட்டும் உதவி செய்யவேண்டியது ஜன சமூகத்தாரின் கடமையாகுமென்று அவர் கருதுகிறார், அவர் சொல்வது போலவே செய்து வருகிறார். அமெரிக்கா ஐக்கிய நாட்டில் மிச்சிகன் மாகாணத்தில் டெட்ராயிட் என்னும் நகரத்தை அடுத்த ஹைலண்ட் பார்க் என்னும் இடத்தில் அவரது தொழிற்சாலையிருக்கிறது. அதில் அவர் தமது கொள்கைப்படியே அநுஷ்டானத்தில் நடத்தி வருகிறார். அவர் தொழிற் சாலையில் மிக உயர்ந்த கூலிகொடுக்கப்படுகிறது. உயர்ந்த கூலியென்றால் நமது நாட்டுக் கூலி விகிதத்தை விட உயர்ந்த கூலியென்பது மட்டுமல்ல, அமெரிக்காவிலுள்ள வேறு எந்தத் தொழிற்சாலையில் கொடுக்கப்படும் கூலிவிகிதத்தை விட உயர்ந்த கூலி.

1914-ம் வருஷத்தில் ஹென்ரி போர்டுக்குப் பெரிய லாபம் கிடைத்தது. அதில் 3 கோடி 60 லட்சம் ரூபாயைத் தம்மிடம் வேலை செய்யும் சுமார் இருபதினாயிரம் தொழிலாளிகளுக்கும் பகிர்ந்து கொடுத்தார். லாபத்தைப் பகிர்ந்து கொடுத்தலாகிய இந்த முறையால் கூலியாள்களின் சம்பளம் இரட்டிப்பாய் விட்டது.

அவரது தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்கு (8-மணி நேரம்வேலை செய்வதற்கு) 22 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குக் குறைந்த சம்பளம் 15-ரூபாய். திட்டத்திற்கு அதிகமான வேலை செய்பவர்களுக்கு அந்த வேலைக்குத் தகுந்த பிரத்யேகமான கூலி கொடுக்கப்படும். வேலையாட்களுக்கு லாபத்தைப் பங்கிட்டுக்கொடுக்கும் ஏற்பாட்டைப் பற்றி ஹென்ரி போர்டு பின்வருமாறு கூறுகிறார்:

“முதலாளிகளும் கூலியாட்களும் வரும்படியைப் பிரித்துக் கொள்ளும் விதம் திருப்தியாயில்லை. வேலையாட்கள் சிரேஷ்டமான பாகத்தை அடைய உரிமையுடையவர்கள். எங்கள் கொள்கையை எந்த வழியிலாவது அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்: அதனால் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம்.

இது எங்களை மட்டும் சம்பந்தித்த முறைதான். ஆனால், வருவாயைச் சரியாகப் பங்கிட்டுக் கொடாதிருக்கும் விஷயத்தை மற்ற முதலாளிகளும் கவனித்து, வேலையாட்களுக்குக் கிரமமாகப் பங்கிட்டுக் கொடுக்க முயல்வார்களென்று நம்புகிறோம்.”

ஹென்ரி போர்டின் தொழிற்சாலைகள் இரவும் பகலும் வேலைசெய்கின்றன. 8-மணிநேரத்துக்குமேல் யாரும் வேலைசெய்யக் கூடாதென்பது அவரது கட்டாயமான விதி. அதனால் நாளொன்றுக்கு மூன்று முறை வேலையாட்கள் மாறுகிறார்கள்.

ஹென்ரிபோர்டின் தொழிற்சாலைகளில் வேலை செய்வோரில் அநேகர் சாதாரண மனிதர்கள். அவர்கள் கருமான் தொழிலில் முதிர்ந்த அநுபவம் உள்ளவர்களுமல்ல; யந்திரவேலையில் சாமர்த்தியசாலிகளுமல்ல. அவர்களில் அநேகரை ஒரு வேலையுமின்றித் திரிந்தவர்களென்று கூறலாம். அவர்களில்பலர் பலவாறான குற்றங்களுக்காகத் தண்டனையடைந்து சிறைச்சாலைக்குச் சென்றவர்கள்; பலர் குடியர்களாயும் வெறியர்களாயும் இன்னும் வேறு பல குற்றங்களையுடையவர்களாயும் இருந்தவர்கள். போர்டின் தொழிற்சாலையில் வேலைக்காக விண்ணப்பம் செய்யும் ஒருவனுக்கு அவன்முன் அயோக்கியனாயிருந்தானென்ற ஒரே காரணத்தால், வேலை கிடையாமற் போவதில்லை. இனி ஒழுங்காய் நடப்பதாக உறுதி கூறி, கிரமமான வாழ்க்கை செலுத்த வேண்டுமென்னும் சிரத்தை கொண்ட எவனுக்கும் அங்கே வேலைகிடைப்பது நிச்சயம்.



குற்றவாளிகளாயிருந்து சிறைக்குச் சென்று வந்தவர்கள், குடியர்கள், மடியர்கள், இவர்களெல்லாம் தங்களுக்கு அங்கே கொடுக்கப்பட்டுள்ள வேலைகளின் நுட்பங்களை மிகச்சிரத்தையுடன் அறிந்து கொள்ள முயல்கிறார்கள்; அவர்கள் தங்கள் வேலைகளை மனச்சாட்சிக்கு விரோதமின்றி, சந்தோஷத்துடன் செய்கிறார்கள். மிஸ்டர் போர்டுக்குக் கிடைத்துவரும் அபரிமிதமான லாபமே இதன் உண்மையை வெளிப்படுத்துகிறது (1913-ம் வருஷத்தில் அவருக்கு 6-கோடி ரூபாய் லாபம் கிடைத்தது) மனிதரின் உழைப்பைக் குறைப்பதற்காக அவரது தொழிற்சாலையில் பல யந்திரங்கள் ஏற்பட்டிருந்த போதிலும், மனிதரின் உழைப்பே அங்கு பிரதானமாக இருந்து வருகிறது. வேலையாட்கள் சரியாக வேலை செய்யாவிட்டால் லாபத்தில் குறைவுண்டாகும்; நஷ்டங்கூட ஏற்பட்டுவிடும். வேலையாட்களெல்லாம் ஊக்கத்துடனும் சிரத்தையுடனும் தங்கள் வேலைகளைச் செய்கிறார்கள். போர்டின் தொழிற்சாலையைப் போய்ப் பார்வையிடும் ஒருவன், அங்கு வேலை செய்யும் எவனும் நேரத்தைக் கடத்திக் கொண்டிருக்கவாவது, தன் வேலையை அரை மனத்துடன் அல்லது பராமுகமாய் வேண்டா வெறுப்புடன் செய்யவாவது மணி எப்பொழுது அடிக்கும் என்று ஆவலோடு கடிகாரத்தின்மீது கண்ணுடன் வேலை செய்யவாவது காண முடியாது. ஒவ்வொருவனும் உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் வேலை செய்கிறான். இதற்குக் காரணம் என்னவென்றால். மிகுந்த நேரம் வேலை செய்யாமலும் குறைந்த கூலி வாங்காமலும் குறைந்தநேரம் வேலை செய்து நிறைந்த கூலி பெறுவோர், நீண்டநேரம் வேலை செய்து குறைந்த கூலி பெறுவோரைவிட, வேலையில் ஊக்கமுள்ளவர்களாயிருக்கிறார்கள். வேலைசெய்யும் நேரம் மிக நீண்டதாயில்லாதிருக்கும் பொழுது சரீரம் இளைத்துப் போவதில்லை. நல்ல சம்பளம்பெறுவோன் நல்ல உணவை உண்டு சௌகரியமாகவும் சுகமாகவும் வாழ்கின்றான். அதனால் அவனுக்கு வேலையில்லாதிருக்கும்பொழுது இளைப்பாற வசதி ஏற்படுகிறது.

மிஸ்டர் போர்டின் வசீகரத்தன்மையும் அவரது உயர்ந்த நோக்கங்களும் அவரிடம் வேலை செய்வோர்களை அவர் வயப்படுத்தி ஒவ்வொருவனும் முழுமனத்துடன் வேலை செய்யுமாறு செய்கின்றன. வேலையாட்களை அன்புடனும் அநுதாபத்துடனும் நடத்துவதால் லாபம் மிகுதியாய்க் கிடைக்கும் என்பதைக் காட்டுமாறு தனது எஜமானனுக்கு உதவியாயில்லாத ஒரு வேலையாட்கூட அவரது தொழிற்சாலையில் இல்லை.

தம்மிடம் வேலை செய்வோர் தமக்கு உண்மையாக நடந்துகொள்ளும்படி அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் குணம் அமெரிக்கர்களிடம் மிகுதி. அவர்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் செய்யும் ஒவ்வொரு செய்கையும் அவர்களிடம் வேலை செய்யும் வேலையாட்களின் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்து அவர்களுக்கு மதிப்பையும் பிரியத்தையும் உண்டு பண்ணுகிறது. பிறரைத் தயவுப்படுத்தும் இந்த நற்குணம் மற்ற ஜாதியார்களிடமும் உண்டு. ஆனால் அமெரிக்கர்களிடம் இந்த குணம், அனைவரையும்விட, மிகுதியாயிருப்பதாகத் தெரிகிறது.

முன்னிலை அடைய விரும்புவோருக்கு நல்ல சம்பளத்தில் தக்க வேலை கொடுத்து ஆதரிப்பதுடன் மிஸ்டர் போர்டு திருப்தியடைந்து விடவில்லை; வாழ்க்கையாகிய காடு முரடான பாதையில் செல்லும்

அவர்கள் இடையிலுள்ள படுகுழிகளில் வீழ்ந்து விடாமல் பாதுகாப்பதும் தமது கடமையாகக் கொண்டிருக்கிறார். அதற்காகத் தமது தொழிற் சாலையில் ஜனோபகார இலாகா என்ற பெயருடன் ஒரு இலாகா ஏற்படுத்தியுள்ளார். அந்த இலாகாவில் சுமார் 80 பேர்வரை வேலை செய்கிறார்கள். தீயவழிகளில் செல்லக் கூடியவர்கள் என்று தோன்றுகிறவர்களின் நடவடிக்கைகளைக் கவனித்து வருதலும் சன்மார்க்கத்தை விட்டுத் தவறக் கூடியவர்களை அங்ஙனம் தவறிவிடாவாறு உதவி செய்தலும் அவர்களது கடமை.

குறித்த ஜனோபகார இலாகா அதிகாரிகள் வேலையாட்களின் நடவடிக்கைகளை அறிதற்காக ஒற்றர்கள் வாயிலாக உளவறியும் முறையைக் கைக்கொள்ளவில்லை. ஒருவனது நடத்தையைப்பற்றி, அவன் இல்லாத சமயத்தில்—புறத்தில்—விசாரிப்பதில்லை. ஒவ்வொரு வேலைக்காரனும் தனது காரியங்களைப்பற்றி, தான் எவ்வாறு காலக்ஷேபம் செய்தான் என்பதுபற்றியும் தான் சம்பாதித்த பொருளை எவ்வாறு செலவிட்டான் என்பதுபற்றியும் வருஷத்தில் மூன்று முறை மேற்படி இலாகா அதிகாரிகளுக்கு அறிக்கையிடவேண்டும். அந்தச் சந்தர்ப்பங்களில் அவனது மனைவியாவது சிநேகிதர்களாவது ஆஜராயிருப்பார்கள். அவன் பொய் கூறுவதாக, அல்லது உண்மையை மறைக்க முயல்வதாகத் தெரிந்தாலொழிய, அவன் பேசுவதே உறுதியாகக் கொள்ளப்படுகிறது. அவன் பொய் பேசுவதாகத் தெரிந்தால் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு எச்சரிக்கவோ தண்டிக்கவோ படுகிறான்.

எந்த வேலைக்காரனும் எந்த சமயத்திலும் மேற்படி இலாகா அதிகாரிகளிடம் சென்று தனது கஷ்டத்தைத் தெரிவித்துக் கொள்ளலாம்; அவனுக்கு அநுதாபமும் ஆதரவும் ஏற்படுவது நிச்சயம். அவனது கஷ்டத்தையும் குறைகளையும் அதிகாரிகள் ரகசியமாகவே வைத்திருப்பார்கள். தனது குறையை அதிகாரிகளிடம் தெரிவித்துக்கொண்டால் ஒருக்கால் தனக்கு வேலை போய்விடுமோ என்ற பயம் அவனுக்கு இல்லை. அங்கே வேலைக்காரர்கள் இந்த இலாகா அதிகாரிகளிடம் தங்கள் குறைகளைத் தெரிவித்துக் கஷ்ட நிவர்த்தி அடைகிறார்கள். இதனால் இந்த ஏற்பாடு எவ்வளவு அநுகூலமாய் அமைந்திருக்கின்றதென்பது விளங்கும்.

தமது [illegible] முயற்சிகளை வேலையாட்கள் எவ்வாறு கருதுகிறார்கள் என்பதையும் அவை பயன்படுகின்றனவா என்பதையும் அறிதல் பொருட்டு மிஸ்டர் போர்டும் அவரது பிரதிநிதிகளும் தங்களை இன்னாரென்று காட்டிக்கொள்ளாமல் வேற்றுருவத்துடன் சென்று பலமுறை விசாரணை செய்கிறார்கள். பெருநோக்கத்துடன் செய்யும் தமது ஏற்பாடுகள் நன்கு பயன்படுகின்றன என்பதை அவர் நேரில் கண்டறிந்து திருப்தியடைகிறார். அவரது ஏற்பாட்டை வேலையாட்கள் பெரியதோர் ஆதரவாகக் கருதுகிறார்கள்.

இந்த ஏற்பாட்டினால் அநேகர் யோக்கியர்களாயும் சன்மார்க்கர்களாயும் முன்னிலை அடைந்திருக்கிறார்கள். இந்த ஏற்பாடு இல்லாவிட்டால் அவர்களில் அநேகர் கெட்டுப்போய் விடுவார்கள். இந்த ஏற்பாட்டினால் அந்த வேலைக்காரர்களின் வாழ்க்கையிலும் அவர்கள் குடும்பத்தாரின் வாழ்க்கையிலும் மிகுந்த ஸௌக்கியம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஏற்பாட்டால் வேலைக்காரர்களின் சொந்தக்காரியங்களில் அனுவசியமாய்த் தலையிட நேரிடுகிறதென்றும் லாபத்தைப் பங்கிட்டுக் கொடுத்தல் முதலிய ஏற்பாடுகள் தமக்குப் பெயரும் புகழும் பாவித் தமது 'மோட்டார்' வண்டிகளின் விற்பனை பெருக வேண்டுமென்ற கருத்துடன் செய்யப்படுகின்றனவென்றும் மிஸ்டர் போர்டின் விரோதிகளான சிலர் கூறுகின்றனர். இதற்குக் காரணம் பொறாமையும், வர்த்தகப் போட்டியும் அற்பத்தனமுமேயாகும். மிஸ்டர் போர்டின் ஏற்பா



டுகளெல்லாம் பரோபகார சிந்தனையால் ஏற்பட்டவையென்பதில் ஐயம் இல்லை.

நமதுநாட்டிலுள்ளபெரியமுதலாளிகளும் வியாபாரிகளும் தங்கள்வேலையாட்களை நடத்தும் விஷயத்தில் மிஸ்டர் போர்டின் சிறந்த முறைகளைப் பின்பற்றல் நன்று. வேலையாட்களை அடிமைகள் போல நடத்தும் காரணத்தால் நமது நாட்டிலுள்ள தொழிற் சாலைகளிலும் வர்த்தக சாலைகளிலும் பல உயிரற்ற உடம்புகள் போல இருக்கின்றன. வேலையாட்களுக்கு நல்ல சம்பளம்கொடுத்தல், லாபத்தில் பங்கு கொடுத்தல், அவர்களது க்ஷேம லாபத்தில் கருத்தைவைத்தல்முதலிய நல்லமுறைகளை நமது நாட்டிலுள்ள வர்த்தகர்களும் கைக்கொள்ள முற்படும்பொழுதுதான் நமது நாடு க்ஷேமம் அடையும். அதனால் இருதிறத்தார்க்கும் மிகுந்த நன்மையுண்டாகும். முதலாளிகளுக்கும் வேலையாட்களுக்குமுள்ள சம்பந்தம் நமது நாட்டில் மிகவும் பரிதாபமான நிலைமையில் இருக்கிறது. இதனைத் தமிழர்கள் ஒருவாறு அறிந்து, கூடியவரை திருந்திய முறைகளைக் கைக்கொண்டு பயன் பெறும்பொருட்டே அமெரிக்கக் கோடீசுவரரும் பரோபகாரியுமான 'ஹென்றிபோர்டின்' இந்தச் சரித்திரம் சுருக்கமாக எழுதப்பட்டது.

நெல்லையப்ப பிள்ளை.

* * *

## அதிகச் செலவால் மிகவுங்கஷ்டம்

"பொருளிலார்க் கிவ்வுலகமில்லை" யெனவும் "பணமில்லாவிடிற் பிணம்" எனவும் ஆன்றோர்களால் பழமொழிகள் வழங்கி வருகின்றன என்பதை எவரும் அறிவர். இங்ஙனமிருக்கச் சிலர் வருவாயறிந்து, செலவு செய்யாது வீண்டம்பத்திற்குத் தம் மனம் எவ்வழி செல்கின்றதோ அவ்வழியெல்லாம் தலைதெரியாமல் செலவழித்து விட்டு 'இஞ்சிதின்ற குரங்குபோல்' விழித்து, சிரமேற் கரம்வைத்து இரவும் பகலும் ஏக்கமுடையவராய் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி ஏங்கி மனம் புண்ணாகின்றனர். அந்தோ! பிரயோஜனமற்ற புன்காரியங்களிலெல்லாம் பல தனவான்களும் ஏழைகளும் மெச்சப் பிரபலமாக வீணே செலவு செய்கின்றனர்.

கைப்பணங்களெல்லாம் செலவழிந்து போயினவே! கையில் பணமுதலியவை ஒன்றுமில்லையே! நவரத்தினங்களால் இழைக்கப்பெற்ற பூஷணங்களெல்லாம் ஒன்றுக்குப் பாதிமாறியும், நிழலைத் தந்து சுகத்தை அனுபவித்தற்கேதுவாய கட்டடமுள்ள வீடுகளையும், தோட்டந் துரவுகளையும் கடன்காரருக்கு மாறிக்கொடுத்துப் பார்ப்போர் நகைக்கப் பரதேசியானோமே என்று, பின் கலங்கிக்கருத்தழிக்கிறார்கள்.

"கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின், எல்லாருஞ்சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை, இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய் வேண்டாள், செல்லா தவன்வாயிற்சொல்'! என்றும் "ஆனமுதலி லதிகஞ் செலவானால், மானமழிந்து மதிகெட்டுப்—போனதிசை, எல்லார்க்குங் கள்ளனாய் ஏழ்பிறப்புந் தீயனாய், நல்லார்க்கும் பொல்லனா நாடு" என்றும் ஔவைப்பிராட்டியின் வாக்கியத்தைப் போராது நாம் சம்பாதித்த பொருள்களையும், நமது முன்னோர்கள் சம்பாதித்த பொருள்களையும் அழித்து அவலமாய்ப் போனோமே! சொந்த வீட்டைவிட்டுக் குடிக்கூலி வீட்டில் குந்தியழும்படி கலைவிதி வந்ததே! பொருள்தனைப் போற்றி வாழ்" என்ற ஔவையின் சிறிய வாக்கியத்தையும் கவனியாதிருந்ததினாலன்றோ பேதையானோம்; என்று சிந்தாகுலமடைந்து புலம்பியழும் பேதையர்கள் நம்மவருள் எத்தனைபேர், பேரிருக்கின்றார்களன்றோ? இவ்வேழைகளாகிய வறுமையாளரைக் கண்ணுறுமிருந்தும், விழியிலார் போல் இக்கஷ்ட காலத்தும் சிலர், அபாரமான செலவுகளைச் செய்து வறுமையாளராய் நின்றது போதாமல் கடன் வாங்கியாவது செலவிட்டுக் கனம் பெறலாமென

என்னுந் தூர்க்குணம் அவர்களினின்றும் அகலவில்லை.

பரக்கச் செலவிட்டுவந்த வழக்கத்தைக் கைவிட வில்லை. இம்மூடத்தனம் எப்படி வந்ததென விசாரிக்கப்புகின் கல்வியில்லாக் குறையென்றே ஏற்படும். சுல்ப கல்வி கற்றவர்களும் இவ்வழக்கத்தைக் கையாண்டு கனமிழந்தழிகிறார்கள். அவர்களை நோக்குங்கால் பூரணக்கல்வி அவர்களுக்கின்மையென்றே புலப்படும். ஆதலின், "பிச்சைபுகினும் கற்கைநன்றே" என்ற ஆன்றோர் வாக்கியப்படி பூரண கல்வி கற்று, அதன்வழி நிற்பதே நன்மையென ஏற்படுகின்றது. ஏனெனின், அக்கல்வியினாலேவ நிற்கின் நல்லுணர்ச்சியுண்டாகிறது. அவ்வுணர்ச்சியுண்டான போது லௌகிக விஷயங்களிலும் வைதிக விஷயங்களிலும் தவறுதலின்றி நடக்க உண்மை நெறி ஏற்படுகின்றது. அந்நெறி நின்றோர்கள் யாவரும் மெச்சவாழ்கின்றனர். அவ்வித வாழ்க்கையினால் இகத்தும் பரத்தும் சுகமடைகின்றார்கள். ஆகவே கல்விப்பொருளே எல்லா விடயங்களுக்கும் அத்தியாவசியமாகத் தேடற்பாலதாகிறது. ஆகையால் நம் பத்திரிகையில் பலகாலும் யாமும் எமது நண்பர்களும் பரக்க எழுதிவிட்டும் அவற்றைக் கவனியாதிருப்பது எதுபற்றியோ அறியேம். இப்படிப்பட்டவர்கள் குலாபிமானத்தைக் கருதி ஒரு காசுங் கொடாது வீண்செலவிட்டு வாணளை வீணாக்கி விடுகின்றார்கள். "அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே"— என்றும், "கானந் தவந்தருமஞ் சந்ததமுஞ் செய்வர்சிவ ஞானந்தனையணைய நல்லோர் பராபரமே"— என்றும் கூறிய தாயுமானவரின் இன்மொழி வாசகத்தை உன்னித் தருமதானங்களாவது செய்கின்றார்களாவென்று பார்த்தால் அவைகளுமில்லை. அறத்தின் பயனை வெறுத்துரைக்கின் நம்மீது மூர்க்கத்தன்மையாய் எரிந்து விழுகின்றார்கள்.

இப்படிப்பட்ட "பொல்லாத மூர்க்கருக்கெத்தனைதான் புத்திபோதிக்கினும், நல்லார்க்குண்டான குணம்வருமோ நடுராத்திரியில், சல்லாப்புடவை குளிர்தாங்குமோ நடுச்சந்தையினில், செல்லாப்பணஞ் செல்லுமோ தில்லைவாழுஞ் சிதம்பரனே—" என்ற ஆன்றோர் கவிக்கு அரும்பாத்திரராய் விளங்குவோர்க்கு யார் சொல்லினும் நல்ல ஞானமுண்டாவது அசாத்தியமாயிருப்பது பற்றியும் இவைபோன்ற இன்னும் அநேக வழியில் சீர்குலைந்துபோகும் நடக்கையைப்பற்றியும் நம் குலோபகாரியெனும் நங்கையானவள் பலகாலும் நீதிகளைப் புகன்று நல்வழிக்காளாக்க நாடொறுங் குலாவிவருகின்றனள். அவளைக்கண்டவர்கள், ஆதரிக்க வருவாராக.

* * *

## இந்துக்களெனும் பெயர் எப்படி வந்தது?

சமஸ்கிருதபாஷையிலே ஆதியில் நமது தேசத்திற்கு "ஆரியவர்த்தம்" என்று பெயர் நமக்கும் ஆரியர் என்று பெயர் வழங்கப்பட்டிருந்தது. ஆரியவர்த்தம் என்பதற்கு ஞானபூமி யென்றுபொருள். ஆதலால் அதில் வசிக்கும் நமக்கு ஞானபூமியில் வசிப்பவரெனப் பொருள்கொடுக்கக்கூடிய ஆரியரெனும் பெயர் வழங்கப்பட்டது. நம்மவர்கள் இந்நாட்டிற் குடியேறி மகமதியர்களை 'அசுத்தர்' எனும் பொருள் கொடுக்கத்தக்க "மூலக்" என்னும் பெயரால் அழைக்கப்படவே, அவர்கள் இவர்களை விசுவாஸமற்றவர்களெனப் பொருள் தரத்தக்க "இந்துக்கள்" எனும் பெயரால் அழைத்து வந்தனர். "மூலக்" என்னப்பட்ட பெயர் மகம்மதியர்களுக்கு நெடுநாள் வரையில் வழங்கப்பட்டிருந்தது. இதை "பாகவத" என்னப்பட்ட இத்தேச சரித்திரம் 10-வது பிரிவிலே 52-வது அத்தியாயத்தில் பார்க்கக் காணலாம்.

சுமார் நாலாயிரத்துச் சில்லரை வருடங்களுக்குமுன் காலியமான் எனப்பட்டவர் சிந்து தேசத்தின் மேற்குப்பக்கத்திலிருந்து



வந்து இந்நாட்டரசராகவிருந்த கிருஷ்ணர் என்பவரை யெதிர்த்துப் போர்புரிந்து வெல்லமுடியாது திரும்பிச் சென்றனர். அந்த காலியமான் என்னப்பட்ட அரசனை 'மூலக்ராஜா' வென்றும் அவர் சைனியங்களை மூலக்சைனியம் என்றும் நம்மவர்கள் அழைத்து வந்தனர். இதுபோலவே மகம்மதியர்களையும் அழைத்து வந்தனர். 1191-வருஷமாகிய கிறிஸ்தவ வருஷத்தில் சகாப்புதீன் கோரி என்னப்பட்ட மகம்மதிய அரசன் டில்லி இராஜ்ஜியத்தைச் ஜெயித்து மகமதிய அரசை இந்நாட்டில் நிலைபெறச் செய்தபோது இந்நாட்டவர்களாகிய ஆரியரை இந்துக்களென்றழைக்கத் தொடங்கினர் அக்காலத்திலே நம்மவருக்குப் பிறதேச பாஷையிலே பயிற்சியின்மையால் அப்பெயரின் பொருள் தெரியாமலே அதனை அங்கீகரித்துக் கொண்டனர். இதனை இந்துதேச பண்டைநாட் சரித்திரமாகிய "பாரத் பர்கி" என்னப்பட்ட நூலில் பார்க்கக் காணலாம்.

விசுவாசமில்லாதவர்கள் என்று பொருள்படத்தக்க "இந்து" என்னும் பெயருக்குப் பொருள் தெரியாதும் தங்கள் தேசத்துக்குப் புறம்பான தேசங்களெல்லாம் நீச தேசமென்றும் அவர்கள் சொல்லும் பாஷையும் நீச பாஷையென்றும் அப்பாஷையைத் தாங்கள் உச்சரித்தால் அந்நீசரோடு பந்திபோஜனஞ் செய்ததையொக்குமென்றும் தங்கள் பாஷையாகிய சமஸ்கிருத பாஷையே சிறந்ததென்றும் கருதியிருந்தனர். அப்படிப்பட்ட தேவபாஷையைத் தற்காலம் நம்மனோர் அகலவைத்து இங்கிலீஷ் முதலிய அன்னிய பாஷைகளைக் கற்றும் சிலர் எதுவும் கல்லாமலும் விட்டிருப்பதாலன்றோ நமது பூர்வநிலைமையும் சிற்ப சாஸ்திரங்களும் மழுங்கிப் போய்விட்டன அப்பாஷையை ஆதரித்து வருவோமானால் குன்றின்மேலிட்ட தீபம்போல் எண்டிசாமுகத்தும் பிரகாசித்து நமது குலத்திற்குரிய அரிய பெரிய தொழில் புரிவதற்கு ஹேதுவாமென்பது தெரியாமலே அழிவுறுகின்றோம். ஆதலின் *சம்ஸ்கிருதபாஷையைக் காஞ்சிரங்காய்போல் கசப்பென விடாது நமது குலச்சிறுவர்களுக்குப் போதித்து வரின் நம் குலமேம்பாட்டிற்கு எவ்வளவோ துணைக்கருவியா யிருக்குமன்றோ? அதனால் புகழும் பொருளும் உண்டாகிப் புண்ணியத்தையும் பெற்றுப் பூவுலகில் பொருந்தி வாழலாகும். இன்றேல் முன்னிலைமையை யடைவது சாத்தியமாகாதென்று பலகாலும் வரைந்தும் வாயாற் சொல்லியும் வருகின்றோம்.

*சுயபாஷை விரும்பி.

* * *

## சென்னை நகரின் சரித்திரம்.

மிஸ்டர் லான்செஸ்டர் என்பவர்செய்த நகர் நிர்மாணப் பிரசங்கத்தில் சென்னை நகரைப்பற்றிசெய்த உபந்நியாசம்:—

சென்னை நகரம் 1639-ம் வருஷத்தில் பிரான்ஸிஸ் டே என்பவர் வெங்கடகிரி அரசரிடமிருந்து சென்னையில் ஒரு துண்டு நிலத்தைப் பெற்றார். 1714-ம்வருஷத்தில் 'மதராஸ் படாம்' என்று வழங்கிவந்தது. 1640-ம் வருஷம் மார்ச்சு மாதம் முதல் தேதியன்று முதல் கோட்டைகட்டப்படுவதற்கு ஆரம்பமாயிற்று. அதுவட்ட வடிவமுள்ளதாயிருந்தது. தென்வடல் 100 கஜமும் கீழ்மேல் 100 கஜமும் விஸ்தீரணமாயிருந்தது. 1655-ம வருஷத்தில் திருவல்லிக்கேணி கிடைத்தது. அங்கே ஒருபட்டணம் அமைக்கப்பட்டது. அதன் மத்தியில் இப்பொழுது இருக்கும் கோவில் இருந்தது. 1693-ம் வருஷத்தில் தண்டையார்பேட்டை புரசைவாக்கம் எழும்பூர் ஆகிய இவைகளை கம்பெனியார் பெற்றார்கள். 1700-ம் வருஷத்தில், செயிண்ட் சார்ஜ் கோட்டையைச் சுற்றிலும் தோட்டங்கள் ஏற்பட்டன. பிளாக்டவுன் என்றபட்டணம் அமைக்கப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடத்தப்பட்டன. 1705-ம் வருஷத்தில் பிட் என்ற கவர்னரின் கீழ் தீவுக்கு

கரைபோடப்பட்டது. மரங்கள் வளர்க்கப்பட்டன. மவுண்ட் என்பது தேக ஆரோக்கிய ஸ்தலமாக உபயோகப்பட்டு வந்தது. அங்கே சில வீடுகள்தான் இருந்தன. 1707-ம் வருஷத்தில் சென்னையிலுள்ள சில நெசவுக்காரர்கள் இப்பொழுதிருக்கும் தங்கசாலைத்தெருவில் ஒரு இடத்தை வாங்கினார்கள். அதில் வீடுகளைக் கட்டிக்கொள்ளுவதற்கு கம்பெனியாரிடமிருந்து உத்திரவைப் பெற்றார்கள். அக்காலத்தில் சென்னையில் உவைட் டவுன் பிளாக்டவுன் என்ற இரண்டு டவுன்கள் இருந்தன. உவைட் டவுனுக்கு மத்தியில் கோட்டை அழகாய் விளங்கி வந்ததென்றும் அதில் ஐரோப்பியர்கள் வசித்து வந்தார்கள் என்றும் அந்த டவுன் அஷ்ட கோண வட்டமாக இருந்ததென்றும் அது கால்மைல் நீளமுள்ளதாக இருந்ததென்றும் அகலத்தில் அதில் பாதி பாகம்கூட இல்லையென்றும் 'தாமஸ் ஸாலோமன்' விவரித்திருக்கிறார். கோட்டையில் வடக்கில் மூன்று ஒழுங்கான தெருக்கள் இருந்தன. தெற்கிலும் அப்படியே இருந்தன. செங்கல் கட்டிடங்கள், வீடுகளில் பல இரண்டடுக்கு மெத்தை. தோட்டங்களில்லை. கவர்னரும் கவுன்ஸிலிலிருந்தவர்களும் பட்டணத்திற்கு தூரத்தில் இருந்த தோட்டங்களை உபயோகித்துவந்தார்கள். பிளாக் டவுன், உவைட் டவுனுக்கு அடுத்தேயிருந்தது. இது பெரிய பட்டணம். இதில் போர்த்துகேசியர்கள் இந்தியர்கள் ஆர்மீனியர்கள் வேறு பல ஜாதி ஜனங்கள் வசித்து வந்தார்கள். இந்த டவுன் சதுர வடிவத்தில் கட்டப்பட்டிருந்தது. ஒன்றரை மைல் சுற்றளவுள்ளதாக இருந்தது. அதைச் சுற்றிலும் 17-அடி கனதியுள்ள செங்கல் சுவர் எழுப்பப்பட்டிருந்தது. பிளாக் டவுனிலுள்ள தெருக்கள் விசாலமாக இருந்தன. அதில் சில தெருக்களில் மரங்கள் வைக்கப்பட்டிருந்தன. அதன் ஒரு பக்கம் கடல் மற்றொரு பக்கம் நதி. சில செங்கல் வீடுகளைத் தவிர, மற்றவைகள் குடிசைகள். ஜன்னல்கள் இல்லை. மத்திய வகுப்பார்களின் வீடுகள் அவைகளைவிட கொஞ்சம் திறமாக இருந்தன. வெளிச்சத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அப்பொழுதிருந்த ஜனங்கள் ஐஸ்வரியமுள்ளவர்களாக இருந்தார்கள். ரொக்கப்பணம் அவர்களிடம் இருந்தது. பிளாக் டவுனுக்கப்பால் தோட்டங்கள் இருந்தன. அவைகளில மா, தென்னை. கொய்யா, ஆரெஞ்சு முதலிய மரங்கள் பயிர்செய்யப்பட்டிருந்தன. அச்சமயம் பிரியப்பட்டவர்கள் அற்பத்தொகையைக் கொடுத்து வேண்டிய பழங்களை வாங்கி சாப்பிட்டு வந்தார்கள்.

1734-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் சிந்தாதிரிப்பேட்டை ஏற்படுத்தப்பட்டது. அங்கே நெசவுக்காரர்களும் சாயம்போடுகிறவர்களும் வந்து குடியேறினார்கள். 1744-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் பிரெஞ்சுக்காரர் யுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள். மிஸ்டர் ஜோஸெப் ஸ்மித் என்பவர் பிளான்போட்டார். கோட்டை முடிவதற்கு முந்தி பிரெஞ்சுக்காரர்கள் எதிர்த்தார்கள். 1749-1759 இவ்வருஷங்களுக்கிடையில்தான் கோட்டை புதிய பிளானில் கட்டி முடிந்தது. 1783-ம் வருஷத்தில் இப்பொழுது காணப்படும் மாதிரியில் கோட்டை கட்டப்பட்டது.

சென்னை நகருக்கு முதல் முதல் ஜலசப்ளை வேலை 1771-ம் வருஷத்தில் ஆரம்பமாயிற்று. 1783-ம் வருஷத்தில் முடிவு பெற்றது. அச்சமயம் கம்பெனியின் அதிகாரிகள் எழும்பூரிலும் வேப்பேரியிலும் நிலங்களை அடைந்தார்கள். 1755-ம் வருஷத்தில் கவர்ன்மெண்ட் ஹவுஸுக்குப் பக்கத்தில் பல கட்டிடங்கள் ஏற்பட்டன. மவுண்ட்ரோட் 1796-ம் வருஷத்தில் விசாலப் படுத்தப்பட்டது. 19 வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் ரோட்டுகளில் மரங்கள் பயிர் செய்யப்பட்டன.

[வன்னியகுல மித்திரன்]



## இந்தியாவின் கல்வியும், கைத்தொழிலும்.

சில பல உண்மைகள்.

இந்தியாவில் ஆங்கிலக் கல்வி பரவ ஆரம்பித்துப் பல வருஷங்களாகியும் கைத்தொழில் விஷயத்திலும், வியாபார விஷயத்திலும் யாதொரு விதமான புதிய சீர்திருத்தமும் இந்தியாவில் அதிகமாக ஏற்படவில்லை. ரசாயன சாஸ்திரம்போன்ற பல சாஸ்திரங்களிலும் பயிற்சிபெற்று பட்டம் பெற்ற இந்தியர் அநேகர் இருக்கிறார்கள். இவர்கள் உத்தியோகங்களில் அமர்ந்து கச்சேரி வேலை செய்வதிலும், தங்களுடைய சுயநலத்தைக் கருதுவதிலும் முழுக்காலத்தையும் செலவிடுகிறார்கள். இந்தியாவின் பொதுப்படிப்பு, தொழிற்கல்வி, விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலிய அவசியமான காரியங்களின் விருத்தியை நினைப்பவர்கள் மிகச் சிறியபாகம்.

சிற்ப வேலை, இரும்பு வேலை, பயிர்த்தொழில் முதலியவற்றில் தேர்ந்தவர்கள் இந்தியருள் ஏராளமாக இருக்கின்றனர். இவர்களில் எவ்வளவு பேர் தனியாகத் தொழிலை ஏற்படுத்தி இந்தியாவின் நன்மையைக் கருதி பாடுபட்டு வருகிறார்கள்? அவரவர்கள் மனதிலேயே நிதானித்துப் பார்த்துக்கொள்ளட்டும்.

* * *

பள்ளிக்கூடங்களில் பயிற்சி பெற்று, பெற்றபடிப்பை எவ்வளவு பேர்கள் தங்கள் தொழிலில் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள் என்று கவனிக்கும்பொழுதுதான் இந்தியாவின் தொழில் நிலைமையின் தாழ்வு நன்கு புலப்படுகிறது.

* * *

இந்தியாவில் தற்காலம் கொடுக்கப் பெறும் தொழிற்படிப்பு ஜனங்களுக்கு ஒரு வித நம்பிக்கையைக் கொடுக்கும்படியானதாகயில்லை. ஏனெனில் இவை அந்நிய பாஷையில் கற்பிக்கப்படுகிறபடியால் அப்படிப்பின் அருமையை அறியக்கூடவில்லை. தொழிற்படிப்புமாத்திரம் தேசபாஷையில் கற்பிக்கப்பட்டிருந்தால் இந்தியாவில் தொழிலாளிகளுக்குக் கஷ்டம் இருக்காது. இவர்கள், அச் சாஸ்திரங்களில் உள்ள அரிய விஷயங்களை நமது நாட்டின் நிலைமைக்குத் தக்கவாறு மாற்றிக் கொள்ள சக்தியுடையவர்களாய் இருப்பார்கள்.

* * *

(தொழிற்) படிப்பை எவருக்குக் கொடுக்கவேண்டுமோ அவரவருக்குக் கொடுக்க வேண்டுமேயல்லாது அதை பிரயோசனப்படுத்த மனமில்லாதவர்க்கும், வழிதெரியாதவர்களுக்கும் கொடுப்பதிற் பயனில்லை.

* * *

இவ்விஷயத்தில் கவர்ன்மெண்டார் சிறிது கவனம் செலுத்தவேண்டும். பொது ஜனங்களும் கூடச்சேரவேண்டும். நமக்குப்படிப்பு அவசியம் வேண்டு மென்று திடமனதுடன் கவர்ன்மெண்டாரைக் கேட்டால் அவர்கள் அதனை மறுக்கமாட்டார்கள்.

* * *

ஆங்கிலம் பயின்றவர்கள் பயிலாதவர்களுடன் சிறிது நெருங்கிப்பழகி அவர்களுடைய சுக துக்கங்களையும் அதிகமாய்க் கவனிக்கத் தலைப்படவேண்டும். நமதுநாட்டிலிருக்கும் கீழ்ஜாதியாருடைய நிலைமையைச்சிறிது உயர்த்தினால் தான் அதற்குத் தகுந்தாற்போல் மேல் ஜாதியென்று சொல்லிக்கொண்டிருக்கும் நாமும் மேலேறலாம்.

வர்த்தகமித்திரன்.

* * *

## 'சாஸ்வதமாக குலாஸ்பதந்தேடு'

(குலநலச்சுவடி.)

ஒவ்வொரு ஜாதியாரும் தத்தம் வகுப்பாரை உயர் நிலைமைக்குக் கொண்டுவரும் முயற்சிகளைக் காலமறிந்து செய்யக் கடைமைப்பட்டிருக்கிறார்கள். சுஜாதியாரில்

பலர் தானம் என்றும், தருமம் என்றும், சத்திரம் என்றும், சாவடி என்றும் பல இடம்பகாரியங்களைச் செய்ய முற்படுகின்றனரேயன்றி, தம் ஜாதிச் சிறுவர்களுக்கு அத்யாவசியகமான வித்யாதான மியற்றி, அது காரணமாக தம் ஜாதியாரை உயர்த்தி குன்றாப் புகழடைய பொருளுதவி செய்ய முன்வருவதில்லை. அந்தோ! இதென்ன விபரீதம். இனியேனும் விஸ்வகர்ம சந்ததியார் கண்விழித்துக் காலம் கழிப்பாராக. சொன்னேனும்! சொன்னேனும்!!

சில உதாரணங்கள்.

நாயுடு ஏழைப்பிள்ளைகள் நிதி.—இம்மாதம் 14உ சென்னை கோமளேசுவரன்பேட்டை ஊத்துக்காடு ஜமீன்தார் மிஸ்டர் W. S. வெங்கடராமஞ்சுலு நாயுடவர்கள் வீட்டில் (நாயுடு) ஜாதியார்களின் கூட்டமொன்று சென்னை ஸ்மால் கோர்ட் ஜட்ஜி மிஸ்டர் T. வரதராஜுலு நாயுடு பீ. ஏ பீ. எல். அவர்களால் கூட்டப்பட்டது. நாயுடு ஜாதியாரின் ஒரு வகுப்பினரான பதமவெலம வகுப்பு ஏழைப்பிள்ளைகளுக்கு உயர்தரக்கல்வி கற்பிக்குமாறு ஒரு நிதி சேர்ப்பதற்கே இந்தக் கூட்டம் கூடியது. ரூபாய் 800 கூட்டத்தில் நன்கொடை யளிப்பதாக வாக்களிக்கப் பட்டது. ஸ்ரீமத் வரதராஜுலு நாயுடவர்கள் ஓராயிரம் ரூபாயும் தஞ்சாவூரில் சப்ஜட்ஜியாயிருக்கும் ஸ்ரீமத் கிருஷ்ணசாமி நாயுடு 500 ரூபாயும் நன்கொடையளிக்க வாக்களித் திருக்கின்றனர். மேற்படி நோக்கத்தை முற்றுப்பெறச் செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட் டிருக்கின்றது. பொருள் அதிகமாக சேர்க்கப்படும்போது இந்தச் சங்கம் ரிஜிஸ்டர் செய்யப்படும்.

மலையாள மாப்பிள்ளைகள்.—மாப்பிள்ளைமார்கள் என்ற ஒரு ஜாதியார் மலையாள ஜில்லாவில் வசிக்கிறார்கள். இவர்கள் முஸ்லீம் மதத்தை ஆசரிப்பவர்கள். பெரும்பான்மையோர் மிக்க எளியவர்கள். அவர்களின் மக்களுக்குக்கல்வி கிடையாது. அப்படி வாசிக்காவிட்டாலும் 'கொரான்' வாசிக்கச் செய்வதன்றி, சில்லரைக் கடைகள் வைக்தும், வியாபாரம் செய்தும், சேவகம்செய்தும் இவர்கள் காலங் கழிக்கிறார்கள் தங்கள் குழந்தைகள் மலையாளபாஷையைக்கற்று ஏதோ கொஞ்சம் கணக்குகள் போடத்தெரிந்து கொண்டால் போதுமென்பது அவர்களின் எண்ணம். இவர்களில் பலர் ஆங்கிலம் படித்தாலும் எலிமெண்டரி படிப்புக்குமேல் வாசிப்பது அபூர்வமாயிருக்கிறது. இவர்களின் கல்விவிருத்திக்காகக் கள்ளிக்கோட்டையில் ஒரு ஹைஸ்கூல் ஏற்படுத்த பதினாயிரம் ரூபாயை மிஸ்டர். கொயப்பதோடி மகம்மது குட்டி என்ற பெரிய மாவியாபாரி உதவியிருக்கிறார். இவ்விதமே பொன்னானியிலும் ஏற்படுத்த 12-ஆயிரம் ரூபா உதவியிருக்கிறார். இவரது தர்மம் இசபா சகாயமானது.

மகம்மதியக் கல்வி.— கம்பிராஜதானி மகம்மதியக் கல்வி பரவுதற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்னும் கருத்துடன் ஆம்பூரில் அஞ்சுமானி சங்கத்தவர்கள் ஒரு சபைகூடினார்கள். மிஸ்டர் யாகப் உஸேன் அக்கிராசனம் வகித்தார். மகம்மதியக் கல்வியை பரப்புவதன் நிமித்தம் ராஜதானி முழுவதிலும் எந்தெந்த விடத்தில் சௌகரிய மிருக்கிறதோ அவ்விடங்களிலெல்லாம் மகம்மதிய செகண்டரி பாடசாலைகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று உறுதிகூறினார், அவ்வூரிலேயே ஒரு ஸ்கூல் கட்டுவதற்காக சந்தா வசூலிக்கப்பட்டதில் பன்னீராயிரம் ரூபாய் வசூலாயிற்று.

திருச்சி நாயுடு வம்சத்தினரும் புரோபஸர் ராமமூர்த்தியும்.—இந்திய பராக்கிரமசாலியெனப் பெயர்படைத்த புரோபஸர் ராமமூர்த்தி திருச்சினாப்பள்ளியில் தமது சாதகங்களை காண்பிக்க இம்முறை வந்திருந்தபோது அங்குள்ள நாயுடுவகுப்பினர் அனைவரும் அவரை விருப்பத் தோடும் ஏற்று ஒரு பெரிய விருந்து செய்வித்தனர். நாயுடு வகுப்பைச்சேர்ந்த மிஸ். ராமமூர்த்தி தமது பரிவாரங்களுடனும் விஜயமாயிருந்தார். அன்று மாலையில் அவரை அவருடைய கூட்டத்தாருடனும் இரு குதிரைகளுடன் கூடிய கோச் வண்டியில் வைத்து வாத்தியகோஷங்களோடும் ஊர்வலம் வந்தனர். மிஸ்டர் ராமமூர்த்தி நாயுடும் தமது பெயரால் திருச்சியில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்த 2000 ரூபாய் உதவுவதாக வாக்களித்தார். அப்பெருங்கீர்த்தி நாயுடு வகுப்பார் பெரிதும் பாராட்டத்தக்கதேயாம். இதல்லவோ பெரிய தர்மம்.

* * *

## நம் சகோதரர்களின் மாட்சி.

மைசூரில் கிராமக் கான்பரன்ஸ்கள். மைசூர் சமஸ்தானத்தில் கிராமக்கான்பரன்ஸ்கள் கூடவும் அந்த சமஸ்தானத்தார் சௌகரியங்களும் தூண்டுதல்களும் செய்திருக்கிறார்கள். குண்டானூர் என்ற கிராமத்தில் ஒரு கான்பரன்ஸ் நடத்த அதற்கு 600 பேர் கிராம வாசிகள் வந்திருந்தனராம். கிராம அபிவிருத்தி, சுகாதாரம் ரீடிங்குரூம், கல்வி, விவசாயம் வியாபாரம், கைத்தொழில், ஐக்கியம், முதலிய பல விஷயங்களைப் பற்றியும் 27 வியாசங்கள் வாசிக்கப்பட்டனவாம். அவ்வூர் ரதோற்சவத்தின்போது அக்கான்பரன்ஸ் கூட்டப்பட்டதாம். அச்சமயம் ஷேர் ஒன்று 5-ரூபாய்வீதம் 250 ஷேர் அடங்கிய ஐக்கிய நாணயசங்கம் ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டதாம். விஸ்வகர்ம ஐக்கிய நாணய சங்கங்கள் ஏற்படுவ தெந்நாளோ!

ரெட்டிமார்களின் கான்பரன்ஸ்.—சென்ற ஜூன்மீ 18உ யன்று ரெட்டி ஜாதியார்களின் முதல் கான்பரன்ஸ் ஈரோடு தாலூகா ராமராஜபாளையத்தில் மிக்க நன்றாக நடந்தேறிற்று. கல்வி அபிவிருத்தி முதலிய இவைகளைப்பற்றித் தீர்மானங்கள் செய்யப்பட்டன. கோயமுத்தூர் ஜில்லாவுக்குப்பொதுவாக ரெட்டியார் சங்கமொன்று ஸ்தாபிப்பதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்ய ஒரு கமிட்டி ஏற்பாடானது. இவ்வித ஜாதீயக் கான்பரன்ஸுகள் அடிக்கடி கூடுவது பின்னுக்குப் பெரும் அஸ்தி வாரத்திற்கு ஏதுவன்றோ? பொறுமையை அனுசரித்தால் விஸ்வகர்ம கான்பரன்ஸால் விளையும் நன்மைகள் வெளிப்படும்.

ஆரிய வைசிய கான்பரன்ஸ்.—ஜூலை மாதக் கடைசியில் ஆரிய வைசியர்களின் 9-வது கான்பரன்ஸ் கூட்டம் நெல்லூரில் கூடிற்று.

இந்திய மாதர் யூநிவர்ஸிட்டி.—பூனாவில் இந்திய ஸ்திரீகளுக்கென்று ஒரு யூநிவர்ஸிட்டி ஏற்பாடாயிருக்கிறது. யூநிவர்ஸிட்டியின் ஆலோசனை சபையார் மீட்டிங்குகள் கூடி யூநிவர்ஸிட்டியில் கற்பிக்கக் கூடிய பாடங்களைப்பற்றி ஆலோசித்தார்கள். யூநிவர்ஸிட்டியில் முதல் வருஷ வகுப்பில் மற்ற யூநிவர்ஸிட்டிகளின் மெட்ரிக்குலேசன் வகுப்பில் தேறியவர்களைச் சேர்த்துக்கொள்ளத் தீர்மானம் செய்யப்பட்டது. காலேஜ் படிப்பில் மூன்று வருஷ காலம் வரையிலும் 4-கட்டாயப் பாடங்களும் மற்றொரு இஷ்டப்பட்ட பாடமும் படிக்கவேண்டுமாம். சுஜாதி ஆடவர்களின் படிப்பே அரைகுறையென்றால் பெண்களின் படிப்பைப் பற்றிப் பேசுவானேன்? ஐயோ! என்னகொடுமை! அம்மம்ம! விஸ்வகர்ம வம்சத்தினர் கவனக்குறைவுதானென்னே!

* * *

## நூதன கைத்தொழில் முயற்சியும், கற்பிதங்களும்.

மிகச் சிறந்ததும் கீர்த்தியானதுமான கோரைப் பாய்த் தொழிலுக்குப் பாலக்காடு மிகவும் பேர்போனது. இப்பொழுது அத்தொழில் விசேஷமாயில்லை. அத்தொழிலால் ஜீவித்துவந்தவர்கள் பிழைப்பின்றி வேறிடங்களுக்குச் சென்று விட்டனர். இப்போது அத்தொழிலுக்கு ஜீவன் புதிதாக உண்டாயிருக்கிறது போலும்! மைசூர் கவர்ன்மெண்டார் மிஸ்டர் எம். என்.

பாலராஜ அரசு—என்பவரை இத்தொழில் தெரிந்துவரும்படி பாலக்காட்டிற்கு அனுப்பினர். இவர் மைசூர் மன்னரின் அஸிஸ்டெண்ட் செக்ரடரியாவார். பொருளாதாரக் கான்பரன்ஸினால் நியமிக்கப்பட்ட கைத்தொழில் கமிட்டியின் மெம்பருமாவார். மிஸ்டர் பால ராஜ அரசு பாலக்காட்டுத் தறியில் செய்யப்பட்ட தொழிலைக் கண்டு ஆச்சரியப்பட்டு, அவ்விடத்திலிருந்த இரண்டு சிறந்த தொழிற்காரர்களை அழைத்துக்கொண்டு மைசூருக்குப் புறப்பட்டு வந்திருக்கிறார். மைசூரில் சிறந்த நாணற்புற்கள் ஏராளமாக அகப்படுவதினால் அவைகளால் பாய்கள் செய்யப்படலாம் என்பது மிஸ்டர் எம். என். பால ராஜ அரசின் நோக்கம்.

த்ராக்ஷைக் கொடியிலிருந்து கடுதாசி.—தற்காலம் உலகமெங்கும் நாகரீக விருத்தியால் கடுதாசியின் உபயோகம் அதிகரித்துக்கொண்டு வருகிறது. அதற்கேற்றபடி கடுதாசி செய்வதற்கேற்ற மூலப்பொருள்கள் அதிகமாக அபிவிருத்தியடையவில்லையென்று சொல்லப்படுகிறது. காடுகள் ஓர்வரையின்றி அழிக்கப்பட்டு அவைகளிலுள்ள மரங்கள் மரக்கூழ் செய்ய உபயோகிக்கப்படுகின்றன. இதோடு, கடுதாசிக்கூழிலிருந்து ஸெல்லுலாய்ட் என்னும் ஒருவித செயற்கைப் பொருளும், செயற்கைப்பட்டும், கன் காட்டன் என்னும் யுத்தமருந்துப் பொருளும் செய்வதால், நாளுக்கு நாள் கடுதாசியின் விலை அதிகரித்து வருவதாகச் சொல்லப்படுகிறது. இதை உத்தேசித்து அநேக காகிதத் தொழில்காரர்களும் மற்ற தொழில் வித்பன்னர்களும், காகிதக்கூழ் செய்ய வேறு தக்க மூலப்பொருள்கள் கிடைக்குமா என்பதைப்பற்றி ஆராய்ச்சிகள் செய்து வருகிறார்கள். நமது பத்திரிகையில் முன்பு பருத்தித் தாளிலிருந்தும், இன்னும் வேறு பொருள்களிலிருந்தும் கடுதாசிக் கூழ் செய்ய முடியுமென சாஸ்திர வித்பன்னர்கள் கண்டுபிடித்திருக்கிறதாகத் தெரிவித்திருக்கிறோம். இப்போது ப்ரான்ஸில் சிலர் த்ராக்ஷைக் கொடிகளிலிருந்து கடுதாசி செய்திருக்கிறார்களென்று தெரிகிறது.

தற்போது ப்ரான்ஸில் யுத்தம் நடக்குமிடங்களில் உள்ள காடுகளில் கிடைக்கக்கூடிய மரங்கள், யுத்தம் முடியுமளவும் மரக்கூழ் செய்ய உதவாதாகையால், வேறு பொருள்களிலிருந்து கடுதாசி செய்வதைப் பற்றி ப்ரெஞ்ச் வித்பன்னர்கள் ஆராய்ச்சி செய்ய நேர்ந்ததாம்.

த்ராக்ஷைக் கொடியிலிருந்து மொத்தம் நிறையில் நூற்றுக்கு 30-பாகம் காகிதக்கூழ் கிடைக்குமென்று அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஸாதாரணமாய்க் காகிதம் செய்ய உதவும் 'பாப்லர்' என்னும் மரத்திலிருந்து நூற்றுக்கு 35-வீதம் மரக்கூழ் கிடைக்கிறதாம். த்ராக்ஷைக் கூழை அப்படியே உபயோகிப்பதற்கில்லையென்று சொல்லப்படுகிறது. இதோடு பைன் மரத்தின் கூழையும் ஒரு குறிப்பிட்ட அளவில் சேர்த்தால்தான் நல்லகடுதாசி கிடைக்கிறதாம். இதைக்கொண்டு உயர்ந்த கடுதாசி செய்வதில் அதிக செலவு ஏற்படுவதால் இந்தக் கூழை வேறு காகிதக் கூழுடன் சேர்த்து கொஞ்சம் மட்டமான கடுதாசி செய்யலாமாம். தற்போது ப்ரான்ஸில் த்ராக்ஷையிலிருந்து கடுதாசி செய்ய ஸுமார் 20-காகிதத் தொழிற்சாலைகள் வரையில் இருக்கின்றனவென்று தெரிகிறது.

அம்பல்லாவில் கண்ணாடித் தொழிற்சாலை.—இந்தியாவில் கண்ணாடி செய்யும் தொழில் கடைத்தேறாமல் போனதற்குக் காரணம், தொழிலில் தேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு தொழில் நடத்தாமல் போனதே. வடக்கே அம்பல்லாவில் உள்ள 'அப்பர் இண்டியா க்ளாஸ் வொர்க்ஸ்' என்னும் தொழிற் சாலையார் ஜப்பானிலிருந்து 6 கண்ணாடித் தொழில்காரர்களை வரவழைத்திருக்கிறார்களாம். இதனால் அந்தத் தொழிற்சாலையார் தமது தொ-



ழிலை அபிவிருத்தி செய்யக்கூடுமென்று சொல்லப்படுகிறது. அந்தத் தொழிற்சாலையில் தற்போது விளக்கு சிம்னிகள் செய்யப்படுகின்றன. கூடிய சீக்கிரத்தில் அங்கே வளையல் முதலியவை செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்படுமாம்.

பொத்தான் கைத்தொழில்.—திருவனந்தபுரத்தில் மிஸ்டர் நாவிப்மஸியர் என்பவர் கொட்டாங்கச்சிகளைக் கொண்டு பொத்தான் செய்ய ஒரு தொழிற்சாலை ஸ்தாபித்திருக்கிறார். அந்தத் தொழிற்சாலையில் செய்யப்படும் பொத்தான்கள் ஆங்கிலேயரால் செய்யப்படும் பொத்தான்களுடன் வ்யாபாரத்தில் போட்டிபோடத் தகுந்ததாயிருப்பதாகத் தெரியவருகிறது.

மைசூரில் சோப் செய்வதைத் துவக்க வேண்டியதென்ற தீர்மானம் முடிவுபெற்றது. அதற்கு வேண்டிய யந்திரங்களை வாங்கிப்பொருத்த அக்கவர்ன்மெண்டார் 15,000 ரூபாய் சாங்ஷன் செய்திருக்கிறார்கள். தற்காலம் அமைக்கப்படும் யந்திரம் நாள் ஒன்றுக்கு ஐந்து டன் சோப் செய்து கொடுக்குமாம் யந்திரசாலையை அமைத்த பின்னர் அன்னிய நாட்டின் சோப்புகளுக்கு இருக்கும் கிராக்கி குறைவுபடும் என்று நம்புகிறோம்.

தென் மலையாளத்தில் தானூரில் உள்ள சோப் செய்யும் தொழிற்சாலையை விருத்தி செய்வதற்காக சென்னை கவர்ன்மெண்டார் ரூ 75,000 சாங்ஷன் செய்திருக்கிறார்களாம்.

1,00,000 ரூபாய் முதலுடன் சந்தனத் தைலம் எடுப்பதற்காக ஒரு தொழிற்சாலையை மைசூர் கவர்ன்மெண்டாருடைய உதவியைக் கொண்டு பங்களூரில் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

மில்லுகளுக்கு வேண்டிய ஸ்டார்ச் (Starch) ஐரோப்பாவிலிருந்து வந்துகொண்டிருந்தது நின்று போய்விட்டபடியால் இந்தியாவில் கிடைக்கக்கூடிய கிழங்குகளினின்றும் ஸ்டார்ச்சு எடுக்கக்கூடுமா வென்று கவனித்ததில் சக்கரைவள்ளிக் கிழங்கிலிருந்து எடுப்பது சாத்தியம் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

* * *

காகிதஞ் செய்தல்.

இந்தியாவில் காகிதம் செய்வதற்கு வேண்டிய பொருள்கள் கிடைக்கின்றன; ஆனால் அதனை வெண்மையாக்கும் பஸ்பம் கிடைக்கவில்லை. அப்பஸ்பம் அன்னிய தேசங்களிலிருந்து வருவது யுத்தத்தால் நின்றுவிட்டது இப்போது லக்நௌநகரில் அப்பஸ்பம் போன்றதொன்று சிலரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

துணிகள் நாள் நிற்குமா நிற்காதா என்ற விஷயத்தைப் பரிசோதிப்பதற்காக ஒருவகை யந்திரம் பிராட்போர்ட் என்னும் ஊரில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

பருத்திச் செடியின் தாள்களினின்றும் ஒருவிதக் கூழ் செய்யும் வழியைக் கண்டுபிடித்து அந்த யந்திரத்தை மிஸ்ஸிஸிப்பி என்னும் மாகாணத்தில் கிரீன்வுட் (Green Wood) என்னும் இடத்தில் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்வாறு பருத்திச்செடியின் கட்டைகளினின்றும் செய்யப்படும் கூழானது காகிதம் செய்வதற்கும், குண்டு முதலானவை உபயோகப் படுத்தக்கூடுமாம். இந்தியாவிலும் முயற்சி செய்யலாம்.

பாக்கெட்டில் கொண்டுபோகக்கூடிய விளக்கு.—இரவில் நெருப்புக் குச்சியில்லாமல் வெளிச்ச முண்டுபண்ணப் பின்வருமாறு ஒரு விளக்கு செய்து வைத்துக் கொள்ளலாம். இதை வேண்டும்போது வெளிச்சம் உண்டாக்கும்படி செய்து கொள்ளலாம். வெண்மையானதும், பொப்ப தெளிவானதுமான ஒரு சிறு வீஸாவில், ஒரு பட்டாணியின் பருமனுள்ள பாஸ்பாஸ் என்னும் சரக்கை (இது இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் கிடைக்கும்.) போட்டு, கொதிவரும்போல் நன்றாய்க் காய்ச்சின ஆலிவ் ஆயில் என்னும் எண்-

ணெயை, ஸீஸாவில் 3-ல் ஒரு பாகம் கொள்ளும் வரையில் ஊற்றி, நன்றாய்க் காற்றுப் புகாதபடி கார்க்கால் மூடிவிடவும். இரவில் அதை உபயோகிக்கவேண்டுமானால், கார்க்கை வெளியிலெடுத்து, ஸீஸாவுக்குள் கொஞ்சம் காற்றுப் புகவிட்டுப் பிறகு கார்க்கால் நன்றாய் மூடிவிடவும். உடனே ஸீஸாவில் எண்ணெயில்லாத பாகமெல்லாம் ரொம்ப ப்ரகாசமடைந்து வெளிச்சங்காட்டும். அதன் வெளிச்சம் ஒரு மந்தமான விளக்கு வெளிச்சம்போலிருக்கும். வெளிச்சத்தின் ப்ரகாசம் குறைந்துபோனால் மறுபடியும் கார்க்கை திறந்து சற்றுநேரம் கழித்து மூடவும்.

மாரிகாலத்தில் ஸீஸாவைக் கையால் தேய்த்துச் சூடாக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் உள்ளேயிருக்கும் எண்ணெய் இளகும். இந்த ஸீஸாவானது 6-மாஸத்துக்கு உபயோகத்துக்கு வரும். இப்படிப்பட்ட விளக்குகளை பாரிஸிலுள்ள காவல்காரர்கள் உபயோகித்து வருகிறார்களாம்.

ஓர் ப்ரமாண்டமான காமரா. உலகத்திலுள்ள மற்ற காமராவென்னும் படம் எடுக்கும் பெட்டிகளைவிட மெத்த பெரிதான தொன்று செய்யப் பட்டிருக்கின்றதாம். அது 24 அடி நீளமாயும் 5 அடி அகலமுமான பெரிய படம் எடுக்ககூடிய தென்றும் அதனால் மெத்த தூரத்திலே தோற்றப்படும் காக்ஷிகளையும் மலைகள் முதலியன லேசாக எடுக்ககூடிய தென்றும் அந்தப் பெட்டியால் படம் எடுக்கவேண்டியதாயிருந்தால் அதற்கு 12 ஆட்கள் கூடி வேலை செய்யவேண்டுமெனக் கூறப்படுகின்றது.

***

## சென்னையில் கைத்தொழில் அபிவ்ருத்தி.

ஸமீபத்தில் நடந்த சென்னை சட்டஸபையில் கவர்ன்மெண்டார் தாங்கள் கைத்தொழில் வியாபார அபிவ்ருத்தி விஷயமாய் செய்துவரும் முயற்சி இன்னவென்பதைத் தெரிவித்தார்கள்.

தற்போது கவர்ன்மெண்டார், எண்ணெயாட்டுதல், பென்ஸில் செய்தல், கண்ணாடி செய்தல், கடுதாசிக்கூழ் செய்தல், ஸோப் செய்தல், செங்கல் செய்தல், கரும்பு ஆலையாட்டுதல் ஆகிய இந்தத் தொழில்களைப் பற்றி ஆராய்ச்சிகள் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த வேலைகளைப்பற்றிய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. சென்னை இஞ்ஜினியரிங் காலேஜைத் திருத்தியமைத்து அபிவ்ருத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் அமுலுக்கு வந்துகொண்டிருக்கின்றன. மதுரை டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்டில் மெக்கானிகல் இஞ்ஜினியரிங், நெசவு, சாயம் போடுதல் ஆகிய இந்த வேலைகள் கற்றுக் கொடுக்கப்படும். அந்தக் கல்விச்சாலைக்காக புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுவருகின்றன. காக்கினாடாவில் உள்ள லோகல்பண்ட் வொர்க் ஷாப்பை ஒட்டி ஒரு மெக்கானிகல் இஞ்ஜினியரிங் ஸ்கூல் ஸ்தாபிக்க ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. சென்னையில் தோல் தொழிலைப்பற்றிக் கற்பிக்க ஏற்பட்டிருக்கும் பாடசாலை ஆரம்பமாகி நடந்துவருகிறது. கவர்ன்மெண்டல்லாத ப்ரைவேட் தொழில் சாலைகளிலும் வொர்க் ஷாப்பிலும் வேலைகற்று வருபவர்களுக்கு மெக்கானிகல் இஞ்ஜினியரிங் பாடங்களைக் கற்றுக் கொடுக்க சென்னையில் ஒரு தொழில் பள்ளிக்கூடம் ஸ்தாபிப்பதைப் பற்றி ஆலோசனை நடந்துவருகிறது. விசாகப்பட்டணம், தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய இந்த இடங்களிலுள்ள ப்ரைவேட் கைத்தொழில் பள்ளிக்கூடங்களை அபிவ்ருத்திசெய்வது விஷயமாயும் கவர்ன்மெண்டார் ஆலோசனைகள் செய்துவருகிறார்கள். கைத்தொழில் வியாபாரம் முதலிய டெக்னிகல் கல்வி கற்பிக்கும் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி நடத்தும் விஷயமாக வித்யாடிரெக்டர் சில விதிகளை



தயாரித்திருக்கிறார். அவைகளைப்பற்றியும் கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்து வருகிறார்கள்.

ஜ—னி.

***

## ஆயுர்வேதசாரம்.

### நீர்சுருக்குக்கு மருந்து.

வெள்ளை வெங்காயம் கால்வீசையை நன்றாய் அரிந்து அதை பாணலில்போட்டு கொஞ்சம் விளக்கெண்ணையைவிட்டு நன்றாய் வதக்கி அதில் மூன்றுபலம் பனைவெல்லத்தைப்போட்டு கிளறி காலை மாலை இரண்டு வேளையும் எலுமிச்சங்காய்ப் பிரமாணம் சாப்பிட்டுவர நீர்சுருக்கு நீங்கும். மேக சம்பந்தமான வெள்ளை வெட்டைகளையும் நீக்கும்.

***

### நீர்கட்டுக்கு கியாழம்.

இரண்டுபலம் சுக்கை எடுத்து துண்டு துண்டாகத் தறித்து நெய்யில் வாட்டி இடித்துக்கொண்டு கால்படி ஜலம் கொதிக்கக்காயவைத்து அதில் இந்தத் தூளை போட்டு நன்றாய் சுண்டிய பிறகு அதில் அரைக்கால்பலம் படிகாரத்தைப்பொரித்து தூள் செய்து போட்டு சாப்பிடவும்.

***

### மேகவெள்ளைக்கு மருந்து.

ஒரு இளந்தேங்காயைக் கொண்டுவந்து அதில் ஓர் துவாரம் செய்து படிகாரத்தை தூளாக்கி ஒருகாசிடை அதில் இரவில் போட்டு மூடிவைத்து அதிகாலையில் எழுந்தவுடனே அந்த நீரை சாப்பிடவும்.

***

### மற்றொரு முறை.

வெண்காட்டாமணக்கு துளிர்களைப்பறித்துவந்து அதில் வெள்ளைப்பூண்டு கொஞ்சம்போட்டு நன்றாய் இடித்து சாறுபிழிந்து அதில் கொஞ்சம் சர்க்கரை சேர்த்து சாப்பிடலாம். சாப்பிட்ட ஒருமணிநேரத்திற்குப் பிறகு கறந்தபசும்பாலை சாப்பிட வேண்டும்.

***

### மூலத்திற்கு மருந்து.

காட்டுக்கருணை, நிலக்கருணை, காராக்கருணை, நரிவெங்காயம், பேரண்டைக் கிழங்கு இதுகளை சமனிடையாய் எடுத்துக்கொண்டு அரைத்துக்கொண்டு நிலாவிரைச் சூரணத்தை சமனிடையாய்ச் சேர்த்து தேன்விட்டுப் பிசைந்து நெல்லிக்காய்ப் பிரமாணம் காலை மாலை இரண்டு வேளையும் சாப்பிட சௌக்கியமாகும்.

இச்சாபத்தியம்.

***

### ப்ளேகுக்கு ஒரு பரிஹாரம்.

தற்போது சேலம், கோயம்புத்தூர், பழனி முதலிய இடங்களிலும் வேறு பல இடங்களிலும் ப்ளேக் நோய் பலமாக இருந்துவருகிறதென்று தெரிகிறது. இந்த ப்ளேக் நோயை வராமல் தடுப்பதற்கும், வந்தால் போக்குவதற்கும் டிங்சர் அப் அயோடைன் (Dincture of Iodine) என்னும் மருந்து ரொம்ப ச்லாக்யமானது என்று ரக்ஷண்ய சேனையைச் சேர்ந்த கமிஷனர் பூத் டக்கர் என்பவர் தெரிவிக்கிறார். இந்த மருந்தை சென்றவர்ஷம் பஞ்சாப் மாகாணத்தில் கவர்ன்மெண்டார் உபயோகித்ததில் ரொம்ப திருப்தியாயிருந்ததாம். ப்ளேக்கண்ட 705-பேர்களுக்கு இந்த மருந்தை கொடுத்ததில் 573-பேர்கள் ஸ்வஸ்தமடைந்தார்களாம். அதாவது நூற்றுக்கு 80-பேர் வீதம் ஸ்வஸ்தம் அடைந்தார்கள். ப்ளேக் கண்டால் இன்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றி பஞ்சாப் கவர்ன்மெண்டார் ஒரு துண்டு பத்திரிகை வெளியிட்டிருக்கிறார்கள், அதில் உள்ள விஷயம் வருமாறு.

(1) நோயாளிகள் ரொம்ப விசாலமானதாய், காற்றோட்டமுள்ளதுமான அறையில் படுத்துக்கொண்டு ஒன்றும் செய்யாமல் களைப்பாறவேண்டும். மப்பு மந்தார

மாயில்லாமல் ஸூர்யன் நன்றாய்ப்ரகாசித்துக் கொண்டிருந்தால், வ்யாதியஸ்தர்கள் வெளியில் நிழலில் படுத்துக்கொள்ளவேண்டும். (2) த்ரவரூபமான ஆகாரத்தைத்தான் சாப்பிடவேண்டும். (3) தாகமாயிருந்தால் ஒன்றும் கலக்காத சுத்தமான குளிர்ந்த ஜலத்தைக் குடிக்கவேண்டும். ப்ளேக் நோயாளி தாகமாயிருப்பதாகச் சொன்னால் அவருக்கு வேண்டியமட்டும் குளிர்ந்த ஜலம் கொடுக்கவேண்டும். குடிக்க ஜலம் கொடுக்காமலிருப்பது பிசகு. (4) டிங்க்சர் அப் அயொடைன் மருந்தில் ஒரு துளியை அரை ஔன்ஸ் ஜலத்தில்விட்டு இரண்டுமணி நேரத்துக்கு ஒரு தடவை நோயாளிக்கு குடிக்கக் கொடுக்கவேண்டும். ஆனால் நோயாளி தூங்கிக்கொண்டிருந்தால் அவரை மருந்து சாப்பிடுவதற்காக எழுப்பக்கூடாது. (5) ப்ளேக் புண்கள், கொப்புளங்கள் மேலில் தினந்தோறும் காலையிலும் மாலையிலுமாக இரண்டு தடவை டிங்க்சர் அப் அயடைன் மருந்தைத் தடவவேண்டும், வேறொரு மருந்தும் நோயாளிக்கு கொடுக்கவேண்டியதில்லை.

***

### காலரா.

ஒருவருக்குக் காலரா கண்டு வைத்தியர் வருவதற்கு நேரமாகுமானால் க்ளோரோடைன் மருந்தை முழுபோன் அளவில் சாப்பிடவேண்டும் கடுகை அரைத்து அடிவயிற்றில் பற்றுப் போடவேண்டும் காய்ந்த கடுகையாவது சுக்கையாவது பொடிசெய்து அதைக்கொண்டு காலரா கண்டவருடைய கைகால்களில் நன்றாய்த் தேய்க்கவேண்டும்; நோயாளிக்குக் குடிப்பதற்கு ஜலம் கொடுக்கக்கூடாது ஆனால் பனிக்கட்டியை அவருடைய வாயில் வேண்டும்போது சிறிதுநேரம் வைக்கலாம். காலரா கண்ட வீட்டிலுள்ள மற்றவர்கள் தடவைக்கு ஒரு வைன்கிளாஸ் சுத்தஜலத்தில் கந்தகத்ராவகமாவது (Sulphuric acid) ஹைட்ரோ க்ளோரிக் ஆஸிடாவது (Hydrochloric acid) பத்துத் துளிகள் வீதம் விட்டு தினம் மூன்று தடவை உள்ளுக்குச் சாப்பிடவேண்டும் இப்படி த்ராவகங்கள் சாப்பிடுவது வ்யாதி வராமல் தடுப்பதற்கேற்ற நல்ல முறையாகும். காலரா க்ருமிகள் புளிப்பான ஆகாரத்தில் ஜீவித்திருக்கமாட்டா ஆதலால் காலராக் காலத்தில் எலுமிச்சம்பழ ரஸம் ரொம்ப ஜாஸ்தியாக உள்ளுக்குச் சாப்பிடுவது மிகவும் நல்லது.

***

### கொசுக்களைப் போக்கும் சில செடிகள்.

ஆமணக்குஞ்செடி யிருக்கு மிடத்தில் கொசுக்கள் அணுகுவதில்லையென்று மிஸ்டர் ஆல்பெர்ட் என்பவர் கூறுகிறார். ஓர் அறையில் ஒரு ஆமணக்கன் தண்டு அல்லது தழை முதலியவை இருந்தாலும் கொசுக்களை அவ்விடம் வஸிக்காமற் செய்யப் போதுமானது. அநேகம் பூச்சிகளும் இச்செடியினிடம் அணுகுவதில்லையாம். லாரிமோர் என்பவரின் கொள்கைப்படி திருநீற்றுப்பத்ரி யென்னும் மூலிகையிருக்குமிடத்தில்கூட கொசுமுதலிய ஜந்துக்கள் சேருவதில்லையென்று தெரியவருகிறது.—வைத்தியகலாநிதி.

***

### பல் வலி.

பல்வலியால் கஷ்டப்படுகிறவர்கள் பின்வரு முறைகளை உபயோகித்துப் பார்க்கலாம்:—(1) கொஞ்சம் பருத்தியை கிராம்புத் தைலத்தில் நனைத்து பல்லிடுக்குகளில் வைக்கவும். பிறகு படிகாரம் தண்ணீர் சிறு சூடாகவிட்டு கொப்பளிக்கவும். (2) டிங்க்சர் அப் அயொடைன் மருந்தை பல்லைச்சுற்றியுள்ள ஈறுகளின் மேல் தடவவும். (3) பனிக்கட்டியை வைத்துள்ள ஒரு துணியால் ஒத்தடம் கொடுத்தாலும், சூடான ஜலம் வைத்த சீசாக்களால் ஒத்தடம் கொடுத்தாலும் வலி நிற்கும். (4) மிச்சிப்பூவை உலர்த்தி வறுத்து பொடித்து பல் துலக்கவும்.

***



### மாதுளை.

அஜீர்ணபேதிமுதலிய ரோகங்கள் ஆரம்பமாகும்பொழுது மாதுளம்பழத்தோலில் ஒரு பங்கும் வெந்நீர் பத்துப்பங்குங் கூட்டி வாஸனைக்காக கொஞ்சம் கறுவா அல்லது க்ராம்புத்தூள் சேர்த்து கால் மணிநேரம் கொதிக்கவைத்து இக்கஷாயத்தை வடிகட்டிக் குளிர்ந்தவுடன் தினம் ஒன்றுக்கு மூன்றுதரம் ஒவ்வொரு வேளையும் இரண்டு அவுன்ஸ் வீதம் கொடுத்துவந்தால் ஸௌக்ய மேற்படுமென்று ஸ்வதேச வைத்யர்கள் கூறுகிறார்கள்.

மாதுளம் வேரின் கஷாயம் குடலிலுள்ள டேப் வொர்ம் என்னும் கிருமிகளை (tape-worms) வெளிப்படுத்த மிகவும் விசேஷமான மருந்து. இடித்த மாதுளம் வேரின் பச்சைப்பட்டையை எடுத்து அதில் ஒரு பங்குக்கு இருபது பங்கு ஜலங்கூட்டி சுண்டக்காய்ச்சி வடிகட்டி வெறும் வயிற்றில் இரண்டு அவுன்ஸ்வீதம் அரைமணி நேரத்துக்குக் கொருமுறை நாலுதரம் கொடுத்து உடன் பின்னர் சிற்றாமணக் கெண்ணெயை பேதிக்குக் கொடுத்தால் க்ருமிகள்வெளிப்படும். கஷாயத்துக்குப் பதிலாக வேர்ப்பட்டை ரஸம் அரை அவுன்ஸ் வீதம் கொடுக்கலாம்.—சமத்தொழில் விளக்கம்.

***

### Margosa (வேம்பு).

ஹிந்துக்கள் வைசூரிக்கு வேப்பிலையை உபயோகிப்பது வழக்கம். இலையை மெத்தையைப்போல் பரப்பி அதன்மேல் நோயாளியைப் படுக்கச் செய்வார்கள். இலையை விசிறியாய்ப் பாவிப்பார்கள். வேப்பிலை கசப்பான சுவையைக்கொடுக்கும். விஷந்தீண்டினபோது வேப்பிலையை வாயில் மென்றால் மயக்கந்தீரும். அது ஒரு உஷ்ணகாரி. அதை அரிசிமாவுடன் அரைத்து களிசெய்து கெட்ட ரணங்களுக்குப் போடலாம். விசேஷமாக சொறி சிரங்கு முதலிய ரோகங்களுக்கு உபயோகிக்கலாம்.

வேம்பு வீடுகளுக்கு கிட்டவும் க்ராமங்களிலும் நிற்பதால் குளிர்ச்சியைக்கொடுப்பதுமன்றி, மலேரியா (Malaria) என்னும் விஷஜ்வரத்தை வாராமல் தடுக்குமென ஆங்கில வைத்யர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். வேப்பம்பட்டையை பொடிசெய்து அல்லது தண்ணீரில் கஷாயஞ்செய்து விஷஜ்வரத்துக்கு மருந்தாகப் பாவிப்பார்கள். பசியையுமுண்டாக்கும். வேப்பங்குச்சியை பல் துலக்க உபயோகப்படுத்தினால், பல்லீறுகள் பலமடைவதோடு வாயிலுள்ள துர்நாற்றமும் போகும். குரல் நல்ல நிலைமையை அடையும்.

வேப்பங்கொழுந்துடன் ஓமம், மிளகு, வசம்பு, பூண்டு இவைகளைச் சேர்த்தரைத்துக் கொடுத்தால், வயிற்றுப் பொருமல் நீங்கும். வேப்பம்பூவைத் துவையல் செய்து சாப்பிட்டால் மலச்சிக்கலை நீக்கும். வேப்பம்பழம் சாப்பிட்டால் மலச்சிக்கலை நீக்கும். வேப்பம் விதையில் வடிக்கும் எண்ணெய் பலவிதமாய் உபயோகிக்கப்படும். விளக்குகளுக்கு உபயோகித்தால் கண்ணுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும். காற்றைச் சுத்திபண்ணும். விசேஷமாகக் குழந்தைகளிருக்கும் அறைகளில் வேப்பெண்ணெய் விளக்கை உபயோகிப்பதுண்டு. வேப்பெண்ணெய் ரணங்களை ஆற்றும். வாதரோகங்களுக்கு மேலுக்குப் பூசலாம். க்ருமிகளையும் போக்கும். உட்கொண்டால் வயிற்றிலுள்ள புழுக்களைக் கொல்லுவதுமல்லாமல் ஸுகபேதியை யுண்டாக்கும். சுதேச வைத்யர்கள் குழந்தைகள் பிறந்தவுடன் வேப்பெண்ணெய் கொடுப்பது நலமெனக்கூறுவார்கள். குஷ்டரோகத்துக்கு மேலே பூசுவார்கள். பேன்முதலிய க்ருமிகளைக் கொன்றுவிடும்.—உதயதாரகையில் ஒரு நிருபர்.

### ஆமணக்கெண்ணெ.

ஸாதாரண ரணங்களிலும், எரிப்புண்களிலும் ஆமணக்கெண்ணெய் மிகவும் உபயோககரமான பதார்த்தம். சில கேஸுகளில் டிஞ்சர் அயோடைன் உபயோகித்து ப்ரயோஜனமில்லாமற் போக, ஆமணக்கெண்ணெயை கட்டு கட்டும்போது உபயோகித்ததில் குறிப்பிடக் கூடியவாறு சீக்ரத்தில் குணம் உண்டாயிற்று. இந்த எண்ணெயில் சல்லாத்துணியை நனைத்து ஸாதாரண ரணங்களின்மேல் வைத்துக் கட்டினால் சீழ்பிடிக்காமல் ரணம் ஆறத்தொடங்கும். விலையில் மலிவானதும், எங்கும் எளிதில் கிடைக்கக்கூடியதுமான இந்த எண்ணெயின் உபயோகம் மெச்சத்தகுந்ததென்று ஒரு வைத்யர் தெரிவிப்பதாக 'வைத்ய கலாநிதி' எழுதுகிறது.

***

## காருக்கருணைக் கிழங்கு

இந்தக் கிழங்கு மலையாளம், சித்தூர், திண்டிவனம் முதலிய இடங்களில்மட்டும் பயிரிடுகிறார்கள். அந்த ஊர்களிலிருந்து மற்ற அன்னிய ஊர்களுக்கு ஏற்றுமதியாகி வருகிறது. இது நமது தமிழ் நாட்டில் எல்லா விடங்களிலும் பயிரிடக் கூடிய பயிர்.

நிலம் :—மணல் கலந்த செம்மண், கருமண், படுகை, எக்கல், முதலிய நிலங்கள் நீர்ப்பாய்ச்சலுடன் கூடியதாயிருக்கவேண்டும்.

செய் நேர்த்தி :—திண்டிவனத்தாலுகா கல்லாத்தூர் கிராமத்தில் இருக்கும் Mr. ராமசாமி ரெட்டியார் என்பவர் இந்த காருக்கருணைக் கிழங்கினால் வருஷா வருஷம் தனக்கு லாபம் கிடைப்பதை தெரிவிக்கிறபடியே இங்கு எழுதுகிறேன். வேலியடைப்பும் கிணறுமுதலிய பாசனமுடைய ஒரு ஏகரா நிலத்தை பங்குனி மாதத்தில் நெல், வரகு வைக்கோல், கூழம் அல்லது வீட்டின் முடித்த கூரை அல்லது நெல் உமி, வரகு உமிமுதலியவைகளை பங்குனி மாதம் நடுவில் ஏகர் ஒன்றுக்கு பதினைந்து வண்டிக்கு குறையாதபோட்டு பூமியின் பேரில் மூன்று அங்குலம் உயரம் இருக்கும்படி பரவி வெய்யில் நன்றாய் அடிக்கும் பனிரெண்டுமணி நேரத்தில் எரைக்கொண்டு நன்றாய் உழவேண்டும். இம்மாதிரி 6 தரம் உழுது நிலத்தை செம்மைப்படுத்தி மஞ்சிவரப்புடன்கூடிய பாத்திகட்டவேணும்.

விதை:—விதைக்காக ஏற்கனவே பூமியிலேயே வெட்டி எடுக்காமல் நிறுத்தப்பட்டிருக்கும் முதிர்ந்த கிழங்குகளைத் தோண்டியெடுத்து கிழங்கின் பருமனத்துக்குத் தக்கவண்ணம் 4 முதல் பலதுண்டுகளாய் வெட்டி சாணம் கரைத்த ஜலத்தில் நனைத்து மேமேலகண்ட மஞ்சிவரப்பின் பள்ளத்தில் சுமார் பதினைந்து அங்குலத்துக்கு ஒரு கிழங்கு வீதம் சித்திரைமாதம் கடைசிக்குள் நடுவார்கள்.

ஊடுபயிர் :—மஞ்சி வரப்பின் பள்ளம் தவிர மேடுகளின் சரிவுகளில் கொத்தவரை, வெண்டை, மிதிபாகல் முதலியனவும், வேலிக்கால்களில் கொம்புப்பாகல், புடல், பீர்க்கு, பரங்கி, கத்தரி, முதலிய படர் கொடிகளையும் நட்டு ஒன்றைவிட்டொரு நாள் வீதம் தண்ணீர் இறைக்கவேணும். சில சமயம் மூன்று நாளுக்கு ஒரு ஜலமும் இறைக்கலாம். இது அநுபவத்தில் பயிரிடுவோர்கள் அறிந்துக்கொள்ளலாம்.

களை :—கிளங்கு வெட்டும் வரையில் மூன்று களை எடுக்கவேணும்.

சில்லரைக்காய்கறிகள் புரட்டாசிமாதம் கடைசிக்குள் பலன் அருவடையாய் வருகிறது. சில்லரைப் பலனால் ரூபா 120 வரையில் ஒரு ஏகருவுக்குக் கிடைக்கிறதாம்.

கிழங்குமாசூல் பருவம் :—கார்த்திகை மாதம் கடைசி முதல் மார்கழி கடைசிக்குள் வெட்டி முடிந்துவிடும்.



சிலவு விவரம் (ஒரு ஏகருவுக்கு)

| | ரூபா. அ. பை. |
|---|---|
| தடவைக்கு இரண்டு ஏர் வீதம் ஆறு தடவை உழுவதற்குக் கூலி ... | 6—0—0 |
| எருவண்டி 15-க்கு ... | 7—8—0 |
| களையெடுப்பு 3-க்கு ... | 6—0—0 |
| தண்ணீர் இறைகூலி சுமார் 40 தடவைக்கு ... | 40—0—0 |
| விதைக்கிழங்கின் கிரயம் ... | 10—0—0 |
| நிலத்தின் குத்தகை ... | 10—8—0 |
| ஆக சிலவு... | 80—0—0 |

ஆதாயம்.

| | |
|---|---|
| சில்லரை காய்கறிகளால் ... | 100—0—0 |
| கிழங்கின் வருமானம் மணு சுமார் ஆயிரத்துக்குமணு 1-க்கு ஐந்தணு வீதம் ... | 312—8—0 |
| ஆதாயம்... | 412—8—0 |
| சிலவு ரூபாய்... | 80—0—0 |
| லாபம்... | 328—8—0 |

"இதுமற்ற சாகுபடியைவிட நல்ல வருமானம் உள்ளது" அல்லவா ?

***

### வேர்க்கடலையை தான்யப்பயிருடன் கலந்து பயிர் செய்தல்

வேர்க்கடலையை தான்யபயிருடன் கலந்து பயிர்செய்தால் பல அநுகூலங்களிருக்கின்றன வென்று 'ஜனோபகாரி' எழுதுகிறது. அவையாவன:—

1. செய்யும் பயிர்கள் ஜாஸ்தியாய்க் கொத்தப் படுகின்றன. 2. அதனால் நிலம் சுத்தமாகிறது. 3. அதிக மாஸூல் கிடைக்கிறது. 4. மனிதர்கட்கு தான்யமும் மாடுகளுக்குத் தீனியும் கிடைக்கிறது. 5. பின்னால் பயிர்கள் ச்லாக்யமாய்ப் பயிராகின்றன. 6. இரண்டு பயிர்களில் ஒரு பயிரின் மாஸூல் கிடைப்பது நிச்சயம்.

வேர்க்கடலையை மட்டும் தனியாய் விதைத்தால் அதன் பிரதிகூலங்கள்:

1. கலப்புப்பயிரைப்போல் இதில் களை வெட்டப்படுவதில்லை. 2. களை ஜாஸ்தி. 3. மாஸூல் கம்மி. 4. தான்யப்பயிரின் மாஸூலும், மாட்டுக்குத்தீனியும் கிடைப்பதில்லை. 5. பின்னால் செய்யப்படும் பயிர் கேவல ஸ்திதியை யடைகிறது.

***

## பல குறிப்பு.

நமது விஸ்வகர்ம ஜாதியார் முன்னுக்கு வாராமல் க்ஷீணமடைவதற்கு அநேக காரணங்களுண்டு. ஒருவர் ஓர் காரியத்தை உத்தேசித்து ஆரம்பித்து நடத்திவந்தால் அக்காரியத்திற்கு மற்றவர்களும் உடன்பட்டு அதை பூர்த்தி செய்வது கிடையாது. மற்றொருவரும் மற்றோர் காரியத்தை உத்தேசித்து அவர் அதை ஆரம்பித்து அதற்கு வேண்டிய பிரயத்தினங்களிலேயே பாடுபட்டு வருகிறார்கள். அப்படியே ஒவ்வொருவர்களும் தனித்தனி முயன்றால் எவர்களெடுத்த காரியமும் முன்னுக்கு வருவதில்லை. ஆனால் இதுகளெல்லாம் நமக்குத் தெரிந்திருந்தும் மற்றவர்கள் செய்வதுபோல் நாமும் செய்யப்படாது என்று உத்தேசித்து உழைத்து வந்திருந்தும் நம்ம காரியத்தை அவர்கள் கவனியாமல் அவர்கள் கொண்ட எண்ணத்திலேயே கண்ணும் கருத்துமாகயிருக்கிறார்கள். அதனால் நாம் எடுத்த காரியம் அப்படியே நின்றுவிடுகிறது. இதற்கு ஓர் ஏற்பாடுகள் யிருக்கிறது 'எந்த காரியம் முதல் ஆரம்பித்ததோ அந்த காரியத்திற்கு மற்றவர்களும் கலந்து அக்காரியத்தை பூர்த்தி செய்து வைத்துவிட்டு அதற்கு பிறகு தான் அடுத்து துவக்கும்காரியத்தில் மற்றவர்களும் கலந்து அதையும் பூர்த்தி செய்துமுறையாக வந்தால் ஒவ்வோர் காரியமும் சித்தியாகும். அப்படி யில்லாமல் ஒவ்வொருவர்களும் தாம் எடுத்ததை முடிக்கவேண்டும். நம்ம பெயர்தான் முன்னுக்கு வரவேண்டுமென்று பாடுபடுவது சுத்த

பிசகு ஆனால் ஆரம்பித்து பாடுபடுபவர்கள் முயற்சியில்லாமல் தூங்கிவிட்டால் அவ்வித காரியத்திற்கு பிரவேசிக்காவிட்டால்அவஸ்யமில்லை ஆரம்பித்தவர்கள்பாடுபட்டுக்கொண்டிருக்க அதை நிராகரித்து தாம் எடுத்ததை முடிக்கவேண்டும் மற்றது என்னகெதியாகிலும் ஆகட்டுமென்கிற உத்தேசம் கொண்டால் எந்த காரியமும் நடவாது இதை முக்கியமாக கவனிக்கவேண்டும். யாரார் என்னென்ன காரியம் ஆரம்பித்தார்கள் யாரார் அவ்வித காரியத்தில் ஊக்கம் குறையாமல் பாடுபட்டு வருகிறார்கள் என்பதை அடுத்த பத்திரிகையிலிருந்து தெரிந்தவரையில் எழுதவேண்டும் இவர்கள் ஆரம்பித்த காரியங்களில் எது எது முக்கியமானதுகள் என்பதாக விளக்கிக் காட்டவேண்டும். அப்பொழுதுதான் அவ்வித காரியங்களை மற்றவர்கள் கவனத்தில் வைத்து அதற்கு வேண்டிய பாடுகள் படுவார்கள் அப்படியில்லாமல் சிறுபிள்ளைகள் மணல் வீடுகள் கட்டி விளையாடிவிட்டு காலால் கலைப்பது போல் கலைத்துக் கொண்டே போவதால் நம்ம ஜாதி ஒருக்காலும் முன்னுக்கு வரமாட்டாது.

### விஶ்வப்ராம்மண சபை.

பெங்களூர் கண்டோன்மெண்டில் விஶ்வப்பிரம்ம தர்மபரிபாலன சபை யென்பதாக ஓர் சபை ஸ்தாபித்து அச்சபை நமது சென்னைச் சபைக்கு கிளைச்சபையாகவும் அச்சபையில் புஸ்தக லைப்ரெரியும் ஏற்படுத்தப்பட்டு அச்சபைக்கு காரியதரிசி பிரம்மஸ்ரீ டி. எம். சிதம்பராச்சாரியாரை நேமித்து நடந்தேறி வந்தது யாவருக்கும் தெரிந்த விஷயமே. அச்சபை ஏற்படுத்திய காலத்தில் சபையும் லைப்ரெரியும் சரிவர நடத்த முடியாவிட்டால் நமது சென்னைச் சபையில் கொண்டுவந்து சேர்த்துவிடவேண்டுமென்கிற தீர்மானத்துடன் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த லைப்ரெரிக்கு நாமும் நமது அச்சுக்கூடத்தில் அச்சிட்ட புத்தகங்களில் ஒவ்வோர் புத்தகங்களையும் கொடுத்திருக்கிறோம். அதுகள் தவிர நம் புத்தகசாலையில் விற்கும் புத்தகம் படம் முதலியதுகள் சபையில் வைத்து விற்பனைசெய்து தருவதாக சுமார் 40-ரூ சாமான்கள்வரை காரியதரிசியார் வாங்கி வைத்திருந்தார். இப்பொழுது ஷை காரியதரிசியாக யிருந்த பிரம்மஸ்ரீ டி. எம். சிதம்பராச்சாரியார் நம் குலம் செய்த துர்அதிர்ஷ்டத்தினால் காலமாய்விட்டார் அச்சபைக்கு மறுபடியும் யார் காரியதரிசியாக வரப்போகிறார்களோ தெரியவில்லை. இச்சபையில் பல மெம்பர்கள் யிருந்தாலும் இதற்கு முக்கியமாக உழைத்து வந்தவராகிய பிரம்மஸ்ரீ சின்னசாமி ஆச்சாரி என்பவர் இவர் சில தினங்களுக்குமுன் ஏதோ மனவருத்தத்தினால் சபையை விட்டு விலகியிருந்தனர். இப்பொழுது காரியதரிசி அவர்கள் காலமாய்விட்டபடியால் இவர் அச்சபையில் பழையபடி சேர்ந்து உழைக்கும் பக்ஷத்தில் பழையபடி சபை நடக்குமென்பதில் சந்தேகமில்லை. பெங்களூரில் எஜமான் காரியஸ்தர்கள் முதலிய பலர்களிருக்கிறார்கள் அவர்கள் கூடி எப்படி ஏற்பாடுகள் செய்வார்களோ தெரியவில்லை. நமது கோரிக்கை பழையபடி சபையை நடத்தவேண்டுமென்பதேயாம்.

* * *

### ஆவணி அவிட்டம்.

வழக்கத்தைப்போல் இந்த வருஷம் ஆவணி அவிட்டத்தில் நமது பாடசாலையில் பிள்ளைகளுக்கு உபாகருமம் நடத்துவதற்காக நமது பாடசாலை உபாத்தியாயர் பிரம்மஸ்ரீ பா. சுப்பிரமணிய சாஸ்திரியார் அவர்களை விஜாரிக்கதற்கு வந்து செய்வதாக ஒப்புக்கொண்டு அன்றைய தினம் வாராமல் நின்றுவிட்டனர். அதன் காரணம் இன்னதென்று தெரியவில்லை. இவருக்கு ஓர்சமயம் திரேக அசௌக்கிய மிருந்திருந்தால் வேறு யாரையாவது அனுப்பியாகிலும் இருக்கவேண்டும். அப்படியில்லாமல் இன்னும் எங்கேயாவது அதிக பொருள் கொடுக்குமிடத்தை நாடிச் செல்வதாகயிருந்தால் அதற்கும் தக்க ஏற்பாடுகள் செய்திருக்க வேண்டும். இதுவுமல்லாமல் நம்பியிருப்பவர்களை நடு ஆற்றில் தள்ளிய கதைக்கு ஒக்கசெய்தார். நாம் இவ்வித காரியங்களுக்கு நம் ஜாதி பௌரோகிதர்கள் அதிகமில்லை என்றும், வைதீக சிகாமணிகளின் கோரிக்கை தவறிவிடுகிறதென்றும், இதுகளையெல்லாம் தவறாமல் நடத்தவேண்டுமென்கிற உத்தேசத்தைக் கொண்டுதான் விஶ்வகர்ம வேதாத்தியயன பாடசாலையொன்றை ஸ்தாபித்து அவ்விதபாடசாலையில் நமது குலச் சிறுவர்களுக்கு பௌரோகிதம் முதலிய வைதீக சடங்குகளை செய்து வைக்கக்கூடிய பாடங்களை போதித்து வந்தோம். அதற்கு நம் ஜாதியார்கள் ஒத்தாசைகள் செய்யாமலும் கவனியாமலும் பிள்ளைகளை விடாமலும் ஏடாகூடம் செய்து வருகிறார்கள். ஜாதியில் அதிக பௌரோகிதர்கள் இல்லாமலே நம் ஜாதியார்கள் வைதீக ஆசாரங்களை கைவிட்டு விட்டனர்கள் என்பதற்கு சந்தேகமே இல்லை. நாம் பாடசாலை வைத்திருந்தும் நம் பாடசாலைகளில் சில பிள்ளைகள் வாசித்திருந்தும் நமக்கே சமயத்தில் பௌரோகிதர்கள் கிடைக்காவிட்டால் மற்றவர்களுக்கு சொல்லவும் வேண்டுமோ ஏதோ பொருளுள்ளவர்களுக்குமட்டும் சிலர்கள் கிடைக்கக்கூடும் அது ஏனென்றால் இவர்களுடைய சிரமத்திற்கு மிஞ்சிய பொருளுதவுதற்கு கூடும். மற்ற சாமானிய ஜனங்கள் கணக்கற்றிருக்கிறார்கள். அவர்கள் போகும் கதி என்ன? வாசித்தவர்களுடைய கடமை என்னவென்றால் பொருளுள்ளவர்களுக்கு எவ்விதத்திலும் யாரோனும் கிடைப்பார்கள் அது ஏனென்றால் பொருள் அதிகம் கொடுத்து தருவிக்க முடியும் அப்படியும் அவர்களுக்கு கிடைக்காவிட்டால் அத்தொழிலை விர்த்திசெய்வதற்கும் அவர்களுடைய பொருளை செலவிட்டு முயல முடியும். எம்மைப்போலொத்த சாமானியருக்குத்தான் முக்கியமாக செய்துவைக்கவேண்டும் அப்படி செய்பத்தக்கவர்கள் கிடைக்காவிட்டால் அத்துடன் அந்த வைதீக காரியத்தை கைவிட வேண்டியது தான் அது ஏனென்றால் வறுமையினால் சாப்பாட்டுக்கே திண்டாட்டப் பட்டுக்கொண்டிருப்பதுடன் இவ்வித கஷ்டத்தையும் அனுபவிக்க மனங்கொள்ளாது இவ்வித பௌரோகிதர்கள் கிடைக்காத தொந்தரவுகளால் தான் நம்மவர்கள் வைதீக காரியங்களை கைவிட்டு அனாசாரர்களாக இருப்பதற்கு காரணம் இதை அறியாமல் நம்மவர்கள் ஒழுங்காயில்லை வைதீகத்தை அனுசரிக்கவில்லை என்பதாக கூக்குரலிடுவதால்என்ன பயன் சித்திக்கும். நோய்க்குதக்க அவிழ்தம் கொடுத்தாலல்லவா நோயை கண்டிக்கும் நோய் ஒன்றிருக்க மருந்து ஒன்று கொடுத்தால் என்னகதியோ அதுபோல நாம் நம் பிள்ளைகளுக்கு பௌரோகிதங்களைச் சொல்லி வைத்து அதைச் செய்யும்படி பழக்கத்தில் கொண்டு வந்தால் அதிக பௌரோகிதர்கள் கிடைப்பார்கள் அதனால் யாவரும் வைதீகத்தை தவறாமல் செய்துக் கொள்வார்கள். ஆனால் இவ்வித சிரமத்தை அனுபவிக்கவர்கள் அநேகர் இருக்கிறார்கள். சிலர்பொருளுள்ளவர்களாகவும் வைதீகத்தை ஆசரிக்கவர்களாயுமுள்ள சிலர்கள் தங்கள் வீட்டில் திதிக்கு மாலை 4-மணிவரையில் பௌரோகிதர் வருகிறேனென்று சொல்லி வராமல் போனதைப்பற்றி கலச ஆராதனை செய்து விட்டு அதற்குமேல் போஜனம் செய்திருக்கிறார்கள். இப்பேர்க் கொத்த டவுனிலேயே இப்படியிருந்தால் மற்றகிராமங்களில் எப்படி யிருக்கலாம் என்பதை நாம் சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம் இது விஷயத்தில் நமது நண்பர்கள் கவனித்து பொருளுள்ளவர்களைக் கொண்டு நம் குலச் சிறுவர்களுக்கு பௌரோகிதம் கற்பிக்கச் செய்து நமது ஜாதியார்களை சீர்திருத்தம் செய்து வைக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். விப்பிர பௌரோகிதர்களைக் கொண்டு செய்துக்கொள்ளலாமென்

ருலோ அவர்கள் சரியானபடி செய்து வைக்க முன்வருகிறதுமில்லை இவர்களுக்கு யேன் சரியானபடி செய்யவேண்டுமென்கிற பொறாமை யெண்ணம்கொண்டு கேவலமாக செய்கிறார்கள். அதனால் அவர்களையும் அழைப்பதில்லை. நம் ஜாதியார்களை ஜாதி அபிமானமில்லாமலும் குலாபிமானமில்லாமலும் பணத்திற்கு பாடுபட்டால் மற்றவர்களைச் சொல்லவும் வேண்டுமோ இவ்வித அபிமானமற்று சம்பாதிக்கும் பொருளை சேர்த்து வைப்பதனாலும் அல்லது டம்பமாக செலவிடுவதனாலும் இவர்கள் அடையும் பயனென்ன நம் கண்ணுக்கு முன்னால் எத்தனையோ பெயர்கள் பணத்தை நல் விஷயத்தில் செலவிடாமலும் மற்றவர்களுக்கு உபகாரார்த்தமாக உழைக்காமலும் இருந்து காலமானவர்களையும் அவர்கள் குடும்பம்போன கதியையும் பார்த்திருக்கிறோமல்லவா? இதை ஏன் இவர்கள் கவனிக்கவில்லை. இவர்கள் என்னதான் பொருளை சம்பாதிப்பதற்கு மட்டிலும் வாசித்துக் கொண்டாலென்ன பயன் இறந்தாலும் நற்கதி அடைவதற்கு வழிதேடிக்கொள்ளவில்லையே. இவர்களெல்லாம் என்னகதி அடைவார்களோ தெரியவில்லை. நம் ஜாதி பௌரோகிதர்கள் அவரவர்களுக்கு பின்பு பௌரோகிதம் செய்வதற்கு நம் ஜாதிச் சிறுவர்களுக்கு தங்களுடைய தொழில் மந்திரங்களை கற்பித்து கொடுக்காமல் மறைத்து வைத்திருந்து காலமாய் விட்டார்கள். அதன் காரணம் மற்றவர்களுக்கு கற்பித்து கொடுத்துவிட்டால் தங்களுக்கு வரும் வரும்படியில் அவர்களும் பங்கிட்டுக் கொள்ளுவார்களென்றும் வருமானம் குறைந்து விடுமென்றும் துர் அபிப்பிராயத்தினாலும் பொறாமையினாலும் சொல்லி வைக்காமல் இறந்தார்கள் அவர்களுடைய குடும்பங்களாவது க்ஷேமமாக இருக்கிறதா வென்று பார்த்தாலோ பெயர் சொல்லகூட மனுஷாள் இல்லாமல் நாசமாய் விட்டார்கள் அவர்கள் சம்பாதித்த சொத்துக்களும் அப்படியே ஆய்விட்டன. இதற்கு காரணம் ஈவிரக்கம் ஜீதயாளம் இல்லாக்குறையும் பொறாமை குணமுமே யாகும். எத்தனையோ பௌரோகிதர்கள் இருந்தார்கள் ஒவ்வொருவர்களும் 10 பிள்ளைகளுக்கு பாடம் சொல்லி வைத்திருந்தால் எத்தனையோ பௌரோகிதர்கள் இப்பொழுது இருக்கக்கூடும். 10 வருடத்திற்கு முந்தி இருந்த பௌரோகிதர்களுக்கும் தற்சமயம் எத்தனையோ குறைந்து விட்டது. இதை உத்தேசித்துதான் சென்னையில் நமது காளிகாம்பாள் தேவஸ்தானத்தில் ஓர் பாடசாலை ஏற்படுத்தி பிள்ளைகளுக்கு சொல்லிவைக்க வேண்டுமென்று எத்தனையோ மீட்டிங்குகளில் எடுத்து வற்புறுத்தி சொல்லியும் நம் ஜாதியார்கள் எவர்களும் கவனிக்கவேயில்லை. நமது விஸ்வகர்ம குலோபகாரி பத்திரிகையிலும் பலவூர்களிலும் பல பாடசாலைகளை ஏற்படுத்தி பிள்ளைகளுக்கு பௌரோகிதங்களை சொல்லி வைக்கவேண்டுமென்று பலமுறை எழுதியும் யாரும் கவனிக்கவேயில்லை. ஜாதி ஜாதி என்றுமட்டும் சொல்லிக் கொள்கிறார்களே யொழிய ஜாதிக்குரிய ஒழுங்குகளை யாரும் கவனிக்கவில்லை உயர்ந்த ஜாதி யென்று மட்டும் சொல்லி விட்டால் போதுமா அதற்குதக்க நடவடிக்கைகளும் வேண்டுமல்லவா அதுகளை ஏன் கவனிக்கக் கூடாது, நம் குலம் செய்த புண்ணியமோ பூர்வபலமோ தெரிய வில்லையே.

* * *

புத்தகம்.

விஸ்வகர்மானுஷ்டான வேதமஞ்சரி தெலுங்கு இரண்டாவது பதிப்பு அச்சிட்டாய்விட்டது இது நமது பிள்ளைகள் புரோகிதம் கற்றுக்கொள்வதற்கு முதல் புத்தகம் இதில் ஸ்நானமந்திரம், விபூதிதாரண மந்திரம், திரிகால சந்தியாவந்தனம், விக்னேஸ்வர பூஜைக்குரிய மந்திரம், புண்ணியாஹவாசனமந்திரம், தீபாராதனைமந்திரம், ருத்திர நமகசமக மந்திரம், அமாவாசை தர்ப்பண மந்திரம், புருஷ



சூக்தம், ஸ்ரீசூக்தம், பூசூக்தம், ஆசிர்வசனம், அபிவாதன முதலிய பல மந்திரங்களும் அடங்கியுள்ளது இதை நாம் ஒவ்வொருவர்களும் வாங்கி நம் பிள்ளைகளுக்கு சொல்லிவைக்க வேண்டியது கடமை.

இதன் விலை ஆறணாதான் 0—6—0 இதைப்போல வேத மிழிலு மிருக்கிறது. விலை இரண்டணாதான் 0—2—0 ஆனால் தெலுங்கில் சப்தபேதமில்லாமல் சரியாகயிருக்கும். தமிழுக்கு உபாத்தியாயர் மூலமாகத்தான் பாடம் கேட்டுக் கொள்ளவேண்டும். இந்த புஸ்தகம் முழுமையும் பாடமாய்விட்டால் பிறகு சுலபமாக மற்ற மந்திரங்களைக் கற்றுக்கொள்ளலாம் பௌரோகிதர்களாக ஆகலாம்.

* * *

விஸ்வகர்ம புத்தகசாலை.

நமது புத்தகசாலையை விர்த்தி செய்யும் பொருட்டு சென்னை சிந்தாதிரிப்பேட்டை டிராம்வே போகும் ரோட்டாகிய அய்யா முதலி வீதி ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு வடபுரத்தில் ஸ்தாபிக்கப்பட்டு அதில் பல புத்தகங்களும் தமிழ், தெலுங்கு, நாகரம், கிரந்தம், இங்கிலீஷ் முதலிய புத்தகங்களும் நாவல்களும் இஸ்கூல் பிள்ளைகளுக்கு வேண்டிய பாடபுத்தகங்களும் நோட்புக்குகளும் விற்கப்பட்டுவருகிறது. வெளியூர் ஆர்டர்களுக்கும் எம்மிடத்தில் இல்லாத புத்தகங்களும் தருவித்து அனுப்பப்படும். வேண்டியவர்கள் எழுதித் தருவித்துக்கொண்டு நமது புத்தகஷாப்பை விர்த்திசெய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நமது புத்தகஷாப்புக்குச் சில துர்மார்க்கர்கள் புஸ்தகம் வேண்டுமென்று கடிதம் எழுதிவிட்டு நாம் புஸ்தகங்களை வி. பி. யில் அனுப்பினால் அதைப் பணங்கட்டி வாங்காமல் திருப்பிவிடுகிறார்கள். அதனால் நமக்கு ஸ்டாம்புச் செலவும் புஸ்தகம் செலவுகளுமாக அனேக கஷ்டங்கள் ஏற்படுகிறது. அவர்களுடைய திருநாமங்களை யெல்லாம் நமது பத்திரிகையில் அச்சிடலாமென்று உத்தேசித்திருக்கிறோம்.

## புத்தக, பத்திரிகை வரவும், மதிப்புரையும்.

திருவருட் பிரார்த்தனை:—பிறவிக் கடலைக் கடப்பதற்குச் சாதகமான மார்க்கங்களை சுலபமாக போதிக்கும் இச்சிறிய நூல் சென்னை வண்ணாரப்பேட்டை சமரச ஞானசங்கத்தாரின் முதல் பிரசுரமாக வெளிவந்திருக்கின்றது. இஃது 56 கலிவெண்பாக்களால் அமைந்தது. சொற்சுவையும், பொருட் சுவையும் பொலியப் பெற்று விளங்குகின்றது. இதன் விலை காலணா.

* * *

காதல் வெற்றி:—இப்பெயரிய 'நாவல்' சென்னை ஜீ. எ. வைத்தியராமன் கம்பெனியாரால் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. இதன் ஆசிரியர் ம-ா-ா-ஸ்ரீ வி. பி. கிருஷ்ணசுவாமி பி. எ. இக்கதை பிராமண குடும்பத்தில் சாதாரணமாக நிகழும் விஷயங்களைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. எளிபநடையும், இனிய கோர்வையும் உடையது. உலக ஞானத்தை விரும்பும் சிறுவர்களும் சிறுமிகளும் சந்தேகமின்றி வாசிக்கலாம். விலை அணா 0—4—0.

* * *

இந்திய மாதர் சரித்திரம்:—சென்னை, ஆர். திருமலை அண்டு கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்ட தேசச்சரித்திரம் இதன் ஆசிரியர் தமிழ் பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ V. B. வெங்கட ராமசாஸ்திரிகள். இப்புத்தகம் பெண்கல்வியின் அபிவிர்த்தியைக் கோரி எழுதப்பட்டிருக்கிறது. பூர்வீக, மத்தியகால, நவீன ஸ்திரி ரத்தினங்களைப் பற்றி இதுவரையில் வெளிவராத பல நூதனவிஷயங்கள் இந்நூலில் காணப்படுகின்றன. இதனை பெண்பாடசாலைப் புஸ்தகங்களில் ஒன்றாகச் செய்யின், நமது சிறுமிகளுக்கு மிக்கநன்மை பயக்குமெனக் கருதுகிறோம். இதன் விலை அணா 0-5-0.

* * *

### நளவருஷ வாக்ய பஞ்சாங்கம்.

இராமநாதபுரம் பஞ்சாங்கம் என்று சாதாரணமாக வழங்கும் இப்பஞ்சாங்கம் மதுரை ம-ா-ா-ஸ்ரீ. S நாகலிங்காச்சாரியாரவர்களால் கணிக்கப்பட்டது. இப்பஞ்சாங்கம் 40பக்கங்கள் கொண்டது. சமஸ்த கணிதங்களும் குறிப்புகளும் அடங்கியிருக்கின்றன. மற்றய பஞ்சாங்கங்களுடன் இதனை ஒத்திட்டுப் பார்ப்பவர்களுக்கு இதன் அருமைபெருமை தெரியும். இதன் விலை அணு 0—2—0.

***

### மதுரைமாணவர் செந்தமிழ்ச்சங்கத்தின் பதினைந்தாம் வருஷோத்ஸவ அறிக்கை.

இப்புத்தகவரவினால், இச்சங்கம் சென்ற பதினைந்து வருஷங்களாக தமிழ் பாஷாபிவிர்த்தியைக்கோரி செய்துவரும் காரியங்கள் நன்குபுலப்பட்டன. ஆதரிப்பாரின்றி அல்லலுறும் நமது தாய் பாஷையை நாம் போற்றுவிடில், பின்போற்றுவார் யாரோ! இச்சங்கம் நீடூழிநிலைபெற்றிருக்க இறைவனருள்வாராக!

***

விவேகோதயம்:— மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று வெளிவரும் ஓர் உயரிய மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. விஷயங்களின் அருமைப் பாட்டிலும், வியாசங்களின் பொருளமைதியிலும் சிறந்து விளங்குகின்றது. இதன் வருட சந்தா ரூபா 1—8—0.

***

தமிழ்பெருமாட்டி:—இப்பெயரிய பத்திரிகையின் முதல் சஞ்சிகை கிடைக்கப்பெற்றோம். தாய் பாஷையின் வலிவு குன்றிய இக்காலத்து இப்பத்திரிகை தோன்றியது மிக்க பாராட்டத்தக்கதே. இதன் வருடசந்தா ரூபா 3—0—0.

***

ஞானபானு, சென்னை:—தான் பூண்ட பெயருக்கேற்ப, ஞான சாதன விஷயங்களையும், இன்னும் உலகோர்க்கின்றியமையாத பல அரிய விஷயங்களையும் திரட்டி சுலப நடையில் வெளிவரும் ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. இதன் வருட சந்தா ரூபா 1—12—0.

***

இந்தியன் அட்வர்டைஸர்:— புதுவையினின்றும் வெளிவரும் ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. இப்பத்திரிகையில் பத்திரிகைகளுக்குரிய மற்ற விஷயங்கள் அடங்கியிருப்பதோடும், இனிய கதைகள் தொடர்ந்து எழுதப்படுகின்றன. வருட சந்தா ரூபா 1—8—0.

***

பூர்ண சந்திரோதயம், மதுரை:— உயர்தர ஆங்கிலக் கல்வி வாய்ந்த ஓர் பத்திரிகாசிரியரால் நடாத்தப்படும் இம்மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை, 'வேதாந்தம்,' மதம் முதலிய பெரிய விஷயங்களின் ஆராய்ச்சிகளை வெளிப்படுத்திவருகின்றது. இதன் வருட சந்தா ரூபா 2—0—0.

***

ஜனோபகாரி, வேலூர்:— இம்மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை அமைப்பிலும், விஷயத்தொகுப்பிலும், மனதை ரம்மிக்கச் செய்கின்றது. 'பல சரக்குக்கடை' என்னும் பகுதி மிக்க ஆழ்ந்த கருத்துக்களை அடக்கியிருக்கின்றது. இதன் வருட சந்தா ரூபா 3—0—0.

***

வர்த்தகமித்திரன், தஞ்சாவூர்:— இத்தமிழ்ப் பத்திரிகை மாதமிருமுறை வெளிவருகின்றது. இப்பத்திரிகை உண்மையிலேயே வர்த்தகர்களுக்கு மித்திரனாகவிருக்கிறது. வியாபாரசம்பந்தமான விஷயங்கள் வெகு பிரயாசையுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் வருடசந்தா ரூபா 5—0—0.

[ப-ர்.]

***



## திருச்சினுப்பள்ளி விஸ்வகர்ம மஹாஜன மூன்றாவது கான்பரன்ஸ் வேண்டுகோள் விக்ஞாபனம்.

(1) 1916ஹு மார்ச்சுமீ 24உ மாலை 4-மணிக்கு திருச்சி பெரிய கம்மாளத்தெரு ஸ்ரீ காமாக்ஷியம்மன் தேவஸ்தானத்தில் கூடியிருந்த விஸ்வப்ராம்ஹ மஹாஜன சென்ட்ரல் சபையார் சென்னையிலிருந்து விஜயமான விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் நிரந்தர சென்ட்ரல் கமிட்டி பிரசிடெண்டு பிரம்மஸ்ரீ T. M. முக்கண்ணாச்சாரியார் அவர்கள் வரவை பெற்று உபசரணை செய்யப்பட்ட பின்னர், பிரசிடெண்டு அவர்களால் உபந்நியாஸிக்கப்பட்ட நங்குல ஈடேற்றத்திற்குரிய பற்பல விஷயங்களையுங் கேட்டு, சபையார்கள் ஆனந்தபரவசங் கொண்டு அடுத்த 1917ஹு த்தில் இந்த திருச்சினுப்பள்ளியில் மூன்றாவது விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் கூடவேண்டியதை முன்னிட்டு, அடியிற்கண்ட கனவான்களை ஜில்லாக் கமிட்டி மெம்பர்களாகத் தெரிந்தெடுத்து நியமிக்கப்பட்டிருக்கிறது.

### ஜில்லாக் கமிட்டி மெம்பர்கள்.

பிரம்மஸ்ரீ T. A. முத்துகிருஷ்ண ஆச்சாரியார் அவர்கள் செக்ரிடெரி
,, K. வைத்தியலிங்க பத்தர் அவர்கள்
,, R. பொன்னம்பலம் ஆச்சாரியார் அவர்கள்

பிரம்மஸ்ரீ அப்பாவு ஆச்சாரியார் அவர்கள் } உறையூர்
,, R. சுப்பிரமண்ய ஆச்சாரியார் அவர்கள் } உறையூர்
,, தி. அ. குப்புசாமி பத்தர் அவர்கள் } ஸ்ரீரங்கம்
,, M. வீரண்ண பத்தர் அவர்கள் } ஸ்ரீரங்கம்
,, கோட்டம் பிச்சுனாச்சாரியார் அவர்கள் } ஜம்புகேஸ்வரம்
,, R. மாணிக்கம் ஆச்சாரியார் அவர்கள் } ஜம்புகேஸ்வரம்

(2) விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ், நிரந்தர சென்ட்ரல் கமிட்டியின் ரூல்ஸ்படி திருச்சியிலேற்படுத்தப்பட்டிருக்கின்ற ஜில்லாக் கமிட்டியுடன், திருச்சினுப்பள்ளியைச் சார்ந்த ஒவ்வொரு தாலூகாக்களிலும், வாசஞ் செய்துகொண்டிருக்கிற விஸ்வகர்ம மஹாஜனங்கள் ஆங்காங்கு கூட்டங்கூடிப் பேசி ஒவ்வொரு கஸ்பாவிலும் 7 பேர்கள்கொண்ட தாலூகாகமிட்டிகளாய் ஏற்கனவே தெரிந்தெடுத்து, நியமுகஞ்செய்துகொள்ளப்பட்டு, மேற்கண்ட ஜில்லாக் கமிட்டியும் தாலூக்கா கமிட்டிகளும் ஒற்றுமைக்க முற்படுவார்களாகில் சென்ற வருடத்திற் கும்பகோணத்திலும், இந்த வருடத்தில் தஞ்சாவூரிலும் நடைபெற்ற கான்பரன்ஸைவிட, மும்மடங்கு விமரிசையாய் அடுத்த 1917-ம் வருடத்தில் இந்த திருச்சி டவுனுக்குள் மூன்றாவது விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் நடைபெற்று நீடூழிகாலம் புகழோங்கிக் கொண்டிருக்குமென்பதற்குச் சந்தேகமேயில்லை.

ஆகலின் திருச்சினுப்பள்ளி டவுனிலும் இதைச் சார்ந்த தாலூக்காக்களிலும் வாசஞ் செய்துகொண்டிருக்கின்ற, விஸ்வப்ராம்ஹண குலோத்தமர்களான நண்பர்களே, இதுமுதல் வேண்டிய திரவியங்களை வசூல்செய்து அடுத்த 1917-ம்ஹு த்தில் திருச்சியில் 3-வது விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸை வெகு விமரிசையாய்

நடாத்தி யிவ்வுலகமெண்டிசையும் மாருப்புகழைப் பெற்று வாழவேணுமாய் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். இக்கான்பரன்ஸ் நடைபெற்ற பின்னர் 1918-ம் வருடத்தில் கோயமுத்தூரிலும், 1919-ம் வருடத்தில் மதுரையிலும் 1920-ம் வருடத்தில் திருநெல்வேலியிலும், 1921-ம் வருடத்தில் இராமநாதபுரத்திலும், 1922-ம் வருடத்தில் புதுக்கோட்டைச் சமஸ்தானத்திலும், அடுத்தடுத்து கான்பரன்ஸ் நடைபெற்றுயும்படி அங்காங்குள்ள விஸ்வப்ராம்ஹ மஹாஜனங்கள் வேண்டிய ஏற்பாடுகள் ஏற்கனவே செய்து காரியசித்தி பெறுவார்களென உறுதியாய் நம்புகிறேன். விஸ்வேஸ்வர பகவான் முன்னின்று திருவருள் புரிவாராக.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
EX. முனிசிபல் கௌன்சிலர்,
திருச்சி வி. ம. செண்ட்ரல் சபை வைஸ்பிரசிடெண்டு,
பழனிஸ்தலம்.

## வர்த்தமானக் குறிப்புகள்.

### ஓர் விநோதமான கடியாரம்

சுவிட்ஸர் லாண்ட் என்னும் பட்டணத்தில் செய்யப்பட்ட மகா விசித்திரமான கடியாரமொன்று ருஷியாவி லிருக்கின்றதாம் அதற்கு 95-முக்ங்களமைக்கப்பட் டிருப்பதுடன் ஒரே நேரத்தில் 30-தேசங்களின் மணிநேரங்களைக் குறித்துக் காட்டுகிறதல்லாமல் பூமிசூரியனைச் சுற்றி வருவதையும் சந்திரகலையின் தோற்றங்களையும் இராசி மண்டலத்துக்குரிய குறிப்புகளையும் கிரிகோரியர், கிரேக்கர், மகமதியர் ஹிப்ரூ முதலிய ஜாதியாரின் பஞ்சாங்கத்தையும் காட்டுகின்றனவாம். இதனை சுவிட்ஸர் லாண்டில் செய்து துண்டு துண்டாக ருஷியாவுக்கு அனுப் பினபோது அத்துண்டு சாமான்களை எல்லாம் சேர்த்துப்பூட்டுவதற்கு இரண்டு வருஷம்சென்றதென சொல்லப்படுகின்றது

* * *

### ஓர் கோழியின்குஞ்சு.

ஒரு கிராமத்தில் ஓர்கோழி 13 முட்டைகளிட்டது அவைகளில் ஒரு முட்டை கொஞ்சம் பெரியதாகவேயிருந்தது அதைச் சேர்த்து அப்படியே அவயம் வைத்து நாளது 7-1-15 காலையில் குஞ்சு இறக்கினர்கள், பெரிய முட்டையா யிருந்ததில் நான்கு கால்களையுடைய குஞ்சானது வெளிப்பட்டு உடனே இறந்துவிட்டது இதைப்பார்த்த ஜனங்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள்

* * *

### ஓர் அதிசயமான ஆட்டுக்குட்டி.

கரூரைச்சேர்ந்த ஒரு கிராமத்தில் ஒரு செம்மறியாடு 8-காலும் 2-உடலுமுடைய ஒரு குட்டியை ஈன்றது. ஆனால் அஃது உடனே இறந்துபோயது.

கல்கத்தா-பூரான் பஜார்க்கு சமீபமாக வசிக்கும் ஒரு ஸ்திரீ சென்ற இரண்டு வாரத்திற்கு முன் ஓராண்பிள்ளையைப் பெற்றாள்; அது பிறந்த 5-நாள் முதற்கொண்டு மூச்சே யிடவில்லை டாக்டர் சோதித்து அக்குழந்தை யிறந்ததென்றுத் தீர்மானிக்க அதைச் சுடுகாட்டிற்கெடுத்துக்கொண்டுபோய்ச் சவக்குழியில் வைக்கும்போது அக்குழந்தைமூச்சுவிட்டுப் புரளத்தொடங்கிற்று; அக்குழந்தை வீட்டிற்குக் கொண்டுவரப்பட்டு சௌக்கியமாக விருக்கின்றது.

மிதுனப்பூர் பெண்பாடசாலைக் கருகே ஒரு கிணற்றிலிருந்து மனிதக் குரல் உண்டாக உடனேபோய்ப் பார்க்கையில் ஒரு குரங்கு கிணற்றுக்குள் வீழ்ந்திருந்ததைக் கண்டனர் குரங்குக்கு மானிடக்குரலும் உண்டு போலும்!

* * *

### குரங்கும் இங்கிலீஷ் படிக்கின்றதாம்.

இக்காலத்தில் எங்கே பார்த்தாலும் இங்கிலீஷ்இங்கிலீஷென்று இங்கிலீஷ்ஒருமிக்கப் பெருத்துப்போய் கடைசியாக இப்போ குரங்குங்கூடப்படித்துப் பாஸ்பண்ணப்போகிறதாம் அமெரிக்காவிலுள்ள பில்டெல்பியா என்னும் பட்டணத்தில் போதகாசிரிய ரொருவர் இரண்டு குரங்குகளுக்கு அக்ஷராப்பியாசம்செய்து வருகின்றனராம் அக்குரங்குகள்எழுத்துக்களை



யும் வார்த்தைகளையும் வெகு திருத்தமாக உச்சரிக்கின்றதெனச்சொல்லப்படுகின்றது. குரங்காயிருந்த போதிலும் சொல்வதைப் போல் திருத்தமாகச் சொல்லுகிறதே சில மனிதர் பெற்றப் பிள்ளைகளுக்கு இவ்வித புத்தியில்லாமல் தினம் உபாத்தியாயர்களிடம் உதைபடும்படி அவர்கள் தலையிலெழுதியிருக்கும்போலும்

* * *

### நாலுகாலுள்ள கோழிக்குஞ்சு.

மிஸ்டர் நாண்டெரி என்னும் புரும்பீள்ட் தோட்டத்தின் துரையினிடமிருக்கும் கோழி குஞ்சு பொரித்ததில் ஒரு கோழி குஞ்சுக்கு நாலுகால்களிருந்தனவாம். இப்போது அந்த கோழிகுஞ்சுக்கு வயது இரண்டுமாதமாகிறதென்றும் இதுபரியந்தம் நல்ல சுவர்த்தியமான நிலைமையி லிருக்கிறதென்று சொல்லப்படுகிறது இதுபெரிதானல் இதின் குஞ்சுகளுக்கு எட்டுகால்களிருக்கும்போலும்

* * *

### தும்மல் மரம்.

தென் ஆப்பிரிக்காவில் ஒருவித மரம் இருக்கின்றது இதை அறுத்தாலும் வெட்டினலும் மனிதருக்குத் தும்மலுண்டாகிறதாம். பூச்சி புழுக்கள் ஒன்றும் இம்மரத்தை நாடுவதில்லையாம் இது ருசிக்குக் கடுங்கசப்பாம். வேலைக்காக வெட்டி காய்ந்தமரம் பார்வைக்கு அழகாயும் உருகியாயுமிருக்கின்றதாம். இழைத்து மெருகு கொடுத்தால் நன்றாயிருக்குமாம் இம்மரம் ஜலத்தில் நெடுநாளைக்குக் கெடாமலிருப்பதால் கடற்பாலங்கள் முதலிய வேலைக்கு மிகவும் உபயோகப் படுகின்றதாம்.

* * *

### 1800 மைல்தூரம் நீர்க்குள் பிரயாணஞ் செய்த ஒருகப்பல்.

டியூச்லண்ட் என்னும் ஒரு ஜெர்மன் கீழ் நீர்க்கப்பல் 29 மாலுமிகளையும் பல டன் எடையுள்ள தபால்களையும், ஜெர்மன் சக்ரவர்த்தி அமெரிக்கா ஐக்கிய நாட்டின் பிரசிடெண்ட் வில்ஸனுக் கெழுதிய ஒரு கடிதத்தையு மேற்றிக்கொண்டு சென்ற மாதம் 23உ ஒரு ஜர்மன் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு பிரிட்டிஷ் பிரான்சு யுத்த கப்பல்களுக்கு பயந்து 1800 மைல் தூரம் நீர்மட்டத்திற்குள்ளேயே பிரயாணஞ்செய்து அமெரிக்காவிலுள்ள பால்டிமூர் என்னும் துறைமுகம் வந்து சேர்ந்திருக்கின்றது. அதில் சாயச்சரக்கும் மிகுதியாக ஏற்றப்பட்டிருக்கின்றது. அக்கப்பல் 1000டன் எடையுள்ளதாம்; அதன் நீளம் 300 அடியாம் அகலம் 40 அடியாம்.

* * *

### ஓர் ராக்ஷசப் பிறப்பு.

சென்ற சில வருஷங்களுக்குமுன் பீஜனூர் ஆஸ்பத்திரியில் ஓர் குழந்தை பிறந்தது. அதன் அங்கவமைப்பு பின்வருமாறு:

பெண்குழந்தை தேகம் குழந்தைப் பருவ முதிர்ச்சியைக்காட்டிலும் மிதந்தது. கடைவாய் பற்கள் நான்கு. வலது புறம் ஒருகாதும் இடது புறம் ஒன்றின் கீழ் ஒன்றாக மூன்றுகாதுகள். இக்குழந்தையின் மார்பில் ஓர் ஆண்குழந்தை ஒட்டிக்கொண்டிருந்தது. இக் குழந்தையின் அரைக்குக் கீழுள்ள அங்கமெல்லாம் போதிய முதிர்ச்சி யுள்ளவை. கைகள் அவ்வளவு முதிர்ச்சியடையவில்லை கைகள் ஒன்றுக்கு ஒவ்வொரு விரல்தான் இருந்தது. ஆனால் தலையில்லை பிரசவம் கஷ்டப்பிரசவமே. தாய் சௌக்கியம். குழந்தை நிலைமை தெரியவில்லை. விஜயபானு.

* * *

### ஓர் வானரப் பிள்ளை.

சிலோன் ப்துளை டிஸ்ட்ரிகட் அரிசிப் பத்தனை தோட்டத்தில் சுமார் ஒன்பது வயதுள்ள ஓர் பெண்பிள்ளைக்கு குரங்கைப்போன்ற முகமும் கண் புருவம் சிரசுமுதலியயாவும் வாய்ந்திருக்கிறது இது பரியந்தம் அப்பிள்ளை வாய்திறந்து பேசவில்லை குரங்கு செய்யும் சேட்டைகள்யாவும் செய்கிறது வயது ஒன்பதாகியும் ஆடைகள் அணிந்துகொள்ள வேணுமென்கிற எண்ணம் இன்னும் அப்பிள்ளைக்கு வரவில்லை அப்பிள்ளையின் அன்னை அப்பெண்ணை மிகவும் பிரீதியாய் கைச்சாடை முதலிய அபினயங்கள் காட்டி சந்துஷ்டியடையச் செய்து வளர்த்து வருகிறாள்.

* * *

### அமெரிக்காவிலுள்ள ரொம்ப பெரிய மரங்கள்

அமெரிக்காவில் உள்ள மரங்களுள் மைக்கமூர் என்னும் மரந்தான் ரொம்ப பெரியதாம், ஒன்றின் அடிமரத்தின் சுற்றளவு 4? அடியாகும். அதன் உயரம் 150 அடியாம் இதற்கு அடுத்த படியாயுள்ளது ஒரு ஓக் மரமாகும். இதன் அடிமரத்தின் சுற்றளவு 37 அடியாம்.

* * *

### ஒரு பிரசவத்தில் நான்கு குழந்தைகள்.

மைசூர் ஜில்லாவில் ஒரு ஊரில் வெங்காபாய் என்னும் பிராமணஸ்த்ரீ ஸமீபத்தில் ஒரே பிரசவத்தில் 24 மணி நேரத்துக்குள் 4 குழந்தைகளைப் பெற்றுளாம். பிரசவவேதனை அதிகமாயிருந்ததாம். முதல் குழந்தையும் மூன்றாவது குழந்தையும ஆண்களாம் மற்றவை பெண்களாம். முதலில் பிறந்த 2 குழந்தைகள் ஒன்பது நாளும், மற்றவை 13 நாள்களும உயிரோடிருந்தனவாம்.

***

### 4 மைல் உயரத்திலிருந்து கேட்கலாம்.

பூமியின் கீழ் நாய்கள் குலைத்தால், அச்சத்தத்தை ஆகாயத்தே விமானத்தில் 4மைல் உயரத்தி லிருந்துகொண்டு கேட்கலாமென்று ஆகாய விமானிகள் சொல்லுகிறார்களாம்.

***

### ஒரு திருத்தச்சாலை

இரங்கோன் கிமெண்டைன் ரஸ்தாவில் ரக்ஷணிய சேனையார் முதல் முதல் குற்றஞ்செய்து தண்டனை யடையுந் திருடர்களைத் திருத்துவதற்குரிய ஸ்தாபனமொன்று ஏற்படுத்த நிச்சயித்திருக்கின்றனர். அதனை பர்மாக் கவர்ன்மெண்டார் அங்கீகாரஞ் செய்திருக்கின்றனர்.

***

### யோசிக்கும் திறமையுள்ள குதிரைகள்.

ஜெர்மனியில் க்ளெவர் ஹார்ஸ் என்று அற்புதக் குதிரை ஒன்று உண்டு. அதற்குக் கணிதமும் பாஷையும் நன்றாய்த் தெரியும். இது பத்து வருஷத்துக்கு முன்னாலேயே மிகக் கியாதியடைந்து விட்டது இப்போது அதைப்போலவே அற்புத சக்திவாய்ந்த இரண்டு குதிரைகள் மத்ய பிரஷ்யாவில் எல்பர் பீல்ட் என்னும் ஊரில் இருக்கின்றன. அவைகள் இரண்டும் அராபிக் குதிரைகளாம் அவைகளின் பெயர் முறையே மகம்மெட், சாரிப் என்பனவாம் அவை இரண்டும் ஒரு உபாத்தியாயருக்குச் சொந்தமானவை அவர் அவைகளுக்கு யோசனை செய்யவும் கணக்குப் போடவும் கற்றுக்கொடுக்கிறார்கள் அவைகளுக்கு நான்கு வருஷம் சிரமப்பட்டு ஜெர்மன் பாஷையும் பிரான்சு பாஷையும் கற்றுக்கொடுத்திருக்கிறார் அந்தப் பாஷைகளைப் பேசினாலும் சரி அவைகளை எழுதிக்காட்டினாலும் சரி அவைகள் அந்த பாஷைகளை அறிந்து கொள்கின்றன. கேள்விகள் கேட்டால் அவைகள் பதில்களைக் காலால் தட்டிக் காட்டுகின்றன. அவைகளுக்கு கணிதத்திலுள்ள அறிவு மிகவும் சிலாகிக்கத் தக்கது கூட்டல் வகுத்தல் நீண்ட வகுத்தல் பெருக்கல் கூட்டல் கழித்தல் முதலிய கணக்குகளுக்குச் சரியாய் விடை சொல்லுகின்றனவாம் 5 ஸ்தானமுள்ள ஒரு எண்ணை வெகு சீக்கிரம் நான்கால் பெருக்கி தப்பில்லாமல் விடை கொடுக்கின்றன அவைகள் தங்கள் பெயரை எழுத்துக் கூட்டுவதோடு நாட்களின் பெயரையும் மாசத்தின் பெயரையும் தெரிவிக்கின்றன.

***

### குள்ளர்கள் இராஜ்யம்.

பிரான்சுகாரரின் குடியேற்றமான நாடுகளிலொன்றாகிய கொங்கோவைச் சேர்ந்த காங்கிபோ வென்னும் ஸ்தலத்தில் வசிப்பவர்களெல்லாம் குள்ளமனிதர்களாம் ஒருவனாவது நாலேமுக்கால் அடிக்குமேல் உயரமானவன் இல்லையாம்.

***

### ஒரு கடிதத்தின் விலை 6 ஆயிரம் பவுன்.

லார்டு கிச்சனர் தாம் இறப்பதற்குச் சிலமாதங்களுக்கு முன் சேனைக்கு 3 லட்சம் மனிதர்கள் தேவையென்று ஓர் கடிதம் எழுதி இருந்தார் சென்ற ஜூன்௴ 30உயன்று அக்கடிதத்தை ஏலத்துக்கு விட்டதில், 1500 பவுன் முதல் 5000 வரையில் ஏலம் கேட்கப்பட்டது முடிவில் மிஸ்டர் ஹாரிசன் என்பவர் அதை 6-ஆயிரம் பவுனுக்கு ஏலம் கேட்டு வாங்கிவிட்டார்.

***

### வைத்தியக்கூலியும் ஏழைகளும்.

உயிர் வாழ்வதற்கான செலவும் மருந்துகளின் விலையும் விசேஷமாக அதிகரித்து விட்டதனால், பெர்லின் நகரிலுள்ள வைத்திய சங்கத்தார் அனைவரும் ஒன்றுகூடி வைத்தியத்திற்கென்று வாங்கப்படும் பணத்தை உயர்த்தி விடுவதென்று தீர்மானித்து விட்டனர் ஏழைக்குடும்பங்களும் போர்முனையிலிருக்கும் சோல்ஜர்களுக்கும் வழக்கம்போலுள்ள கட்டணமே விதிக்கப்படுமாம்.

***

OFFICE ... 3-OCT 1916 ... MADRAS.

உ

ஸ்ரீமத் விராட் விஸ்வப் பிரஹ்மணே நம:

# விஸ்வகர்ம குலோபகாரி.

மலர்-3. { நள௵ புரட்டாசி௴ 1916௵ செப்டம்பர்௴ } இதழ்-9.

## மெய்ஞ்ஞான தீபம்.

### உயிரியல்பு.

மக்களுக்கு வயது நூறென்பது சாதாரணமாக யாவரு மறிந்தவிஷயம். ஒருவர் நூறு வருஷம் பிழைத்திருப்பாராயின், அவருக்கு ஐம்பது வருஷம் உறங்குங்காலமாகவும் ஏனைய ஐம்பது வருஷத்திற் பாதி பால்யமாகவும், வயோதிகமாகவும் போம். மற்றையப் பாதியோவெனின் இடையிடையே நேரிடும் நோய்களாலும், அவற்றை யொழிக்க முயலுவதாலும், விருப்பு வெறுப்புக்களால் துக்கமடைவதாலுமொழியும். ஆகவே செய்தக்க காரியங்களை மக்கள் சீக்கிரம் கைக்கொள்ளல் வேண்டும்.

***

### புகழுடம்பு.

ஆகாயத்தே எறிந்த கல்லானது தவறாது பூமியை சென்றடைவது போலவும், கிழக்கே உதிக்கும்சூரியன் மேற்கே அஸ்தமிப்பது போலவும், பூமியில் பிறந்தமாக்கள் இறப்பது நிச்சயம். எது தவறினாலும் மரணம் தவறுவதில்லை யாதலின் மரணத்திற் கேதுவான ஜனனம் வாராதவழியை விரைந்து நாடுதலே ஒவ்வொருவருடைய முக்கியமான கடமையாம். அதிகாரத்தாலும், ஆண்மையாலும், பொருளாலும், பிறவாற்றாலும், மிக்க மேன்மை பெற்றவர்களும் இறந்தார்களேயன்றி உயிரோடு கற்பகாலம் இருந்தார்களென்று பெறப்படவில்லை. ஆகையின், ஜனனத்தை தவிர்க்க முயல்வது ஒவ்வொருவருடைய முக்கிய கடமையாயினும், அஃதியலாதவிடத்து புகழுடம்பேனும் அடையும் சற்காரியங்களில் முயற்சிப்பது அவசியமாம். மரணமும் அடைந்து, இகழுடம்பையும் ஒருவர் பெறுவதென்றால் எவ்வளவு அறியாமை அவரிடம் குடிகொண்டிருத்தல் வேண்டும்!

***

### பாத்திர மறிதல்.

யாம் இளமைப்பருவமுடையரா யிருக்கின்றோம்; அழகும் ஆண்மையும்பொருந்தியிருக்கின்றோம். எண்ணக் குறைபடாத செல்வத்தை யுடையவரா யிருக்கின்றோம் என்று இறுமாப்புற்றுத் தமது வாழ்நாள் நீர்க்குமிழிபோல நிலைபெறா திருத்தலைச் சிறிதேனும் கருதாது கண்டதே காட்சி, கொண்டதே கோலமென்றும் சித்தம் சென்றவாறு சென்று தேடிய பொருள் நித்தியாதபோது அலையடைந்து வருகின்றவர் எவ்வாறுய்வதற்குரிய நெறி கண்டுய்வரோ? நியாயவழியாகத் தேடிய பொருள்களுள் சிலவற்றையாவது சற்பாத்திரத்திற் செலவுசெய்து புகழுடம்பைப் பெறல்வேண்டும்.

***

## நமதுகுலத்தாரின்பண்டைய நிலையும், தற்கால நிலையும்.

விஸ்வகர்ம சந்ததியார் தற்காலத்தைவிட முற்காலங்களில் வைராக்கிய சிரத்தையோடு கூடிய ஊக்கத்துடன் வேலை செய்துவந்தனர்களென்பதற்கும், அதற்குத்தக்கபடியே நம்மனோர் வெகு உன்னத நிலைமையடைந்திருந்து ஏனையோருக்கும் வெகு உபகாரிகளாயிருந்தனரென்பதற்கும். பல காரணங்களிருப்பினும் முக்கியமான காரணம் ஒற்றுமையே என்றும் இவ்வொற்றுமைத்தற்காலம்வெகுவாகக் குன்றியிருப்பதால் நாளடைவில்வெகு தாழ்ந்தநிலைமைக்கு வந்து அவமதிப்புக்கும் தரித்திரத்துக்கும் ஆளாகியிருக்கிறார்கள் நமது முன்னோர்கள் தங்கள் ஜாதியாரின்முன்னேற்றத்துக்கு அநுகூலமாக ஒவ்வொரு கிராமத்திலும் தேவஸ்தானங்கள் அமைத்துள்ளார்கள். அதாவது அக்கசாலை விநாயகராலயங்கள், காளிகாம்பாள் சந்நிதானங்கள் முதலியவைகளை அமைத்து இவைகளின் நித்தியகால பூஜைமுதலிய செலவுகளுக்காக(மானிபங்கள்) விளைநிலங்கள், தோட்டங்கள், வீடுகள் முதலிய ஸ்தாவரசொத்துக்களை எழுதிவைத்து அவைகளின் வரும்படியினால் மேற்படி தேவஸ்தானங்களின் நித்தியக்கட்டளைகள்நடந்துவருகின்றன. நங்குலத்தவர்கள் சிலர், பலர், கூடிப் பொது காரியங்களை நடத்துவதற்கு அநுகூலமானப் பலவிடங்களில். அவர்கள் பொதுஸ்தானங்கள் ஏற்படுத்தி இவ்வித பொதுஸ்தானங்களில்கூடி குலவிஷயங்களையும் பிறவற்றையும் ஆலோசித்து நடத்திவந்தார்கள். ஒவ்வொரு கிராமங்களிலும் பட்டிணங்களிலுமிருந்த மேற்படி சந்ததியார் தங்களுக்குள்ளாக பெரியதனக்காரர்களென்றும், காரியஸ்தர்களென்றும், எஜமான்களென்றும் தக்கதலைவர்களை ஆராய்ந்தெடுத்து நியமித்து அவ்விதத்தலைவருடைய நியாயமான வார்த்தைகளுக்கடங்கி நடந்து நம்குலத்தைப் பிரகாசிக்கச் செய்திருந்தனர். இவ்விதமாக பலவிதங்களிலும் சிறப்பும் செல்வாக்குமுற்று பிறரால் நன்குமதிக்கப் பெற்றிருந்த அவர்களின் கால்வழிகளாகிய தற்கால சந்ததியார் நாளடைவில், சிரத்தை, வைராக்கியம், ஊக்கம் முதலியவைகளை அடியோடு மறந்து குலவிர்த்திக் குழைப்பதைக் கைவிட்டு அதற்குத்தக்கபடியே வெகுதாழ்ந்த நிலைமையடைந்து, ஏனையோருக்கு உபகாரிகளாகாமலும் அந்நியருடைய சகாயத்திற்குப் பெரும்பாலும் எதிர்பார்த்தும் நடக்கிற நிலைமையடைந்துவிட்டமைக்கு முக்கிய காரணம் ஒற்றுமையின்மையேயாம். ஆதலின் ஒற்றுமையை நாம் அனுஷ்டிக்கிற ஒவ்வொரு அநுஷ்டானங்களிலும், ஒவ்வொருவார்த்தையிலும்ஒவ்வொருநினைப்பிலும் வேரூன்றச்செய்து உயர் நிலைமைக்கு பிறருடைய முழுமதிப்பினுக்கும் செல்வாக்கினுக்கும் பாத்திரராகக் கடவோம், நமது முன்னோர்களமைத்துள்ள ஆலய நந்தவனங்கள், விளைபுலன்கள், தோட்டந் துறவுகள் முதலியவற்றை மற்றவரிடம் பறிகொடுத்ததுபோக மிஞ்சியிருக்கும்சிலதையுங்கூடத்தத்தம்சொந்த பிரயோசனங்களுக்காக்கி நித்தியகட்டளைகள் முதலியவைகளுக்கு உபயோகமில்லாமல் மேற்படி ஸ்தானங்கள் குன்றியும் மறைந்தும் வருகின்றன பொது ஸ்தானங்கள் வெகுவாய் பிறருடைமைகளாகி நம்மவர்கள் கூடிப் பேசவும். யோசிக்கவும் இடமின்றிவருந்துகிறோம்- தலைவர்களுடைய தக்கஆலோசனைக்கிசைந்து நடப்பது நாகரீகமன்றென்றும், கர்னாடக வழக்கமென்றும் விலக்கிதத்தமிஷ்டம் போல் நடக்கவாரம்பித்து நம் ஜாதிப்பிரகாசங் குன்றி மங்குதலடையப் பாத்திரர்களாகிறோம். இவ்வித நிலைமையில் நமக்குப் பரம தாய்தந்தை, குரு, தெய்வம் என விளங்கும் நமது குலோபகாரிப்போன்ற பத்திரிகைகள். நம் குலோத்தாரணசபைகள் முதலிய மகாபுருஷர்களின் மார்க்கம் கடைத்தேறுவது தான் மார்க்கம். நம் பூர்வீகத்தபோதைய நிலைமைகளைக்கவனிக்கும் பொழுது ஸ்ரீஞானவாசிட்டத்திற் கூறப்படும் ஓர் கதை மிகப்பொருத்தமான உவமானமாகிறது. ஓர் காட்டில் ஒரு சிங்கம் ஒரு குட்டிபோட்டு நீங்கியது அச்சிங்கக்குட்டி அருகிலிருந்த ஆட்டுமந்தையிற் சேர்ந்து அவ்வாடுகளினுணவையே உண்டு அவைகளுடன் பழகிப்பழகி அவைகளின் சுபாவத்தையே யடைந்து ஆட்டுக்குட்டியைப்போலவே கத்தி தன்கெம்பீரமான உண்மை சொரூபத்தை அடியோடுமறந்து மிருகேந்திரனானதான் ஓர் ஆட்டுக்குட்டியே யென நினைத்திருந்தது இது போது எல்லாம் வல்ல இறைவனருளும் அச்சிங்கக்குட்டியின் துக்க நிவிர்த்திக்கேதுவான காலபலமுங் கூடியதுக்கேற்ப ஓர் சிங்கம அக்காட்டின் வழியேவர அதைக்கண்ட இவ்விளஞ்சிங்கம் தன் நிலை தவறினமையினால் மிகப்பயந்துப் பதுங்கிக்கொள்ள ஆரம்பித்தது உடனே நன் நிலை தவறாத சிங்கம் அதற்குத் தக்கபடி நடித்து இதோபதேசங்களால் அவ்விளஞ்சிங்கத் தன்வாய்ப்படுத்திக்கொள்ள முயன்றும் பிரயோசனப்படாது நிற்க, கடைசியில் ஓர் நீர் நிலைக்கருகி லழைத்துப்போய் அதில் அவ்விளஞ்



சிங்கத்தைத் தன் நிழலைக்கண்டு தன் நிலையுணரச் செய்து அதன் சொந்த சொரூபமாகிய மிருகேந்திரத் தன்மையை நிறுத்திய வுடனே அவ்விளஞ்சிங்கம் அவ்வனந்திரனாகி மதியும் சுகமும் அடைந்து வாழ்ந்தது இக்கதைக்கொக்கவே நம்மவரில் உணர்வுடையோரல்லாதபேர்கள். தாங்கள் தங்கள் ஜாதிதன்மையறியாதாராகி பிறமனிதர்களின் ஆசார அநுஷ்டானங்களைக் கைப்பற்றித் தாங்கள் விஸ்வப்பிராமணரென்றுணராது விஸ்வப்பிரமாசார ஒழுங்குகளில் தவறுதலடைந்து தத்தம் கைத்தொழில்களை விடுத்துப் பிறதொழிற்காளாகியும்வேறு வருணத்தார்களுக்குச் சிற்சிலபோது அடங்கியும் தாங்களும் ஜாதியார் போன்றவர் தாமெனக் கருதித் திரிகின்ற இக்காலத்தில் ஸ்ரீ விராட் விஸ்வகர்ம பூர்வீகர்களின் புண்ணியமேலீட்டினாலும், மேற்கூறிய பத்திரிகைகள், சங்கங்கள், கான்பரன்ஸுகள் முதலிய ஏனைய குலாபிவிர்த்தி முயற்சிகள் வெளிப்பட்டுப் பலவிதமாக நம்மவர்களை ஒற்றுமைப்படுத்தி நமது குலாசார உண்மைகளையும் கைத்தொழில் முதலிய ஜீவனோபாயங்களையும் பிறர்மதிப்புக்களாகி சுகம் பெரும்மார்க்கங்களையும். போதிக்கின்றன நாம் இக்காலத்தும் விழியாது மயங்கியும் தூங்கிக்கொண்டுமிருந்தால் யாது பயன் மதிப்பும் சுகமும் வருவதெக்காலம், ஆதலால் நமது குலசோதரர்களனைவரும் இது முதலாகவாயினும் பேரவாவுடனும், வைராக்யத்துடனும், சிரத்தையுடனும், அன்புடனும், சுயநயங்கருதாது பொதுநலங்கருதிப் பத்திரிகைகள் வாசித்தும் நம்மவர்களைப் பத்திரிகைகளுக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ப்பித்தும், சங்கங்கள் கூடியும் கூட்டிவைத்தும், கான்பரென்ஸுகளிலும் பிரசுரங்கள் மூலமாகவும் கவனித்து வளர்த்து நம் குலத்தின் கொள்கை நிலைமையை யடையமுயற்சிசெய்வோமாக.

***

## இந்திய கைத்தொழில்களைப்பற்றிய இராஜ விசாரணை.

வைசிராய் என்று சொல்லப்படும் இராஜப்பிரதிநிதியின் சட்ட நிர்மாண சபையில் சென்ற மார்ச்சு மாதம் கூடிய மீட்டிங்கில் கனம் சர் இப்ராஹீம் ரஹீம் துல்லா அவர்கள் இந்தியாவின் தற்கால கைத்தொழில் நிலைமையைப் பற்றியும், அவைகள் விருத்தியாவதற்காகச் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றியும் விசாரணைசெய்து ரிபோர்ட்செய்ய ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களும், உத்தியோகஸ்தர்களல்லாத பிரமுகர்களும் சேர்ந்த ஓர் கமிட்டி நியமகம்செய்யவேண்டுமென்கிற ஒரு பிரேரபணையைக்கொண்டுவந்தனர். இந்தப் பிரேரபணையை ஒட்டி பல மெம்பர்களும் ஆதரித்துப்பேச இந்தியா கவர்ன்மெண்டார் இந்தப் பிரேரபணையைச் சில திருத்தப்பாடுகளுடன் அங்கீகரித்தனர். அந்தத் தீர்மானத்திற்கிணங்க பல கனவான்களையும் அக்கமிட்டியின் அங்கத்தினராக அமர்த்தியிருக்கின்றனர். இக் கமிட்டியார் செய்யவேண்டிய வேலைகளைப் பற்றி முற்குறிப்பும் இந்தியா கவர்ன்மெண்டாரால் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அம்முற்குறிப்பு இந்தியா கவர்ன்மெண்டாருடைய தற்கால நிலைமைக்கும், ஹோம் கவர்ன்மெண்டாருடைய தற்கால ஸ்திதிக்கும் ஏற்றதாய் இருக்க வேண்டுமென்கிற முக்கிய நோக்கத்தைத் தழுவி எழுதப்பட்டிருக்கின்றது.

அக்கமிட்டியார்செய்யும் வேலைகள்கீழே காட்டிய முறையை அநுசரித்திருக்குமெனச் சொல்லப்படுகின்றது. (1) இந்தியாவிலிருக்கும் அதிகமூலதனத்தை அதிக லாபம் வரக்கூடிய புதிய வியாபாரத்திலும், கைத்தொழிலிலும் செலவிடக்கூடுமாவென்றும், (2) கவர்ன்மெண்டார் கைத்தொழில்களைப் பற்றிய விஷயங்களை வெளியிடுவதினால், சில கைத்தொழில்களைச் செய்து காட்டுவதினால், வேண்டிய பொருளுதவியை நேராகவாவது அல்லது வேறு மூலமாகவாவது செய்வதினும் இந்தியா கவர்னமெண்டாருடைய ராஜ்யமுறைக்கு முரண்படாமல் உதவி செய்வதினால் எவ்வளவு பிரயாசை எடுத்துக்கொள்ளலாம் என்பனவாகிய விஷயங்களைத் தீரவிசாரித்து ரிபோர்ட் செய்யப்படும். அந்தக் கமிட்டி ஏற்படும் விஷயமாக சர் வில்லியம் கிளார்க் துரையவர்கள் சட்ட

சபையில் பேசியபோது, சர் ரஹீம்துல்லா கொண்டுவந்த பிரேரபணை மிக்க விரிவானதென்றும், சண்டைக்குப் பிறகு வியாபார விஷபமாய் ஏற்பட்டிருக்கும் சம்மந்தங்களில் மாறுதல்கள் ஏற்படுமென்றும் இந்தியாவில் கைத்தொழில்களை ஏற்படுத்தி நிலை நிறுத்த விடாமுயற்சியும், ஊக்கமும் நம்பிக்கையும் அவசியம் வேண்டுமென்றும், ஒரு புதிய தொழிலை இந்தியாவில் முதல் முதல் நிலைபெற முயற்சிகள் செய்யப்படும்பொழுது அவ்வேலைகளுக்கு எவ்வளவு தொழிற் பயிற்சியும் பொருள் உதவியும் வேண்டுமோ அவ்வளவுடன் அத்தொழில் ஏற்படுத்தப்படாததால் இந்திய கைத்தொழில்கள் நசித்து விடுகின்றனவென்றும் சொன்னார். ஜப்பான் கவர்ன்மெண்டார் கைத்தொழில் அபிவிர்த்திக்கு அதிக உதவிசெய்திருப்பதாகச் சொல்லப்படும் அபிப்பிராயம் மிகை யென்றும் அத்தேசத்தாரின் தொழில் பிரபல்யத்திற்கு அந்த நாட்டு ஜனங்களின் விடாமுயற்சியும், ஒற்றுமையும் தான் முக்கிய காரணமென்றும் எடுத்துச் சொன்னார். செய்வனதிருந்தச் செய்யாமை, சுறுசுறுப்பின்மை விடாமுயற்சிக் குறைவு, தொழின் முறையஞ்ஞானம், ஒற்றுமைக்குறைவு போன்ற குணங்கள் நிறைந்திருக்குமிடங்களில் கைத்தொழில்கள் தேய்ந்து போய்விடுவது சகஜமென்றும் இவ்வாறு முறிந்துபோவதால் பொது ஜனங்களின் நம்பிக்கை குறைந்து விடுகின்றனவென்றும், ஆகவே இந்திய கைத்தொழில்கள் அபிவிர்த்தியாக வேண்டுமானால் முதலில் பரஸ்பர நம்பிக்கை ஏற்பட வேண்டுமென்றும் சொன்னார். இந்தியாவிலிருக்கும் துர்க்குணங்களில் புதிய கைத்தொழில் முயற்சிகளில் இந்தியர் தங்கள் மூலதனத்தைப் போடாதிருந்து விடுதல்முதலாவது கெடுதியென்றும், ஒருவர் போட ஆரம்பித்து விட்டாலோ எல்லோரும் அத தொழிலில் தங்கள் பொருளைப் போட்டு நஷ்டப்படுவது இரண்டாவது கெடுதியென்றும் விளக்கிச் சொன்னார்.

கவர்ன்மெண்டாருடையகடைமைகளைப் பற்றி யோசிக்குமிடத்து, பொதுஜன சமூகத்தின் அறிவை விர்த்தி செய்வதால் கைத்தொழிலாளிகளின் அறிவை விர்த்தி செய்யலாமென்றும், பல நூதன தொழில்களைப்பற்றி பரிசீலனை செய்து பகிரங்கப்படுத்துவதிலும், இயந்திரங்களைப் பற்றியும், தொழில் விவரங்களைப்பற்றியும் வெளியிடுவதிலும் அவைகளைத்தாங்களே நடத்திக் காட்டுவதிலும் தொழிலாளர்களுக்கு கவர்ன்மெண்டார் ஒத்தாசை புரியலாமென்றும், கைத்தொழில் பயிற்சி, தொழிற்கல்வி, சாஸ்திர ஆராய்ச்சி முதலியவற்றிற்கு வேண்டிய சௌகர்யங்களையும் செய்து கொடுக்கலாமென்றும் சொல்லினர். கைத்தொழில்களைப்பற்றி ஆராய்வோருக்கு பொருளுதவி செய்வதிலும், தாங்களே தொழில் ஆராய்ச்சியைக் கைக்கொள்வதற்கு வேண்டிய வசதிகளைத் தேடிக் கொடுத்தலுமாகிய விஷயங்களில் பொது ஜனங்களுடைய பணத்தை கவர்ன்மெண்டார் செலவு செய்தால் ஏதாவது ஒரு ஜாதியாருடைய சௌகர்யத்திற்காகவாவது, முன்னேற்றத்திற்காகவும் செலவு செய்யப்பட்டதாக (பொது ஜனங்கள்) நினைக்கக் கூடாதென்றும் வற்புறுத்திச் சொன்னார்.

இந்தியா கவர்ன் மெண்டாரும், அதன் ஆள்கைக்குட்பட்ட மற்ற மாகாணக் கவர்ன்மெண்டார்களும் தொழிற் பாடசாலைகளையும், வியாபாரப் பள்ளிக்கூடங்களையும் பற்பல விடங்களில் ஏற்படுத்தியும், பல தொழில் நிபுணர்களை நியமகம் செய்து ஜனங்களுக்கு வேண்டிய சகாயம் செய்துவரும்படிக்கு விசேஷ பொருளைச் செலவு செய்து வருகிறார்களென்றும் சொன்னார். இந்தியா கவர்ன்மெண்டார் 'கமர்ஷியல் இண்டெலிஜன்ஸ்' டிபார்ட்மெண்ட் என்னும் ஒரு தனி இலாகாவை ஏற்படுத்தி அதன் மூலமாய் கைத்தொழில் அறிவைப் பரவச்செய்து வருகிறார்களென்றும், கல்கத்தாவில் ஒரு வியாபார பொருட்காட்சிச்



சாலையை ஏற்படுத்தி உதவி வருகிறார்களென்றும் வெளியிட்டனர். சென்னை மாகாணக் கவர்ன்மெண்டாரும் பொருளுதவிசெய்து சிற்சில கைத்தொழில்களை விர்த்திசெய்தார்களென்றும், அப்படிச் செய்ததானது மற்றத் தொழிலாளிகளையும் அவர்கள் வியாபாரத்தையும் பாதித்ததென்று, இந்தியா மந்திரியாக விருந்த லார்டு மார்லி அவர்கள் அபிப்பிராயப் பட்டதின் பேரில் அவ்வாறு தொழிலுதவி செய்வது நிறுத்தமாயிற்றென்றும் புகன்றனர். புதியதொழில்களை விர்த்திசெய்யும் விஷயத்தில் ரயில்வே கம்பெனியார் அவ்விதத் தொழில்களுக்காக தங்கள் இருப்புப்பாதை வழியே கொண்டுவரப்படும் தாதுப் பொருள்களுக்கு குறைந்த கட்டணம் ஏற்படுத்த வேண்டுமென்று விதித்தபடி ரயில்வே கம்பெனியார்களும் நடந்து கொண்டு வருவதாகவும் வெளியிட்டனர்.

மேலே சொல்லிய காரணங்களால் இந்தியாகவர்ன்மெண்டார் இந்திய கைத்தொழில் அபிவிர்த்தியைக் கவனித்து வருகிறார்களென்பது விசிதமாகிறதென்றும் இன்னும் அதைப்பற்றிய விஷயங்களை ஆராய்வதில் அவர்கொண்டிருக்கிறார்களென்றும், அவ்வாறு செய்ய பொதுஜனங்களுடையவும், வியாபாரிகளுடையவும் அநுபவ ஞானஉதவி அவசியமாக விருக்கிறதென்றும் சொன்னார்.

இந்தியா கவர்ன்மெண்டார் சென்ற வருடம் வியாபாரிகளும்; உத்தியோகஸ்தர்களும் அடங்கிய ஓர் கமிட்டியை நியமனம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பலனாக தலைப்பில்காட்டிய பெயரையுடைய ஓர் கமிட்டியை ஏற்படுத்தும்படியாய் இந்தியாமந்திரி உத்திரவு கொடுத்துவிட்டார். அந்தக்கமிட்டிக்கு பூமி பரிசோதனை இலாகாத் தலைவராயிருந்த சர்தாமஸ் ஹாலண்டு அக்கிராசனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இந்தக்கமிட்டியின் மற்ற விவரங்களையும், அவர்கள் கவனிக்க வேண்டிய நமது குறைகளையும் இனி தொடர்ந்து எழுதுவோம்.

பத்திரிகாசிரியர்.

* * *

சென்னை

## விஸ்வகர்மமஹாஜனகான்பரன்ஸ் கமிட்டி ஸ்தாபனதினத்தில் பிரம்மஸ்ரீ N. துரைவேலாச்சாரியார் B. A. அவர்கள் செய்த உபந்நியாசம்

சென்ற ஏப்ரல்மீ தஞ்சையிலிருந்து எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது. அதைப் பிரித்துப் பார்த்ததில் தஞ்சையில் நடக்கும் இரண்டாவது விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸுக்கு என்னை பிரசிடெண்டாகவிருக்கும்படி கேட்டிருந்தது. கான்பரன்ஸ் என்பது பெருத்தவிஷயம். அதை நம்மவர்கள் சரிவர நடத்துவார்களோவென்கிற சந்தேகம் ஏற்பட்டபடியால்நம்மவர்களில் படித்தவர்கள் சிலருடன் கலந்து யோசித்தேன். அவர்கள் நம்மவர்கள்கான்பரன்ஸ் சரிவர நடக்காதென்றும் நான் பிரசிடெண்டு ஸ்தானத்தை ஒப்புக்கொள்வது தகுதியல்லவென்றும் அபிப்பிராயப்பட்டார்கள். அதன்பேரில் சில முக்கியமான விஷயங்களைக் குறித்து கான்பரன்ஸ் கமிட்டியாருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதற்கு அவர்களுடைய பதில் மிக்க திருப்திகரமாகவும் ஒழுங்காகவும் இருந்தபடியால் பிரசிடெண்டு ஸ்தானத்தை ஒப்புக்கொண்டு தஞ்சைக்குச் சென்றேன்.

இப்போது நமது நண்பர்கள் வாசித்த வியாசத்தால் தஞ்சை கான்பரன்ஸ் எவ்வளவு சிறப்பாக நடந்ததென்று நீங்கள் தெரிந்துகொண்டிருக்கலாம். யாருடைய நன் முயற்சியால் தஞ்சை கான்பரன்ஸ் இவ்வளவு சிறப்பாக நடந்ததென்று நீங்

கள் கேட்பீர்கள். அதற்கு நான் தஞ்சைக்குச் சென்ற பிறகு தெரிந்துகொண்ட விஷயத்தைச் சுருக்கமாய்ச் சொல்கிறேன்.

இங்கு விஜயஞ் செய்திருக்கும் கான்பரன்ஸ் செண்ட்ரல் கமிட்டி பிரசிடெண்டு பிரம்மஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியார் அவர்கள் கும்பகோணம் முனிசிபல் கவுன்சில் மெம்பராகவும் இந்தியன் நேஷனல் காங்கிரஸ் டெலிகேட்டாகவும் இருந்து விஷயங்களை நன்கு அறிந்தவர். அநேக வருஷங்களாக பொதுஜன நன்மைக்கு மெத்தவூக்கத்தோடு உழைத்தவர். சென்ற வருடம் கும்பகோணத்தில் நடந்த கான்பரன்சில் அக்கிராசனம் வகித்து அதை மெத்த ஒழுங்காக நடத்தினவர். இவ்வருஷம் கான்பரன்ஸ் நடக்க மூன்று மாதத்திற்கு முன்பாகவே இந்த தளர்ந்தவயதில் தனது திரேக சௌக்கியத்தைக் கருதாது குடும்பத்தை விட்டுப்பிரிந்து தஞ்சைக்குச் சென்று அந்நகரவாசிகளை மிகப்பிரயாசையெடுத்து தன்வசப்படுத்திக்கொண்டு நடக்கவேண்டிய ஏற்பாடுகளை ஆரம்பித்து முடித்தார்.

கான்பரன்சுக்கு முந்தியதினம் நான் தஞ்சையிலிருந்தேன். அன்றிரவு அவர் தன் நித்திரையை பங்கஞ்செய்து கொண்டு கான்பரன்ஸ் சபாமண்டபத்திலிருந்து தன்னுடைய நேர்பார்வையில ஏற்பாடுகளைச் செய்தார். கான்பரென்ஸ் நடந்த இரண்டுநாளும் இருபது வயதுள்ள வாலிபர்போல் மெத்த சுறுசுறுப்பாக விருந்து விஷயங்களைக் கவனித்துவந்தார். இரண்டாம நாள் கான்பரன்ஸ் சட்டங்கள் ஏற்படுகதும்போது ஓர் பெரிய விவாதம் நேரிட்டது. அப்போது அவர் எழுந்து தன் அபிப்பிராயங்களை மெத்த நடுநிலைமையுடன் தெரிவித்தார். கான்பரன்ஸ் முடிந்து நான் சென்னபட்டணம புறப்பட்டபோது டெலிகேட்டுகளுடன் தஞ்சை ரெயில்வே ஸ்டேஷனுக்குவந்து ரெயில் புறப்படுஞ்சமயம் சென்னைக்குச் சென்ற பிறகு கான்பரன்ஸ்விஷயம் மறக்கப்படாது என்று கேட்டுக்கொண்டார். இந்தகனவானுடைய தளராத நன்முயற்சியால் தஞ்சை கான்பரன்ஸ் சிறப்பாக நடந்ததென்று நான் உறுதியாய்ச்சொல்வேன். இவரைப்பற்றி நான் முன்னால் கேள்விப்பட்டிருந்தபோதிலும் தஞ்சைக்குச்சென்று விஷயங்களைகவனித்தபிறகு தான் இவர் ஓர் பெரிய குலாபிமானி யென்று தெரிந்து கொண்டேன்.

சென்ற வருஷம் கும்பகோணத்திலும் இவ்வருஷம் தஞ்சையிலும் கான்பரன்ஸ் இவ்வளவு சிறப்பாக நடந்துவர இந்தராஜதானிக்கு முக்கியபட்டணமாகிய சென்னையில் வசிக்கும் நாம் பராமுகமாய் இருப்பது சரியல்ல.

கான்பரென்ஸ் என்பது நம் வம்சத்தினர் பொது நன்மைக்காக கூடும் கூட்டமாகும். இதுவிஷயத்தில் நாம் எல்லோரும் ஒத்து உழைக்கவேண்டும். நமக்குள்ளிருக்கும் வித்தியாசங்களையும் அபிப்பிராய பேதங்களையும் இந்தப் பொதுவிஷயத்தில் காட்டக்கூடாது.

இந்தப் பெரிய பட்டணத்தில் விஷயங்களை நன்குணர்ந்து நமக்கு வழிகாட்டக்கூடிய கனவான்களில்லை யென்று சொல்வதற்குக் கொஞ்சமேனுமிடமில்லை. இந்த மீட்டிங்கு பிரசிடெண்டாகவிருக்கும் கனவான் அக்கவுண்டண்டு ஜனரல் ஆபீசில் பெரிய சூப்ரண்டெண்டு உத்தியோகத்தை அநேக வருஷகாலமாக மெத்த கீர்த்தியுடன் வகித்தவர். பென்ஷன் சூப்ரெண்டெண்டு கேசவாச்சாரியா ரென்றால்இந்த இராஜதானியிலுள்ள எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் தெரியும். இவர் ஒவ்வொரு அக்கவுண்டெண்டு ஜனரலும் தன்னை நன்கு மதிக்கும்படியாக உத்தியோகம் செய்துவந்தவர். இவர் நம் குலமுன்னேற்றத்தில் மெத்த சிரத்தை யுடையவர். நம் சிறுவர்களது கல்விப் பயிற்சி விஷயத்தில் தன்னால் கூடியதைச் செய்ய எப்போதும் தயாராய் இருக்கிறவர்.



கௌரவமான உத்தியோகத்தைவகித்து நமக்கு வேண்டியதைச்செய்யத் தயாராய் இருக்கும் மற்றோர் கனவானும் இச்சென்னையில் இருக்கிறார். இவர் பொம்மை காலேஜ் எனவழங்கும் ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸில் அநேக வருஷங்களாக அசிஸ்டெண்டு சூப்ரண்டெண்டாக இருக்கிறார். இக்கனவான் அடக்கமே ஆபரணமாக பூண்டவர். தொழிற்கல்வியில் இவருடைய அபாரமான யோக்கியதையைப் பற்றி சொல்ல நான் பாத்திரனல்ல. இவருடைய ஆதரவினால தொழிற்கல்வி விஷயத்தில் நம் சிறுவர்களுக்கு அநேக அனுகூலங்கள் ஏற்படுமென்பதற்குச் சந்தேகமில்லை. இவருடன் நான் சம்பாஷித்த வளவில இவர் நம் வம்சத்தினர்க்குத்தன்னால் கூடியஉதவியைப் புரிய தயாராய் இருக்கிறாரென்று நான் உறுதியாச் சொல்வேன்.

கல்வியறிவிலும் உத்தியோக அந்தஸ்திலும் உலக அனுபோகத்திலும்தக்க யோக்கியதையுடைய இவ்விரு கனவான்களையும் தலைமையாக வைத்துக்கொண்டு சென்னையில் ஓர் கான்பரென்ஸ் கமிட்டி ஏற்படுத்தி கும்பகோணம் சென்ட்ரல் கமிட்டியுடன் ஒத்து உழைக்கும்படி இன்றையதினம் ஏற்பாடு செய்வீர்களென்று நான் பூரண நம்பிக்கையுடன் இருக்கின்றேன்.

நான் இப்போது குறிப்பிட்ட கனவான்கள் இருவரும் பிரம்மஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியார் அவர்களும் தென்னிந்தியாவில் நம்குல முன்னேற்றத்திற்கு ஏற்படும் சங்கங்களுக்கு முதன்மையாக இருக்கவேண்டியவர்கள். இவர்களுடைய ஆதரவு இல்லாமற்போனால் அச்சங்கங்களுக்கு பெருங்குறை ஏற்படும். சென்றவருடம் கும்பகோணத்திலும இவ்வருடம் தஞ்சையிலும் நடந்த கான்பரென்ஸுக்கு பிரம்மஸ்ரீ கேசவாச்சாரியார் அவர்களும், பிரம்மஸ்ரீ வேலாயுதாச்சாரியார் அவர்களும் விஜயஞ்செய்யாதது பெருங்குறையாக விருந்தது. அடுத்த வருடம் கான்பரென்ஸ் திருச்சினாப்பள்ளியில் நடப்பதாக ஏற்பாடு செய்திருக்கிறது. கும்பகோணம் செண்ட்ரல் கமிட்டியார் இவ்விரு கனவான்களையும் அச்சமயம் அவ்விடம் வரவழைக்கதகுந்த முயற்சி எடுத்துக்கொள்வார்களென்று நம்புகிறேன்.

கான்பரென்ஸ் இரண்டு வருஷமாக நடந்து என்னபலன் ஏற்பட்டது. என்பது ஒரு கேள்வி.

நாம் நம்முடைய பழமையான உன்னத நிலைமையை இழந்து அநேக வருடங்களாகத் தாழ்ந்த நிலைமையில இருப்பதற்குகாரணம் அநேகம். அவைகளில முக்கியமானவை:-**கல்வித்துறைவுகைத்தொழில்இறக்கம்** தென்னிந்தியாவிலும் சரி இந்த ராஜதானியிலும் சரி நம்குல முன்னேற்றத்திற்காக ஏற்படும் சங்கங்கள் ஒவ்வொன்றும் முதலில் கவனிக்கவேண்டிய விஷயம் இவ்விரண்டுந்தான். ஆனால் இவ்விரண்டு விஷயங்களிலும் நாம் முன்னேற்றமடைய வேண்டுமானால் நமக்குத் துரைத்தனத்தாருடைய ஆதரவு மெத்த வேண்டியதாயிருக்கிறது. கடவுள் கிருபையால் நாம் இப்போது பெற்றிருக்கும் ஆங்கில துரைத்தனம் மிக நடுநிலைமையுள்ளது. இந்தத் துரைத்தனம் ஏற்பட்ட பிறகு நமது தேசத்திற்கு அளவிலலா நன்மைகள் உண்டாயிருக்கின்றன. இந்தப் பெரிய கண்டத்தில் 30-கோடி ஜனங்கள் இருக்கிறபடியால் துரைத்தனத்தாருக்குப் பொதுஜன நன்மைக்கு வேண்டியவிஷயங்களை ஏற்பாடு செய்வதே சரியாயிருக்கிறது. ஒவ்வொரு வகுப்பினருடைய குறைகளையும் கவனிக்க அவர்களுக்குச் சாத்தியமில்லாம லிருக்கிறது. ஆகையால் நாமதான் இராஜாங்கத்தாருக்கு நம்முடைய குறைகளை எடுத்துக்காட்டி முறையிடவேண்டும்.

சென்ற ஏப்ரலில் தஞ்சையில் நடந்த கான்பரன்ஸ் விஷயமாக ஒரு மனுதயார் செய்து கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்

பட்டிருக்கிறது. இது விஷயம் பிரம்மஸ்ரீ தெய்வசிகாமணி யாச்சாரியார் அவர்கள் உங்களுக்குவிவரமாகஎடுத்துச்சொல்வார். இம்மாதிரி ஒவ்வொரு வருஷமும் கான்பரென்ஸ் நடந்தவுடன் துரைத்தனத்தாருக்கு நம்முடைய குறைகளை எடுத்துக்காட்டிமுறையிடுவோமானால் நமக்குவேண்டிய அனுகூலங்கள் ஏற்படுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் அவசரப்படக்கூடாது. இந்தியன் நேஷனல் காங்கிரஸ் சபையார் 30-வருடகாலம் உழைத்த பிறகுதான் அதன் பலன் இன்னதென்று காண்கிறார்கள். நாம்ஒருமனத்தோடு ஒத்திருந்து பத்துவருடகாலம் பொறுமையுடன் உழைப்போமானால் பலனைஉள்ளங்கை நெல்லிக்கனிபோல் காணலாம்.

விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் தழைத்து ஓங்கவும் நம்முடைய தலைவர்கள் பூரண ஆயுளுடன் இருந்து நம்மையாளும் ஆங்கிலத் துரைத்தனம் இப்போது நடக்கும் போரில்வெற்றியடைந்து நமக்கு வேண்டிய ஆதரவுகளை புரிந்து நம்மை ரக்ஷிக்கவும் எல்லாம் வல்ல இறைவர் அருள் புரிவாராக.

***

## நம்மனோர் நன்முயற்சிகள்.

---

திருநெல்வேலி ஜில்லா நாங்குனேரித்தாலூகாவில் கலைந்தமாநகரம் என்னும் சிறப்புப் பெயரினையுடைய களக்காடு என்னும் திவ்விய க்ஷேத்திரம் ஒன்றுளது. இவ்வூர் கோட்டை கோவில் பத்து வியாசராஜபுரம், கருவேலன்குளம், கீழூர், மேலூர், பத்தை பத்மனேரி என்னும் பல பகுதிகளையுடையது. இதில் கோட்டை கோவில் பத்து என்ற இரண்டிடங்களிலும் விஸ்வப்பிராமண குலச்சிரேஷ்டர்கள் சுமார் நூறுபேர்வரை வசித்து வருகின்றனர். இக்குல மணிகளின் கல்வி, கைத்தொழில், ஆசாரம் ஆகிய இவைகளை தற்கால நாகரீகத்திற்கு ஏற்றவாறு சீர்திருத்தக் கருதி குலாபிமான சிரேஷ்டராகிய பிரம்மஸ்ரீ ரங்கநாதாச்சாரி யாரவர்களின் பெருமுயற்சியால் இவ்வூர் அக்கசாலை விநாயகர் ஆலயத்தின்கண் சென்ற 1908ஆம் மேமாதத்தில் 'விஸ்கர்மசபை'' என்னும் ஓர் சபை ஸ்தாபிக்கப்பட்டது. ஷையாரவர்களே இச்சபைக்கு செக்ரடரியாகவும் இருந்துவந்தனர். இந்தியா என்னும் வாரப் பத்திரிகையும் வரவழைக்கப்பட்டது. இப்பத்திரிகை தோன்றி மறைந்ததுபோல் இச்சபையும் இரண்டுவருடம் நடைபெற்று ஆதரிப்பாரின்றி மறைந்துபோயிற்று. ஆனால் அதிகநாள் மறைந்திருக்கவில்லை.

ஏனெனில் 1910ஆம் அக்டோபர்மீ தில் குலாபிமான சிரேஷ்டராகிய பிரம்மஸ்ரீ சி ஆர். சுப்பறுயாச்சாரியா ரவர்களுடைய முயற்சியினாலும் உள்ளூர் குலாபிமான சிகாமணிகளுடைய ஆதரவினாலும் சென்னை சிந்தாதிரிப்பேட்டை வேதகிரி மேஸ்திரிவீதி 5/10-வது எண்ணுள்ள மண்டபத்தில் "விஸ்வகர்ம குலோத்தாரண சபை" ஸ்தாபிக்கப்பட்டது. இக்களிப்பான சமாசாரத்தை இவ்வூர் வாசியாகியும் இவ்வூரிலிருந்து தென்பக்கமாகச் சுமார் 30 மைல் தூரத்தில் அதாவது கன்னியா குமரிக்குச் சமீபமான கருங்குளம் போர்டு ஸ்கூலில் உபாத்தியாயர் உத்தியோகத்திலிருந்து வருபவருமாகிய பிரம்மஸ்ரீ K. P. முத்துசாமி ஆச்சாரியாரவர்கள் பத்திரிகைகளினாலறிந்து தமதூரில் மறைந்துபோன விஸ்வகர்ம சபையைத் திரும்பவும் ஸ்தாபிக்கக் கருதினவராய் செக்ரடரி பிரம்மஸ்ரீ ரங்கநாதாச்சாரியாரவர்களுக்குப் பல லெட்டர்கள் எழுதினர். இவர் எழுதின பல லெட்டர்களின் பலனாய் மறைந்திருந்த விஸ்வகர்ம சபை 18—5—11ல் திரும்ப ஸ்தாபிக்கப்பட்டது. இப்பொழுது செக்ரடரியாரவர்கள் பெருமுயற்சி செய்து இவ்வூர் பௌரோகிதம் பிரம்மஸ்ரீ P. அனந்தராம் கிரு



ஷ்ணுச்சாரியாரவர்களின் புத்திரர் K. A. பூதலிங்கம் ஆச்சாரியாரைக்கொண்டு நம் குலச் சிறுவர்களுக்குத் தினம் இரவு இரண்டுமணிநேரம் சமஸ்கிருதம் போதிக்கவைத் திட்டம் செய்தனர். இவ்விதம் இச்சபை ஒருவருடம் நடைபெற்று 7-6-12ல் மஞ்சக்குப்பம் சோழவல்லி விஸ்வகர்ம சபை கர்மகர்த்தரும் பல விடங்களிலும் சென்று குலாச்சார சீர்திருத்த விஷயமாகப் பிரசங்கம் செய்து வருபவருமாகிய பிரம்மஸ்ரீ கடவுள் சம்மதமென்னும் ச. வை. மாணிக்காச்சாரியாரவர்களின் அக்கிராசனத்தின்கீழ் வருட மஹோத்ஸவமும் வெகு சிறப்புடன் நடைபெற்றது.

இவ்வருட மஹோத்சவ ரிபோர்ட்டை சென்னையினின்று வெளிவரும் நம்குலப் பிரசுரத்தில் 14-வது பகுதியில் 162-வது 163-வது பக்கங்களில் பார்த்தால் தெரியவரும்.

இவ்வமயம் இச்சபை கொடுந் துன்பத்தில் அழுந்தியது. என்னவென்றால் குலாபிமான சிரேஷ்டரும் இச்சபையை தளராவூக்கத்தினால் இருமுறை ஸ்தாபித்து செக்ரடரியாகவுமிருந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்த பிரம்மஸ்ரீ ரங்கநாதாச்சாரியாரவர்கள் சபையோர்களை துக்க சாகரத்தில் அழுந்தச்செய்து தமது 41-வது வயதில் திடுமென்று மண்ணுலகை நீத்து விண்ணுலகை யடைந்தனர். அந்தோ பரிதாபம்! இப்புருஷோத்தமர் தமது வாழ்நாளில் குலாச்சார சீர்திருத்த விஷயமாக அனந்த பெருங்காரியஞ் செய்திருக்கின்றனர். அவைகளில் இரண்டு இங்கு குறிப்பிடத்தக்கன. ஒன்று அக்கசாலை விநாயகருக்கு ஓர் ஆலயம்கட்டி முடித்ததாகும். இப்புண்ணிய க்ஷேத்திரத்தில் புராதீனமாக ஏற்பட்டிருந்த சுவாமி வெங்கிடாஜலபதி அரிபஜனை மடாலயம் நீடூழிநிலைத்து சிறக்கும்பொருட்டு கல்பணி உறுதியாகச் செய்யவேணுமென்றும், அம்மடாலயத்தின்கண் நம்குலச் சிறுவர்களுக்குக் கல்விப்பயிற்சி செய்யவேணுமென்றும் இவ்வூர் விஸ்வப்பிராமண மஹாஜனங்களால் கேட்டுக்கொண்டபடி இக்குணவான் இவ்வூர் குலாபிமானிகளிடம் நன்கொடையாகப் பெற்ற பொருளைக் கொண்டும் அயலூர் நம்குலத்தவர்கள் அளித்த பொருளைக் கொண்டும் சுமார் ரூபாய் இரண்டாயிரத்தில் பஜனைமடாலயம் கட்டிமுடித்தது மற்றொன்றாகும்.

இவ்விதம் பாடுபட்ட தனவானை இழந்த துக்கத்தினாலும் இவருக்குப்பின் சபையை நடத்தத்தக்க மனுஷியாளில்லாததினாலும் சபை ஒருவருடம் ஒழுங்காய்நடைபெறவில்லை. என்றாலும் சபையோர்கள் சென்னையினின்று வெளிவருகிற விஸ்வகர்மகுலோபகாரி பத்திரிகையை வாசித்துவந்தனர். இதன் பயனாய் குலாபிமான வளர்ச்சியடைந்து மெம்பர்கள் சபையை நடத்த போவாக் கொண்டனராயினும் தூண்டுவோரில்லாமல் சும்மாவிருக்கலாயினர்.

இங்ஙனமிருந்து வருகையில், முன் 18—5—11-ல் மறைந்திருந்த விஸ்வகர்ம சபையை ஸ்தாபிக்கும்படி தூண்டினவரும் கருங்குளம் போர்டு ஸ்கூலிலிருந்து வடக்கு விஜயநாராயணம் போர்டு ஸ்கூலுக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து தற்காலம் நாங்குனேரிக்கு சுமார் $1\frac{1}{2}$-மைலுக்கு வடபுறமாக மறுகால் குறிச்சி போர்டு ஸ்கூலில் தலைமை உபாத்தியாயராக மாற்றப்பட்டு ஜோலிபார்த்து வருபவருமாகிய பிரம்மஸ்ரீ K. O. முத்துசுவாமி ஆச்சாரியாரவர்கள் தம் தாய்நகராகிய கலைந்தமாநகரத்துக்கு விஜயமாகி அங்குள்ள விஸ்வப்பிராம்மண மஹாஜனங்களை விஸ்வகர்மசபை மெம்பர்களின் ஆதரவினால்சென்ற 1916-ம் வருஷம் மேமீ 21உயன்று ஒன்றுசேர்த்து நம்குல ஈடேற்றத்திற்குரிய பற்பல விஷயங்களைப் பற்றியும் சபையும் அதன் பிரயோஜனங்களும் என்ற விஷயத்தைப்பற்றியும் உபந்நியாசம் புரிந்ததன்றியில் அடியிற்கண்ட விஷயங்களையும் பிரேரேபித்தார்.

1. அக்கசாலை விநாயகர் ஆலயம் ஆற்றோரத்தில் ஒதுங்கி இருப்பதால் அங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற விஸ்வகர்மசபையை இவ்வூர் விஸ்வப்பிராம்மண மஹாஜனங்களால் கேட்டுக்கொண்டபடி நம் குலச்சிறுவர்களின் கல்விப் பயிற்சியைக் கருதி காலஞ்சென்ற செகரட்டரி பிரம்மஸ்ரீ ரங்கனாதாச்சாரியாரவர்களால் கட்டி முடித்திருக்கிற வெங்கடாசலபதி அரிபஜனை மடாலயத்திற்கு மாற்றப்பட்டு சபையை ஒழுங்காய் நடத்திவரவேண்டும் என்றும்,

2. சபையை அடுத்து விஸ்வகர்ம லைபிரரியும் வாசிப்புசாலையும் ஸ்தாபிக்க வேண்டும் என்றும் என்பதேயாம்.

மேற்கூறிய விஷயங்கள் மஹாஜனங்களால் சம்மதிக்கப்பட்டதும் அன்றைய தினத்திலேயே அதாவது 1916-ம் வருஷம் மேமீ 21உபன்றே விஸ்வகர்மசபை அப்பஜனை மடாலயத்திற்கு மாற்றப்பட்டு சபை ரூல்களும் தயார்செய்யப்பட்டன. சபை ஒழுங்குகளில்முக்கியமானவை அடியில் வருவனவாம்:—

(1) இச்சபை விஸ்வகர்ம சபையென்று பெயர் பெறும்.

(2) இச்சபைக்கு விஸ்வகர்மச் சிறுவர் பெரியவர் அனைவரும் மெம்பர்களாகச் சேரலாம்.

3. இம்மெம்பர்கள் தங்கள் நிலைமைக்குத்தக்கபடி ஒன்று, இரண்டு காலணா மாசந்தா செலுத்திவரவேண்டும்.

4. இச்சபை நம் குலச்சிறுவர் சிறுமிகளின் கல்வி அபிவிருத்தியையே முக்கிய நோக்கமாகக்கொண்டு உழைத்து வரவேண்டும்.

5. இவ்விஷயமாக மேற்படி சபாலயத்தின்கண் விஸ்வகர்ம புத்தகசாலையும் வாசிப்புசாலையும் ஏற்படுத்தி ஆதரித்து வரவேண்டும்.

6. இப்புத்தகாலயத்தின் கண் குலசம்பந்தமான சிற்பம், வேதம், இதிஹாசம் புராணாதி நூல்களையும் நவீன நாகரீக நாவல்களையும் சேகரித்துவைத்து மெம்பர்களை வாசிக்கும்படி செய்யவேண்டும்.

7. சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையினின்று பிரசுரமாகும் பத்திரிகைகளையும் மற்றும் சமாசாரப் பத்திரிகைகளையும் தருவித்து மெம்பர்களை வாசிக்கச் செய்தல் வேண்டும்.

8. பிரதி ஞாயிற்றுக்கிழமை மாலை மீட்டிங்குகூடி ஏதேனும் ஓர் விஷயத்தைப் பற்றிப் பிரசங்கம் செய்யவோ அல்லது வியாசம் எழுதி வாசிக்கவோ செய்து வருவதோடு கூடுமானால் நம் குலப்பண்டிதர்களைக் கொண்டும் குலாச்சார சீர்திருத்த விஷயமாகப் பிரசங்கம்செய்யும்படி வேண்டிக் கொள்ளல் வேண்டும்.

9. வருஷத்திற்கு ஒருமுறைசபையின் பண்டை உத்தேசித்து சபைக்கு வேண்டிய புத்தகங்களையும் பத்திரிகைகளையும்சபயை செய்ய வேண்டும்.

10. இச்சபையின் பண்டைக்கருதி கல்வியில் நாட்டமுள்ள நம்குல ஏழைச்சிறுவர் சிறுமியர்களுக்கு இயன்ற மட்டும் பணவுதவி செய்தல் வேண்டும்.

11. இச்சபையின் உத்தியோகஸ்தர்கள்:

பிரம்மஸ்ரீ K. P. முத்துசுவாமிஆச்சாரியாரவர்கள் பிரசிடெண்டு.

பிரம்மஸ்ரீ S. வீரவாகு ஆச்சாரியாரவர்கள் செக்ரட்டரி.

பிரம்மஸ்ரீ P. சங்கரநாராயண ஆச்சாரியாரவர்கள் பொக்கிஷதார்.

பிரம்மஸ்ரீ N. தங்கவேலாச்சாரியாரவர்கள் லைபிரேரியன்.

இப்பொழுது 25-மெம்பர்கள் இருக்கின்றனர்.

மேலேகூறிய ஒழுங்குகளின்படி இப்பொழுது பதினைந்துமீட்டிங்கு ஒழுங்காய் நடந்தாயிற்று. புத்தகசாலையில் சுமார் 60. புஸ்தகங்கள் இருக்கின்றன. பிரசிடெண்டு பிரம்மஸ்ரீ K. P. முத்துசுவாமி ஆச்சாரியாரவர்கள் தமது பேருக்குவருகிற விஸ்வகர்மகுலோபகாரியை சபைக்குக்கொடுத்து உதவுகின்றனர். புதுவையினின்று பிரம்மஸ்ரீ பங்காருப் பத்தாவர்களால் வெளியிடப்படுகிற "கலைமகள்" என்ற மாதாந்தப் பத்திரிகையும் வருகிறது.

இப்புத்தகங்கள், பத்திரிகைகள் வாசித்துவருவதின் பயனாய் மெம்பர்கள் கல்வி, கைத்தொழில், பெண்கல்வி சிவாலய தரிசனம், பரோபகாரம், அறம், மனிதனது கடமை, காண்பரன்ன் அவசியம் ஆகிய இவ்விஷயங்களைப்பற்றிப் பிரசங்கம் செய்துவருகின்றனர்.

ஜீவனார்த்தத்தின் பொருட்டு அயலூருக்குப் போயிருக்கின்ற இவ்வூர் நம் குலாபிமானிகளில் பிரம்மஸ்ரீ N. லெக்ஷ்மண ஆச்சாரியாரவர்கள் இவ்விடம் விஜயமாகி சபைக்கு மெம்பராகச் சேர்ந்ததன்றி ரூபாய் ஒன்று அணா இரண்டு மதிப்புள்ள ஒரு ஸ்டூல் வாங்கி வாசிப்புசாலைக்கு நன்கொடையளித்தனர். இதைப்போல் அயலூரிலிருந்து வருகிற இவ்வூர் வாசிகள் உதவி புரிவார்கள் எனக்கருதப்படுகிறது.

இச்சபை நடைபெறுவதின் பயனாய் மெம்பர்களின் தளரா ஊக்கத்தினால் இவ்வூர் விஸ்வப் பிராம்மணர்கள் அனைவோரையும் ஒன்றுசேர்த்து ஆவணி அவிட்டம் என்ற உபாகர்மம் வாத்திய கோஷத்துடன் ஆற்றங்கரை ஓரத்திலுள்ள என்கோடி சாத்தா ஆலயத்தில் விநாயகர் சந்நிதானத்தில் இவ்வூர் பௌரோகிதம் பிரம்மஸ்ரீ அனந்தராம கிருஷ்ண ஆச்சாரியாரவர்களால் வெகு விமரிசையாக நடந்திவைக்கப்பட்டது.

இச்சபை கல்ப விருக்ஷம்போல் நீடூழிகாலம் நிலைத்து நின்று நம்குலத்தவர்களுக்கு வேண்டிய நன்மை புரியுமாறு ஸ்ரீ விஸ்வேஸ்வரர் அருள்புரிவாராக.

S வீரவாகு ஆச்சாரி, செகரட்டரி,
விஸ்வகர்மசபை, களக்காடு.



## குலோத்தாரண சபையின் உதவியும், அதற்கு உறுதியும்,

(198-வது பக்கத்தின் தொடர்ச்சி)

"செனித்தது பேசாரகும் சிறந்திடும் பலதெய்வங்கள், குனிக்குமிவ் வடையாளத்துள் குலவிய விஸ்வகோத்திரர், கனித்திடு மிக்கபால னங்கையே ஜெனிப்பாரென்று, தொனித்திடு நவக்கோளாய்ந்து சொல்லினோ மின்னூல் தன்னில்"

என்ற ஷை பாடலிலும் விஸ்வ கோத்திரத்திற் பிறந்தவர் என்று தெளிவாய் கூறப்பட்டிருக்கின்றது. ஷை விஸ்வகுலம்என்பதை அர்த்தம் செய்வோமாயின் அது முதற்குலம் அல்லது உயர்குலம் என்ற அர்த்தம் தெள்ளிதில் விளங்கும். விஸ்வம் என்றால் உலகத்திற்கும் உயர்வுக்கும் பெயர் அதெப்படியெனில் உலகத்தோடொட்டவொழுகல் பலகற்றும் கல்லாரறிவிலாதார் என்ற திருக்குறளுக்கு உலகத்தோரென்றதை உயர்ந்தாரோடு, பொருந்த நடத்தலைக் கல்லாதவர் பலகற்றும் அறிவில்லாதவரேயாவர் என்றே பரிமேலழகர் சரவணப் பெருமாளையர் முதலிய வித்வான்களும் உரைகூறியுள்ளார். இன்னும் நிகண்டு திவாகரங்களிலும் கூறப்படும் வாக்கியங்களை ஆராயின் அதில் அறிவர் யவனர் அக்கசாலையர், கண்ணாளர், சிற்பியர், சிற்பாச்சாரியர், ஜெகத்குரு, புலவர், புனைவர், வித்தகர், வித்தியர், விச்சுவர், விஸ்வகருமர், விஸ்வ கோத்திரர் என்ற இது முதலிய வாக்கியங்கட்கும் மற்றும் வடமொழி நிகண்டிலுள்ள வாக்கியங்களாகிய விஸ்வகர்த்தாக்கள் சதானந்தர்கள், மேருவை நிர்மித்தவர்கள், பஞ்சப்பிரம்ம வம்சத்தார்கள், மேகவாகனர்கள் துருவபாலகர், பஞ்ச முகோத் பவர்கள், மனு, மய, த்வஷ்டர், சில்பி, விஸ்வக்ஞர்கள், கம்மாளர்கள், விஸ்வ பிராம்மணர்கள் என்ற இத்யாதி நாமங்களை நடுநிலை

யோடு அர்த்தம் செய்யின் அதுவும் சிரேஷ்டமான அர்த்தத்தையே கொடுக்கிறது. இன்னும் விஸ்வகன், என்றால் பிரம்மா என்று அர்த்தம் விஸ்வகர்மா என்றால் பிரமனுக்கு முன்பட்ட விஸ்வப் பிரம்மா என்று அர்த்தமாகும் அது எப்படியெனில் விஸ்வகன், என்ற விகுதியில் மா சேர்ந்திருப்பதால், அந்த மா என்ற பதத்திற்கு மங்களகரம் பெரிது, பெருமை முதன்மை என்று அர்த்தமாவதால், விஸ்வகன் என்பது பிரம்மாவும் விஸ்வகன்மா என்பது ஷை பிரமாவுக்கும் முதன்மையான விஸ்வப்பிரம்மா என்றும் அர்த்தமாகும், ஆகையால் விஸ்வகன்மா என்பதும், விஸ்வப்பிரம்மா என்பதும் ஒன்றேயாம்.

ஆகையால் அவ்விஸ்வகர்மா என்பதன் பொருளாவது யாதெனின் உலகத்தைச் சிருஷ்டித்தவர் என்று பொருள். இதற்குப் பிரமாணம் யாதெனில், விஸ்வகர்மா மனச: விஸ்வம் க்ரோதி என்ற ருக்வேத சாஸ்திரங்களாலும் இன்னும் சித்தாதிகள் ரிஷிகள் முதலிய மகான்களால் கூறப்பட்ட ரேகை சாத்திரம் சப்தரிஷி வாக்கியம், சந்திரநாடி, குருநாடி, சுக்ரநாடி, ரநாடி முதலிய புராதன ஜோதிஷ நூற்களாலும் உண்மையைக் கண்டறியலாம். ஷை நூல்களிற் கூறும் பலன்கள் பிரத்தியக்ஷ அனுபவமானவைகள் என்பதிற் சந்தேகமில்லை.

ஆகையால், ஷை சாஸ்திரப் பிரமாணத்தாலும் பாரம்பரிய உரிமையாலும் பிறப்பின் உரிமையாலும் நாம் வேதாதிகாரவிஸ்வப்பிராம்மண வம்சமாயிருந்தும், நங்கால விக்திபா சக்தினாலும், நம்மை தூஷணையாம்சிலவிப்ரரிஷிகள் கட்டியபொய்ச்சாஸ்திரங்களாலும்காலதேச வர்த்தமானத்தை முன்னிட்டு ஊருக்கு ஊர்பரவி ஒப்புரவின்றி தனிக்குடியாயிருப்பதிலும் தங்கள் வலுவிழந்து மாசுபடிந்த மாணிக்கம்போலவும் நீறுபூத்த நெருப்புப்போலவும் இருந்து வருகிறார்கள்.

காலதேச வர்த்தமானத்தை முன்னிட்டு நடக்க விரும்பிய நங்குலமாகிய மாணிக்கத்தை மூடிய மாசென்றும் அநாசாரங்களும் நெருப்பை மூடிய நீறு என்றும் மந்த குணங்களும் முன்னேற்றத் தடங்கலாகப் பிறரால் செய்யும் இடுக்கண்களும்; சுமார் 160 வருஷங்களுக்கு முன்னிருந்த தர்மப் பிரபுவாகிய விஜயநகரம் சுனம் விஜயராமராஜா அவர்களாலும், அவர்காலந் தொடங்கி கண்விழித்த நங்குருமார்களாலும், நங்குலப் பெரியோர்களாலும், நிவர்த்தியாகிவந்தன. அதிலிருந்து சென்ற 100 வருஷங்களாய் தென்பாகத்தில் விசேட ஒளியைக்காட்டிய ஆங்கில அரசாகிய அமலஞான ஆதித்தனும் தன கிரணங்களோடு அழகாய் உதயமானமையால், பின்னும் நாது பெரியோர்களும் குலாபிமானிகளும் கண்விழித்து மேற்கூறிய சூர்யப் பிரகாசத்தால் நம்மவர்க்குப் பிறரால்நேரிட்ட இடுக்கண் அஞ்ஞானங்களாகிய இருளைநீக்கி நித்தியகர்மானுஷ்டானத்தை சிரத்தையாய்புரிய வழி தேடினர். ஆகையால் நாமும் அவ்வழியைப் பின்பற்றிக்கொண்டு முன்னேற்றமடைதற்குக் களங்கமின்றி நன்றாய்ப் பிரகாசிக்கிற ஆதித்தனுடைய ஆங்கில அரசே உதவி புரிதற் குரியதென்பதை யுணர்ந்து அதை தைர்யமாய்க் கைப்பற்றுவோமாக.

அவ்வழியில் முன்னேற்றமாய் நாம் பயமின்றிச் செல்வதற்கு மேலே சொல்லப்பட்ட சில விப்ரரிஷிகளாலும் சாமானிய புலவர்களாலும் துவேஷத்தாற் கூறிய புரட்டு சாத்திரங்களாகிய திருடர் நம்மை வழிமறித்துத் தொந்தரவு செய்யாதபடி நியாய சாஸ்திரங்களென்றும் பூர்வ வேதாகம சாஸ்திரங்களாகிய கூர்மை பொருந்திய ஆயுதங்களை இப்போதே தயார் செய்துவைத்துக்கொள்ளுவோமாக. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள். என்ற பழமொழிப்படி சாஸ்திரங்கள் அச்சுப்பிரதியாகவும், ஏட்டுப்பிரதியாகவும் கிடைக்கக்கூடிய விக்காலத்திலேயேதயார்செய்து



வைத்து நம்மவர்க்கு வரும் இடையூற்றை நீக்கிக்கொள்ள வேண்டியது.

இவ்விஷயத்தைக் குறித்து இனியாவது மேற்கண்டவிதம் செய்வது நன்மையென்றும் தீமையென்றும் இராத்திரி போஜனம் செய்து சயனித்துக்கொண்டு நன்றாய் யோசனை செய்யுங்கள் அங்ஙனம் யோசித்தால் நாம் இது நாள் அஜாக்கிரதையா யிருந்து காலங்கழித்தது புத்திபிசகென்றே ஏற்பட்டு இனி சாக்கிரதையாயிருக்க வழிதேடுவோம் அங்ஙனம் யோசிப்போமாகில் குலாபிமானம் முதிர்ந்து சீர்திருத்தம் செய்ய முற்படுவோம். இவ்வித எண்ணம் இப்போதே நம்மிடம் ஊர்ஜிதமாய் ஜனிக்குமாகில் நம்குலம் கூடிய சீக்கிரம் சீர்திருத்தமடைந்துசிறப்பெய்துமென்பது திண்ணம்.

'குடிசெய்வ லென்று மொருவற்குத் தெய்வம், மடிதற்றுத் தான்முந்துறும்' என்றார். அதாவது தன்குலத்தை உயரச்செய்ய வேண்டுமென்று முயற்சி செய்கிற ஒருவனுக்கு தெய்வம் உடையை பலமாய் கட்டிக்கொண்டுவந்து முன்னின்று அவ்வெண்ணத்தைப் பூர்த்தி செய்விப்பர். என்ற திருவள்ளுவ நாயனார் திவ்யமொழியை இங்கு சிந்திக்கற்பாலதாம்.

**கூந்தலூர். து. சுப்ரஹ்மண்யாச்சாரி,**

* *

## மனத்தொழில்.

இதைப்பற்றித் தத்துவஞானிகள் பலவாறு கூறி வருகின்றனர். ஆயினும், நாம சற்று தற்சமயம் அதைப்பற்றி விசாரிப்போம். நம்மனங்களின் தொழில்கள் அபரிமிதமானவை ஒருவர்மனம் போல் மற்றொருவர் மனத்தொழிலில்லை. மனங்களின் கருத்துகள் பலவாறாயிருப்பது பிரத்யட்சம். எல்லாருடையமனங்களையும் ஒற்றுமைப்படுத்த பலமேதாவிகள்பலபாடுகள் பட்டு வருகிறார்கள். அது முடிவுபெறாமலேயிருக்கின்றது. ஏனெனில் மனத்தின் சக்தி வலிவுள்ளது. இத்தகைய மனமே ஜீவாத்மாவில் பதிந்துக் கிடக்கின்றது இம்மனதின் சுபாவத்தை மனிதன் அறியாமலே உலகபோகத்துக்குட்படுகின்றான். இவ்வுலக காரியங்களினால் நன்மை, தீமைகளை யறியும் தன்மையுண்டாகின்றது. இத்தன்மைக் காதார பூதங்களாகிய வெளி, காற்று, தீ, நீர், மண் முதலிய பஞ்சீகரணங்களின் சேர்க்கையின் பயனே ஜீவன் இஜ்ஜீவன் கல்பாந்திரங்களின் அபிவிருத்தியால மனோ ஸக்தியைப் பெற்று ஜீவாத்மத்தன்மையை வகித்துத் தன் இயற்கையாகிய இராஜஸ, தாமஸ, ஸாத்வீகக் குணத்திரயங்களில் பிரவர்த்திக்கின்றது. வெளியினின்றுதித்த அறிவையும், காற்றினின்றுதித்த உணர்ச்சியையும், தீயினின்றுதித்த உணர்ச்சியையும், பெற்றமாத்திரத்தில் புத்திதோன்றிற்று. நீரினின்றுதித்துத் தாக்குவதும் ஊறுவதுமான சித்தம் பிறந்தது. மண்ணினின்றுதித்த கடின பதார்த்த முண்டாயிற்று. இதன் தன்மைதான் அகங்காரம். இவ்வாறான பஞ்சீகரணங்களே ஜீவாத்மனுக்கு வீடு. இவ்வீட்டில் வசித்துவரும் ஜீவன்தனக்காதாரமாக மனதைத் துணையாகவைத்துக் கொண்டு மநுஷன் என்னும் பெயர் பெற்றனன். இம்மனுஷரில் பக்குவப்படாத ஜீவான்மாக்களா யிருப்பினும் அவற்றின் பூர்வஜென்ம ஜீவபேதங்களின் வாஸனைகளே பொருந்தியிருக்கப்பார்க்கலாம். ஆனால் அவை சில நூற்றாண்டுகளுக்குள் கொஞ்சம், கொஞ்சமாக மனத்தின் சரியான தொழில்களைப் பெற்றுத் தன்னை அறியும், இதுபரத்தின் செயலே. மனத்தின் உன்னத ஸ்திதியை யறிந்தவர்களே விவேகிகளாவார்கள். இவர்களைத்தான் மஹாத்துமாக்களென் றழைக்கப்படும். இதைப்பற்றி நம் தாயுமானவர் கூறியதாவது:—

"பெருவெளியா யைம்பூதம் பிறப்பி
டமாய்ப் பேசாத
பெரிய மோனம்" என்றும்.

"ஐவகை யெனும் பூதயாதியை
வகுத்ததனு சராசரபேத
பேதமான, யாவையும்
வகுத்து நல்லறிவையும்
வகுத்து மறையாதி நூலையும்
வகுத்து" என்றும்.

விளக்கினர். அறிவின் திறமையால் மனிதன் தன்னையும் தன்தலைவனையும்உள்ளபடி உணர ஞானஸாதனத்தை வகிக்கின்றனன் இம்மட்டும் இவனது மனோஸக்தி முந்துகின்றது. ஆனால் தனக்காதாரமான பரவஸ்துவை யடையவோ, அல்லதுதானேபரவஸ்து என பிரமிக்கவோ நினைக்கிறான். இவ்வாறான நினைவே மயக்கத்தைத் தந்து பின்னடைகிறான். ஏனெனில் மனத்தொழில் பரிபூரணமடைய வில்லை. பூர்த்தியானபோது தன்னைப் பரவஸ மாக்குவது சகஜமே. இவ்வாறிருக்கத்தான் மேற்கூறியமயக்கமான நினைவை உபயோகிப்பதால் தவறுதலுண்டாகின்றது. இதைப்பற்றியே நிர்க்குண பிரஹ்ம உபாசனைக் குரிய தொழில் மனதில் பதியவேண்டும். இவ்வுபாஸனையால் உபாஸகன் தனது மூலஸ்தானத்தை யடையச் சாத்தியமாவதே உபாயம். இத்தகைய சுகவழியில் மனதின் பழக்க, வழக்க முதலிய தீச்செயல்கள் விலகும். ஆன்மஉன்னதத் துக்கு தக்க ஸத்செயல்களே உதவிகளாகத் தொடர்ந்து தனக்குரிய உத்தமஸ்திதிக்கு உயர்த்து மென்பது மேலோர் துணிபு. ஆயினும் ஜீவாத்மன் தனது சுத்த மனத்தொழில் சக்தியினால் இவ்வுலகைத் திரும்பிப்பாராமல் உயர்வான உலகைப்பற்றத் திறமையை யடைகிறானென்பதே இதுரைக்க / வேண்டியதாயிற்று இவ்வுலகுக்குவந்த ஜீவாத்மன் தனது தொழில்களைச் சீர்படுத்திக் கொண்ட பிறகு இதைவிட மேலாகிய ஸ்தானங்களை அநுபவத் தேற்சிகளை எதிர்பார்க்கின்றனன். இப்படிப்பட்ட மானிடச் சுபாவத்துக்குரிய அறிவைக்கடக்க முடியாதென்பது பரம் பொருளது நோக்கமென்ப தொன்றையே மகான்கள் முடிவில் திருவாய் மலர்ந்திருக்கின்றார்கள். இதற்குறுதி மொழியாகிய தற்போதத்தை முற்று மொழிக்கப்பலவித ஸாதனங்களைக் கூறியுமிருக்கிறார்கள். அவற்றுள் மனத்தொழிலைப் பக்குவப்படுத்த ஓர்வித ஸாதனத்தை ஸ்ரீ தாயுமானவர் கூறியதாவது:-

"அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டு விட்டா, லின்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே."

ஆஸ்திகன்.

* * *

## குலாபிமானக் கொத்து.

சென்ற மாதத்துச் சஞ்சிகையின் பல குறிப்பில் நாம் எழுதியுள்ளபடி நம்மவர்கள் குலமுன்னேற்றங் கருதியும் சீர்திருத்தமடையும் மார்க்கங்கருதியும் பாடு பட்டவர்களில் எமக்குத் தெரிந்த ஒரு சிலரைப் பற்றி எழுதுகிறோம்.

சுமார் எழுபது வருடங்களுக்கு முன் குலாபிமானிகள் சிலரால் நங்குலம் அடைந்த நிலைமைகளையும், மற்றவர்கள்செய்த துன்பங்களையும் சகிக்கக்கூடாமையால், மற்றவர்மீது விவகாரங்கள் தொடங்கிஜெயமடைந்து நியாயஸ்தலவாயிலாகத் தீர்மானங்கள் பெற்று அவைகளை யாவருமறிந்து கொள்ளும் பொருட்டும், இதரருக்கு எச்சரிக்கையாயிருக்கும்பொருட்டும்நம்குலத்தவர்கள் அதை அறிந்து சீர்திருந்த மடையும் பொருட்டும் ஐம்பது வருடங்களுக்கு முன்னிட்டு சென்னை வாசிகளான பிரம்மஸ்ரீ பேரம்பாக்கம் முனியாச்சாரியாரவர்களும் பிரம்மஸ்ரீகொடிவூர் கந்தசாமிஆச்சாரியாரவர்களும் ஏற்பட்டு தீர்மானங்களாகிய இரதகாரநிகரணவிசாரம், விஸ்வகர்மாந்வய பூஷணம் சித்தூர் தீர்ப்பு, சேலம் ஜில்லா தீர்ப்பு, பக்தர் அபிஷேகத்தை தீர்ப்பு முதலிய தீர்ப்புக்களையும் நமது குலமேன்



மைக் குரிய வேறு பல நூல்களையும் சேகரிப்பதற்காகவும், அதை அச்சியற்றுவதற்காகவும், மேற்கொண்டபிரயாசைகளைத்துணைய பொருட்செலவுகளைத்தனே! உற்றுக்கவனிக்குங்கால் இச்சமயம் என்போன்ற சாமானியர்களால் இயலாது என்பது வெளிப்படை. இவர்கள் பட்டுள்ள அரிய பெரிய பாடுகள் அவர்கள் வெளியிட்டுள்ள நூல்களைக் காணத்தெரிய வருகின்றன. அக்காலங்களில் நமது ஜாதியாருக்கென்று அச்சுக்கூடமிருந்ததில்லை. அன்னியருடைய அச்சுக்கூடங்களில் பலவாறு வருந்தித் திக்கேட்டும், ஒற்றைக் கிரட்டிப்பு கட்டணங்கொடுக்க ஒப்புக்கொண்டும் அச்சிட மறுத்து விட்டனர். இவ்வித தொந்தரைகளினால்தான் முதலில் அச்சிடப் பெற்றுள்ள நமது நூல்கள் கிறிஸ்தவர்களுடையவும் ஐரோப்பியருடையவும் அச்சுச்சாலைகளில் அச்சியற்றப்பட்டிருக்கின்றன வென்பது உண்மை.

பிறகு விஸ்வப்பிரம்ம குலாபிமான சிகாமணிகளுள் ஒருவராகிய பிரம்மஸ்ரீ பெ. மதுரை ஆச்சாரியாரென்பவர் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் நங்குலத்தவர்களை ஈடேற்று மார்க்கங்கருதி ஒரு சபை ஸ்தாபித்து அதற்கு 'விஸ்வ குலோத்தாரண சபை' எனத்திருநாமமிட்டு அச்சபையின் மூலமாக நம்மவர்கள் சீர்பெருங் காரியங்கள் பல செய்துவந்ததுமன்றி அரசாங்கத்தாருக்கும் பல விண்ணப்பங்களை வரைந்தனுப்பி வந்தனர். மேற்கண்ட சபை இன்றும் வேலைசெய்து வருவதாக அரசாங்கத்தாருடைய அபிப்பிராயமிருக்கலாம். ஆனால்உண்மை அங்ஙன மல்லாது சபையைக் கட்டுவாரின்றி நின்றிருக்கிறது. அது பிரம்மஸ்ரீ வே. கஷ்ணமூர்த்தி ஆச்சாரியார் வீட்டில் மேற்கண்ட பிரம்மஸ்ரீ பெ. மதுரை ஆச்சாரியாரவர்கள் உலகமறிந்த கீர்த்தியான் இக்கனவான் அனுப்பியுள்ள பல விண்ணப்பங்களும் ரிகார்டுகளும் அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவு அரிய பெரிய குலாபிமானியா யிருந்த புண்ணிய சீலராகிய என்னது ஆப்தர் தனது புகழுடம்பை நிறுவி பூதவுடம்பழிந்து ஈராண்டுகளாகின்றன.

நமது குலத்திற் பிறந்து வளர்ந்து கல்விச்செல்வம்பெற்றுக் குலாபிமானம்பொங்கிய ஸ்ரீமாந் டாக்டர்-பழநியாண்டி ஆச்சாரியவர்கள் அன்னிய மதத்தைத் தழுவிக்கொண்டும் நமது குலாபி விருத்திக்காகப் பட்டபாடுகள் இம்மகிதலம் அறிந்த விஷயமே. அங்ஙனமே ஸ்ரீமாந் இராஜுபத்தர் அவர்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவியாயினும் நங்குலாபி விருத்திக்காக வுழைத்த பெருமை நம்மனோரறியாததன்று.

திருவையாறு பிரம்மஸ்ரீ முத்துச்சாமி பாரதியாரவர்கள் நமது குலம் சீர்திருந்த வேண்டுமென்றெண்ணி விஸ்வபிரமபுராணமியற்றி யச்சிட்டதற்காக மேற்கொண்ட அரிய பெரிய பாடுகளும் மறக்கற்பாலதன்றும். இவையாவும் இன்னும் பல பேருடைய குலாபிவிர்த்தி யுழைப்புக்களும் நாம் நேரேகண்டு கேட்டவைகள்தாமே.

சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன்னர் பிரம்மஸ்ரீ பேரம் பாக்கம் முனியாச்சாரியார் சென்னையில் தமது சொந்த திருமாளிகையில் அத்தியயன பாடசாலை தாபித்து நம்மவர்கள் முன்னடைய வேண்டுமென்று உழைத்த உழைப்புகள் யாவருமறிந்ததே. அவ்விதபாடசாலையிற் கற்றுணர்ந்தவர்களுட் சிலர் தாம் தற்காலம் பௌரோகித மியற்றி வருகின்றனர்.

சென்னையில் பிரம்மஸ்ரீ தம்பலபாடி கிருஷ்ணமாச்சாரியர் என்பவர் பிரம்மங்காருமடம் ஸ்தாபித்து, பஞ்சப்பிரமயாகமியற்றி நம்மவர்களைச் சீர்திருத்தக் கருதிக் கைப் பொருள்களைச் செலவிட்டு தற்காலம் பொருளின்றி, ஏங்கிநிற்கும் நிலை நமக்குத் தெரியாததன்று.

இப்பொழுது அதுகளை நிலைநிறுத்த நம்மவர்கள் யாரும் முன்வரக் காணகிலோம். இவ்வித காரியங்களைக் கவனித்துத் தான் விஸ்வகர்ம வமிசத்தாருக் கென்று தனியாக ஒரு அச்சுக்கூட மிருக்குமானால்

பலகாரியங்களைச் செய்ய இசையுமென்றெண்ணியும் நமது குலத்தாருக்கு வேண்டிய நூல்களையும் ஆதாரங்களையும் அச்சிடாது நின்றுள்ள நூல்களையும் பிறவற்றையும் அச்சிட்டுவெளியிடவும் அவைகளினால் ஏற்படும்நற்பலனைநம்மவர் அனைவருமடையவுங் கருதியதுடன். நமது குலாபிமானச் சிங்கமெனக் கருதும் பிரம்மஸ்ரீ பெ. மதுரை ஆச்சாரியா ரவர்கள் ஸ்தாபித்துள்ள சபையின் திருநாமத்தாலேயே இவ்வச்சுக்கூடம், ஸ்தாபித்து நடைபெறுமாயின் மேற்கண்ட சபையினர் இதற்காகும் திரவியத்தைத் திருப்பிக்கொடுத்து அச்சுக்கூடத்தைத் தங்கள் சபைக்குச் சொந்தமாக்கிக்கொள்ள இசையும் என்றெண்ணி அச்சுக்கூடத்துக்கு விஸ்வகுலோத்தாரண அச்சுக் கூடம் என்னும் திருநாமமிட்டு நடத்தப்பட்டு வருகின்றது. இங்ஙனமே நடைபெறுங்கால் இசையின் நம்மவர்களுடைய அபிவிர்த்திக்காக வெளிவரும் சகல பிரசுரங்களும் இவ்வச்சுக்கூடத்தினின்றே வெளிவரக்கூடும். அடிக்கடி பலபத்திரிகைகளும் சிறுபுத்தகங்களும் துண்டுப் பத்திரிகைகளும் வெளிவந்து நிலவி நம்மவர்கள் பலமுறையும் கவனிக்கலாம் இவ்விதமாகப் பல திருத்தங்களடைந்து நம்மவர்கள் மேன்மையுறலாம் என்கிற இவ்விதமாகிய குலாபிமான எண்ணங்களினால் கைப்பொருளைச் செலவிட்டு நடத்திவருவது நம்மவர்கள் உள்ளங்கை நெல்லிக்கனியாகக் காண்பதொன்றேயாகும்.

ஆயினும் நமது குலத்தவர்களுட் சிலர் இவ்வெண்ணங்களுக்குரிய உதவிசெய்து நிறைவேற்ற இசையாது பொறுமை கொண்டுள்ளாராயினும். தந்தமக்காக வேண்டிய காரியங்களை நமது அச்சாபீச மூலமாக நிறைவேற்றிக் கொள்வதில் பின்வாங்குவதில்லை. இவைகளுடன் விஸ்வகர்ம வேதாத்தியயன பாடசாலையொன்றும் பாஷாபிவிர்த்தி பாடசாலை யொன்றும் ஸ்தாபிக்கப்பெற்று நடைபெற்று வருகின்றன. இவைகள் தனிமையான என்போன்றவர்களால் நடைபெறுவது இலேசாகாதென்றும் என்னுட லழியப்பெறுங் காலத்துக்குப் பின்னரும் செவ்வனே நடைபெற வெண்ணியும் இப்பாடசாலைகளைச் சபையின் காரியங்களாக அங்கீகரித்துக்கொள்ளும்படிக்கு மேற்கூறிய விஸ்வகுலோத்தாரண சபையின் தலைவரைக் கேட்டுக்கொண்டதற்கு அவர் தக்கபடி பதிலுரைக்க இசையாமையாலும், பொருள்வைத்துப் பார்க்க முடியாமையாலும் அதைவிட்டு எமது நண்பர் கோயம்பத்தூர் பிரம்மஸ்ரீ சி. ஆர். சுப்பராயாச்சாரியார் அவர்கள் சென்னைக்கு வந்திருந்தபோது சில நண்பர்களுடைய ஆலோசனைக்கிணங்கி "சென்னைவிஸ்வகர்ம குலோத்தாரண சபை" என்னும் பெயருடன் ஓர் சபை ஸ்தாபித்து ஆலோசனைக்கூட்டத்தார் பதினால்வரை நியமித்து சில நாள் நடத்தப்பட்டது. அவ்விதசபைகள் இதுபரியந்தம் செய்து வந்த வேலைகளையும் இப்பொழுது இருக்கும் நிலைமைகளையும் எடுத்துச் சொல்வோம். (தொடரும்)

* * *

## சுகாதார விளக்கம்.

தாய்மார்கள் அறியவேண்டிய விஷயங்கள்:—சுத்தமான காற்றுள்ள இடத்தில் குழந்தைகளை இருக்கச்செய்து, ரொம்ப காரம், தித்திப்பு முதலிய உணவுகளை கொடுக்காமல் சாமான்யமான ஆகாரம் கொடுத்து வந்தால், குழந்தைகள் நல்ல பலசாலிகளாவதோடு, அவர்களுடைய தேகரத்தமும் சுத்தமாயிருக்கும்.

குறிப்பிட்டகாலத்தில் சாப்பாடு போடுவதென்று வைத்துக்கொண்டு, இடைநேரத்தில் பக்ஷணம் முதலியவைகளைக் கொடுக்காமலிருந்தால், சிறுவர்களுக்கு சாப்பாட்டு நேரத்தில் நன்றாய்ப் பசியெடுக்கும்.

குழந்தைகளுக்கு எவ்வளவுக் கெவ்வளவு கண்ட பக்ஷணங்களைக் கொடுக்காமலிருக்கிறோமோ, அவ்வளவுக்கு அவர்களுக்கு தேகம் சௌக்கியமா யிருக்கும், வியாதி வருவது துர்லபம்.

வளரும் குழந்தைகள் அதிகநேரம் தூங்கவேண்டியது அவசியம். முக்கியமாய் பள்ளிக்கூடம் போகும் சிறுவர்கள் அதிக நேரம் தூங்கவேண்டும்.



சிறுவர்களின் கால்களும் பாதங்களும் எப்போதும் சூடாயிருக்கவேண்டும்.

சிறுவர்கள் படுக்கும் அறையில் காற்று தாராளமாய் வந்து போய்க்கொண்டிருக்கவேண்டும்.

சில குழந்தைகள் போர்வையால் தங்களுடைய முகத்தை மூடிக்கொள்ளும், இப்படிச்செய்வதை தாய்மார்கள் தடுக்கவேண்டும்.

கோபத்தால் குழந்தைகளை அடிப்பதும் வைவதும் கூடாது.

அவர்களுடைய குற்றங்களை கவனித்துக்கொண் டிருக்கவேண்டும். ஆனால் அந்தக் குற்றங்களை அடிக்கடி எடுத்துக் காட்டுவதைவிட, அவைகளுக்கு எதிரிடையான நல்ல காரியங்களைச் செய்யும்படி சொல்லிக் கொடுக்கவேண்டும்.

தாய்மார்கள் எப்போதும் உண்மை பேசவேண்டும், தாங்கள் சொன்னசொல் தவறக்கூடாது. அப்போதுதான் சிறுவர்களும் உண்மை பேசுவதோடு சொன்ன சொல் தவறாமலிருக்கப் பழகவும் சாத்தியமாகும்.

சிறுவர்களுடைய விளையாட்டு சாமான்களை வைக்க ஒரு இடம் கொடுக்க வேண்டியது அவசியமாகும். அதோடு, அவர்களை அந்தச் சாமான்களை அந்த இடங்களில் வைத்துக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தவேண்டும். அவர்கள் ஒரு குறிப்பிட்டகாலத்தில் விளையாடுவதற்கு அனுமதி கொடுக்கவேண்டும்.

* * *

## ஆயுர்வேதசாரம்.

### அக்கிக்கு மோர் வைத்தியம்.

அக்கியில் மோரை உபயோகிப்பது ரொம்ப அனுகூலமென்று தெரிவதாக 'வைத்திய கலாநிதி' தெரிவிக்கிறது. இந்த வியாதியின் நிலைமை எவ்விதமா யிருந்தபோதிலும்,வியாதிக்குக் காரணமான தோஷங்களைப் போக்குவதிலும் வலியை சாந்தப்படுத்துவதிலும் இது நிகரற்ற தென்றும், அக்கியின்மேல் உபயோகித்தவுடன் எரிச்சலும் மற்ற விகாரங்களும் தணிந்துவிடுகின்றனவென்றும் சொல்லப்படுகிறது.

* * *

### அன்னபேதிச் செந்தூரம் செய்முறை.

அன்னபேதி பலம் 1 இதைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சார்விட்டு மைநம்போலரைத்து வட்டுச்செய்து ஓட்டில் வைத்து ரவியிற்காய்ந்த பிறகு மேலோடு மூடி மூன்று மண்சீலை செய்து காய்ந்த பிறகு 5 விராட்டியிற் புடம் போடவும். ஆறினபின் னெடுத்துப்பார்க்க செந்தூரமாயிருக்கும். இதை சீசாவிலடைத்துக் கொண்டு பணவிடை யெடுத்து தேனிற் கலந்து காலை மாலை 3 அல்லது 5 நாள் சாப்பிட்டுவர ஜுரம் ஜன்னி நீங்கும். பசுவெண்ணையில் 10 நாள் சாப்பிட வெள்ளை, நீர்ச்சுருக்கு, சீதபேதி, கைகாலெரிவு ரோகணி இவைகள் நீங்கும். பத்தியம் [இச்சா பத்தியம்.]

* * *

### வெடியுப்புச் செந்தூரம் செய்முறை.

ஐந்தாங் காய்ச்சல் வெடியுப்பு பலம் 1 இதை மருக்கொழுந்து சக்காளத்திச் சார்விட்டு 4 ஜாமம் அரைத்துக் காயவைத்து பின்பு அந்த திப்பியை உரலில் கீழ்மேலுமாக வைத்து மேலோடு மூடி 5 அல்லது 7 சீலைமண்செய்து 5 எருவிற் புடம்போடச் செந்தூரமாகும். இதில் ஓர் பணவிடை யெடுத்துத்தேனில் மத்தித்து காலை மாலை 5-நாள் அல்லது பத்துநாள் சாப்பிட்டுவர சூதகவாய்வு, சூதகச்சிக்கல், காய்ச்சற்கட்டி, குன்மக்கட்டி இவைகள் யாவும் சூரியனைக்கண்ட பனிபோற் பறந்தோடும். [இச்சா பத்தியம்.]

* * *

### வீரக்கட்டு செய்முறை.

வீரம் ஒரு பலம் சூரத்துக்கற்பூரம் ஒரு பலம் கற்பூரத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து காற்றுப்போகாத ஓரறையில் அரை பலம் நிறையுள்ள கற்பூரத்துண்டுகளை சுத்தமுள்ள தரையில் அடுக்கி வீரத்தை மத்தியில்வைத்து மிச்சம் ½ பலம் கற்பூரத்தை வீரந்தெரியாமல் மூடி பின் தீக்குச்சியால் தீமூட்டவும் ஆறின பின்னெடுத்து சுத்தஜலம் விட்டலம்பிப்பார்க்க வீரமணியாயிருக்கும். பீங்கான் பரணியி லடைச்சுஞ் செய்துக்கொள்ளலாம்.

***

### தங்க பஸ்பம் செய்முறை.

தங்கரேக்கு விராகனிடை ஒன்று அதை தம்படி யளவாய் கத்தரித்து கெளதும்பை யிலையை அரை[illegible] பெரிய விளாங்காயளவு உருண்டைச் செய்து அதில் ஒவ்வொரு துண்டையும் தனித்தனியாக சொருகி விட்டுப் பின்பு அவ்வுருண்டைமேல் ஐந்து சீலமண்செய்து சற்று உலரவைத்து இருபது விராட்டியில் புடம் போடவும். ஆறினபின் னெடுத்துப் பார்த்தால் நீறு வெண்மையாயிருக்கும். அதை வெகு ஜாக்கிரதையாக ஓர் பேனாகத்தியால் எடுத்து சீசாவில் அடைத்துக்கொள்ளவும். இதில் அரிசியிடை வெண்ணெயிற் கலந்து காலை மாலை பத்துநா ளுட்கொண்டால் நீரொழுக்கு, பிரமேகம் தீருவதுடன் பூரண தாது விர்த்தி யுண்டாக்கி புருஷலட்சணத்தை பிரகாசிக்கச் செய்யும். இச்சாபத்தியம்.

## தொழிற் குறிப்புகள்.

[இந்தத் தலைப்பின்கீழ் மநு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞ வகுப்பினர் தொழிற்தரிய அரிய விஷயங்களையும், அவற்றின் கைபாகம் செய்பாகமென்ற முறைகளையும் கூறப்பட்டிருக்கிறது. இவற்றுள் நிகழும் சந்தேகங்களைச் சுருக்கமாகத் தங்கள் பெயர் விலாசத்துடன் இப்பத்திரிகைக்கு எழுதிக்கொண்டால் விடையளிக்கப்படும் இவற்றை அநுமதி பெற்றே மற்றவர் பிரசுரிக்கவேண்டும்.]

### வெள்ளி பாத்திரங்களை வெளுக்கச்செய்ய.

சிறிய வெள்ளி பாத்திரங்களை ஓர் அலுமினிய பாத்திரத்தில்போட்டுநிறைய தண்ணீர் விட்டு மேலே சோடாவை தூவவும். பின் அடுப்பிலேற்றி கொதிக்கவிட்டெடுத்து அலம்பி சுத்தி செய்யவும்.

***

### பித்தளை டம்லரை சுத்திசெய்ய.

(1) களிம்புபிடித்த பித்தளை டம்லரை உப்பும் சீயக்காயும் கலந்த தண்ணீரில் கொதிக்கவிட்டு பிறகு சுத்தம் செய்யவும்.

(2) நவாச்சாரம் கரைத்த தண்ணீரில் கொதிக்கவிட்டு பிறகு உப்பும் புளியுங் கொண்டு சுத்திசெய்யவும்.

***

### அவல் அரக்கு வார்னிஷ்.

மரசாமான்களின் மேல் கோபால், பிரெஞ்சு பாலிஷ் முதலிய வார்னிஷ் பூசுவதற்குமுன் மஞ்சள் மெழுகு தேய்த்தலோடு அரக்கு வார்னிஷ் பூசுவது மிக அவசியம்.

முறை:—(1) அவல் அரக்கை காஷ்டிக் பொடாஷ் (Koh) வெளுக்கச் செய்வதுடன் தண்ணீரில் கரையச்செய்கிறது.

(2) வெண்காரமும் நவச்சார திராவகமும் (Liquor Ammonia) கலந்த தண்ணீரிலும் கரையும்.

ஆனால் இருமுறையிலும் தண்ணீரை சூடேற்ற வேண்டும். எல்லா அரக்கும் கரைந்த பிறகு குளிரவிட்டு பிரஷால் எடு



[illegible] னீஷ் பூசினால் [illegible] யும்.

[illegible] மான்களை [illegible] வெதுவெ [illegible] பக்கரைக்கு, [illegible] த்து அந்த ஸா [illegible] யவும். ஜலத்தில் உப்புக[illegible]ல் மூங்கில் நிறங் கெடாது, மஞ்சள் நிறமாகாது. பிறகு ஒரு மிருதுவான துணியால் ஈரத்தைத்துடைத்து சாமானைச் சற்றுக் காற்றுட விடவும்.

***

### துணிகளுக்கு அடையாளம் போடுதல்.

துணிகளுக்கு இங்கியால் அடையாளம் போடுமுன் சாதாரண பென்ஸிலால் எழுதிப் பிறகு அதன் மேல் சாதாரண இங்கியாலும் எழுதலாம். இங்கியானது துணியில் பாவாது. ஒவ்வொருதடவையும் எழுதும்போது புது நிப்பை உபயோகப்படுத்த வேண்டும்.

***

### வைரத்தைவிடக் கெட்டியான ஒரு உலோகம்.

ஜனங்கள் வைரத்தைவிடக் கெட்டியான பதார்த்தம் கிடையாது என்றே எண்ணி வருகிறார்கள். நம் நாட்டிலும் நல்ல கெட்டியான மரத்துக்கும் வைரம்பாய்ந்த மரம் என்று கூறுவது இயல்பு. இதைவிட கெட்டியான பதார்த்தம் ஒன்று இருப்பதாக [illegible]தெரியவருகிறது. இது டாண்டலம் என்[illegible]ம் அபூர்வ உலோகம். இதன் கெட்டி[illegible] குணத்தை ஒரு திருஷ்டாந்தத்தால் [illegible]வோம். இதன் ஒருலேசான தகட்டை [illegible]ச்சாணையில் வைத்து இரவும் பகலும் [illegible] நாள் வேலைசெய்து பார்த்ததில் [illegible]லத்தில் ஒரு கோடு கிழித்திருக்[illegible]ம் தேய்ந்து போயிற்றெனக் [illegible]டாண்டலம் உண்டாக்குவது மிகவும் கஷ்டம். ஆனால் அதிகமாய்க்கிடைக்கக் கூடுமானால் மிகவும் உபயோகமான வஸ்துவாயிருக்கும். அதன் பல உபயோகங்களுள் ஒன்று வைரத்தை வெட்டுவது. இப்பொழுது வைரத்தை வெட்ட வைர ஊசி வேண்டியிருக்கிறது. மின்சார விளக்குக்கு வேண்டிய பிலமெண்டு ஸாமானைச் செய்யவும் இதுஉதவும். இந்த உலோகம் சிறிதும் உடையக்கூடியதல்ல. மிகவும் கெட்டியானது.

***

## பலகுறிப்புகள்.

விஸ்வகர்ம குலோபகாரி பத்திரிகையின் சந்தாதேயர்களுக்கு அறிவிப்பது:—

தங்கள் தங்கள் சந்தாபாக்கியையும்முன் பணத்தையும் சந்தாதேயர்கள் எம்முடைய வி. பி. யை எதிர்பாராமலே மணியார்டர் மூலமாக அனுப்பிவிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. அப்படியும் அனுப்பாதவர்களுக்கு அடுத்தபத்திரிகையை வி-பி. யில் அனுப்பப்படும். வி. பி. வந்தால் அதை திருப்பி எம்மை நஷ்டப் படுத்தாமல் பணத்தைக்கட்டி பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

நமது குலோபகாரிக்கு சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கும் குலாபிமானிகள் தம்மால் இயன்ற சரீரசகாயமும் வாக்கு சகாயமும் செய்து நமது பத்திரிகையை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஒவ்வொரு சந்தாதாரரும் தங்களுக்கு வேண்டியபந்துமித்திரசுற்றத்தார்களுக்கு இது விஷயத்தில் சிபார்சுசெய்து குறைந்தது பத்து பத்து சந்தாதாரர்களை யாவது சேர்த்துக் கொடுக்க முயன்றாலும் நாம் கொண்ட குலோபகாரம் எவ்வளவோ சீக்கிரத்தில் பூர்த்தியாகும். அப்படிக்கல்லாது அதற்கென்ன நமக்கென்னவென்றும் ஏனோ தானோ வென்றும்இருந்தால் நாம் எடுத்த குலோத்தாரணங்கள்

எங்ஙனம் கைகூடும்? ஒருவர் ஒருகாரியத்தை ஆரம்பித்தால் அக்காரியம் சரியானதென்று ஏற்படும் பக்ஷத்தில் உடனே அக்காரியங்களை நடத்த துணைபுருந்து முடிக்கவேண்டியது குலாபிமானிகளின் கடமையல்லவா?

அதிலும் இக்காரியங்களை நடத்துவது வயிற்றுப் பிழைப்புக்காக வாயினும் பாடுபடாவிட்டாலும் அவஸ்யமில்லை. தம் சுயநலத்தைக் கருதாது உழைப்பவர்களுக்குக் கூட சகாயம் செய்யாவிட்டால் என்னபயன் சித்திக்கு மென்பதை யோசித்து நடக்கவேண்டியது குலாபிமானிகளின் கடமையல்லவா? நாம்இப்பத்திரிகைக்காக பட்டபாடுகள் நம்குலத்தவர்கள் அறிந்த விஷயமே இப்பத்திரிகைக்கு இவ்விதஜாதிப் பெயரில்லாமல் பொதுப்பெயராகயிருந்திருந்தால் இதுவரையில் எவ்வளவோ மேன்மைக்கு வந்திருக்கு மென்பதில் சந்தேகமேயில்லை. பொதுப்பத்திரிகை எத்தனையோ யிருக்கிறது நம்ஜாதிக்கென்று ஓர் பத்திரிகையிருந்தால நம்ஜாதியார்களுக்கு வேண்டிய விஷயங்களையும் பொது விஷயங்களையும் எழுதலாமென்றும் இந்த ஜாதி அபிமானத்தை வைத்தாகிலும் நம்மவர்கள் பத்திரிகையை வாங்கி வாசிப்பார்கள் என்கிற உத்தேசத்தைக் கொண்டும் குலாபிமான ஊக்கத்தைக் கொண்டும் இவ்விதபத்திரிகையைநடத்தநோக்கது இதை நம்மவர்கள் அவசியம் கவனிக்கவேண்டியது முக்கியகடமையாகும். இதனால் ஏற்படும் லாப நஷ்டங்கள் எம்முடையதல்ல ஜாதியாருடையதேயாகும்.

***

## வர்த்தமானக் குறிப்புகள்.

திமிங்கலம் என்னும் மீன் 10000-மணங்கு பளுவிருக்கும். அதாவது சுமார் 100-யானையின் பாரம். அதன் நீளம் 70- அடியிருக்கும்.

யுத்த கார
றக்கு நான்க
பத்திரிகை
கிலாந்திலு
சமாகி விட்
களைப்போ
ளும் தங்
திவிடக்
எழுதியிருக்

பூர்வீக சிலா[illegible] [illegible]ர
வின் அஸிஸ்டன்ட் [illegible] ஆபீஸ், இது நாள்வரையிலும் உதகமண்டலத்தில் இருந்து வந்தது. அந்த ஆபீஸ் இனி 1916-ம் வருஷம் அக்டோபர் மாதம் முதல் தேதி முதல் சென்னை பூவிருந்தவல்லியில் 38- ம இலக்கமிட்ட இடத்திற்கு மாற்றப்படும் என்ற விஷயம் இந்த வாரத்திய கெஜட்டில் வெளியாயிருக்கிறது.

***

### யுத்த நன்கொடை.

கொழும்புப் பகுதி வாசராகிய மிஸ்டர் N. D. A. சில்வா விசயசிங்க் அடிக்கார் முதலியாரவர்கள் யுத்த நன்கொடையாய் 20.000-ரூபாய் தேசாதிபதிக்குக் கையளித்திருக்கிறார். தேசாதிபதியவர்கள் இச்சந்தோஷ சம்பவத்தை இராசமா லிகிதர்களுக்குத் தந்தி மூலந் தெரிவித்தனர். இந்தப் பணத்தில் 15,063-ரூபாய் யுத்தகளத்தில் நிற்கும் போர் வீரருக்கு இரு மோட்டார் வண்டிகள் வாங்கவும், மிகுதி லண்டன் பட்டணத்திலிருக்கும் பெல்ஜியச சிறுவரை யாதரித்தற்குரிய செலவுக்கும் விடப்படவேண்டுமென்பது முதலியாரவர்களின்கருத்தாம்.

***

### மிருகக்கண்காட்சிச் சாலையில் நோய்.

ரங்கூனில் ஒரு மிருகக் கண்காட்சிச்சாலையுள்ளது. அச்சாலையிலுள்ள பிராணிகளுக்கு அடைப்பான் வியாதி கண்டு அநேக விலையு[illegible]
றப்பட்ட மிருகங்கள் இறந்துபோயின. அவ்[illegible]
டத்தில் சில வியாதிபெற்ற மாடுகள் பிரவே[illegible]
தமையால் உண்டாயிற்று என்று சொல்[illegible]
கிறது 3-எருதுகள், 1-காண்டாமிருகம்
யானைகள் இன்னும் சில மிருகங்களும் [illegible]
போயின. அந்த வியாதி இப்போது
விட்டது. அவ்வியாதி அங்கு தலைகா[illegible]
ட்டாதடிக்க முயற்சிகள் என்[illegible]
செய்யப்பட்டு வருகின்றன



[illegible]ஞ்சரி
[illegible]ச்சிட்
[illegible]ளைகள்
[illegible] முதல்
[illegible] விபூதி
[illegible] யாவந்த
[illegible]க்குரிய மந்தி
[illegible]மந்திரம், தீபாரா
[illegible]நமகசமக மந்திரம்
அமி[illegible] மந்திரம், புருஷ
சூக்தம், ஸ்ரீசூக்தம், பூசூக்தம், ஆசிர்வசனம், அபிவாதன முதலிய பல மந்திரங்களும் அடங்கியுள்ளது இதை நாம் ஒவ்வொருவர்களும் வாங்கி நம் பிள்ளைகளுக்கு சொல்லி வைக்கவேண்டியது கடமை.

இதன் விலை ஆறணுதான் 0—6—0

***

இதைப்போலவே தமிழிலுமிருக்கிறது இதன் விலை இரண்டணுதான் 0—2—0 ஆனல் தெலுங்கில் சப்தபேதமில்லாமல் சரியாயிருக்கும். தமிழுக்கு உபாத்தியாயர் மூலமாகத்தான் பாடம் கேட்டுக்கொள்ளவேண்டும். இந்த புஸ்தகம் முழுமையும் பாடமாய்விட்டால் பிறகு சுலபமாக மற்ற மந்திரங்களைக் கற்றுக்கொள்ளலாம் பௌரோகிதர்களாக ஆகலாம்.

***

நமது குலோபகாரியில் வெளிப்போந்த விஸ்வகர்ம பக்தோபாக்கியானம் என்னும் விஸ்வகர்ம சந்ததியில் உற்பவித்த 12-பக்தர்களுடைய சரித்திரங்களை புராணப் பிரசங்கத்திற்கென்றே தக்க வித்வசிகாமணிகளைக் கொண்டு செய்யுள் ரூபமாக எழுதப்பட்டு நமது விஸ்வகுலோத்தாரண அச்[illegible]பக்திரசாலையில் உயர்ந்த கடிதத்தில்அச்[illegible]ப்பட்டு விற்பனைக்குத் தயாராகி விட்[illegible]
[illegible]செய்யுளின் மொத்தத் தொகை
[illegible]ய்யுளோடு கூட முழுச்சரித்திரங்
[illegible]ளரூபமாகவும் சேர்க்கப்பட்டிருக்
[illegible]கத்தின் கூசஸ் டிம்டி 8பேஜி
[illegible]பக்கங்கள் கொண்டு, காலி
கோ பயிண்டு செய்யப்பட்டு, குலாபிமானத்தை முன்னிட்டு ரூபாய் ஒன்று விலை குறிக்கப்பட்டிருக்கிறது. விஸ்கர்ம சந்ததியார்க்கும், இதா புராணப் பிரசங்கியார்களுக்கும் இன்றியமையாதது.

***

விஸ்வேஸ்வர பகவான்பேரில் கீர்த்தனைகள் இது நம் விஸ்வகர்ம சந்ததியிலுற்பவித்த வித்வசிகாமணிகளால் எழுதப்பட்டது நம்மவர்கள் அநேகமாக விஸ்வேஸ்வா கீர்த்தனை வேண்டுமென்று எமக்கு அடிக்கடி எழுதியிருந்தபடியால் இக் கீர்த்தனைகளை திரட்டி அச்சிடப்பட்டது. டிம்மி 8பேஜ் அளவில் 32-பக்கம் அச்சிடப் பட்டது. இதன் விலை அணு இரண்டே.

***

### எங்கே ஆநந்தம் காணப்படும்!

1. நல்ல சிநேகம் செய்வதில்
2. நல்ல எண்ணங்கொண்டிருப்பதில்
3. பிறர்க்கு உதவிபுரிதல்
4. நட்பான கடிதங்கள் எழுதுவதில்
5. இனியவசனம் பேசுவதில்
6. சிறுவிஷயங்களிலும் உபகாரம் செய்[தில்]
7. பிறர் செய்த சிறு உதவியிலும் பெரும் பக்ஷம் பாராட்டுவதில்
8. சுயநயமற்ற பரோபகாரத்தில்
9. எல்லா மனிதரோடும் கலந்திருப்பதில்
10. பரிசுத்தமான எண்ணத்தில்
11. நாம் விரும்பிய வேலையில்
12. பரஸ்பர நம்பிக்கையில்
13. தேகப்பயிற்சிக்குரிய பொழுது போக்[கில்]
14. அறிவை விசாலப்படுத்துவதில்
15. நம்கடமையைச் சந்தோஷமாகச்செய்வதில்
16. பிறரைச் சந்தோஷப்படுத்துவதில்
17. உலகவாழ்க்கையின் லாபநஷ்டங்களை புன்சிரிப்போடு வகித்தலில்
19. நல்லகிரந்தங்களை வாசிப்பதில்
20. நம்மால் இயன்றமட்டிலும் பிரதியுபகாரம் செய்வதில்.

ஞானபாநு சென்னை.

***

### இவர்க்கிவை வேண்டாம்.

பெற்றதாய் தந்தைகள் சுற்றமே முதலான பெரியோரை முனிதல் வேண்டாம் பின்னொன்று முன்னொன்று பேசியே யவமான பேர்கொண்டு திரிதல் வேண்டா, உற்றவர்கள் போலவுட் பகையான வஞ்சகரை யொருநாளு நம்பவேண்டா மொருவருக் கிச்சையாய்ப் பொய்சொல்லிப் பின் ச(பையி) லூமைபோ லிற்றல் வேண்டாம், சற்றுமே பொறுமையில்லா தவர்கள் சண்டையிற் றுன் போய் விலக்கல் வேண்டாம் தைரியந் தனில்விக்ரமா தித்தனென் னினுந் தன்னையே புகழவேண்டாம்.

***

### நீதிமொழிகள்.

ஈவிரக்கமின்றி முரடனாயிருக்க வேண்டாம். தயைசெய்து, வந்தனம் என்ற சொற்களை அடிக்கடி சொல்ல ஒருபோதும் மறக்கக்கூடாது. ஒருவருக்கும் பொல்லாங்கு நினைக்கவேண்டாம். அன்பாகவே பேசவேண்டும். குழந்தைகள், கிழவர்கள், மெலிந்தவர்கள் ஆகிய யாவரையும் ஆதரிக்கவேண்டும். சண்டைசச்சரவு ஒருபோதும்வேண்டாம். அடக்கம் ஆயிரம்பெறும் ஸ்வயநலத்தையே பெரிதாகப்பார்க்கக்கூடாது. பரோபகாரமேபெரிது.

விவேக போதனி.

***

சிற்ப நூல்களை அச்சிட்டனுப்பும்படியும், பௌரோகித நூல்களை அச்சிட்டனுப்பும்படியாயும், நம்மவர்கள் அடிக்கடி நமக்கு கடிதங்கள் எழுதுகிறார்கள். அதுகளை தமிழில் அச்சிடுவதானால் அதற்கு ஏராளமான பொருட்செலவும் தேகப்பிரயாசையும் வேண்டியதாக யிருக்கிறது இதை ஆசரிக்கும் குலாபிமானிகள் பொருட்சகாயங்கள் செய்தால் நம்மால் கூடுமானவரையில் பாடுபடக்கூடும் அப்படியில்லாமல் கடிதங்கள் மட்டிலும் அடிக்கடி எழுதுவதால் யாதொன்றும் நடவாதென்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சா
யும்,
னால்
வாக
னலும் ம
லாம் சிற்ப
என்பதாக மு
சிற்பத்தை மட்
பிறகு பார்த்துக் ... றப்நூல்
களை அச்சிட ஆரம்பித்தால் அதற்கு சிற்ப நூலில் பழகிய ஓர்சிற்பசாஸ்திரியை சம்பளத்திற்கு வைக்கவேண்டிய திருக்கிறது. அவருக்குந் தக்க சம்பாவனைகள் கொடுக்கவேண்டும். தற்காலம் கடிதமும் அதிகமில்லையாக யிருக்கிறது. இவைகளுக்கெல்லாம் பொருட்செலவிட நம்மால் முடியாது இதுபோலவே பௌரோகித நூல்களுக்கும் ஓர் பௌதிகர் இருந்தே ஆகவேண்டும். அப்படியில்லாமல் நாமும் சிற்பநூல்களும், பௌரோகித நூல்களும் அச்சிட்டுவிட்டேனென்று அச்சிட்டுவிட்டால் பிரயோசனப்படாது. இது பரியந்தம் ஏதேதோ அச்சிட்டிருப்பதாக தெரிகிறது அதுகளெல்லாம் சிற்பமாகாது. சிற்பம் என்று மட்டிலும் சொல்லிக்கொள்ளலாம். சிற்ப சாஸ்திரிகள் சிற்பத்தொழிலில் வல்லவர்களாக யிருந்து அவர்கள் பார்வையில் அச்சிட்டால்தான் சிற்பம் சரியாக யிருக்கும் இதற்கு நம்மவர்கள் பொருள் சகாயம் செய்ய ஆரம்பித்தால் சரியானபடி முடிக்கலாம் நம் விஸ்வகர்ம சந்ததியார்கள் தவிர வேறு யார் அச்சிட்டாலும் அவைகளிலுள்ள மர்மம் வெளிவராது என்பது திண்ணம்.

***

மனுஷ்ய சரீரத்தில் 240-எலும்புகள் ... க்கின்றன. இந்த எலும்புகள் மாத்திரம ... மில்லாமல் 4, 5-வீசைப் பளுவிருக்கும் ... தல் 4-வீசை ரத்தமிருக்கிறது.

புருஷனுடைய மூளை ஒரு வீ... விருக்கும். ஸ்திரீயினுடையது பு... மூளையைக் காட்டிலும் 3, 4-ப... பளுவாய் இருக்கும்

***



### விக்டோரியா மகாராணியாரின் அமிர்தவாக்கு.

முன்னொருகால் லேடி சேம்ஸ் போர்ட் விக்டோரியா மகாராணியாரிடம் சென்றிருந்தபோது அவர் பின்வருமாறு பேசினாராம்:—

"அநேக இங்கிலீஷ் ஸ்த்ரீகள் இந்தியாவில் போய் அவர்கள் ஆயுள் காலத்தின் பெரும்பாகத்தையே கழிக்கிறார்கள் அவர்களில் விலக்குகள் அத்தேசத்துப் பாஷைகளைக் கற்றுக்கொள்ள முயலுவ தில்லை இவ்விஷயம் எனக்கு ஒரு பக்கத்தில் ஆச்சரியத்தையும் மற்றொரு பக்கத்தில் விசனத்தையு முண்டுபண்ணுகிறது.

***

### பூமியின்கீழ் ஒரு நிலவறை.

பூர்வீக இந்தியாவின் விசேஷங்களுக்குக் கணக்குமில்லை. சரித்திராதாரமுங் கிடையாது. பூகம்பத்தில் அமிழ்ந்தோ வேறு பலகாரணங்களாலோ பூமிக்குக்கீழ் புதையுண்டுபோன. கட்டடங்கள் அநேகம் தஞ்சாவூரிலிருந்து ஸ்ரீரங்கத்திற்கு பூமியின்கீழ் ஒரு சுரங்கம் தோண்டப்பட்டதாகவும், அவ்வழியே அரசர் போய்வருவாரென்றும்கூடப் பழயகாலத்தவர் சொல்லுகிறார்கள் கொச்சி சமஸ்தானத்தை யடுகையில் பூமியின் அடியிலிருந்த பாறை யொன்று தென்பட்டது. அதை வெட்டுவிகொண்டு பிளக்கவே அந்தாசலவைக்கல் உடைந்து ஒரு வழி கொடுத்தது அதன் மார்க்கமாகப் பூமிக்குள் செல்லுங்கால் ஒரு பாதாள குகை தென்பட்டது. அதனுள்ளே நான்கு தூண்கள் நிறுத்திய மண்டபங்கள் தென்படுகின்றன. அதிலிருந்து ஈரமண் நிரம்பிய இரண்டு சிவப்புக் கருப்புத் தோண்டிகள் கண்டெடுத்தனர். பின்னும் பல அபூர்வங்கள் காணப்படுகின்றன. ஜனங்கள் விசேஷமாகக் கூடுகிறார்கள் அதை நிர்மாணித்தவர் யாரோ!

***

ஆடுகளுக்கு மேற் பல் வரிசை யில்லை சில தேசங்களிலிருக்கும் ஆடுகளின் வால் கொழுப்பு நிறைந்து அப்ரிமிதமான பளுவுள்ளதாயிருக்கும் சிறு சிறு வண்டிகளில் அவ்வாலைக் கட்டி ஆடுகளை நடத்திக்கொண்டு செல்வார்கள்.

***

முயலுக்குக் கண்ணிமை இல்லை. முயல்கள், குதிரைகள், ஈக்கள் ஆகிய இவைகளுக்கு முன்பார்வையும் பின்பார்வையும் யுண்டு.

***

யானைக்கு 200-வருஷம் ஆயசு. ஒட்டகத்திற்கு 40-வயசு. குதிரைக்கு 30-வயசு எருதுக்கு 20-வயசு. நாய்க்கு 12-வயசு. பூனைக்கு !0-வயசு. தேனைக்கு வயசு-15. கிளிக்கு 100-வருஷம் ஆயசு, திமிங்கலத்திற்கு 400-வருஷம் ஆயுளாம்.


## கலியுக வர்த்தமானி.

இது கடந்த 9-வருடங்களாக எல்லாம் வல்ல இறைவனருளால் நடந்துவருகின்றது. இது அறிவைப் பரவச்செய்து, ஆனந்தத்தைத் தந்து மிகுபயன்விளைவிக்கும் வாரந்தத் தமிழ்ப் பத்திரிகை பிரதி சனிவாரந்தோறும் பிரசுரிக்கப்படும்.

இதில் ஜீவர்களின் ஜனனோற்பவத் தெளிவும், பாபபுண்ணியத் தெளிவு, ஆத்மலாப விசாரணை, தருமம், கல்வி, புராணேதிகாசங்கள் மேற்கோள்களுடன், உள்நாட்டு அயல்நாட்டு, தந்தி, தபால், விகட, வர்த்தமானங்களும், ஐரோப்பாவில் நடக்கும் யுத்த சமாச்சாரங்களும் வெகு விமரிசையாய் பிரசுரிக்கப்படும்.

சந்தா தொகையை வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொண்டு பிரதி சனிக்கிழமை தோறும் பத்திரிகை அனுப்பிவைக்கப்படும்.

### சந்தா விபரம்.

| சென்னை சந்தாதாரர்களுக்கு. | | வெளியூர் சந்தாதாரர்களுக்கு. | |
|---|---|---|---|
| ஒரு வருஷத்திற்கு | ரூ 2—8—0 | ஒரு வருஷத்திற்கு | ரூ 3—0—0 |
| ஆறு மாதத்திற்கு | ரூ 1—6—0 | ஆறு மாதத்திற்கு | ரூ 1—0—0 |
| சிங்கப்பூர் முதலிய அந்நிய நாடுகளுக்கு | | மூன்று மாதத்திற்கு | ரூ 0-12—0 |
| ஒரு வருஷத்திற்கு | ரூ 4—0—0 | பிரத்தியேகக் காபி | 0—1—0 |
| ஆறு மாதத்திற்கு | ரூ 2—0—0 | | |

# சித்திரப் படத் தொழிற்சாலை.

162027



ஒவ்வொரு வேலைகளும் நேர்த்தியாயும்
அருமையாயும் செய்யக்கூடியது.

டி தொழிற்சாலையில் இதுபோன்ற படங்கள் பொன், வெள்ளி, செம்பு, பித்தளை முதலிய தகடுகளால் க்ருஹ பூஜைக்கும், ஆலய பூஜைக்கும், உசித்தான விநாயகர், சுப்ரமண்யர், கண்ணன், ஸ்ரீராமர், லக்ஷ்மி, சரஸ்வதி முதலிய தேவதா உருவங்களை சிற்ப சாஸ்திர இலக்கணப் பிரகாரமும், ரவிவர்மா படங்கள் போலவும், மனிதர்களின் போட்டோ படங்கள்போலவும் எந்தெந்த அளவுகள் வேண்டுமோ அந்தந்த அளவுப்பிரகாரம் யாதொரு தவறுதலின்றி மிக அழகாகவும், பார்ப்போர் மனதை பரிகரிப்பதாகவும், ஆநந்தத்தை யுண்டுபண்ணுவதாகவும், நகாசுவேலை, மட்டச்சுவேலை உள்பட தீர்மானமாக செய்து கொடுக்கப்படும். இதுவன்றியும், எவ்விதமான வேலைப்பாடுள்ள நகாசுவேலைகளும், மெழுகு வேலைகளும், க்ரஹபூஜைக்குரிய பொன் வெள்ளி முதலிய விக்ரஹங்களும் கேட்டபிரகாரம் செய்து கொடுக்கப்படும்.

டி வேலைகளுக்கு (டிராயிங்) சார்ஜ் பிரத்தியேகம்.

மற்ற வேலைகளுக்கு கூலி விஷயங்கள் நேரிலாவது கடிதமூலமாகவாவது தெரிந்துக் கொள்ளலாம்.

இப்படிக்கு,
**P. V. சபாபதி ஆச்சாரி,**
நெ. 66, கிழவசெட்டி வீதி, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.



# இந்தியன் அட்வர்டைஸர்.

ஒருமாதத் தமிழ்ப்பத்திரிகை.

இச்சஞ்சிகை பிரதி ஆங்கிலமாதமும் வைதாந்தம், கல்வி, விவசாயம், வியாபாரம், மதவிஷயம், இராஜாங்க ஜனங்க சீர்திருத்தங்கள், இராஜபக்தி, நன்மார்க்க நாவல்கள், உலக அற்புதங்கள், வர்த்தமானங்கள் முதலான விஷயங்களும் வெளியாகிறது.

## சந்தா விபரம்.

| | |
|---|---|
| உள்நாட்டிற்கு வருஷத்திற்கு ரூபா | 1—8—0 |
| வெளிநாட்டிற்கு வருஷத்திற்கு ரூபா | 2—0—0 |
| தனிப்பிரதி | 0—2—0 |

## விளம்பர விகிதம்.

| | ஒரு வருஷத்திற்கு, | 6-மாதத்திற்கு, | 3-மாதத்திற்கு, |
|---|---|---|---|
| ஒரு பக்கம் ரூ. | 12 0 | 7 0 | 4 0 |
| அரைபக்கம் ,, | 7 0 | 4 0 | 2 8 |
| கால் பக்கம் ,, | 4 0 | 2 8 | 1 0 |